A Tamil Bible Dictionary

BY

A. C. CLAYTON

PART I

(PAGES 1–200)

வேத அகராதி

முதலாம் பாகம்

(பக்கம் 200)

இஃது

ஏ. சி. கிலேற்றன் ஐயரால்

இயற்றப்பட்டது

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
MADRAS, COLOMBO AND LONDON

PRICE 8 ANNAS

A TAMIL BIBLE DICTIONARY

BY

A. C. CLAYTON

PART I

(PAGES 1—200)



வேத அகராதி

முதலாம் பாகம்

(பக்கம் 200)

இஃது

ஏ. சி. கிலேற்றன் ஐயரால்

இயற்றப்பட்டது

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA,
MADRAS, COLOMBO AND LONDON
1911

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS
1911



PREFACE

THE *Tamil Bible Dictionary* is an attempt to present the result of the latest reliable Biblical scholarship in a form helpful to Tamil students of the Bible. It is a compilation, but a compilation based on recent research.

It is based on *The Dictionary of the Bible*, Five Volumes, edited by Dr. Hastings, 1898 to 1904, and *The Dictionary of the Bible*, One Volume, edited by Dr. Hastings, 1909.

The commentaries of Driver, Lightfoot, Sanday, G. A. Smith and similar scholars—not forgetting the incomparable Bengel—have been frequently consulted.

I am greatly indebted to the following writers for important articles that appear in Part I:—

The Rev. A. Fehlberg: அற்புதம்—*Miracles.*

The Rev. G. E. Phillips, B.A.: இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம்—*The History of Jesus Christ.*

" இயேசுகிறிஸ்து அருளின உபதேசம்—*The Teaching of Jesus.*

" இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்—*The Resurrection of Jesus.*

" இயேசுகிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றிய புதிய ஏற்பாட்டிலுள்ள கோட்பாடுகள்—*The Christology of the New Testament.*

" எரேமியா—*Jeremiah.*

The Rev. L. Reichard: உபவாசம்—*Fasting.*

The Rev. H. Schomerus: எபிரெயருக்கு எழுதின நிருபம்—*The Epistle to the Hebrews.*

The articles அகுஸ்தீன், அக்கினி, அரியானர், அவஸ்தைபூசுதல், அழைப்பு, ஆத்துமா, ஒலிவம், are adapted from articles written by the late Dr. Bower.

For the remaining nine hundred articles I am responsible.

As no concordance to the whole Tamil Bible exists I have tried to mention all proper names in the Tamil Bible and a number of common words, such as அரண், அரம், அடை, உருள், which strictly speaking ought only to be found in a concordance.

There is some inconsistency in the spelling of proper names in the Tamil Bible, some names being spelt in three, four or even five different ways, and this has added much to the difficulty of preparing a complete list and necessitated a great many cross references. Usually a subject is dealt with under the spelling that comes first in alphabetical order. Thus யெகு, Jehu, is discussed under எகு.

A word about these references may be of service. It was impossible to print in full the thousands of passages referred to in this volume. But the references are very important, have been carefully selected, and frequently give much information that is only outlined in the article in which the quotation appears. Hence to learn all that this *Bible Dictionary* has to teach the references need to be studied. In many cases it will be seen that only one reference is given after a proper name. This implies that the passage referred to will give all the available information. If the name is found to occur in a genealogical or geographical list, this will mean that at present no more is known about that person or place.

I need hardly add that in the references the ordinary figures give the numbers of the chapter and the 'superior' small figures give the numbers of the verses referred to.

I am deeply grateful to the American Tract Society, the Religious Tract Society, London, and the friends who have generously helped to make it possible to publish this book at a price within the means of all Tamil Preachers, Teachers, Evangelists and Biblewomen.

I may add that if health is continued the Second Part, completing half the work, will be published about the middle of 1911.

A. C. CLAYTON.

January, 1911.

முகவுரை

தற்காலம் அதிக திறமையுற்ற வேத பண்டிதராகிய ஹேஸ்டிங்ஸ் ஐயரும் இன்னும் பல வேத சாஸ்திரிகளும் இங்கிலீஷில் எழுதிய வேத அகராதி, வேத வியாக்கியானம் முதலிய நூல்களை ஆதாரமாகக்கொண்டு இந்தத் தமிழ் **வேத அகராதி** எழுதப்பட்டிருக்கிறது.

இப்பிரதி இந்த **வேத அகராதியின்** முதலாம் பாகம். இதில் அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி எழுதினவர்களும் அவர்கள் எழுதிய நிபந்தங்களும்:

சங்:	A. பெல்பெர்க்	அற்புதம்.
,,	G. E. பிலிப்ஸ், பி.ஏ.	இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம்.
	,,	இயேசுகிறிஸ்து அருளின உபதேசம்.
	,,	இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.
	,,	இயேசுகிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றிய புதிய ஏற்பாட்டிலுள்ள கோட்பாடுகள்.
	,,	எரேமியா.
,,	L. ரைகார்ட்	உபவாசம்.
,,	H. சொமேரஸ்	எபிரெயருக்கு எழுதின நிருபம்.

காலஞ்சென்ற வேத சாஸ்திரியாராகிய பவர் ஐயர் எழுதிய வேத அகராதியில் கண்ட **அகுஸ்தீன், அக்கினி, அரியானர், அவஸ்தைபூசுதல், அழைப்பு, ஆத்துமா, ஒலிவம்** என்னும் பெயர்கொண்ட நிபந்தங்கள் திருத்தஞ் செய்யப்பட்டு இந்த **வேத அகராதியில்** சேர்க்கப்பட்டிருக்கின்றன. மற்றத் தொளாயிரம் நிபந்தங்களும் என்னால் எழுதப்பட்டன.

தமிழில் முழு வேதாகம சொல்லகராதி இல்லாததினால் அதைப்போலும் உதவுமாறு அநேக பதங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த **வேத அகராதியை** வாசிப்போர் இதில் சொல்லியிருக்கும் ஒவ்வொரு நிபந்தத்தின் பொருளை முழுதும் அறியவேண்டும் என்று விரும்பினால், அந்தந்த நிபந்தத்தில் குறித்த வாக்கியங்களை எல்லாம் வேதத்தில் பார்ப்பது அவசியம்.

பல பதங்களைப்பற்றிய விசேஷம் அவ்வளவு இல்லாமையால், அவைகளைப்பற்றி அறியக்கூடியதெல்லாம் அடங்கியிருக்கும் ஒரே வாக்கியம் எழுதப்பட்டிருக்கிறது.

தமிழ் வேதாகமத்தில் ஒரே ஆளின் பெயர் அல்லது ஒரே இடத்தின் பெயர் வெவ்வேறு வசனங்களில் வித்தியாசமான எழுத்தில் எழுதியிருக்கிறதினால், அவையெல்லாம் தமிழ் அக்ஷர அட்டவணையின்படி இதில் எழுதப்பட்டிருக்கின்றன. **உ-ம். ஏகு, யேகு; எசேர், எத்சேர், ஏசேர், ஏசேர், ஏத்சேர்; ஆனாக்கீம், ஏனாக்கீம்;** உசியா, **ஊ**சியா காண்க.

நிபந்தங்களில் எழுதியிருக்கும் பெரிய எண்கள் அதிகாரங்களையும், அவ்வெண்களுக்குமுன் மேலிருக்கும் சிறு எண்கள் வசனங்களையும் காட்டுகின்றன.

அமெரிக்கா தேசத்து கிறிஸ்தவ புஸ்தக சங்கமும், லண்டன் பட்டணத்து சன்மார்க்க புஸ்தக சங்கமும், இன்னும் பல சிநேகிதரும் இந்த **வேத அகராதியைப்** பிரசுரம் செய்யும் பொருட்டு புரிந்த பேருதவியினால் இவ்வளவு நேர்த்தியாய் அச்சிடப்பட்ட இப்புஸ்தகம் சொற்ப கிரயத்துக்கு விற்பனையாகும்.

கடவுள் எனக்கு வேண்டிய சுகத்தை அளித்தால் இந்த **வேத அகராதியின்** இரண்டாம் பாகம் 1911-ஆம் ஜூலை மாதத்திற்குள் வெளியாகும்.

1911-ஆம் ஜனவரிமீ.

ஏ. சி. கிலேற்றன்.



TAMIL BIBLE DICTIONARY

வேத அகராதி

அ.

அ. எபிரெய, கிரேக்க பாஷைகளின் எழுத்துக்களில் முதல் எழுத்து. **அல்பா ஆலேப்** காண்க.

அகசாய். Ahazai. = யாசெரா. 1 நாளா 9[12] நெகே 11[13].

அகசியா. Ahaziah. [கர்த்தர் பிடித்திருக்கிறார்].

1. இஸ்ரவேல் இராசாவாகிய ஆகாபினுடைய மகன். 1 இரா 22[51]. ஏறக்குறைய இரண்டு வருஷம் அரசாண்டு, பாகால் சேபூபைத் தொழுது கடைசியில் எலியா சொன்ன வார்த்தையின்படியே இறந்துபோனான். 2 இரா 1[17].

2. யூதாவின் இராசாவாகிய யோராமினுடைய மகன். 2 இரா 8[25] 2 நாளா 22[6]. இவனுக்கு மறுபெயர் யோவாகாஸ். 2 நாளா 21[17]. இவனும் பாகால் முதலிய கானான் தேசத்துத் தேவதைகளை வணங்கி வந்தவன்.

அகஸ்பாய். Ahasbai. 2 சாமு 23[34].

அகபு. Agabus. கிலவுதியுராயன் அரசாண்ட காலத்தில் (கி-பி. 41-54) கொடிய பஞ்சம் உண்டாகும் என்றும், பவுல் சிறையில் வைக்கப்படுவான் என்றும் முன்னுரைத்த தீர்க்கதரிசி. அப் 11[27] 21[10].

அகரா. Aharah. 1 நாளா 8[1]. = அகிராம். எண் 26[38]. = எகி. ஆதி 46[21].

அகரி. Hagri. 1 நாளா 11[38].

அகர்கேல். Aharhel. 1 நாளா 4[8].

அகலியா. Hachaliah. நெகேமியாவின் தகப்பன். நெகே 1[1].

அகாஸ்வேரு. Ahasuerus.

1. இவன் கி-மு. 529-521-ஆண்டில் பெர்சியா ராஜ்யத்தை ஆண்ட கோரேஸ் (*Cyrus*) என்பவனின் மகனாகிய கம்புசேஸ் (*Cambyses*) என்னும் சக்கரவர்த்தி. இவ்விரண்டு பெயரும் ஒரு ஆளைத்தான் குறிக்கிறது என்பது சில வித்துவான்களுடைய அபிப்பிராயம்.

2. இவனுக்கு மறு பெயர் சஷ்டா (*Xerxes*). வட இந்தியாவின் மேற்கு எல்லை துவங்கி ஆபிரிக்கா கண்டத்தின் எத்தியோப்பியா மட்டுமுள்ள 127 நாடுகளை (கி-மு. 484-465) அரசாண்டான். தனது அரமனையில் வஸ்தி ராணிக்குப் பதில் எஸ்தரைப் பட்டத்து ராணியாக்கினான். **எஸ்தர்** காண்க.

3. தானி 9[1]. 'மேதிய குலத்தானாகிய அகாஸ்வேரு' என்பவனைப்பற்றி வேறொன்றும் தெளிவாய்ச் சொல்லப்படவில்லை. சிலர் கி-மு. 634-594-ஆண்டில் அரசாட்சி செய்த குவக்செரேஸ் (*Cyaxares*) இவன்தான் என்றும், இது அவனுடைய மறுநாமம் என்றும் சொல்லுகிறார்கள். சிலர் கி-மு. 594-559-ஆண்டில் அரசாண்ட குவக்செரேஸ் (*Cyaxares*) என்பவனுடைய மகனாகிய அஸ்தியகேஸ் (*Astyages*) இவன்தான் என்று சொல்லுகிறார்கள்.

அகாதம். Gulf. அகாதம் என்றால் அடி காணாத ஆழம் என்பதைக் குறிக்கிறது. லூக் 16[26]-ல் 'பெரும் பிளப்பு' 'அகாதம்' என்பதைவிட சரியான மொழிபெயர்ப்பு.

அகாய நாடு. Achaia. பூர்வீக கிரேக்க தேசத்தின் ஓர் பிரிவு. அதின் முக்கிய பட்டணம் கொரிந்து. அப் 20[2]. 'கிரேக்க தேசம்' என்றது அகாய நாடு. அந்த நாட்டில் யூதர்கள் அநேகர் இருந்தார்கள். அங்கேயும் கிறிஸ்தவ சபை அதிகமாய்ப் பெருகினது. அப் 17[17] 18[4. 7. 27] 1 கொரி 2[1].

அகாயுக்கு. Achaicus. 1 கொரி 16[17]. கி-மு. 146-ஆண்டு ரோமாபுரியின் சேனாதிபதி ஒருவன் அகாய நாட்டை ஜெயித்து அகாயுக்கு என்னும் பெயர் பெற்றான். அவன்

சந்ததியாருக்கும் அவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இப்பெயர் வழங்கி வந்தது. பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தை அந்த ஊருக்குக் கொண்டுபோனவர்களில் ஒருவன். இவன் அச்சேனுதிபதியின் குடும்பத்தைச் சேர்ந்தவனுயிருக்கலாம்.

அகாவா. **Ahava.** எஸ்ரு $8^{15, 21}$. ஊரின் பெயர். அதிற் பாயும் ஆற்றுக்கும் அப்பெயர்தான். எஸ்ரு ஜனங்களை எருசலேமுக்கு நடத்திக்கொண்டு போனபோது அங்கே மூன்றுநாள் தங்கி இருந்தான். அது பாபிலோன் பட்டணத்திற்குச் சமீபமாயிருந்தது என்று எண்ணவேண்டும்.

அகி. **Haggi.** [உற்சவத்திலே பிறந்தவன்]. ஆதி 46^{16}.

அகிக்காம். **Ahikam.** [என் சகோதரன் எழுந்துவிட்டான்]. 2 இரா 22^{12}. யோசியா, யோயாக்கீம் காலத்தில் இராச சபையைச் சேர்ந்து எரேமியா தீர்க்கதரிசிக்கு உதவியாக இருந்தவன். எரே 26^{24}.

அகிஷாகார். **Ahishakar.** 1 நாளா 7^{10}.

அகிஷார். **Ahishar.** [என் சகோதரன் பாடினுன்]. சாலொமோனின் அரமனை விசாரிப்புக்காரன். 1 இரா 4^{6}.

அகித்தூபு. **Ahitub.** [என் சகோதரன் நன்மையாய் இருக்கிறுன்].

1. ஏலியின் பேரன். 1 சாமு 14^{3}.

2. ஆசாரியனுகிய சாதோக்குவின் தகப்பன். 2 சாமு 8^{17}.

3. இன்னெருவன். 1 நாளா 6^{11}.

அகித்தோப்பேல். **Ahithophel.** [என் சகோதரன் மூடத்தனமாய் இருக்கிறுன்]. கிலோ என்னும் ஊரில் பிறந்தவன். தாவீதின் பிரதான மந்திரி. அப்சலோம் இராசதுரோகம் செய்தபோது அகித்தோப்பேல் அவன் பக்கம் சேர்ந்தான். **அப்சலோம்** காண்க. 2 சாமு 16, 17 அதி. அப்சலோம் தனது ஆலோசனையைக் கவனியாமற் போனபோது இவன் தன் வீட்டுக்குப் போய்த் தற்கொலை செய்தான்.

அகிமாஸ். **Ahimaz.** 2 சாமு $15^{27, 36}$. [என் சகோதரன் கோபமாய் இருக்கிறுன்].

1. அப்சலோம் துரோகம் செய்தபோது அதைப்பற்றிச் சொல்லுகிற வேவுகாரனும் வேகமாய் ஓடுகிற தூதனும் இருந்தான். 2 சாமு 15^{17} 17^{17}.

2. சவுலின் மனைவியாகிய அகினேவாம் என்பவளுடைய தகப்பன். 1 சாமு 14^{50}.

3. சாலொமோன் ராஜாவின் அரமனைக்கு உணவுப் பொருட்களைச் சேகரிக்கிற 12 மணியகாரரில் ஒருவன். 1 இரா 4^{15}.

அகிமான். **Ahiman.**

1. ஏனுக்கின் வம்சத்தில் உள்ள ஒரு குடும்பம். எண் 13^{22}.

2. லேவிய வாசற்காவலாளி. 1 நாளா 9^{17}.

அகிமேலேக்கு. **Ahimelech.** [இராசாவின் சகோதரன்].

1. அகித்தூபுவின் மகன். 1 சாமு 21^{1}. இவனுக்கு அகியா என்றும், அபிமெலேக்கு என்றும் பெயர். 1 நாளா 18^{26}.

2. தாவீதின் தலைவர்களில் ஒருவன். 1 சாமு 26^{6}.

அகிமோத். **Ahimoth.** [என் சகோதரன் மரணமாய் இருக்கிறுன்]. ஒரு லேவியன். 1 நாளா 6^{25}.

அகியா. **Ahiah. Ahijah.** [கர்த்தரின் சகோதரன்].

1. சவுலின் காலத்தில் இருந்த பிரதான ஆசாரியன். அகிமெலேக்கு இவன்தான். 1 சாமு $14^{3, 20}$. இவன் சவுலின் சேனையோடு போய்த் தேவனுடைய சித்தத்தை அறிவித்தான். தாவீது சவுலுக்குப் பயந்து தப்பியோடிப் போனபோது இவன் அவனுக்குத் தேவசமுகத்து அப்பத்தையும் கோலியாத்தின் பட்டயத்தையும் கொடுத்தான். இதினிமித்தம் சவுல் இவனையும் இவன் இனத்தார் யாவரையும் கொன்றுபோட்டான். 1 சாமு 21, 22 அதி.

2. 1 இரா 4^{3}.

3. ஒரு தீர்க்கதரிசி. 1 இரா 11^{29} 12^{15} 14^{2}.

4. 1 இரா 15^{27}.

5. 1 நாளா 2^{25}.

6. 1 நாளா 11^{36}.

7. 1 நாளா 26^{20}.

8. நெகே 10^{26}.

அகியா. **Haggiah.** [யேகோவாவின் உற்சவம்]. 1 நாளா 6^{30}.

அகியாம். **Ahiam.** 1 நாளா 11^{35}.

அகியான். **Ahian.** [சகோதரனைப் போன்றவன்]. 1 நாளா 7^{19}.

அகியூது. **Ahihud.** [மகிமையுள்ள சகோதரன்].

1. ஆசேர் கோத்திரத்தின் பிரபு. எண் 34^{27}.

2. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா 8^{7}.

3. சாலொமோனின் காரியதரிசிகளில் ஒருவன். 1 இரா 4^{3}.

4. யெரொபெயாம் காலத்தில் ஓர் தீர்க்க தரிசி. 1 இரா 11^{29} 14^{2}.

அகியேசேர். Ahiezer. [உதவியான சகோதரன்].

1. தாண் கோத்திரத்தின் பிரபு. எண் 1^{12}.

2. தாவீது சவுலுக்கு பயந்தோடி ஒளித்திருந்தபோது அவனோடிருந்த வில்வித்தைக்காரரில் பிரதானமானவன். 1 நாளா 12^{1}.

அகியோ. Ahio. [அவனுடைய சகோதரன்].

1. உடன்படிக்கைப் பெட்டி தாவீதின் பட்டணத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது இரதசாரதிகள் இருவரில் ஒருவன். 2 சாமு 6^{3}.

2. 1 நாளா 8^{31}.

3. 1 நாளா 8^{14}.

அகிராம். Ahiram. **அகரா** காண்க.

அகிரிப்பா. Agrippa. **ஏரோது** காண்க.

அகிலூத். Ahilud.

1. 2 சாமு 8^{16}.

2. 1 இரா 4^{12}.

அகிலேத்ஷகார். Aijeleth Hash-Shahar. சங் 22 தலைப்பில் காண்க. இதின் அர்த்தம் 'விடியற்காலத்துப் பெண்மான்' 'அல்லது விடியற்காலத்து உதவி.' இது இராகத்தின் பெயர். இந்த இராகத்திற்கு இந்தச் சங்கீதம் பாடப்படும்.

அகினதாப். Ahinadab. 1 இரா 4^{14}.

அகினோவாம். Ahinoam. [அமைதியான சகோதரன்].

1. சவுலின் மனைவிகளில் ஒருத்தி. 1 சாமு 14^{50}.

2. தாவீதின் மனைவிகளில் ஒருத்தி. 1 சாமு 25^{43} 27^{3} 30^{18}.

அகீஷார். Ahishar. 1 இரா 4^{6}.

அகீரா. Ahirah. நப்தலியின் ஓர் பிரபு. எண் 1^{15}.

அகுசாத். Ahuzzath. ஆதி 26^{26}.

அகுசாம். Ahuzzam. 1 நாளா 4^{6}.

அகுஸ்தீன். Augustine. அகுஸ்தீன் கி-பி. 354-ல் வட ஆபிரிக்காவில் உள்ள தகஸ்தே ஊரில் பிறந்தான். இவனுடைய தாய் மொனிக்கா *(Monica)* கிறிஸ்தவ மார்க்கத்தில் சிறந்த பக்தியுள்ளவளாய் இவனுக்குப் பக்திக்குரிய விஷயங்களைப் போதித்துவந்தும் இவன் வாலிபப் பிராயத்திலே கருத்தாகு *(Carthage)* என்னும் ஊரிலுள்ள சர்வ கலாசாலைக்குப் போய் அங்கே கிறிஸ்துவைப்பற்றிப் பல தப்பான கொள்கைகளைக் கற்று, அதிக துன்மார்க்கமாய் நடந்தான். பிற்பாடு ஆபிரிக்கா தேசத்தை விட்டு இத்தாலியா தேசத்திற்குப் போனான். இப்படி இவன் இருக்குங்காலத்தில் வேதத்தில் தியானம் வைப்பதற்கு வேண்டிய விருப்பத்தை இயேசுகிறிஸ்து இவனுடைய மனதிலே அருளினார். அதினால் இவன் முப்பத்தைந்து வயதானபோது ஒருநாள் தன் மித்திரனாகிய அலிப்பியுசை நோக்கி 'கற்றறிவில்லாதவர்கள் மோக்ஷம் சேரப் பிரயாசப்படுகிறார்கள். கற்றவர்களாகிய நாம் நிர்ப்பந்தராய் மாயையிலே அழுந்தி அவர்களைப் பின்பற்ற வெட்கப்படுகிறோம் அல்லவா? அவர்கள் காட்டுகிற முன்மாதிரியைப் பின்பற்றி நடக்கக்கடவோம்' என்று சொல்லித் தன் வீட்டை விட்டு அதிக துக்கத்தோடு தோட்டத்திற்குள் போய் ஒரு அத்திமரத்தின் கீழ் முகங்குப்புற விழுந்து தன் இருதயத்திற் குடிகொண்டிருக்கிற தீமை யாவையும்பற்றி நினைத்து 'கர்த்தாவே! உம்முடைய கோபம் நாளைக்குத் தணியுமோ? இப்போதே தணியமாட்டாதோ?' என்று கண்ணீர்விட்டழுது அதிக அவாவாயும் ஊக்கமாயும் மன்றாடிக் கேட்டான். இவன் இவ்வித வியாகுலத்தில் இருக்கும்போது *'Tolle, lege; tolle, lege'* என்னும் பாட்டைப் பாடுகிற ஒரு சிறு பிள்ளையின் இனிய ஓசையைக் கேட்டான். இப்பதங்களுக்கு 'எடுத்து வாசி, எடுத்து வாசி' என்னும் அர்த்தத்தை இவன் அறிந்து, உடனே பவுல் அப்போஸ்தலன் ரோமருக்கு எழுதின நிருபத்தை எடுத்து அதைத் திறந்து அதில் வாசித்தான். இவன் பிற்பாடு இதைப்பற்றி எழுதினதாவது: 'நான் அப்புஸ்தகத்தை எடுத்து அதைத் திறந்து அதில் முதற்கண்ட வசனத்தை மௌனமாய் வாசித்தேன். அதாவது: களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள் (ரோ $13^{13.\ 14}$). இவைகளே போதும்; மற்ற வசனங்களை வாசிக்க வேண்டியதில்லை என்றறிந்தேன். அப்போதே சந்தேகத்தினால் மூடி இருந்த இருள் எல்லாம் என்னைவிட்டு அகன்று போக, மீட்பின் ஒளி என் மனதில் பூரணமாய் வீசினது.'

இவ்விதமாய் அகுஸ்தீன் குணப்பட்ட பின்பு அலிப்பியுஸ் இதை அறிந்து 'விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்ற அடுத்த வசனத்தை அகுஸ்தீனுக்குக் காண்பித்து அதினாலே தானும் குணப்பட்டதை அவனுக்குத் தெரிவித்தான். அகுஸ்தீன் உடனே அத்தனை வருஷகாலமாகத் தனக்காக ஜெபம் செய்து வந்த தன் மாதாவுக்கு இந்தச் சங்கதியைப் போய் அறிவித்தான்.

கி-பி. 387-ஆல் இவன் ஞானஸ்நானம் பெற்றான். இவன் ஆபிரிக்காவுக்குத் திரும்பிப்போன பிற்பாடு இவனுடைய பக்தி வைராக்கியத்தைப் பார்த்து 391-ஆல் இவனுக்குக் குருப்பட்டம் தரித்தார்கள். நாலு வருஷத்துக்குப் பிற்பாடு 45-ம் வயசிலே கண்காணியாய் அபிஷேகம் பண்ணப்பட்டு ஆபிரிக்காவில் 31 வருஷகாலம் பதிதரோடு தர்க்கம் செய்து பக்திக்குரிய பல புஸ்தகங்களை லத்தீன் பாஷையில் எழுதி 76-ம் வயசில் (கி-பி. 430) இறந்துபோனான்.

அகுஸ்தீன் வேத சாஸ்திரத்தைக் குறித்துப் பல உபதேசங்கள் செய்தான். அவைகளில் முக்கியமானவை: ஆதாம் பாவம் செய்ததினால் அவன் சந்ததியாராகிய மனுஷர் யாவரும் ஜென்ம பாவத்தினால் முழுதும் ஆக்கினைக் குட்பட்டவர்களாய் இருக்கிறார்கள். அவர்களிற் சிலர் தேவனுடைய சித்தத்தின் படி அவருடைய இரக்கத்திற்கும், சிலர் தண்டனைக்கும் முன் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விதமாய்த் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் தங்கள் நிலைமையை மாற்ற முடியாது. இதைப்பற்றியும் வேற நேக விஷயங்களைப்பற்றியும் பதிதர்களுக்கு விரோதமாக இவன் அதிக உறுதியாய் எழுதி, இராசாங்கத்தார் அவர்களுடைய தப்பான கொள்கையினிமித்தம் அவர்களை வேதனைப் படுத்தித் தண்டித்து வரவேண்டுமென்று கிறிஸ்தவர்களுக்கு இவன் போதித்தது கிறிஸ்தவ சபையில் பலவிதமான அநியாயத்துக்கு ஏதுவாய் இருந்தது.

அகுஸ்து பட்டாளம். Augustus' Band. அப் 27[1]. இது ரோமராயனுடைய சேனையில் யுத்தத்திற்குப் போய்த் தைரியத்துடன் ஜெயம் அடைந்து ராயனுடைய பெயராகிய அகுஸ்து என்னும் பெயர் பெற்ற ஒரு பட்டாளம். இதில் 500-1000 வரையில் போர்ச் சேவகர் இருந்தார்கள்.

அகுஸ்து ராயன். Augustus Caesar. லூக் 2[1]. இவன் கி-மு. 63-ஆல் பிறந்தான். 31-ஆல் சர்வ அதிகாரமும் உடையவன் ஆனான். கி-பி. 14-ஆல் இறந்தான். இவன் காலத்தில் குடிமதிப்பு உண்டானதினால் யோசேப்பும் மரியாளும் தங்கள் முற்பிதாக்கள் வசித்த ஊராகிய பெத்லெகேமுக்குப் போகவேண்டியதாய் நேரிட்டது. **ரோமாபுரி** காண்க.

அகுபா. Hakupa. ஒரு குடும்பம். எஸ்ற 2[51].

அகுமாய். Ahumai. 1 நாளா 4[2].

அகெகேதோலிம். Haggedolim. நெகே 11[14].

அகோலியாப். Aholiab. [என் தகப்பனுடைய கூடாரம்]. யாத் 35[34]. ஆசரிப்புக் கூடாரத்தைச் செய்தவர்களில் ஒருவன்.

அகோலாள். Aholah, Oholah (R.V.) [கூடாரத்தில் உள்ளவள்]. எசே 23 அதி. அசீரியா தேசத்திலுள்ள சில ஸ்தலங்களுக்கு வேசிகள் போய்க் கூடாரங்கள் அடித்து அவைகளில் இருந்தார்கள். இப்பதத்தின் அர்த்தத்தின்படி இவளும் வேசிதான். இது எசேக்கியேல் தீர்க்கதரிசி சமாரியா தேசத்திற்கும் அதிலுள்ள 10 கோத்திரங்களுக்கும் உவமையாய்க் கொடுத்த பெயர்.

அகோலிபாமா. Oholibamah. ஒரு பிரபு. ஆதி 36[41].

அகோலிபாமாள். Oholibamah. ஏசாவின் மனைவிகளில் ஒருத்தி. ஆதி 36[2].

அகோலிபாள். Aholibah, Oholibah (R. V.) [அகோலாள் என்பதற்குச் சமனர்த்த பதம்]. எசே 23 அதி. எசேக்கியேல் யூதாவைப்பற்றி இப்பெயரைக்கொண்டு உவமையாய்ப் பேசுகிறான்.

அகோவா. Ahoah. 1 நாளா 8[4] 2 சாமு 23[9].

அக்காத். Accad. ஆதி 10[10]. பாபிலோன் என்னும் மகா ராஜ்யத்திற்குப் பூர்வகாலத்தில் சிநேயார் தேசத்திலுள்ள நாலு ஊர்கள் சேர்ந்து மூலஸ்தானமாய் இருந்தன. அவ்வூர்களில் அக்காத் ஒன்று. அது கி-மு. 3800-ஆலத்தில் முதலாம் சர்கோன் என்னும் பாபிலோன் ராசாவின் முக்கிய பட்டணம். அது இஷ்டார் என்னும் சந்திரதேவதையின் முக்கிய ஸ்தலம்.

அக்கான். Akan. ஆதி 36[7]. 1 நாளா 1[42]. = யாக்கான்.

அக்கிக்கல். Chrysolite. வெளி 21[20]. சில வித்துவான்கள் புதிய எருசலேமின் ஏழாவது அஸ்திபாரம் அக்கிக்கல் என்று தமிழில் மொழிபெயர்த்தார்கள். சிலர் இதற்

குச் சுவர்ணரத்தினம் என்றுஞ் சொல்லுவார்கள். இது பசும்பொன் நிறமான ரத்தினங்களில் ஒன்று. **இரத்தினம்** காண்க.

அக்கிரமக்காரன். சங் 14^{4} 28^{3} 36^{12} நீதி 10^{29} எசா 55^{7} மத் 7^{23} லூக் 13^{27} ரோ 5^{6}.

அக்கிரமம். யாத் 34^{7} யோபு 13^{26} 22^{23} சங் 25^{11} 32^{2} 66^{18} 79^{8} 103^{3} எசா 1^{4} 5^{18} 33^{24} 40^{2} 50^{1} 53^{6} எரே 3^{13} 33^{8} 50^{20} எசே 43^{10} ஓசி 14^{2} ஆமோ 3^{2} மீகா 7^{19} மத் 24^{12} ரோ 4^{7} 6^{19} 2 தெச 2^{7} தீத் 2^{14}.

'பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய அக்கிரமம்.' எண் 18^{1}.

'ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய அக்கிரமம்.' எண் 18^{1}. **பாவம்** காண்க.

அக்கினி. Fire.

1. தேவன் அக்கினி சூழ்ந்தவராக மோசேக்கும், ஏசாயாவுக்கும், எசேக்கியேலுக்கும், யோவானுக்கும் காட்சியானார். யாத் 19^{18} எசா 6^{4} எசே 1^{4} வெளி 1^{14}. 'உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன்' என்பது (உபா 4^{24} எபி 12^{29}) அவருடைய பரிசுத்தத்தையும் நீதியையுங் குறிக்கின்றது. தேவனுடைய கோபம் அக்கினி என்னப்படும். எரே 48^{45} உபா 32^{22} எசா 33^{14}.

2. அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போல் இருப்பார் என்பது (மல்கி 3^{2}) அக்கிரமக்காரரைத் தண்டித்துப் பட்சித்து, விசுவாசிகளைத் தம்முடைய உபதேசத்தால் சுத்திகரிக்கிற கிறிஸ்துவையும், அக்கினித் தூண் என்பது (யாத் 13^{21}) அவருடைய ஆதரவையும், சுவாலையாய் எரிகிற அக்கினியோடு நியாயத்தீர்ப்புக்கு வருவார் என்பது (எசா 30^{30} 2 தெச 1^{6}) அவருடைய வல்லமையையும் குறிக்கின்றது.

3. பரிசுத்த ஆவியானவர் ஆத்துமாவைப் பிரகாசிப்பித்துச் சுத்திகரித்து, அன்பினாலும் வைராக்கியத்தினாலும் நிரப்புகிறபடியினாலே, அவருடைய செய்கைகள் அக்கினி என்று சொல்லப்படுகின்றன. மத் 3^{11} அப் 2^{3}.

4. தேவனுடைய வேலைக்காரர் தங்கள் வேலைகளில் சுறுசுறுப்புள்ளவர்களானபடியால் அக்கினி என்னப்படுகிறார்கள். சங் 104^{4}.

5. கர்த்தருடைய வார்த்தை அக்கினியைப்போல் இருக்கிறது. எரே 23^{29}. சத்திய வேதமானது அக்கினியைப்போல அனல் தந்து, களிம்பைப் பட்சித்து 'ஆத்துமாவைச் சுத்திகரிக்கிறது. 1 கொரி 3^{13}. 'அக்கினியைப் பூமியின்மேல் போடவந்தேன்' என்பது (லூக் 12^{49}) துன்பங்களையும் பிரிவினைகளையும் குறிக்கின்றது. சகரி 3^{2}. கடவுள் எருசலேமுக்கு அக்கினி மதில். சகரி 2^{5}. நாவு அக்கினியைப்போலிருக்கிறது. யாக் $3^{5,\ 6}$.

6. திருச்சபையானது எல்லா விரோதங்களையும் மேற்கொண்டு விரோதிகளை வெல்லுகிறபடியினாலே, யாக்கோபின் வீட்டார் அக்கினி என்னப்படுகிறார்கள். ஒப ^{18}.

7. மனிதருடைய தந்திரம், பொய், கோள், வம்பு முதலியவை தீங்குசெய்கிறபடியால் அக்கினி என்னப்படும். எசா 50^{11}.

8. பூர்வீகத்தார் மோளேகு என்ற விக்கிரகத்திற்கு இத்தேசத்தில் வழங்கிவருகிற தருமராஜா பண்டிகைக்கு ஒப்பாய் அக்கினியை மிதித்து, சூடுகளைப் போட்டுக்கொண்டு பல அருவருப்புகளையும் நடத்தினார்கள். லேவி 18^{21} 2 இரா 16^{3} 23^{10}.

9. (காலாக்கினி). சோதோம் அக்கினியால் பட்சிக்கப்பட்டதுபோல (ஆதி 19^{24}) உலகமும் அக்கினியால் பட்சிக்கப்படும். 2 பேது $3^{7,\ 12}$.

10. தேவனுக்கு இடப்பட்ட பலிகளைப் பட்சிக்கும்படி அக்கினி வானத்திலிருந்து இறங்கினது. ஆதி 15^{17} லேவி 9^{24} 2 நாளா 7^{1} 1 இரா 18^{38}.

11. நரகத்திற்குரியவர்களுடைய புழு சாகாமலும், அக்கினி அவியாமலுமிருக்கிறதென்பது (மாற் 9^{44}) வியாகுலப்படும் மனச்சாட்சியையும், தேவனுடைய கோபத்தையும் குறிக்கின்றது. அகுஸ்தீன், சீப்பிரியன் முதலான வேதசாஸ்திரிகள் நரகத்தில் புழுக்களும் அக்கினியும் உண்டென்கிறார்கள்.

அக்கினிப்பள்ளம். இன்னோம் காண்க.

அக்கூப். Akkub.

1. 1 நாளா 3^{24}.
2. 1 நாளா 9^{17}.
3. எஸ்றா 2^{42}.
4. நெகே 8^{7}.

அக்கெல்தமா. Aceldama. 'குயவன் வீடு' (எரே 18^{1}) என்பதும், 'குயவனுடைய நிலம்' (மத் 27^{7}) என்பதும், 'இரத்த நிலம்' (அப் 1^{19}) என்பதும் ஒரே நிலந்தான். பூர்வீகத்தில் யூதர்கள் இதற்கு அக்கெல்தமா என்று பெயரிட்டார்கள். இதற்கு 'இரத்தம் சிந்தின வயல்' என்று அர்த்தமாம். இது மோலேக் என்னும் தேவதையின் ஸ்தலமாகிய இன்னோம் பள்ளத்தாக்கிலே இருந்ததினால் அபௌத்திர இடமாய் இருந்தது.

இதிலேதான் யூதாஸ்காரியோத்து தற்கொலை புரிந்தான். பரதேசிகளை அடக்கம் செய்வதற்காக ஆசாரியர் அவன் திருப்பிக் கொடுத்த 30 வெள்ளிக்காசைக்கொண்டு அந்த நிலத்தை வாங்கினார்கள்.

அக்கோத்ஸ். **Hakkoz.** ஒரு ஆசாரிய குடும்பம். 1 நாளா 24^{10}.

அக்கோபட்டணம். **Acco.** நியா 1^{31}. மத்தியதரைக் கடலோரத்தில் தீருபட்டணத்திற்குத் தெற்கே ஏறக்குறைய 20 மைல் தூரத்திலுள்ள ஒரு துறைமுகம். இஸ்ரவேலர் கானான் தேசத்தை ஜெயித்தபோது இந்த ஊரைப் பிடிக்கவில்லை. புதிய ஏற்பாட்டிலே இதற்குப் 'பித்தொலோமாய்' என்று பெயர். அப் 21^{7}.

அக்சாபு. **Achsaph.** யோசு 11^{1} 19^{25}. கலிலேயா நாட்டிலுள்ள இரண்டு ஊர்கள்.

அக்சாள். **Achsah.** [காற் சிலம்பு]. காலேபின் மகள். நியா $1^{9.\ 15}$ யோசு 15^{19}.

அக்சீப். **Achzib.**

1. தீரு பட்டணத்திற்குத் தெற்கே ஏறக்குறைய 20 மைல் தூரத்தில் கடலோரமாயுள்ள ஒரு ஊர். இஸ்ரவேலர் கானான் தேசத்தைப் பிடித்தபோது இதை ஜெயிக்கவில்லை. இது பரிசுத்த பூமியின் கடைசி எல்லை என்பது எபிரெய ரபிமாருடைய அபிப்பிராயம். இதற்குத் தென்கிழக்கேயுள்ள எந்த ஊருக்குள்ளும் பரிசேயர் தங்கள் ஆசாரத்திற்கு யாதொரு இடையூறும் நேரிடாதபடி திராக்ஷரசமும் அப்பமும் எண்ணெயும் வாங்கிக்கொள்ளலாம் என்றும் இதற்குப் புறம்பே அவைகளை வாங்குவது தங்கள் ஆசாரத்திற்குக் கெடுதி என்றும் சொன்னார்கள். நியா 1^{31}.
2. யூதாவிலுள்ள ஒரு ஊர். யோசு 15^{44}. = கெசீப். ஆதி 38^{5}. = கோசேபா. 1 நாளா 4^{22}.

அக்பான். **Ahban.** 1 நாளா 2^{29}.

அக்போர். **Achbor.**

1. ஆதி 36^{38}.
2. 2 இரா 22^{12}. = அபதோன்.

அக்மேதா. **Achmetha.** எஸ்ரா 6^{2}. இது மேதியாநாட்டின் முக்கிய பட்டணம். இதில் இராசாங்கத்திற்குரிய பத்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன. கிரேக்க இதிகாசர் இதற்கு எக்பத்தானா (*Ecbatana*) என்று பெயரிட்டார்கள். தள்ளுபடி ஆகமத்தார் இந்த ஊரைப்பற்றிப் பலமுறை எழுதியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஊரின் கீர்த்திப் பிரஸ்தாபம் குன்றிப்போயிருக்கிறது. இதற்கு இப்போது வழங்குகிற பெயர் கமடான் (*Hamadan*).

அக்ராபீம். **Akrabbim.** சாக்கடலின் தென்புறத்திலிருந்து கானானின் தென்புறமாய்ச் செல்லுகிற 'தேள் நிறைந்த கணவாய்.' யோசு 15^{3}.

அக்லாப். **Ahlab.** நியா 1^{31}.

அக்லாய். **Ahlai.**

1. ஒரு பெண். 1 நாளா 2^{31}.
2. ஒரு போர்வீரன். 1 நாளா 11^{41}.

அங்கவீனம். **Blemish.**

1. லேவிய கோத்திரத்தைச் சேர்ந்த ஆசாரியன் ஒருவன் அங்கவீனமாய் அதாவது அவயவங்களில் ஒன்று குறைந்து அல்லது கூடி இருந்தால் அவன் தேவாலயத்தில் ஊழியஞ்செய்யப் பாத்திரனல்ல. லேவி 21^{18-20}.
2. அங்கவீனமுள்ள மிருகங்கள் பக்ஷிகள் பலிக்கு உவந்தவையல்ல. சில பலிகளுக்கு இது கட்டாயமான பிரமாணமல்ல. லேவி 22^{20-24} மல்கி 1^{13}.

அங்கீகரிப்பு. **Acceptation.** ஏற்றுக்கொள்ளுதல். மல்கி 1^{13} லூக் 4^{24} அப் 10^{35} 2 கொரி 8^{12} 1 தீமோ 1^{15} 4^{9}.

அசசியா. **Azaziah.** மூன்று பெயர். 1 நாளா 15^{21} 27^{20} 2 நாளா 31^{13}.

அசதியா. **Hasadiah.** [யேகோவா தயை புரிந்தவர்]. 1 நாளா 3^{20}.

அசபியா, அஸபியா, அஷபியா, அஷாபியா. **Hashabiah.**

1. 1 நாளா 6^{45}.
2. 1 நாளா 9^{14}.
3. 1 நாளா 25^{3}.
4. 1 நாளா 26^{30}.
5. 1 நாளா 27^{17}.
6. 2 நாளா 35^{9}.
7. எஸ்ரா 8^{19}.
8. எஸ்ரா 8^{24}.
9. நெகே 3^{17}.
10. நெகே 11^{22}.
11. நெகே 12^{21}.

அசரியா. **Azariah.** [கர்த்தர் அவனுக்குச் சகாயர்]. இந்தப் பெயர் எபிரெயர்களில் அநேகருக்கு வழங்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் 24 பேருக்கு.

2 இரா 15^{1-7}. யூதாவின் ராஜா, கி-மு. 782-737. 2 நாளா 26-ம் அதி. முதலிய இடங்களில் இவனுக்கு உசியா என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவன் 16 வயசாய் இருக்கும்போது யூதேயா தேசத்தை ஆண்

டுகொள்ளும்படி ஆரம்பித்தான். இவன் குஷ்டரோகியாய் இருந்தான். இவன்காலத்தில் எசாயா தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தான். இவன்காலத்தில் யூதாவுக்கு அதிக செல்வமும் சுகமும் இருந்தது. **உசியா** காண்க.

மூன்று பிரதான ஆசாரியர்கள் இப்பெயர் உடையவர்களாய் இருந்தார்கள். 1 இரா 4^{2} 2 நாளா 26^{17} 31^{10}.

அசரியேல், அசரேயேல். Azarel. [கடவுள் உதவி செய்கிறவர்].

1. = ஆசாரியேல். 1 நாளா 12^{6}.
2. 1 நாளா 25^{18}. = ஊசியேல். 1 நாளா 25^{4}.
3. 1 நாளா 27^{22}.
4. எஸ்று 10^{41}.
5. நெகே 11^{13}.
6. நெகே 12^{36}.

அசர்மாவேத். Hazarmaveth. ஆதி 10^{26}.

அசறு. Scurvy. **வியாதி** காண்க.

அசனியா. Azaniah. நெகே 10^{2}.

அசாயா. Asaiah. [யேகோவா செய்தார்].

1. 2 இரா 22^{12}.
2. 1 நாளா 4^{36}.
3. 1 நாளா 6^{30}.
4. 1 நாளா 9^{5}. = மாசெயா. நெகே 11^{5}.

அசாரேயேல். Asarel. 1 நாளா 4^{16}.

அசிங்கிரீத்து. Asyncritus. [ஒப்பில்லாதவன்]. ரோ 16^{14}. ரோமாபுரியிலுள்ள சபையைச்சேர்ந்த கிறிஸ்தவர்களில் ஒருவன். அக்காலத்தில் அகுஸ்துராயனுடைய வீட்டிலுள்ள ஒருவனுக்கு இந்தப் பெயர். ஒருவேளை அவன் இவனாயிருக்கலாம்.

அசிசா. Aziza.

1. அந்நிய ஜாதிப் பெண்களை மனைவிகளாகக் கொண்டதினால் தாங்கள் குற்றவாளிகள் எனக் கண்டு அவர்களைத் தள்ளிவிட்டுப் பாவ நிவிர்த்திக்காகப் பலியிட்ட ஆசாரிய புத்திரர்களில் ஒருவன். எஸ்று 10^{27}.
2. தீர்க்கதரிசி ஒருவன். 2 நாளா 15^{1}.

அசிமா. Ashimah. 2 இரா 17^{30}. பாபிலோன் ராஜாவாகிய சர்கோன் அடிமைத்தனத்தில் தள்ளப்பட்ட இஸ்ரவேலருக்குப் பதிலாய்ச் சமாரியா பட்டணத்திலுள்ள ஆமாத்தின் மனுஷர்களை அவ்வூரில் வைத்தான். அவர்கள் அசிமா என்னும் தேவதையைத் தொழுதுவந்தார்கள். யூதருடைய பாரம்பரியத்தின்படி இந்த விக்கிரகம் ரோமமில்லாமல் ஆட்டைப்போல் அல்லது பூனையைப்போல் இருந்தது.

அசீரியா. Assyria.

1. இது ஆதியில் திகிரீஸ் (*Tigris*) என்னும் இதெக்கேல் (ஆதி 2^{14}) ஆற்றின் ஓரத்தில் அசூர், நினிவே என்னும் பட்டணங்களைச் சுற்றிலும் இருந்த ஒரு ராஜ்யம். இந்த ராஜ்யம் ஒரு காலத்தில் ஒடுக்கமும் இன்னொரு காலத்தில் விசாலமுமாயிருந்த படியால் இதற்கு எல்லை குறிக்கிறது கூடாத காரியம். இது அதிக கீர்த்தியடைந்திருந்த போது பலஸ்தீனா, சீரியா, எகிப்துவரையும் எட்டியிருந்தது.

2. இதின் ஜனங்கள் யுத்தஞ் செய்வதிலும், மூற்றிக்கை போடுவதிலும் சூரத்துவமுள்ளவர்கள். கோட்டையைக் காப்பதில் பராக்கிரமசாலிகள். கொள்ளையடிப்பதற்குத் தூரமான இடங்களுக்குப் போக விரும்புகிறவர்கள். யுத்தத்திற் பிடிக்கப்பட்டவர்களைக் குரூரமாய் நடத்துகிறவர்கள். எசா 33^{19}.

இதின் ராஜாக்களும் ஜனங்களும் தங்கள் நகரங்களைச் சிறப்பிக்கும்படி கோயில்களையும் விசேஷமாய் அரமனைகளையும் கட்டி அவைகளை நூதனமான சித்திரவேலையினால் அலங்கரித்துவந்தார்கள்.

3. இவர்கள் நாகரீகமுள்ளவர்களாய் இருந்தார்கள். இவர்களுடைய ராஜ்யம் பாபிலோன் ராஜ்யத்திலிருந்து பிரிந்ததினாலும் இதற்கும் அதற்கும் சம்பந்தம் இருந்ததினாலும் இவர்கள் பாபிலோனியர்களைப்போலவே இருந்தார்கள் என்று நாம் நினைக்க வேண்டும்.

4. இவர்களும் பாபிலோனியரும் பல தேவர்களை தொழுதுவந்தார்கள். ஆனால்இவர்கள் அசூர் என்னும் முக்கிய ஸ்தலத்திலே பாபிலோனியர் வணங்காத 'அசூர்' என்னும் தங்கள் தேசத்தைக் காப்பாற்றுகிற தேவனை தொழுதுவந்தார்கள். பாபிலோன் தேசத்தில் ராஜாக்களைவிட ஆசாரியர்களுக்கே அதிகாரம் அதிகமாய் இருந்தது. அசீரியாவிலேயோ ராஜாதான் பிரதான ஆசாரியனாய் இருந்ததினால் ஆசாரியர் அவனுக்குட்பட்டவர்களாய் இருந்தார்கள்.

சரித்திரம்.—அசீரியா கி-மு. 2300-வருஷத்தில் அதாவது ஆபிரகாம் தான் பிறந்த இடத்தை விட்டுக் கானான் தேசத்திற்குப் புறப்பட்டுப்போன காலம் துவங்கி கி-மு. ஆறும்நூற்றாண்டு வரையில், 1700 வருஷங்களாக இருந்தது. இந்த ராஜ்யம் நேபுகாத்நேச்சார் பாபிலோனின் ராஜாவாக வருகிறதற்கு இரண்டு வருஷத்துக்கு முந்தி மேதிய

ராலே ஜெயிக்கப்பட்டது. இந்த ராஜ்யத்தினதும் பாபிலோன் ராஜ்யத்தினதும் சரித்திரம் ஒன்ருேடொன்று கலந்திருக்கிறது. **பாபிலோன்** காண்க.

அசீரியா, பாபிலோனியா ராஜாக்கள்.

இந்த ராஜ்யங்களை ஏறக்குறைய 4000 வருஷங்களாக ஆண்டுவந்த அரசர்களின் நாம அட்டவணையைத் தானும் எழுதுகில் இச்சிறு புஸ்தகத்தில் இடம் போதாதிருக்க, அவர்கள் எல்லாருடைய சரித்திரத்தையும் இதில் அடக்கிச் சொல்வது கூடாத காரியமாகையால் நாம் வேதாகமத்தில் இருக்கிற ராஜாக்களைப் பற்றிய சரித்திரத்தைமாத்திரம் சுருக்கமாய்ப் பார்ப்போம்.

நிம்ரோத். *Nimrod.* ஆதி 10^{8-12}.

இவன் அசீரியாவில் நினிவே என்னும் பட்டணத்தைக் கட்டி அங்கே தன் ராஜ்யத்தை ஆரம்பித்தான் என்றும், பாபிலோன் அல்லது பாபேல் என்னும் நகரத்தைக் கட்டினுன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவனுடைய சரித்திரத்தைப் பார்ப்போமாஞல் ஆதியாகமத்திற் சொல்லியிருக்கிறபடி இவன் பிரபலமுள்ளவன் என்பதையும், பாபிலோனியருடைய பாஷையில் இவனுடைய பெயரும் அவர்கள் தொழுதுவந்த மெரொதாக் (எரே 50^{2}.) என்னும் தேவனுடைய பெயரும் ஒன்ருயிருந்ததினுல் அவர்கள் அவனைத் தேவனுக எண்ணிவந்தார்கள் என்பதையும் அறிவோம்.

அம்ராப்பேல். *Amraphel.* ஆதி $14^{1.9}$.

ஆபிரகாமோடு சண்டை செய்த 'சிநேயாரின் ராஜாவாகிய அம்ராப்பேல்' என்பவனும், பூர்வீகத்தில் பாபிலோனியா ராஜாவாகிய கம்முரபி (*Hammurabi*) என்பவனும் ஒருவன்தான் என்று தோன்றுகிறது. ஏறக்குறைய கி-மு. 2300-ளுத்தில் இருந்த இந்த கம்முரபி சுமார் 50 வருஷம் அரசாண்டான். ஆதியாகமத்தில் இவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறவைகளினுல் இவனுடைய மகத்துவம்தோன்ருவிடினும், முற்காலத்தில் கற்பலகைகளிலும் மண்ணிஞற் செய்த ஓடுகளிலும் இவனைக்குறித்து எழுதப்பட்டவைகளைப் பார்ப்போமாஞல் கீர்த்தி, பொருள், பொக்கிஷம் ஆகிய இவைகளில் இவன் மற்ற எல்லா ராஜாக்களைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவன் என்று நன்ருய் அறியலாம். கண்டெடுக்கப்பட்ட அப்பலகைகளில் இவன் எழுதின 282 கட்டளைச் சட்டங்களை நாம் வாசிக்கும்போது நீதி நியாயத்தின்பேரில் இவன் அதிக விருப்பமுள்ளவன் என்பதை அவைகள் காட்டுகின்றன. அவைகளில் பெரியோர், வித்துவான்கள், வைத்தியர்கள், வியாபாரிகள், பயிர் செய்வோர், வேடர், அடிமைகள், வேலையாட்கள், கடனளிகள் முதலானவர்களுடைய கடமையைப் பற்றியும்; கோவில்களையும், கோவில் மானியங்களைப்பற்றியும்; நீதி ஸ்தலங்களுக்குரிய விசாரணை, சாட்சி, தண்டனை ஆகிய இவைகளைப்பற்றியும்; கோள்சொல்லுதல், நம்பிக்கைத்துரோகஞ்செய்தல், திருடுதல், கொலைபாதகம், விபசாரம், பில்லிசூனியம்ஆகிய இவைகளைப்பற்றியும்; விவாகமுறை, குடும்ப ஒழுக்கம், மறுமனையாட்டி வைத்தல், தள்ளுதற்சீட்டுக் கொடுத்தல், சுதந்தரபாகம்ஆகிய இவைகளைப்பற்றியும் தகுந்த பிரமாணங்கள் ஏற்படுத்தியிருந்தான். இப்பிரமாணங்களுக்கும் மோசேயின் பிரமாணங்களுக்கும் வித்தியாசம் இருந்தபோதிலும், இரண்டும் பல விஷயங்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றமையால், சர்வ சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்ட மோசே தனக்கு ஆயிரம் வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட இந்த ஏற்பாடுகளை அறிந்திருப்பான் என்று நாம் நினைக்க இடமுண்டு.

ஆபிரகாமின் காலமுதல், சாலொமோன் ராஜா இறந்த காலம்வரையும் இஸ்ரவேல் ராஜ்யத்துக்கும் யூதாவின் ராஜ்யத்துக்கும் அசீரியருக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. பிற்பாடு பாபிலோனியா ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் பட்டணத்தை அழித்துப்போட்ட காலம்வரையும் அவைகளுக்குத் துவக்கத்தில் அசீரியரைப்பற்றியும் பிற்பாடு பாபிலோனியரைப்பற்றியும் எப்போதும் பயம் இருந்தது. இந்த ராஜ்யங்களைப்பற்றி நாம் வேதத்தில் வாசிக்கும்போது பூமிசாஸ்திரப் படத்தில் பார்த்தால், சீரியா தேசத்தின் கிழக்கெல்லை அசீரியா தேசத்தின் மேற்கெல்லைவரையும் எட்டியிருந்ததென்றும்; சீரியா தேசத்துக்குத் தெற்கே இஸ்ரவேல் ராஜ்யமும், அதற்குத் தெற்கே யூதாவின் ராஜ்யமும் இருந்ததென்றும் அறிவோம். இப்படி அவைகள் ஒன்றுக்கொன்று சமீபமாய் இருந்தபடியால் அசீரியா ராஜ்யம் பெருகினபோது முதலாவது சீரியாவுக்கும், இரண்டாவது இஸ்ரவேல் ராஜ்யத்துக்கும், கடைசியாய் யூதாவின் ராஜ்யத்துக்கும் அபாயம் நேரிட்டது. 1 இரா 20-ம் அதிகாரத்தை நாம் வாசித்தால் ஆகாப் என்னும் இஸ்ரவேல் ராஜாவுக்கும் பெனுதாத் என்னும் சீரியா ராஜாவுக்கும் நடந்த சண்டையைப் பற்றியும் அவர்கள் செய்துகொண்ட சமா

தான் உடன்படிக்கையைப் பற்றியும் அறியலாம். மேலும் அக்காலத்தில் அசீரியர்கள் கற்பலகைகளில் எழுதியிருந்த சரித்திரத்தைப் பார்ப்போமானால் சமாதானமான பிற்பாடு இவர்கள் அசீரியரோடு செய்த யுத்தத்தைப்பற்றி அறியக்கூடும். இருகட்சியாருக்கும் பெரிய யுத்தங்கள் நடந்தபிற்பாடு (ஏறக்குறைய கி-மு. 850-ஞூத்தில்) அசீரியா ராஜாக்கள் மகா பராக்கிரமசாலிகள் என்று சீரியரும் இஸ்ரவேலரும் அறிந்து சமாதானத்திற்காக அவர்களுக்குத் திறைகொடுக்கத் தொடங்கினார்கள்.




அசீரியரின் தேவாலயத்தில் வாசல்காக்கும் விக்கிரகம்.

பெனதாத் என்பவனுக்குப் பிற்பாடு ஆசகேல் (*Hazael*) என்னும் சீரியாவின் ராஜா அசீரியர் தன் தேசத்தில் சிலகாலமாகத் தொந்தரவு ஒன்றும் செய்யாமல் இருக்கிறதைப் பார்த்து, இஸ்ரவேல் ராஜ்யத்தையும் யூதாவின் ராஜயத்தையும் முறியடிக்க எத்தனித்தான். 2 இரா 10^{32} 12^{17} 13^{22}. இதினிமித்தம் அசீரியா ராஜா கி-மு. 803-ஞூத்தில் சீரியா தேசத்தில் பிரவேசித்து யுத்தஞ்செய்கையில் அவன் இஸ்ரவேல் ராஜாவாகிய யோவகாஸ் என்பவனுடைய காலத்தில் அந்த ராஜ்யத்துக்கு 'இரட்சகன்' ஆனான். 2 இரா 13^{5}. இந்த அசீரியா ராஜாவின் பெயர் வேதத்தில் இல்லாதிருந்தாலும், அசீரியர் கற்பலகைகளில் எழுதியிருக்கும் சரித்திரத்தினால் அவன் 2-ம் சல்மநாசார்தான் என்று விளங்குகிறது.

இதற்குப் பிற்பாடு அசீரியா ராஜ்யத்தில் ஏதோ விபத்து உண்டானதினால் அதின் ராஜாக்கள் அதை விட்டு வெளியேறாதிருந்தபோது யோவாஸ் (*Jehoash*) என்னும் இஸ்ரவேலின் ராஜா சீரியரோடு யுத்தஞ்செய்து அவர்களை ஜெயித்தான். 2 இரா 13^{25}.

யோவாஸ் இறந்தபின் (கி-மு. 781-ஞூத்தில்) இரண்டாம் யெரொபெயாம் (*Jeroboam II*) இஸ்ரவேல் ராஜ்யத்திலும், கி-மு. 782-ஞூத்தில் உசியா (*Uzziah*) என்பவன் யூதாவிலும் அரசாட்சிசெய்துவந்தார்கள். அப்போது ஏறக்குறைய 40 வருஷகாலம் எல்லா ராஜ்யத்திலும் அமைதி இருந்தது. இப்படி இந்த ராஜ்யங்கள் நாற்பது வருஷம் அமைதியாயிருக்குங் காலத்தில் இஸ்ரவேலரும் யூதரும் இனிமேல் அசீரியர் தங்களை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று பயந்தெளிந்து துன்மார்க்கராயும் விக்கிரக ஆராதனைக்காரராயும் நடக்கத் தொடங்கினார்கள்.



அசீரியாதேசத்துப் பிரபு.

ஆனால் இந்தச் சமாதானம் நித்தியமாய் இருக்



சனகெரிப் எபிரெயர்களுக்குச் செய்யும் வேதனை.

செய்யும்படி பூல் இடத்தில் கேட்டான். 2 இரா 16⁷ மு. அப்பொழுது பாபிலோன் பட்டணத்தில் மெரோதாக்பலாதான் (*Merodach-Baladan*) என்னும் ராஜா திகிலாத்பிலேசருக்கு விரோதமாய்ப் பல காரியங்கள் செய்ததினால் இவன் சீரியாவை விட்டுப் பாபிலோனுக்கு வந்து அதை ஜெயித்து அங்கேதான் திகிலாத்பிலேசர் என்னும் பெயர் அடைந்து அசீரியாவையும் பாபிலோனியாவையும் ஒன்றாக இணைத்து, கி-மு. 727-ஆம் ஆண்டில் இறந்துபோனான்.

கும் என்று அவர்கள் ஏமாந்துபோகாதபடி அவர்களுடைய பாவத்தினிமித்தம் அவர்களைத் தண்டிக்கக் கடவுள் அசீரியரைத் திரும்பவும் அனுப்புவார் என்று ஆமோஸ், (கி-மு. 775-750) ஓசியா (743-737) என்னும் தீர்க்கதரிசிகள் அவர்களை எச்சரித்து வந்தார்கள். ஆமோ 6⁷ ஓசி 9³ 11¹⁵. யூதாவின் ராசாவாகிய உசியா இறந்துபோன வருஷத்தில் யூதாவின் ராஜ்யத்திலும் ஏசாயா தீர்க்கதரிசி கி-மு. 701-ஆம் ஆண்டிலே அவர்களுக்கு நேரிடப்போகிற மோசத்தைப்பற்றிச் சொல்லிவந்தான். ஏசா 5²⁶ மு. இதற்குப் பிற்பாடு மீகா என்னும் தீர்க்கதரிசியும் (720-ஆம் மட்டும்) அப்படியே அவர்களை எச்சரித்துவந்தான்.

பூல். *Pul*. 2 இரா 15¹⁹.

திகிலாத்பிலேசர் என்றும் (2 இரா 15²⁹), தில்காத்பில்நேசர் என்றும் (1 நாளா 5²⁶) மறு நாமங்கள் உள்ள இவன் சிறு பிராயத்தில் தோட்டக்காரனாயிருந்து பிற்பாடு போர்ச் சேவகத்தில் அமர்ந்து கொஞ்சக்காலத்திற்குள் யுத்த வித்தையில் சமர்த்தனாகி ஏசாயா தீர்க்கதரிசனம் உரைக்கிறதற்கு ஐந்து வருஷங்களுக்கு முன் (அதாவது கி-மு. 745-ஆம் ஆண்டில்) அசீரியாவில் அரசாட்சிசெய்து, கி-மு. 740-ஆம் சீரியா ராஜ்யத்தை ஜெயிக்கும்படி வந்தான். இவனுடைய பராக்கிரமத்தைப் பார்த்த மெனாகேமும் (*Menahem*) அவனுக்குப் பின் வந்த பெக்காவும் (*Pekah*) ஆகிய இஸ்ரவேல் ராஜாக்கள் இவனுக்குப் பயந்து வெகுமதி கொடுத்தார்கள். 2 இரா 15¹⁹.

கி-மு. 734-ஆம் யூதாவின் ராஜாவாகிய ஆகாஸ் (*Ahaz*) இஸ்ரவேல் ராஜாவாகிய பெக்காவுக்குப் பயந்து ஓநாயிடம் ஆட்டுக்குட்டி சரண்புகுந்ததுபோல் தனக்கு உதவி

சல்மனாசார். *Shalmaneser*. 2 இரா 17³.

இவன் இஸ்ரவேல் ராஜாவாகிய ஓசெயா (*Hoshea*) என்பவனோடு யுத்தஞ்செய்து சமாரியாவை 3 வருஷம் முற்றிக்கை போட்டு கி-மு. 722-ஆம் ஆண்டில் அங்கேதான் இறந்து போனான். இவன் அசீரியா ராஜாக்களின் அட்டவணையில் நாலாம் சல்மனாசார். (*Shalmaneser IV.*)


சர்கோன். *Sargon*. ஏசா 20¹.

இவன் சல்மனாசாரின் தலைவர்களில் ஒருவனாயிருந்து சல்மனாசார் இறந்துபோக ராஜ்யத்தைத் தனதாக்கிச் சமாரியாவை ஜெயித்து பிரஜைகளில் 25,000 பேரைச் சிறைபிடித்துக் கி-மு. 722-705-ஆம் வரை அசீரியாவுக்கு ராஜாவாயிருந்தான். 2 இரா 17⁶.

இந்தச் சர்கோன் தன் ஜீவியகாலமெல்லாம் பல தேசங்களோடும் யுத்தஞ்செய்து தன் சத்துருக்களைக் கெடிகலங்கப்பண்ணினவன். இவர்களில் முந்திச் சொன்ன திக்லாத்பிலேசார் காலத்தில் இருந்த மெரோதாக்பலாதான் பிரதானமானவன்.

மெரோதாக்பலாதான். *Merodach-Baladan*. ஏசா 39¹.

இவனுடைய மறுநாமம் பெரோதாக்பலாதான். 2 இரா 20¹². இவன் அசீரியா ராஜாவாகிய பூல் என்பவனுடைய காலத்திலே பாபிலோனியாவைப் பிடித்தபோது, பூல் இவனை அங்கிருந்து துரத்திவிட்டான். பிற்பாடு சல்மனாசார் சமாரியாவை முற்றிக்கைபோட்ட தருணத்தில் இரண்டாம்முறை இவன் பாபிலோனியாவைப் பிடித்து யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவினிடத்தில் ஸ்தானாபதிகளை யனுப்பி, அசீரியரோடு யுத்தஞ் செய்வதற்குத் தனக்கு உதவிபுரி



சனகெரிப்புக்கு முன்பாக நிற்கும் யூதாவிலிருந்து வந்த அடிமைகள்.

யும்படி அவனைக் கேட்டான். எசா 39-ம் அதி. ஆனால் அசீரியா ராஜாவாகிய சர்கோன் இவனை ஜெயித்துப் பாபிலோனை மறுபடியும் அசீரியாவோடு இணைத்தான். சர்கோன் கி-மு 705-ஆம் ஆண்டில் இறந்து போனபிறகு இவன் திரும்பிவந்து மூன்றும் முறை பாபிலோனைப் பிடித்து சனகெரிப்பின் மகனைச் சிறையாக்கி ஆறு மாதங்களாக அதை ஆண்டுவந்தான். இவ்வித தைரிய சாலியான இவனைக் கடைசியாய் சனகெரிப் பாபிலோனிலிருந்து துரத்திவிட்டான்.

சனகெரிப். *Sennacherib*. 2 இரா 18^{13}.

இவன் தகப்பனாகிய சர்கோனின் பட்டத்துக்கு வந்து மெரோதாக்பலாதானை ஜெயித்து, அசீரியாவையும் பாபிலோனையும் இணைத்து, எசாயா தீர்க்கதரிசனம் உரைத்தலை முடிக்கும்போது, கி-மு. 701-ஆம் ஆண்டு சீரியா தேசத்திற்கு விரோதமாய்ப் படை எடுத்து வந்தான். இதை யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா அறிந்து, தன் ராஜ்யத்துக்கும் மோசம் வந்துவிட்டதென்று இவனுக்குப் பயந்து, எகிப்தியர் தனக்குத் துணையாக நிற்பார்கள் என்று நம்பிக்கையோடிருந்தும் அது பிரயோஜனப்படாமல் போயிற்று. சனகெரிப் நாற்பத்தாறு கோட்டைகளைப் பிடித்து இரண்டு லக்ஷம் ஜனங்களைச் சிறையாகப் பிடித்துத் தன் தேசத்திற்கு அவர்களைக் கொண்டுபோனான்.

எசேக்கியா பயங்கரமான இந்த மோசத்தை அறிந்து சனகெரிப்புக்கு விண்ணப்பங்களையும் வெகுமதிகளையும் அனுப்பினபோது, சனகெரிப் என்பவனுடைய சேனைத்தலைவன் முதலானவர்கள் எருசலேமுக்கு வந்து அங்கே எசேக்கியாவைக் கேலிபண்ணினார்கள். பிற்பாடு சனகெரிப் என்பவன் எருசலேம் பட்டணத்தை முற்றிக்கை போட்டான். அப்பொழுது கடவுள் சடுதியாய் அகோரமான கொள்ளைநோயை அசீரியரின் சேனை யிறங்கியிருந்த பாளயத்தில் அனுப்பி எத்தனையோபேரை அழித்ததைச் சனகெரிப் கண்டு பயந்து திரும்பிப்போனான்.

இதற்குப்பிறகு பாபிலோனியாவில் அடிக்கடி தொந்தரவு செய்துகொண்டிருந்த மெரோதாக்பலாதானை இவன் ஜெயித்து அந்தப் பட்டணத்தையும் அதின் கோட்டை கொத்தளங்களையும் நிர்த்தூளியாக்கி அசீரியாவின் முக்கிய பட்டணமாகிய நினிவேயை அலங்கரித்து, அதில் விநோதமான ராஜமாளிகைகளையும், அப்பட்டணத்தைச் சுற்றி எட்டு மைல் நீளமுள்ள மதிலையும் கட்டினான்.

இந்தப் பெரிய ராஜா ஒருநாள் கோவிலிலே பணிந்துகொள்ளுகிறபோது, இவனுடைய குமாரர்களில் இரண்டுபேர் இவனைப் பட்டயத்தினால் வெட்டிக் கொன்றுபோட்டதினால் (2 இரா 19^{37}) பரிதாபப் படத்தக்க வண்ணமாய் இவன் மரித்தான். கி-மு. 681.

எசரத்தோன். *Esarhaddon*.
எஸ்றா 4^{2} 2 இரா 19^{37}.

சனகெரிப்புடைய மகனாகிய இந்த ராஜா பெரிய சேனாபதியும் வித்துவானுமாய் இருந்தான். இவன் அசீரியாவையும் பாபிலோனியாவையும் ஒன்றாய் இணைத்து அரசு புரிந்துவந்தான் (கி-மு. 681-668). இவனுக்குக்கீழ் சிற்றரசனாய் இருந்த யூதாவின் ராஜாவாகிய மனாசே இவனுக்கு விரோதமாய் ராஜ துரோகம் செய்ததினால் இவனுடைய சேனாபதிகள் அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோனார்கள். 2 நாளா 33^{11}.

அஸ்னாப்பார். *R. V. Osnappar*.
A. V. Asnapper. எஸ்றா 4^{10}.

எசரத்தோனின் மகனாகிய இவன் கி-மு. 668-626-ஆம் ஆண்டு வரை அசீரியாவையும் பாபி



நிம்ரோத்.

லோனையும் ஒன்றாய் இணைத்து அரசாண்டான். அசீரியர்கள் இவனுடைய பெயர் அசூர்பானிபால் (*Ashurbanipal*) என்று சொல்லுவார்கள். மண் பலகைகளில் இவன் தன்னைக்குறித்து எழுதிவைத்த சரித்திரத்தினால் இவனைப்பற்றி நாம் அநேக காரியங்களை அறிவதோடு, இவன் தன் அரமனையில் வளர்த்த சிங்கங்களோடும் காடுகளிலுள்ள சிங்கங்களோடும் தனியே சண்டை செய்வதற்கு அஞ்சாத தைரியசாலியாய் இருந்தான் என்றும் காண்கிறோம்.

சனகெரிப் கொள்ளைநோயினால் துரத்தப்பட்ட பிற்பாடு அசீரியாவைப்பற்றி இஸ்ரவேல் ராஜ்யத்திற்கும் யூதாவின் ராஜ்யத்திற்கும் யாதொரு பயமும் இருந்ததில்லை. இதிலிருந்து ஏறக்குறைய நூறு வருஷத்திற்கிடையில் அசீரியா ராஜ்யம் குன்றிப்போகப் பாபிலோன் ராஜ்யம் உன்னத ஸ்திதி அடைந்துவந்தது. கி-மு. 630-ல் துவங்கி 50 வருஷங்களாகச் செப்பனியா, ஆபகூக், நாகூம், எரேமியா என்னும் தீர்க்கதரிசிகள் யூதாவின் ஜனங்களுக்கு அவர்கள் செய்யும் துன்மார்க்கத்தினிமித்தம் கடவுள் பாபிலோனியரைக்கொண்டு அவர்களைத் தண்டிப்பார் என்று சொல்லி எச்சரித்துவந்தார்கள்.

நூறு வருஷங்களுக்குப் பிற்பாடு பாபிலோனின் மகா பராக்கிரமமுள்ள சக்கரவர்த்தியாயிருந்த நேபுகாத்நேச்சார் என்பவனைப் பற்றி வேதத்திற் சொல்லியிருக்கிறதையும் அக்காலத்தில் கற்பலகைகளில் எழுதியிருக்கிறதையும் சேர்த்துப் பார்த்தால் அவனைக் குறித்து நாம் தெளிவாய் அறியக்கூடும்.

நேபுகாத்நேச்சார். *Nebuchadnezzar.*
2 இரா 24^{1} எரே 27^{19} மு.

இவன் கி-மு. 605-561-லுமட்டும் அரசாட்சி செய்து எகிப்தையும் யூதாவின் ராஜ்யத்தையும் தன் வசமாக்கி அவைகளுக்கிருந்த எல்லாக் கீர்த்தியும் குன்றிப்போகச் செய்தான். 2 இரா 24, 25 அதி. எரே 37 அதி. நேபுகாத்நேச்சாரின் ராஜசபையைச் சேர்ந்தவர்களில் தானியேலும் ஒருவன். இவன் மகா பக்தனாய்க் கோவில்களைக் கட்டி, சிலைகளையும் பொற்சிலைகளையும் செய்வித்து அவைகளை வணங்கினான். தானி 3^{1} 4^{30}. மேலும் இவன் பாபிலோனில் ஏரி குளங்களையும் கால்வாய்களையும் வெட்டி, துறைமுக மேடைகளையும், பட்டணத்தைச் சுற்றி மூன்று பெரிய மதில்களையும் கட்டினான். இவனுடைய காலத்தில் பாபிலோன் வெகு அலங்காரமாய்த் தோற்றினாலும் சீக்கிரத்தில் அதற்கும் முடிவு வந்தது.

ஏவில்மெரோதாக். *Evil Merodach.*
2 இரா 25^{27} எரே 52^{31}.

நேபுகாத்நேச்சாரின் குமாரனாகிய இவன் கி-மு. 561-559-லு வரை ஏறக்குறைய இரண்டு வருஷம் அரசாட்சி செய்தான். இவன் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கினவன். இவனுக்கும் பாபிலோன் பட்டணத்தின் ஆசாரியர்களுக்கும் சச்சரவு இருந்ததினால் அவர்கள் இவனைக் கொன்றுபோடும்படி இவனுடைய சகோதரனை ஏவிவிட்டார்கள்.

ஏவில்மெரோதாக்குக்குப் பிற்பாடு வேதத்திற் சொல்லப்பட்டிராத இரண்டு ராஜாக்கள் பாபிலோனை ஆண்டார்கள். இவர்களில் பிந்தினவன் பாபிலோன் பட்டணத்திற்குள் வசிக்க விரும்பாமல் தன் குமாரனாகிய பெல்ஷாத்சார் (*Belshazzar*) என்பவனைத் தனக்குப் பதிலாக ஆளும்படி வைத்தான். இந்த பெல்ஷாத்சார் ராஜாவல்லாததினால் இவன் பாபிலோனின் பிரதிகாவலனாய் இருந்தான். தானி 5^{11} 7^{1}. ஆசாரிமார் செய்த துரோகத்தினால் பெர்சியா ராஜாவாகிய கோரேஸ் பாபிலோன் பட்டணத்தைப் பிடித்த அன்று ராத்திரியில் இவன் கொலைசெய்யப்பட்டான். (கி-மு. 539.) தானி 5-ம் அதி.

கோரேஸ் பாபிலோனைப் பிடித்து அதைப் பெர்சியாவோடு இணைத்து, அதைச் சிலகாலம் சிறப்பித்துவந்தாலும் அதின் கீர்த்தி குறைந்து வந்ததேயொழியத் திரும்ப ஒருக்காலும் ஒரு ராஜ்யமானதேயில்லை.

அசுத்தம். Uncleanness.

I. பழைய ஏற்பாட்டிலே லேவியராகமத்திலும் இன்னும் சில இடங்களிலும் கட்டாயமாய்க் கவனிக்கவேண்டிய ஆசாரத்திற்குரிய விதிகளோடு இன்னது அசுத்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(1) சயனம், பிரசவம் முதலியவற்றால் உண்டாகும் அசுத்தம். உபா 23^{10} லேவி $15^{18. 19. 25. 2}$ 12 அதி. இவைகளில் ஒவ்வொன்றுக்கும் சுத்திகரிப்பும் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) புசிக்கத் தகாதவைகளைப் புசித்தல் அசுத்தம். நியாயப்பிரமாணத்தின்படி மிருகம், பட்சி, நீர்வாழ்வன, ஊர்வனஆகிய இவற்றில் புசிக்கத் தகுந்தவைகள் எவை என்றும் தகாதவைகள் எவை என்றும் உபா 14^{4} லேவி 11-ம் அதி. விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

(3) குஷ்டரோகியும் அவனைத் தொட்டவனும் அசுத்தமானவர்கள். குஷ்டரோகி இருக்கும் இடமும் அவன் தொட்ட யாவும் அசுத்தமானவை. லேவி 13^{44}. **குஷ்டரோகம்** காண்க.

(4) பிரேதத்தைத் தொடுதல் முதலியவற்றால் உண்டாகும் அசுத்தம். எண் 19-ம் அதி. இவைகளைப்பற்றி யோசிக்குமிடத்து ஆசூசம் பலவிதமாய் இருந்ததென்றும், அதினால் பலதடையும் வசதியீனமும் உண்டானதென்றும் நாம் அறிவோம். முக்கியமாய் ஒருவன் தேவாலயத்திற்குப் போவதற்கும் பலி செலுத்துவதற்கும் ஆராதனை செய்வதற்கும் உத்தரவு கிடையாதிருப்பது அவனுடைய துர்லபமே.

II. கி-மு. ஏறக்குறைய 5-ம் நூற்றாண்டிலே யூதர்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து வந்ததுமுதல் அவர்களில் நியாயப்பிரமாணத்திற்குரிய நியமங்களை அதிக நுட்பமாய் ஆசரித்தவர்களாகிய வேதசாஸ்திரிகளுக்கு அதிகாரம் பெருத்ததினால் அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குத் தாங்கள் நினைத்தபடி வியாக்கியானம் செய்து அதை அதிகமாய் விபரித்துச் சுத்தத்தைப்பற்றியும் அசுத்தத்தைப்பற்றியும் பலவிதமான ஏற்பாடுகளைச் செய்தார்கள். மாற் 7^{8}.

இயேசுகிறிஸ்து நீதி நியாயத்துக்குரிய ஒன்றையும் மாற்றாமல் ஆசாரத்தைப்பற்றிப் பாரம்பரியத்தினாலுண்டான கட்டளைகளை அகற்றி, இவைகளை அநுசரியாததினாலே அசுத்தம் உண்டாகிறதில்லை என்றும், வெளி ஆசாரத்தின்படி நடப்பது அல்ல இருதயத்தில் உண்டாகும் தீமையே அசுத்தம் என்றும், அசுத்தம் இன்னதென்பது பாரம்பரிய கோட்பாட்டினால் அல்ல மனச்சாட்சியினால் அறியவேண்டும் என்றும் தெரிவித்தார். மத் 15^{8}.

யூதமார்க்கத்திற் பிறந்த ஆதிக் கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்து அருளின இப்போதனையைப் பூரணமாய் அறியாமல் நியாயப்பிரமாணத்தை அநுசரித்துவந்தார்கள். அவர்களில் யாக்கோபும் பேதுருவும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை விட்டுவிட விரும்பவில்லை. கலா $2^{9. 14}$.

அப் $10^{15. 34}$-ல் அசுத்தத்தைப்பற்றிப் பேதுருவுக்கு அருளின போதனையை நாம் பார்க்கலாம். அசுத்தம் இன்னதென்பதைப் பவுலே முதல் முதல் அறிந்து பாரம்பரியத்தினால் உண்டான ஆசாரத்தை ஆதிக் கிறிஸ்தவர்கள் முழுதும் கைக்கொள்ளவேண்டியதில்லை என்று தெரிவித்தான். ரோ 14^{14}.

அசுத்தமானவை. கொலோ 3^{5} எபே 5^{3} 2 பேது 2^{10}.

பாவத்தினால் அசுத்தமானவை. ஏசா 6^{5} 35^{9} 52^{1} எசே 22^{26} 36^{29} ரோ 6^{19} 14^{14} 2 கொரி 6^{17}.

அசுசியாயிருக்கிறவன். அப் 10^{28} எபே 5^{5} எபி 9^{13}.

அசுத்த ஆவி. மாற் 1^{23} 3^{11} லூக் 4^{33} அப் 5^{16}.

அஞ்ஞானத்தினால் அசுத்தம். எஸ்றா 6^{21} 1 கொரி 7^{14}.

அசுபா. Hasupha. எஸ்றா 2^{43}.

அசுபாள். Azubah.

1. காலேபின் மனைவி. 1 நாளா 2^{18}.
2. யோசபாத்தின் தாய். 1 இரா 22^{42}.

அசுப்பீம். Asuppim. இது ஒரு காரணப்பெயர் அல்ல, பொக்கிஷசாலை அல்லது களஞ்சியம் என்று அர்த்தம்கொள்ளும் ஓர் பொதுப்பெயர். 1 நாளா 26^{15-17}.

அசூபா. Hashubah. 1 நாளா 3^{20}.

அசூரீம். Ashurim. அரபிதேசத்துக் கோத்திரங்களில் ஒன்று. ஆதி 25^{3}.

அசூர். Assur, Ashur, Asshur, Asyria.

1. சேமுடைய மகன். ஆதி 10^{22}.
2. அசூர் என்பதே அசீரியா. ஆதி 10^{11} எண் 24^{22} மு. **அசீரியா** காண்க.
3. அசீரியர் வணங்கின ஒரு தேவன். அவனுக்கு மறுபெயர் நிஸ்ரோகு 2 இரா 19^{37}.

அசூர். Azzur.
1. நெகே 10^{17}.
2. எரே 28^{1}.
3. எசே 11^{1}.

அசெக்கா. Azekah. [வெட்டப்பட்ட இடம்]. 1 சாமு 17^{1}. யூதாவின் எல்லைகளி லுள்ள ஒரு கோட்டை அல்லது பாளயம்.

அசேனு. Hassenah. நெகே 3^{3}. =**சேனு.**

அசேனுவா. Hassenuah. 1 நாளா 9^{7}.= சேனுவா.

அசேரா, அசேரீம். Ashera, Asherim. நியா 3^{7} 6^{25} 1 இரா 18^{19} 2 இரா 23^{6} எசா 27^{9}. முதலிய பல இடங்களில் 'தோப்பு,' 'தோப்பு விக்கிரகம்,' 'தோப்பு விக்கிரகங்கள்' என்று அஃறிணையாக்ச் சொல்லப்பட்டிருக்கிற பெயர்களை நாம் வாசிக்கும்போது 'அசேரா' அல்லது 'அசேரீம்' என்பவைபோல அவைகளை உயர்திணையாக எண்ணவேண்டும். அசேரா என்பதற்கு இரண்டு அர்த்தம்.

(1) கானானியர் வணங்கின ஒரு தேவி. சிலர் நினைக்கிறபடி இத்தேவதையும் அஸ்தரோத்தும் ஒன்றுதான்.

(2) கானானியருடைய தேவ ஸ்தலங்களில் பலிபீடமும், அவர்கள் வணங்கும் கற்றூணும், தேவதைக்குப் பிரதிஷ்டை செய்த மாமும் இருந்தன. பிரதிஷ்டை செய்த இந்த மரத்திற்கு 'அசேரா' என்று பெயர். இந்துக்கள் துளசிமரத்தை வணங்குகிறது போல கானானியர்கள் இதை வணங்கிவந்தார்கள் என்று சில வித்துவான்கள் நினைக்கிறார்கள்.

அசைபோடுகிறது. Chew the cud. லேவி $11^{3-7. 26}$ உபா 14^{6-8}.

அசைவாட்டப்படும் காணிக்கை. Wave offering. பலி காண்க

அசோகமரம். A. V. Ash. R. V. Fir. எசா 44^{14}. இந்தியா தேசத்திலுள்ள அசோகமரம் அல்ல. தேவதாரு விருக்ஷங்களில் இது ஒரு வகை.

அச்சடையாளங்கள். Marks, Stigmata. கலா 6^{17}. பவுல் காலத்தில் ஒரு கோயிலில் பணிவிடை செய்யும் அடிமைக்கு அக்கோயிற் கர்த்தாக்கள் அக்கோயிலிலுள்ள தேவதையைக் காட்டும் அடையாளமாகக் குறி சுடுவார்கள். இக்குறியுள்ள அந்த அடிமையை யாரும் தொந்தரவுசெய்தால் அத்தேவதை இவனைக் காத்துக்கொள்ளும் என்று நினைத்தார்கள். இதை அறிந்து பரி. பவுல் கலாத்தியரை நோக்கித் தனக்குச் சத்துராதிகள் அடித்த அடிகளினால் உண்டான தழும்புகள் தான் இயேசுவின் ஊழியக்காரன் என்றும் இயேசு தன்னைக் காப்பாற்றுவார் என்றும் காட்டும் அச்சடையாளங்கள் என்னும் கருத்தோடே சொல்லி, கலாத்தியர்கள் பயந்து தனக்கு இனி யாதொரு தொந்தரவும் செய்யாதபடி அவர்களை எச்சரிக்கிறான்.

அச்சாரம். The earnest. 2 கொரி 1^{22} 5^{5} எபே 1^{14}. வாங்குகிறவன் விற்கிறவனுக்கு வாக்களித்த முழுத் தொகைக்காக உறுதியைக் காட்டும்படி தற்சமயத்தில் கொடுக்கும் பாகம். அல்லது வேலைக்காரன் வாங்கவேண்டிய முழுத் தொகைக்காகத் தற்சமயத்தில் அவன் பெற்றுக்கொள்ளும் பங்கு. வாக்களித்த மிச்சத் தொகை இனிமேற் கொடுக்கப்படும். இவ்விதமாய்ப் பரிசுத்தாவியானவர் நம்மில் உண்டாக்கும் நன்மையானது நாம் புத்திர சுவிகாரத்தையும் நித்திய பாக்கியத்தையும் அடைவோம் என்பதற்கு உறுதியான அச்சாரம் என்று பவுல் அப்போஸ்தலன் காட்டுகிறான். **அடைமானம்** காண்க.

அஸ்கலோன். Ashkelon, Ascalon. பெலிஸ்தருடைய ஐந்து முக்கிய பட்டணங்களி லொன்று. இது அத்தேசத்திற்கு ஓர் பெரிய கோட்டை. இங்கே தாகோன் என்னும் தேவதையை வணங்கிவந்தார்கள். எரேமியா, ஆமோஸ், செப்பனியா, சகரியா என்னும் தீர்க்கதரிசிகள் இதற்கு வரப்போகும் சாபத்தை முன் அறிவித்தார்கள். யோசு 13^{3} நியா 1^{18}.

அஸ்காத். Azgad. எஸ்றா 8^{12}.

அஸ்கெனஸ். Ashkenaz, Ashchenaz.
1. கோமரின் மகன். ஆதி 10^{3}.
2. அர்மீனியா தேசத்து ஒரு கோத்திரம். எரே 51^{27}. சிலர் நினைக்கிறபடி இந்தக் கோத்திரமும் கொலோ 3^{11}-ல் சொல்லியிருக்கும் 'புறதேசத்தான்' (*Scythian*) என்பதும் ஒன்றுதான்.

அஸ்தகடகம். Armlet. 2 சாமு 1^{10}. **ஆபரணம்** காண்க.

அஸ்தரோத். Ashtoreth.
1. சீதோனியர் வணங்கிவந்த சந்திர தேவி. சாலொமோன் இதைப் பின்பற்றினான். 1 இரா 11^{5}. சாலொமோன் இதற்காகக் கட்டின பலிபீடத்தை யோசியா அழித்தான். 2 இரா 23^{13}. கானானியரைத் தவிர அசீரியர், பாபிலோனியர், மோவாபியர் இந்தத் தேவியை மிகவும் வணங்கிவந்தார்கள். இந்தத் தேவியின் தன்மையைப் பார்க்கப்

போனல் இது அவர்களுக்கு காமதேவி யாயும் யுத்தஜெய தேவியாயு மிருந்தது. இதைப் பிரியப்படுத்தும்படி வேசித்தனம் பலமுறையும் செய்வார்கள். சில விஷயங் களில் இத்தேவியின் தயவு பெறும்படி



அஸ்தரோத் தேவி.

குடும்ப ஸ்திரீகளும் இதின் ஆலயத்தில் வேசித்தனமாய் நடப்பார்கள். இதினிமித் தம் இத்தேவியின் வணக்கமெல்லாம் அகோ ரமாயிருந்தது என்று பழைய ஏற்பாட்டின் மூலமாய் நாம் அறியலாம்.

2. யோர்தான் நதிக்குக் கிழக்கே பாசான் தேசத்திலுள்ள ஓர் பெரிய பட்டணம். உபா 1⁴.

அஸ்தரோத் கர்னயீம். Astaroth Karnaim. [இரு கொம்புகளையுடைய சந்திர தேவி]. யோர்தான் நதிக்குக் கிழக்கேயுள்ள ஒரு ஊர். இந்த ஊரிலே யோபு வாசஞ் செய்தான் என்பது பாரம்பரியம். ஜனங்கள் இரு கொம்புகளையுடைய அஸ்தரோத் தேவி யின் சிலையை இந்த ஊரிலே வணங்கிவந் தார்கள் என்று தோன்றுகிறது. ஆதி 14⁵.

அஸ்தோத். Ashdod. [கோட்டை]. யோசு 11²² 1 சாமு 5⁶ 2 நாளா 26⁶ நெகே 4⁷.= அசோத்து. அப் 8⁴⁰. பெலிஸ்தியரு டைய ஐந்து பெரிய பட்டணங்களில் இது ஒன்று. இஸ்ரவேலர் இதைப் பிடியாததி னலே எனுக்கியருக்கு இது ஒரு புகலிடம் ஆனது. இப்பட்டணத்தாருக்கும் யூதருக்கும் எப்போதும் விரோதம். கி-மு. 711-ஆம் ஆண்டி ல் அசீரியா ராஜாவாகிய சர்கோன் சமாரியாவைப் பிடித்தபிறகு இப்பட்டணத் தை முற்றிக்கையிட்டு அதைப் பிடித்தான். கி-பி. நாலாம் நூற்றாண்டில் இது கிறிஸ் தவ அத்தியக்ஷருக்கு வாசஸ்தலம் ஆனது. ஆனல் இதின் கீர்த்தி வரவரக் குறைந்து போனதினல் இது இருந்த இடத்திலே இப் போது ஒரு சிறு கிராமம் மாத்திரம் இருக் கிறது.

அஸ்தோத் பிஸ்கா. Pisgah. இது கார ணப்பெயர் அல்ல. இதின் அர்த்தம் பிஸ்கா மலையின் கீழ்ப்பாகம். உபா 3⁷.

அஸ்பதானு. Hashbaddanah. நெகே 8⁴.

அஸ்பாதா. Aspatha. எஸ்தர் 9⁷.

அஸ்பூக். Azbuk. நெகேமியாவின் தகப்பன். நெகே 3¹⁶.

அஸ்பேயா. Ashbea. 1 நாளா 4²¹.

அஸ்பேல். Ashbel. [பாகாலின் மனுஷன்]. இவன் பென்யமீனின் மகன். ஆதி 46²¹.

அஸ்பேனஸ். Ashpenaz. நேபுகாத் நேச்சாரின் பிரதானிகளின் தலைவன். தானி 1³.

அஸ்மாவேத். Azmaveth.

1. 1 நாளா 8³⁶.
2. 2 சாமு 23³¹.
3. ஒரு ஊர். 1 சாமு 12³.

அஸ்மோனு. Hasmonah. எண் 33²⁹.

அஸ்மோன். Azmon. எண் 34⁴. = ஆத் சேம். யோசு 15²⁹.

அஸ்ரா. Hasrah. அர்காஸ் காண்க.

அஸ்ரிக்காம். Azrikam.

1. 1 நாளா 3²³.
2. 1 நாளா 8³⁸.
3. 1 நாளா 9¹⁴.
4. 2 நாளா 28⁷.

அஸ்ரியேல். Asriel. யோசு 17² 1 நாளா 7¹⁴.

அஸ்ரியேல். Azriel.

1. 1 நாளா 5²⁴.
2. 1 நாளா 27¹⁹.
3. எரே 36²⁶.

அஸ்ரீக்காம். அஸ்ரிக்காம் காண்க.

அஸ்வாத். Ashvath. 1 நாளா 7³³.

அஸ்னு. Asna.

1. இரண்டு ஊர்கள். யோசு 15³³· ⁴³.
2. ஒரு குடும்பத்தலைவன். எஸ்று 2⁵⁰.

அஸ்னுப்பர். Osnappar. அசீரியா ராஜாக்கள் காண்க.

அஸ்னேத் தாபோர். Aznoth Tabor. யோசு 19³⁴.

அஷபனு. Hashabnah. நெகே 10²⁵.

அஷாரேலா. Asherelah. எசரேலா காண்க.

அஷூரியர். Ashurites. இப்பெயர் அசீரியரையும் அசூரீயையும் (ஆதி 25³) குறிக் காமல் ஒரு சீரிய கோத்திரத்தைக் குறிக்கி றது. 2 சாமு 2⁹.

அஞ்சல்காரன். Post. ராஜாவின் மெய் காப்பாளரில் ராஜாக்கள் அனுப்பும் நிருபங்

கொண்டு வேகமாய் ஓடுகிற சேவகன். 2 நாளா 30^{6} எஸ்தர் 8^{14} யோபு 9^{25} எரே51^{31}.

அஞ்சனம். Omen. லேவி 20^{27} உபா 18^{10} 1 சாமு 28^{27} 2 நாளா 33^{6}. **சூனியம்** காண்க.

அஞ்ஞானி. Heathen. சங் 135^{15} மத் $6^{7.\,32}$ 18^{17} 1 கொரி 5^{1} 10^{20} 12^{2}. கிறிஸ்தவர்களிற் சிலர் விக்கிரகங்களை வணங்குகிறவனுக்கு இப்பெயர் சொல்லுவார்கள். ஆனல் மூலபாஷையில் இப்பெயர் அந்நியன் அல்லது புறஜாதியான் என்பதை மாத்திரம் கருதுகிறது. எபிரெயர் தங்களுடைய சொந்தத் தேசம், ஆசாரம், கோத்திரம் ஆகிய இவைகளில் சம்பந்தமில்லாதவர்களுக்கு இப்பெயரை வழங்கிவந்தார்கள். வேதாகமத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் மேலே சொன்ன எழு வாக்கியங்களில் இப்பெயரைக் காட்டும் மூலபதங்களுக்கு 'அஞ்ஞானி' என்று சொல்லியிருந்தாலும், பெரும்பாலும் அவைகளுக்கு 'ஜாதிகள்' 'புறஜாதிகள்' என்று எழுதியிருக்கிறார்கள். **ஜாதி, புறஜாதி** காண்க.

அடகு. Pledge. [அடைமானம், ஈடு]. கடனுக்காக வைக்கும் ஈடு. மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி எழை யொருவன் ராத்திரிகாலத்தில் பனிக்குப் போட்டிருக்கும் போர்வையையும் (யாத் 22^{26}), விதவையின் வஸ்திரத்தையும் (உபா 24^{18}), திரிகைக்கல்லேயும் (உபா 24^{6}) ஒருவரும் அடகாக வாங்கக்கூடாது.

அடக்கம். Burial. **பிரேத அடக்கம்** காண்க.

அடி. Beating. மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஒருவன் குற்றவாளியாய்க் காணப்பட்டால் அவனுக்கு அதிக தண்டனை கொடாமல் 40 அடிவரையும் அடிக்கலாம். உபா 25^{1} 2 கொரி 6^{5} 11^{24}. இந்தக் கட்டளையை மீருதபடி யூதர்கள் குற்றவாளியை 39 அடிகளையும் அடிப்பார்கள்.

அடிமைத்தனம். Slavery.

1. காஞனுடைய சந்ததியாரின் அடிமைத்தனம். ஆதி 9^{25}. யூதர்கள் 'நாங்கள் ஒருவருக்கும் அடிமைகளாய் இருந்ததில்லை' என்று பெருமை பாராட்டினலும் (யோவா 8^{33} கலா 4^{31}), எகிப்தியர், அசீரியர், ரோமர் முதலானவர்களுக்கு அடிமைகளைப்போல் இருந்தார்கள். **வேலைக்காரன்** காண்க.

2. பாவத்திற்கு அடிமை. ரோ 6^{16} 17^{20} எபி 2^{15} 2 பேது 2^{19}.

3. நியாயப்பிரமாணத்திற்கு அடிமை. ரோ 8^{15} கலா 2^{4} 3^{10} $4^{9.\,24}$.

4. அழிவு, மரணம் இவைகளுக்குரிய அடிமைத்தனம். ரோ 8^{20}.

5. கடவுளுக்கு அடிமை. ரோ 6^{22}.

6. ரோ 1^{1} மு. 'இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன்' என்று சொல்லும்போது 'ஊழியக்காரன்' என்பதும் 'அடிமை' என்பதும் ஒன்றுதான் என்று நாம் அறியவேண்டும்.

அடை. Cake. யாத் 29^{2} லேவி 2^{4}.



அடைக்கலப்பட்டணம்.

அடைக்கலப்பட்டணம். Cities of Refuge. எண் 35 அதி. உபா $19^{11.12}$ யோசு 20 அதி. 1 சாமு 14^{4}. முற்காலத்தில் ஒருவனை ஒருவன் கைப்பிசகாயாவது பகையினிமித்தமாயாவது கொன்றுபோட்டால் கொல்லப்பட்டவனுடைய இனத்தார் கொலைபாதகனைக் கொல்வது நியாயம் என்று சொல்லி அப்படியே செய்துவந்தார்கள். இஸ்ரவேலர் காஞன் தேசத்தை ஜெயித்த பிறகு கடவுள் கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோட்டவன் ஓடிப்போய் இருக்கத் தக்கதாக ஆறு அடைக்கலப்பட்டணங்களைக் குறிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். அப்படியே இந்தப் பட்டணங்களை யோர்தான் நதிக்குக் கிழக்கே மூன்றும் மேற்கே மூன்றுமாக அவர்கள் ஸ்தாபித்தார்கள். காஞன் தேசப்படத்தை நாம் பார்ப்போமானல் ஒருவன் தான் இருக்கும் இடத்திலிருந்து அடுத்த அடைக்கலப்பட்டணத்துக்குப் போகவேண்டிய தூரம் 30 மைலுக்கு மேற்படாதென்று அறிவோம். கைப்பிசகாய்க் கொலை செய்தவன் லேசாய் ஓடிப்

போகத்தக்கதாக இடையிலே யாதொரு தடையும் இல்லாமல் இப்பட்டணங்களுக்குப் போகும் வழிகள் செம்மையாய் வைக்கப்பட்டிருந்தன. உபா 19^{3}. பழிவாங்குகிறவன் வந்து அடைக்கலப்பட்டணத்தில் இருக்கிற கொலையாளி கைப்பிசகாய் அல்ல, பகையினிமித்தம் கொன்றவன் என்று அவன் மேல் குற்றஞ் சாட்டினால், சபையார் அதைப்பற்றி விசாரணைசெய்து கொலையாளி பகையினிமித்தம் கொன்றான் என்று அறிந்தால் பழிவாங்குகிறவன் அவனைக் கொல்லும்படி இடங்கொடுப்பார்கள். கொலையாளி கைப்பிசகாய்க் கொன்றான் என்று சபையார் கண்டால் அவர்கள் அவனுக்கு யாதொரு சேதமும் வராதபடி அடைக்கலப் பட்டணத்தில் வைத்திருப்பார்கள். பிரதான ஆசாரியன் மரித்தபிற்பாடு அவன் அடைக்கலப்பட்டணத்தை விட்டுத் தன் சொந்த ஊருக்குப் பயமின்றிப் போகலாம். எண் 35^{28}.

தேவாலயத்திலுள்ள பலிபீடம் அடைக்கல ஸ்தானமாயிருந்தது. 1 இரா 1^{50} 2^{28} யாத் 21^{14}.

அடைக்கலம். Refuge. [புகலிடம்]. தேவன் தம்மை நம்பினவர்களுக்கு அடைக்கலமானவர் என்று உபமானமாய்ச் சொல்லப்படுகிறதை வேதத்தில் நாம் அடிக்கடி பார்க்கிறோம். சங் 46^{1} 62^{7} 91^{2} நீதி 14^{26} ஏசா 25^{4} ூ.

அடைக்கலான் குருவி. பழைய ஏற்பாட்டிலே மூலபாஷையில் கீச்சு கீச்சு என்று சத்தமிடுகிற பட்சிகளுக்கு வழக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிற ஒரே பதத்தை 'குருவி' 'அடைக்கலான் குருவி' 'பட்சி' என்று தமிழில் மொழிபெயர்த்திருக்கிறது. புதிய ஏற்பாட்டிலே அடைக்கலான் என்று சொல்லப்படும் குருவிகள் இந்தியா தேசத்திலுள்ளவைகளைப் போன்றவைகள். அவைகள் பலஸ்தீனா தேசத்தில் ஏராளமாயுண்டு. அவைகள் நியாயப்பிரமாணத்தின்படி புசிப்பதற்கு விலக்கப்பட்டவைகளல்ல. சங் 84^{3} நீதி 26^{2} மத் $10^{29.31}$ லூக் 12^{6}.

அடைமானம். Pledge. கொடுக்க வேண்டிய கிரயத்திற்கு அல்லது வெகுமதிக்கு ஈடு. ஆதி 38^{17}. **அச்சாரம், அடகு** காண்க.

அடையாளம். Sign. இப்பதம் கடவுளுடைய வாக்குத்தத்தத்திற்கு அல்லது ஒரு காரியம் கடவுள்தான் செய்தார் என்பதற்கு அத்தாட்சியாய் வேதத்தில் வழங்கப்படுகிறது. உ-ம்.

வானவில். ஆதி 9^{12}.
விருத்தசேதனம். ஆதி 17^{11}.
பத்து வாதைகள். யாத் 10^{2}.
கிதியோனுக்கு. நியா 6-ம் அதி.
சவுலுக்கு. 1 சாமு 10^{7}.
யூதர்களுக்கு. ஏசா 7^{14} எரே 44^{29} ஏசே 14^{8}.
மேய்ப்பர்களுக்கு. லூக் 2^{12}.

இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் செய்த அற்புதங்கள் அடையாளங்களாய் இருந்தன. யோவா 3^{2} அப் 15^{12}.

உலகத்தின் முடிவைப் பல பயங்கரமான அடையாளங்கள் காட்டும். மத் 24^{30} லூக் 21^{25} 2 தெச 2^{9} ூ.

யூதர்கள் அடையாளங்களுக்காக அற்புதங்கள் செய்யும்படி இயேசுவைத் தொந்தரவு செய்தார்கள். மத் 12^{38} ூ. யோவா 4^{18}.

அட்டை. Leech. பலஸ்தீனாவிலுள்ள ஆறுகளிலும் குளங்களிலும் அட்டைகள் அதிகம். நீதி 30^{15}.

அண்ணகன். Eunuch. ஆண்மை இல்லாதவன். ஏசா 56^{3}. இயல்பாகவே ஆண்மை இல்லாதவர்களும், அப்படிச் செய்யப்பட்டவர்களுமாகிய இவர்களை அரமனை அந்தப்புரத்தில் ஊழியர்களாக ராஜாக்கள் வைத்தார்கள். சில காலத்திற்குப் பிற்பாடு இப்பதம் அர்த்தம் மாறிப்போய் அரமனையிலுள்ள உத்தியோகஸ்தருக்குப் பொதுவாய் வழங்கப்பட்டது. பிரதானிகள் (2 இரா 9^{32}), அரமனைப் பிரதானிகள் (எரே. 41^{16}), அரமனை வேலைக்காரர் (2 இரா 20^{18}) இவர்களைக் குறிக்கும்படி மூலபாஷையில் இப்பதமே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தத்தின்படியே (அப் 8^{25}) அண்ணகனுக்கு மந்திரி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சீரியர் முதலானவர்கள் தங்கள் தேவர்களைப் பிரியப்படுத்துவதற்காகத் தங்களை அங்கவீன மாக்கிக்கொள்ளுகிறதை வெறுத்து மோசே அண்ணகர்களுங்கூட தேவாலயத்தில் பிரவேசிக்கப்படாது என்று நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறான். உபா 23^{1}.

காம இச்சையை அடக்குவோர். மத் 19^{12}.

அதமீ நேக்கேப். Adami-nekeb. ஒரு பள்ளத்தாக்கு. யோசு 19^{33}.

அதரோத். Ataroth.

1. மூன்று ஊர்களின் பெயர். எண் 32^{3} யோசு $16^{2.7}$.

2. ஒரு குடும்பம். 1 நாளா 2^{54}.

அதரோத் அதார். Ataroth addar. [மகிமையுள்ள கிரீடங்கள்]. யோசு 16^{5}.

அதலியா. Adalia. எஸ்தர் 9^{8}.

அதனூசி. **Athanasius.** எகிப்து தேசத்திலே பல வருஷங்களாக மேற்றிராணியாய் இருந்த இவன் கி-பி. 296-ஆம் பிறந்தான். இவன் அருந்தபசுபுரிந்த பரி. அந்தோனியாரைப் பார்த்து, தன் வாலிபப் பிராயத்தில் தானும் தபசு செய்துவந்தான். இவன் கி-பி. 325-ஆம் மகா கொன்ஸ்தன்தீன் ராயன் காலத்தில் நிசேயா (*Nicea*) பட்டணத்தில் முதல் பொதுவான சங்கம் கூடினபோது, அரியானர் கொள்கைக்கு எதிரிடையாகக் குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவோடொத்த ஒரே சுபாவமுடையவராய் இருக்கிறார் என்று உறுதிப்படுத்தினான். இராஜசபையில் அதிகாரமுள்ள அரியானர் இவனைத் துன்பப்படுத்தி இவனுடைய ஜீவிய காலமெல்லாம் இவனுக்கு விரோதமாய் அநேக கட்டுப்பாடுகள் செய்தார்கள். ஒருநாள் இவன் ஆராதனை நடத்தும்போது அவர்கள் போர்ச்சேவகரை அனுப்பி இவனைத் தூரத்திவிட்டு இவனைக் கொன்றுபோடுகிறவர்களுக்கு வெகுமதி கொடுப்போம் என்று விளம்பரஞ் செய்திருந்தார்கள். இவன் அத்தியக்ஷனாயிருந்த 49 வருஷங்களில் 20 வருஷம் தனது சத்துருக்கள் தனக்குச் செய்யவென்றெண்ணியிருந்த மோசத்திலிருந்து தற்காக்கும்படி வனத்திலும் தூர தேசங்களிலும் போய் அங்கே வசிக்கவேண்டியதாய் இருந்தது. இந்த 20 வருஷகாலத்தில் தனது சத்துருக்களின் போலி நியாயங்களுக்கு விரோதமாய்ப் புஸ்தகங்கள் பல எழுதி இயேசுகிறிஸ்துவைப் பற்றிய உண்மையான கொள்கையை ஸ்தாபிக்க முயன்றான். இவன் கி-பி. 373-ஆம் இறந்துபோனான்.

அதாத்தா. **Hadattah.** = ஆத்சோர் அதாத்தா.

அதாயா. **Adaiah.** [யேகோவா அலங்கரித்தார்].

1. 2 இரா 22¹.
2. = இத்தோ. 1 நாளா 6²¹·⁴¹.
3. = சேமா. 1 நாளா 8¹³·²¹.
4. 1 நாளா 9¹².
5. = ஆதாயா. 2 நாளா 23¹.
6. எஸ்றா 10²⁹.
7. எஸ்றா 10³⁹.
8. நெகே 11⁵.
9. நெகே 11¹².

அதிகாரம், அதிகாரி. **Authority, Rulers, Magistrates.**

1. எஜமானுடைய அதிகாரம். மத் 8⁹.
2. ராஜாவுக்கும் தேசாதிபதிக்கும் தங்கள் தேசத்தின்மேல் உள்ள ஆளுகை. லூக் 20²⁰ 23⁷.
3. மனதில் உறுதியை உண்டாக்கும் வல்லமை. மத் 7²⁸
4. அனுமதி. மத் 21²³ அப் 9¹⁴.
5. இயேசுவின் அதிகாரம். மத் 9⁶ 28¹⁸ யோவா 5²⁷.
6. அதிகாரத்துக்கு ஆதிகாரணர் கடவுள். ரோ 13¹.
7. அதிகாரி = நியாயாதிபதி. நியா 18⁷ அப் 16²⁰.
8. **அதிகாரங்கள்.** கடவுள் உண்டாக்கின மனுஷர்களைவிட அதிக வல்லமையுள்ள ஆவிகள்; அல்லது நல்லவர்கள் அல்லது பொல்லாதவர்கள். எபே 3¹⁰ 6¹² கொலோ 1¹⁶ 2¹⁵ 1 பேது 3²².

ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவி. எபே 2².

இருளின் அதிகாரம். கொலோ 1¹³.

9. அதிகாரங்கள்=நியாயாதிபதிகள். தீத் 3¹.

அதிசயமானவர். **Wonderful.** இப்பதம் 'ஆலோசனைக் கர்த்தர்' என்பதோடு சேர்க்கப்படவேண்டும். அசீரியர் படையெடுத்து வந்து யூதாவின் ஜனங்களைத் தண்டித்த பிறகு உண்டான அமைதியானகாலத்தில் கடவுள் அவர்களை நடத்தும்படி அதிசயமானவைகளைப் போதிக்க ஒருவரை அனுப்புவார் என்பது ஏசாயாவின் அர்த்தம். யூதசாஸ்திரிகள் 'அதிசயமானவர்' என்பது மேசியாவைக் கருதுகிறதென்றும், கிறிஸ்தவர்கள் இது இயேசுவைக் கருதுகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஏசா 9⁶.

அதிதா. **Hatita.** எஸ்றா 2⁴².

அதித்தாயீம். **Adithaim.** யோசு 15³⁶.

அதிபதி. **A. V. Deputy; R. V. Proconsul.** ரோமை ராஜ்யத்தின் சில நாடுகள் ரோமை ராயன் கையிலும், சில நாடுகள் ராஜ்யத்தின் மேலான சங்கத்தாரின் கையிலும் இருந்தன. முதலாவதான நாடுகளுக்குத் தலைவன் 'சேனாபதி' என்றும், இரண்டாவதான நாடுகளுக்குத் தலைவன் 'அதிபதி' என்றும் சொல்லப்படுவார்கள். அப் 13⁷.

அப் 19³⁸-ல் சொல்லியிருக்கும் 'சேனாபதிகள்' என்பதற்குப் பதிலாக 'அதிபதிகள்' என்றிருக்கவேண்டும்.

கிறிஸ்து 'அதிபதி' (அப் 5³¹) என்றும், 'இரட்சிப்பின் அதிபதி' (எபி 2¹⁰) என்றும் சொல்லப்பட்டார்.

அதிபா. **Hatipha.** எஸ்றா 2⁵⁴.

அதிரசம். **Wafers.** யாத். 29²·²³ லேவி 2⁴.

அதிரமித்தியம். Adramyttium. சின்ன ஆசியாவிலுள்ள மீசியா நாட்டில் ஓர் கப்பல் துறைமுகப்பட்டணம். அப் 27^{2}.

அதீனே-ஏஸ்னி. Adina-Ezni. 2 சாமு 23^{8}.

அதும்மீம். Adummim. சாக்கடலின் பள்ளத்தாக்கில் இருக்கிற எரிகோ என்னும் பட்டணத்திலிருந்து மலை நாட்டிலுள்ள எருசலேமுக்குப்போகும் கணவாய். இதின் ஓரத்தில் மலைக்குகைகள் அநேகம் இருப்ப தால் இது கள்ளர் மிகுத்தவழி. யோசு 15^{17}. நல்ல சமாரியன் கள்ளர் கையில் அகப் பட்டவனுக்கு இரக்கம் காட்டின இடம் இதுதான். லூக் 10^{14}.

அதுல்லாம். Adullam. எருசலேம் நக ரத்துக்குத் தென்மேற்கிலே யர்மூத் ஊருக் கும் அசேக்கா ஊருக்குஞ் சமீபத்திலிருந்த ஓர் ஊர். சவுலுக்குத் தாவீது பயந்துவந்து ஒளித்த குகை இதற்குச் சமீபமான மலையி லிருந்தது. ஆதி 38^{1} யோசு 12^{15} 15^{35} 2 நாளா 11^{7} நெகே 11^{30} மீகா 1^{15}.

அதேர். Ater. எஸ்று 2^{16}.

அதோராம், அதோனீராம். Adoram, Adoniram. தாவீது, சாலொமோன், ரெகொ பெயாம் என்னும் ராஜாக்களுக்குத் தீர்வை வாங்கிக் கொடுத்துவந்த பகுதி விசாரிப்புக் காரன். இவனை ஜனங்கள் கல்லெறிந்து கொன்றார்கள். 2 சாமு 20^{24} 1 இரா 4^{6} 12^{18}.

அதோராம். Hadoram.

1. ஆதி. 10^{27}.
2. 1 நாளா 18^{10}.
3. 2 நாளா 10^{18}.

அதோராயீம். Adoraim. யூதாவில் எபி ரோன் என்னும் பட்டணத்திற்கு ஏறக் குறைய 6 மைல் தூரமுள்ளது. இப்போது இது ஒரு சிறு கிராமமாயிருக்கிறது. 2 நாளா 11^{9}.

அதோனிசேதேக். Adonizedec. [நீதி யுள்ள கர்த்தர்]. எருசலேமின் எமோரிய ராஜாவாயிருந்தவன். இவன் யோசுவா எரி கோவையும் ஆயியையும் பிடித்த சங்கதியைக் கேட்டு, மற்ற ராஜாக்களோடே கூடிக்கொ ண்டு, யோசுவாவோடே யுத்தஞ் செய்தான். அப்போது யோசுவாவினாலே இவனும் இவ னோடிருந்த ஐந்து ராஜாக்களும் சங்கரிக்கப் பட்டார்கள். யோசு 10 அதி.

அதோனிபேசேக். Adonibezec. [பேசேக் என்னும் கானானியர் வணங்கின ஒரு தேவன் கர்த்தராய் இருக்கிறான்]. கானான் தேசத்திலிருந்த பேசேக் என்ற ஊரின் ராஜா. இவன் மிகவும் குரூரனாய் அரசாண்டுகொண்டிருக்கையில் எழுபது ராஜாக்களுடைய கைகால்களின் பெருவிரல் களைத் தறித்து நாய்களைப்போல அவர்களைப் புசிக்கும்படி எப்படிச் செய்தானோ அப் படியே எபிரெயர்கள் இவனைப் பிடித்து இவ னுக்குச் செய்தார்கள். நியா 1^{5-7}.

அதோனியா. Adonijah. [கர்த்தர்தான் எஜமான்].

1. தாவீதின் நாலாம் மகன். 2 சாமு 3^{4}. அப்சலோம் இறந்தபிறகு நியாயத்தின்படி இவன்தான் யூதாவின் ராஜனாய் வரவேண் டியது. தாவீது அதிக விருத்தாப்பியனா யிருந்ததினால் பத்சேபாள் தன் குமாரனா கிய சாலொமோனுக்கு ராஜ்யபாரம் சேரும் படி பிரயத்தனம் செய்வாள் என்று இவன் அறிந்து, தான் ராஜாவாகிறதற்கு வேண் டிய முயற்சி செய்தும் தோல்வியடைந்து கடைசியில் கொல்லப்பட்டான். 1 இரா 1 அதி. 2^{1-36}.

2. யூதருக்கு நியாயப்பிரமாணம் கற் பிக்க யோசபாத் அனுப்பிய ஒரு லேவியன். 2 நாளா 17^{7}.

3. உடன்படிக்கைக்கு முத்திரை போட் டவர்களில் ஒருவன். நெகே 10^{16}.

அதோனீராம். Adoniram. [என் எஜ மான் மேலானவர்]. 1 இரா 4^{6}. **அதோராம்** காண்க.

அத்சலியா. Azaliah. 2 இரா 22^{3}.

அத்சாள். Hadassah. எஸ்தரின் யூதப் பெயர். எஸ்தர் 2^{7}.

அத்செலெல்போனி. Hazzelelponi. ஒரு பெண். 1 நாளா 4^{3}.

அத்தலியா. Attalia. அப் 14^{25}. பவு லும் பர்னபாவும் அந்தியோகியாவுக்குப் போகும்போது அவர்கள் பம்பிலியாநாட் டில் சந்தித்த ஒரு துறைமுகப்பட்டணம்.

அத்தலியாள். Athaliah. 2 இரா 11-ம் அதிகாரத்தில் இவளுடைய சரித்திரம் விபர மாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. யெசபே லின் குமாரத்தியாகிய இவள் பாகாலை வண ங்கிவந்தவள். யூதாவின் ராஜ்யத்தில் இவள் ஒருத்திதான் ராஜ்யபாரத்தை நடத்தினாள்.

அத்தாயா. Athaiah. நெகே 11^{4}.

அத்தாய். Attai.

1. 1 நாளா 2^{35}.
2. 1 நாளா 12^{11}.
3. 2 நாளா 11^{20}.

அத்தாராள். Atarah. யெர்மெயேலின் மனைவிகளில் ஒருத்தி. 1 நாளா 2^{26}.

அத்தாலியா. Athaliah. 1 நாளா 8^{26}.

அத்தீ. Addi. லூக் 3^{28}.

அத்திமரம். Fig Tree. பலஸ்தீனு தேசத்திலே அத்திமரம் அதிகமாயுண்டு. அத்திமரத்தின் நிழல் மிகவும் குளிர்ச்சியாய் இருப்பதினாலும், கிளைகள் நாலுபக்கமும் பரந்து இருப்பதினாலும், அதன்கீழ் ஜனங்கள் வாஞ்சையாய் உட்காருவார்கள். மீகா 4^4 யோவா 1^{48}. அத்திமரம் கனிகொடுக்கும் விதம் விநோதமாயிருக்கிறது.

மார்கழி, தை மாதங்களில் அதின் இலைகள் எல்லாம் உதிர்ந்து, பங்குனி மாதத்தில் துளிர்விடும்போது (மத் 24^{32} மாற்கு 13^{28}) அது இலைகளோடே காயும் காய்க்கும். அக்காய்கள் பிஞ்சாயிருக்கும் பருவத்தில் காற்று வீசினால் பெரும்பாலும் கீழே உதிர்ந்து விழும். உன். பா. 2^{13} வெளி 6^{13}. முதற்தரமான அத்திமரங்களிற் காய்க்கும் அந்தக் காய்கள் இடையிலே விழாமல் பழுத்தால் அவைகள் நற்கனிகளாய் இருக்கும். ஏசா 28^4 எரே 24^2 ஓசி 9^{10}.

இந்த முதற் கந்தாயத்துக் கனிகள் சொற்பமா யிருந்தாலும் அதிக சுவையுள்ளவைகளாகையால் ஜனங்கள் அதிக பிரியத்தோடு அவைகளைச் சாப்பிடுவார்கள். முதற் கந்தாயமாகிய இந்தப் பழக்காலத்தில் அதே மரத்தின் கிளைகள் மறுபடியும் துளிர்விட்டுக் காய்க்கும். இந்த இரண்டாங் கந்தாயத்துக் காய்கள் ஆவணி மாதம் பழுக்கும். இரண்டாம் கந்தாயத்திலே பழங்கள் அதிகமாய் இருப்பதினால் இதை அத்திப்பழக் காலம் என்று சொல்லக்கூடும். அத்திப் பழக்காலம் அல்லாத சித்திரை மாதத்தில், அதாவது பஸ்காப்பண்டிகை காலத்தில், இயேசு முதற் கந்தாயத்துச் சில கனிகள் அல்லது இரண்டாம் கந்தாயத்துப் பிஞ்சுகள் இருக்கவேண்டும் என்று அறிந்து இலைகள் நிறைந்த ஒரு அத்திமரத்தண்டை போய் அதில் இலைகளேயன்றி பழமோ காயோ இல்லாமையால் அது பிரயோஜனமற்ற மரமென்று நிச்சயமாய்க் கண்டார். மத் 21^{18} மாற் 11^{12-21}.

இயேசுவை நம்பாத யூதர்கள் கனிகொடாத அத்திமரத்தைப்போல் இருக்கிறார்கள். லூக் 13^6.

இப்போது இருக்கிற மாதிரியாய் அப்போது அத்திப்பழங்களை வற்றலாக்கி அல்லது வடைகளாகத் தட்டிவைப்பார்கள் 1 சாமு 25^{18}.

அத்திப்பழத்து அடை பிளவைக்கு நல்ல பற்று. 2 இரா 20^7.

ஆதாம் ஏவாள் அத்தியிலைகளைத் தைத்து உடுத்தினார்கள். ஆதி 3^7.

சகேயு ஏறி உட்கார்ந்திருந்த மரம் ஒரு வகை அத்தி. லூக் 19^4.

அத்தீல். Hattil. எஸ்ரா 2^{57}.

அத்தூஸ். Hattush.

1. ஒரு ஆசாரிய குடும்பம். நெகே 12^2.
2. சிறையிருப்பிலிருந்து வந்தவன். எஸ்ரா 8^2.
3. மதில் கட்டினவன். நெகே 3^{10}.



அத்தேனேயிலுள்ள முக்கிய தேவாலயம்.

அத்தேனே. Athens. கிரேக்க தேசத்திலுள்ள நகரங்களில் சிரேஷ்டமான இந்நகரம் துறைமுகத்திலிருந்து மூன்று மைல் தூரம் ஒரு சமவெளியிற் கட்டப்பட்டிருந்தது. இதின் மத்தியில் ஒரு மலையிலே கல்விக்குச் சரஸ்வதிபோலச் சொல்லப்படும் 'அத்தேனே' தேவிக்கும், இந்த மலைக்கு அடுத்த மார்ஸ் மேடை என்னும் குன்றின்மேல் முருகக்கடவுளைப்போல 'மார்ஸ்' என்னும் தேவனுக்கும் கோயில்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. அத்தேனே பட்டணம் விநோதமான சிற்பசித்திரம் அமைந்த ஆல

யங்களும் மாளிகைகளும் சாலைகளும் நிறைந்திருந்தது. கி-மு. 5-ம் நூற்றாண்டில் சித்திர சாஸ்திரிகள், கவிவாணர், வித்துவான்கள் ஆகிய இவர்களுக்குக் கீர்த்திபெற்ற இடமாயிருந்தது. கி-பி. 52-வு பரி. பவுலின் காலத்தில் அது ரோமை ராஜ்யத்திற்குச் சேர்ந்திருந்ததினால் அவர்கள் அதின் கீர்த்தியைக் குறைக்காமல் அதைச் சிறப்பித்தேவந்தார்கள். பரி. பவுலின் காலத்தில் அங்கே பெரிய சர்வகலாசாலை யொன்றிருந்தது. அப் 17^{19}. பூர்வீகத்தில் அத்தேனேயிலுள்ள 'மார்ஸ் மேடை' என்னும் இடத்தில் ஒரு சங்கம் கூடினதினால் அதற்கு 'மார்ஸ் மேடை' என்று பெயர் வழங்கிவந்தது அச் சங்கத்தார் அந்த ஊரிலே பிரசங்கம் செய்கிறவர்களுக்கு உத்தரவு கொடுக்கவேண்டியிருந்ததினால் பரி. பவுல் அவர்களுடைய வேண்டுகோளின்படி அங்கே பிரசங்கம்பண்ணினான்.

அத்பியேல். Adbeel. ஆதி 25^{13}.

அத்மா. Admah. ஆதி 10^{19} உபா 30^{23} ஓசி 11^{8}.

அத்மாதா. Admatha. ஒரு பிரதானி. எஸ்தர் 1^{14}.

அத்ரமலேக்கு. Adrammelech.

1. அத்ரமலேக்கும் அன்னமலேக்கும் சல்மனாசார் தன் தேசத்திலிருந்து சமாரியாவுக்குக் கொண்டுவந்து குடியேற்றின ஜனங்கள் வணங்கிவந்த தேவர்கள். இந்தத் தேவர்களுக்குப் பலியாக அவர்கள் தங்கள் பிள்ளைகளை அக்கினியில் தகனித்துவந்தார்கள். 2 இரா 17^{31}.

2. சனகெரிப்பைக் கொலைசெய்த அவனுடைய இரண்டு குமாரர்களில் ஒருவன். ஏசா 37^{38}.

அத்லாய். 1. = Adlai. 1 நாளா 27^{29}.
2. = Hadlai. 2 நாளா 28^{12}.

அத்லாய். Athlai. எஸ்றா 10^{28}.

அத்னா. Adna. [இன்பம்].
1. எஸ்றா 10^{30}.
2. நெகே 12^{15}.
3. 1 நாளா 12^{20}.
4. 2 நாளா 17^{14}.

அநியாயம். Iniquity. 2 நாளா 19^{7} யோபு 4^{8} 15^{16} சங் 119^{133} நீதி 22^{8} ஏசா 32^{6} ஆப 2^{12} மல் 2^{6} 2 தீமோ 2^{19}. **அக்கிரமம்** காண்க.

அந்திக்கிறிஸ்து. Antichrist. [கிறிஸ்துவுக்கு எதிராளி]. 2 கொரி 6^{15} 1 யோவா 2^{18-22} 4^{3} 2 யோவா ^{7} வெளி 11^{4} ஃ 13^{1} ஃ 17-ம் அதி. 19^{11-21} பார்க்கவும். 'பாவ மனுஷன்.' 2 தெச 2^{3}. ஆதிக்கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவுக்கும் தங்களுக்கும் விரோதிகளாய்ச் சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடு அங்களைத் துன்பப்படுத்தும் ராயரும், தங்களைப் பகைக்கும் ஜனமும் அந்திக்கிறிஸ்து என்று சொல்லிவந்தார்கள். ஆகவே வெவ்வேறான காலங்களில் இருக்கும் வெவ்வேறான வாதிகளை இப்பெயர் குறிக்கும். மேசியா வருவார் என்று எதிர் பார்த்திருந்த யூதர்கள் தங்கள் தேவாலயத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கின சத்துருக்களையும், தங்களைத் துன்பப்படுத்தினவர்களையும், அந்திக்கிறிஸ்து என்றும் அவர் வந்து அவர்களை அழிப்பார் என்றும் நம்பிக்கை யுடையவர்களா யிருந்தார்கள். கி-பி. 64-வூத்தில் நேரோ, கி-பி. 94-95-வூத்தில் தொமித்தியான் என்னும் ரோம ராயர்கள் கிறிஸ்தவர்களை அதிக குரூரமாய்த் துன்பப்படுத்தினதினால் அவர்கள் அந்த ரோமர் ராயர்களை அந்திக்கிறிஸ்து என்று நினைத்துவந்தார்கள். சில சமயங்களில் ரோமர் ராஜாங்கத்திற்கு இப்பெயர் வழங்குவதுண்டு. வெளிப்படுத்தப்பட்ட விசேஷத்தில் சொல்லியிருக்கிறதாவது: அந்திக்கிறிஸ்து, கிறிஸ்துவுக்கு விரோதமாய்க் கிரியை செய்து அவரை ஜெயிக்கிறவனாய்த் தோன்றினாலும், கடைசியில் கிறிஸ்துவே அவனை ஜெயிப்பார். வெளிப்படுத்தப்பட்ட விசேஷம் எழுதினதற்குப் பிறகு கிறிஸ்தவர்களில் சிலர் தங்களுக்கும் தங்கள் கொள்கைக்கும் விரோதிகளான புறமதஸ்தர்களையும், சிலர் தங்களைப்போல நினையாத வேறு கிறிஸ்தவர்களையும், சிலர் பல விஷயங்களில் சத்தியமார்க்கத்திற்கு இடறலாயிருக்கும் ரோமர் சபைக்குத் தலைவரான பாப்புவையும் அந்திக்கிறிஸ்து எனச் சொல்லுவதுண்டு.

அந்திப்பத்திரி. Antipatris. இது யோப்பா பட்டணத்திற்கு வடகிழக்கிலே ஏறக்குறைய 30 மைல் தூரத்திலிருக்கின்றது. யூதருடைய ராஜனாகிய பெரிய ஏரோது இந்த ஊரை விஸ்தாரமாகவுஞ் சிறப்பாகவும் புதுப்பித்து, அந்திப்பத்தர் என்னும் தன் தகப்பனுடைய பேரை இதற்கிட்டான். பவுல் அப்போஸ்தலனும் அவனைக் காத்திருந்த போர்ச்சேவகரும் எருசலேம் நகரத்திலிருந்து செசரியா பட்டணத்திற்குப் போகையில் இந்த ஊரிலே தங்கி இளைப்பாறிப் போனார்கள். அப் $23^{31, 32}$.

அந்திப்பா. Antipas.

1. **ஏரோது** காண்க.

2. பெர்கமு பட்டணத்தில் உண்மையுள்ள இரத்தச்சாட்சியாயிருந்த கண்காணி. வெளி 2[12].



சீரியாவிலுள்ள அந்தியோகியா.

அந்தியோகியா. Antioch. கி-மு. 300-வருஷத்தில்சீரியாமுதலானதேசங்களை ஆண்ட அரசன் ஒருவன் கட்டின இப்பெயருள்ள 16 நகரங்களில் 2 நகரம் புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிறது.

1. சீரியாவிலுள்ள அந்தியோகியா. அப் 11[19]. அப்போஸ்தலருடைய காலத்திலே இது நாகரீகம் சிறந்த பெரிய பட்டணமாய் இருந்தது. ராஜாக்கள் கட்டின மாளிகைகளும், தேவாலயங்களும், கோட்டைகளும் வெகு அலங்காரமாயிருந்தன. இந்தப் பட்டணத்திற்கும் துறைமுகத்துக்கும் இடையில் கப்பல் போகக்கூடிய பெரிய ஆறு இருந்ததினால் பல தேசங்களிலுமிருந்து வியாபாரிகள் வருவார்கள். இதிற் குடியிருக்கிறவர்கள் 5 லட்சம் பேர். அவர்கள் பல தேவர்களை வணங்கி, பல மதங்களையுடையவர்களாயும் அதிக துன்மார்க்கராயும் இருந்ததினாலே இது 'முறை தலை இல்லாத ஊர்' என்று பெயர் அடைந்தது. இங்கே தான் முதல்முதல் கிறிஸ்துவை அனுசரித்தவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் அடைந்தார்கள். அப் 11[26]. பவுலும் பர்னபாவும் அடிக்கடி அங்கிருந்து உபதேசம் பண்ணப் புறப்பட்டுப் போனார்கள்.

அந்தியோகியாவின் சபை செய்த தருமம். அப் 11[27].

அந்தியோகியாவில் புறஜாதிகள் நியாயப்பிரமாணத்திற் சொல்லியிருக்கிறவைகளின் படி நடக்கவேண்டியதைப்பற்றி வாக்குவாதம் துவங்கினது. அப் 15 அதி. கலா 2[11].

எருசலேம்பட்டணம் அழிந்தபிறகு சில நூற்றாண்டுகளாக அந்தியோகியா கிறிஸ்தவ சபையின் முக்கிய பட்டணமா யிருந்தது. இங்கே பத்துப்பொதுவான சங்கங்கள் நடத்தப்பட்டன.

பல சத்துருக்கள் பல முறையும் வந்து இதை முற்றிக்கை போட்டதினாலும் பல தரம் இங்கே பூமி அதிர்ச்சி உண்டானதினாலும் இதின் கீர்த்தி படிப்படியாய் அற்றுப்போயிற்று.

2. பிசிதியாவிலுள்ள அந்தியோகியா. அப் 13[14] 14[21] 16[6] 18[22]. பரி. பவுல் இதை நாலு தரம் சந்தித்தான்.

அந்திரேயா. Andrew. பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன், சீமோனுடைய சகோதரன். யோவா 1[40]. கலிலேயா நாட்டிலுள்ள பெத்சாயிதா ஊரான். யோவா 1[44]. செம்படவன். மத் 4[18]. சீமோனோடு ஒரே வீட்டில் வசித்தவன். மாற் 1[29]. இவன் இயேசுகிறிஸ்துவை அறிகிறதற்கு முந்தி யோவான்ஸ்நானனுடைய பிரசங்கத்தைக் கேட்டு இயேசுவைக்குறித்து அவன் கூறின சாட்சியைக்கொண்டு அவருடைய சீஷனானான். யோவா 1[35-44]. இவன் தன் சகோதரனை இயேசுவினிடத்தில் வரும்படி அழைத்தான். இயேசு இவன்பேரிலே அதிக பிரியம் வைத்தார். மாற் 13[3]. ஆதி கிறிஸ்தவர்கள் இவனைக் குறித்துச் சொல்லுகிறதாவது: இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்குப் போனபிற்பாடு இவன் பல தேசங்களுக்கும் போய் இயேசுகிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கித்துவந்தான். இவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு அகாயு நாட்டின் தேசாதிபதியின் மனையாட்டி இயேசுகிறிஸ்துவில் பக்திவைத்ததினால் அந்தத் தேசாதிபதி கோபம் மூண்டவனாய் அந்திரேயாவைப் பிடித்துச் சிலுவையில் அறைந்த

போது அதில் இரண்டு நாட்களாக இவன் வேதனை அடைந்த சமயத்திலும் சுற்றி நின்றவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றித் தைரியமாய் உபதேசித்து இரத்தச்சாட்சியாய் மரித்தான்.

அந்தோதியா. Anthothiyah. 1 நாளா 8^{24}.

அந்தோனியா. Antonia. அப் 21^{31} மு. சொல்லியிருக்கிற இந்த அரணான கோட்டையைப் பெரிய ஏரோது கட்டி, இந்த விசேஷித்த பெயரை இதற்கு வைத்தான். இந்தக் கோட்டையின் உப்பரிகையில் காவலாளி ஒருவன் எப்பொழுதும் இருந்து சமீபத்திலுள்ள தேவாலயத்தின் பிராகாரங்களில் ஏதும் கலகமுண்டாகுமானால் உடனே உள்ளேயிருக்கும் சேனாதிபதிக்கும் போர்ச்சேவகருக்கும் அங்கிருந்து செய்தி தெரிவிப்பான். **எருசலேம்** காண்க.

அந்நியன். Stranger. இஸ்ரவேலன் அல்லாத மறு தேசத்தான். லேவி 22^{12} எண் 3^{38} உபா 17^{15} ஏசா 14^{1} ஓசி 7^{7} 8^{7} யோவே 3^{17} ஒப 1^{11} எபே 2^{12}.

இஸ்ரவேலுக்கு விரோதி. ஏசா 1^{7} எசே 7^{21} 11^{9}.

கள்ளப்போதகன். யோவா 10^{5}.

லேவியன் அல்லாதவன். எண் 1^{51} 3^{10}.

ஆசாரியன் அல்லாதவன். யாத் 29^{33} எண் 18^{4}.

ஆரோனின் வம்சமல்லாதவன். யாத் 30^{33}.

அந்நிய அக்கினி. லேவி 10^{1}.

அந்நிய தேசம். 2 இரா 19^{24}.

அந்நிய தேவன். சங் 81^{9}.

அந்நிய பட்டணம். அப் 26^{11}.

அந்நிய புத்திரன். லேவி 22^{25}.

அந்நிய பெண். நீதி 2^{17}.

அந்நிய ஸ்திரீ. நீதி 5^{20}.

அபக்தா. Abagtha. அகாஸ்வேருவின் மாளிகையிலுள்ள பிரதானிகளில் ஒருவன். எஸ்தர் 1^{11}.

அபயம். Appeal. 'இராயருக்கு அபயம் இடுகிறேன்.' அப் 25^{11}. ரோமர் ராஜ்யத்தின் நாடுகளில் கிரிமினல் வழக்கு (*Criminal cases*)ச் சம்பந்தமாகத் தேசாதிபதி செய்யும் தீர்ப்புக்கு அந்நாடுகளிற் பிறந்தவர்கள் பெரும்பாலும் அபயம் என்னும் மனு செய்யக்கூடாது. ஆயினும் ரோமாபுரியில் உள்ளவர்களுக்கும் மற்ற நாடுகளில் அந்தச் சுதந்தரம் பெற்றவர்களுக்கும் அபயம் இடுகிற சிலாக்கியம் இருந்தது. பரி. பவுல் இருந்த காலத்தில் இந்தச் சிலாக்கியத்தைப்பெற்ற ஒருவன் கோர்ட்டில் விசாரணைக்குள் இருக்கையில் அவன் ராயனுக்கு அபயம் இட்டால் தேசாதிபதி அவன் விஷயத்தில் இனி ஒன்றும் செய்யாமல், அந்தச் சங்கதியை ராயனுக்குத் தெரிவித்து உத்தரவுபெற்று அபயமிட்டவனை ராயனிடத்தில் அனுப்புவான். அப்போது ராயன் தானாக அல்லது ஒரு நியாயாதிபதியை ஏற்படுத்தி அதைப்பற்றி விசாரணை செய்வான். 2 தீமோ 4^{16}.

அபற்சாத்தியர். Apharsathchites. அசீரியாவிலிருந்து சமாரியாவுக்குக் குடியேற்றப்பட்ட ஜனம். எஸ்று 4^{9}.

அபாத்திரம். Unworthiness. அப் 13^{46} 1 கொரி 6^{2} 11^{27} 11^{29} லூக் 15^{19}. காண்க.

அபாயா. Habaiah. ஒரு ஆசாரிய குடும்பம். எஸ்று 2^{61}.

அபாரீமின் மேடுகள். Iye-abarim. [புறதேசத்தின் மேடுகள்]. எண் 21^{11} 33^{44}.

அபிகாயில். Abigail. [தகப்பன் சந்தோஷமுள்ளவன்].

1. நாபாலின் மனைவியாகிய இவள் விதவையானபின் இவளைத் தாவீது விவாகஞ் செய்தான். 1 சாமு 25 அதி. 30^{5} 2 சாமு 3^{3}.

2. இன்னொருத்தி. 2 சாமு 17^{25}.

அபிசாய். Abishai. [என் தகப்பன் ஈசாய்]. இவன் தன் மாமனாகிய தாவீதுக்கிருந்த பராக்கிரமசாலிகளில் பிரதானமான ஒருவன். 1 சாமு 26^{6}. 2 சாமு 10 அதி. 16 அதி. 18 அதி. 21^{16} 23^{18}.

அபிசுவா. Abishua.

1. 1 நாளா 6^{4}.

2. 1 நாளா 8^{4}.

அபிசூர். Abishur. [தகப்பன் சுவராய் இருக்கிறான்]. 1 நாளா 2^{28}.

அபிஷாக். Abishag. தாவீது வயது சென்றிருக்கையில் அவனுக்கு உதவிசெய்த ஒரு பெண். 1 இரா 1^{15}. தாவீது மரித்த பிறகு இவளைத் தனக்கு விவாகம்பண்ணிக் கொடுக்கும்படி அதோனியா கேட்டதினிமித்தம் சாலொமோன் அவனைக் கொன்றுபோட்டான்.

அபிஷேகம். Anoint, Ordain.

1. எபிரெயர் ஒலிவமரத்து எண்ணெயை வழக்கமாய்ப் பூசுவார்கள். மரித்தவர்களுக்காகத் துக்கங்கொண்டாடும்போது எண்ணெய் பூசமாட்டார்கள். அவர்கள் உபசாரத்திற்காக விருந்தினருக்குத் தலையிலும் பாதத்திலும் எண்ணெய் வார்ப்பது வழக்கம்.

2. ராஜாக்களுக்கும் ஆசாரியர்களுக்கும் தேவனுடைய லட்சணம், வல்லமை, அவருடைய ஆவி அமைந்திருக்கின்றனவென்றும், அவர்களைக் கொலைசெய்பவர்கள் மாபாதகர் என்றும் காட்டும்படி பரிசுத்த தைலத்



அபிஷேகம்.

தால் அவர்களை அபிஷேகம் செய்வார்கள். 1 சாமு 16[13].

3. 'அபிஷேகம் பண்ணினன்' என்று பொருள்கொள்ளும் 'மாஷாக்' என்னும் எபிரெய பதமாகிய வினையடியிலிருந்து வந்த 'மேசியா' என்னும் சொல்லுக்குச் சரியான அர்த்தமாவது 'அபிஷேகம்பண்ணப்பட்டவர்.' 'மேசியா' என்பதற்கு அதே அர்த்தமாய்க் கிரேக்குப் பாஷையில் 'கிறிஸ்து' என்னும் பதம் சொல்லப்பட்டிருக்கிறது. எபிரெயர் கடவுள் அனுப்பப்போகிற இரட்சகருக்கு இப்பெயர் வழங்குவார்கள்.

4. தீர்க்கதரிசிகளில் எலிசாமாத்திரம் அபிஷேகம் பண்ணப்பட்டான். 1 இரா 19[16].

5. யாக்கோபு ஒரு தூணையும், (ஆதி 28[18]) இஸ்ரவேலர் ஆசரிப்புக் கூடாரத்தையும் அதிலுள்ள பணிமுட்டுகளையும் அபிஷேகம் பண்ணினர்கள். யாத் 30[28].

மார்க்க ஆசாரத்தின்படி பரிசுத்தத்திற்காக இதைப்போலப் பல மாதங்களிலும் அபிஷேகம் செய்வதுண்டு.

அபிதா. Abida. [தகப்பன் அறிகிருன்]. ஆதி 25[4].

அபிதூப். Abitub. 1 நாளா 8[11].

அபித்தால். Abital. [தகப்பன் பனியாய் இருக்கிருன்]. தாவீதின் மனைவிகளில் ஒருத்தி. 2 சாமு 3[4].

அபிநோகாம். Abinoam. [தகப்பன் பிரியமாய் இருக்கிருன்]. நியா 4[6].

அபிமாவேல். Abimael. ஆதி 10[28].

அபிமெலேக்கு. Abimelech. [தகப்பன் ராஜாவாய் இருக்கிருன்].

1. கேராரின் ராஜா. ஆதி 20 அதி.

2. கிதியோனின் மறுமனையாட்டி மகன். நியா 8[30] 9[56].

3. ஒரு ஆசாரியன். 1 நாளா 18[16]. = அகிமெலேக்கு 1 சாமு 21[22] மு.

4. பெலிஸ்தியரின் ராஜாவாகிய ஆகீஸ் என்பவனுடைய மறு பெயர். சங் 34 தலைப்பு.

அபியத்தார். Abiathar. சவுல் ராஜா நோபில் உள்ள ஆசாரியர்களைக் கொன்றபோது இவன் தாவீதண்டை தப்பியோடிப் போய் அவனோடிருக்கையில் அவனுக்கு உதவி செய்தவன். அதோனியா ராஜதுரோகஞ் செய்தபோது இவன் அவனைச் சேர்ந்திருந்ததினுல் சாலொமோன் ராஜா இவனையும் இவன் வம்சத்தாரையும் ஆசாரிய உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்டான். 1 சாமு 22[11-23] 23[6] 2 சாமு 15[29] 1 இரா 1[19] 2[27].

அபியா. Abijah, Abia. [யேகோவா என் தகப்பன்].

1. ரெகொபெயாமின் மகன். 2 நாளா 13[1]. = அபியாம். 1 இரா 14[31].

2. சாமுவேலின் இரண்டாம் மகன். 1 சாமு 8[2].

3. யெரொபெயாமின் மகன். 1 இரா 14[1].

4. சகரியா சேர்ந்த ஆசாரிய வகுப்பு. லூக் 1[5] 1 நாளா 24[10].

5. 1 நாளா 7[8].

அபியாசாப். Abiasaph. [தகப்பன் சேர்த்தான்]. யாத் 6[24] 1 நாளா 6[23].

அபியாம். Abiam. 1 இரா 14[31]. **அபியா** காண்க.

அபியாள். Abiah.

1. எஸ்ரோனின் மனைவி. 1 நாளா 2[24].

2. ஆகாசின் மனைவி. = ஆபி. 2 இரா 18[2] 2 நாளா 29[1].

அபியூ. Abihu. [அவன் தகப்பனாய் இருக்கிருன்]. ஆரோனுடைய இரண்டாம் மகன். மோசேயோடு சீனுமலைமேல் போனவன். யாத் 24[9]. ஆசாரியன். யாத் 28[1]. அந்நிய அக்கினியைக் கொண்டுவந்ததினுல் சாகடிக்கப்பட்டான். லேவி 10[1].

அபியூத். Abihud. [தகப்பன் மகிமையைப் பெற்றுன்]. 1 நாளா 8[3] மத் 1[13].

அபியேசர். Abiezer. [தகப்பன் உதவியாய் இருக்கிருன்].

1. கிதியோனைச் சேர்ந்த வம்சம். நியா 6[24].

2. தாவீதின் போர்வீரரில் ஒருவன். 2 சாமு 23[27].

அபியேல். Abiel. [கடவுள் அவன் பிதா].

1. சவுல் ராஜாவின் பாட்டன். 1 சாமு 9[1].

2. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். 1 நாளா 11[32].

அபிராம். Abiram. [அவனுடைய தகப்பன் மேலானவன்].

1. கோராகின் கூட்டத்தாரைச் சேர்ந்து மோசேக்கு விரோதமாய்க் கலகஞ் செய்தவன். நிலம் பிளந்து அவனையும் அவர்களையும் விழுங்கிப்போட்டது. எண் 16,17 அதி.

2. 1 இரா 16^{34}.

அபிலேனே. Abilene. பெரேயாவுக்கு வடக்கிலுள்ள நாடு. இது லீபனோன் மலைக்கும் எர்மோன் மலைக்கும் இடையிலே இருந்தது. இதில் அபிலா என்னும் நகரமிருந்தபடியினாலே இதற்கு அபிலேனே என்னும் பெயருண்டாயிற்று. லூக் 3^{1}.

அபினதாப். Abinadab. [தகப்பன் நன்றாய் ஈகிறான்].

1. ஈசாயின் மகன். 1 சாமு 16^{8}.

2. சவுலின் மகன். 1 சாமு 31^{2}.

3. உடன்படிக்கைப் பெட்டியை ஏற்றுக்கொண்டவன். 1 சாமு 7^{1}.

அபீதான். Abidan. [என் தகப்பன் நியாயாதிபதியாய் இருக்கிறான்]. பென்யமீன் கோத்திரத்தில் ஒரு மூப்பன். எண் 1^{11}.

அபேதஸ். Ebez. யோசு 19^{20}.

அபெத்தோன். Abaddon. பாதாளத்தின் நாலு பாகங்களில் அடிப்பாகமாகிய இந்த இடத்தில் பாவிகள் தண்டிக்கப்படுவார்கள் என்பது எபிரெயரின் அபிப்பிராயம். யோவான் பாதாளத்தின் அதிகாரிக்கு இப்பெயர் சொல்லியிருக்கிறான். கிரேக்கு பாஷையில் இவன் பெயர் அப்பொல்லியோன். இதின் அர்த்தம் 'சங்காரன்.' வெளி 9^{11}.

அபெலே. Apelles. இப்பெயர் பரி. பவுலின் காலத்தில் பேர்போன நாடகாசிரியனுக்கும் ரோமாபுரியன் அரமனையிலுள்ள சிலருக்கும் இருந்தது. பவுல் ஒருவேளை இவர்களில் ஒருவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். ரோ 16^{10}.

அப். Ab. **காலம்** காண்க.

அப்சலோம். Absalom. [அவன் தகப்பன் சமாதானம்].

1. தாவீதின் மூன்றாம் மகன். 2 சாமு 3^{3}. இவனைப் பற்றிய விபரமான சரித்திரம் 2 சாமு 13-19 அதி. அப்சலோம் தன் தகப்பனுக்குச் செய்த துரோகத்தினிமித்தம் இவனுக்குப் பிறகு யூதர் அப்பெயரை ஒருக்காலும் வழங்கினதேயில்லை. நீதி 10^{7}.

2. அப்சலோம் = அபிசலோம். (*Abishalom*) மாகாளின் தகப்பன். 1 இரா 15^{2}.

அப்சேஸ். Happizzez. 1 நாளா 24^{15}.

அப்தா. Abda. [பணிவிடை செய்கிறவன்].

1. 1 இரா 4^{6}.

2. நெகே 11^{17}. = ஒபதியா. 1 நாளா 9^{16}.

அப்தி. Abdi. [யேகோவாவின் ஊழியன்].

1. 1 நாளா 6^{44}.

2. 2 நாளா 29^{12}.

3. எஸ்றா 10^{26}.

அப்தியேல். Abdiel. [கடவுளின் அடிமை]. 1 நாளா 5^{15}.

அப்தேயேல். Abdeel. எரே 36^{26}.

அப்தோன். Abdon. [அடிமையானவன்].

1. ஒரு நியாதிபதி. நியா 12^{13}.

2. ஒரு கோத்திரம். 1 நாளா 8^{23}.

3. ஒரு வம்சம். 1 நாளா 8^{30}.

4. யோசியாவின் ராஜசபையைச் சேர்ந்தவன். 2 நாளா 34^{20}. இவனுடைய மறுநாமம் அக்போர். 2 இரா 22^{12}.

5. ஒரு ஊர். யோசு 21^{30}. = எபிரோன். யோசு 19^{28}.

அப்பம். Bread, Cake.

1. சில இடங்களில் 'அப்பம்' என்பதற்குப் பதிலாக 'ஆகாரம்' என்னும் பதம் உபயோகிப்பது நல்லது. ஆதி 18^{5} நெகே 9^{15} சங் 37^{25} பிர 11^{1} எசே 4^{16} மத் 4^{4} 6^{11} 7^{9} யோவா 6^{31}.

2. யூதர்கள் செய்யும் பலவிதமான அப்பம். யாத் 29^{2} லேவி 2-ம் அதி. எண் 15^{20}.

3. பஸ்கா பண்டிகை நாட்களிற் புசிக்கும் புளிப்பில்லாத அப்பம். யாத் 12^{8-15}.

4. தேவ சமுகத்து அப்பம். பன்னிரண்டு கோத்திரங்களின்படி கர்த்தருக்கு முன்பாக வாரந்தோறும் ஓய்வுநாளில் மெல்லிய மாவினால் சுட்டு வைக்கப்படும் பன்னிரண்டு அப்பங்கள். இவைகளை எடுத்து ஆசாரியர் பரிசுத்த ஆகாரமாகச் சாப்பிடுவார்கள். லேவி 24^{5}.

5. தேவன் வனாந்தரத்தில் இஸ்ரவேலருக்குக் கொடுத்த மன்னா. யாத் 16^{3}.

6. உவமானமாக வாற்கோதுமை அப்பம். நியா 7^{13}.

இடுக்கத்தின் அப்பம். 1 இரா 22^{26}.

கண்ணீராகிய அப்பம். சங் 80^{5}.

ஞானத்தால் அடைந்த நன்மையைக்குறிக்கும் அப்பம். நீதி 9^{5}.

திருப்பிப்போடாத அப்பம். ஓசி 7^{8}.

சுவிசேஷ நன்மையைக் குறிக்கும் அப்பம். மத் 15^{26}.

வானத்திலிருந்து வந்த அப்பம் (மன்னா). யோவா 6^{31}. அதாவது, இயேசுகிறிஸ்து. யோவா 6^{41}.

ஜீவ அப்பம். யோவா 6^{51}.
'ஒரே அப்பமாயிருக்கிற நாம் எல்லாரும்.' 1 கொரி 10^{17}.

கர்த்தருடைய ராப்போஜனத்தில் அவர் ஆசீர்வதித்த அப்பம். லூக் 22^{19}.

இயேசுகிறிஸ்து வானத்திற்கு எழுந்தருளின பிற்பாடு கர்த்தருடைய ராப்போஜனத்தில் சீஷர்கள் புசித்த அப்பம். அப் 2^{42} 20^{7} 1 கொரி 11^{26}.

அப்பற்சாகியரும் அப்பற்சாத்தியரும். **Aphersachites and Apharsathchites.** அசீரியர் இஸ்ரவேலின் ராஜ்யத்தை ஜெயித்துத் தங்கள் கிழக்குத் தேசத்திலிருந்து சமாரியாவில் குடியேற்றின ஜனம். எஸ்ரு 4^{9} 5^{6} 6^{6}.

அப்பா. Father. பல பாஷைகளில் பொதுப்பட தகப்பனுக்கு இப்பெயர் வழங்குவார்கள். மாற் 17^{36} ரோ 8^{15} கலா 4^{6}. இந்த வசனங்களில் இந்தச் சொல் கடவுளுக்கு மகா வணக்கமாய்ச் சொல்லியிருக்கிறது. **குடும்பம்** காண்க.

அப்பாயிம். Appaim. 1 நாளா 2^{30}.

அப்பார்சியர். Apharsites. அசீரியாவிலிருந்து சமாரியாவில் குடியேற்றப்பட்ட ஜனம். எஸ்ரு 4^{9}.

அப்பியாள். Aphia. இவள் பிலேமோனுடைய மனைவியாயிருக்கலாம். பிலே 1^{2}.

அப்பியுபுரம். Apiiforum. ரோமாபுரியிலிருந்து தெற்கே 43-ம் மைலிலுள்ள அஞ்சல் ஸ்தானம். இங்கேதான் தபால்வண்டி மாற்றுவார்கள். அப் 28^{15}.

அப்பிராயீம். Hapharaim. ஒரு ஊர். யோசு 19^{19}.

அப்போலியோன். Apollyon. வெளி 9^{11}. **அபெத்தோன்** காண்க.

அப்பொல்லோ. Apollos. அப் 18^{24-28} 1 கொரி 1^{12} 3^{5} அப் 18^{24}-ல் சொல்லியிருக்கிறதை நாம் பார்த்தால் இவன் அலெக்சந்திரியா பட்டணத்தின் யூதன் என்றும், இயேசுவின் சரித்திரத்தைப்பற்றி இவன் முதலில் அறியாதிருந்தும் யோவான்ஸ்நானனின் பிரசங்கத்தினால் அவரை நம்பினவன் என்றும் அறியலாம். இவன் அலெக்சந்திரியாவில் கல்வி சாதுரியம் அடைந்து இயேசு கிறிஸ்துவைப்பற்றி அதிக தீரமாய்ப் பிரசங்கம் பண்ணினதைக் கேட்டு அநேகர் இவன் பக்கமானார்கள். அப்பொல்லோவுக்கும் பவுலுக்கும் ஒற்றுமை யிருந்தும் (1 கொரி 3^{18}) அவரவர் பக்கம் சேர்ந்தவர்களுக்கிடையில் பிரிவினை உண்டானது. இவன் கொரிந்தைவிட்டுப் பவுலினிடத்திற்கு வந்திருக்கையில் பவுல் இவனைத் திரும்பவும் அங்கே போகும்படி வேண்டிக்கொண்டபோது, இவன் போக மனதில்லாமல் இருந்தான். 1 கொரி 16^{12}.

அப்பொல்லோனியா. Apollonia, சின்ன ஆசியாநாட்டில் பவுல் சந்தித்த ஒரு ஊர். அப் 17^{1}.

அப்போகிரிப்பா. The Apocrypha, [தள்ளுபடி ஆகமங்கள்]. 'அப்போகிரிப்பா' என்பது 'மறைக்கப்பட்டது' என்று அர்த்தமாம். முதலில் மற்றவர்கள் வாசியாதபடி பழைய ஏற்பாட்டோடு சேராமல் மறைத்து வைத்த சில ஆகமங்கள் இருந்தன. அப்போகிரிப்பாவில் சேர்ந்த இந்த ஆகமங்கள் கிரேக்க பாஷையில் எழுதினதினால் கிரேக்கு பாஷையைப் பேசின யூதர்களும் கிரேக்க பாஷையில் பழைய ஏற்பாட்டை மொழிபெயர்த்தவர்களும் இவைகளை அங்கீகரித்தும், பலஸ்தீனாவிலுள்ள யூதர்கள் தங்கள் எபிரெய பாஷையில் எழுதின பழைய ஏற்பாட்டின் ஆகமங்களோடு இவைகளைச் சேர்த்துக்கொள்ளவில்லை.

ஆதி கிறிஸ்தவர்கள் இவைகளை அனுசரித்தும், இந்தப் புஸ்தகங்களுக்கும் பழைய ஏற்பாட்டுக்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டறிந்தார்கள். இதினிமித்தம் பழைய ஏற்பாட்டு ஆகமங்களைப்போல் இவைகளை ஏற்றுக்கொள்வதற்கு இவைகள் தகுந்தவைகளல்ல என்ற அபிப்பிராயம் உண்டானது. புதிய ஏற்பாட்டிற் சேர்ந்த ஆகமங்களை எழுதினபிறகு இந்த ஆகமங்கள் படிப்படியாய் மகிமை குறைந்துபோயின. இவைகள் சத்தியவேதத்தில் உள்ள புஸ்தகங்களோடு சேர்க்கக்கூடாது என்று அபிப்பிராயம் உண்டானதினால் இவைகளுக்குத் தள்ளுபடி ஆகமங்கள் எனப் பெயரிடப்பட்டது.

இந்தத் தள்ளுபடி ஆகமங்கள் நாலு வகைப்படும்:—

I. சரித்திரங்கள்.

a. **முதலாம் மக்கப்பேயர்.** இது மக்கப்பெயரென்னும் சகோதரர் சீரியா ராஜாவினுடைய அதிகாரத்திலிருந்து யூதரை விடுதலையாக்கும்படி செய்த யுத்தத்தைப்பற்றிய உண்மையான சரித்திரம்.

b. **இரண்டாம் மக்கப்பேயர்.** இது முதலாம் மக்கப்பெயர் என்னும் புஸ்தகத்திற்கு இரண்டாம் பாகம் அல்லாவிட்டாலும், அதே சரித்திரத்தை

விவரித்துச் சொல்லுகிறது. இதை எழுதினவன் இதில் பொய்யும் புளுகுமான காரியங்களைச் சேர்த்ததினால் முதற்புஸ்தகத்துக்குப்போல இதற்கு அவ்வளவு மதிப்பு இல்லை.

c. **1-ம் எஸ்றஸ்.** இதின் ஆக்கியோன் இதில் பழைய ஏற்பாட்டிலுள்ள 'எஸ்றா' என்னும் புஸ்தகத்தை விஸ்தரித்து இன்னும் அநேக விஷயங்களைச் சேர்த்திருக்கிறான்.

II. பாரம்பரிய சரித்திரங்கள்.

1. எஸ்தர் சரித்திரத்திற்குப் புறவணி.
2. சூசன்னாளின் சரித்திரம்.
3. மூன்று பரிசுத்த பிள்ளைகள் பாடின பாட்டு.
4. பேலும் பாதாள சர்ப்பமும் என்னும் கதை.
5. தோபித்.
6. யூடித்.

III. தீர்க்கதரிசன புஸ்தகங்கள்.

1. **பாரூக்.** யூதர்கள் விக்கிரகாராதனையை விட்டு அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகிப் பரிசுத்த பூமிக்கு வருவார்கள் என்னும் கருத்தை அடக்கிய ஓர் புஸ்தகம். இதோடு '**எரேமியாவின் நிருபம்**' சேர்த்திருக்கிறது.
2. **மனாசேயின் ஜெபம்.** இது மனாசே அசீரியா ராஜாவின் கையிலகப்பட்டிருக்கும்போது (2 நாளா 33 [12]) கடவுளை நோக்கிச் செய்த பிரார்த்தனை போல் தோன்றுகிறது.
3. **2-ம் எஸ்றஸ்.** இதில் எஸ்றாஸ் என்பவன் கண்ட தரிசனங்கள் அநேகம் சொல்லப்பட்டிருக்கின்றன.

IV. நீதியாகமங்கள்.

அப்போகிரிப்பாவில் நீதியைப் போதிக்கும் புஸ்தகங்கள் இரண்டு. அவைகளாவன:—

1. **சாலொமோனுடைய நீதி.**
2. **சீராக்குவினுடைய நீதி.**

இந்த இரண்டும் எபிரெய பாஷையில் அல்ல, கிரேக்க பாஷையில் எழுதப்பட்டுள்ளன. இவை யாவருக்கும் பிரயோஜன முடையவையாகையால் இவைகளை வாசிக்கலாம் என்று எண்ணுவது நியாயம்.

இன்னும் தள்ளுபடிப் புஸ்தகங்கள் அநேகம் இருந்தாலும் இவைகளே இங்கிலிஷ் பைபிலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகங்களை எழுதினவர்கள், எழுதின காலம், எழுதின இடம் இவைகளைப்பற்றித் தீராத சந்தேகம் பல இருப்பதினால் இச்சிறு அகராதியில் இவைகளை விவரித்து எழுத முடியாது.

V. அப்போகிரிப்பா சுவிசேஷங்கள்.

சுவிசேஷங்கள் காண்க.

அப்போஸ்தலரின் நடபடிகள். Acts of the Apostles. புதிய ஏற்பாட்டில் ஐந்தாம் புஸ்தகம். இது இயேசுகிறிஸ்து பரமண்டலத்திற்கு எழுந்தருளினதுமுதல் கி-பி. 61-ஆம் வரையிலும் ஆதி திருச்சபையின் சரித்திரத்தைக் கூறுகிறது.

இதில் விசேஷமாய் இரண்டு பாகங்கள் அடங்கியிருக்கின்றன.

i. 1-12 அதி. சபை ஸ்தாபனம், பேதுருவின் சரித்திரம்; யூதர்கள் அல்லாத புறஜாதியாருக்குள் நடந்த சுவிசேஷ பிரபல்லியம்.

ii. 13-28 அதி. பவுலின் சரித்திரம்.

1. **ஆக்கியோன்.** இதை எழுதினவன் 16[10]-ம் வசனத்தில் தன் பெயரைச் சொல்லாவிட்டாலும் பல விடங்களில் 'நாங்கள்' என்னும் பதத்தை வழங்குவதால், தான் பரி. பவுலோடு பிரயாணம் செய்கிறவன் எனக் காட்டுகிறான். இப்புஸ்தகத்தின் பாஷை நடையைக் கவனிக்கும்போது, இப்பாஷையை நன்றாய் அறிந்த வித்துவான்கள் இதை ஒரே ஆக்கியோன் எழுதினான் எனச் சொல்லுகிறார்கள். லூக் 1[3]-ஓடு அப் 1[1]-ஐ நாம் ஒப்பிட்டுப்பார்த்தால், இரண்டையும் பரி. லூக்கா எழுதியிருக்கவேண்டும் என அறியலாம்.

2. **காலம்.** கி-பி. 64, 65-ஆம்த்தில் நேரோராயன் பவுலைச் சிரச்சேதம் பண்ணினதையும் பேதுருவைச் சிலுவையில் அறைந்ததையும்பற்றி இப்புஸ்தகத்திற் சொல்லப்படாததினால் இத்துன்பங்கள் சம்பவிக்கிறதற்கு முன் எழுதப்பட்டது என்று நாம் நினைக்கலாம். சிலரோ இதின் ஆக்கியோன் இப்பெரிய உபத்திரவங்களைப்பற்றி வேறொரு புஸ்தகத்தில் எழுதக் கருதி இப்புஸ்தகத்தை கி-பி. 70-80 வருஷங்களுக்கிடையில் எழுதினான் என்று நினைக்கிறார்கள்.

3. **நோக்கம்.** இப்புஸ்தகம் நடந்த சங்கதிகளின் காலக்கிரமத்தைக் கவனிப்பதைப் பார்க்கிலும் ஆதிசபை அடைந்த பிரபல்லி

யத்தை அதிகமாய்க் கூறுகிறது. பெந்தெகொஸ்தே நாள், எழு உதவிக்காரர் ஏற்படுத்தல், ஸ்தேவான் சரித்திரம், புறஜாதியானான கொர்நேலியுவுக்கும் எத்தியோப்பியாவின் பிரதானிக்கும் ஞானஸ்நானம் கொடுத்தல், எருசலேம் பட்டணத்தில் நடந்த முதல் பொதுச் சங்கம், பவுல் பல இடங்களில் யூதரல்லாதவர்களுக்குப் பிரசங்கஞ் செய்தல், அவன் ரோம அதிகாரிகளுக்கு முன் செய்த அறிக்கை முதலியவை. மேலும் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் உண்டான விரோதத்தைப்பற்றி அதிகந் தெளிவாய் இப்புஸ்தகத்தில் காணப்படுகிறது.

4. **உண்மை.** இப்புஸ்தகத்தை எழுதினவன் இதிற் குறித்திருக்கும் அதிகாரிகளுக்கு அவர்கள் இருக்கும் இடங்கள், அவர்களுடைய பட்டப்பெயர்கள், ஊர் வழக்கங்கள் ஆகிய இவைகளைப்பற்றி அதிக நிதார்த்தமாய்ச் சொல்லுகிறான். பவுல் கடைசியாய்ப் போன பிரயாணத்தை ஆராய்ந்தறியும்போது கப்பற் பிரயாணத்தில் நடந்த சங்கதிகளை அதிக திட்ப நுட்பமாய் எழுதியிருக்கிறான். இதினிமித்தம் இந்தப் புஸ்தகத்தில் எழுதின சரித்திரம் முற்றிலும் நம்பத்தக்கது.

அப்போஸ்தலரின் விசுவாசப்பிரமாணம். Apostles Creed. விசுவாசப்பிரமாணம் காண்க.

அப்போஸ்தலன். Apostle. 'அப்போஸ்தலன்' என்றால் அனுப்பப்பட்டவன்; அல்லது ஒரு அதிகாரிக்குப் பதிலாக அதிகாரத்தோடு அனுப்பப்பட்டவன்; அல்லது ஒரு ராஜா உத்தியோகவிஷயமாய் தான் போக முடியாத காலத்தில் தனக்குப் பதிலாக உத்தியோகஸ்தர்களில் தன் அதிகாரத்துடன் அனுப்பின ஒருவன்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது தமது ஊழியத்திற் பங்கு பெறவும், பரத்திற்குத் தாம் ஏறினபிறகு அவ்வூழியத்தைத் தாங்களே செய்யவும், தமது சீஷர்களில் முக்கியமாய் பன்னிரண்டுபேரை நியமித்தார். லூக் 6^{13} மத் 10^{1} யோவா 17^{18}. இயேசு பன்னிருவரையும் அனுப்பினதினால் பன்னிரண்டு கோத்திரத்தாரான இஸ்ரவேலருக்குள் சுவிசேஷம் முதல் முதல் பிரபல்லியமாகவேண்டுமெனக் கருதினார். மத் 10^{16}. அவர் காலத்திலே யூதர்கள் உலகத்திலுள்ள ஜாதிகள் எழுபது என்று எண்ணங்கொண்டிருந்ததினால் அவர் கடைசியாய் எருசலேமுக்குப் புறப்படும்போது எழுபது பேரை நியமித்து அனுப்பினதினால் உலகத்தில் எல்லா ஜாதியாருக்குள்ளும் சுவிசேஷம் பிரஸ்தாபப்படவேண்டும் என்பதைத் தெரிவித்தார். லூக் 10^{1}. இயேசு பரத்திற்கு ஏறினபிறகு துரோகியான யூதாசுக்குப் பதிலாக மத்தியாவை அப்போஸ்தலனாக மற்ற அப்போஸ்தலர் நியமித்தார்கள். அப் $1^{12.23}$ 6^{6}. 'அப்போஸ்தலர்' என்னும் இப்பெயர் தரித்தவர்கள் இப்பன்னிருவருமல்லாமல் பரி. பவுல் (அப் 14^{14}), அன்றோனிக்கு, யூனியா, (ரோ 16^{7}) கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு (கலா 1^{19}) இப்பெயரை யுடையவர்களாயிருந்தார்கள். இந்த வசனங்களை நாம் பார்க்கும்போது இப்பெயர் இயேசு ஏற்படுத்தின சீஷருக்கும் அல்லாமல், ஆதி சபையில் பயபக்தியுள்ள வேறு ஊழியர்களுக்கும் இடப்பட்டிருப்பதைக் காண்போம். ஆகவே, எந்த முகாந்தரத்தினால் இப்பெயரைப்பெற்றார்கள் என்று நம்மால் திட்டமாய்ச் சொல்ல முடியாது. சிலர் கபடமாய் இப்பெயரைத் தரித்துக்கொண்டார்கள். 2 கொரி 11^{13} வெளி 2^{2}. 'அப்போஸ்தலன்' ஊர், வீடு இல்லாதவனும், ஒரு சபைக்கு அல்ல சபைகளுக்குப் பொதுவாக ஏற்படுத்தப்பட்டவனுமாயிருந்து தன் ஜீவியகாலபரியந்தம் இயேசுவுக்காக ஊழியஞ்செய்து அவருக்குச் சாட்சியாய் இருப்பது அவனுடைய முக்கிய கடமை.

அப்னேர். Abner. சவுலின் சேனைத் தலைவன். 1 சாமு 17^{55}. சவுல் இறந்தபின் அவனுடைய மகனாகிய இஸ்போசேத் என்பவனை அப்னேர் ராஜாவாக்கினான். 2 சாமு 2-ம் அதி. ஆனால் இடையிலே உண்டான விரோதத்தினால் இவன் அவனைத் தாவீதின் கையில் ஒப்புவிக்க எண்ணியிருக்கும்போது யோவாப் தாவீதுக்குத் தெரியாமல் இவனைக் கொன்றுபோட்டான். இவன் சன்மார்க்கனாயிராவிட்டாலும் சவுல் இறந்தபிற்பாடு அவன் பக்கத்தாரில் இவன் அதிக தீரனும் சாமர்த்தியமு முள்ளவன். 2 சாமு 3^{7-37}.

அமஞ்சி வேலை. Levy. அரசனின் கட்டாயத்திற்கு கூலியில்லாமல் ஜனங்கள் அவனுக்கு அரமனை முதலான கட்டடங்களையும் இன்னும் பாரமான வேலையையும் செய்தல். 1 இரா 9^{21}.

அமத்சியா. Amaziah.

1. யோவாசின் மகனாகிய யூதாவின் ராஜா. 2 இரா 14^{3}. இவன் யேகோவாவை விட்டுப் பின்வாங்கிப்போனவன். 2 நாளா 25^{15}.

2. தீர்க்கதரிசியாகிய ஆமோசுக்கு விரோதமாய் முறையிட்டவன். ஆமோ 7^{10}.

3. 1 நாளா 4^{34}.
4. 1 நாளா 6^{45}.

அமரியா, ஆமரியா. **Amariah** [யேகோவா வாக்களித்தார்]. பழைய ஏற்பாட்டில் இப்பெயருள்ளவர்கள் ஒன்பது. 1 நாளா 6^{7} 6^{11} 23^{19} 2 நாளா 19^{11} 31^{15} எஸ்ரு 10^{42} நெகே 11^{4} 12^{2} செப் 1^{1}.

அமலேக், அமலேக்கியர். **Amalek, Amalekites.** கானான் தேசத்திற்குத் தெற்கேயும் எகிப்து தேசத்திற்குக் கிழக்கேயுமுள்ள வனாந்தரத்தில் பூர்வீகந் தொடங்கி அங்குமிங்கும் அலைந்து திரியும் ஓர் கோத்திரம். ஆதி 14^{7}. இவர்களுக்கும் இஸ்ரவேலருக்கும் எப்போதும் விரோதம். யாத் 17^{8} நியா 3^{13} 1 சாமு 15^{3} 30^{18} 1 நாளா 4^{43} சங் 83^{6}.

அமனா. **Amana.** ஒரு மலை. உன். பா. 4^{8}.

அமாசா. **Amasa.** [பாரஞ் சுமக்கிறவன்].

1. தாவீதின் சகோதரி மகன். அப்சலோமின் சேனைத்தலைவனாகிய இவனுக்குத் தாவீது மன்னிப்புக் கொடுத்தும் யோவாப் இவனைக் கொன்றுபோட்டான். 2 சாமு 18-20 அதி.
2. 2 நாளா 28^{12} மு.

அமாசாயி. **Amasai.**

1. 1 நாளா 6^{25}.
2. 1 நாளா 15^{24}.
3. 1 நாளா 12^{18}.

அமாவாசி. **New moon.** **சந்திரன்** காண்க.

அமாவாசி கணிக்கிறவன். **Astrologer.** **சூனியம்** காண்க.

அமிசபாத். **Amizabad.** 1 நாளா 27^{6}.

அமித்தாயி. **Amittai.** [உண்மையுள்ள]. யோனாவின் தகப்பன். 2 இரா 14^{25} யோனா 1^{1}.

அமுத்தாள். **Hamutal.** யோசியாவின் மனைவி. 2 இரா 23^{31}.

அம்சி. **Amzi.**

1. 1 நாளா 6^{46}.
2. நெகே 11^{12}.

அம்பிபோலி. **Amphipolis.** கிரேக்கு தேசத்திலுள்ள மக்கெதோனியா நாட்டின் பிலிப்பு பட்டணத்திலிருந்து 40 மைல் தூரமாயிருக்கும் ஓர் பட்டணம். இதைப் பவுல் சந்தித்தான். அப் 17^{1}.

அம்பிலியா. **Amplias.** ரோமை ராயனின் அரமனையிலுள்ள உத்தியோகஸ்தர்களில் கிறிஸ்தவனாயிருந்த ஒருவன். ரோ 16^{8} பிலி 4^{22}.

அம்பு. **Arrow.**

1. ஓர் ஆயுதம். 1 சாமு 20^{20} 2 இரா 13^{15} எரே 51^{11}.
2. தேவனுடைய ஆக்கினை. யோபு 6^{4} சங் 38^{2} 45^{5} எசே 5^{16}.
3. கெட்ட ஆலோசனை. சங் 11^{2} 57^{4}.
4. வார்த்தை. சங் 64^{4}.
5. தேவநீதி. 2 சாமு 22^{15} ஆப 3^{11}.

வில்லம்பு சொல்லம்பு மேதினியி லுண்டிரண்டு
வில்லம்பிற் சொல்லம்பு மேலதிகம்;—வில்லம்பு
பட்டுதடா வென்மார்பிற் பார்வேந்தா நின்குலத்தைச்
சுட்டுதடா வென்வாயிற் சொல். (கம்பன்)

அம்மா. **Ammah.** 2 சாமு 2^{24}.

அம்மாத். **Hammath.** [வெந்நீரூற்று]. கலிலேயாக் கடலோரத்தின் மேற்குத் திசையிலுள்ள நப்தலிநாட்டின் அரணிப்பான பட்டணங்களி லொன்று. யோசு 19^{35}.

அம்மிஷதாயி. **Ammishaddai.** எண் 1^{12}.

அம்மீயூத். **Ammihud.** [இனத்தானின் மகிமையாய் இருக்கிறான்].

1. எண் 1^{10}.
2. எண் 34^{20}.
3. எண் 34^{28}.
4. 2 சாமு 13^{37}.
5. 1 நாளா 9^{4}.

அம்மியேல். **Ammiel.** [கடவுள் என் இனத்தவர்].

1. எண் 13^{12}.
2. 2 சாமு 9^{4}.
3. 1 நாளா 26^{5}.
4. =எலியாம். 1 நாளா 3^{5}.

அம்மினதாப். **Amminadab.** [என் இனத்தான் தயவுள்ளவன்].

1. ஆரோனின் மனைவியுடைய தகப்பன். யாத் 6^{23}.
2. 1 நாளா 6^{22}.
3. ஒரு லேவியன். 1 நாளா 15^{10}.

அம்மீ. **Ammi.** 'என் ஜனம்' என்று அர்த்தம்கொண்ட இப்பதம் மன்னிக்கப்பட்ட இஸ்ரவேலருக்குக் கடவுள் அருளின பெயர். ஓசி 2^{1}.

அம்முவேல். **Hammuel.** 1 நாளா 4^{26}.

அம்மெதாத். **Hammedatha.** ஆமானின் தகப்பன். எஸ்தர் 3^{1}.

அம்மொளேகேத். **Hammolecheth.** [ராணி?] 1 நாளா 7^{17}.

அம்மோத்தோர். **Hammoth-Dor.** யோசு 21^{32}.

அம்மோரியர். Ammorites. வழக்கமாய் எம்மோரியர். பூர்வீகத்தில் பலஸ்தீனவிலும் பாபிலோனியாவிலும் வசித்த ஜனம். ஆதி 14^{7} எண் 21^{21} உபா 1^{20} 31^{4} 2 இரா 21^{11}.

அம்மோனியர், அம்மோன். Ammonites, Ammon. வட இஸ்ரயேலுக்குக்கிழக்கே வனாந்தரத்தில் இருந்த ஜனம். இஸ்ரவேலர் இவர்களைத் தங்களுக்குக் கீழானவர்கள் என்று நினைத்தார்கள். ஆதி 19^{38}. இஸ்ரவேலர் கானான் தேசத்தைப் பிடித்தபோது இவர்களுடைய இடத்தைப் பிடிக்கவில்லை. உபா 2^{38} நியா 3^{13}. அம்மோனியரும் மோவாபியரும் இஸ்ரவேலருக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்தபோது யெப்தா இவர்களைத் துரத்திவிட்டான். நியா 11^{12}. அம்மோனியரின் ராஜா மறுபடியும் இஸ்ரவேலர்களுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போனான். 1 சாமு 11 அதி. அம்மோனியா ராஜாவுக்கும் இஸ்ரவேலர்களுடைய ராஜாவுக்கும் விரோதம் இருந்ததினால் இவர்களுடைய ராஜா தாவீதுக்கு உதவி செய்தான். 2 சாமு 10^{2}. அம்மோனியரின் ராஜாவுடைய மகன் சண்டை செய்ததினால் தாவீது இவனை அதிக கொடூரமாய்த் தண்டித்தான். 2 சாமு 10-12 அதி. பின்பு இவர்களுக்குள் சமாதானமிருந்தது. சாலொமோனுடைய மனைவிகளில் அம்மோனிய ராஜஸ்திரீ ஒருத்தி. 1 இரா 11^{1}. ஆகாபின்காலத்தில் இவர்கள் சல்மனசார் என்னும் ராஜாவோடே சண்டை செய்தார்கள். இவர்கள் மறுபடியும் யூதாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்தார்கள். 2 நாளா 20^{1}. நேபுகாத்நேச்சார் இவர்கள் யூதராஜ்யத்திற்குத் தொந்தரவு செய்யும்படி இவர்களை ஏவினான். 2 இரா 24^{2}. பிறகு இவர்கள் யூதர்களோடு சேர்ந்து நேபுகாத்நேச்சாருக்கு விரோதஞ்செய்தார்கள். எரே 27^{3}. யூதர்கள் பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தபோது இவர்கள் எருசலேம் பட்டணத்தைப் புதிதாய்க் கட்டுகிறதற்கு ஆக்ஷேபனை செய்தார்கள். நெகே 2^{10}. இதற்குப்பின் இவர்களுடைய சரித்திரம் தெரியவில்லை. இவர்கள் விக்கிரகாராதனைக்காரராய் மில்கோம் என்னும் தெய்வத்தை வணங்கிவந்தார்கள். இவர்கள் மிகவும் குரூரமானவர்கள். ஆமோ 1^{13}.


அம்மோன். Hammon.

1. நப்தலியின் ஒரு ஊர். ஒருவேளை அம்மாத்தும் இதுவும் ஒன்றுதான். 1 நாளா 6^{76}.
2. ஆசேரின் ஒரு ஊர். யோசு 19^{28}.

அம்ராப்பேல். Amraphel. ஆதி 14^{1}. **அசீரியா ராஜாக்கள்** காண்க.

அம்ராம். Amram. [உயர்ந்த ஜனம்].

1. மோசேயின் தகப்பன். யாத் 6^{20}.
2. எஸ்ரா 10^{34}.
3. 1 நாளா 1^{41}.



எபேசுவிலுள்ள அரங்கசாலை.

அம்ராம். **Hamran.** 1 நாளா 1^{41}. = எம்தான். ஆதி 36^{26}.

அம்னோன். **Amnon.**

1. தாமாரைக் கற்பழித்த தாவீதின் மகன். 2 சாமு 3^{2} 13^{1}.

2. 1 நாளா 4^{20}.

அயா. **Aiah.** ஆதி 36^{24}.

அயினோன். **Aenon.** [ஊற்றுக்கண்]. கலிலேயாக் கடலுக்குத் தெற்கே யோர்தான் நதியின் ஓரத்தில் 20 மைல் தூரத்திலுள்ள நீர் ஊற்றுக்கள் எழு. தண்ணீர் ஏராளமாயிருந்த அந்த இடத்தில் யோவான் ஞானஸ்நானம் கொடுத்தான். யோவா 3^{23}.

அரங்கசாலை. **Theatre.** எபேசு ரோமை முதலிய பட்டணங்களில் மலைக்குன்றின் சார்பிலே பள்ளமாகத் தளம் வெட்டி, அல்லது பெரிய கற்களினால் கட்டடம் கட்டி, இருபதினாயிரம்பேர் இருக்கத்தக்கதாக கல்லாசனங்கள் அவைகளில் சூழவர வைப்பார்கள். இங்கே நாடகங்கள் விளையாடுவதுமல்லாமல் பெரிய கூட்டங்களும் வைப்பார்கள். அப் 19^{29}.

அரண். **Fortress.** 'அரண்களின் தேவன்.' எசா 29^{7} தானி 11^{38}.

அரபிதேசம். **Arabia.** [வனாந்தரம்]. இது தெற்குப் பலஸ்தீனமுதல் சீனா தீபகற்பம் உட்பட செங்கடலுக்குக் கிழக்குத்திசை வரையும் எட்டியிருக்கும் தேசம். இதின் மூன்று பாகங்கள் ஆவன: கல். அரபிநாடு, வனாந்தரநாடு, செழிப்புநாடு. இவைகளில் கல்நாடு இஸ்ரவேல் தேசத்திற்குச் சமீபம். அரபியா மகமதியருடைய மதத்திற்கு உற்பத்தி ஸ்தானம். அங்குள்ள முக்கிய பட்டணங்கள் மக்காவும், மதினாவும். 1 இரா 10^{15} 2 நாளா 21^{17} நெகே 2^{19} எசா 21^{13} கலா 1^{17}.

அரமனை. **Palace.**

1. அரசன் மாளிகை. சாலொமோனுடைய மாளிகையின் விவரம்: 1 இரா 7^{1-12}.

2. பிரதான ஆசாரியனுடைய வீடு. மத் 26^{3}.


3. ஏரோதின் அரமனை. இது பெரிய ஏரோது எருசலேம் பட்டணத்தில் அவ்வூரின் தேசாதிபதி வந்து வாசம் பண்ணக் கட்டின ஒரு அழகான மாளிகை. மத் 27^{27} மாற் 15^{16} யோவா $18^{28,\ 33}$ 19^{9} அப் 23^{35}.

4. 'அரமனை யெங்கும் உள்ளவர்கள்.' பிலி 1^{13}. இது பிரீற்றோரியம் (*Praetorium*) என்று சொல்லப்படும் ரோமராயருடைய மெய்காப்பாளர் பாளயம். இப்பாளயத்தில் பரி. பவுல் வைக்கப்பட்டான்.

5. 'ராயனுடைய அரமனை.' பிலி 4^{22}. ராயனுடைய உயர்ந்த உத்தியோகஸ்தர் முதல் அடிமைகள் மட்டுமுள்ள பணிவிடைக்காரர் அனைவரையும் குறிக்கிறது.

அரம். **File.** 1 சாமு 13^{21}.

அராத். **Ararat.** சீரியா தேசத்துக்கு வடகிழக்கேயுள்ள செழிப்பான மைதானத்தையும் பெரிய மலைகளையும் உட்கொண்ட தேசம். தற்காலத்தில் அதற்கு ஆர்மீனியா (*Armenia*) என்று பெயர். ஆதி 8^{4} 2 இரா 19^{37}-ல் ஆராராத் என்று எழுதியிருக்கிறது.



அராத் மலை.

அராபா. Arabah. [அக்கரையிலுள்ள தேசம்].

1. சாக்கடலுக்கு வடக்கும் யோர்தான் நதிக்கு மேற்குமாயுள்ள ஒரு சமபூமி. இதிலேதான் சோதோம் கொமோரா பட்டணங்கள் இருந்தன.

2. செங்கடலுக்கு வடக்கே சாக்கடல் வரையுமுள்ள ஒரு நாடு. இவ்விடத்தில் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் செய்து திரிந்தார்கள். எண் 20^{21} உபா 2^{8}.

அராப். Arab. யோசு 15^{52}.

அராயா. Harhaiah. நெகே 3^{8}.

அரிசாய். Arisai. எஸ்தர் 9^{8}.

அரிஸ்தர்க்கு. Aristarchus. [சிறந்த மூப்பன்]. தெசலோனிக்கேயனாகிய ஒருவன். அப் 27^{2}. பவுலோடு மூன்றும் பிரயாணத்தில் சின்ன ஆசியாவிலே தோழனாயிருந்த இவன் அவனோடு சிறைச்சாலையில் வைக்கப்பட்டான். கொலோ 4^{10}.

அரிஸ்தொபூலு. Aristobulus. [நல்ல ஆலோசனைக்காரன்]. ரோமாபுரியில் வாசமாயிருந்த பெரிய ஏரோது ராஜாவினுடைய பேரனுக்கு இப்பெயர் இருந்தது. ரோ 16^{10}-ல் 'அரிஸ்தொபூலுவின் வீட்டார்' என்பவர்கள் இவனுடைய அடிமைகளாய் இருக்கலாம்.

அரிதாத்தா. Aridatha. எஸ்தர் 9^{9}.

அரிதாய். Aridai. எஸ்தர் 9^{3}.

அரிமத்தியா. Arimathea. இந்த ஊரிலிருந்து யோசேப்பு என்னும் சீஷன் வந்தான் என்று சொல்லியிருக்கிறதேயொழிய இவனைப்பற்றி வேறு விசேஷம் சொல்லியிருக்கவில்லை. மத் 27^{57}.

அரியானர். Arians. நாலாம் நூற்றாண்டிலே அலெக்சந்திரியா என்ற எகிப்துதேசத்திலுள்ள நகரியிலே திருச்சபைக்கு மூப்பனாய் இருந்த அரியான் என்பவன் கிறிஸ்துவுக்குப் பூரண தேவத்துவம் இல்லையென்ற கோட்பாடுள்ளவனா யிருந்தான். அவனாலே அரியானராகிய பதிதர் தோன்றினார்கள். கி-பி. 325-ஆண்டிலே, மகா கொன்ஸ்தந்தீன் என்ற இராயனாலே நிசேயாநகரியிலே மற்றக் குருக்கள்தவிர 318 கண்காணிமார்கள் சேர்ந்த பொதுவான யோசனைச் சங்கத்திலே அதனாசி என்பவர் அரியான் என்பவனிடத்தில் தர்க்கித்தபோது கிறிஸ்துவின் தேவதன்மையைப்பற்றிய கொள்கை ஸ்தாபிக்கப்பட்டது. அரியான் என்பவன் சங்கத்துக்குமுன் கிறிஸ்து ஆதியிலிருந்து தேவத்தன்மையுடையவர் என்று சொல்லாவிட்டாலும் கிறிஸ்துவை தேவனுடைய வார்த்தை என்றும் சிருஷ்டிகரென்றும் மேலான சிருஷ்டியென்றும் தேவனால் உண்டாக்கப்பட்ட தேவன் என்றும் அவரை வணங்கக் கூடுமென்றும் பலவிதமாய்ச் சொன்னான். இவன் திருச்சபையினின்று விலக்கப்பட்டபின்பு மறுபடியும் அதிலே வந்து சேரும்படி மாறுபாடாய் விசுவாசப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறேன் என்றதினிமித்தம் இராயன் இவன் உண்மையுள்ளவன் என்று நம்பினான். ஆனால் அதனாசி இவன் தந்திரத்தை அறிந்து என் சபையிலே இவனைச் சேர்க்கமாட்டேன் என்றான். பின்பு கொன்ஸ்தந்தீன் பட்டணத்திலிருந்த சபையிலே சேர எத்தனப்பட்டிருந்த ஒருநாளுக்கு முன்னே வயிற்றுவலியால் செத்தான்.

அரியேல். Ariel.

1. 'கடவுளுடைய பலிபீடம்' அல்லது 'கடவுளுடைய சிங்கம்' என்று அர்த்தம் கொண்ட இப்பெயர் எருசலேம் பட்டணத்திற்குக் கொடுக்கப்பட்டது. ஏசா 29^{1}.

2. எஸ்ரா 8^{16}.

3. 2 சாமு 23^{20}. (*R. V.*)

அரியோகு. Arioch.

1. ஒரு அரசன். ஆதி 14^{1}.

2. ஒரு சேனைத்தலைவன். தானி 2^{14}-ல் இவன் பெயர் ஆரியோகு என்று எழுதியிருக்கிறது.

அரியோப்பகஸ். Areopagus. [மார்ஸ் மேடை]. **அத்தேனே** காண்க.

அரிவாள். Sickle. யோவே $3^{10.\ 13}$ வெளி $14^{14.\ 18}$.

அருமா. Arumah. நியா 9^{41}.

அருமாப். Harumaph. நெகே 3^{10}.

அருள். Grace. **கிருபை** காண்க.

அருவருப்பு. Abomination. இதற்கு மூலபாஷையில் நாலு பதங்களுண்டு. அவைகளில் ஒன்று பலிசெலுத்தின மீதியான மாமிசம் கெட்டுப்போகும்போது அதற்குச் சொல்லப்படும் பெயர். லேவி 7^{18}. மற்ற மூன்று பதங்கள் குலாசாரத்துக்கு விரோதமாயிருப்பவைகளையும் (ஆதி 43^{32}) புறமதஸ்தர் வணங்கும் தேவர்களையும் (2 இரா 23^{13}) சில முதலிய விக்கிரகங்களையும் (உபா 7^{25}) சாப்பிடக் கூடாதவைகளையும் (லேவி 11^{10}) பில்லிசூனியத்தையும் (உபா 18^{12}) முறைகேடான இச்சைகளையும் (லேவி 18^{22}) அநியாயமான ஊதியத்தையும் (நீதி 11^{1}) குறிக்கின்றன. **கோடி** காண்க.

அரூ. Rue. பழைய திருப்புதலில் 'அரூ' என்னும் சொல்லுக்குப் பதிலாக இப்போது 'மருக்கொழுந்து' என்று வழங்கப்படுகிறது. லூக் 11^{42}.

அரேத்தா. Aretas. இப்பெயர் சீரியாவின் ஓர் நாட்டிலுள்ள சில ராஜாக்களுக்குக் கோத்திரப்பெயரா யிருந்தது. இவர்களில் நாலாம் அரசனுடைய சேனைத்தலைவன் தமஸ்கு பட்டணத்தைக் காவல் செய்யும் போது பரி. பவுல் அவ்விடத்திலிருந்து கூடையில் இறக்கப்பட்டுத் தப்பினான். இந்த அரசன் அத்தேசத்தை எவ்வளவுகாலம் ஆண்டான் என்பது தெரியாது. 2 கொரி 11^{32}.

அரேலி. Areli. ஆதி 46^{16}.

அரோசேத்து. Harosheth. இந்த ஊரிலிருந்து கானானியரின் ராஜனாகிய யாபீன் என்பவனுடைய சேனாபதியாகிய சிசெரா வந்து எபிரெயரோடு யுத்தஞ்செய்தபோது பாராக் என்பவன் அவனை இந்த ஊர்வரைக்கும் வெட்டித் துரத்தினான். நியா 4^{2-14}.

இந்த ஊர் 'புறஜாதிகளுடைய பட்டணம்' என்று சொல்லியிருப்பதற்குக் காரணம் தெரியாது.

அரோதி. Arodi. = ஆரோத். ஆதி 46^{16}.

அர்காஸ். Harhas. 2 இரா 22^{14} = அஸ்ரா. 2 நாளா 34^{22}.

அர்கீயர். Arkites. இவர்கள் அர்கா பட்டணத்தார். அர்கா பட்டணம் சீரியாவைச் சார்ந்த பெனிக்கேயருடைய துறைமுகங்களில் ஒன்று. 1 நாளா 1^{15}.

அர்கூர். Harhur. எஸ்று 2^{51}.

அர்கெலாயு. Archelaus. மத் 2^{22}. **ஏரோது** காண்க.

அர்கோப். Argob.

1. கலிலேயாக் கடலுக்குக் கிழக்கில் பாசான் தேசத்திலுள்ள நாடு. உபா 3^{4}.

2. ஒரு மெய்காப்பாளன். 2 இரா 15^{25}.

அர்கோல். R.V. Cricket, A. V. Beetle. ஒரு மாதிரியான வெட்டுக்கிளி. லேவி 11^{22}.

அர்க்கிப்பு. Archippus. பிலேமோனுடைய வீட்டாரில் ஒரு பக்தன். பிலே 2-ம் வசனம். கொலோ 4^{17}.

அர்சா. Arza. 1 இரா 16^{9}.

அர்ஷா. Harsha. எஸ்று 2^{52}.

அர்தசஷ்டா. Artaxerxes. அகாஸ்வேருவினுடைய மகன். கி-மு. 465-424-வரை அரசாண்டான். எஸ்று நெகேமியா என்னும் தீர்க்கதரிசிகள் எருசலேமுக்குப் போக அவர்களுக்கு உத்தரவு கொடுத்த பெர்சியாவின் அரசன் இவன். எஸ்று 4^{7}.

அர்தெமிஸ். Artemis. அப் 19^{24}. = **தியானாள்.**

அர்தோன். Ardon. 1 நாளா 2^{18}.

அர்த்தெமா. Artemas. பரி. பவுலின் தோழர்களில் ஒருவன். தீத் 3^{12}.

அர்பக்சாத். Arphaxad. சேமின் மகன். ஆதி 10^{22} 11^{10}.

அர்பா. Arba. **எபிரோன்** காண்க.

அர்பாத். Arpad. கலிலேயாக் கடலுக்கு வட கிழக்கில் 30 மைல் தூரமுள்ள ஒரு பட்டணம். 2 இரா 18^{34}.

அர்மகெதோன். Armageddon. [மெகிதோ மலைகள்]. மெகிதோ என்னும் சமபூமியில் பல யுத்தங்கள் நேரிட்டதினால் பரி. யோவான் சாத்தானுக்கும் கடவுளுக்கும் திருப்போர் நடந்த இடத்திற்கு உபமானமாக இப்பெயர் இட்டான். வெளி 16^{16}. **மெகிதோன்** காண்க.

அர்மேனிய சபை. Armenian Church. அர்மேனிய கிறிஸ்தவர்கள் கிரேக்க சபையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நாலாம் நூற்றுண்டில் கிறிஸ்தவர்களானார்கள். இந்தச் சபைக்குப் பேற்றியார்க்கு (*Patriarch*) என்று சொல்லப்பட்ட நாலு தலைவர்களுண்டு. கிறிசொஸ்தம் என்கிறவனுடைய காலத்திலே வேதம் அர்மேனிய பாஷையிலே செப்த்துவகிந்து (*Septuagint*) என்னும் திருப்புதலிலிருந்து திருப்பப்பட்டது. இவர்கள் தங்கள் சொந்தப் பாஷையிலே ஆராதனை செய்வார்கள். இவர்கள் கிறிஸ்துவினுடைய இரண்டு சுபாவங்களும் ஒன்றோடொன்று கலந்திருப்பதினால் தெய்வ சுபாவம் மனுஷ சுபாவத்தை உட்கொள்ளும் என்றும் பரிசுத்தாவி பிதாவிலிருந்தே புறப்படுகிறார் என்றும் நம்புகிறார்கள். பதினாலாம் நூற்றாண்டு முதல் அர்மேனியரில் சிலர் ரோமசபையின் கொள்கைகளைச் சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள். அர்மேனியர் வார்த்தையாகிய தேவன் மனிதனாகி ஒரே ஆளாயும் ஒரே ஐக்கிய சுபாவமாயும் இருக்கிறார் என்றும் தேவன் மாறுதலில்லாமலும் வேற்றுமையில்லாமலும் மனிதனானார் என்றும் விசுவாசிக்கிறார்கள். இவர்கள் சுரூபங்களை வணங்காமல் சிலுவையையும் படங்களையும் ஆசரிக்கிறார்கள். இவர்களுடைய பிரதான குருக்கள் விவாகஞ் செய்யலாகாது. இவர்களுடைய ஆயுசில் ஒருதரம் எருசலே

முக்கு யாத்திரைசெய்தால் புண்ணியம் உண்டென்கிறார்கள். இவர்கள் ஞானஸ்நானம் பண்ணும்பொழுது மூன்றுதரம் தண்ணீரிலே முழுகப்பண்ணி மூன்றுதரம் தண்ணீர் தெளிப்பார்கள். இவர்கள் செத்தவர்களுக்காக வேண்டுதல் செய்வார்கள். அடிக்கடி உபவாசமாயிருப்பார்கள். சிலுவை அடையாளத்தை வரைகிறார்கள். பரிசுத்த ஆவியின் தன்மையை அறியாதவர்களாய் சுய கிரியைகளினாலே இரட்சிக்கப்படுவோம் என்று எண்ணுகிறார்கள். இவர்களுக்குள்ளேயும் சந்நியாசிகளும் மடங்களுமுண்டு.

அர்மோனி. Armoni. ரிஸ்பாளின் மகன். 2 சாமு 21^{8}.

அர்மோன். Chesnut tree. எபிரெய பாஷையில் இப்பெயர் கொண்ட மரம் அதிக பெரிதும் அழகுள்ளதுமாய் இருக்கும். ஆதி 30^{37}.

அர்வனா. Araunah. தாவீதுராஜா குடிமதிப்பு எழுதினபோது உண்டான கொள்ளைநோயை நீக்குவதற்கு இவனுடைய போரடிக்கும் களத்தை அவன் கிரயத்திற்கு வாங்கி அங்கே ஒரு பலிபீடம் கட்டிக் கர்த்தருக்குப் பலிசெலுத்தினான். பிற்பாடு இந்த இடத்திலே தேவாலயம் கட்டப்பட்டது. 2 சாமு 24 அதி. நாளாகமத்தில் இவனுடைய பெயர் ஒர்னான் (*Ornan*). 1 நாளா 21^{18}.

அர்வாத். Arvad. சீதோனுக்கு வடக்கே பெனிக்கேயருடைய முக்கிய துறைமுகங்களில் ஒன்று. எசே 27^{8}.

அர்னான். Arnan. 1 நாளா 3^{21}.

அர்னேப்பர். Harnepher. 1 நாளா 7^{36}.

அர்னோன். Arnon. இப்பெயர் மோவாப் தேசத்திற்கு வட எல்லையாய் இருக்கின்ற பள்ளத்தாக்குக்கும் அதிற் பாயும் நதிக்கும் சொல்லப்படும். எண் 21^{13} நியா 11^{18} ஏசா 16^{2}.

அலங்கரித்தல். Adorning.

1. ஆடை ஆபரணத்தாற் சிங்காரித்தல். ஏசா 61^{10} 1 தீமோ 2^{9} 1 பேது 3^{3}.

2. குணசீலம். தீத் 2^{9} 1 பேது 3^{5}.

அலங்காரம். Beauty.

1. அழகு. 2 சாமு 1^{19} ஏசா 13^{19}.

2. குணத்தின்சிறப்பு. சங் 110^{3} நீதி 20^{29}.

அலங்கார வாசல். The Beautiful Gate. அப் 3^{2}. **தேவாலயம்** காண்க.

அலமேத். Alameth. [பாலத்துவம்]. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா 7^{8}.

அலம்மேலெக். Allamelech. யோசு 19^{26}.

அலரி. Willow. யோபு 40^{22} சங் 137^{2} ஏசா 15^{7}.

அலறுதல். Cry. ஆதி 27^{34} ஏசா 5^{7} எரே 25^{36}.

அலாமோத். Alamoth. [சிறு பெண்கள்]. 46-ம் சங்கீதத்தின் முகவுரையை நாம் பார்த்தால் பெண்கள் குரலெடுத்து இன்னிசையோடு அதைப் பாடவேண்டும் என்று தோன்றுகிறது.

அலெக்சந்தர். Alexander.

1. கிறிஸ்துவின் சிலுவை மரத்தை அவரோடே எடுத்துக்கொண்டுபோன சிரேனே ஊரானான சீமோன் என்பவனுடைய குமாரன். இவனும் இவன் சகோதரனாகிய ரூபும் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள். மாற் 15^{21} ரோ 16^{13}.

2. ஒரு சப்பாணியைக் குணமாக்கினதினிமித்தம் அப்போஸ்தலர்களைச் சிறைச்சாலையிலே போடுவித்த யூதர் சங்கத்தில் ஒருவன். அப் 4^{6}.

3. எபேசு என்னும் ஊரில் ஒரு யூதன். அப் 19^{33}.

4. கிறிஸ்தவனானபின்பு மறுதலித்தவன். 1 தீமோ 1^{20}.

5. கன்னானாகிய அலெக்சந்தர். 2 தீமோ 4^{14}.

6. மகா அலெக்சந்தர் (*Alexander the Great*) கிரேக்க தேசத்து ராஜா. இவனுக்கு இஸ்காந்தர் என்றும் பேர். இவன் கி-மு. 336-ஆண்டிலே பட்டங்கட்டப்பட்டு பெர்சியா ராஜாவாகிய தாரியு மன்னனை ஜெயித்து இரண்டு நூற்றாண்டுகளாக நிலைநின்ற பெர்சியா ராஜ்யத்தைக் கட்டிக்கொண்டு கங்காநதிமட்டும் எல்லாவற்றையும் ஒரு குடையின்கீழ் ஆண்டுகொண்டிருந்தான். 1 மக்க $1^{1,9}$. கி-மு. 332-ஆம் இவன் பாழாய்க்கிடந்த பழைய தீருவின் கல்லுக்கரடுகளை வாரிப் புதுத் தீருவைப் பிடிக்க, அதாலே கடலைத் தூர்த்து மடுவடைத்தான். அப்போது காசா பட்டணத்துக்கும் அதன் ராஜாவுக்கும் பெலிஸ்தருடைய மற்ற அயல் ஊர்களுக்கும் அழிவு வந்தது. சக 9^{2-5} செப் 2^{4}. பின்பு இவன் எருசலேமுக்கு வந்தபோது யாதுவா என்கிற பிரதான ஆசாரியன் ஜனங்களோடே இவனுக்கு எதிராகப் போய் இவனால் வெகு தயவாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு பார்சு ராஜ்யம் கிரேக்கராலே கட்டிக்கொள்ளப்படு மென்கிறதின் பேரிலே தானி 8^{21} 11^{3}-லே எழுதிவைத்

திருக்கிற தீர்க்கதரிசனங்களை இவனுக்குக் காண்பித்தான்; இதைக் கேட்டு இவன் தேவாலயத்திலே கர்த்தருக்குப் பலியிட்டான்; மேலும் சமாரியர் இவனைத் தங்கள் கோவிலுக்கு வரச்சொல்லியும் இவனுக்கு கலகம் பண்ணினபோது அவர்களைச் சமாரியா பட்டணத்தை விட்டுத் துரத்தினன் என்பது பாரம்பரியம். அந்தக் காலம்முதல் சீகேம் என்னும் ஊர் சமாரியரின் தேவஸ்தலமாயிருந்தது. யோவா 4^{5}-லே சீகார் என்று சொல்லப்படுகின்றது.

கி-மு. 326-ஆுத்திலே இவன் போரூஸ் என்ற இந்து ராஜாவோடே போர்புரிந்து விக்கினத்தோடே அவனை ஜெயங்கொண்டு கலான் என்ற ஒரு பிரபலமான ஞானியைக் கண்டு பேசித் திரும்பிப் பெர்சியா தேசத்துக்குப் போய்ச் சேர்ந்தான். கி-மு. 325-ஆு இவனுக்குப்பின் வட இந்தியாவிலே ஒரு கிரேக்க ராஜ்யம் சிலகாலம் உண்டாயிற்று. இவன் தான் சென்றவிடமெல்லாம் வெற்றியடைந்த பின்பு தான் ஜெயிக்கும்படி வேறொரு தேசமும் இல்லை என்று கூறிக் கடைசியிலே மதுவினல் கெட்டழிந்து பாபிலோனுக்கு திரும்பி வந்து பெலன் என்ற விக்கிரக தேவனுடைய கோவிலை அலங்கரிக்கவேண்டுமென் றிருந்தபோது முகான் என்ற அவ்விடத்துச் சாஸ்திரிமார் இவனுக்கு எச்சரிக்கைபண்ணினபடி முப்பத்திரண்டாம் வயதிலே காலம் சென்ருன். கி-மு. 323-ஆு இவனுடைய பிரபுக்கள் அநேகங் கலகங்களைப் பண்ணினபின்பு இவனுடைய ராஜ்யத்தைச் சூரியா, ஆசியா, எகிப்து, மக்கெதோனியா என்று நாலு பிரிவாய்ப் பிரித்துப்போட்டார்கள்.

அலெக்சந்திரியா. **Alexandria.** அலெக்சந்திரியா மத்தியதரைக் கடலோரத்தில் மகா அலெக்சந்தராலே கி-மு. 331-ஆு ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பட்டணம். இது அதிக சீக்கிரத்தில் முக்கிய வியாபார ஸ்தலமானது. இதில் அரமனைகள்மாத்திரம் 4,000 இருந்தன. இதிலுள்ள ஒரு பெரிய புஸ்தகசாலையில் ஏறக்குறைய எழு லட்சம் பிரதிகள் இருந்தன. இங்கேயுள்ள சர்வகலாசாலையில் உலகமெங்கும் கீர்த்திபெற்று விளங்கின அநேக வித்துவான்கள் இருந்தார்கள். ஆதிச்சபையில் மகா வேதசாஸ்திரிகளான கிலேமெந்து, ஒரிஜன், அதனசி என்பவர்கள் இதில் கல்விகற்ற மாணவர். யூதர்கள் அநேகர் இந்த ஊரிலே வாசமாயிருந்தார்கள். பரி. மாற்கு இதிலேதான் கிறிஸ்தவ சபையை ஸ்தாபித்தான். அப் 6^{9} 18^{24} 27^{6} 28^{11}.

அலெமேத். **Alemeth.** [மறைவிடம்].
1. ஒரு ஊர் = அல்மோன். 1 நாளா 6^{60}.
2. சவுவின் சந்ததியாரில் ஒருவன். 1 நாளா 8^{36}.
3. பெகேரின் மகன். 1 நாளா 7^{8}.

அலை. **Wave.** யோபு 38^{11} சங் 107^{25} எசா 48^{18} யாக் 1^{6} யூதா 1^{13}.
'மரண அலைகள்.' 2 சாமு 22^{5}.

அலோகேஸ், அல்லோக்கேஸ். **Hallohesh.** எருசலேம் மதிலைக் கட்டினவர்களிற் சிலர். நெகே 3^{12} 10^{24}.

அல்கூல். **Halhul.** யோசு 15^{58}.

அல்தஷ்கேத். **Altaschit. Altassheth.** 'அழிக்காதே' என்னும் அர்த்தங்கொண்ட இப்பதம் 57, 58, 59, 75-ம் சங்கீதங்களின் தலைப்பில் எழுதியிருக்கிறது. இந்தச் சங்கீதங்கள் அப்பெயர்கொண்ட இராகத்தின்படி பாடவேண்டியது. ஒருவேளை எசா 65^{8}-ல் சொல்லியிருக்கிறது இப்பாட்டாயிருக்கலாம்.

அல்பா, ஒமேகா. **Alpha and Omega.** இவை கிரேக்க பாஷையில் முதலும் கடைசியுமான எழுத்துக்களாகையால், இயேசு கிறிஸ்து எல்லாருக்கும் எப்போதும் காரணகர்த்தராய் இருக்கிருர் என்று காட்டும்படி அவருக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. வெளி 1^{8} 1^{11} 21^{6} 22^{13}.

அல்பானம். **Galbanam.** தூபத்தோடு கலக்கும் ஒருவிதமான பிசின். யாத் 30^{34}.

அல்பேயு. **Alphaeus.**
1. அப். யாக்கோபின் தகப்பன். மத் 10^{3}. இவனுடைய மறுபெயர் கிலேயோப்பாவாக இருக்கலாம். யோவா 19^{25} லூக் 24^{18}.
2. மத்தேயுவின் தகப்பன். மாற் 2^{14}.

அல்மோதாத். **Al-modad.** ஆதி 10^{26}.

அல்மோன். **Almon.** [மறைவிடம்]. யோசு 21^{18}. அலெமேத் காண்க.

அல்மோன் திப்லாத்தாயீம். **Almon Diblathaim.** இஸ்ரவேலர் பிரயாணம் செய்தபோது சந்தித்த இடம். எண் 33^{46}.

அல்யா. **Alvah.** 1 நாளா 1^{51}. = அல்வா. ஆதி 36^{40}.

அல்யான். **Alian.** 1 நாளா 1^{40}. = அல்வான். ஆதி 36^{23}.

அல்லேலூயா. **Hallelujah.** [யேகோவாவைத் துதியுங்கள்]. இது சங் 106, 111 மு. வெளி 19-ம் அதிகாரத்திலும் ஸ்தோத்திரத்தைக் குறிக்கப் பாவிக்கப்பட்டிருக்கிற எபிரெய பதம்.

அல்லோன். Allon.
1. ஓர் பிரபு. 1 நாளா 4^{37}.
2. ஓர் ஊர். யோசு 19^{33}.

அல்லோன்பாகூத். Allon-bachuth. [கண்மாரி சொரிந்த இடத்திலுள்ள கர்வாலி மரம்]. பெத்தேலுக்குச் சமீபமாயுள்ள ஒரு ஊர். ஆதி 35^{8}.

அல்வா. அல்யா காண்க.

அல்வான். Alvan. அல்யான் காண்க.

அவஸ்நை பூசுதல். Extreme unction. இது ரோமான் சபையில் ஆசரிக்கப்படுகிற ஏழு சாக்கிரமெந்துக்களில் ஒன்று. நோயாளி மரணத்தறுவாயிலிருக்கும்பொழுது கண்காணியார் ஆசீர்வதித்த எண்ணெயைச் சுவாமியார் கொண்டுவந்து அவனுடைய கண், காது, மூக்கு, கை, பாதமாகிய அவயவங்களில் பூசுவதினால் அவனுடைய ஆத்துமாவுக்குத் தைரியத்தையும் பெலனையும் கொடுக்கிறதென்று நம்புகிறார்கள். ரோமான் சபையார் யாக் 5^{13-15}-ம் வசனங்களில் இந்தச் சாக்கிரமெந்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். நாம் இவ்வசனங்களை உற்றுணர்ந்து பார்த்தால் தேகத்தில் எண்ணெய் பூசுவது அல்ல, விசுவாசத்தோடு ஜெபம் பண்ணுவதே பிரதான காரியமும் அவனைச் சொஸ்தப்படுத்துவதற்கு ஏதுவுமாயிருக்குமென்று நன்கு விளங்கும். அன்றியும் ஆரோக்கியத்திற்காகத் தேகத்தில் எண்ணெய் பூசுவதேயொழிய வியாதிஸ்தன் அதினால் மோட்சகதி அடைவான் என்பதல்ல. அப்போஸ்தலர் நோயாளியின் சுகத்திற்காக எண்ணெய் பூசுங்கள் என்று சொல்லியிருக்கிறதைத் தவிர இதினால் ஆத்துமாவுக்கு யாதொரு நன்மையுமில்லை. மாற் 6^{13}-ல் காண்கிறபடி பன்னிரண்டு சீஷர்களும் புறப்பட்டுப் போய் அநேக நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்கு எண்ணெய் பூசி அவர்களைக் குணமாக்கினார்கள்.

அவபக்தி. Ungodliness. தேவ வணக்கம் இல்லாமை. ரோ 1^{18} 11^{26} 2 தீமோ 2^{16} தீத் 2^{12}.

அவயவம். Member.
1. சரீரத்தின் உறுப்பு. சங் 139^{16} ரோ $6^{13.19}$ 7^{23} 1 கொரி $12^{12.26}$ கொலோ 3^{5}.
2. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்ந்த அங்கத்தவர். எபே 4^{25} 5^{30}.

அவிசுவாசம். Unbelief. தேவ அருளாகிய சத்தியத்தை அங்கீகரியாமை. யோவா $3^{18.36}$ எபி 3^{12} 10^{26} 1 யோவா $5^{10.12}$.

பூரண விசுவாசமில்லாமை. மத் 14^{30} 17^{17} மாற் 9^{19}.

அவிசுவாசிகள் இரண்டுவிதமானவர்கள்.
1. சுவிசேஷத்தை அறியாத புறமதஸ்தர்கள். 1 கொரி 6^{6} 2 கொரி 6^{14}.
2. சுவிசேஷத்தைக் கேட்டும் அதைத் தள்ளிவிடுகிறவர்கள். லூக் 12^{47} யோவா 3^{36} தீத் 1^{15} வெளி 21^{8}.

சகரியாவின் அவிசுவாசம். லூக் 1^{20}.

நாசரேத்தூராருடைய அவிசுவாசம். மாற் 6^{5}.

சீஷர்கள் அவிசுவாசத்தினாலே சந்திரரோகியைக் குணமாக்கக் கூடாதவர்களானார்கள். மத் 17^{16}.

இஸ்ரவேலரின் அவிசுவாசம். எபி 3^{19} 4^{6}.

பவுல் முதலிற்கொண்ட அவிசுவாசம். 1 தீமோ 1^{13}.

யூதர்களுடைய அவிசுவாசம். ரோ 11^{20}.

அவுழ்தம். Medicine. அவுழ்தத்தைப் பற்றி வேதத்தில் சொல்லியிருப்பதை நாம் கவனித்தால் வழக்கமாய் எபிரெயர்கள் வியாதிக்குப் பால், தேன், அத்திப்பழம், வாதுமை, காடி முதலியவற்றைக் கொடுத்துப் போஜனத்தின்மூலமாய்ச் சௌக்கியமாக்கப் பார்ப்பார்கள். கிலேயாத்தின் பிசின் தைலம், ஒத்தலாம், வெந்தயம், சீரகம் வாயுநிவாரணி மருந்தாகவும்; உவர்மண் பூச்சு மருந்தாகவும்; தூதாயீம் லேபன மருந்தாகவும் உபயோகிப்பார்கள். சிலுவையில் அறையப்பட்டவர்களுக்கு மருந்து கலந்த திராக்ஷரசம் நித்திரை மயக்க மருந்தாகக் கொடுப்பது வழக்கம். யாக் 5^{14} ஏசா 1^{6} 38^{21} லூக் 10^{34} ஆதி 30^{16} 37^{25} மத் 23^{23}.

அவோத்யாயீர். Havoth-jair. யோர்தான் நதிக்குக் கிழக்கே பாசான் அல்லது கிலேயாத் நாட்டிலுள்ள சில ஊர்கள். உபா 3^{14}.

அழைப்பு. Calling. சுவிசேஷத்தைநம்பி அதை ஏற்றுக்கொள்ளும்படிக்குக் கடவுளுடைய அருளடைதல். பிலி 3^{14} எபி 3^{1} 2 தெச 1^{12} ரோ 8^{28-30}. இரேனியுசையர் வேதசாஸ்திரத்தில் அழைப்பையும் மெய்யறிவையுங்குறித்த நாற்பத்தேழாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறதாவது:

1. மனிதர்களெல்லாரும் பாவத்தினால் செத்தவர்களாய் இருக்கிறபடியால், முதலாவது அவர்களை விழிக்கச் செய்யவேண்டும். ஆவியானவர் தேவ ஊழியக்காரருடைய பிரசங்கத்தினாலும் வேத வசனத்தினாலும் அப்படிச் செய்யச் சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆதியிலே கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்களும் அவர்களுக்குப்பின் ஏற்படுத்தப்பட்டுவருகிற மற்றப் போதகர்

களும் அவருடைய கட்டளையின்படி உலகமெங்கும் போய் இரட்சிப்பை அறிவித்து அந்த இரட்சிப்பையும் அதினாலே வருகிற மகிமையையும் ஏற்றுக்கொள்ளும்படிக்கு யாவரையும் அழைக்கிறார்கள். மத் 28^{19} மாற் $16^{15.\ 20}$. இதைக் கேட்கிறவர்களுக்கும் வாசிக்கிறவர்களுக்கும் பரிசுத்த ஆவி தமக்கேற்ற காலத்திலே புத்தியைப் பிரகாசிப்பிக்கிறார். இவர்கள் தங்கள் கெட்ட நிலைமையையும் கிறிஸ்துவினுடைய இரட்சிப்பையும் தெளிவாய் அறிந்து இந்த விசேஷங்களை அதிகமாய் ஆராய்ந்துபார்க்கும்படி மனதுள்ளவர்களாகிறார்கள். அநேகர் அந்த அழைப்புக்கு விரைவாயும் விருப்பமாயும் செவிகொடாமல் இருக்கிறபடியால், கர்த்தர் பலவிதமாய் அவர்களை அழைப்பார். வெளி 3^{20} அப் $2^{22.\ 36}$ $3^{13.\ 26}$ $10^{36.\ 43}$ $13^{17.\ 38}$ 2 கொரி $5^{18.\ 21}$. இந்த அழைப்பைக் குறித்துச் சொல்லிய வேறு வாக்கியங்கள் என்னவெனில்: 1 தெச 2^{11} 4^{7} 5^{24} 2 தெச 1^{12} 2^{14} 2 தீமோ 1^{9} 1 பேது 5^{10} ரோ 4^{17} 9^{11} 8^{30} 11^{29} கலா 5^{8} எபே 1^{18} 4^{4} எபி 3^{1} 2 பேது 1^{10}.

2. இந்த அழைப்பு புற அழைப்பு, அக அழைப்பு என இருவகையா யிருக்கிறது. பரிசுத்த ஆவி புற அழைப்பைப் போதகர்மார் மூலமாயும் அக அழைப்பைத் தாமாகவும் நடத்திவருகிறார். அக அழைப்பு பிதா பாவிகளை இழுத்துக்கொள்ளுதல் என்றும், அவருடைய ஏவுதல் போதனை அருளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பிதாவினுடைய ஆவியால் ஒருவனுடைய மனம் ஏவப்படுகிறதினாலே அவன் அழைப்புக்குச் செவிகொடுத்துக் கிறிஸ்துநாதரை நம்புவான். யோவா 6^{44-46} ரோ $8^{29.\ 30}$. இப்படி நம்புகிறவர்களே கிறிஸ்துவினுடைய ஆடுகள். பிதா இவர்களைக் கிறிஸ்துவுக்குக் கொடுத்தார். இவர்கள் கெட்டுப்போகார்கள். யோவா $10^{26.\ 29}$ $6^{37.\ 40}$. புற அழைப்புக்கும் அக அழைப்புக்கும் செவிகொடாமல் கிறிஸ்துவினுடைய இரட்சிப்பை அசட்டை பண்ணுகிறவர்கள் உண்டு. அவர்கள் கரடான வழிக்கும் கற்பாறைக்கும் முள்ளுள்ள இடத்துக்கும் ஒப்பாயிருக்கிறார்கள். மத் $13^{19.\ 22}$ 20^{16} 22^{14}. அந்த அழைப்பை அவர்கள் அசட்டை பண்ணுகிறபடியால் தண்டனைக்கு உட்படுவார்கள். லூக் 7^{30} அப் $28^{24.\ 28}$ 2 தெச $1^{8.\ 9}$. தேவ ஆவி அவர்களுடைய உள்ளத்திலே ஓர் அளவாய்ச் சுவிசேஷத்தின் மகிமையைத் தோன்றப்பண்ணி அவர்களை அழைத்தும், அதை அவர்கள் தங்கள் சொந்த வெறுப்பினாலே எதிர்த்து அசட்டைபண்ணுவதைத் தடுக்க, அல்லது சுபாவப்படியிருக்கிற சுவாதீனத்தை நீக்கமாட்டார். அதைப்பற்றிய முகாந்தரம் நமக்குத் தெரியாது; கடைசியிலே அதுவும் நமக்குத் தெளிவாகும்.

3. இப்படியானால், போதகர்களுடைய பிரசங்கம் அநேகருக்கு வீணாயிருக்குமேயென்று கேட்டால், அது வீணாயிராது. என்னத்தினாலெனில், சுவிசேஷத்தைக் கேட்கப்போகிறவர்கள் இன்னார் என்று அவர்கள் அறியாமலிருக்கிறபடியால், மரணபரியந்தம் யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணவேண்டும். மேலும் ஒருவன் குணப்படமாட்டான் என்று சொல்லுகிறதற்கும் இடமில்லையே. இன்றைக்கு நம்முடைய அழைப்புக்குச் செவிகொடாதவன் ஒருவேளை நாளைக்கு அல்லது வருகிற வருஷத்தில் அல்லது கடைசி நேரத்தில் செவிகொடுப்பான். இயேசுநாதர் போதித்தபடி, சிலர் அதிகாலையிலும் சிலர் மூன்றாம்மணி வேளையிலும் சிலர் ஆறாம் ஒன்பதாம்மணி வேளைகளிலும் சிலர் பதினோராம்மணி வேளையிலும் அழைக்கப்படுகிறார்கள். மத் $20^{2.\ 7}$. பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி போதகர்கள் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளும் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறார்கள். கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கு ஏதுவான மரணவாசனையாகவும் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கு ஏதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறார்கள். 2 கொரி $2^{15.\ 16}$. ஒருதிறத்தாரிடத்தில் தேவநீதியும் மற்றத்திறத்தாரிடத்தில் அவருடைய இரக்கமும் விளங்கும்; ஆதலால் உண்மையுள்ள போதகர்களுடைய பிரசங்கம் வீணாய்ப்போகாது. மேலும் சுவிசேஷத்தைக் கேட்கிறவர்களில் அநேகர் கிறிஸ்துவினிடத்தில் உடனே சேராமல் போனாலும், அவர்கள் அதிகமாய்ப் பாவஞ்செய்யாமல் சற்றே யோக்கியமாயும் சன்மார்க்கமாயும் நடக்கிறதற்கு ஏவப்படுவார்கள். அதுவும் பிரயோசனமல்லவா? ஆதலால் போதகர்கள் எப்பொழுதும் யாவரையும் கிறிஸ்துவினிடத்துக்கு அழைக்கவேண்டும். சுவிசேஷ வசனத்தின் மூலமாய்ப் பாவிகளை இரட்சிக்கவேண்டுமென்று தேவனுடைய கட்டளையிருந்தும், போதகர்கள் தங்கள் வீணான யோசனையினாலே அதைப் பொதுவாக யாவருக்கும் போதியாமல் இருக்கிறதினால், மற்றவர்கள் சத்தியத்தை அறியாததினால் வரும் குற்றமெல்லாம் அப்போதகர்களைச் சாரும்.

தேவ ஆவியின் அழைப்பு நம்முடைய மறுபிறப்புக்கும் விசுவாசத்திற்கும் ஆரம்பமானது.

அளவு, நிறை மு. Weights and Measures.

குறிப்பு.—இதில் இங்கிலிஷ், தமிழ் அளவு நிறை முதலானவற்றின் பின்ன இலக்கங்களை நுட்பமாய்க் கவனியாமல் உத்தேசம் இவ்வளவு என்று போட்டிருக்கிறோம்.

I. நீட்டல் அளவை

1. பழைய ஏற்பாட்டில் வழங்கியிருக்கும் நீட்டல் அளவை

எபிரெயருக்குள் அரசன் கந்தாயம் வாங்குவதற்காக அளக்கும் நீட்டல் அளவை பொதுவான அளவையைப்பார்க்கிலும் $\frac{1}{6}$ நீளம்.

நீட்டல் அளவையின் விவரம்

	அரசனுக்குரிய அளவை.	பொதுவான அளவை.
1. விரற்கடை.	சுமார் 1 அங்குலம்.	$\frac{3}{4}$ அங்குலம்.
2. உள்ளங்கை, (4 விரற்கடை).	$3\frac{1}{2}$,,	3 ,,
3. சாண், (12 விரற்கடை).	$10\frac{1}{4}$,,	9 ,,
4. முழம், (2 சாண்).	$20\frac{1}{2}$,,	18 ,,
5. கோல், (6 முழம்).	124 ,,	106 ,,

குறிப்பு.—'ஒருநாட் பிரயாணம்.' எண் 11^{31}. இதின் தூரம் திட்டமாய்த் தெரியாது. 'ஒரு முழம்.' நியா 3^{16}. இதில் எபிரெய பாஷையிற் சொல்லியிருக்கிற *Gomed* என்னும் பதத்தை 'முழம்' என்று மொழிபெயர்த்திருக்கிறது. ஆனால் இதின் சரியான அளவு எவ்வளவு என்று தெரியாது.

2. புதிய ஏற்பாட்டிலுள்ள நீட்டல் அளவை

தமிழ்.	கிரேக்கு.		
1. பாகம்.	*Orguia.*	அப் 27^{28}.	6 அடி.
2. ஸ்தாதி.	*Stadion.*	வெளி 14^{20}.	600 ,,
3. மைல்.	*Milion.*	மத் 5^{41}.	1614 கஜம்.

இங்கிலிஷ் மைலுக்கு இது கொஞ்சம் குறைவு.

குறிப்பு.—'ஓய்வுநாட் பிரயாணம்.' அப் 1^{12}. இது பழைய ஏற்பாட்டிற் சொல்லியிருக்கவில்லை. வேதசாஸ்திரிகள் ஓய்வுநாளில் இரண்டாயிரம் முழத் தூரத்திற்கப்பால் ஒருவரும் பிரயாணம் செய்யக்கூடாது என்று கட்டளை செய்திருந்தார்கள்.

II. சதுர அளவை

'பத்து ஏர் நிலம்.' ஏசா 5^{10}. ஒருநாளில் பத்து ஏர் மாடு உழக்கூடிய நிலம். அதாவது: 10 ஏக்கர் நிலம்.

III. அளவு

1. பழைய ஏற்பாட்டில் வழங்கும் அளவு

எபிரெய.	தமிழ்.	இங்கிலிஷ்.	தமிழ் (சென்னைப்படி).
Homer ... / *Kor* ...	கலம். / மரக்கால்.	704 *pints.*	44 மரக்கால்.
Lethek ...	ஒன்றரைக் கலம். ஓசி 3^{2}.	352 ,,	22 ,,
Ephah ... / *Bath* ...	எப்பா. / குடம்.	72 ,,	$4\frac{1}{2}$,, / 36 படி.
Seah ...	படி.	24 ,,	12 ,,
Hin ...	படி.	12 ,,	6 ,,
'Omer ... / *'Issaron* ...	ஓமர் 'ஒரு மரக்காலில் பத்தில் ஒரு பங்கு.'	$7\frac{1}{5}$,,	$3\frac{1}{2}$,,
Kab ...	காற்படி.	4 ,,	2 ,,
Log ...	ஆழாக்கு.	1 ,,	$\frac{1}{2}$,,

குறிப்பு.—1. 'கைப்பிடி.' லேவி 2^{2}. இது கட்டாயமான அளவு அல்ல. இது இவ்வளவுதான் கொண்டதெனத் திட்டமாய்த் தெரியாது.

2. 'மரக்கால்.' ஏசா 40^{12}. மூலபாஷையிலுள்ள *Shalish* என்னும் இந்த அளவும் இவ்வளவு எனச் சரியாய்த் தெரியாது.

2. புதிய ஏற்பாட்டில் வழங்கும் அளவு

பழைய ஏற்பாட்டில் வழங்கிவந்த மூன்று அளவுகளுக்குப் புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் கிரேக்க பதங்களை வழங்கியிருக்கிறார்கள்.

கிரேக்கு.	எபிரெய.	தமிழ்.	வசனம்.
Batos.	*Bath.*	குடம்.	மத் 16^{6}.
Saton.	*Seah.*	படி.	மத் 13^{33}.
Koros.	*Kor.*	கலம்.	லூக் 16^{7}.

இவைகளைவிட இன்னும் மூன்று அளவுகள் சொல்லுவார்கள். அவையாவன:

Choenix 'படி.' வெளி 6^{6}. இது சென்னைப் படிக்குச் சரி.

Modios 'மரக்கால்.' மத் 5^{15}. சென்னை $5\frac{1}{2}$ படிக்குச் சரி.

Metretes 'குடம்.' யோவா 2^{6}. சென்னை 36 படி.

IV. நிறை

1. பழைய ஏற்பாட்டில் வழங்கும் நிறை

பழைய ஏற்பாட்டில் முழுநிறை, பாதி நிறை என இரண்டு நிறைகள் உண்டு.

'அரசனுக்குரிய நிறை.' 2 சாமு 14^{26}.

'பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல்.' யாத் 38^{26}.

		முழு நிறை.	பாதி நிறை.
1. *Gerah.*	கேரா. ($\frac{1}{20}$ சேக்கல்).	$\frac{1}{24}$ தோலா.	$\frac{1}{48}$ தோலா.
2. *Beka.*	$\frac{1}{2}$ சேக்கல்.	$\frac{1}{2}$ தோலா.	$\frac{1}{4}$ தோலா.
3. *Shekel.*	சேக்கல்.	1 தோலா.	$\frac{1}{2}$ தோலா.
4. *Maneh.*	இருத்தல்.	$1\frac{1}{2}$ பவுண்ட்.	$\frac{3}{4}$ பவுண்ட்.
5. *Kikkar.*	தாலந்து.	98 பவுண்ட.	49 பவுண்ட்.

2. புதிய ஏற்பாட்டிலுள்ள நிறை

Litra. 1 இருத்தல் = 12 அவுன்சு. யோவா 12^{3}.

குறிப்பு.—'தாலந்து.' மத் 25^{15}. இது நிறையல்ல, நாணயம். லூக் 19^{13}-ல் சொல்லியிருக்கும் இருத்தலும் ஒரு நாணயந்தான்.

அளவுகோல். Measuring Rod. மூலபாஷையில் 'அளவு கோலுக்கும்' 'நாணலுக்கும்' ஒரே பதம். நாணல் அளவுகோலுக்கு உபயோகிக்கப்பட்டு வந்தது. எசே 40^{3} வெளி 11^{1}.

அளவு நூல். Measuring line. நூல் காண்க.

அறிவித்தல் புஸ்தகம். The Book of Revelation. வெளிப்படுத்தின விசேஷம் காண்க.

அறிவு. Knowledge.

I. மனுஷர் அடையும் அறிவு.

(*a*) பழைய ஏற்பாட்டில் சொல்லியிருக்கும் அறிவு என்பது கல்வியினால் உண்டாகும் ஞானத்தை அல்ல கடவுள் அருளும் நீதி நியாயத்தைக் கிரகிக்கும் அறிவைக் குறிக்கிறது. ஏசா 11^{2}. மேசியாவின் ராஜ்யத்தில் உள்ளவர்கள் தேவனிடத்திலிருந்து அறிவு பெற்றுக்கொண்டவர்கள். ஏசா 54^{13}. தீர்க்கதரிசிகள் முதலானவர்கள் தேவன் அருளும் அறிவை அடைந்தவர்கள் என்றாலும் சாஸ்திரம் முதலிய விஷயங்களைப்பற்றிய கல்வி ஞானமில்லாதவர்களாய் இருந்திருக்கலாம். யோபு 38, 39 அதி.

(*b*) புதிய ஏற்பாட்டில் சுவிசேஷங்களில் அறிவு என்னும் பதம் சன்மார்க்கத்துக்குரிய அறிவைக் குறிக்கிறது. இயேசுகிறிஸ்து கடவுளைப்பற்றிய பூரண அறிவுடையவர். இந்த அறிவு மனுஷர்களில் இல்லாவிட்டால் அவர்கள் இருளிலே நடக்கிறார்கள். மத் 5^{8} யோவா 7^{17} 17^{3}. பவுல் எழுதின நிருபங்களில் கடவுளைக்குறித்த அறிவு ஆவியானவரின் ஈவு எனச் சொல்லப்பட்டிருக்கிறது. 1 கொரி 1^{26} ௵ 2^{6} 12^{8}.

அன்பு அறிவிலும் மேலானது. 1 கொரி 8^{1}.

பொய்யான அறிவு. 1 தீமோ 6^{20} கொலோ 2^{8}.

மெய்யான அறிவு எல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கிறது. கொலோ 2^{3}.

பவுல் கி-பி. 63-௵ தீத்துவுக்கு நிருபத்தை எழுதும்போது 'தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு' என்பதைப்பற்றிப் பேசுகிறான். தீத் 1^{3}.

II. தெய்வீக அறிவு.

கடவுள் சர்வஞானம் உடையவர் என வேதவாக்கியங்கள் கூறுகின்றன. இதை விவரித்துச் சொல்லுதல் அனுவசியம்.

III. இயேசுகிறிஸ்து மனித அவதாரமாயிருந்த காலத்தில் அவருக்கு தெய்வீக தன்மை யிருந்தாலும், அவர் நமக்குத் தெளிவாய்த் தெரியாதவண்ணமாய்த் தம்மை மனுஷ சுபாவத்திற்கும் அறிவுக்கும் உட்படுத்தினதை நாம் சில விஷயங்களைக்கொண்டு அறிந்துகொள்ளக்கூடும். பிலி 2^{7}.

(*a*) புத்தியிலே விருத்தியடைந்தார். லூக் 2^{52}.

(*b*) அவர் கேட்ட சில வினாக்கள். மாற் 6^{38} யோவா 11^{34}.

(*c*) ஆச்சரியப்பட்டார். மத் 8¹⁰.

(*d*) ஜெபம் செய்தார். மத் 26³⁹.

(*e*) சிலுவையில் அவர் சொன்ன வாக்குகள். மாற் 15³⁴.

(*f*) தமக்கும் மறைபொருளாக வைத்த இரகசியம் உண்டு என்றார். மாற் 13³².

(*g*) அவர் தமது சுவிசேஷத்தைப் பூரண ஞானத்தோடும் அதிகாரத்தோடும் அருளினார். ஆனால் கல்வி விருத்திக்குரிய சாஸ்திரங்களைப்பற்றி நமக்குப் புது சமாசாரங்களை அறிவிக்கவில்லை.

அறுபோத். Arubboth. 2 இரா 4¹⁰.

அறுப்புக்காலம். Harvest Time. பலஸ்தீனா தேசத்தில் யோர்தான் நதியை அடுத்த நிலங்கள் பள்ளமும் செழிப்புமாயிருப்பதினால் அங்கே அறுப்புக்காலம் கொஞ்சம் முந்தியும் மலைநாடுகளில் கொஞ்சம் பிந்தியும் தொடங்கும். அறுப்புக்காலம் வழக்கமாய்ச் சித்திரை துவங்கி வைகாசி கடைசிவரையும் ஏழுவாரம் நடக்கும். கோதுமை அறுக்கிறதற்கு இரண்டு வாரத்துக்கு முந்தி வாற்கோதுமை அறுப்பார்கள். வயல்களின் ஓரங்களில் நிற்கும் பயிரை அறுக்காமலும் தரையில் விழுந்து கிடக்கும் கதிர்களை எடுக்காமலும் அவைகளை ஏழைகளுக்காக விட்டுவிடுவார்கள். லேவி 19⁹ 23¹⁵ உபா 16⁹ 24¹⁹ ரூத் 2².

அறுமீன். Pleiades. **நட்சத்திரம்** காண்க.

அறை. Room, Chamber. **வீடு** காண்க.

அறைகிறது. Smiting. **ஆக்கினை** காண்க.

அர்கேவியர். Archevites. பாபிலோனியாவிலிருந்து சமாரியாவுக்குக் குடியேற்றப்பட்ட ஜனம். எஸ்றா 4⁹.

அற்புதம். Miracles.

I. **சத்திய வேதம் அற்புதங்களைக் குறித்துச் சொல்வதென்ன?** திருவேதத்தில் பல அற்புதங்களைப்பற்றி வாசிக்கிறோம். தேவ ராஜ்யத்தின்பொருட்டு எக்காலங்கள் முக்கியமோ அக்காலங்களிலே அற்புதங்கள் மிகுதி. உதாரணங்கள்: இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு கானான் நாட்டைக் கட்டிக்கொண்ட காலம்; எலியா, எலிசா என்ற தீர்க்கதரிசிகள் இருந்த காலம்; இயேசுநாதர் இவ்வுலகத்தில் தங்கிய காலம்; திருச்சபை உண்டான காலம்.

சத்தியவேதத்தில்அற்புதங்களுக்குச்சொல்லியிருக்கும் முக்கியமான மூன்று பெயர்கள் ஆவன: அற்புதம், பலத்த செய்கை அல்லது வல்லமை, அடையாளம் அல்லது அதிசயம். உபா 34¹⁰ யோவே 2³⁰ மத் 24²⁴ யோவா 4⁴⁸ அப் 2¹⁹⁻²² ரோ 15¹⁸ 2 கொரி 12¹² ஆ. அற்புதங்களால் கவனிப்பும் பிரமிப்பும் உண்டாகிறதினால் அவற்றிற்கு அற்புதமென்று பெயர். அவை சிருஷ்டியின் சாதாரண முறைமைக்குப் பொருந்தாத சம்பவங்களாதலின் அவற்றால் பிரமிப்பு. தேவசெயலென்று விளக்கிக் காட்டிய தேவவல்லமை அவற்றால் வெளிப்படும். ஆகையால் அவைகளுக்கு வல்லமை அல்லது பலத்த செய்கை என்று பெயர். லூக் 11²⁰ மத் 12²⁸ லூக் 4¹⁸.

அற்புதத்தால் விளங்கும் தேவவல்லமைக்கும் அற்புதம் செய்வோனது மனதுக்கும் இணக்கம் என்ன? அற்புதம் செய்வோன் தேவவல்லமையைத் தன்னைத் தெரியப்படுத்தும் கருவியாய் மாத்திரமல்ல, அது தேவச்செயலை அறிவிக்கும் சாட்சியாய் மாத்திரமல்ல, தன் சுயசித்தத்தோடு அதைக்கொண்டு புதுமை செய்கிறான். அற்புதங்கள் கடவுளுக்கே உரிய கிரியைகளென்று வேதம் சொல்லுவது மெய். யோவா 10³⁷ 5³⁶ 10²⁵ லூக் 5¹⁷. ஆயினும் பலம் குறைந்த கடைமகனால் தேவனது வல்லமை கிரியை செய்யாது. ஆதலால் அற்புதம் செய்வதற்கு விசுவாசம் வேண்டுமென்று கிறிஸ்து சொல்லுகிறார். மாற் 16¹⁷. விசுவாசம் தனித்து அற்புதம் செய்யக்கூடியதல்ல. ஆகிலும் விசுவாசமின்றி தெய்வீக அற்புதம் செய்ய முடியாது. மத் 17¹⁹⋅²⁰. அப்படியிருக்க அற்புதம் செய்வோன் அதைத் தன் சொந்த கிரியையாகவும் செய்கிறான். ஆகையால் (மாற் 5³⁰) இயேசுவுக்குத் தெரியாமல் அவரிலிருந்து அற்புத வல்லமை புறப்பட்டது என்று பொருள்படாது. மத் 13⁵⁴. இவ்வாக்கியத்தால் அற்புதமும் ஞானமும் கூடியிருக்குமென்பது தெளிவு. புதுமைகாட்ட அற்புதச் செய்கைக்காரருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடவுளின் அதிகாரமே அவர்களை இதற்குச் சமர்த்தராக்கும். மத் 9⁶⁻⁸ லூக் 9¹. ஆதலால் இயேசுநாதர் யோவா 5³⁶-ல் கடவுள் தமக்குக் கிரியை செய்யக் கற்பித்தார் என்கிறார். அற்புதம் பண்ணுகிறவன் தான் அதைச் செய்யக்கூடியவனென்று அறிவான். அவன் இஷ்டத்துக்கேற்க எப்படி எங்கெங்கே தனக்குத் தேவவல்லமை வேண்டுமோ அப்படி அங்கங்கே அவனுக்குக் கிடைக்கும் எனினும் கிறிஸ்து செய்த அற்புதங்களுக்கும் வேதத்தில் சொல்லியிருக்கும் மற்ற அற்புதக்காரர் செய்த அற்புதங்களுக்கும் பெரிய வேற்றுமை உண்டு. இவர்களுக்கு விசுவாசம் வேண்டியிருக்க கிறிஸ்துவுக்கும் விசுவாசம் வேண்டுமென்று சொல்லப்படாது. அவருக்குக்

கடவுளோடு இருக்கும் சம்பந்தம் ஒப்புவமை யற்றது. யோவா $14^{10.11}$. ஆகையால் மற்றவர்கள் யாவரும் சொல்லக்கூடாத வண்ணமாக இயேசு தமது செய்கை பிதாவின் செய்கைக்கு இசையும் என்று சொன்னார். யோவா 5^{17}. அற்புதம் செய்யும்படி இயேசுவுக்குப் பிதாவால் அதிகாரம் கிடைத்தது. மத் 9^{6-8}. அவர் சீஷரோ அவராலே அதிகாரம்பெற்று (லூக் 9^{1} மாற் 16^{17}) அவர் நாமத்திலே அற்புதம் செய்தார்கள். அப் 3^{6-16} $4^{9.10}$ 16^{18}.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் நடந்த அற்புதங்கள் கிறிஸ்து செய்த அற்புதங்களுக்கு வித்தியாசமானவை. பழைய ஏற்பாட்டின் காலத்தில் நடந்த வல்லமைகள் வரப்போகிற இரட்சிப்புக்காக உலகத்தைச் சரிப்படுத்தும்படி கடவுள் புறச்சாதியாரையும் சமய நிலைதவறின யூதரையும் தண்டிக்கப் போகிறார் என்பதைக் குறித்தன. ஆகையால் கிறிஸ்து உலகத்தில் வருமுன் நடந்த அடையாளங்கள் பலமுறையும் ஆக்கினைக்குரிய அற்புதங்கள். இயேசுநாதர் ஏராளமும் பலவகையுமான அற்புதங்களைச் செய்தார். மத் 8^{16} 9^{35} $14^{35.36}$ 19^{2} 11^{2-5} லூக் 7^{18-22}. அவர் உதவியின்பொருட்டும் தேற்றத்தின்பொருட்டும் அற்புதங்கள் செய்தார். லூக் 9^{54-56} யோவா 3^{17} யாத் 7^{12} 2 இரா 1^{9-17} $2^{23.24}$. மத் 12-ம் அதி.

கிரேக்க பாஷையில் அற்புதங்களுக்கு மூன்றாம் பதத்துக்கு அடையாளம் அல்லது அதிசயம் என்று அர்த்தமாம். தமிழ் வேதத்தில் இதற்கு அடையாளம் என்றுமாத்திரம் சொல்லியிருக்கிறது. புதிய ஏற்பாட்டிலுள்ள அற்புதங்களின் நோக்கம்: முதலாவது அற்புதம் செய்வோரைக் கடவுள் அனுப்பியவராக ரூபிப்பதும் (2 கொரி 12^{12}), இரண்டாவது விசேஷமாய் பரலோக ராஜ்யம் வரப்போகிறதையும் வந்திருக்கிறதையும் காண்பிப்பதுமாம். ஆகையால் அவற்றிற்கு 'அடையாளம்' என்று பெயர். உதாரணமாக கிறிஸ்து செய்த புதுமைகள் அவரே பரலோக ராஜ்யத்தை ஸ்தாபித்த இரட்சகர் என்பதற்கும் (மத் 12^{28} லூக் 11^{20}), தேவ ராஜ்யம் எல்லாத் தீமையையும் நீக்கி இரட்சணியத்தை உலகத்தாருக்கு உண்டாக்கும் என்பதற்கும் (மத் 11^{5}) அடையாளங்களாம்.

திருவேதத்தின் அற்புதங்கள் பரலோக ராஜ்யத்தின்பொருட்டு நடந்ததால் அவை தெய்வீக செய்கைகளாக மெய்ப்பட்டன. பிசாசுக்குரிய அற்புதங்கள் மனிதரைச் சத்தியத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணாமல் அதற்கு விரோதமாய்ச் செய்யத் தூண்டும். உபா 13^{1-5}. ஓர் அற்புதத்தின் தன்மையை உணர்ந்து கொள்வதற்கு எப்போதும் அத்தோடு கூடியிருக்கும் அறிவிப்பையும் நோக்கத்தையும் நன்றாய்க் கவனித்தறியவேண்டும். இது தேவனது வசனத்திற்கும் நோக்கத்திற்கும் அமைந்தால் அவ்வற்புதம் தெய்வச்செயலென்று நம்பலாம். மற்றப்படி அது பிசாசின் செயலும்பொய் அற்புதமுமாம். சத்திய வேதத்தால் குறிப்புற்ற புதுமைக்காரர் தாங்கள் செய்த தீங்கை யனுபவிக்கும் சிலருக்கு மாத்திரமே அற்புதங்களால் உதவி புரிந்தார்கள். லூக் 4^{25-27}. ஏனெனில் இரட்சிப்பின் நிறைவு இம்மையில் அல்ல மறுமையிலே வரும். ஆகையால் அற்புதங்கள் மோட்சத்தை முன் காட்டும் மெய்த் தீர்க்கதரிசனங்களென்று சொல்லலாம்.

திருவேதத்தில் சொல்லப்பட்ட மெய் அற்புதக்காரன் எவனும் தற்புகழ்ச்சியின் நிமித்தமும் அதிகாரப் பிரியத்தினிமித்தமும் லௌகீக நோக்கத்தினிமித்தமும் அற்புத அடையாளம் செய்யவில்லை. வேடிக்கைக்கென்று அவர்கள் வல்லமை நடப்பிக்கவில்லை. அற்புதம் செய்யும்படி சமயம் தேடவில்லை. அற்புதம் செய்யாவண்ணம் முயற்சி எடுத்தார்கள். இயேசுநாதர் அற்புதம் செய்வதல்ல சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே தமது வேலையில் முக்கியமென்று தெளிவாகக் காட்டினார். மாற் 1^{33-39} லூக் 4^{42-44}. அவர் யூதரின் விநோத ஆசைக்கு ஒருபோதும் இடங்கொடுக்கவில்லை. மத் 12^{38-42} லூக் 11^{29-32} மத் 16^{1-4} யோவா 4^{48}. அதிசயங்காணாமல் விசுவாசிக்கிறவர்களைப் புகழுகிறார். யோவா 20^{29}. அவிசுவாசிகள் அற்புதங்களைக் கண்டு விசுவாசமடையும்படி அவர் புதுமை காட்டவில்லை. இருந்த விசுவாசத்தைப் பலப்படுத்தும்படி புதுமை காட்டினார். யோவா 2^{11}. ஆகையால் அற்புதம் செய்யுமுன் விசுவாசம் வேண்டுமென்கிறார். மாற் 9^{23}. விசுவாசமற்றவர்களிடத்தில் அற்புதம் செய்யவில்லை. மத் 13^{58} மாற் $6^{5.6}$. பாவத்தையும் அதனாலுண்டாகும் எல்லாத் தீங்குகளையும் அழிப்பது அவரது இரட்சணிய வேலையானதால் அதிசயங்கள் செய்தார். மாற் 2^{3-12}.

II. **அற்புதமாவதென்ன?** அற்புதம் இரண்டுவிதம். உள்ளான அற்புதம் ஒன்று, புறம்பான அற்புதம் ஒன்று. அல்லது மனத்துக்குரிய அற்புதம் ஒன்று, சடத்துக்குரிய அற்புதம் ஒன்று. மனத்துக்குரிய உள்ளான அற்புதமானது தன் சொந்தப் பலத்தினாலும் வினாவினாலும் கடவுளண்டை சேரக்கூடாத மனிதனை உள்ளத்தில்

பிடித்து கடவுளிடம் இழுக்கும் தேவ கிருபையின் செயல். தேவ கிருபை இன்றியே இரட்சிப்புக் கிடையாது. தேவ கிருபை மனிதனைத் தேவ பலத்தால் மன மாற்றவேண்டும். இந்த மனதுக்குரிய அற்புதம் கிறிஸ்துமார்க்கத்தின் மூல அற்புதம். இந்த உள்ளான அற்புதத்தை இல்லையென்று மறுக்கிறவன் கிறிஸ்துமார்க்கம் முழுவதையும் நிராகரிக்கிறான். ஆனாலும் மனதுக்குரிய அற்புதத்தை விவரிக்காமல் இங்கு புறம்பான சடத்துக்குரிய அற்புதத்தைப் பரிசோதிப்போம். சடத்துக்குரிய அற்புதமானது நமது அன்றாடக அனுபவத்தினால் விளங்காததும், நாம் அறிந்த இயற்கையான காரணங்களால்மாத்திரம் துலக்கமாகாததும், சடத்துக்கு மேலே கர்த்தர் ஒருவர் இருக்க வேண்டுமென்று காட்டுகிறதுமான சம்பவம். இந்த அர்த்தத்துக்கு ஏற்றபடி சரியாய்ப் பேசின ஒப்பனையான அற்புதங்கள் (*Relative miracles*) அற்புதங்களல்ல, முற்றான அற்புதங்கள் (*Absolute miracles*) மட்டுமே அற்புதங்களென்று சொல்லவேண்டும். ஒப்பனையான அற்புதமென்னவெனில், நாம் கண்டு அதிசயப்பட்டு முதலில் இன்னவித மாயாயிற்று என்று சொல்ல முடியாதபோதிலும், சரியாய் நிதானிக்கிறபடி அது சிருஷ்டியின் சாதாரண முறைமைக்கு அமையவே நடந்த சம்பவம். இப்பேர்ப்பட்ட சம்பவங்களும் தேவச்செயலென்று விசுவாசி சொல்வான் (**பராமரிப்பு** காண்க). ஆகிலும் சரியாய்ச் சொல்லின் இவை அற்புதமல்ல. முற்றான அற்புதம் மனிதன் கிரகிக்காததும், ஒருபோதும் கிரகிக்க முடியாததும், சிருஷ்டியின் சாதாரண முறைமையின்படி தோன்றாததுமாயிருந்து நேரே கடவுளின் செயலால் உண்டான சம்பவம். சத்திய வேதத்தில் சொல்லப்பட்ட அற்புதங்களில் பலவற்றை ஒப்பனை அற்புதங்களென்று சொல்லக்கூடுமாயினும் வேறு பலவற்றை முற்றற்புதங்கள் தானென்று சொல்லவேண்டும்.

அற்புதம் சிருஷ்டியின் முறைமையை அழிக்கும் சம்பவம் என்று சொல்லலாகாது. கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தபோது அது இனிமேல் ஒழுங்காய் இயங்கும்பொருட்டு சில பிரமாணங்களை ஏற்படுத்தினார். இப்பிரமாணங்களுக்குச் சிருஷ்டிப் பிரமாணங்கள் (*Laws of nature*) என்று பெயர். திருஷ்டாந்தமாக, விதை பூமியில் அழிந்து முளைத்துப் பயிராகி உலர்ந்துபோவதும்; ஒரு கல்லை உயர எறிந்தால் அது மறுபடியும் தரையில் விழுவதும் சிருஷ்டிப் பிரமாணங்களாம். சிருஷ்டிப் பிரமாணங்கள் ஒன்றோடொன்று நன்றாய் இணைந்திருப்பதால் உலகம் ஒழுங்காய் இயங்கும். சிருஷ்டிப் பிரமாணங்களில் ஒன்றை அழித்தால் உலகம் முழுவதும் அழிந்துபோவது நிச்சயம். அப்படியிருக்க, அற்புதம் ஒரு சிருஷ்டிப் பிரமாணத்தை அழித்து அவ்வாறு சிருஷ்டியின் முறைமையை நிர்மூலமாக்கும் சம்பவம் என்று சொல்லலாகாது. அற்புதம் சிருஷ்டிப் பிரமாணங்களாலும் சிருஷ்டிப் பிரமாணங்களுக் கிணைந்தும் நடந்த சம்பவம். இதெப்படியென்றால் கடவுள் சிருஷ்டியில் நமக்குத் தெரிந்ததும் தெரியக்கூடியதுமான வைகளோடு நமக்குத் தெரியாதவண்ணமாய் நடந்த சில அற்புதங்களை இசைக்கிறார். இவைகளைத் தீர உணர்ந்தறிவது நம்மால் கூடாது. கூடுமானால் அற்புதமாகாது. அற்புதமானதால் அது நமக்கு எப்போதும் இரகசியமாமாம்.

III. அற்புதத்தைக் குறித்து கடந்தகாலத்து வித்துவான்கள் சொல்வதேன்ன? ஆதித் திருச்சபைகாலத்தில் ஒருவனும் அற்புதம் உண்மையென்பதை ரூபிக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. அற்புதம் உண்மையாய் நடந்தது என்று எல்லாரும் ஒத்துக்கொண்டார்களே. அவிசுவாசிகளின் நிராகரிப்புக்கு எதிராக அற்புதம் நடக்கக் கூடுமென்று முதன்மையாய் உறுதி சொன்னவர் ஓரிகேன் (*Origen* கி-பி. 185-254). அற்புதம் சிருஷ்டியின் முறைமைக்கு வேறுபாடல்லாமல் சிருஷ்டியின் முறைமைக்கு மேலானதேயென்று முதன்மையாய்ச் சாதித்தவன் அவனே. அகுஸ்தீன் (*Augustine* கி-பி. 354-430) அற்புதத்தை மெய்ப்பிக்க உலகத்திலுள்ளவையும் நடந்தவையு மெல்லாம் அற்புதம், அதாவது கடவுள் செய்த செயலென்று கற்பித்தான். அதிசயம் சிருஷ்டி முறைமைக்கு விரோதமன்றி சிருஷ்டி முறைமையைப்பற்றிய நமது அறிவுக்கே விரோதமென்று சொன்னான். அற்புதம் உண்டாவதெப்படி என்ற வினவுக்கு அவன், கடவுள் உலகத்தைப் படைத்தபொழுது அதில் அற்புத விதைகளை விதைத்துவிட்டார். எற்றகாலத்தில் இந்த விதைகள் தானாய் முளைக்க அற்புதங்கள் நேர்ந்தன என்றான். இந்த உபதேசத்தாலே கடவுள் உலகத்தைப் படைத்து இயங்கப் பண்ணிய பின் அதைக் கவனிக்காமல் விட்டாரென்று சொல்லும் பொய்ப் போதகம் (*Deism*) உண்டாயிற்று. அதுமுதல் வித்துவான்கள் அற்புதம் என்பதற்கு வேறு அர்த்தம் சொன்னார்கள். அல்பெர்டு மக்னு (*Albertus*

Magnus கி-பி. 1193-1280) என்பவனும், தோமா அக்வீனே (*Thomas Aquinas* கி-பி. 1225-1274) என்பவனும், அற்புதம் சிருஷ்டிப் பிரமாணங்கள் ஒழிந்த சம்ப வங்களேயன்றி சிருஷ்டிப் பிரமாணங்களை அழிக்கும் செயலுமாம் என்று போதித்தார்கள். அவர்களைப்போல் ரோமைச் சமயத்தை எதிர்த்த சுவிசேஷ மார்க்கத்தின் முதன்மையான வேத சாஸ்திரிகளும் சொன்னார்கள். இந்தப் போதகத்துக்கு எதிர்த்து நின்ற முதலானவர் ஸ்பினோஸா (*Spinoza* கி-பி. 1632-1677) என்ற தத்துவ சாஸ்திரி. அவர் அவிசுவாசி, எல்லாம் தெய்வம் (*Pantheism*) என்று சொன்னவன். அவன் போதனையாவது: எல்லாம் தேவமானால் சிருஷ்டிப் பிரமாணங்களும் தேவம்; அப்படியிருக்க தேவன் சிருஷ்டிப் பிரமாணங்களை விரோதித்தால் தம்மையே விரோதிப்பார்; அது முடியாதகாரியமாகையால் அற்புதம் கிடையாது; அற்புதங்கள் நேரிடுமென்று சொல்பவர் தேவதூஷணம் சொல்வார்கள். ஏனென்றால் தேவன் அற்புதங்கள் செய்வாரென்று சொல்லலும் அவர் முதலில் உலகத்தைப் பிழையின்றிப் படைக்கவில்லையாகையால் அவர் அதைப் பிற்பாடு அற்புதங்களால் சீர்திருத்த வேண்டியதாயிற்றென்று சொல்லலும் இரண்டும் ஒன்றுதான். அவனைப் போலவே டேவிட் ஹூம் (*David Hume* கி-பி. 1711-1776) சாதித்து, அற்புதங்கள் சம்பவிக்குமென்று விசுவாசிக்கும் விசுவாசமானது மூடபக்தி யென்றான். இவ்விரண்டு விசுவாசமற்ற வித்துவான்களைப்போல் முக்கியமாக டேவிட் பிரேடரிக் ஸ்திரவுஸ் (*David Frederick Strauss* கி-பி. 1808-1874) என்பவனும் எர்னெஸ்ட் ரேனான் (*Earnest Renan* கி-பி. 1823-1892) என்பவனும் அற்புதமில்லை யென்று சொன்னார்கள். இவர்கள் சொன்ன நியாயங்களுக்கு என்ன சொல்லுவோம்? அற்புதம் சிருஷ்டிப் பிரமாணங்களை அழிக்கும் செயலென்ற தப்புக்கோட்பாட்டைக் கவிழ்ப்பது தவிர இவர்கள் சொன்ன நியாயங்கள் நாம் மேற்கூறிய சரியான கோட்பாட்டைத் தொலைக்க முடியாது.

IV. **அற்புதங்கள் அவசியமா?** நம்மைப் போல கேவல மனிதனாய் இவ்வுலகத்தில் தோன்றின கிறிஸ்துவே தேவன் என்று எதினால் அறிவோம்? விசேஷமாக, அவர் மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்ததினாலேதான். இதைப்பற்றி **இயேசுவின் உயிர்த்தெழுதல்** என்னும் நிபந்தத்தில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. அவர் உயிர்த்தெழுதல் முற்றான அற்புதமென்பது தெளிவு 1கொரி. 15[14, 17, 19]. சிலர் இதற்கு ஆக்ஷேபம் சொல்வதுண்டு.

1. கிறிஸ்துமார்க்கம் மனத்துக்குரியமார்க்கமேயன்றி வேறன்று. தேவன் புறம்பான அடையாளங்களால் சிருஷ்டியின் முறைமையில் தலையிடுவது தகுதியல்லவென்பார்கள். இதற்கு ஆக்ஷேப சமாதானமென்ன? அப்படிச்சொல்பவர்கள் கடவுள் சிருஷ்டியிலிரார் என்று சொல்வார்போலும். கடவுள் உலகத்தினுள்ளுமிருக்கிறாரே. அவருக்குச் சித்தான உலகம் அசித்தான உலகம் என்ற வேறுபாடில்லை. சித்தாசித்தில் தொழில் செய்கிறார். இல்லையெனில், அவர் எல்லாம் நிறைந்தவருமல்ல எல்லாம் வல்லவருமல்ல கடவுளுமல்ல. மேலும், தேவன் அசித்தான உலகத்தைக் கேட்டுக்காக வேண்டி சிருஷ்டிக்கவில்லை. அசித்தான உலகத்தையும் இரட்சணியத்துக்காக வேண்டியே சிருஷ்டித்தார். ரோ 8[19-21]. சடத்துக்குரிய சம்பவங்களுமெல்லாம், இரட்சிப்பின்பொருட்டே செய்த தெய்வீக அற்புதங்களனைத்தும் இரட்சிப்புக்காக நேரிடும்.

2. மற்றவர்கள் கடவுள் அதிசயங்களைச் செய்வாரெனில் அவர் முகாந்தரமின்றி அடிக்கொரு நினைவாய் தாமே சிருஷ்டித்த சிருஷ்டியின் முறைமையில் தலையிடுவார் என்பது போலும்; அப்படிச் சொல்வது கடவுளை இகழ்வதாமென்று ஆக்ஷேபிப்பார்கள். இதற்கென்ன சொல்வோம்? கடவுள் இளவழிபாடுள்ளவரல்ல. உலகத்தோற்றத்துக்கு முன்னே இரட்சணியத்தைக் கருதின அவர் ஒவ்வொரு அற்புதத்தையும் முன் நியமித்தார். அப் 15[18]. அவர் விடாப்பிடியும் நிலையுமுள்ள மாறாதவரானதாலே அவர் அற்புதம் செய்வது அவசியம். தேவனுக்கு யேகோவா ('இருக்கிறவராக இருக்கிறேன்.' யாத் 3[14] எபி 13[8]) என்ற பெயர் நியாயமென்பதற்கு அற்புதங்கள்தான் ரூபகாரம். எப்படியெனில், பாவம் நுழைந்த மனிதர்கள் கடவுள் அருளின இரட்சணிய தீர்மானத்திற்கு எவ்வளவு விரோதமாயிருந்தாலும், அவரது எண்ணத்தைக் கெடுக்க எவ்வளவு முயன்றாலும், அவர் உறுதியுடன் தமது எண்ணத்தை நிறைவேற்றுகிறவர் என்பது அற்புதங்களாலே விளங்கும். கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்த அதே நிலைமையில் உலகம் இப்போது இல்லையென்று நாம் மனதில் வைக்கவேண்டுமே. கடவுள் சுயாதீன சித்தமுள்ளவனாகப் படைத்த மனிதன் அவருக்கு எதிர்த்துப் பாவத்தில் நுழைந்து, கடவுள்செய்த பேரின்ப தீர்மானத்தைக் கெடுத்

தான். பாவத்தினிமித்தமும் தமது இரட்சணிய ஆலோசனை நிறைவேறவும் கடவுள் பலத்த செய்கைகளாகிய அற்புதங்களாலும், முக்கியமாகத் தமது ஒரே பேருன குமாரனை அனுப்புதலாகிய மகா பெரிய அற்புதத்தாலும், உலகத்துக்கு இரட்சிப்பை யுண்டு பண்ண வேண்டியதாயிற்று.

V. **அற்புதம் நடக்கக் கூடுமா?** கடவுள் எல்லாம் வல்லவராகையால் அவர் அற்புதம் செய்யக் கூடியவர். அவர் அற்புதங்களை நடப்பிக்குங்கால் அவர் சிருஷ்டிப் பிரமாணங்களை அழிக்காமல் அவற்றைத் தமது நோக்கத்திற்கேற்க இணைத்துக் கையாளுவார் என்று பார்த்தோம். இப்படி அவர் சிருஷ்டியின் சாதாரணமுறைமைக்கு வேறுபாடானவற்றை மாற்றி அதை அற்புதவண்ணமாய் நடப்பிப்பாரென்பது மெய்தான். ஆகிலும் இது கடவுளால் ஏலாதென்ருல் கடவுள் மனிதரையும் மிருகங்களையும் பார்க்க வல்லமை குறைந்தவர் என்பதாம். மனிதரும் மிருகங்களும் பலதரம் சிருஷ்டியின் சாதாரண முறைமையைப் பலவாருக மாற்றுவதுண்டு. திருஷ்டாந்தமாக, ஓர் புல் முளைத்து வளர்ந்து பூத்து உலர்ந்து சாவது சிருஷ்டியின் சாதாரண முறைமை. மாடு இளம் புல்லைக் கடித்துத் தின்ருல் அது சிருஷ்டிப் பிரமாணத்தை அழிக்குமா? இல்லை. அது இன்னொரு சிருஷ்டிப் பிரமாணத்தால் சிருஷ்டியின் சாதாரண முறைமையை மாற்றுகிறதல்லவா? மனிதன் தரையிலிருந்து பற்பல கல் கலந்த பொன் உண்டை எடுத்துத் தீயில் போட்டு அதைக் களிம்பறச் சுத்திகரித்து நாணயமாக்குவான். அப்படிச் செய்வதால் அவன் ஒரு சிருஷ்டிப் பிரமாணத்தை இன்னொரு சிருஷ்டிப் பிரமாணத்தால் மாற்றுவானல்லவா? அப்படியே வைத்தியன் மருந்து கொடுத்து வியாதியைத் தீர்த்துச் சிருஷ்டியின் சாதாரண முறைமையை மாற்றுவான். இதெல்லாவற்றையும் நாம் நமது புலன்களாலும் விவேகத்தாலும் உணர்ந்தறியக் கூடியதால் அது நமக்கு அதிசயமாகத் தோன்றுகிறதில்லை. கடவுள் அற்புதம் செய்தால் அவர் ஒரு காரியத்துக்காக வேண்டிச் சிருஷ்டியின் முறைமையை மாற்றிச் சிருஷ்டிப் பிரமாணங்களைத் தம் விருப்பத்துக்கு ஏற்றபடி இணைத்து அப்படியே முன்னே காணுத புதுமையை உண்டாக்குவார். இதை நாம் நமது புத்தியாலும் ஐம்புலன்களாலும் உணர்ந்தறியக் கூடாதபடியால் அற்புதம் என்று சொல்வோம். கடவுளுக்கு அது ஆச்சரியமல்ல. சிருஷ்டியின் மேற்பூச்சு நமக்கு ஒருவாறு தெரிகிறதொழிய அதன் இயல்பு தெரியாது. சிருஷ்டிப் பிரமாணங்களெல்லாம் நமக்குத் தெரியுமா? சில மாத்திரம் நமக்குத் தெரியும். மேலும் நமது அறிவு அநேக விஷயங்களில் பிழையுள்ளதென்று பல முறை நமக்குப் புலப்படும். நாம் ஓயாமல் தப்பெண்ணங்களை அகற்றிப் புதிய காரியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். உதாரணமாக, கொபர்நிக்கு (*Copernicus*, கி-பி. 1473-1543) என்ற வானசாஸ்திரி காலத்துக்குமுன் அனைவரும் சூரியன் பூமியைச் சுற்றுகிறதென்று நினைத்தார்கள். அவன் மூலமாய் பூமி சூரியனைச் சுற்றுவது சிருஷ்டிப் பிரமாணமென்று கற்றுக்கொண்டோம். முன்னே, ஒளி திண்பொருளை ஊடுருவிச்செல்லமுடியாதென்று எண்ணினேம். ரொந்தகன் (*Roentgen* கி-பி. 1845 பிறப்பு) என்ற வித்துவானே முதன்மையாய் கனத்தமரக்கதவினூடே படங்களைப் பிடித்து ஒளி திண்பொருளையும் ஊடுருவிச் செல்லு மென்று மெய்ப்படுத்தினன். நமது அறிவு எவ்வளவு ஓங்கினலும் நாம் ஓர் புதுமை காணுமிடத்து இதனல் சிருஷ்டிப் பிரமாணமொன்று கெட்டுப்போயிற்றென்று சொல்லக்கூடாது. ஆபிரிக்காக் கண்டத்தில் ஒருவன் சீமை நாட்டில் சிலவேளை தண்ணீர்மேல் மாட்டுவண்டி போகக் கூடியவண்ணமாகத் தண்ணீர் சீதளத்தால் கல்லைப் போல் இறுகிப்போகுமென்று சொன்ன போது அத்தேசத்தார் அவன் தங்களுக்குப் பொய் சொல்லிக்கேலிசெய்வதாக நினைத்து அவனை அடிக்கப் போனர்கள். ஆலாங்கட்டி எப்படி யுண்டாகுமென்று அவர்கள் அறியாததால் அப்படி இருக்காதென்று எண்ணினர்கள். அற்புதம் எப்படியாமென்று நாம் அறியாததால் கடவுள் அற்புதம் செய்ய முடியாதென்பது கல்வியீனமுள்ள அத்தேசத்தாரின் அறியாமையைப்போலொத்தது. மனிதன் சில விஷயங்களில் தன் புத்தியால் சிருஷ்டியைக் கையாளக் கூடியவனயின் எத்தனைக் கதிகமாகச் சருவ ஞானமும் சருவ வல்லமையும் நிறைந்த கடவுள் பிரபஞ்சத்தைக் கையாளுவார். அதுவுமன்றிக் கடவுள் மனிதரைப்போல அசித்துப் பொருளுக்குப் புறம்பானவரு மல்லாமல் அசித்துப் பொருளிலும் அவர் இருப்பவராம். ஆகவே கடவுள் இருக்கிருரென்பது எவ்வளவு நிச்சயமோ, அற்புதம் நடக்கக்கூடும் என்பதும் அவ்வளவு நிச்சயம். அற்புதம் இல்லை என்று ஒருவன் சொன்னல் கடவுள் இல்லையென்று சொல்லவும் வேண்டும். ஆகையால் அற்புதம் நடக்கக் கூடுமென்பதை நாஸ்திகர் (*Atheists*) இடத்தில் ரூபிக்க முடியாது.

எனினும், அவர்களும் அற்புதம் இல்லை என்று சொல்லாமல் இருக்கமாட்டார்கள். உயிரினாலே உயிருண்டாகு மென்பது ஒரு சிருஷ்டிப் பிரமாணம். முதலில் உயிர் உலகத்தில் வந்ததெப்படி யென்று நாஸ்திகர்களைக் கேட்டால், அவர்கள் எங்களுக்குத் தெரியாதென்றும்; அல்லது, ஆதிகாலத்தில் பிறகு ஒருபோதும் உண்டாகாத வண்ணமாகவும் நமக்கு விளங்காத வண்ணமாகவும் தற்செயலாய் உயிர் உண்டாயிற்றென்றும் சொல்வார்கள். சிருஷ்டிப் பிரமாணங்களைத்தவிர மீண்டும் அப்படியே உண்டாகாதவாறும் நமக்கு விளங்காதவிதமாயும் நடந்த இச்சம்பவத்திற்கு அற்புதமேயொழிய வேறென்ன பெயர்? ஆகவே நாஸ்திகரும் அற்புதம் உண்டு என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அவிசுவாசி அற்புதம் தற்செயலென்பான். விசுவாசி அற்புதம் தேவ செயலென்பான். அவர்கள் இருவரில் உண்மையை அறிந்தவன் யார்?

VI. தற்காலமும் அற்புதம் நடக்குமா? கிறிஸ்து தமது சீஷருக்கு அவர்களும் அற்புதம் செய்வார்களென்று வாக்களித்து, தாம் செய்த அற்புதங்களைவிடச் சிறப்பான அதிசயங்களைச்செய்வார்களென்று உறுதி சொன்னார். யோவா 14^{12} மத் 17^{20} மு. தற்காலமோ அற்புதங்கள் கிடையாது. ஆகவே, தற்காலம் கிறிஸ்துமார்க்கத்தில் சரியான விசுவாசமில்லை என்று சிலர் சொல்வதுண்டு. இதற்கென்ன சொல்வோம்? முதலாவது, இக்காலத்தில் அற்புதம் அரிதாயினும் அற்புதம் இல்லை யென்று சொல்லக்கூடாது. இரண்டாவது, சத்திய வேதத்தின்படி அற்புதம் செய்யும் வரம் கடவுள் விசுவாசிகளனைவருக்கும் கொடுத்ததல்ல. அற்புதம் செய்யும் வரம் இரட்சிப்படையும் விசுவாசத்திற்கு அறிகுறியல்ல, அது திருச்சபையை ஸ்தாபித்த காலததிலே சிலருக்கு மாத்திரம் அளித்த வரம். அக்காலத்தில் அது வேண்டியதாயிற்று. பிற்காலத்திலோ அவசியமில்லை. அப்படியே பவுல் அப்போஸ்தலன் கடைசியாய்த் தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் எழுதின நிருபங்களிலே சபையில் வேலைசெய்யும் தேவ ஊழியருக்கு அற்புதம் செய்யும் திறமை அவசியமென்று சொல்லவில்லை. மேலும் கிறிஸ்து மாற் 4^{26-29}-ல் சொன்ன உவமையால் திருச்சபையுண்டான காலத்திற்குப்பின் நீடிய காலமாக வல்லமைகள் நடக்காது என்று காட்டுகிறார். வேளாண்மைக்குப் பருவங்களுண்டு. அவையாவன: விதை விதைக்கிற காலம், பயிர் விளைகிற காலம், விளைவு சேர்க்கிற காலம். விதை விதைக்கிற காலத்தில் மனிதன் கைப்பாடு படவேண்டியது. பயிர் விளைகிற காலத்தில் அவன் ஒன்றுஞ் செய்ய அவசியமில்லை. நிலம் தானாகவே முளை கதிர் தானியம் இவற்றைக் கொடுக்கும். விளைவு சேர்க்கிற காலத்தில் மனிதன் மறுபடியும் கைப்பாடு படவேண்டியது. அப்படித் திருச்சபைக்கும் மூன்று காலம் உண்டு. அவை யாவன: திருச்சபை உண்டாகும் காலம், திருச்சபை வளருங் காலம், திருச்சபை மோட்சம் சேருங் காலம். திருச்சபை உண்டான காலத்தில் கடவுள் கையிட்டு அற்புதங்களால் காரியப்படுத்த வேண்டியதாயிற்று. திருச்சபை வளருகிற தற்காலத்தில் அற்புதங்கள் தேவையில்லை. திருச்சபை மோட்சம் சேரும் காலமாகிய கிறிஸ்து மறுபடியும் வரும் காலத்தில் கடவுள் மீண்டும் அற்புதங்களைச் செய்வார். அதைப்போலப் பவுல் அப்போஸ்தலனும் 1 கொரி 13^{8}-ல் அற்புதங்கள் ஒய்ந்திருக்கும் காலம் வருமென்று சொல்லுகிறான். யோவா 14^{12}-ல் இயேசுநாதர் தம்மை விசுவாசிக்கிறவர்கள் தாம்செய்தகிரியைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளைச் செய்வார்களென்பது மெய். அவைகளாவன: சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், விசுவாசத்தைப் பிறப்பித்தல், மோட்சத்தை அளித்தல் முதலியவை. லூத்தர் (*Luther* கி-பி. 1483-1546) சொல்லுகிறபடி இவைகளே தேவனுடைய சரியான முக்கிய அற்புதங்கள். இவ்வற்புதங்கள் தினந்தோறும் நடக்கும்.

அற்புதங்கள். Miracles.

பழைய ஏற்பாட்டிற் சொல்லியிருக்கும் அற்புதங்கள்

சோதோம் கொமோரா அழிக்கப்பட்டது. ஆதி 19^{24}.

லோத்தின் மனைவி உப்புத்தூண் ஆனது. ஆதி 19^{26}.

ஈசாக்கின் பிறப்பு. ஆதி 21^{1}.

எரிகிற முட்செடி வெந்துபோகாதது. யாத் 3^{3}.

ஆரோனுடைய கோல் சர்ப்பமாக மாறினது. யாத் 7^{8}.

பத்து வாதைகள்.

1. நதி ரத்தமாய் மாறினது. யாத் 7^{19}.
2. தவளைகள். யாத் 8^{1}.
3. தூசி பேனாக மாறினது. யாத் 8^{16}.
4. திரளான வண்டுகள். யாத் 8^{21}.

5. மிருகங்கள்மேல் அனுப்பப்பட்ட கொள்ளைநோய். யாத் 9^{1}.
6. கொப்புளங்கள். யாத் 9^{8}.
7. கல்மழை. யாத் 9^{13}.
8. வெட்டுக்கிளிகள். யாத் 10^{9}.
9. காரிருள். யாத் 10^{21}.
10. முதற்பேறுகள் கொல்லப்படுதல். யாத் 12^{29}.

செங்கடல் வறண்டுபோனது. யாத் 14^{21}.

மாராவின் தண்ணீர் தித்திப்பானது. யாத் 15^{23}.

மன்னாவை அனுப்பினது. யாத் 16^{14}.

ரெவிதீமில் கல்மலையில் தண்ணீர் சுரந்தது. யாத் 17^{5}.

தபேராவில் மூண்ட அக்கினி. எண் 11^{1}.

நாதாபும் அபியூவும் அழிக்கப்படுதல். லேவி 10^{1}.

கோராகைப் பூமி விழுங்கினது. மற்றவர்களை அக்கினி பட்சித்தது. எண் 16^{31}.

ஆரோனின் கோல் துளிர்த்தது. எண் 17^{8}.

மேரிபாவிலே தண்ணீர் புறப்படச்செய்தது. எண் 20^{7}.

வெண்கலச் சர்ப்பத்தைப் பார்த்துச் சுகமடைந்தது. எண் 21^{8}.

பிலேயாமின்கழுதைபேசினது. எண் 22^{21}.

யோர்தான் நதி இண்டாகப் பிரிந்தது. யோசு 3^{14}.

எரிகோவின் அலங்கம் விழுந்தது. யோசு 6^{20}.

சூரியனும் சந்திரனும் நின்றது, கல்மழை. யோசு 10^{12}.

சிம்சோனின் பலம். நியா 14-16 அதி.

லேகியில் தண்ணீர் ஓடிவந்தது. நியா 15^{19}.

தாகோன் விழுந்தது. மூலவியாதி. 1 சாமு 5^{1}.

பெத்ஷிமேசூராருக்கு வந்த வாதை. 1 சாமு 6^{19}.

இடிமுழக்கம். 1 சாமு 7^{10}.

இடிமுழக்கமும் மழையும். 1 சாமு 12^{18}.

முசுக்கட்டைச் செடியில் இரைச்சல். 2 சாமு 5^{23}.

ஊசா அழிக்கப்பட்டது. 2 சாமு 6^{6}.

யெரொபெயாமின்கைமரத்துப்போனது. 1 இரா 13^{4}.

பனியும்மழையும்பெய்யாதது. 1 இரா 17^{1}.

காகங்கள் எலியாவைப் போஷித்தது. 1 இரா 17^{4}.

கைம்பெண்ணின் மாவும் எண்ணெயும். 1 இரா 17^{14}.

அவளுடைய மகன் உயிரோடு எழுப்பப்பட்டது. 1 இரா 17^{17}.

வானத்திலிருந்து அக்கினி வந்தது. 1 இரா 18^{17}.

மழை வருஷித்தது. 1 இரா 18^{41}.

அக்கினி சேனைத்தலைவர்களைப் பட்சித்தது. 2 இரா 1^{10}.

எலியா யோர்தானைப் பிரித்தது. 2 இரா 2^{8}.

எலியா அக்கினி ரதத்தின்மேல் பரமண்டலத்திற்கு ஏறிப்போனது. 2 இரா 2^{11}.

எலியா யோர்தானைப் பிரித்தது. 2 இரா 2^{14}.

உப்பு ஜலம் நல்ல தண்ணீரானது. 2 இரா 2^{22}.

கரடிகள் வாலிபரை அழித்தது. 2 இரா 2^{24}.

எலிசா தேசத்தைத் தண்ணீரினால் நிரப்பினது. 2 இரா 3^{20}.

எலிசா கைம்பெண்ணின் எண்ணெயை அதிகரிக்கச் செய்தது. 2 இரா 4^{7}.

சூனேமியாளுக்குப் புத்திர பாக்கியம். 2 இரா 4^{8}.

சூனேமியாளின் மகனை உயிரோடு எழுப்பினது. 2 இரா 4^{32}.

நஞ்சு கலந்த கூழைச் சுத்தமாக்கினது. 2 இரா 4^{38}.

நூறு மனிதர்களுக்குப் போஷித்தது. 2 இரா 4^{42}.

நாகமான் சொஸ்தமானது. 2 இரா 5^{14}.

கேயாசி குஷ்டரோகியானது. 2 இரா 5^{17}.

ஜலத்தில் இரும்பு மிதந்தது. 2 இரா 6^{5}.

சீரிய ராஜாவின் ஆலோசனையை வெளிப்படுத்தினது. 2 இரா 6^{8}.

சேனையின் கண்களைக் குருடாக்கினது. 2 இரா 6^{18}.

சேனைகள் கண்பார்வை அடைந்தது. 2 இரா 6^{20}.

எலிசாவின் எலும்பினால் பிரேதம் உயிர் அடைந்தது. 2 இரா 13^{21}.

சனகெரிப்புடைய சேனை அழிதல். 2 இரா 19^{35}.

சூரிய சாயை பின்னிடச்செய்தது. 2 இரா 20^{9}.

உசியா குஷ்டரோகத்தினால் வாதிக்கப்பட்டது. 2 நாளா 26^{19}.

அக்கினியிற் போடப்பட்ட மூன்று வாலிபர் வெந்து போகாதது. தானி 3^{19}.

தானியேல் சிங்கக்குகையிலிருந்து இரட்சிக்கப்பட்டது. தானி 6^{16}.

யோனா மச்சத்தின் வயிற்றிலிருந்து இரட்சிக்கப்பட்டது. யோனா 2^{10}.

புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கும் அற்புதங்கள்

(i) **மத்தேயு** சுவிசேஷத்தில்மாத்திரம் சொல்லியிருக்கும் அற்புதங்கள் மூன்று:

இரண்டு குருடர் பார்வை அடைந்தது. 9^{27}.

ஊமையனைப் பேசச்செய்தது. 9^{32}.

வரிப்பணம். 17^{24}.

(ii) **மாற்கு** சுவிசேஷத்தில் மாத்திரம் சொல்லியிருக்கும் அற்புதங்கள் இரண்டு:

செவிடனும் தெத்துவாயனு மானவனைக் குணமாக்கினது. 7^{31}.

பெத்சாயிதாவில் குருடன் ஒருவனுக்குப் பார்வை யளித்தது. 8^{22}.

(iii) **லூக்கா** சுவிசேஷத்தில் மாத்திரம் சொல்லியிருக்கும் அற்புதங்கள் ஏழு:

இயேசு ஜனங்கள் நடுவினின்று கடந்துபோனது. 4^{30}.

மீன்கள் அகப்பட்டது. 5^{4}.

நாயீனூர் விதவையின் மகனை உயிரோடு எழுப்பினது. 7^{11}.

கூனியைக் குணமாக்கினது. 13^{11}.

நீர்க்கோவையுள்ளவனைக் குணமாக்கினது. 14^{1}.

பத்துக் குஷ்டரோகிகளைக் குணமாக்கினது. 17^{11}.

மல்குவின் அறுபட்ட காதைச் சொஸ்தப்படுத்தினது. 22^{50}.

(iv) **யோவான்** சுவிசேஷத்தில்மாத்திரம் சொல்லியிருக்கும் அற்புதங்கள் ஏழு:

தண்ணீரை ரசமாக்கினது. 2^{1}.

அதிகாரியினுடைய மகன் சொஸ்தமானது. 4^{46}.

38 வருஷம் வியாதியாயிருந்தவன் சொஸ்தமானது. 5^{1}.

இயேசு தேவாலயத்தில் ஜனங்கள் நடுவினின்று மறைந்துபோனது. 8^{59}.

பிறவிக்குருடன் பார்வை அடைந்தது. 9^{1}.

லாசருவை உயிரோ டெழுப்பினது. 11^{38}.

153 மீன்கள் அகப்பட்டது. 21^{1}.

(v) **மத்தேயு, மாற்கு** சுவிசேஷங்களில் சொல்லியிருக்கும் அற்புதங்கள் மூன்று:

சீரோபேனிக்கேயாளின் மகளைப் பிடித்த அசுத்த ஆவியை நீக்கினது. மத் 15^{28} மாற் 7^{24}.

நாலாயிரம்பேர் போஷிக்கப்பட்டது. மத் 15^{32} மாற் 8^{1}.

கனியற்ற அத்திமரத்தைச் சபித்தது. மத் 21^{18} மாற் 11^{12}.

(vi) **மத்தேயு, லூக்கா** சுவிசேஷங்களில் சொல்லியிருக்கும் அற்புதங்கள் இரண்டு:

நூற்றுக்கு அதிபதியினுடைய வேலைக்காரனைச் சொஸ்தமாக்கினது. மத் 8^{5} லூக் 7^{1}.

பிசாசு பிடித்த ஊமையும் குருடுமானவனைக் குணமாக்கினது. மத் 12^{22} லூக் 11^{14}.

(vii) **மாற்கு, லூக்கா** சுவிசேஷங்களில் சொல்லியிருக்கும் அற்புதம் ஒன்று:

ஜெப ஆலயத்தில் பிசாசு பிடித்தவனைச் சொஸ்தமாக்கினது. மாற் 1^{23} லூக் 4^{33}.

(viii) **மத்தேயு, மாற்கு, லூக்கா** சுவிசேஷங்களில் சொல்லியிருக்கும் அற்புதங்கள் பத்து:

பேதுருவின் மாமியைக் குணமாக்கினது. மத் 8^{14} மாற் 1^{30} லூக் 4^{38}.

கடலின் கொந்தளிப்பை அமர்த்தினது. மத் 8^{23} மாற் 4^{37} லூக் 8^{22}.

லேகியோன் என்னும் பேய்பிடித்தவனைக் குணமாக்கினது. மத் 8^{28} மாற் 5^{1} லூக் 8^{26}.

குஷ்டரோகியைச்சொஸ்தமாக்கினது. மத் 8^{2} மாற் 1^{40} லூக் 5^{12}.

யவீரின் மகளை உயிரோடெழுப்பினது. மத் 9^{23} மாற் 5^{23} லூக் 8^{41}.

பெரும்பாடுள்ளவளைச் சொஸ்தம் ஆக்கினது. மத் 9^{20} மாற் 5^{25} லூக் 8^{43}.

திமிர்வாதக்காரனைச் சொஸ்தமாக்கினது. மத் 9^{2} மாற் 2^{3} லூக் 5^{18}.

சூம்பின கையையுடையவனைச் சொஸ்தமாக்கினது. மத் 12^{10} மாற் 3^{1} லூக் 6^{6}.

சந்திரரோகியைக் குணமாக்கினது. மத் 17^{14} மாற் 9^{14} லூக் 9^{37}.

எரிகோவில் குருடர்களுக்குப் பார்வை அளித்தது. மத் 20^{29} மாற் 10^{46} லூக் 18^{35}.

(ix) **மத்தேயு, மாற்கு, யோவான்** சுவிசேஷங்களில் சொல்லியிருக்கும் அற்புதம் ஒன்று:

இயேசு கடலின்மேல் நடந்தது. மத் 14^{25} மாற் 6^{48} யோவா 6^{15}.

(x) நாலு சுவிசேஷங்களிலும் சொல்லியிருக்கும் அற்புதம் ஒன்று:

5000 பேரைப் போஷித்தது. மத் 14^{15} மாற் 6^{30} லூக் 9^{10} யோவா 6^{1}.

அற்போனா. **Harbona.** ஒரு அண்ணகன். எஸ்தர் 1^{10} 7^{9}.

அனதேமா. **Anathema.** 1 கொரி 16^{22}. **சாபத்தீடு** காண்க.

அனனியா. **Hananiah Onanias.** [யேகோவா கிருபையுள்ளவர்].

1. எருசலேமின் மதிலை மறுபடியும் கட்டினவர்களி லொருவன். நெகே 3^{23}.

2. ஒரு ஊர். நெகே 11^{32}.

3. முதற் கிறிஸ்தவ சபை உண்டான போது அதில் தான் செய்த வஞ்சகத்தால் கொலையுண்ட மாயக்காரன். அப் 5 அதி.

4. பவுல் குணப்பட்ட சமயத்தில் கடவுளால் அறிவிக்கப்பட்டு வந்து பவுலுக்கு போதனை செய்த அந்தியோகியாவிலுள்ள சீஷன். அப் 9^{10} 22^{12}.

5. கி-பி. 57-ஆ பவுல் எருசலேம் பட்டணத்தில் பிடிக்கப்பட்டபோது சதுசேய கொள்கை யுடையவனும் அதிக லோபியும் குரூரனுமான ஒரு பிரதான ஆசாரியன். இவன் பரி. பவுலுக்கு விரோதமாய்ப் பிராது செய்தவன். கி-பி. 66-ஆ சண்டை தொடங்கினபோது இவன் ரோமருக்குச் சார்பாய் நின்றதினாலே மற்ற யூதர்கள் இவனைக் கொன்றுபோட்டார்கள். அப் 23^{2} 24^{1}.

6. 1 நாளா 8^{24}.

7. 1 நாளா 25^{4}.

8. 2 நாளா 26^{11}.

9. கள்ளத்தீர்க்கதரிசி. எரே 28^{11}.

10. பிரபு. எரே 36^{12}.

11. எரே 37^{13}.

12. 1 நாளா 3^{19}.

13. நெகே 12^{12}.

14. நெகே 7^{2}.

15. =சாத்ராக். தானி 1^{7}.

அனகாராத். **Anaharath.** யோசு 19^{19}.

அனமீம். **Anamim.** எகிப்து தேசத்தைச் சேர்ந்த ஒரு ஜாதி ஜனம். இவர்களைப் பற்றி நமக்குத் தெளிவாய் ஒன்றும் தெரியாது. ஆதி 10^{13}.

அனமெயேல். **Hannamel.** எரேமியாவின் பெரிய தகப்பனாகிய சல்லூமின் குமாரன். எரே 32^{7}.

அனயா. **Anaiah.** [யேகோவா பதில் சொன்னார்]. நெகே 8^{4}.

அனனி, ஆனனி. **Hanani.** ஐந்து பெயர்.

1. நெகே 1^{2}.

2. 1 நாளா 25^{4}.

3. 1 இரா 16^{1}.

4. எஸ்றா 10^{20}.

5. நெகே 12^{36}.

அனனெயேல். **Hananel.** [கடவுள் கிருபையுள்ளவர்]. எருசலேம் அலங்கத்தின் மேலுள்ள கோபுரம். நெகே 3^{1}.

அனியாம். **Aniam.** 1 நாளா 7^{19}.

அனூப். **Anub.** 1 நாளா 4^{8}.

அன்பு. **Love.**

I. பழைய ஏற்பாடு.

பழைய ஏற்பாட்டில் இதற்கு வழக்கமாய் மூலபாஷையில் ஒரே பதம் சொல்லியிருக்கிறது. ஆனால் மொழி பெயர்த்தவர்கள்: அன்பு, ஆசை, சிநேகம், நேசம், பட்சம், பிரியம் என்னும் பெயர்ச்சொற்களையும், அன்புகூர நேசிக்க முதலான வினைச் சொற்களையும் மூலபதத்திற்குச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்பதம் மூன்று விஷயங்களைக் குறிக்கிறது.

1. ஆசை. 2 சாமு 13^{4} 1 இரா 11^{1} எரே 2^{33}.

2. சிநேகம், குடும்பச் சிநேகம். ஆதி 22^{2} 25^{28} யாத் 21^{5} 1 சாமு 18^{16} 2 சாமு 1^{26} ரூ.

3. ஆவிக்குரிய அன்பு, ஞான அன்பு. எபிரெயர் கடவுள் தமது ஜனங்களை நேசிக்கிறார் என்றும், அவருடைய ஜனங்கள் அவரை நேசிக்கவேண்டும் என்றும் உறுதியாய் நம்பினார்கள். எசா 62^{3-5} 63^{7-10} ஓசி 2^{14-23} 11^{1-4}.

a. கடவுள் இஸ்ரவேலரையும் நீதிமான்களையும் நேசிக்கிறார். உபா 4^{33} 7^{7} 1 இரா 10^{9} ஓசி 3^{1} 9^{15} 11^{4} 14^{4} செப் 3^{17} எரே 2^{2} எசா 43^{4} 48^{14} 63^{9} மல்கி 1^{2} சங் 11^{7} 47^{4} 78^{68} 87^{2} 146^{8} நீதி 3^{12} 8^{17} 2 நாளா 2^{11}. இஸ்ரவேல் ராஜ்யத்திற்கு அழிவும் அந்த ஜனங்களுக்கு அடிமைத்தனமும் நேரிட்ட காலங்களில் கடவுள் காட்டின அன்பைக்குறித்துத் தீர்க்கதரிசிகள் அதிகமாய் உரைத்திருக்கிறார்கள். ஓசியாவிலும் எசாயா இரண்டாம் பாகத்திலும் நாம் இதைத் தெளிவாய்க் காணலாம்.

b. இஸ்ரவேலரும் நீதிமான்களும் கடவுளை நேசிக்கிறார்கள். யாத் 20^{6} உபா 6^{5} நெகே 1^{5} 1 இரா 3^{3} சங் 5^{11} 31^{23} 116^{1} 119^{97} மீகா 6^{8}.

அன்பைக் குறிக்கும் வேறு பதங்கள். உபா 7^{7} 33^{12} சங் 91^{14} எசா 5^{1} உன்னத 1^{13}.

II. புதிய ஏற்பாடு.

பழைய ஏற்பாட்டில் கடவுளின் அன்பைப்பற்றி முன் சொன்ன வண்ணமாய் அநேக வசனங்களில் சொல்லியிருந்தாலும் அன்பு என்பதினால் தீமை செய்தவர்களின் மேலுள்ள கடவுளுடைய இரக்கம் முக்கியமாய் விளங்குகிறதென்று பழைய ஏற்பாட்டு ஆக்கியோன்கள் நினைத்தார்கள் எனத் தெரியவரும். புதிய ஏற்பாட்டில் பரி. பவுல்

அன்பைப்பற்றிப் பேசும்போது அதினல் வழக்கமாய் கடவுளை விசுவாசித்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றப் பிரயாசப்படுகிறவர்களுக்கு அவர் அருளும் கிருபையைக் குறிக்கிருன். பரி. யோவான் தேவனை நம்பினவர்களுக்கு அவர் காட்டும் சிநேகத்தைக் குறிக்கிருன்.

புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் அன்புக்கு மூலபாஷையில் உள்ள இரண்டு பதங்களை உபயோகிக்கிருர்கள்.

1. *Agape.* இது நல் உதவி, நற்கிரியை புரியும் உத்தம அன்பைக் குறிக்கிறது. யோவான் எழுதின நிருபத்தில் அன்பு, நேசம் என்பதைக் காட்டுவதற்கு இந்த நேர்த்தியான பதம் எப்பொழுதும் உபயோகிக்கப் பட்டிருக்கிறது. மத் 5^{43-48} 22^{37-39} லூக் 6^{27} யோவா 3^{16} 11^{5} 13^{24} ரோ 13^{8} 1கொரி 8^{3} கலா 2^{20} 1பேது 1^{22} 1யோவா 2^{10}.

2. *Philia.* சிநேகிதன் சிநேகிதனுக்குக் காட்டும் நட்பு அல்லது பிரியம். மத் 10^{37} யோவா 5^{20} 11^{3} 12^{25} 16^{27} 20^{2} 21^{15} 1 கொரி 16^{22}.

அன்பைப்பற்றிய வேறே வாக்கியங்கள்.

கடவுள் அன்பாகவே யிருக்கிருர். 1 யோவா $4^{8.16}$. தேவனுடைய அன்பு மனுஷ அறிவுக்கு எட்டாதது. யோவா 3^{16}. உன்னதமானது. 1 யோவா 3^{1}. இலவசமாய் அருளப்படுவது. யோவா 17^{23}. தேவன் பாவிகளை ரட்சிக்கும்படிக்குக் காட்டின அன்பு. ரோ $5^{5.8}$.

கிறிஸ்துவின் அன்பு. மாற் 10^{21} யோவா 11^{23} 15^{13} ரோ 8^{36} 2 கொரி 5^{14} எபே 3^{19} $5^{2.25}$ வெளி 1^{6} 1 யோவா 3^{16}

சபையின் அன்பு. மத் 24^{12} யோவா 21^{15} ரோ 12^{9} 2 கொரி $8^{8.24}$ எபே 1^{15} 5^{2} 1 யோவா 2^{15} $4^{16.19}$ 5^{3} வெளி 2^{4}.

ஒருவரிலொருவர் கூரும் அன்பு. யோவா 13^{35} 15^{17} கொலோ 1^{3} 1 பேது 1^{22} எபி 10^{24} 13^{1} 1 யோவா 4^{18} 3^{16}.

போதகர் சபையினிடத்தில் கூரும் அன்பு: 1 கொரி 16^{24} 2 கொரி 2^{4}. சபையார் போதகரிடத்தில் கூரும் அன்பு. 2 கொரி $8^{7.8}$ 1 தெச 5^{13} தீத் 3^{15}.

அன்பு விசுவாசத்தைச் சிறப்பிக்கும். கலா 5^{6}. சத்தியத்தின்பேரிலுள்ள அன்பு. 2 தெச 2^{10} எபே 4^{15}.

பேதுரு அப்போஸ்தலன் கிறிஸ்துவை மூன்றுதரம் மறுதலித்தபடியினலே அவர் மூன்றுதரம் சீமோனே, என்னில் அன்பு கூருகிருயா என்று கேட்டார். யோவா 21^{15}.

மனைவியின்மேலுள்ள ஆசை. கொலோ 3^{19} எபே $5^{25.28}$. அன்பில்லார். யோவா 5^{22}.

அன்பு விருந்து. Love Feast. கிரேக்கு பாஷையில் இதற்கு 'அகபே' (*Agape*) அதாவது 'அன்பு' என்று பெயர். கிறிஸ்தவ மார்க்கம் உற்பத்தியானகாலத்தில் ரோம ராஜ்யத்தின் பல இடங்களில் புறமதஸ்தர்கள் நடத்தின சங்கங்கள் அநேகம் இருந்தன. இவைகளைச் சேர்ந்தவர்கள் குறித்த நாட்களில் விருந்துபண்ணுவது வழக்கம். இவ்விதமாய் ஒரு பொதுவிருந்து வைப்பது கிறிஸ்தவ சபையாருக்குள்ளும் உண்டானது. அவர்கள் இந்த விருந்தில் தங்கள் ஐக்கியத்தைக் காட்டினபடியால் இதற்கு 'அன்பின் விருந்து' என்று அர்த்தங்கொள்ளும் 'அகபே' என்னும் பெயர் இடப்பட்டது. பொது விருந்தும் நற்கருணையும் வெவ்வேருய் இருந்தும், பொதுவிருந்திலே சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு நற்கருணை பரிமாறப்படும். பொது விருந்துக்குக் கிறிஸ்தவர்கள் வந்தபிறகு பிரசங்கிமார் பிரசங்கம் செய்வார்கள். அப் 2^{46} 20^{7} 1 கொரி 11^{21}.

இந்த விருந்து நடத்தப்பட்ட விதத்தைப்பற்றி இரண்டாம் நூற்ருண்டிலிருந்த தெர்த்துல்லியன் என்பவன் கிறிஸ்துமார்க்க விரோதிகளுக் கெழுதின புஸ்தகத்திற் சொல்லுகிறதாவது: நாங்கள் எங்கள் விருந்துகளைச் செருக்காய்ச் செய்கிருேம் என்று நீங்கள் சொல்லும் பழி தகாது. எங்கள் விருந்துக்குப் பேரே 'அன்பு' (**அகபே**). அதில் நாங்கள் எவ்வளவு செலவழித்தாலும் அதனல் பக்தி வளருமாகையால் எங்களுக்கு அது லாபமே. அதில் நாங்கள் ஏழைகளுக்கு உதவிசெய்து அவர்கள் பசியை ஆற்றுகிருேம். அதிலே அசுத்தமும், தாறுமாறும் எவ்வளவேனுமில்லை. ஏனெனில் கடவுளுக்கு விண்ணப்பம் செய்யுமுன்னே நாங்கள் (பந்தியில்) உட்காருகிறதில்லை. இரவிலே நாங்கள் கடவுளுக்கு ஆராதனை செய்யவேண்டியவர்களென் றறிந்து தகுதியான பிரகாரமாகவே நாங்கள் பசியை யாற்றச் சாப்பிட்டு ஒழுக்கமுடையவர்போல அளவாய்ப் பானம் பண்ணுகிருேம். நாங்கள் கடவுளுடைய சந்நிதானத்தில் இருக்கிறவர்கள்போலப் பேசுகிருேம். கை கழுவித் தீபங்கள் ஏற்றினபின்பு ஒவ்வொருவரும் வேத சங்கீதமாவது, சுயமாய் இயற்றின கீர்த்தனையாவது, கடவுளுக்கு ஸ்தோத்திரமாகப் பாடுகிறதுண்டு; அதனல் அவனவன் அளவுக்கு மிஞ்சிப் பானம் பண்ணவில்லை என்று தோன்றும். எங்கள் விருந்து ஜெபத்தோடே ஆரம்பிப்பதுபோல ஜெபத்தோடு முடியும். பிறகு அவ்விடம் விட்டு சண்டை சச்சரவு செய்யாமலும் சந்திப்போரனைவரையும் உதா

சனித்துச் சிற்றின்ப உல்லாசத்திற் பிரவேசிக்காமலும், சரீர முயற்சிக்கடுத்த விருந்துண்டோர்போல் அல்ல, ஞானபோஜனம் பண்ணினவர்கள்போல ஒழுக்கமும் கற்புமுடையோராய் நடக்கப் பந்தியினின்று கலைந்துபோகிறோம்.

இந்தமாதிரியான பொது விருந்திற்கு வந்தவர்கள் சமயாசமயத்தில் எல்லாவற்றையும் ஒழுங்கின்படி நடத்திக்கொள்ளவில்லை. 1 கொரி 11^{17-34}. கள்ளப் போதகர்கள் சிலர் முறைமைக்கு விரோதமானவைகளைச் செய்தார்கள். யூதா 1^{12} 2 பேது 2^{23}.

வேலை முடிந்தபிறகு, சாயங்காலங்களில் இந்த விருந்து செய்யப்பட்டதினால் புறமதஸ்தர்கள் இதைப்பற்றி மார்க்கத்தின்பேரிலே ஆக்ஷேபனை பண்ணினார்கள். ஆதலால் பொது விருந்துகள் செய்கிற வழக்கம் ஒழிந்துபோனது. பிறகு நற்கருணை பொது விருந்தில்லாமல் செய்யப்பட்டது.

தற்காலத்தில் மொரேவியர்களுக்குள்ளும், மெதொடிஸ்ற் சங்கத்தாருக்குள்ளும் அன்பின் விருந்து என்று சொல்லப்படும் ஆராதனை நடத்தப்படுகிறது. அதற்கு வருகிறவர்கள் பொது விருந்தை ஞாபகப்படுத்தும்படி கொஞ்சந் தண்ணீரும், அப்பத்துண்டும் சாப்பிட்டுச் சங்கீதம்பாடி ஜெபம்பண்ணிப் பக்திக்குரிய அனுபவத்தைச் சொல்லுவார்கள். இதைத் திரும்ப ஸ்தாபனம் செய்வதற்கு உவெஸ்லி ஐயர் பிரயாசப்பட்டார். பல இடங்களில் அப்பமும் தண்ணீரும் இல்லாமல் நடத்தப்படும் அனுபவசாட்சி ஆராதனைக்கு இந்தப் பெயர் வழங்கப்படும்.

அன்றேனீக்கு. Andronicus. [ஜெயவீரன்]. ரோமாபுரியிலுள்ள சபையில் சிறந்தவர்களில் இவன் ஒருவன். அக்காலத்தில் ரோமருடைய ராயனின் பரிவாரத்தில் இப்பெயர்கொண்ட ஒருவன் இருந்தான். இவன் அவனாயிருக்கலாம். ரோ 16^{7}.

அன்னத்தோன். Hannathon. யோசு 19^{14}.

அன்னமலேக்கு. Anammelech. ஒரு தேவதை. 2 இரா 17^{31}. **அந்ரமலேக்கு** காண்க.

அன்னா. Annas. கி-பி. 6-15-வரை பிரதான ஆசாரியன். அவ்வருஷத்தில் ரோம அதிபதி இவனை உத்தியோகத்திலிருந்து தள்ளினும் இவன் எருசலேமில் அதிக அதிகாரம் உடையவனானதினால் இயேசுவைப் பிடித்தவர்கள் பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடம் கொண்டுபோகிறதற்கு முந்தி அன்னாவிடம் அவரைக் கொண்டுபோனார்கள். யோவா 18^{13} மு. இவன் பேதுரு யோவான் இவர்களுடைய விசாரணையில் அதிகாரம் உடையவனானான். அப் 4^{6}. இவன் சதுசேயன். பலிக்கு வேண்டியவைகள் இவன் கைவசத்திலும் இவன் பிள்ளைகளுடைய கைவசத்திலும் இருந்ததினால் இவர்கள் அவைகளில் வியாபாரஞ்செய்து அதிக ஆஸ்திக்காரர் ஆனார்கள். இயேசு தேவாலயத்திலிருந்து வியாபாரிகளைத் துரத்தினது, இவனுக்கு விசனத்தை உண்டாக்கியிருக்கும்.

அன்னாள். Hannah, Anna. [கிருபை].

1. சாமுவேலின் தாய். 1 சாமு 1^{2}.

2. வயோதிபமான தீர்க்கதரிசியானவள். லூக் 2^{36}.

அன்னியேல். Hanniel. [கடவுளின் கிருபை].

1. எண் 34^{23}.

2. ஒரு வீரன். 1 நாளா 7^{39}.

அன்னியோன்னியம். Fellowship. **ஐக்கியம்** காண்க.

ஆ.

ஆகாக். Agag. சவுல் ஜெயித்துப் பிடித்து வந்த அமலேக்கியரின் இராஜாவாகிய இவனைச் சாமுவேல் கொன்றான். 1 சாமு 15 அதி.

ஆகாசுடைய சூரிய கடியாரம். Sundial of Ahaz. 2 இரா 20^{11}. **எசேக்கியா** காண்க.

ஆகாஸ். Ahaz. [இவன் பிடித்திருக்கிறான்]. கி-மு. 734-715-வரை யூதாவின் ராஜா. இஸ்ரவேல் ராஜாவாகிய பெக்காவும் சீரிய ராஜாவாகிய ரேத்சீனும் திகிலாத்பிலேசர் ஆகிய அசீரியா ராஜாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போனபோது இவனும் துணையாக அவர்களோடு போகாததினால் அவர்கள் இவன்மேல் கோபங்கொண்டு எருசலேமுக்கு விரோதமாய்ப் படை எடுத்து வந்தார்கள். அப்போது ஏசாயா அவர்களுக்கு பயப்படாமல் திடமன்தாயிருக்கும்படி சொல்லியும் இவன் அசீரியா ராஜாவுக்குத் தன்னைக் கீழாக்கி அவன் உதவியைத் தேடினான். 2 இரா 16 அதி. ஏசா 7 அதி. அசீரியா ராஜா சீரியரை ஜெயிக்கும்போது அசீரியாவின் ஆலயங்களில் இருக்கும் பலிபீடங்களைப்போல எருசலேம் தேவாலயத்திலும் புதுப் பலிபீடத்தை இவன் கட்டினான். இவன் ஆண்டகாலத்தில் இவனோடு எசேக்கியா பத்து வருஷங்களாக உடன் ராஜாவாயிருந்தான்.

ஆகாபு. Grass-hopper. லேவி 11^{22}. **கிளி** காண்க.

ஆகாப். Ahab.

1. ஏறக்குறைய கி-மு. 875-853-வரை அரசாண்ட இஸ்ரவேலரின் ராஜாவாகிய ஆகாப் பல விஷயங்களிலும் திறமையுள்ளவன். பேனிக்கேயரின் ராஜாவோடு இவன் உடன்படிக்கைபண்ணி அவனுடைய மகளாகிய யேசபேலை விவாகஞ்செய்தான். 1 இரா 16^{31}. பிறகு யூதாவின் ராஜாவாகிய யோராமோடு உடன்படிக்கை செய்து அவனுக்குத் தன் குமாரத்தியைக் கொடுத்தான். 2 இரா 8^{18}. இவன் மகா ஐசுவரியவானாயிருந்து தனக்காகத் தந்தத்தினால் மாளிகை ஒன்று கட்டினான். 1 இரா 22^{39}. இவன் சீரியர்களோடு பலதடவை யுத்தஞ்செய்தபோது முதலில் சீரிய ராஜாவாகிய பெனாதாத் இவனை ஜெயித்தான். 1 இரா 20^{2}. இதைக்கண்டு இவன் அதிக பிரயத்தனஞ்செய்து பெனாதாத்தை ஜெயித்து அவனைச் சிறைபிடித்துப் போனான். அந்த நாட்களில் அசீரியர்கள், சீரிய ராஜ்யத்திற்கும் இஸ்ரவேல் ராஜ்யத்திற்கும் விரோதமாய்ப் படையெடுக்கப் போகிறார்கள் என்று நினைத்து, ஆகாப் பெனாதாத்தை விடுதலைசெய்து அவனோடு உடன்படிக்கை பண்ணினான். 1 இரா 20^{34}. கி-மு. 854-வரை இவர்கள் ஒன்றாய்ச்சேர்ந்து அசீரியா ராஜாவாகிய இரண்டாம் சல்மனாசாரை ஜெயித்தார்கள். இதற்குப் பிறகு சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் விரோதம் மறுபடியும் உண்டானபோது ஆகாப் தன் தேசத்தைக் காக்கும்படி அவர்களோடு செய்த யுத்தத்தில் மாண்டுபோனான். 1 இரா 22^{31}. ஆகாப் தீரத்தில் பெரிய அரசனாயினும் இவனுடைய மனைவியாகிய யேசபேல் பாகாலை வணங்கினதினாலும், அவள் இவனையும் அதற்கு இசையும்படி செய்ததினாலும் ஜனத்திற்கு அதிக நஷ்டம் நேரிட்டது. இதினிமித்தம் இவன் காலத்தில் யேகோவாவின் மார்க்கத்துக்கும் பாகாலின் மார்க்கத்துக்கும் விரோதம் உண்டானது. பாகால் பக்கத்தில் யேசபேலும் ஆகாபின் கூட்டத்தாரும், யேகோவாவின் பக்கத்தில் தீர்க்கதரிசியாகிய எலியாவும் சில பக்தரும் இருந்தார்கள். 1 இரா 17-19 அதி. இந்த விரோதம் இஸ்ரவேல் ராஜ்யம் அழியுமட்டும் இருந்தது. இவன்மேல் யேசபேலுக்கு இருந்த அதிகாரத்தைப்பற்றி நாபோத்தின் சரித்திரத்தை வாசித்தால் தெரியும். 1 இரா 21 அதி.

2. ஒரு கள்ளத் தீர்க்கதரிசி. எரே 29^{21}.

ஆகாயம். வானம், வானலோகம், பரம், பரமண்டலம். எபிரெயர் இந்த உலகம் ஒரு பெரிய சமபூமி என நினைத்தார்கள். இதின் கீழ்ப்பக்கம் இறந்துபோனவர்கள் இருக்க வேண்டிய பள்ளத்தாக்கு. உபா 32^{22} நீதி 15^{24}. பூமிக்குமேலே தேவனும் தேவதூதர்களும் உயிர்த்தெழுந்த பக்தர்களும் இருப்பார்கள். ஆதி 28^{12} உபா 26^{15} மத் 22^{30}. வானத்தைத் தாங்கும்படி தூண்கள் இருக்கின்றன. 2 சாமு 22^{8}. வானத்திற்குப் பலகணிகள் உண்டு. ஆதி 8^{2}. வானத்திலிருந்து மழை (உபா 11^{7}) உறைபனி (ஏசா 55^{10}) மின்னல் (2 இரா 1^{10}) இடிமுழக்கம் (2 சாமு 22^{14}) உண்டாகின்றன. வானத்தில் சூரிய சந்திர நட்சத்திரங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஆதி 1^{17}.

எபிரெயர் பல வானங்கள் உண்டு என்று நினைத்தார்கள். உபா 10^{14}. உன்னத வானம் அரசனின் மாளிகையைப்போல இருக்கிறதென்றும், அதிலே கடவுள் ஒரு அரசனைப் போல் சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து எல்லாவற்றையும் பார்க்கிறார் என்றும் எண்ணினார்கள். சங் 11^{4} ஏசா 63^{15}.

யூத சாஸ்திரிகள் வானங்கள் ஏழு என்று நினைத்தார்கள். இதினிமித்தம் பவுல் 'மூன்றாம் வானம்' என்று சொல்லியிருக்கிறான். வழக்கமாய் மூன்றாம் வானத்திற்குப் பரதீசு என்று பெயர். 2 கொரி 12^{2}. நீதிமான்கள் பரமண்டலத்திற்குப் போவார்கள் என்று புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் நம்பினார்கள். யோவா 14^{2} எபே 3^{14} 1 பேது 1^{4}.

வானத்திலுள்ளவைகளைப்பற்றி வெளிப்படுத்தலில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. ஆனால் இவ்விபரமெல்லாம் அவ்வவ் வஸ்துவின் பொருள் அளவில் அல்ல ரூபகமாயும் உபமானமாயும் சொல்லியிருக்கிறது என்று நாம் நினைக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டில் வானம் இடத்தைக் குறித்தாலும் புதிய ஏற்பாட்டில் அது இடமோ (அப் 1^{10}), கதியோ என்பதைப் பற்றியும்; மரித்தவுடனே மனுஷர் அதை அடைவார்களோ அல்லது கிறிஸ்து திரும்பி வந்த பிற்பாடுதான் அதை அடைவார்களோ என்பதைப்பற்றியும் தீர்மானமாய்ச் சொல்லியிருக்கவில்லை.

யூதர்கள் இயேசுவிடம் இதைப்பற்றி விசாரித்தபோது (மாற் 12^{25}), அவர் அதைக்குறித்துப் பூரணமாய்ச் சொல்லாததினாலே நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் கடவுளுடைய சித்தத்தை நாம் நிறைவேற்றப் பிரயாசப்படுவது முக்கியம் என்பதையும், பரத்தைப்பற்றி அவ்வளவு விசாரிக்க வேண்டியதில்லை.

என்பதையும் தெரிவித்திருக்கிறர். **ஆதேஸ்** காண்க.

ஆகாய். Haggai.

1. தீர்க்கதரிசி. கி-மு. 536-ஆ யூதர்கள் பாபிலோனியாவிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிவரும்போது இவனும் அவர்களோடு வந்தான். யூதர்கள் அங்கே வந்தவுடனே தேவாலயத்தைக் கட்டத் தொடங்கி பதி னைந்து வருஷமாக அதை முடிக்கப் பிர யாசப்படவேயில்லை. இதினிமித்தம் கி-மு. 520-ஆத்தில் ஆகாயும் சகரியாவுமாகிய தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு இதைப்பற்றி நல்ல வைராக்கியம் உண்டாகப் போதித்தார் கள். அந்த வருஷம் யூதர்கள் கணக்கின்படி ஆறும் மாதம் அதாவது புரட்டாசியில் ஆகாய் பிரசங்கம் துவங்கி அதை ஒன்பதாம் மாதத்தில் முடித்தான். இதைவிட வேறொரு விசேஷமும் ஆகாயைப்பற்றிச் சொல்லி யிருக்கவில்லை.

2. ஆகாயின் தீர்க்கதரிசனம் நாலுபாக மாய்ப் பிரிக்கப்படும். (*a*) 1 அதி. (*b*) 2^{1-9}. (*c*) 2^{10-19}. (*d*) 2^{20-23}.

யூதர்கள் அடிமைத்தனத்தில் விக்கிரகாரா தனையிலிருந்து முழுவதும் விலகியிருந்ததி னுல் ஆகாயின் புஸ்தகத்தில் அதைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லியிருக்கவில்லை. சகரியா, மல்கியா இவர்களைப்போல் ஆகாய் சன்மார்க்க காரியங்களைக் குறித்து அவ்வளவு ஒன்றும் பேசவில்லை. தேவாலயத்தைச் சீக்கிரமாய்க் கட்டி முடிக்கவேண்டுமென் னும் நோக்கமே இவனிடம் இருந்ததென்று இவன் எழுதினவற்றால் தெரிகிறது.

ஆகாரம். Food.

1. எபிரெயர் குடும்ப விருந்து செய்யும் போதும், அகதிகளுக்கு விருந்து செய்யும் போதும், பலிசெலுத்தும் போதும் மாமிச மும் மற்றக்காலங்களில் பெரும்பாலும் தாபர பதார்த்தங்களும் சாப்பிடுவார்கள். ஆதியில் எல்லாரும் மாமிசம் சாப்பிடவில்லை என் பது முன்னோரின் அபிப்பிராயம். ஆதி 1^{29}. பிற்காலத்தில் இதை விட்டுச் சாப்பாட்டில் சம்பிரமமாய் இருந்தார்கள். தாவீது அரச னுக்கும் சாலொமோன் அரசனுக்கும் இட்ட போஜனுதிகளைப் பார்த்தால், இதைப்பற்றித் தெரியவரும். 2 சாமு 17^{28} 1 இரா 4^{22}.

2. எபிரெயர்கள் முக்கியமாய்க் கோது மை, வாற்கோதுமை, வறுத்தகோதுமை, 'வாற்கோதுமை அப்பங்கள்' இவைகளைச் சாப்பிட்டார்கள். ரூத் 2^{14}.

3. பலவிதமான பயறு சாப்பிட்டார்கள். 2 சாமு 17^{28} எசே 4^{9}. ஏசாவுக்கு யாக்கோபு கொடுத்த 'சிவப்பான கூழ்' வெண்காயம், கீரை முதலியவை போட்டுச் செய்யப்பட்ட 'பயற்றங்கூழ்' தான். ஆதி 25^{29}. எகிப்து தேசத்திலுள்ள கீரைவகைகள் பல கானான் தேசத்தில் பயிரிட்டிருந்தார்கள். எண் 11^{5} நீதி 15^{17}. இவைகளில் 'கசப்பான கீரை' (யாத் 12^{8}), 'கடுகு' (மத் 13^{31}) முதலிய பலவித மான கீரைகளே.

4. ஒலிவமரத்தின் பழங்களையும் எண் ணெயையும் (யாக் 3^{12}), அத்திப்பழ அடை களையும் (1 சாமு 25^{18} எரே 24^{2}), திராக்ஷப் பழ வற்றலையும், திராக்ஷப்பழ ரசத்தையும், பேரீச்சம்பழத்தையும் பலவிதமான வாதுமை முதலிய கொட்டைகளையும் சாப்பிட்டார் கள். காணாமல்போன மகன் சாப்பிட்ட 'தவிடு' என்னவென்றால் ஒருவகை மரத் தின் கொட்டையின் கோது அல்லது தோல்.

5. சுத்தமான மிருகம் பட்சிகளின் மாமி சம்மாத்திரம் சாப்பிடுகிறதற்கு உத்தரவு இருந் தது. லேவி 11^{23} உபா 14^{4}. பெரும்பாலும் வெள்ளாடு, செம்மறியாடு, மாடு, மாட்டுக் கன்று இவைகளின் மாமிசம் சாப்பிட்டார் கள். 1 இரா 4^{22}. பன்றி, ஒட்டகம், முயல், கழுதை இவைகளை எபிரெயர் ஒருபோதும் சாப்பிடமாட்டார்கள். உபா 14^{8}.

6. பலவிதமான மச்சங்களைச் சாப்பிட் டார்கள். உபா 14^{9}.

7. காடை, கவுதாரி, கோழி, பெரிய வாத்து முதலிய பறவைகளையும் (உபா 14^{11-18}), குருவிகளையும் (மத் 10^{29}) சாப்பிட்டார்கள்.

8. சீரியர் அசீரியர் எபிரெயர் ஒருவித மான வெட்டுக்கிளிகளைச் சாப்பிட்டார்கள். லேவி 11^{22} மத் 3^{4}.

9. பால் வெண்ணெய் முட்டை வழக்க மாய்ச் சாப்பிடுவார்கள்.

10. வெண்காயம், மிளகு, சீரகம், உப்பு, உளுந்து முதலியவற்றைப் பதார்த்தங்களுக் குச் சுவை கொடுப்பதற்கு வழக்கமாய் உப யோகிப்பார்கள்.

11. எபிரெயர்கள் ஒருபோதும் ரத்தம், குடல், சில கொழுப்பு, தானாய் இறந்து போன மிருகங்கள், காட்டுமிருகங்களினால் கொல்லப்பட்டவைகளாகிய இவைகளைச் சாப் பிடமாட்டார்கள். லேவி 3^{3} 17^{15} உபா 12^{16} 14^{21}. **போஜனம்** காண்க.

ஆகாரியர். Hagarites. அரபியர்களில் அல்லது சீரியர்களில் யோர்தான் நதிக்குக் கிழக்கே வசித்த ஒரு கோத்திரம். 1 நாளா 5^{10}.

ஆகார். Achar. [கலங்கப்பண்ணுகிற வன்]. ஆகான் இஸ்ரவேலைக் கலங்கப்பண் ணினதினால் ஆகோர் என்னும் பள்ளத்தாக்

கிலே கொல்லப்பட்டான். இதற்காக இவன் பெயரை மாற்றி ஆகார் என்று எழுதினர்கள். யோசு 7 அதி. **ஆகான்** காண்க.

ஆகார். Hagar. [அன்னியன்]. சாராளின் அடிமைப் பெண். சாராளுக்குப் பிள்ளையில்லாத காலத்தில் அத்தேச வழக்கப்படி அவள் இவளைத் தன் புருஷனுகிய ஆபிரகாமுக்கு மறு மனையாட்டியாகக் கொடுத்தாள். ஆதி 16^{1} 21^{9} 25^{12} கலா 4^{22}.

ஆகான். Achan. [ஒருவேளை இதின் அர்த்தம் கலக்கம்]. சாபத் தீடானதை எடுத்தவன். யோசு 7 அதி. **ஆகார்** காண்க.

ஆகி. Haggi. [பண்டிகை கொண்டாடுகிறவன்]. காத் வம்சத்தான். எண் 26^{15}. = அகி. ஆதி 46^{16}.

ஆகிமோத். Ahimoth. 1 நாளா 6^{25}.

ஆகிலா. Hachilah. எபிரோனுக்குத் தெற்கேயுள்ள ஒரு மலை. 1 சாமு 23^{19}.

ஆகீசு. Achish. பெலிஸ்தருடைய காத் என்னும் பட்டணத்தின் அரசன். 1 சாமு 21^{10}.

ஆகீத். Haggith. [பண்டிகைக் குரியது]. அதொனியாவின் தாய். 2 சாமு 3^{4} 1 இரா 1^{5}.

ஆகீம். Achim. ஒரு வேளை ஆகீம், யோயாக்கீம் இவ்விரண்டும் ஒன்றுதான். மத் 1^{14}.

ஆகூர். Agur. நீதி 30-ம் அதிகாரத்திலுள்ள வசனங்களை இயற்றினவன்.

ஆகே. Agee. 2 சாமு 23^{11}.

ஆகேர். Aher. [இன்னொருவன்]. 1 நாளா 7^{12}.

ஆகோர் Achor. [கலகம்]. எரிகோ பட்டணத்திற்கு மேற்கிலுள்ள இந்தப் பள்ளத்தாக்கிலே எபிரெயர் ஆகானைக் கொன்றார்கள். யோசு 7^{26}.

ஆக்கில்லா, பிரீஸ்கில்லா. Aquila, Priscilla. புருஷனும் மனைவியும் ஆகிய இவர்கள் ரோமாபுரியிலிருந்து துரத்தப்பட்டு (அப் 18^{2}), கொரிந்து பட்டணத்திற்கு வந்து அங்கே பவுலைச் சந்தித்து அவனோடே எபேசுவுக்குப் போனார்கள். அப் 18^{18} 1 கொரி 16^{19}. அங்கே அப்பொல்லோவைக் கண்டு அவனுக்கு உபதேசித்தார்கள். கி-பி. 57-ஆண்டில் இவர்கள் மறுபடியும் ரோமாபுரியில் இருந்தார்கள். ரோ 16^{13}. எட்டு அல்லது ஒன்பது வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் எபேசு பட்டணத்திற்குப் போனார்கள். 2 தீமோ 4^{19}.

ஆக்கினை, உபத்திரவம், தண்டனை, வேதனை. Punishment, Torture. பழைய ஏற்பாட்டில் ஒருவன் மற்றவனுக்குச் சேதஞ் செய்தால் அதற்குப் பதிலாக இவனும் சேதம் அடையவேண்டும். யாத் 21^{23}. அல்லது ஒருவன் இன்னொருவனிடத்திலிருந்து ஒரு பொருளை அபகரித்தால் அதற்குப் பதிலாக அபகரித்த பொருளிலும் அதிகமாய்க் கொடுக்கவேண்டும். யாத் 22^{1-4}. இந்தவிதமாகவே எபிரெயர்களும் சுற்றியிருக்கும் தேசத்தி லுள்ளவர்களும் குற்றவாளிகளைத் தண்டித்துவந்தார்கள். வேதாகமத்திற் சொல்லியிருக்கும் தண்டனை, வேதனைகளில் முக்கியமானவைகள்:

1. கல் எறிதல். விக்கிரகாராதனைக்கும் இன்னும் 17 குற்றங்களுக்கும்: லேவி 24^{14} உபா 17^{7}.

2. தீயிற்போடல். முறைகேடான குற்றத்திற்கு. லேவி 21^{9}.

3. தூக்குதல். எகிப்து, பெர்சியா தேசங்களில் செய்த தண்டனை. ஆதி 40^{22} எஸ்தர் 7^{10}.

4. கழுவேற்றுதல். உபா 21^{22}.

5. சிலுவையில் அறைதல். இது ரோமர்கள் அதிக ஈனமான அடிமைகளுக்கிடும் தண்டனை. குற்றவாளியை முதலில் அடித்துச் சிலுவைமரத்தில் கைகளிலும் கால்களிலும் ஆணியறைவார்கள். சிலவேளை கைகளையும் கால்களையும் சிலுவையோடு கயிற்றினுற் கட்டுவார்கள். யோவா 19^{23} பிலி 2^{8}.

6. சிரச்சேதம் செய்தல். மத் 14^{10}.

7. மலைச் சிகரத்திலிருந்து கீழே தள்ளி விழுத்தல். 2 நாளா 25^{12}.

8. வாளால் அரிதல். எபி 11^{37}.

9. அடித்தல். யூதர்கள் ஒன்று குறைய நாற்பது அடி சவுக்கினுல் அல்லது பிரம்பினுல் அடிப்பார்கள். உபா 25^{3} அப் 22^{19}.

10. ரோமர் பிரம்பினுல் மிதமிஞ்சி அடித்தல் வழக்கமான ஒரு தண்டனை. அப் 16^{22}.

11. ரோமர் வாரினுல் அடிப்பது அதிக பயங்கரமானது. ஏனென்றால் வாரின் அந்தத்தில் எலும்புகளும் ஈயக்குண்டுகளும் கட்டியிருக்கும். யோவா 19^{1} அப் 22^{24}.

12. தொழுமரத்தில் மாட்டுதல். அப் 16^{24}.

13. ரோமத்தைப் பிய்த்தல். நெகே 13^{25}.

14. கண்ணைப் பிடுங்குதல். நியா 16^{21}.

15. கை காலின் விரல்களைத் தறித்தல். நியா 1^{5}.

16. முள்ளுகளாலும் குறடுகளாலும் வாதித்தல். நியா 8^{16}.

17. சிறையிற் போடுதல். இது பலவிதமாயிருந்தது. சிறைச்சாலைகளுக்கு உட்காவல் அறைகள் இருந்தன. அப் 16^{29}. அங்

த் தேசங்களிலுள்ள சிறைச்சாலைகள் அதிக அசங்கியமாயும் அகோரமாயு மிருந்தன.

ஆசகேல். Asahel. [கடவுள் செய்வோன்].

1. தாவீதின் சகோதரி மகன். 2 சாமு 2^{18}.

2. நியாயப்பிரமாணிகனுகிய ஒரு லேவியன். 2 நாளா 17^{8}.

3. காணிக்கை பார்க்கிற லேவியன். 2 நாளா 31^{13}.

4. இன்னெருவன். எஸ்ரு 10^{15}.

ஆசகேல். Hazael. சீரியரின் ராஜா. ஏறக்குறைய கி-மு. 844-ஆம் ஆண்டில் தனக்கு முன்னிருந்த அரசனைக் கொன்று போட்டுத் தனக்குப் பட்டம் சூடினவன். பின்னுல் வரும் வசனங்களைக்கொண்டு இவன் சரித்திரத்தை அறியலாம். 1 இரா 19^{15} 2 இரா 8^{8-29} 9^{14} 10^{32} 12^{17} 13^{3-25}.

ஆசரிப்புக் கூடாரம். Tabernacle. **கூடாரம்** காண்க.

ஆசவேல். ஆசகேல் காண்க.

ஆசனம். சிம்மாசனம், ராஜாசனம். Seat, Throne. பழைய ஏற்பாட்டில்: மேன்மைக்குரிய விசேஷித்த ஆசனம் ஆசாரியர்களுக்கும் (1 சாமு 1^{9}), நியாயாதிபதிகளுக்கும் (சங் 94^{20}), சேனுதிபதிகளுக்கும் (எரே 1^{15}) பெரும்பாலும் ராஜாக்களுக்குமுண்டு. சாலொமோன் கட்டின சிம்மாசனத்தின் விபரம் 1 இரா 10^{18}-ல் சொல்லியிருக்கிறது. தேவனுடைய சிம்மாசனத்தைப்பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறது. சங் 9^{7} ஏசா 6^{1}. வழக்கமாய் 'ஆசனம்' என்னும் பதம் மகிமை அல்லது அதிகாரம் என்று கருதுகிறது. 2 சாமு 7^{16} சங் 45^{6}. 'கொடுங்கோலாசனம்.' சங் 94^{20}.

வேத சாஸ்திரிகள் சிலர் தூதர்களில் ஒரு வகுப்பைச் 'சிங்காசனங்கள்' என்று சொன்னுர்கள். கொலோ 1^{16}.

புதிய ஏற்பாட்டில்: பெரும்பாலும் கடவுளுடைய சிம்மாசனத்தைப்பற்றியும் இயேசு கிறிஸ்துவின் சிம்மாசனத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிறது. மத் 5^{34} எபி 4^{16} வெளி 1^{4}. கிருபாசனம். எபி 8^{1}. கிறிஸ்தவர்கள் இவ்விதமாய் இயேசு கிறிஸ்துவினுடைய ராஜரீகத்தைப்பற்றிப் பேசுவது ரோம ராஜாங்கத்தார் கிறிஸ்து மார்க்கத்தை வெறுப்பதற்குக் காரணமாயிருந்தது.

ஆசனம். மோசே உட்காரும் ஆசனம். Moses' Seat. வேதபாரகர் தாங்கள் செய்த பிரமாணங்கள் முதன்மையானவைகள் என்றும், யாவரும் அவைகளின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியவேண்டும் என்றும் விரும்பி மோசேயின் அதிகாரத்தைக் குறைத்துத் தங்களைச் சிறப்பித்து, நியாயஸ்தலத்திலிருந்து மோசேயை நீக்கி அவனுக்குப் பதிலாகத் தாங்களே நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கிறதுபோலக் காட்டினுர்கள். மத் 23^{2}.

ஆசா. Asa.

1. யூதாவின் ராஜாவாகிய ஆசா கி-மு. 918-877-ஆம் அரசாண்டான். இவன் புறமதங்களுக்குச் சார்பாய் இருந்த தன் பிரஜைகளைக் கடவுளுக்குரிய மெய்ப்பக்தியில் மறுபடியும் சேர்ப்பதற்கு மிகவும் பிரயாசப்பட்டான். இவன் யுத்தத்தில் மிகவும் திறமையுள்ளவன். 1 இரா 15^{8-24} 2 நாளா 14^{1} 16^{13}.

2. ஒரு லேவியன். 1 நாளா 9^{6}.

3. *Azzah.* பெலிஸ்தரின் ஒரு ஊர். உபா 2^{23}.

ஆசாசோன் தாமார். Hazazon Tamar. = என்கேதி. 2 நாளா 20^{2}.

ஆசாஸ். Azaz. 1 நாளா 5^{8}.

ஆசாப். Asaph. [சேர்க்கிறவன்].

1. 2 இரா 18^{18}.

2. இராஜாவின் வனத்துக்குக் காவலாளன். நெகே 2^{8}.

3. ஒரு லேவியன். 1 நாளா 26^{1}.

4. தேவாலயத்தில் சங்கீதம் பாடுகிற வம்சமாகிய ஒரு கூட்டத்தார். 50-ம் சங்கீதம், 73-83-ம் சங்கீதங்கள் இவைகளின் தலைப்பில் 'ஆசாப்பின் சங்கீதம்' என எழுதியிருக்கிறது. இந்தச் சங்கீதங்களை இந்தக் கோத்திரத்தார் இயற்றினுர்கள்.

ஆசாப்நேயா. Hashabnelah.

1. நெகே 3^{10}.

2. நெகே 9^{5}.

ஆசாரியர், லேவியர். Priests, Levites. ஆசாரியர்களுக்கும் லேவியருக்கும் வெவ்வேறுனகாலத்தில் வெவ்வேறுன கடமைகளும் மானியங்களும் விடப்பட்டிருந்தமையால் இவர்களைப்பற்றி விபரமாய்ச் சொல்ல முடியாது. யூதர்கள் பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து வந்தபிறகு தேவாலயத்தை இரண்டாம்தடவை கி-மு. 536-ஆம் கட்டத் துவக்கினபோது ஆசாரியர் லேவியர்ஆகிய இவர்களுடைய வேலையின்விஷயத்தில் கண்டிப்பான சட்டங்கள் நியமித்திருந்ததினுலே அதுமுதல் கி-பி. 70-ஆம் பெரிய ஏரோது கட்டின தேவாலயம் அழியும்வரையும் அவைகளின்படி நடந்தார்கள். இதற்கிடையில் நடந்த இவர்களுடைய சில வரலாற்றைச் சொல்வது உபயோகமாயிருக்கும். இவ்வாறு லேவியராகமம் முழுவதிலும், எண்ணுகமம்

பல இடங்களிலும், யாத்திராகமம் 25-27-ம் அதிகாரங்களிலும், 35-40-ம் அதிகாரங்களிலும் விவரமாய்ச் சொல்லியிருக்கிறது.

A. பிரதான ஆசாரியன்.

1. பிரதான ஆசாரியனாய் இருந்தவனுடைய மூத்த மகனே இவ்வூழியத்திற்கு உரித்தானவன். பிரதான ஆசாரிய அபிஷேக முறை யென்னவென்றால் இவனுக்கு ஸ்நானம் செய்து விசேஷித்த உடை தரித்து எண்ணெய் பூசி காளை ஆட்டுக்கடா இவைகளைப் பலி செலுத்தி இவனைப் பிரதிஷ்டை செய்வார்கள். யாத் 29 அதி.

2. பிரதான ஆசாரியன் தையல் இல்லாத இளநீல அங்கியும் (யாத் 28^{31}), விசித்திர வேலையான எபோத்தும் (யாத். 28^{6}), மார்ப் பதக்கமும் (யாத் 28^{15}), 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்று எழுதியிருக்கும் பொன் பட்டம் கட்டின பாகையும் (யாத். 28^{36}) தரிப்பான்.



பிரதான ஆசாரியன்.

3. பிரதான ஆசாரியனின் கடமைகள்: நித்திய போஜனபலி செலுத்துதல் (லேவி 6^{20}), ஜனங்களின் பாவத்துக்காகப் பலியின் இரத்தத்தைத் தெளித்தல் (லேவி 4^{17}), பாவ நிவிர்த்தியின் நாளில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பாவ நிவிர்த்தி செய்தல் (லேவி 16 அதி) ஆகிய இவைகளே.

B. ஆசாரியன்.

1. இவன் ஆரோனின் குடும்பத்தைச் சேர்ந்தவனாய் இருக்கவேண்டும். இவன் தன் ஊழியத்திற்காக அபிஷேகம் செய்யப்படுவான். யாத் 29 அதி. லேவி 8 அதி. இவன் தரிக்கும் விசேஷித்த உடைகளாவன: சல்லடம், விசித்திர வேலையான அங்கி, இடைக்கச்சை, குல்லா. யாத் 28^{42} 29^{8} லேவி 8^{13}.

2. ஆசாரியனின் ஊழியம்:

a. பலி செலுத்தல். லேவி 1-6 அதி.

b. குஷ்டரோகம், கொள்ளைநோய் ஆகிய வியாதிகளைப்பற்றி விசாரித்துத் தீர்மானஞ் செய்தல். லேவி 13-14 அதி. மத் 8^{4}.

c. பூரிகைகள் ஊதல். எண் 10^{10} லேவி 23^{24}.

3. ஆசாரியனின் சம்ரக்ஷணை.

a. லேவியர் வாங்கும் தசமபாகத்தில் இவர்களுக்குப் பத்தில் ஒரு பங்கு. எண் 18^{26}.

b. முதற் பலன்கள். எண் 18^{12-19}.

c. காணிக்கைகள். எண் 18^{9} லேவி 24^{9} மு.

C. லேவியன்.

1. லேவியனுக்கு அபிஷேகம் கிடையாது. இவனைப் பிரதிஷ்டை செய்யும் நாளில் இவன் இரண்டு காளைகளைக் கொண்டுவருவான். ஆசாரியர்கள் இவனுக்கு ஸ்நானம் செய்து இவனைச் சுத்தமாக்கி அக்காளைகளைப் பலி செலுத்துவார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் இவன் தலைமேலே தனது கையை வைத்து இவனை நித்திய பரிசுத்த ஊழியத்திற்காக நியமிப்பான். எண் 8^{5-22}. லேவியர் வெவ்வேறு காலங்களில் 30, 25, அல்லது 20 வயதில் இந்த ஊழியத்திற்காக நியமிக்கப்படுவார்கள். எண் 4^{3} 8^{24} 1 நாளா 23^{3}.

2. லேவியர் பிரமாணத்தில் ஆசாரியர்களுக்குக் கட்டாயமாய் இட்டிருக்கும் ஊழியத்தையல்லாமலும் தேவாலயத்திலுள்ள வேறு ஊழியத்தையும் செய்துவந்தார்கள். எண் 18^{2-7} 3^{5-39}. வனாந்தரப் பிரயாணத்தில் ஆசரிப்பின் கூடாரத்தின் பணிமுட்டுச் சாமான்களைச் சுமந்து போவதற்கு நியமிக்கப்பட்டவர்கள் இவர்களே. இவர்களுடைய சம்ரக்ஷணை இஸ்ரவேலர் கொடுத்த தசமபாகம். எண் 18^{26}.

D. லேவியருக்கு மற்றக் கோத்திரங்களோடே பங்கும் சுதந்தரமும் இல்லாவிட்டாலும் மற்றவர்களுடைய நாடுகளிலுள்ள 48 ஊர்கள் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. உபா 10^{9}.

E. ஆசாரியர்கள் லேவியர்களுடைய உத்தியோக உற்பத்தியைப்பற்றிய பாரம்பரியமாவது: இவர்கள் யாக்கோபின் பன்னிரண்டு பிள்ளைகளில் லேவி என்பவனுடைய கோத்திரத்தார். யேகோவா முதற்பேறு சகலத்திற்கும் பதிலாக இவர்களை ஏற்படுத்தினார். எண் 8^{18}. லேவியரின் கோத்திரத்திலுள்ள மூன்று வம்சங்களாவன: கெர்சோன், கோகாத், மெராரி. யாத் 6^{16}.

கடவுள் கோகாத் வம்சத்தைச் சேர்ந்த ஆரோன் என்பவனைப் பிரதான ஆசாரியனாக ஏற்படுத்தினதினால் அவனுடைய சந்ததியார் ஆசாரியராயும் அவனுடைய குடும்பத்தில் தலைமுறையாக உள்ளவர்கள் பிரதான ஆசாரியராயும் இருந்தார்கள். மேலும் ஆரோனும் மோசேயும் கோகாத் வம்சத்தைச் சேர்ந்ததினால் இந்த வம்சம் மேன்மையுள்ளதாயிருந்தது. ஆகையால் இதைச் சேர்ந்த லேவியர்கள் உடன்படிக்கைப் பெட்டி, பலிபீடம், தீபம் இன்னும் பரிசுத்தமான தேவாலயத்தின் பணிமுட்டுச் சாமான்களுக்குக் காவலாளிகளாய் இருந்தார்கள். எண் 3^{21}.

புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவுக்கு ஆசாரியன் (எபி 5^{6}) என்றும், பிரதான ஆசாரியன் (எபி 10^{21}) என்றும் சொல்லியிருக்கிறது. பிரதான ஆசாரியனாகிய இயேசுகிறிஸ்து தமது ஊழியத்திற்கென்று நியமனம் பெற்றுச் சோதிக்கப்பட்டு நமக்காகத் தம்மைத்தாமே பலிசெலுத்தி விசுவாசிகளைப் பரிசுத்தமாக்கிப் பரமண்டலம் சென்று அங்கே நமது மத்தியஸ்தராய் வீற்றிருக்கிறார். விசேஷமாய் எபி 4 5 7 8 10-ம் அதிகாரங்களைப் பார்க்க.

கிறிஸ்தவ சபை ஓர் ராஜரீகமான ஆசாரியக் கூட்டம். 1 பேது 2^{9}.

கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆசாரியர்களாயிருக்கிறார்கள். வெளி 1^{6}. பவுல் நாம் நமது சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது இதே கருத்தோடு பேசுகிறான்.

புதிய ஏற்பாட்டிலே விசேஷித்த முறைமையின்படி கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆசாரியர்களென்று தாராளமாய்ச் சொல்லி இருக்கிறதேயல்லாமல் சபையிலுள்ள குருமார் ஆசாரியர் என்று சொல்லியிருக்கிறதில்லை.

ஆசாரியேல். **அசரியேல்** காண்க.

ஆசான், ஆஷான். **1. Ashan.** யோசு 15^{42} 19^{7}. **2. Azzan.** எண் 34^{26}.

ஆசியா. Asia. இந்தியா சீனா முதலிய நாடுகள் உள்ள பெரிய கண்டத்திற்கு ஆசியா என்று வழக்கமாய்ச் சொல்லுவோம். புதிய ஏற்பாட்டில் 'ஆசியா' என்றால் அது சின்ன ஆசியாவின் மேற்குப் பாகமாகிய ஒரு நாட்டைக் குறிக்கிறது. அது மிகவும் செழிப்பும் செல்வமும் பொருந்திய இடம். வெளிப்படுத்தின விசேஷம் ஆரம்பத்தில் சொல்லியிருக்கும் எபேசு சிமிர்னா முதலிய சபைகள் இங்கே இருந்தன. பரி. பவுல் அநேக காலமாய் எபேசுவில் வசித்ததினாலே ஆசியா நாட்டில் சுவிசேஷம் மிகவும் பிரபல்லியமானது. அப் 2^{9} 19^{26} 20^{4} 1 கொரி 16^{19} 1 பேது 1^{1} வெளி 1^{4}.

ஆசியா நாட்டுத் தலைவர். Asiarch. சின்ன ஆசியாவின் பட்டணங்களிலுள்ள சில பெரியோர்களுக்கு இப்பெயர் இடப்பட்டிருந்தது. இவர்கள் அந்த நாட்டின் ஆலோசனைச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாய் ரோமைதேவியையும் ரோமை ராயனையும் விக்கிரக ஆராதனைமூலமாய் வணங்கி வருவதை விருத்திசெய்து அதைப் பரிபாலிக்கும்படி நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள். அப் 19^{31}.

ஆசியேல். Asiel. 1 நாளா 4^{35}.

ஆசியேல். Haziel. 1 நாளா 23^{9}.

ஆசியேல். Jaaziel. 1 நாளா 15^{20}. **யாசியேல்** காண்க.

ஆசீர். Assir.
1. யாத் 6^{24}.
2. 1 நாளா 6^{23}.

ஆசூம். Hashum.
1. எஸ்றா 2^{19}.
2. நெகே 8^{4}.

ஆசூர். Azzur. **அசூர்** காண்க.

ஆசேம். Hashem. 1 நாளா 11^{34}. = யாசேன் 2 சாமு 23^{32}.

ஆசேரீம். Hazerim. இது காரணப் பெயர் அல்ல. இதின் அர்த்தம் 'ஊர்கள்.' உபா 2^{22}.

ஆசேர். Asher. [பாக்கியம் உடையவன்]. யாக்கோபின் இரண்டாம் மகன். ஆதி 30^{11}. ஆசேர் கோத்திரத்தாரின் நாடு கானான் தேசத்தில் வடமேற்கு மூலையில் உள்ளது. அது மிகவும் செழிப்பான இடம். இஸ்ரவேலரின் சரித்திரத்தில் ஆசேர் ஜனத்தைப்பற்றிய விசேஷம் ஒன்றுமில்லை. இவர்களுக்கும் கானானியருக்கும் அவ்வளவு விரோதம் ஒன்றும் இருக்கவில்லை. இவர்கள் மற்றக் கோத்திரங்களோடு சிசெராவுக்கு விரோதமாகப் படையெடுத்துப் போகவில்லை. நியா 5^{17}. ஆனால் இவர்கள் கிதியோனுக்கு உதவி செய்தார்கள். நியா 6^{35}.

ஆசோ. Assos. ஆசியா நாட்டில் பவுல் சந்தித்த அரணான ஓர் பட்டணம். அப் 20^{11}.

ஆசோ. Hazo. ஆதி 22^{22}.

ஆசோத்து. Azotus. **அஸ்தோத்** காண்க. அப் 8^{40}.

ஆசோர். Azor. மத் 1^{13}.

ஆச்சரியம். Miracle. **அற்புதம்** காண்க.

ஆஸரோத். Hazeroth. இஸ்ரவேலர் கூடாரம் அடித்த ஓர் இடம். எண் 11^{35}.

ஆஸ்னாத். Asenath. யோசேப்பின் மனைவியாகிய இவள் ஓன் என்னும் ஊரின் பிரதான ஆசாரியனாகிய போத்திபிராவின் மகள். ஆதி 41^{45}.



சீரியாவிலுள்ள ஆடு.

ஆடு. Sheep. ஆட்டுமந்தைக்கு முன்னாக மேய்ப்பன் போவான். சங் 23^{2} யோவா 10^{4}. பிரயாணம் பண்ணும்போது மந்தைகளுக்கு முன்னாக ஒருவனும் பின்னாக ஒருவனுமாய் இரண்டு மேய்ப்பர் போவார்கள். நாலுபக்கமும் கற்களினால் மதில் கட்டியிருக்கும் கிடைக்குள் ஆட்டுமந்தையை ராத்திரியில் அடைத்து சமீபத்திலிருக்கும் மலைக்குகையொன்றில் அல்லது குடிசையில் மந்தைக்குக் காவலாக இடையர் தங்கியிருப்பார்கள். யூதேயா தேசத்து ஆட்டின் வால் அதிக புஷ்டியும் நீளமுமுள்ளது. ஆடு அதிக சாந்தமுள்ளதாகையால் இக்குணத்திற்கு இது அடிக்கடி உபமானமாய்ச் சொல்லப்படுகிறது. ஏசா 53^{7} ஓசி 4^{16}. கள்ளப்போதகரின் தந்திரத்தைத் தெரிவிக்கும்படி அவர்கள் ஆட்டைப்போல் வேஷந் தரிப்பார்கள் என்று சொல்லியிருக்கிறது. மத் 7^{15} வெளி 13^{11}.

ஆட்டுமயிர். Wool. வஸ்திரம் நெசவு செய்வதற்கு ஆட்டுமயிர் உபயோகிக்கப்பட்டது. லேவி 13^{47}. இது பூச்சிதின்னும் பொருளாதலால் பிரேத உடுப்பாகப் போடார்கள். ஏசா 51^{8}. சணல் நூலும் ஆட்டுமயிரும் ஒரேதுணியில் நெசவு செய்யார்கள். லேவி 19^{19}. ஆட்டுமயிர் துணிக்குச் சாயம் போடுவார்கள். எபி 9^{19}. இது இயற்கையில் வெண்மையாய் இருக்கிறதினால் சுத்தத்தைக் குறிக்கிறது. சங் 147^{16} ஏசா 1^{18} தானி 7^{9} வெளி 1^{14}. இவைகளில் சொல்லியிருக்கும் 'பஞ்சு' மூலபாஷையில் ஆட்டு மயிரைக் குறிக்கிறது. ஆட்டுமயிர் வியாபாரம். எசே 27^{18} 2 இரா 3^{4}.

ஆணி. Nail. கூடார ஆணி. ஏசா 22^{23} நியா 4^{21}.

ஆணி. Pin. நெசவு ஆணி. நியா 16^{14}.

ஆணை. Oath. எபிரெயன் ஒருவன் தான் சொல்வது சத்தியமாய் இராவிட்டால் கடவுளின் சாபம் தன்மேல் வரும் என்பதைக் காட்டும்படி அவன் செய்யும் உறுதி வாக்கு. பலவிதமாய் ஆணையிடுவார்கள். 1 இரா 2^{23} எரே 29^{22} 42^{5} ஆதி $31^{50.53}$ நியா 8^{19} 1 சாமு 20^{3}. வழக்கமாய்க் கையை மேலே உயர்த்தி ஆணையிடுவார்கள். உபா 32^{40}. சில சமயங்களில் கைகளைத் தொடையின்கீழ் வைத்து ஆணையிடுவார்கள். ஆதி 24^{4} 47^{29}. பொய் ஆணைக்கு ஏற்ற தண்டனை இருந்தது. லேவி 6^{1}. உடன்படிக்கையை ஆணையினால் ஸ்திரப்படுத்துவார்கள். ஆதி 21^{31} 26^{28} 31^{53} யோசு 9^{15} 2 இரா 11^{4}. மனுஷர் தங்கள் வாக்கை ஆணையிட்டு ஸ்திரப்படுத்துவதுபோலக் கடவுளும் தமது வாக்கை ஆணையினால் ஸ்திரப்படுத்துகிறார் என்று எபிரெயர் சொல்லுவார்கள். ஆதி 22^{18} எபி 6^{17}.



சீரியாவிலுள்ள ஆட்டின் தலை.

ஆதமா. Adamah. யோசு 19^{36}.

ஆதரியேல். Adriel. [கடவுள் என் துணை]. 1 சாமு 18^{19}.

ஆதாதேசர். Hadadezer. [ஆதாத் என்னும் தேவன் என் உதவி]. சோபாவின் ராஜாவாகிய இவனைத் தாவீது ஜெயித்தான். 2 சாமு 8^{3}. இவனுடைய பெயர் ஆதாரேசர் என்றும் சொல்லியிருக்கிறது. 1 நாளா 18^{3}.

ஆதாத். Hadad.

1. எமோரியரும் பாபிலோனியரும் அசீரியரும் வணங்கிவந்த தேவன். ரிம்மோன்

தேவனும் ஆதாத்தேவனும் ஒன்றுதான். இடி முழக்கம், மின்னல், வாயு இவைகளுக்குத் தேவன். ஆதாத்ரிம்மோன் என்பதில் இந்தத் தேவனின் இரண்டு பெயர் சேர்ந்திருக்கிறது. சக 12^{11}.

ஆதாத்ரிம்மோனின் புலம்பல். எசே 8^{14}. **தம்முசு** காண்க.

2. இஸ்மவேலின் எழாம் மகன். 1 நாளா 1^{30}.

3. ஏதோமின் நாலாம் ராஜா. ஆதி 36^{35}.

4. ஏதோமின் எட்டாம் ராஜா. 1 நாளா 1^{50}. = ஆதார். ஆதி 36^{39}.

5. தாவீதின் காலத்திலுள்ள ஏதோமின் ராஜாவினுடைய குமாரன். 1 இரா 11^{14}.

ஆதாத்ரிம்மோன். Hadad-Rimmon. சக 12^{11}. **ஆதாத்** காண்க.



காட்டாடு.

ஆதாம். Adam. [படைக்கப்பட்டவன் அல்லது செந்நிறமுள்ளவன்]. 'ஆதாம்' என்றால் பெரும்பாலும் அது பொதுவாய் மனுஷர் எல்லாரையும் குறிக்கிறது. ஆதாமினுடைய சிருஷ்டிப்பு விஷயத்தைப்பற்றி இரண்டுதடவை சொல்லியிருக்கிறது. முதல் சரித்திரம் அவன் சிருஷ்டிக்கப்பட்டவைகளில் பிரதானமானவன் என்று காட்டுகிறது. ஆதி $1^{26, 27}$. இரண்டாம் சரித்திரம் அவன் ஜீவனை யடையும் விஷயத்தைப்பற்றிக் குறிக்கிறது. ஆதி 2^{7}. ஆதியாகமத்தில் எழுதியிருக்கிறபடி மனுஷன் வேலை செய்யவும் சமுசார நிலைமைக் குட்பட்டிருக்கவும், மிருகஜாதிகள்மேல் அதிகாரம் செலுத்தவும் படைக்கப்பட்டான் என்றும் அவன் நன்மை தீமை அறியாதவனாய்ச் செழிப்புற்ற பூங்காவனம் ஒன்றில் வைக்கப்பட்டான் என்றும் காண்கிறோம். இப்படியிருக்க அவன் தன் இஷ்டத்திற்கும் தேவனுடைய சித்தத்திற்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்ட காலத்தில் தன் ஆசைக்கிணங்கி இவ்வுலகத்தில் தீமை, வெட்கம், துன்பம், மரணம் ஆகிய இவை உண்டாகிறதற்கு இடங்கொடுத்தான்.

புதிய ஏற்பாட்டில்,

(a) சுவிசேஷங்களில்

1. இயேசு ஆதியாகமத்தில் சொல்லியிருக்கிறதைப்பற்றிப் பேசுகிறார். மத் 19^{4} மாற் 10^{6}.

2. லூக்கா சர்வஜனங்களுக்கும் தன் சுவிசேஷத்தை எழுதும்போது இயேசு ஆதாமின் சந்ததியைச் சேர்ந்தவர் என்று சொல்லி இவ்விதமாய் மனுஷரோடு அவர் சம்பந்தப்பட்டவர் என்று காட்டுகிறான். லூக் 3^{38}.

(b) நிருபங்களில் பவுல் ஆதாமைப்பற்றிப் பேசுகிறான்:

1. மனுஷர் எல்லாரும் கிறிஸ்துவின் மூலமாய்ச் சரீர விஷயத்திலும் ஆத்தும விஷயத்திலும் ஒரே ஜனமாயும் ஒரே குடும்பமாயும் இருக்கிறார்கள். 1 கொரி 15^{22}.

2. ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள வித்தியாசமும் ஒப்பனையும். ரோ 5^{12-21}.

3. ஆதாமின் தன்மைக்கும் கிறிஸ்துவின் தன்மைக்கும் உள்ள வித்தியாசத்தினால் நாம் உயிர்த்தெழுதலைப்பற்றி நினைக்கவேண்டியவைகள். 1 கொரி 15^{44-47}.

4. ஆதாம் மூலமாய் வந்த துன்பம். 1 தீமோ 2^{13}.

ஆதாம். Adam. ஒரு ஊர். யோசு 3^{16}.

ஆதாரேசர். Hadarezer. **ஆதாதேசர்** காண்க.

ஆதார். Hadar. **ஆதாத்** (5) காண்க.

ஆதார் மாசம். Adar. யூதருடைய பஞ்சாங்கத்தில் இது பன்னிரண்டாம் மாசம். இந்த மாதத்தில் 14உ யூதர் பூரீம் பண்டிகைநாளைக் கொண்டாடுவார்கள். எஸ்தர் 9^{19}. **காலம்** காண்க.

ஆதாள். Adah. [பிரகாசம்].

1. லாமேக்கின் மனைவிகளில் ஒருத்தி. ஆதி 4^{19}

2. = பஸ்மாத்து. ஏசாவின் மனைவிகளில் ஒருத்தி. ஆதி 36^{2}.

ஆதியாகமம். Genesis.

1. **பொருளும் பிரிவுகளும்.** இப்புஸ்தகம் உலகத்தின் சிருஷ்டிப்பையும் மனிதர் உற்பத்தியையும் ஆதி பிதாக்களின் சரித்திரத்தையும் சொல்லுகிறது என்பது எபிரெயரின் அபிப்பிராயம். இதில் இரண்டு பாகங்கள் உண்டு.

(1) **ஆதி மனிதர்களின் சரித்திரம்.** 1–11 அதி. இதில் உலக சிருஷ்டிப்பு, பாவத்தின் துவக்கம், நாகரீகத்தின் ஆரம்பம், ஜலப்பிரளயம், ஜனங்கள் சிதறடிக்கப்படுதல் ஆகிய இவைகள் சொல்லியிருக்கின்றன.

(2) **ஆதி பிதாக்களின் சரித்திரம்** மூன்று பாகங்களாகப் பிரித்துப் பார்க்கலாம். ஆபிரகாம். ஆதி 12^{1}-25^{18}. ஈசாக்கு 25^{19}-36 அதி. யாக்கோபு, யோசேப்பு. 37-50 அதி. இவர்களின் சரித்திரங்களோடு பல வம்ச அட்டவணைகளும் உண்டு. இவைகளில் எபிரெயர்களுக்குத் தெரிந்த ஜனங்களின் உற்பத்தியும் எபிரெய ஜனத்திலுள்ள முதல் விசேஷங்களும் கடவுள் இந்த ஜனத்தை மற்ற ஜனங்களிலிருந்து தெரிந்தெடுத்த நோக்கமும் காட்டப்பட்டிருக்கின்றன.

2. **புஸ்தகத்தின் ஆரம்பம்.** ஆதியாகமத்தில் இதின் ஆக்கியோனைப்பற்றி ஒன்றும் சொல்லியிருக்கவில்லை. இதின் தலைப்பிலே இப்புஸ்தகம் மோசேயினால் எழுதப்பட்டது என்று சொல்லியிருப்பினும் இதில் அவன் எழுதினவைகள் பல இருந்தாலும், முழுதும் அவன் எழுதினது என்று சொல்வதற்குப் பல தடைகள் உண்டு.

மோசே இந்தப் புஸ்தகம் எழுதினான் என்பது யூதசாஸ்திரிகளின் பாரம்பரியம். அந்தத் தலைப்பு இப்புஸ்தகம் எழுதின காலத்தில் அல்ல பிற்காலத்தில் எழுதப்பட்டதினாலே, இந்த விஷயத்தில் அது அத்தாட்சியாகாது. ஆதிபாஷையில் தேறின வித்துவான்கள் இந்தப் புஸ்தகத்தில் இரண்டு ஆக்கியோன்கள் எழுதின புஸ்தகங்களை இன்னொரு ஆக்கியோன் ஒன்றாகச் சேர்த்திருக்கிறான் என்று தீர்மானித்திருக்கிறார்கள். இம்மூவர்களில் ஒரு ஆக்கியோன் கடவுளுக்கு 'யேகோவா' (*Jehovah*) அல்லது 'கர்த்தர்' என்றும், மற்றவன் அவருக்குத் 'தேவன்' (*Elohim*) என்றும், மூன்றாம் ஆக்கியோன் மார்க்காசாரம் இன்னது என்றும் சொல்லுகிறார்கள். மேலும் அந்த வித்துவான்கள் இப்புஸ்தகத்தின் பாஷை நடையைக் கவனித்து இதிலுள்ள முதல் இரண்டு ஆக்கியோன்களும் சாலொமோன் காலத்தில், அல்லது கிறிஸ்துவுக்கு 800வரு முன், அதாவது ஏசாயாவின் காலத்திலும், மூன்றாம் ஆக்கியோன் அதற்குக் கொஞ்சம் பிந்தியும் எழுதினார்கள் என்று சொல்லுகிறார்கள். மற்றச் சேமியரைப்போலப் பூர்வீக எபிரெயரும் தங்கள் காலத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றிச் செங்கற்களிற் சுருக்கமாய் எழுதியிருப்பார்கள் என்பதற்கு இடமுண்டு. அல்லாமலும் குடும்பங் குடும்பமாக ஒருத்தருக் கொருத்தர் அச்சம்பவங்களை வாய்மொழியாய் அறிவித்துவந்தார்கள். மேலும் கல்வியிற் சிறந்த மோசே எபிரெயருக்குள் சன்மார்க்கத்தை ஸ்திரப்படுத்தும்படியான வோர் புஸ்தகம் எழுதியிருப்பான் என்பது நம்பக்கூடியகாரியம். ஆதலால் முன்னேரும் மோசேயும் எழுதினவைகளும் வாய்மொழியாய்ச் சொன்னவைகளும் முதல் இரண்டு ஆக்கியோன்கள் எழுதின இரண்டு புஸ்தகங்களுக்கும் ஆதாரமாய் இருந்தன. பிற்காலத்தில் மூன்றாம் ஆக்கியோனான ஆசாரியனொருவன் அந்த இரண்டு புஸ்தகங்களையும் ஒன்றாகச் சேர்த்து இன்னும் மார்க்காசாரத்தைப்பற்றி விபரமாய் எழுதின புஸ்தகந்தான் ஆதியாகமமாம்.

3. **இதிலுள்ள சரித்திரம்.** சிலர் இதில் ஆபிரகாம் முதலியவர்களைப்பற்றிச் சொல்லியவைகள் பாரம்பரியமாய் வந்தவைகள் என்றும், இவைகள் உண்மையுள்ளவைகள் அல்ல என்றும் நினைக்கிறார்கள். ஆனால் பாபிலோனியர், அந்நிய ராஜாக்கள், கானானியர் அவர்களின் மார்க்க ஆசாரம், பழக்க வழக்கம் முதலியவற்றை நாம் பார்த்தால் இப்புஸ்தகம் உண்மையுள்ளது என்றும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு இவர்கள் இந்த ஆகமத்திற் சொல்லியபடி நடந்தார்கள் என்றும் அறிவோம்.

4. **இப்புஸ்தகத்தின் பலன்.** இந்தப் புஸ்தகத்தில் ஆத்துமாவுக்குரிய போதனைகள் சொல்லியிருக்கிறதென யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இதின்படி பூர்வ கோத்திரப் பிதாக்கள் கடவுளுடைய சித்தத்தை அறிந்து தங்களுக்குத் தெரிந்தபிரகாரம் உண்மையோடும் உற்சாகத்தோடும் விசுவாசத்தோடும் நடந்து பயபக்தியும் சன்மார்க்கமும் இன்னது என்பதை மற்றவர்களுக்குக் காட்டினார்கள். இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கடவுளுடைய சித்தத்தை அறிந்தவர்களிலும் இருக்கக்கூடாத தப்பிதங்கள் பூர்வீகத்தாரில் இருந்தது என்று சொல்லியிருக்கிறதினாலே இப்புஸ்தகத்தின் ஆக்கியோனின் உண்மை காணப்படுகிறது. இப்புஸ்தகத்தை வாசிக்கும்போது ஆபிரகாம் முதலிய பக்தர்களின் குணதிசயங்கள் நல்லவைகளாய் இருந்தாலுஞ்சரி, குற்றமுள்ளவைகளாய் இருந்தாலுஞ்சரி, அவர்கள் அக்காலத்தில் இருந்த விக்கிரகாராதனை, அகோரமான துன்மார்க்கம், குரூரமான நரபலிகள் ஆகிய இவற்றை நீக்கி, இவைகளை அருவருத்து வெறுக்கும் மெய்யான கடவுளாகிய யேகோவாவைத் தைரியத்தோடு வணங்கி, தங்கள்

சொந்தத் தேசத்தை விட்டுப் பரதேசிகளாய் அந்நிய தேசங்களில் வளர்ந்து அங்கே இறக்கும்படி நேரிட்டபோதிலும் யேகோவாவை அவர்கள் மறந்துபோகாமல் அவருடைய சித்தத்தை நிறைவேற்றும்படியான விசுவாசமும் உறுதியுமுள்ளவர்களாய் இருந்தார்கள் என்பதை நாம் கண்டு இப்புஸ்தகத்தில் நல் நம்பிக்கை முதலியவற்றைப்பற்றிய ஆவிக்குரிய போதனைகள் அடங்கியிருக்கின்றன என அறிவோமாக.

ஆதியேல். Adiel.

1. 1 நாளா 4^{36}.
2. 1 நாளா 9^{12}.
3. 1 நாளா 27^{25}.

ஆதிராக். Hadrach. சீரியாவில் ஒரு இடம். சக 9^{1}.

ஆதிரியாக்கடல். Adriatic Sea, Adria, Hadria. மேற்கே தென் இத்தாலியா, சிசிலியா, மெலித்தா இவைகளிலிருந்து கிழக்கே கிரேக்கா, கிரேத்தா தீவுவரையும் பரந்திருக்கும் மத்தியதரைக் கடலின் ஓர் பாகம். அப் 27^{27}.

ஆதின், ஆதீன். Adin.

1. செருபாபேலோடு வந்தவர்கள். எஸ்ரா 2^{15}.
2. எஸ்றாவோடு வந்தவர்கள். எஸ்றா 8^{6} நெகே 10^{16}.

ஆதீத். Hadid. சிறையிருப்பிலிருந்து வந்தபிறகு பென்யமீன் கோத்திரத்தார் வசித்த ஒரு ஊர். எஸ்றா 2^{33}.

ஆதேஸ். Hades. இது பழைய ஏற்பாட்டில் வழங்கியிருக்கும் 'ஷெவோல்' (*Sheol*) என்னும் பதத்திற்கு பதிலாகப் புதிய ஏற்பாட்டில் வழங்கப்படுகிறது. இதற்குப் பாதாளம் அல்லது மரித்தோரின் ஆவிகள் போய் இருக்கும் இடம் என்று அர்த்தம். இது நரகம் அல்லது தண்டிக்கப்படும் இடம் அல்ல; தண்டனைக்குரிய நரகம் வேறே. மத் 11^{23} 16^{18} லூக் 10^{15} 16^{23} அப் $2^{27, 31}$ வெளி 1^{18} 6^{8} 20^{13}.

இது பாதாளம் என்று சொல்லலாம். மரித்தோர் எல்லாரும் இங்கே இருப்பார்கள் என்றும், முதலில் நல்லோர் தீயோருக்கு வித்தியாசம் இல்லை என்றும், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எபிரெயர் நினைத்தார்கள். பிற்பாடு யூத வேதசாஸ்திரிகள் இருபகுதியாருக்கும் அவ்விடத்தில் வித்தியாசம் உண்டு என்று கற்பித்தார்கள். லாசருவையும் ஐசுவரியவானையும்பற்றி இயேசு சொன்ன உவமை இதற்கு ஒத்திருக்கிறது. லூக் 16^{14}.

அப்போஸ்தலர் இயேசு மரித்தபோது ஆதேசுக்குப் போனார் என நினைத்தார்கள் என்று விளங்குகிறது. அப் 2^{17} ரோ 10^{7} எபே 4^{9} பிலி 2^{10} 1 பேது 3^{18-20} 4^{6}.

எல்லா வேத சாஸ்திரிகளும் கடைசி இரண்டு வசனங்களின் அர்த்தத்தை ஒரே மாதிரியாகச் சொல்லுகிறதில்லை. ஆதி பிதாக்களில் அநேகர் அவர் நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தில் மூழ்கினவர்கள் இருக்கும் இடத்திற்கும் போனார் என்றும், தற்கால போதகர் அவர் பொல்லாத ஆவிகளும் அல்லாமல் இறந்துபோன எல்லாரும் இருந்த இடமாகிய ஆதேசுக்குப் போனார் என்றும் சொல்லுகிறார்கள்.

ஆதோன். Addon. நெகே 7^{61}.

ஆத்சாசோன். Hazazon. **என்கேதி** காண்க.

ஆத்சார் அதார். Hazar-Addar.=எஸ்ரோன். யோசு 15^{3} எண் 34^{4}.

ஆத்சார் அத்திகோன். Hazar-Hatticon. [மத்தியிலுள்ள ஆத்சார்]. எசே 47^{16}.

ஆத்சார் காதா. Hazar-Gaddah. யோசு 15^{27}.

ஆத்சார் சூவால். Hazar-shual. யூதாவின் தென்பாகத்திலுள்ள ஒரு ஊர். யோசு 15^{28}.

ஆத்சார்சூசா, ஆத்சார்சூசீம். Hazar-susah. சிமியோனின் ஒரு ஊர். யோசு 19^{5} 1 நாளா 4^{31}.

ஆத்சார் யேனன். Hazar-enan. இஸ்ரவேலின் வட எல்லையிலுள்ள ஒரு ஊர். எண் 34^{9}.

ஆத்சால். Azel. சக 14^{5}.

ஆத்சேம். Ezem. அஸ்மோன் காண்க.

ஆத்சேல். Azel. 1 நாளா 8^{37}.

ஆத்சோர். Hazar.

1. யாபீனின் பட்டணம். யோசு 11^{1}.
2. தென் யூதாவில் ஒரு பட்டணம். யோசு 15^{23}.
3. எஸ்ரோன் என்னும் ஆத்சோர். யோசு 15^{25}.
4. நெகே 11^{33}.
5. காத்சோர். எரே 49^{28}.

ஆத்சோர் அதாத்தா. Hazor-Hadattah. யோசு 15^{25}.

ஆத்தாகு. Hathack. ஒரு அண்ணகன். எஸ்தர் 4^{5}.

ஆத்தாத். Atad. ஒரு ஊர். ஆதி 50^{10}.

ஆத்நாத். Hathath. 1 நாளா 4^{13}.

ஆத்துமா. Soul. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணங்களை உடைத்தாகிச் சரீரத்தை ஆண்டு நடத்துகிற அரூபமும், அழியாமையுமுள்ள வஸ்து. ஆதி 2:7.

ஆத்துமாவுக்கு மேற்சொல்லிய குணங்களாலே வேண்டுதல், வேண்டாமை இரண்டும் உண்டு; அவற்றால் மனிதன் சுவாதீனன் (*moral agent*) என்னப்படுகிறான். அதனாலே மனிதனுக்கும் மற்ற ஜீவபிராணிகளுக்கும் அநந்த வித்தியாசமுண்டு. பிர 3:21.

ஆத்துமா அழியாத வஸ்து என்பது விசேஷித்த கொள்கையாகையால் அதை நன்றாய் அறிந்து உறுதியாய் நம்பவேண்டியது. ஏனெனில் இந்த விஷயத்தில் நம்பிக்கை உண்டாயிருப்பதினால் மற்ற ஜீவசெந்துக்களைப் பார்க்க மனுஷருக்கு உண்டாயிருக்கிற மேன்மையும், வேதத்தில் செய்யவேண்டுமென்று கூறிய காரியங்களின்படி நடப்பதில் உறுதியும், மனுஷர்களுக்குள்ளே சமாதானமும், வியாதியிலும் மரணத்திலும் வேண்டிய ஆறுதலும், நித்தியஜீவன் உண்டென்கிற மகிமையுள்ள நம்பிக்கையும் உண்டாகும். ஆத்துமாவைக்குறித்துப் பூர்வீக புறமதஸ்தர்கள் பலவிதமாய் நினைத்தவைகளையும், புத்தியினாலும் வேதத்தினாலும் ஆத்துமா நித்தியமென்பதற்கு நியாயங்களையும் எடுத்துக் காண்பிக்கிறோம்.

I. ஆத்துமா நித்தியவஸ்து என்று எல்லாவித மனுஷர்களாலும் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரியமாயிருக்கிறது. சில ஞானிகள் ஆத்துமா தேவனுடைய அம்சமென்று சொல்லுகிறார்கள்; சிலர் ஆத்துமாவானது உலகத்திலிருக்கிற ஆவியோடொத்த ஆவியென்று நினைத்து, தண்ணீரானது சமுத்திரத்திற்போய்ச் சேருகிறதுபோல அது உலக ஆவியோடே சேர்ந்துபோகிறதென்று சொல்லுகிறார்கள்; சிலர் ஆத்துமாவானது தானிருந்த சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தில் பிரவேசிக்குமென்று சொல்லுகிறார்கள்; சிலர் ஆத்துமாவானது பஞ்ச பூதங்களினுடைய கூட்டமென்று சொல்லுகிறார்கள்; சிலர் சரீரத்தில் தோன்றிய வாயுவினது விகாரமே ஆத்துமா என்று சொல்லுகிறார்கள்.

II. ஆத்துமாவானது நித்தியவஸ்து என்பதற்குச் சில திருஷ்டாந்தங்களாவன:—

1. உபமானம். உலகத்திலுள்ள வஸ்துக்கள் சுத்தசூனியமாய் அழிந்துபோகாமல் வேறொரு பதார்த்தமாய் மாறுவது உண்டு. மண் பளிங்காகும், பஞ்சலோகங்கள் உருக்கி வார்க்கப்படும், புழுக்கள் பறக்கிற பூச்சிகளாகும், முட்டைகள் குஞ்சுகளாகும். இப்படி இருக்கிறபடியால் ஆத்துமாவானது சரீரத்தை விட்டுப் பிரிந்து மற்றொரு நிலையில் நிற்கக்கூடாதா?

ஜீவகாலத்தில் சரீரத்துக்குச் சம்பவிக்கும் வியாதி முதலியவைகள் ஆத்துமாவைப் பற்றுகிறதில்லை. இந்தச் சரீரம் உண்டி முதலியவற்றால் பலமடைந்து வியாதி முதலியவற்றால் இளைத்துச் சுகமுதலியவற்றால் செழித்திருப்பதுண்டு. நேத்திரம் சிலகாலம் பார்வையில்லாமலிருந்து மறுபடியும் பார்வையைப் பெறும். இப்படிப்பட்ட மாறுதல் சரீரத்துக் குண்டாயிருந்தும் இவைகள் ஆத்துமாவுக் குண்டாகிறதில்லை. சரீரத்தில் ஓர் அவயவமாகிய கையாவது காலாவது அறுத்துப்போடப்பட்டால் ஆத்துமாவின் வல்லமை அதினால் குறைந்துபோவதில்லை. சிலர் மரணவஸ்தையில் நிறைந்த சக்தியுள்ள ஆத்துமாவை உடையவர்களாயிருந்தும் தமக்கு ஆதாரமாகிய சரீரத்தின் பெலவீனத்தால் மயக்கமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அது எப்படியெனில் வீணையை வாசிக்கிறவன் தான் வல்லமையுள்ளவனாயிருந்தும் வீணையினது தோஷத்தால் அவன் திறமை காணப்படமாட்டாது. அநேகர் மரணவஸ்தையில் மயக்கமின்றித் தெளிவோ டிருக்கிறார்கள்; மரணத்தின் பெருங்குறியாகிய நித்திரையிலும் ஆத்துமாவானது அசைவுள்ளதாகவே இருக்கின்றது.

உயிருள்ள அஃறிணைப் பொருள்களெல்லாம் தத்தமக்கேற்ற அறிவுள்ளவைகளாய் இருந்தும் மனிதர்களைப்போலப் பகுத்தறியும் இயல்பினையுடைய ஆத்துமாக்களையுடையன அல்ல.

2. சரீர தர்மத்துக்கும் ஆத்தும தர்மத்துக்கும் வித்தியாசம் உண்டு. சரீரத்திற்குப் பூரித்தல், அசையாமை, பிரிவு, பளுவு, நிறம் முதலியவை யுண்டு. ஆத்துமாவுக்கு எண்ணம், அறிவு, ஆசை முதலிய குணங்கள் உண்டு. ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் சம்பந்தம் உண்டாயிருந்தாலும் அவைகள் வெவ்வேறான பொருள்களேயாம். சரீரத்தை நடத்துகிற பொருளுக்கு ஆவி என்றும், மனம் என்றும், ஆத்துமா என்றும் பேர். அது அரூபியாயிருக்கும் தன்மையால் ஆவி என்றும், பல குணங்களை உடைத்தாயிருக்கும் தன்மையால் மனம் என்றும், அழியாத்தன்மையை உடைத்தாயிருப்பதினால் ஆத்துமா என்றும் பேர்பெற்றது. ஆத்துமாவுக்கடுத்த குணங்களின் மேன்மையினால் அது அழியாத வஸ்து என்று அறிந்துகொள்ளலாம். ஆத்துமாவுக்கு ஆலோசிக்கவும், தீர்மானிக்கவும், ஞாபகத்தில் வைக்கவும், ஒரு நிமிஷத்தில் கடவுளின் பாதம் அடைந்து, அண்ட சரா

சரங்களையெல்லாம் கடந்து அன்பின் வல்ல மையினலாவது, பக்தி வைராக்கியத்தினு லாவது மெய் மறந்து சாவுக்கு அஞ்சாமலி ருக்கவும் வல்லமை உண்டு. இப்படிப் பட்ட வல்லமையுள்ளதாகிய ஆத்துமா அழி வுக்கு உரியதென்று எப்படிச் சொல்ல லாம்?

3. ஆத்துமாவானது விவேகத்தில் நாள் தோறும் வளருகிறது. குருவியானது எப் போதும் தன் கூண்டை ஒரே மாதிரியாகக் கட்டுகிறது. இப்படியே உயிருள்ள அஃறி ணைப் பொருள்கள் ஒரே நிலையுள்ள அறிவை உடைத்தாயிருக்கின்றன. ஆத்துமாவோ நாடோறும் கசடறக் கற்கும். இந்த உலகத் தின் காரியங்களையெல்லாம் அறிந்து பரலோ கத்தில் தன் ஆசையைச் செலுத்தி அந்த உல கத்தின்கண்ணே நாட்டமாய் இருக்கின்றது; இத்தன்மையுள்ள ஆத்துமாவானது அழியும் என்று சொல்லக்கூடுமோ?

4. மனுஷர் யாவரும் அழியாத ஆத்துமா வை உடையவர்களாய் இருக்கிறோமென்றும் மரித்தபின்பு உயிரோடிருப்போம் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள். மனுஷர் பூலோ கத்தில் புகழையும் கீர்த்தியையும் விரும்புகிற தேன்? மட்டில்லாத இந்தப் பேரின்ப ஆசை யை வீணாய்க் கடவுள் நமக்குள்ளே வைத் திருப்பாரா?

5. மனுஷர்கள் தாங்கள் செய்கிற கிரி யைகளுக்குத் தக்க பலனை அடைவோமென் கிற கருத்தோடிருக்கிறார்கள். நாம் நன்மை தீமை செய்ய வல்லமை உடையவர்களாய் இருக்கிறதுமன்றி நாம் செய்கிற நன்மையி னலே சுகமும், தீமையினலே துக்கமும் அனு பவிக்கிறவர்களாய் இருக்கிறோம். பாவஞ் செய்தால் வெட்கமும் துன்பமும் உண்டா கிறது; நன்மைசெய்தால் அதற்கேற்ற பலனை அனுபவிப்போம் என்கிற நம்பிக்கை நம்மில் அளவற்ற பாக்கியத்தை உண்டாக்குகிறது. ஆயினும் பெரும்பாலும் நன்மை தீமைக் கடுத்த பலன்களை இம்மையில் மனுஷர்கள் அனுபவிக்கக் காணேம். நீதிமான் துன் பத்தை அனுபவிக்கிறான்; அநீதிமான் இன் பத்தை அனுபவிக்கிறான். ஆகவே நீதியுள்ள கடவுள் இம்மையில் பாவ புண்ணியத்திற் கேற்ற பலா பலங்களைக் கொடாதிருந்தாலும் மறுமையில் எல்லாருக்கும் நன்மை தீமைக் கடுத்த பலனைக் கொடுப்பார் என்பதற்குச் சந்தேகம் இல்லை. இதுவும் ஆத்துமா அழி யாத வஸ்து என்று நம்புகிறதற்கு ஓர் விசே ஷித்த நியாயமாம்.

வேதாகமத்திலே ஆத்துமா அழியாத வஸ் துவென்று தெளிவாய்ச் சொல்லப்படுகிறது. ஆதி 5^{24} யாத் 3^{6} 2 இரா 2^{11} சங் $16^{10,11}$ 17^{15} 73^{26} மத் 16^{27} 22^{31} 25^{31} யோவா 5^{28} 2 கொரி 5^{1-8}.

'ஆவியும் ஆத்துமாவும்' என்று பிரித்துச் சொல்லுகிறது (1 தெச 5^{23}), சித்தத்தையும் அறிவையும் குறிக்கும்.

தேவனுடைய ஆத்துமம் என்பது அவரு டைய சுபாவத்தைக் குறிக்கும். எரே 6^{8}.

ஆத்துமாவைக்குறித்த சில பொதுவான வாக்கியங்களாவன: உபா 11^{13} சங் 34^{22} 49^{9} நீதி 11^{30} எசா $55^{2,3}$ 58^{10} எசே 18^{4} மத் 10^{28} யோவா 12^{27} லூக் 12^{20}.

ஆத்ரோத் சோபான். Atroth Shophan. எண் 32^{35}.

ஆநேர். Aner.

1. காணனிய பிரபு. ஆதி 14^{24}.
2. ஒரு ஊர். 1 நாளா 6^{70}.

ஆந்தை. Owl. பலஸ்தீனவில் பலவி தமாயிருக்கும். லேவி 11^{17} 14^{16} எசா 34^{11}. **கூகை, கோட்டான்** காண்க.

ஆபகூக். Habakkuk.

1. இந்தத் தீர்க்கதரிசி தன்னைக்குறித்து ஆபகூக் ஆகமத்தில் எழுதியிருக்கிறதைத் தவிர வேறொன்றும் நமக்குத் தெரியாது.

2. ஆபகூக் தன் தேசத்தார் செய்த தீமை யை அறிந்து அதற்குத் தண்டனையாக அவர் களுக்கு விரோதமாய்க் கல்தேயர் படை யெடுத்து வருவார்கள் என்று ஏற்கனவே அவர்களுக்கு எச்சரிக்கையாக இந்தத் தீர்க்க தரிசனத்தைச் சொல்லுகிறான்.

3. யோசியா இறந்தபிறகு எட்டாம் வரு ஷம் (கி-மு. 600) ஆபகூக் இந்தத் தீர்க்க தரிசனத்தைக் கூறினன் எனத் தெரிகிறது.

4. பிரிவுகள்.

(i) 1^{1-4}. தீர்க்கதரிசி தீமைக்கு வேண்டிய தண்டனை ஏன் வருகிறதில்லை என்று கேட் கிறான்.

(ii) 1^{5-11}. எருசலேமைத் தண்டிக்கக் கல் தேயர் வருவார்கள் என்று கூறுகிறான்.

(iii) 1^{12-17}. கோபாவேசத்துடன் வந்த கல்தேயரை கடவுள் தண்டிக்கிறார்.

(iv) 2^{1-4}. தண்டனை இருந்தாலும் நீதி மான் தன் விசுவாசத்தினல் பிழைப்பான் என்று கூறுகிறான்.


(v) 2^{5-20}. கல்தேயரைக் கடவுள் அழைத் திருந்தாலும் அவர்கள் செய்த பாவங்களுக் குத் தண்டனை வரும் என்று மறுபடியும் கூறு கிறான்.

(vi) 3 அதி. தீர்க்கதரிசி கடவுளுடைய மகத்துவத்தைப் பாடி அவர்பேரில் தனக்

கிருக்கும் உறுதியான நம்பிக்கையைக் காட்டு கிறான்.

5. இந்தத் தீர்க்கதரிசி கடவுள் செய்யும் காரியங்களுக்குக் காரணங்களை யறிய ஆவ லுள்ளவனா யிருக்கிறான். இதில் யோபு என் னும் புஸ்தகத்திற்கும் அதற்குப் பின்வரும் தீர்க்கதரிசனங்களுக்குமுள்ள சம்பந்தத்தைக் காண்கிறோம்.

6. சில வித்துவான்கள் மூன்றாம் அதி காரத்திலுள்ள பாட்டும் மற்ற அதிகாரங்களும் ஒரே ஆக்கியோனால் இயற்றப்படவில்லை என்று சந்தேகங்கொள்ளுகிறார்கள். இந்தச் சந்தேகத்தைத் தீர்க்க நம்மால் முடியாது. ஆயினும் ஆபகூக் இந்தப் பாட்டை இயற் றினாலுஞ் சரி, இயற்றாவிட்டாலுஞ் சரி, சர்வ வல்லமையுள்ள கடவுளின் செய்கை களைப்பற்றி இதில் எழுதப்பட்டிருக்கிறதை நாம் வாசிக்கும்போது அது நமக்கு சன் மார்க்க போதனையைக் கொடுக்கிறது என் றறிவோம்.



ஆபரணம்—காதணி.

ஆபரணம். Ornament. எபிரெயர் தரித்த ஆபரணவகை பின்வரும் நாலு அட்டவணை யிற் பார்க்கலாம். யாத் 35^{22} எண் 31^{50} எசா 3^{18} எசே 16^{11}.

எபிரெய ஸ்திரீகள் காதணிகள் தரித்தார் கள். ஆதி 35^{4}.

மூக்கின் வலதுபக்கத்தில் மூக்குத்தி யணிந் தார்கள். எசா 3^{21}.


ஆதி 24^{22}-ல் சொல்லியிருக்கும் 'காதணி' என்பது மூக்குத்தியாயிருக்கவேண்டும்.

கழுத்தில் பலவிதமான ஆபரணம் பூண் டார்கள். உன்னத 1^{10}.

யாவரும் கைகளில் அஸ்தகடகமும் (2 சாமு 1^{10}), விரல்களில் முத்திரை மோதிரமும், வச் சிரமணி மோதிரமும், கால்களில் பாதசாமும் அணிந்தார்கள். எண் 31^{50}.

இந்த ஆபரணங்களில் அநேகம் பொன் அல்லது வெள்ளிக்கம்பியினால் செய்யப்பட் டன. இத்தேசத்தில் சத்திய வேத அறிவு இல் லாத ஜனங்களைப்போல எபிரெயர் தாயித்து குளிசம் முதலானவற்றையும் ஆபரணமாகத் தரித்தார்கள் என நாம் நினைக்கவேண்டும். எகிப்திய தட்டார் விநோதமான ஆபரணங் கள் செய்வதில் பேர்போனவர்கள்.

இரத்தினக் கற்களின் பெயர்கள். யாத் 28^{17} எசே 28^{13} வெளி 21^{18}.



ஆபரணம்—அஸ்தகடகம்.

ஆபா. Avva. **ஆவா** காண்க


ஆபி. Abi. = அபியான் (2).

ஆபிக். Aphik. = **ஆப்பேக்கு**.

ஆபிரகாம், ஆபிராம். Abraham, Abram. ஆதியாகமத்தின்படி இப்பெயருக்கு அர்த்தம் என்னவென்றால் 'திரளான ஜாதி களுக்குத் தகப்பன்.' ஆதி 17^{5}. இதின் மூலார்த்தம் 'சிறப்பு அடைந்த தகப்பன்.' ஆபிரகாமுடைய சரித்திரத்தை இவ்விடம் விபரமாய்ச் சொல்வது அனாவசியம். ஆதி 11-25 அதிகாரங்கள் பார்க்க.

ஆபிரகாம் பாபிலோனியா தேசத்திலி ருந்து கானானுக்கும் எகிப்துக்கும் வந்து தன் ஜீவகாலபரியந்தம் அந்தந்த இடங்களில் கூடா ரம் அடித்து வசித்தான். இவனுக்கும் பாபி லோனியருக்கும் இப்படித் தேசவித்தியாசம் உண்டானதுமல்லாமல் பக்திவிஷயத்திலும் பெரிய வித்தியாசம் இருந்தது. அது என்ன வென்றால்: அவர்களைப்போல இவன் பல தேவர்களை வணங்காமல் யேகோவாவே தனக் கும் தன் குலத்துக்கும் தேவன் என்று அவர் ஒருவரையே வணங்கிவந்தான். ஆபிரகாம் தன் ஜீவியகாலமெல்லாம் யேகோவாவை நம்பி (கலா 3^{6}), அவர் வெளிப்படுத்தின சித் தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படிந்து எல்லா நீதிக்கும் முன்மாதிரியாய் நடந்தான். மற்றக் கானானியர் தங்கள் தேவர்களுக்கு நரபலி செலுத்தினதுபோல இவனும் யேகோவா வின்பேரில் பக்தியுடையவனாய் தன் குமா னைப் பலி செலுத்துவதற்கு இணங்கின போதிலும் யேகோவா இவன் மகனுக்குப் பதிலாக ஆட்டை பலியாக ஏற்றுக்கொண்ட தினால், அதுமுதல் எபிரெயர் நரபலி யேகோ வாவுக்கு வெறுப்பான காரியம் என்று அறிந் தார்கள் எனத் தோன்றுகிறது.

யேகோவாவுக்கும் ஆபிரகாமுக்கும் உடன்படிக்கை உண்டானது. அதற்கு அடையாளமாக விருத்தசேதனம் ஏற்பட்டது. ஆதி 17[23]. சாராள் மரித்த பிறகு ஆபிரகாம் மக்பேலா என்னுங் குகையைத் தன் குடும்பத்திலுள்ளவர்களுக்காக வாங்கினது அவர்கள் வசித்த இடமாகிய கானான் அவர்களுக்குச் சுதந்தர பூமியாயிருக்கும் என்னும் இவனுடைய நம்பிக்கையைக் காட்டுகிறது.



ஆபரணம்—பாதசரம்.

ஆபிரகாம் உடைய மடி. **Abraham's Bosom.** மூலபாஷையின் வழக்கத்தின்படி விருந்திலே விருந்தாளிகள் உட்கார்ந்திருக்கையில், ஒருவன் அவனுக்கடுத்தவனின் மடியில் சாய்ந்திருப்பான் என்று சொல்வதினால் அது இருவருக்கு மிருக்கிற நேசத்தைக் காட்டும். லூக் 16[22] யோவா 13[23]. ஆதலால் ஆபிரகாம் லாசருவைத் தானிருக்கும் மோட்ச பாக்கியத்திலே பங்கடையும்படி சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டான் என்பதைக் காட்டுவதற்கு இப்படிச் சொல்லியிருக்கிறது.

ஆபீப். **Abib.** பயிர் கதிர் விடும் மாதம். இஸ்ரவேலர் சிறையிருப்பிலிருந்து வந்த பிறகு அதற்கு 'நிசான்' என்னும் பெயர் இடப்பட்டது. யாத் 13[4]. இது எபிரெயருக்கு வருஷத்தின் முதலாம் மாதம். இதில் பஸ்காப் பண்டிகை கொண்டாடுவார்கள். நெகே 2[1].

ஆபேக். **ஆப்பெக்கு** காண்க.

ஆபேத்நேகோ. **Abednego.** [நேபோ என்னும் தேவனின் ஊழியன்]. தானி 1[7].

ஆபேல். **Abel.** [சுவாசம் அல்லது மூச்சு]. ஆபேல் செலுத்தின பலி மேன்மையுள்ளது என்பதற்குக் காரணம் ஆதியாகமத்தில் சொல்லியிருக்கவில்லை. ஆதி 4[2-10]. எபி 11[4]-ல் இவனுடைய விசுவாசம் அதற்குக் காரணம் என விளங்குகிறது. இரத்தச் சாட்சிகளில் ஆபேல் முதல்வன் என்று இயேசு சொன்னார். மத் 23[35] லூக் 11[51].

ஆபேல் சித்தீம். **Abel shittim.** [வேலமாமுள்ள மேய்ச்சல் தரை]. மோவாப் தேசத்திலுள்ள ஒரு ஊர். எண் 33[49].

ஆபேல் பெத்மாக்கா. **Abel Beth-maacah.** இஸ்ரவேலின் வட எல்லைக்குச் சமீபமாயுள்ள ஒரு ஊர். 1 இரா 15[20].

ஆபேல் மாயீம். **Abel Maim.** [தண்ணீர் உள்ள பசும் புற்றரை]. ஆபேல் பெத்மாக்காவும் இதுவும் ஒன்றுதான். 2 நாளா 16[4].

ஆபேல் மிஸ்ராயீம். **Abel Mizraim.** [எகிப்தியர் இருந்த மேய்ச்சல் நிலம்]. ஆதி 50[11].

ஆபேல் மேகோலா. **Abel Meholah.** [கூத்து விளையாடும் மேய்ச்சல் தரை]. யோர்தான் நதியின் பள்ளத்தாக்கிலுள்ள ஓரிடம். எண் 7[22] 1 இரா 19[16].

ஆபோர். **Habor.** ஒரு நதி. 2 இரா 17[6].

ஆப்பெக்கு. **Aphek.** [கோட்டை]. இந்தப் பெயர் பலஸ்தீனாவிலுள்ள நாலு ஊர்களுக்கு இருந்தது.

1. யோசு 12[18].
2. =ஆப்பீக். யோசு 13[4].
3. 1 சாமு 29[1].
4. 1 இரா 20[26].



ஆபரணம் – சிரபூஷணம்.

ஆப்ரான். **Hauran.** யோர்தான் நதிக்குக் கிழக்கே எர்மோன் மலைக்குத் தெற்கேயுள்ள செழிப்பான ஒரு நாடு. எசே 47[16].

ஆப்னா. **Abana.** தமஸ்கு பட்டணத்திலுள்ள ஆறு. 2 இரா 5[12].

ஆமணக்குச் செடி. **Castor oil plant.** எபிரெய பதம் 'சுரையைக்' குறிக்கிறது. யோனா 4[6].

ஆமாத். **Amad.** யோசு 19[26].

ஆமாத். **Hamath.** [கோட்டை]. இஸ்ரவேலின் வட எல்லையிலுள்ள சீரியா ராஜ்யத்திற்குள் ஒரு நாடும், அதின் தலை நகரியும். சாலொமோன் ராஜ்யமும், இரண்டாம் யெரொபெயாமின் ராஜ்யமும், ஆமாத்தின் எல்லைகள்வரையும் எட்டியிருந்தன. ஆமாத்

ஒரு பெரிய பட்டணம். 2 நாளா 8^4 2 இரா 13^{25} ஆமோ 6^2 ஏசா 11^{11}.

ஆமாத்சோபா. Hamath Zobah. 2 நாளா 8^3.

ஆமாம். Amam. யோசு 15^{26}.

ஆமால். Amal. 1 நாளா 7^{35}.



ஆபரணம்—மூக்குத்தி.

ஆமான். Haman. யூதர்களுக்கு விரோதி. இவன் சரித்திரம் எஸ்தரின் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது. பூரீம் பண்டிகைநாளில் யூதர்கள் இவன் பேரைச் சபிப்பார்கள். சில சமயங்களில் இவனைப்போல் ஒரு பொம்மை செய்து தூக்குமரம் ஒன்றில் அதைத் தூக்குவார்கள். அப்படிச் செய்தல் சிலுவைமரத்தில் அறையுண்ட இயேசுகிறிஸ்துவைப் பரிகாசம் பண்ணுவதுபோல் இருக்கிறது என்று கி-பி. ஐந்தாம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்கள் எண்ணினதினால் இதினிமித்தம் இவர்களுக்கும் யூதர்களுக்கும் அடிக்கடி சண்டை சச்சரவு உண்டானது.

ஆமி. Ami. = ஆமோன். எஸ்ரு 2^{57} நெகே 7^{59}.

ஆமூல். Hamul. [இரக்கம் பெற்றவன்]. ஆதி 46^{12}.

ஆமென். Amen. இது 'உண்மையாகவே' அல்லது 'உறுதியாகவே' என அர்த்தங்கொள்ளும் எபிரெய பதம். இது ஜெபத்தின் உறுதிக்கும் அது நிறைவேறுதலுக்கும் உள்ள சம்பந்தத்தைக் காட்டுகிறது. சில சமயங்களில் இப்பதத்தை இரண்டு தடவை சொல்லுவார்கள். எண் 5^{22} உபா 27^{15} சங் 41^{13}. ஆதி கிறிஸ்தவ சபையார் இச்சொல்லைத் தங்கள் ஜெபத்தில் வழங்கினார்கள். 1 கொரி 14^{16}. இப்பதம் புதிய ஏற்பாட்டில் 'மெய்யாகவே' என மொழி பெயர்த்திருக்கிறது. இயேசுகிறிஸ்து முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்களில் இந்த வார்த்தையைச் சொன்னார். மத் 5^{18} யோவா 1^{51}. இயேசுகிறிஸ்து உண்மையுள்ளவர் என்பதைக் காட்டுதற்கு 'ஆமென்' எனப் பெயர் அவருக்குச் சொல்லியிருக்கிறது. வெளி 3^{14} 2 கொரி 1^{20} காண்க.

ஆமை. Tortoise. பலஸ்தீனா தேசத்தில் கல்லாமை நீராமைகள் உண்டு. லேவி 19^{29}-ல் சொல்லியிருப்பது ஆமையல்ல, பெரிய ஓணான் என நாம் நினைக்கவேண்டும்.

ஆமோக். Amok. நெகே 12^7.

ஆமோஸ். Amos. [சுமை தாங்குகிறவன்].

I. **தீர்க்கதரிசி.** தீர்க்கதரிசனம் எழுதினவர்களில் இவன் முதல்வன். இவன் பெத்லெகேமுக்குத் தெற்கே தெக்கோவில் கம்பளியாடுகள் மேய்த்தவனும் புதிய ஏற்பாட்டின்காலத்தில் யோவான்ஸ்நானகன் வாசஞ்செய்த வனாந்தரத்தில் காட்டத்திப்பழங்கள் பொறுக்கினவனுமாய் இருந்தான். கம்பளிரோமம் கொண்டுபோய்ப் பல ஊர்களிலும் வியாபாரஞ் செய்து திரிந்தவனாகையால் இவன் யூதாவின் ராஜ்யத்தில் இருந்தாலும் இஸ்ரவேல் ராஜ்யத்தில் நடக்கிற சங்கதிகளை அறிந்து யூதாவின் ராஜ்யத்தில் உசியாவும், இஸ்ரவேல் ராஜ்யத்தில் இரண்டாம் யெரொபெயாமும் கி-மு. 775-750-வரை அரசாளுங்காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யத்தைப் பற்றித் தீர்க்கதரிசனங் கூறினான். ஆமோஸ் காலத்தில் 'தீர்க்கதரிசிகளின் புத்திரர்' என்ற ஒரு வகுப்பார் வழக்கத்தின்படி தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்களாயிருந்தார்கள். ஆமோஸ் அந்த வகுப்பைச் சேர்ந்தவனல்ல. கடவுள் தனக்கறிவித்தவைகளைக் கபடு, தந்திரம் ஒன்றுமில்லாமல் உண்மையாயும் உறுதியாயும் ஜனங்களுக்குத் தெரிவித்தான். இவனுடைய காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யம் செல்வம் பொருந்தியதாய் இருந்தும் அதில் எங்கும் பலவித அநியாயம், துன்மார்க்கம், விக்கிரகாராதனை, கடவுளை அலட்சியம் பண்ணுதல் முதலான அக்கிரமங்கள் நடந்தன. ஆமோஸ் தீர்க்கதரிசனங்கூற ஆரம்பித்தபோது, கள்ளத் தீர்க்கதரிசியாகிய அமத்சியா என்பவன் அவனுக்கு விரோதியானான். ஆமோ 7^{10}. ஆனால் ஆமோஸ் அவனுக்குப் பயப்படாமல் இஸ்ரவேல் ராஜ்யத்தில் நடக்கும் பாவங்களுக்குத் தண்டனையாக அசீரியர் அவர்களுக்கு விரோதமாய்ப் படையெடுத்து வருவார்கள் என்று தீர்க்கதரிசனம் சொன்னான்.

II. **இவன்கால நிலைமை.** மெய்ப்பக்தியில்லாத ஆராதனை (2^8) சன்மார்க்க முறைமையில்லாமை (2^7) தந்த மாளிகைகள் (3^{15}) மதுபானம் (6^6) அநியாயம் (2^8) சிற்றின்பப் பிரியரான ஸ்திரீகளின் குரூரம் (4^1) பரிதானம் (5^{12}) வியாபாரத்தில் பொய்யும் திருட்டுமான லாபம் (8^5) ஆகிய அக்கிரமங்களை

ஆமோஸ் கண்டு தீர்க்கதரிசனம் சொல்லத் துவங்கினன்.

III. பிரிவுகள்.

(1) 1^2-2^{16}. தமஸ்குவும், காத்சாவைச் சுற்றியிருக்கிற மற்ற ஜனங்களும் செய்த மாபாதகங்களும், அவைகளுக்காக வரும் தண்டனைகளும்.

(2) 3^1-5^{27}. மூன்று பிரசங்கம். இதில் பாவத்திற்காக ஜனங்கள் தமஸ்குவுக்கு அப்பாலே போகவேண்டும் என்று சொல்லுகிருன்.

(3) 6 அதி. நிர்விசாரிகளுக்கு இன்னொரு பிரசங்கம்.

(4) 7^1-9^{10}. இதில் வெட்டுக்கிளி, அக்கினி, தூக்குநூல், கனி, பாழான தேவாலயங்கள் ஆகிய ஐந்து காட்சிகள் சொல்லியிருக்கின்றன.

(5) 9^{11-16}. முடிவுரை.

சில வித்துவான்கள் இந்த வசனங்கள் வேறே ஆக்கியோனுல் இயற்றப்பட்டன என்று நினைக்கிருர்கள்.

IV. ஆமோஸ் செய்த போதனை. இவனுடைய காலத்திற்கு முன்னே ஜனங்கள் வெவ்வேருன தேசங்களில் வெவ்வேருன தேவர்கள் இருந்தார்கள் என எண்ணினர்கள். ஆமோஸ் எங்குமுள்ள யேகோவாவைத் தவிர வேறே கடவுள் இல்லையென்றும் (9^7) யேகோவா நீதியுள்ள தேவன் என்றும் அநீதியுள்ளவர்களைத் தண்டிப்பார் என்றும் பஞ்சம், நோய் முதலியவை யேகோவா கூறின தண்டனைகள் என்றும் போதித்தான்.

எபிரெயர் யேகோவாவுக்கும் தங்களுக்கும் இருக்கும் சம்பந்தம் ஒருக்காலும் அழியாது என்று எண்ணமுள்ளவர்களா யிருந்தார்கள். இதைப்பற்றி ஆமோஸ் இந்தச் சம்பந்தம் சடங்காசாரத்தினுல் அல்ல, உத்தம மெய்ப்பக்தியினுல் நிலைநிற்கும்; அப்படியில்லாமல் அவர்கள் துன்மார்க்கராயிருந்ததினுலே சிறைப்பட்டுப்போவார்கள் என்று சொன்னுன்.

ஆமோஸ். Amos. இவன் ஆமோஸ் தீர்க்கதரிசியல்ல. லூக் 3^{25}.

ஆமோத்சு. Amoz. ஏசாயாவின் தகப்பன். இவன் ஆமோஸ் தீர்க்கதரிசியல்ல. ஏசா 1^1.

ஆமோனு. Hamonah. [திரள்]. எசே 39^{16}.

ஆமோன். Amon.

1. யூதாவின் ராஜா. 2 இரா 21^{19}.

2. சமாரியா பட்டணத்துத் தலைவன். 1 இரா 22^{26}.

3. இவன் பெயர் ஆமி என்றும் சொல்லப்படும். எஸ்ரு 2^{57} நெகே 7^{59}.

ஆமோன் கோகு. Hamon Gog. எசே 39^{11}.

ஆயக்காரன். Publican. ரோமராயன் தன் ராஜ்யத்தில் ஒவ்வொருநாட்டிலும் வரி சேர்க்கும்படி பிலாத்துவைப்போலத்தேசாதிபதி ஒருவனை நியமித்திருந்தான். இவன் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு வியாபாரம் முதலியவைகளுக்காகக் கொண்டுபோகப்படும் சாமான்களுக்கு வரி வாங்கும்படி ஆங்காங்குள்ள ஆயத்துறைகளில் ஆயக்காரரை நியமித்தான். இந்த ஆயக்காரர் ஜனங்களை அதிக தொந்தரவு செய்து அநியாயமாய் நடத்தினதினுல் எந்தத் தேசத்து ஜனங்களும் அவர்களையும் அவர்கள் வேலையையும் வெறுத்தார்கள். அப்படியிருந்தும் பலஸ்தீனு தேசத்திலுள்ள யூதர்களிற் சிலர் தங்களையும் தங்கள் தேசத்தையும் ஜெயித்து அரசாளும் ரோமை அதிகாரிகளின் தயவு தங்களுக்கு வேண்டியிருந்ததால் ஆயக்காரராயும் சாதாரண ஆயக்காரருக்குத் தலைவராயும் இருந்தார்கள். லூக் 19^2. இதினிமித்தம் மற்ற யூதர்கள் இவர்கள்பேரிலே பகையுள்ளவர்களானுர்கள்.

ஆயத்தநாள். The day of preparation. யூதர்களுடைய ஓய்வுநாளுக்கும் முதல் ஓய்வுநாளுக்கும் ஒவ்வொரு பண்டிகைத் தினத்துக்கும் முந்தினநாள். இவைகளில் பஸ்காவுக்கு முந்தின ஓய்வுநாள் யூதருக்கு விசேஷித்தநாள். மத் 27^{62} யோவா 19^{14}.

ஆயம். Customs. எஸ்ரு 4^{13}.

ஆயலோன். Aijalon.

1. தாண் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு ஊர். யோசு 19^{42}.

2. செபுலோனைச் சேர்ந்த ஒரு ஊர். நியா 12^{12}.

ஆயா. Aija.

1. = ஆயியும். நெகே. 11^{31}.

2. ரிஸ்பாளின் தகப்பன். 2 சாமு 3^7.

ஆயாத்து. Aiath. = ஆயி. ஏசா 10^{28}.

ஆயி. Ai.

1. யோசு 7^2.

2. எரே 4^3.

ஆயிரம் வருஷம். Millennium. பிசாசானவன் கட்டப்பட்ட பிற்பாடு இரத்தச்சாட்சியாய் மரித்தவர்கள் கிறிஸ்துவோடு அரசாளும் காலம். முதல் உயிர்த்தெழுதல் இதற்குத் துவக்கம். இதின் முடிவில் பிசாசானவன் தான் அழிந்துபோவதற்கு முன் சிலகா

லம் விடுதலைபெற்று ஜனங்களை எமாற்ற அவனுக்குத் தருணம் கிடைக்கும். வெளி 20$^{2-7}$.

வெளிப்படுத்தப்பட்ட வாக்கியத்தை எழுதின ஆக்கியோனைத்தவிர புதிய ஏற்பாட்டை எழுதின மற்றெந்த ஆக்கியோன்களும், இயேசுவும் இதைப்பற்றித் தெரிவிக்கவில்லை. யூதர்கள் மேசியாவின் வருகையையும் அவர் இந்த உலகத்தில் ஸ்தாபிக்கும் ராஜ்யத்தையும் குறித்து எப்படி நம்பினர்களோ, அப்படியே ஆதி கிறிஸ்தவர்களும் இந்தக் காலம் வரும் என்று நினைத்து இதை ஒப்புக்கொண்டார்கள். இதுவரையும் சிலர் அப்படியே நினைக்கிறார்கள். ஆனல் வேதசாஸ்திரிகள் வெளிப்படுத்தப்பட்ட விசேஷத்தில் எழுதியிருக்கும் அநேக மறைபொருளான வாக்கியங்களைப் போலவே இதுவும் இருக்கிறது என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆதி கிறிஸ்தவர்களும், அவர்களுக்குப் பின்னுள்ளவர்களிற் சிலரும் அப்போதைக்கப்போது ஆயிரம் வருஷ ராஜ்யத்திற்குக் காலம் சமீபமாய்விட்டது என்று கூறியிருக்கிறார்கள். ஆனல் இப்புஸ்தகத்தில் செய்யுள்போல எழுதின காட்சிகளை நாம் சொல்லார்த்தமாய் எடுக்கப்படாது.

ஆயின். Ain. எபிரெய அக்ஷர வரிசையில் பதினாறும் எழுத்து. சங் 119^{121}.

ஆயின். Ain. [ஊற்று].

1. லேவியரின் பட்டணங்களில் ஒன்று. யோசு 15^{32}.

2. கானுனுக்கு வடகிழக்கேயுள்ள ஒரு ஊர். எண் 34^{11}.

ஆயீ. Ai, Hai. [குவியல்]. ஆதி 12^{8} 13^{3} யோசு 7^{2} 8^{1}.

ஆயுதம். Arms, Weapons.

1. எபிரெயர் தங்கள் தேசத்திலுள்ள மற்ற ஜனங்களைப்போல் கவசம் முதலானவை தரித்து ஈட்டி முதலானவை பிடித்து யுத்தஞ் செய்வார்கள்.

யுத்தாயுதங்கள் பலவகையாயிருந்தன.

புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கும் ஆயுதங்கள் ரோமராஜ்யத்துப் போர்ச்சேவகர் அணிந்தவைகள். எபே 6^{11}.

2. எபிரெயர் கையில் ஏந்தும் ஆயுதங்களிற் சில :—

(1) எறிவல்லையம். யோபு 41^{26}.

(2) வளைதடி. எசே 39^{9}.

(3) வேல். எரே 50^{42}. இது வளைதடியிலும் கொஞ்சம் பெரியது.

(4) ஈட்டி. யோசு 8^{18} நெகே 4^{13}.

இராணுவத்தலைவர்களும் ராஜாக்களும் நெகேமியாவின் காலத்திலுள்ள ஜனங்களும் தரித்த ஈட்டிகள் வேலைப் பார்க்கிலும் பெரியனவாயிருக்கும். பாகாலின் தீர்க்கதரிசிகள் தங்களைக் கீறிக்கொண்ட ஈட்டிகள் (1 இரா 18^{28}) பெரிய ஈட்டிகள் அல்ல எனத் தோன்றுகிறது.

(5) பட்டயம். எபிரெயருடைய பட்டயம் வளைவில்லாததும் குறுகினதாயும் இருந்தது. சில இருபுறமும் கருக்குள்ளன. சங் 149^{6}. இருபுறமும் கருக்குள்ளது ஒருமுழம் நீளமுள்ள குத்துவாள். நியா 3^{16}. பட்டயத்தின் உறை வெண்கலத்தினாலும் தோலினாலும் செய்யப்பட்டது. 1 நாளா 21^{27}. பட்டயம் உறைகச்சையில் தொங்கும். 2 சாமு 20^{8}.



கவசம்.

(6) வில்லாயுதங்கள் பலவிதமாய் இருந்தன. யுத்தவில் பெரிதாயிருந்தது. சக 9^{10}. அம்புகள் அம்பறாத்தூணியில் வைக்கப்படும். யோபு 39^{23} சங் 127^{5}.

(7) கவண் யுத்தவீரரும் மேய்ப்பர்களும் உபயோகிப்பார்கள். 1 சாமு 17^{40}. சேனையில் கவண்காரர் பலர் இருந்தார்கள். 2 இரா 3^{25}. கவண் எறிவதில்பென்யமீன்கோத்திரத்தார் அதிக திறமையுள்ளவர்கள். நியா 20^{16}.

(8) இருப்பு முளையடித்த தண்டாயுதமும் வெட்டாயுதமும் சிலர் யுத்தத்திற்குக் கொண்டுவருவார்கள். எரே 51^{20} எசே 9^{2}.


(9) கேடகம். வழக்கத்தில் சிறிதாயிருக்கும். ஆனல் எபே 6^{16}-ல் சொல்லியிருக்கும் ‘கேடகம்’ ரோமைச் சேனைகள் பிடிக்கும் பெரிய பரிசை. 2 சாமு 22^{31}.

(10) பரிசை முழுத் தேகத்தையும் காப்பதற்கு அணியும் கேடகம். எபே 6^{16} சங் 35^{2}.

(11) தலைச்சீரா. இராணுவத்தலைவர்கள் வெண்கலச் சீராவும் (1 சாமு 17^{5}), சாதாரண போர்வீரர் தோற் சீராவும் தரிப்பார்கள். எபே 6^{17}-ல் சொல்லியிருப்பது வெண்கலத் தலைச்சீரா.

(12) கவசம். போர்க்கவசம். 1 சாமு 17^{5}. மார்க்கவசம். 1 நாளா 26^{14} எபே 6^{14}. இது மார்பையும் முதுகையும் காக்கும் கவசம். சில கவசம் சந்துகளுள்ளவை. இவை தொடையைக் காக்கும் கவசம். 1 இரா 22^{34}.

(13) வெண்கல காற்கவசம். 1 சாமு 17^{6}.



ஈட்டி, வில், கத்தி.

ஆயுதசாலை. **Armoury.** பல இடங்களிலேயும் இருக்கும். சாலொமோனின் மாளிகையில் ஒன்றும் தேவாலயத்தில் ஒன்றும் இருந்தது. நெகே 3^{19} 1 இரா 10^{17} 2 இரா 11^{10}.



கவசம்.

ஆயுததாரி. **Armour-bearer.** தன் எஜமானின் பரிசை கவசங்களையும் ஏனைய யுத்தாயுதங்களையும் கூடக் கொண்டுபோகிறவன். நியா 9^{54} 1 சாமு 14^{7} 2 சாமு 18^{15}.



கேடசம்.

ஆரதா. **Haradah.** எண் 33^{24}.

ஆரராத். **Ararat.** **அரராத்** காண்க.

ஆரா. 1. = **Ara.** 1 நாளா 7^{38}.

2. = **Hara.** இஸ்ரவேலர் சிறைப்பட்டுப் போன ஒரு ஊர். 1 நாளா 5^{26}.

3. = **Arah.** 1 நாளா 7^{39}.

4. = **Arah.** எஸ்ற 2^{5}.

ஆராதனை. **Worship.**

1. எந்தத் தேசத்திலும் எக்காலத்திலும் ஜனங்கள் கடவுளுக்குச் செய்யும் ஆராதனையில் வணக்கம், ஸ்தோத்திரம், விண்ணப்பம் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கும். இவைகளோடு எபிரெயர் கானானியர் முதலானவர்கள் அடிக்கடி பலியும் செலுத்துவார்கள். பிற்காலத்திலுள்ள யூதர்கள் ஆராதனை நடத்தும்போது பிரசங்கம் செய்வது வழக்கம்.

2. ஆராதனை தனியாராதனை, குடும்ப ஆராதனை, பகிரங்க ஆராதனை என மூன்று வகைப்படும். பஸ்கா பண்டிகையில் குடும்ப ஆராதனை அதிகம் விசேஷித்தது.

3. தேவாலயங்களில் செலுத்தின பலி பலவிதமாயிருந்தது. **பலி** காண்க.

4. கடவுள் பிரசன்னராயிருக்கிறார் என மனதிற்கொண்டு ஜெபத்தில் காட்டும் வணக்கம் பலவிதமுண்டு. பாதரட்சையைக் கழற்றிப்போடுவார்கள். யாத் 3^{5}. முழங்கால் படியிடுவார்கள் அல்லது முடக்குவார்கள். 1 இரா 19^{18}. விக்கிரகாராதனைக்காரர் சிலையை முத்தம் இடுவார்கள். ஓசி 13^{2}. யாவரும் மார்பில் அடித்துக்கொள்ளுவார்கள். லூக் 18^{13}. முகத்தை மூடிக்கொள்ளுவார்கள். யாத் 3^{6}. முகங்

குப்புறவிழுவார்கள். ஆதி 17^{3}. இவ்விதமாய் ராஜாக்களுக்கும்பெரியோருக்கும்வணக்கஞ் செய்வார்கள். ஆதி 18^{1} 2 சாமு 14^{3}. யவீரு இயேசு கிறிஸ்துவுக்கு இவ்வித வணக்கம் செய்தான். மாற் 5^{22}. ஆனால் இவ்விதமான வணக்கம் கடவுளுக்கே உரியது என்பது ஆதி கிறிஸ்தவர்களின் தீர்மானம். அப் 10^{26} வெளி 19^{10}.

5. ஸ்தோத்திரம் கடவுளுடைய நன்மைகளுக்காகவும் அவருடைய குணாதிசயங்களுக்காகவும் சர்வ ஜனங்களும் செய்யும் வழிபாடு. யாத் 15 அதி. சங் 104. தேவாலயத்தில் பாடுதற்கு சங்கீதக்காரர் இருப்பார்கள். அவர்களும் மற்றவர்களும் மாறிமாறிப் பாடுவார்கள். சங் 136. புதிய ஏற்பாட்டில் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் செய்யும் ஸ்தோத்திரம் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. ஆரோக்கிய மானவர்களும் துன்பத்தில் ஆறுதல் அடைந்தவர்களும் பாவமன்னிப்புப் பெற்றவர்களும் அப்போஸ்தலர் முதலான பக்தர்களும் இவ்விதமாய் ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் இதற்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு. ஆராதனையில் கீர்த்தனைகளினாலும் கீதவாத்தியங்களினாலும் ஸ்தோத்திரித்தார்கள். யாத் 15^{20}. சில சமயங்களில் சந்தோஷத்திற்காக நடனஞ்செய்தார்கள். யாத் 15^{20} 2 சாமு 6^{14}.

ஆதி கிறிஸ்தவர்கள் ஆராதனையில் கீதங்கள் கீர்த்தனைகள் முதலான பாட்டுகளை உற்சாகமாய்ப் பாடினார்கள். எபே 5^{19} கொலோ 3^{16}. அவர்கள் பாடின பாட்டுகளுக்குள் 1 கொரி 13-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கும் அன்பைப்பற்றிய கீதம் ஒரு நல்ல திருஷ்டாந்தம்.

6. கடவுள் செய்த நன்மைகளை இன்னும் செய்யவும், ஆபத்துக்காலத்தில் உதவிபுரியவும், தேகசுகம் மழை தானியவிளைவு முதலான விசேஷித்த நன்மைகளைச் செய்யவும் அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவது வழக்கம். யாத் 5^{22} 8^{13} மு. தேவாலயத்திலும் பகிரங்க ஆராதனையில் இவ்விதமாய் விண்ணப்பம் செய்வார்கள். சாலொமோன் ராஜா இவ்விதமாய் விண்ணப்பம் செய்தான். 1 இரா 8^{22-53}. சீலோ என்னும் பரிசுத்த ஸ்தலத்தில் அன்னாளும், தேவாலயத்தில் ஆயக்காரனும் தனிமையாய் விண்ணப்பம் செய்தார்கள். தங்கள் தங்கள் வீட்டிலேயும் ஆராதனை நடத்துவது எபிரெயருக்கு வழக்கம். தானி 6^{10} அப் 10^{2}.

7. பழைய ஏற்பாட்டில் ஆராதனையில் பூர்வீகத்தில் பிரசங்கம் செய்கிற வழக்கமில்லை. எபிரெயர் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து வந்தபோது அவர்களில் அநேகர் எபிரெய பாஷை அறியாததினால், ஓய்வுநாள்தோறும் வேதசாஸ்திரிகள் அந்தப் பாஷையில் எழுதின மோசேயின் நியாயப் பிரமாணத்தை வாசித்து ஜனங்கள் வழங்கின பாஷையில் அதை வியாக்கியானம் செய்வார்கள். பிற்காலத்தில் ஆராதனையில் பிரசங்கம் செய்கிற வழக்கத்திற்கு இது ஆரம்பமாயிருந்தது. நெகே 8^{3}. இயேசுகிறிஸ்துவின் காலத்திலுள்ள யூதர்கள் எந்த ஜெப ஆலயத்திலும் ஓய்வுநாள்தோறும் வேதவாக்கியத்தைப்பற்றி ஆராதனையில் பிரசங்கம் செய்வார்கள். இயேசு இவ்விதமாய்ப் பல தடவைகளில் திவ்விய உபதேசம் செய்தார். மத் 4^{23} மாற் 1^{21}. பவுலும் அப்படியே செய்தான். அப் 13^{14}.

புதிய ஏற்பாட்டில் 'தீர்க்கதரிசனம் சொல்லுகிறது' என்பதற்குப் பதிலாக 'பிரசங்கம் பண்ணுகிறது' என வாசித்தால் அர்த்தம் தெளிவாய்த் தோன்றும். 1 கொரி 11, 13, 14-ம் அதிகாரங்களில் இந்த அர்த்தமாகவே சொல்லியிருக்கிறது.

ஆராதனைக்கூட்டத்தின் பர்வதம். The Mount of Congregation. பாபிலோனியர் தங்கள் தேவர் தேவிகள் வடதேசத்திலுள்ள உயர்ந்த மலைமேல் வசித்துக்கொண்டார்கள் என்று நம்பினார்கள். ஏசா 14^{13}.

ஆராத். Arad.

1. யூதேயாவுக்குத் தெற்கே உள்ள ஒரு ஊர். எண் 21^{1}.

2. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா 8^{15}.

ஆராம். Aram.

1. இதுவும் சீரியா ராஜ்யமும் ஒன்றுதான். ஏறக்குறைய கி-மு. 1300-ளூத்தில் ஆர்மீனியா முதலிய கீழ்த்தேசங்களிலிருந்து சில கோத்திரங்கள் பிரயாணம்செய்து சீரியா தேசம்வரையும் வந்து அங்கே குடியேறிச் சில ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். அவர்களிற் பெரிய வகுப்பார் தமஸ்கு பட்டணத்தை ஜெயித்து அங்கே தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்து மற்றவர்களுக்குத் தலைவர்களாயிருந்தார்கள். இவர்களும் எபிரெயரும் பல ஆண்டுகளாக சம்பந்தப்பட்டவர்களாய் இருந்தார்கள். தாவீது அரசன் ஆராமிலுள்ள கேசூரின் ராஜாவுடைய குமாரத்தியை விவாகம் செய்தான். 2 சாமு 3^{3}. அவளுடைய குமாரனாகிய அப்சலோம் கேசூருக்கு ஓடிப்போனான். 2 சாமு 13^{38}. தாவீது தமஸ்குவையும் சோபா முதலிய பட்டணங்களையும் ஜெயித்தான். 2 சாமு 8^{6} 10^{16}. தாவீது இறந்த

பிறகு தமஸ்கு ராஜ்யம் இஸ்ரவேலரின் ஆளுகையைவிட்டு நீங்கி சிலகாலமாக இஸ்ரவேலருக்கும் யூதாவுக்கும் மாறிமாறி உதவி செய்தது. ஆகாப் ராஜ்யபாரம் செய்தது முதல் நூறு வருஷமாக தமஸ்குவுக்கும் இஸ்ரவேலருக்கும் அடிக்கடி யுத்தம் நடந்தது. ஆகாஸ் அரசாண்டகாலத்திலும் தமஸ்கு யூதாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போனது. ஏசா 7 அதி.

கி-மு. 732-ளுத்தில் அசீரியர் இந்த ராஜ்யத்தை அழித்துவிட்டார்கள். பிற்காலத்தில் சீரியர்களில் அநேகர் கிறிஸ்துமார்க்கத்தைச் சேர்ந்தார்கள். அவர்கள் தங்கள் பாஷையில் கிறிஸ்துமார்க்க புஸ்தகங்கள் அநேகம் எழுதினார்கள். **ஆதாந்தேசம், ஆதாத், ஆசகேல், பெனதாத்** காண்க.

2. கேமுவேலின் மகன். ஆதி 22^{21}.

3. சோமோரின் குமாரன். 1 நாளா 7^{34}

4. எஸ்ரோமின் மகன். மத் $1^{3, 4}$.

ஆராரி. Harari. [மலைவாசி].

1. 2 சாமு 23^{11}. 2. 2 சாமு 23^{33}.

ஆரான். Haran, Charan.

1. ஆபிரகாமின் மூத்த சகோதரன். ஆதி 11^{26}.

2. ஒரு லேவியன். 1 நாளா 23^{9}.

3. காலேபின் மகன். 1 நாளா 2^{46}.

4. மெசொபொத்தாமியாவில் எமோரியர் ஸ்தாபித்த நாகோரின் ஊர். இதில் சந்திரன் அதிகமாய் வணங்கப்படும். ஆதி 11^{31}.

ஆரியே. Arieh. [சிங்கம்]. 2 இரா 15^{25}.

ஆரியோது. Arioch. **அரியோது** காண்க.

ஆரீப். Hariph. = யோரா. நெகே 7^{24} எஸ்று 2^{18}.

ஆரீம். Harim.

1. அந்நிய ஜாதியான ஸ்திரீகளை விவாகம்செய்த குடும்பத்தார். எஸ்று 10^{31}.

2. இருபத்துநாலு ஆசாரிய வகுப்புகளில் மூன்றாவது. 1 நாளா 24^{8}.

ஆரும். Harum. 1 நாளா 4^{8}.

ஆருத்ஸ். Haruz. 2 இரா 21^{19}.

ஆரேதியர். Ardites. எண் 26^{40}.

ஆரேத். Hereth. 1 சாமு 22^{5}.

ஆரேப். Hareph. 1 நாளா 2^{51}.

ஆரோகண சங்கீதம். **A Psalm of ascents.** 120-134 சங்கீதங்கள். 'ஆரோகண' என்பதற்கு 'மேலே ஏறிப்போகிற' என்றர்த்தமாம். ஒருவேளை இஸ்ரவேலர் பாபிலோனியாவின் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்ப 'ஏறிப்போகும்' போது அல்லது அவர்கள் வருஷம்தோறும் பண்டிகை காலங்களில் எருசலேமை நோக்கி 'ஏறிப்போகும்' போது இந்தச் சங்கீதங்களைப் பாடினார்கள். ஸ்திரீ பிராகாரத்திலிருந்து மேலே இஸ்ரவேலர் பிராகாரத்திற்குப் பதினைந்து படிகள் உண்டு. இவைகளின்மேல் பிரயாணிகள் 'ஏறிப்போகும்' போது ஒவ்வொரு படியிலும் நின்று ஒவ்வொரு சங்கீதம் பாடுவார்கள் என்று சில வேதசாஸ்திரிகள் நினைக்கிறார்கள்.

ஆரோதியன். Harodite. ஆரோத்துக்குக் கிட்டப் பிறந்தவன். 2 சாமு 23^{25}.

ஆரோத். Arod. = அரோதி. ஆதி 46^{16} எண் 26^{17}.

ஆரோத். Harod. கில்போவா மலையருகேயுள்ள ஓர் நீரூற்று. இதிலிருந்து எப்பொழுதும் தண்ணீர் ஏராளமாய்ப் பாயும். நியா 7^{1}.

ஆரோவே. Haroeh. = ராயா. 1 நாளா 2^{52} 4^{2}.

ஆரோவேர். Aroer.

1. ரூபன் கோத்திரத்தின் ஒரு ஊர். உபா 2^{36} 4^{47}.

2. யூதாவின் ஒரு ஊர். 1 சாமு 30^{28}.

3. காத் கோத்திரத்தின் ஒரு ஊர். யோசு 13^{25}.

ஆரோன். Aaron. 'ஆரோன்' என்பதின் அர்த்தம் நமக்குத் தெளிவாய்த் தெரியவில்லை. சிலர் நினைக்கிறபடி அதற்கு 'பிரகாசமுள்ளவன்' என்று அர்த்தம். மோசேயின் மூத்த சகோதரனாகிய இவன் எகிப்திலிருந்து வந்த பிரயாணத்தில் மோசேக்கு உதவிக்காரனாய் இருந்து ஜனங்களுக்கு யாத்திரையில் நற்போதனை செய்தவன். யாத் 4^{30}.

இவன் பிறப்பு. யாத் 7^{7}.

இவன் மோசேக்குச் செய்த உதவிகள். யாத் 4-16 அதி.

இவன் மோசேயின் கையை உயர்த்தி நின்றது. யாத் 17^{9}.

இவன் மோசேயோடு சீனாய் மலைக்குப் போனது. யாத் 24^{1}.

இவன் பிரதான ஆசாரியன். யாத் 28-29 அதி. லேவி 8 அதி.

இவன் கோல் தளிர்த்தது. எண் 16, 17 அதி.

இவன் பொன்னினால் கன்றுகுட்டி செய்தது. யாத் 32 அதி.

இவனும் மிரியாமும் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்தது. எண் 12 அதி.

இவன் மோசேயோடு கடவுள் இட்ட கட்டளையை மீறினது. எண் 20^{10}.

பரிசுத்த பூமியில் அல்ல, ஓர் என்னும் மலையில் இறந்துபோனது. உபா 10^6.

இவன் பிறந்து வளர்ந்து ஆசாரியனாய் அபிஷேகம் அடைந்து, பலி செலுத்தி, பன்னிரண்டு கோத்திரத்தின் பேர்களை மார்க்க வசத்தில் தரித்து, மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து, ஜனங்களுக்காக விண்ணப்பம் செய்து அவர்களை ஆசீர்வதித்துவந்ததினால் இவன் இயேசுகிறிஸ்துவுக்கு முன்மாதிரியாயிருந்தான். லூக் 1^5 அப் 7^{40} எபி 5^4 7^{11} 9^4.

ஆரோனின் சந்ததியார். Children of Aaron. **ஆசாரியன்** காண்க.

ஆரோனுடைய தளிர்த்த கோல். Aaron's Rod. எண் 17-ம் அதி. ஆரோனுடைய தளிர்த்த கோல் சாட்சிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டது என்று பிற்காலத்துப் பாரம்பரியம் சொல்லுகிறது. எபி 9^4.

ஆர். Ar. ஒரு ஊர். எண் 21^{15} உபா 2^{36}.

ஆர்து. Ard. =ஆதார். ஆதி 46^{21} 1 நாளா 8^3.

ஆர்லோத் மேடை. Gibeah-ha-araloth. யோசு 5^3.

ஆலயம். Temple. **தேவாலயம்** காண்க.

ஆலா. Halah. அசீரியர் இஸ்ரவேலைக் கொண்டுபோய்ச் சிறையில் வைத்த இடம். 2 இரா 17^6.

ஆலாக். Halak. யோசுவா கானானில் படையெடுத்துப் போனபோது அவன் இந்த மலைக்குத் தெற்கே போகவில்லை. யோசு 12^7.

ஆலி. Hali. யோசு 19^{25}.

ஆலூஸ். Alush. எண் 33^{14}.

ஆலேப். Aleph. சங் 119^1. அ காண்க.



ஆலை.

ஆலை. Press. Fat. Vat. வழக்கமாய் ஒரு ஆலைக்கு மேலே பெரிதும் கீழே சிறிதுமான இரண்டு தொட்டிகள் உண்டு. மேல் தொட்டியில் திராட்சப்பழங்களைப் போட்டுக் காலால் மிதிக்க, ரசம் வாய்க்கால் வழியாக கீழ்த் தொட்டிக்குள் பாயும். பின்பு பெரிய தொட்டியிலுள்ள சக்கையைச் செக்கில் ஆட்டுவதுபோல பிழிந்த மீதி ரசமும் பாயும். ஏசா 63^2 வெளி 19^{15}.

ஆலோசனைக்காரன். Counsellor. பழைய ஏற்பாட்டில் அகித்தோப்பேலைப் போல ராஜாவின் மந்திரி. அதிசயமானவைகளை ஆலோசிக்கிறவர் அசீரியாவிலிருந்து யூதாவை விடுதலைசெய்ய வருவார் என்று ஏசாயா சொல்லுகிறான். புதிய ஏற்பாட்டில் ஆலோசனைச் சங்கத்தைச் சேர்ந்தவனையும் குறிக்கிறது. 1 நாளா 27^{32} ஏசா 9^6 மாற் 15^{43} லூக் 23^{50}.

ஆலோசனைச்சங்கம். Sanhedrin. [கூட உட்கார்ந்து இருக்கிறவர்கள்]. மத் 5^{22} அப் 5^{21} 22^5 யோவா 11^{47}.

அப்போகிரிப்பாவில் இச்சபையின் பெயர் முதலாவது காணப்படுகிறது. யூதர்கள் சிறையிருப்பிலிருந்து வந்தகாலத்தில் விசேஷமாய் நியாயந்தீர்ப்பதற்கு இது ஏற்பட்டது என்று தோன்றுகிறது. கி-பி. 70-ஆம் வருஷத்தில் எருசலேம் பட்டணத்துக்கு அழிவு நேரிட்டபோது இச்சங்கமும் அழிந்தது. இதற்குத் தலைவன் பிரதான ஆசாரியன். இதில் ஒரு வருக்கொருவர் விரோதிகளான சதுசேயர் பரிசேயர் ஆகிய இருகட்சிக்காரர் இருந்தார்கள். அப் 23^6. இயேசுவின் காலத்தில் இந்தச் சங்கத்தின் அதிகாரம் யூதேயாவில் மாத்திரம் இருந்ததினால் கலிலேயாவில் அவர் இருந்தபோது அவருக்கு விரோதமாய் இது ஒன்றும் செய்யக் கூடாததாயிருந்தது. அவர் இறந்தபிறகு இச்சங்கத்தின் அதிகாரம் எங்கும் பரம்பினதினால் தமஸ்குவிலிருந்த கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தக் கூடியதாயிருந்தது. அப் 9^2. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குரியவைகளைப்பற்றி இச்சங்கம் செய்யும் தீர்மானத்துக்கு கீழ்ப்படியாத எந்த யூத நியாயாதிபதியும் மரண ஆக்கினைக்குள்ளாவான்.

1 இந்தச் சங்கம் நியாயப்பிரமாணத்தை மீறுதல், தேவதூஷணம் பேசுதல், கள்ளத் தீர்க்கதரிசனம் உரைத்தல் முதலியவைகளை விசாரிக்கிறதற்குப் புதிய ஏற்பாட்டில் உதாரணங்கள் உண்டு. மத் 26^{57} யோவா 19^7 அப் 4^5 7^{57} 22^{30}. சேவகர்களைக்கொண்டு குற்றவாளிகளைப் பிடித்து அவர்களை விசாரணைசெய்ய இதற்கு அதிகாரம் உண்டு. மத் 26^{47}. ஆனால் மரண ஆக்கினைக்குத் தீர்க்கப்பட்ட குற்றவாளிகளைக் கொல்லுவதற்கு ரோமை அதிகாரிகளின் உத்தரவு பெறவேண்டும். யோவா 18^{31}. ஸ்தேவானின் காலத்தில் எருசலே

மிலே ரோமை அதிகாரிகளின் அதிகாரம் கொஞ்சம் குறைந்ததினால் அவனைக் கொலைக் குத் தீர்த்தபோது உத்தரவுபெருமல் அவ னைக் கொன்றுபோட்டார்கள்.

குற்றவாளி முன்னிற்க இச்சங்கத்தார் அரைவாசி சூழவர உட்கார்ந்துகொண்டு அவனை விசாரணை செய்வார்கள். இதில் எழுபத்தொருபேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் குற்றவாளி பட்சமாய்ப் பேசினல், அவன் திரும்ப குற்றவாளிக்கு விரோதமாய்ப் பேசக்கூடாது. குற்றவாளியை நிர்தோஷி என அவர்கள் அறிந்தால், உடனே அவன் நிர்தோஷி எனத் தீர்ப்பார்கள். நிர்தோஷி அல்லவென்று கண்டால் மறுநாளைக்கு முன் னே தீர்மானம் செய்யமாட்டார்கள்.

ஆவா, ஆபா. Avva. இதுவும் ஈவா என் னும் ஊரும் ஒன்றுதான் எனத் தோன்றுகி றது. இது எங்கே இருக்கிறதென்று தெளி வாய்த் தெரியாது. 2 இரா 17^{24}.

ஆவி. Spirit. 'ஆவி' என்பதினல் குறிக் கப்படுபவை பல.

தேவனின் தன்மை. யோவா 4^{24}.
கடவுள் தம்மை அறியும் அறிவு. 1 கொரி 2^{16}.
அசுத்த ஆவிகள். மத் 10^{1} 1 தீமோ 4^{1}.
பணிவிடை ஆவிகள். எபி 1^{14} அப் 23^{8}.
பாதாளத்திலுள்ளவர்கள். 1 பேது 3^{19}.
மீட்கப்பட்டவர்கள். எபி 12^{23}.
சத்திய ஆவி. 1 யோவா 4^{6}.
வஞ்சக ஆவி. 1 யோவா 4^{6}.

ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவி. எபே 2^{2}.

அடிமைத்தனத்தின் ஆவி. ரோ 8^{15}.
புத்திர சுவிகாரத்தின் ஆவி. ரோ 8^{15}.

பரிசுத்த ஆவியானவருக்கும் மனுஷரு டைய ஆவிக்கும் உள்ள பேதம். ரோ 8^{16}.

புதிய ஏற்பாட்டில் நம்முடைய ஆவி என் பது பரிசுத்தாவியினலே சுத்திகரிக்கப்பட் டுப் புதிப்பிக்கப்பட்ட நமது ஆத்துமாவைக் குறிக்கும். இதினல் ஆவி என்பதற்கும் ஆத்துமா என்பதற்கும் வித்தியாசம் கண்டு கொள்ளலாம்.

பரிசுத்தாவி புது ஜீவனுக்குக் காரணராத லால் அந்த ஜீவன் ஆவிக்குரிய ஜீவனே.

ஆவிக்கேற்ற மாளிகை. 1 பேது 2^{5}.
ஆவிக்கேற்ற பலி. 1 பேது 2^{5}.
ஆவிக்குரிய விவேகம். கொலோ 1^{9}.

ஆவிக்குரிய பாட்டு அல்லது 'ஞானப் பாட்டு.' கொலோ 3^{16}.

'ஞானபோஜனம்' 'ஞானபானம்' 'ஞான கல்' இங்கே ஞானம் என்பது ஆவிக்குரிய ஞானத்தைக் குறிக்கிறது. 1 கொரி $10^{3, 4}$.

லௌகிக காரியங்களை மறந்து மேலான வைகளை நாடும் தியானம் அல்லது பரவசம். 1 கொரி 14^{14} வெளி 1^{10}.

'ஆவியின்படி' அதாவது உள்ளத்தின்படி. ரோ 2^{29} 7^{6} 2 கொரி 3^{6}.

பழைய ஏற்பாட்டில் மனுஷனுடைய ஆவி தேவனிடமிருந்து வருகிறது என்று சொல்வி யிருக்கிறது. ஆதி 2^{7} ஏசா 42^{6}.

புது ஜனனம் பரிசுத்தாவியினல் உண்டா கிறது. ரோ 8^{1-17} 1 கொரி $2^{11, 12}$. **பரிசுத் தாவி** காண்க.

ஆவியர். Avvim. கானன் தேசத்தின் தென்மேற்கிலுள்ள பூர்வீகத்தார். உபா 21^{23}.

ஆவிலா. Havilah. இந்த இடம் அர பிதேசத்தின் வடபாகமும் மத்திய பாகமுமா யிருக்கலாம். ஆதி 2^{11}.

ஆவீத். Avith. ஆதி 36^{35}.

ஆவீம். Avim. பென்யமீன் கோத்தி ரத்தாரின் ஒரு ஊர். யோசு 18^{23}.

ஆவேன். Aven, On.

1. ஆவேன், ஒன், பெத்ஷிமேஸ் ஒன்று தான். ஆமோ 1^{5} ஆதி 41^{5} எரே 43^{13}.

எகிப்து தேசத்திலுள்ள இந்த நகரத்தில் அதிக உற்சாகத்தோடு சூரியனைக் கும்பிட்டு வந்தார்கள். இந்த ஆலயத்தின் ஆசாரிமார் மகா வித்துவான்களாய் இருந்தார்கள். கி-மு. ஏறக்குறைய 200-வருஷத்தில் இதின் மகிமை படிக்குப்படி குறைந்து கிறிஸ்துவின்காலத் தில் முழுதும் இல்லாமற் போய்விட்டது. இப்பொழுது கல் ஸ்தம்பம் ஒன்றுமாத்திரம் அது இருந்த இடத்தைக் காட்டுகிறது.

2. ஆவேன் பள்ளத்தாக்கு. (*The Valley of Aven*) முந்தி வட சீரியாவில் சிறந்த பட்டணமாகிய பாகால்பெக் (*Baalbek*) இருந்த பள்ளத்தாக்கு. இப்பொழுது அவ் விடத்தில் பெரிய பாழான தேவாலயங்கள் மாத்திரம் அதின் அழகையும் மகிமையையும் குறிக்கிறது. ஆமோ 1^{5}.

ஆளுகை. Government. 1 கொரி 12^{28}. **தேவ ஊழியம்** காண்க.

ஆற்றலரி. Willow. இது இரண்டுவிதமா யிருந்தது. லேவி 23^{40} யோபு 40^{22} சங் 137^{2}.

ஆற்றாகு. Athach. 1 சாமு 30^{30}.

ஆனதோத். Anathoth.

1. எருசலேமுக்கு வடக்கே இரண்டு மைல் தூரமாயுள்ள ஒரு ஊர். இது எரேமி யாவின் பிறப்பிடம். யோசு 21^{18} 1 இரா 2^{16} எரே 1^{1}.

2. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா 7^{8}.



வட சீரியாவில் பாழாய்க்கிடக்கும் ஆவேன்.

ஆனாக். Anah.

1. ஏசாவின் மனைவிகளில் ஒருத்தியின் தாய். ஆதி 36².

2. சிபியோனின் மகன். ஆதி 36²⁴.

3. ஓரியரின் பிரபு. ஆதி 36²⁹.

ஆனக்கு, ஆனக்கீம், ஏனக்கீம். Anak, Anakim. [நெட்டைக் கழுத்துள்ளவன்]. (சில வசனங்களில் 'ஏனக்கு' 'ஏனக்கியர்' என்று தமிழில் எழுதியிருக்கிறது). யூதா கோத்திரத்தின் எல்லைக்குள் வசித்த மூன்று வகுப்பாராகிய பூர்வீக ஜனங்கள். காலேப் இவர்களை அங்கிருந்து துரத்திவிட்டான். யோசு 11²¹ 15¹³ 21¹¹ எண் 13²².

ஆனாத். Anath.

1. சம்காரின் தகப்பன். நியா 3³¹.

2. பூர்வீகத்தில் பலெஸ்தீனாவில் வணங்கின ஒரு தேவி. நியா 1³³ ஏசா 10³⁰.

ஆனபு. Anab. எருசலேமுக்குத் தெற்கேயுள்ள ஆனக்கியர் வசித்த ஒரு மலைக் கோட்டை. யோசு 11²¹.

ஆனயா. Anaiah. [யேகோவா பதில் சொன்னார்]. நெகே 10²².

ஆனானி. Hanani. அனானி காண்க.

ஆனான். Hanan. [கிருபை செய்கிறவன்]. ஏழு ஆட்களின் பெயர். நெகே 8⁷ 13¹³ 7⁴⁹ 1 நாளா 8²³ 8³⁸ 11⁴³ எரே 35⁴.

ஆனான். Anan. நெகே 10²⁶.

ஆனீம். Anim. யோசு 15⁵⁰.

ஆனூன். Hanun. [கிருபை பெற்றவன்].

1. ஆமோன் புத்திரரின் ராஜா. 2 சாமு 10².

2. நெகே 3¹³.

3. நெகே 3³⁰.

ஆனேஸ். Hanes. எகிப்திலுள்ள ஒரு ஊர். ஏசா 30⁴.

ஆனேம். Anem. 1 நாளா 6⁷³.

ஆனோக்கு. Hanoch.

1. ஆபிரகாமின் பேரன். ஆதி 25⁴.

2. ரூபனின் மூத்த குமாரன். ஆதி 46⁹.

இ.

இகாயோன். Higgaion. இதற்கு ஒருவேளை 'பயபக்தியை உண்டாக்கும் ஓசையுள்ள இசை' என்றர்த்த மிருக்கலாம். இந்தச் சங்கீதத்தைப் பயபக்தியோடு பாடவேண்டும் எனத் தோன்றுகிறது. சங் 9¹⁶.

இக்கபோத். Ichabod. [மகிமை இல்லாமை]. ஏலியின் பேரன். 1 சாமு 4¹⁹.

இக்கேசு. Ikkesh. [கபடமுள்ளவன்]. 2 சாமு 23²⁶.

இக்கோனியா. Iconium. சின்ன ஆசியாவின் தென்பக்கமாய் மத்தியிலுள்ள ஒரு பட்டணம். இதற்கும் தெர்பைக்கும் இடையில் நல்ல ராஜபாதை உண்டு. இதற்கும் லீஸ்திராவுக்குமுள்ள தூரம் 18 மைல். இது செழிப்பான பூமி. வியாபாரத்துக்குப் பேர் போன இடம். இங்கே யூதர்கள் அநேகர் இருந்தார்கள். பவுலும் பர்னபாவும் இந்தப் பட்டணத்தை இரண்டுதடவை சந்தித்தார்கள். அப் 13⁵¹ 14²¹.

இக்தலியா. Igdaliah. எரே 35⁴.

இசக்கார். Issachar. [இப்பதத்தின் அர்த்தம் ஒருவேளை வெகுமதி]. இவன் பிறப்பு. ஆதி 30^{18}. யாக்கோபு இவனுக்குக் கொடுத்த ஆசீர்வாதம். ஆதி 49^{14}. மோசே இவன் கோத்திரத்தாருக்குக் கொடுத்த ஆசீர்வாதம். உபா 33^{18}. சீனுயில் எழுதின இவன் கோத்திரத்தின் குடிமதிப்பு. எண் 1^{29}. மோவாபில் எழுதின குடிமதிப்பு. எண் 26^{25}. இவன் வம்சம். 1 நாளா 7^{1-5}. இந்தக் கோத்திரத்தின் நாடு யோர்தான் நதிக்கு மேற்கே தாபோர்மலை துவங்கி கில்போவா மலைவரையும் 20 சதுரமைல் பரந்திருந்தது. யோசு 19^{17}. இசக்கார் கோத்திரத்தார் சிசெராவுக்கு விரோதமாய் யுத்தஞ் செய்தார்கள். நியா 5^{15}. தோலா என்னும் நியாயாதிபதி இந்தக் கோத்திரத்தான். நியா 10^{1}.

இஸ்காள். Iscah. ஆதி 11^{29}.

இஸ்கோத். Ish-hod. 1 நாளா 7^{18}.

இஸ்பா. Ishbah, Ispah.

1. 1 நாளா 4^{17}.
2. 2 நாளா 8^{16}.

இஸ்பாக். Ishbak. ஆதி 25^{2}.

இஸ்பான். Ishpan. 1 நாளா 8^{22}.

இஸ்பி பெனேப். Ishbi-benob. 2 சாமு 21^{15}.

இஸ்போசேத். Ishbosheth. [வெட்கத்தின் ஆள்]. சவுலின் நாலாம் மகன். 2 சாமு 2^{8}.=எஸ்பால். 1 நாளா 8^{33}.

இஸ்மவேல். Ishmael. [கடவுள் கேட்பாராக].

1. இவன் தாய் ஆகார். ஆதி 16^{4}. இவள் கர்ப்பவதியாய் இருந்தபோது முதல்முறை வனாந்தரத்துக்குத் துரத்தப்பட்டாள். ஆதி 16^{6} மு. இவன் பிறப்பு. ஆதி 16^{2}. சாராள் ஆகாரை இஸ்மவேலோடு இரண்டாம்முறை வனாந்தரத்துக்குத் துரத்தினது. ஆதி 21^{9}. தேவதூதன் மறுபடியும் ஆகாரைக் கண்டு அவளுக்கு ஆறுதல் சொன்னபிறகு பாரான் வனாந்தரத்தில் தாயும் மகனும் வசித்தார்கள். இவன் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை விவாகம் செய்தான். ஆதி 21^{21}. பாரம்பரியத்தின்படி இஸ்மவேல் அரபியரின் கோத்திரப்பிதா. இவனுக்குப் பன்னிரண்டு புத்திரர் பிறந்தார்கள். ஆதி 25^{22}. இவர்கள் சீனாய் மலையிலுள்ளவர்களின் கோத்திரப்பிதாக்கள். இவர்கள் ஆபிரகாமுடைய மறுமனையாட்டியின் புத்திரர் ஆனதினால் எபிரெயர் இவர்களை, தங்களுக்குக் கொஞ்சம் கீழானவர்கள் என்றெண்ணிவந்தார்கள். இவர்களைப்பற்றிய பிற்காலத்துச் சரித்திரம் ஒன்றுமே சொல்லியிருக்கவில்லை. இஸ்மவேலின் கோத்திரத்திலுள்ள சிலரின் பேர் மாத்திரம் சொல்லியிருக்கிறது. 1 நாளா 2^{17}. இஸ்மவேலருக்கும் இஸ்ரவேலருக்கும் எப்போதும் விரோதம். சங் 83^{6}.

2. யோனத்தானின் சந்ததியானாகிய ஒருவன். 1 நாளா 8^{28}.

3. ஒரு உத்தியோகஸ்தன். 2 நாளா 19^{11}.

4. ஒரு சேனைத்தலைவன். 2 நாளா 23^{1}.

5. தாவீதின் சந்ததியாரில் ஒருவன். எரே 41^{1}.

6. ஒரு ஆசாரியன். எஸ்றா 10^{22}.

இஸ்மாயா. Ishmaiah, Ismaiah.

1. 1 நாளா 12^{4}.
2. 1 நாளா 27^{19}.

இஸ்மோராய். Ishmerai. 1 நாளா 8^{18}.

இஸ்ரகியா. Izrahiah. 1 நாளா 7^{3} 27^{8}.

இஸ்ரவேல். Israel.

1. **பெயர்.** இப்பதம் வேதத்தில் நாலு அர்த்தத்தோடு சொல்லியிருக்கிறது: (1) யாக்கோபின் மறுபெயர், (2) எபிரெய ஜனம், (3) யூதாவிலிருந்து பிரிந்த இஸ்ரவேல் ராஜ்யம், (4) ஞானார்த்தமாய்த் தேவனுடைய பிள்ளைகள்.

இவ்விடத்தில் எபிரெயர் என்று சொல்லப்படும் ஜனங்களைப்பற்றிப் பேசுவோம்.

2. **இவர்களின் சரித்திரம்.** இதைப்பற்றி வேதத்தைக்கொண்டும் பாபிலோனியா அசீரியா எகிப்து முதலிய தேசங்களின் ஜனங்களுடைய சரித்திரத்தைக்கொண்டும் அவர்கள் கற்களில் வரைந்த அக்ஷராதிகளைக் கொண்டும் அறியவேண்டும். இவைகளை ஒன்றாய்ச் சேர்த்துப் பார்த்தால் சாலொமோன் ராஜாவுடைய மரணபரியந்தம் சம்பவித்தவைகளிற் சிலவற்றைப்பற்றிய சரித்திரம் கொஞ்சம் சந்தேகத்துக்குரியதாய் இருந்தாலும் அதற்குப்பின் நடந்தவை பொதுப்பட எல்லாம் தெளிவாய்த் தோன்றும்.

3. **இஸ்ரவேலின் உற்பத்தி.** இஸ்ரவேலரின் ஆதி பிதாக்களாகிய ஆபிரகாம் முதலியவர்களின் சரித்திரத்தை நாம் வாசித்தால் அசீரியாவிலிருந்து சீரியா வழியாய் அங்குமிங்கும் தங்கித் தரித்துப் பிரயாணம் செய்த சில கோத்திரத்தார் கானான் தேசத்திற்கும் அதற்குத் தெற்கே சீனாய்மலை நாட்டிற்கும் போய் இருந்தார்கள் என்றும், இவர்களில் ஐபிராத்து நதியைத் தாண்டிப்போன ஆபிரகாமின் சந்ததியாருக்கு இக்காரணத்தினால் எபிரெயர் எனப் பெயரிடப்பட்டது என்றும், இந்த எபிரெயர் எகிப்துதேசத்திற்குப்

போய் அங்கே வசித்தபோது அடிமைத்தனத்திற் குட்பட்டார்கள் என்றும் அறிவோம். அங்கே இரண்டாம் ராமசேஸ் என்னும் ராஜா கி-மு. 1292-1225-௵ ஆளுகை செய்யும்போது, ராமசேஸ் பித்தோம் என்று பேர்கொண்ட பட்டணங்களைக் கட்டினார்கள். இரண்டாம் ராமசேஸ் மரித்தபிறகு அவனுடைய மகனாகிய மெனெப்தா என்னும் பார்வோன் கி-மு. 1225-1215-௵ ராஜாவாயிருந்தான். அவன் காலத்திலே எபிரெயர் வனாந்தரத்தில் இருந்தார்கள் என்று எழுதின கற்பலகை கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இவன்காலத்தில் எபிரெயர் தாங்கள் அடிமைத்தனத்திலிருந்த எகிப்தை விட்டுப் புறப்பட்டார்கள் என்று அறியலாம்.

4. **இவர்கள் பிரயாணம்.** அக்காலத்திலே பலெஸ்தீனாவில் எகிப்தியருக்குமேலதிகாரம் இருந்ததினாலும், அடிமைத்தனத்திலிருந்து வந்த எபிரெயராகிய இவர்கள் ஐக்கியத்திலும் தீரத்திலும் குறைந்தவர்களானதினாலும், மோசே இவர்களுக்குக் கற்பித்தயேகோவாவின் கட்டளைகளுக்கு இவர்கள் கீழ்ப்படியாதவர்களாய்ப் பலெஸ்தீனாவுக்கு உடனே போகாமல் வனாந்தரத்திலே நெடுநாள் அங்குமிங்கும் தங்கித் தரித்திருந்தார்கள். எண்ணாகமம் முதலிய ஆகமங்கள் இஸ்ரவேலர் வனாந்தரத்திலே நாற்பது வருஷம் திரிந்தார்களென்று சொல்லும்போது 'நாற்பது வருஷம்' என்பது எபிரெய பாஷையில் பெரும்பாலும் நெடுநாள் என்று அர்த்தமாம்.

5. **நியாயாதிபதிகள், ராஜாக்கள்.** இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபிறகு இருநூறு வருஷங்களாக (கி-மு. 1225-1025) அரசரின் ஆளுகை அற்றவர்களாய் இருந்தார்கள். முதலில் மோசேயும் யோசுவாவும் இவர்களை வழிநடத்தி, நியாயப்பிரமாணங்களை ஏற்படுத்தி, புறஜாதிகளைக் கானானை விட்டுத் துரத்தி, அங்கே இவர்களைக் குடியேற்றினார்கள். இவர்களுக்குப் பிறகு ஏகூத், தெபோராள், கிதியோன், யெப்தா, ஏலி, சாமுவேல் என்னும் நியாயாதிபதிகள் விசேஷமாய் இவர்கள்மேல் அதிகாரம் செலுத்தினார்கள். இந்தக்காலமெல்லாம் இவர்களுக்குத் தொந்தரவும் அபாயமும் அடிக்கடி நேரிட்டன. எப்படியென்றால், இவர்கள் முந்தி ஜெயித்தவர்கள் இவர்களுக்கு விரோதமாய் அடிக்கடி படையெடுத்து வந்தார்கள். இதினிமித்தம் கடைசியில் இதுவரையும் பிரிக்கப்பட்ட கோத்திரங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து சவுலை ராஜாவாக ஏற்படுத்தினார்கள். அந்தக் காலமுதல் இஸ்ரவேலர் ஒரே ஜனமாய் இருந்தார்களென்று சொல்லக்கூடும். சவுல் எத்தனைவருஷம் அரசாண்டான் என்பது தெளிவாய்த் தெரியாதாயினும் இவன் மரித்தபிறகு தாவீது கி-மு. 1017-௵ ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டானென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இவன் நாற்பது வருஷம் அரசாண்டு ராஜ்யத்தை ஸ்திரப்படுத்தி அதை விசாலமாக்கிச் சத்துருக்களை முறியடித்து எருசலேமைத் தன் ராஜயத்திற்குத் தலைநகரி யாக்கினதினால் அவன்காலத்தில் ராஜ்யம் சிறப்புற்றிருந்தது. சாலொமோன் கி-மு. 977-937-௵ அரசாண்டான். இவன் காலம்வரையும் இஸ்ரவேலர் மேய்ப்பர்களும் பயிர்செய்கிறவர்களுமாய் இருந்து தீரு, நினிவே, ஆவேன் என்னும் பட்டணங்களின் நாகரீகம், கல்வி, ஆஸ்தி முதலானவை அற்றவர்களுமாய் இருந்தார்கள். ஆயினும் சாலொமோன் எகிப்தின் ராஜகுமாரத்தியை விவாகம் செய்து பெனிக்கேயரின் சிற்பாசாரிகளைக்கொண்டுவந்து தேவாலயத்தையும், மாளிகைகளையும் கட்டுவித்து, கப்பல் மூலமாய் இந்தியாமட்டும் வியாபாரம்செய்து சீர்திருந்தின மற்றஜனங்களைப்போல் இவர்களையும் நாகரீகத்தில் விருத்தியடையச் செய்தான்.

6. **ராஜ்யம் பிரிந்தது.** இஸ்ரவேல் ஜனம் ஏறக்குறைய 80 வருஷகாலம் ஒரே ராஜ்யமாய் இருந்தும் வடபாகத்தில் உள்ளவர்களுக்கும் தென்பாகத்தில் உள்ளவர்களுக்கும் நல் ஐக்கியம் இருந்ததில்லை. சாலொமோன் மரித்தபிறகு வடபாகத்திலுள்ளவர்கள் பலட்சியமுள்ள அவன் மகனாகிய ரெகொபெயாமின் ஆளுகையினின்று தங்களை விலக்கி யெரொபெயாமைத் தங்களுக்கு ராஜாவாக்கினார்கள். ஆகவே கி-மு. 937-௵முதல் பலெஸ்தீனாவில் இஸ்ரவேல் யூதாவென்னும் இரண்டு ராஜ்யங்கள் இருந்தன.

7. **இரண்டு இராஜ்யங்களின் சரித்திரம்.**

முதலாம் காலம்

இஸ்ரவேல்.	கி-மு.	யூதா.	கி-மு.
யெரொபெயாம்	987-915.	ரெகொபெயாம்	987-920.
நாதாப்	915-913.	அபியாம்	920-917.
பாஷா	913-889.	ஆசா	917-876.
ஏலா	889-887.	யோசபாத்	876-851.
சிம்ரி	சிலநாள்.		
உம்ரி	887-875.		

இந்தக் காலத்தில் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் உள்ள பகை அதிகமாய் இருந்தது. சீஷாக் ஆகிய எகிப்தின் ராஜா பலெஸ்தீனாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்தும் இரண்டு ராஜ்யங்களும் சமாதானத்துக்கு வரவே இல்லை. 1 இரா 14^{25}. யூதாவில் ஜனங்கள் பெரும்பாலும் மோசே ஸ்தாபித்த பிரமாணங்களையும் எருசலேம் தேவா

லயத்தின் ஆசாரத்தையும் தாவீதின் குடும்பத்தைச்சேர்ந்த ராஜாக்களேயும் பின்பற்றி வந்தார்கள். இஸ்ரவேலிலே யெரொபெயாம், பெத்தேல், தாண் என்னும் இடங்களில் கோவில்களேக் கட்டினதினல் அந்த நாட்டிலுள்ளவர்கள் பெரும்பாலும் பூர்வீகத்தில் கானானியருக்குள் இருந்த பழக்க வழக்கங்களே அனுசரித்துவந்தார்கள். 1 இரா 12[29]. மேலும் இஸ்ரவேல் ராஜாக்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. தகப்பன்மார் ராஜாக்களாய் இருந்தும் அவர்கள் குமாரர் அரசாளாமல் அரசாண்ட ராஜாக்கள் பலர். தகப்பனுக்குப்பிறகு அரசாண்டதாகச் சொல்லப்பட்டவர்கள் சிலரே. ஒரே குடும்பத்தில் மாத்திரம் நாலு தலைமுறைமட்டும் தகப்பனுக்குப் பிறகு மகன் அரசாண்டான். இப்படி யிருக்கும்போது பிரஜைகளுக்கும் ராஜாக்களுக்கும் ஐக்கியம் இருப்பதெப்படி? இந்தக் காலத்தில் ஆசா, பாஷாவிலிருந்து யூதாவைக் காப்பாற்றும் பொருட்டு சீரியாவின் ராஜாவாகிய பெனதாத்தின் உதவியைத்தேடினன். இதுமுதல் அசீரியா அடிக்கடி இந்த இரண்டு ராஜ்யங்களுக் குவிரோதமாகச்செய்தவைகளே நாம் கவனிக்கவேண்டும். வேதத்தில் உம்ரியைப்பற்றிக் கொஞ்சம் சொல்லியிருந்தும் இவன் இஸ்ரவேலிலுள்ள ராஜாக்களில் பெரியவன் என்று அறிவோம். இவன் சமாரியாவில் சாமாரியாவென்னும் கோட்டையைக் கட்டினவன்.

இரண்டாம் காலம்

இஸ்ரவேல்.	கி-மு.	யூதா.	கி-மு.
ஆகாப்	875-853.	யோசபாத்	876-851.
அகசியா	853-851.	யோராம்	851-843.
யோராம்	851-842.	அகசியா	843-842.
ஏகூ	842-814.	அதலியா ராணி	842-836.
யோவகாஸ்	814-797.	யோவாஸ்	836-796.
யோவாஸ்	797-781.	அமத்சியா	796-782.
		அசரியா (உசியா)	782-737.

இந்தக்காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யம் சுற்றுப்புறத்துள்ள ராஜ்யங்களோடு சேர்ந்து அவைகளின் நாகரீகத்தையும் கேடான சடங்காசாரங்களேயும் பற்றிக்கொண்டது. இதி









இரண்டாம் சல்மனசாருக்கு ஏகூ அனுப்பின எபிரெய ஸ்தானபதிகள் கப்பம் கொடுத்தல். கி-மு. 840.

னிமித்தம் யேகோவாவின் வழிபாட்டை ஜனங்களுக்குள் ஸ்திரப்படுத்தும்படியும், ஆகாப் செய்த அநியாயத்தை நீக்கும்படியும், எலியா தீர்க்கதரிசி பிரயத்தனம் செய்தான். இந்தக்காலத்தில் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் சமாதானம் உண்டானது. அசீரியர் முதலாவது இந்த இரண்டு ராஜ்யங்களுக்கும் விரோதமாய் சமீபித்து வந்தார்கள். அப்பொழுது ஆகாபும் சீரியா ராஜாவும் இன்னும் பத்து ராஜாக்களும் சேர்ந்து அசீரியரை ஜெயித்தார்கள். ஆனால் எலிசாவின் ஏவுதலினால் இஸ்ரவேலின் ராஜ்யத்தைப் பிடித்த ஏகூ, இரண்டாம் சல்மனாசார் என்னும் ராஜாவுக்குக் கீழ் அடங்கினான். இந்தக்காலத்தின் கடைசியில் இஸ்ரவேல் ராஜ்யம் உன்னத ஸ்திதி அடைந்தது.

மூன்றாம் காலம்


இஸ்ரவேல்.	கி-மு.	யூதா.	கி-மு.
இரண்டாம்		அசரியா (உசியா)	
பெரொபெயாம்	781-740.		782-737.
சகரியா	6 மாசம்.	யோத்தாம்	737-735.
சல்லூம்	740-737.	ஆகாஸ்	735-725.
மெனாகேம்	737-735.	எசேக்கியா	725-696.
பெக்காகியா	2 மாசம்.		
பெக்கா	735-733.		
ஓசியா	733-722.		

இரண்டாம் காலத்துக் கடைசியில் அசீரியர் முதலிய சத்துருக்களின் வல்லமை குறைந்துபோனதினால் இரண்டாம் யெரொபெயாமும் உசியாவும் அரசாண்டபோது இஸ்ரவேல் ராஜ்யமும் யூதா ராஜ்யமும் அதிக விருத்தியடைந்தன. இந்த ராஜ்யங்களில் ஐசுவரியத்தின் திரட்சியினால் அநியாயமும் அக்கிரமமும் அதிகமாய்ப் பரம்பினது. இதினிமித்தம் சில தீர்க்கதரிசிகள் இந்த அநியாயங்களைக் குறித்து உபதேசித்தார்கள். **ஆமோஸ்** தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனங்களிலுள்ள தீமை யாவற்றையும் கண்டித்துப் போதித்துவந்தான். **ஓசியா** தீர்க்கதரிசி ஜனங்களைத் தீமையினின்று மீட்கும் யேகோவாவின் அன்பைப் பற்றி உரைத்தான். கிராமவாசிகளாகிய இந்த தீர்க்கதரிசிகள் சுருக்கமாய் உரைத்தவைகளைக் கல்வி நாகரீகமுடைய **ஏசாயா** விவரித்துச் சொன்னான். இந்தக்காலத்தில் அசீரியா ராஜாவாகிய பூல் படையெடுத்து வந்து பெக்காவையும் சீரியா ராஜாவாகிய ரேத்சீனையும் ஜெயித்து பிரஜைகளில் பெரியவர்களாயிருந்த அநேகரைச் சிறைபிடித்துக் கொண்டுபோனான். பெக்காவுக்குப் பதிலாக ஓசியா திரும்பவும் கலகம் பண்ணினதினால் நாலாம் சல்மனாசார் இஸ்ரவேல் தேசத்தில் பிரவேசித்துச் சாமாரியாவை முற்றுகைபோட்டான். சல்மனாசார் இறந்து பிறகு சர்கோன் கடைசியாய்ச் சமாரியாவைப் பிடித்து ஏறக்குறைய முப்பதினாயிரம்பேரைச் சிறையாகக் கொண்டுபோனதுமல்லாமல் இஸ்ரவேல் ராஜ்யத்தையும் நிர்மூலமாக்கினான். கி-மு. 722.

நான்காம் காலம்

யூதா.	கி-மு.
எசேக்கியா	726-697.
மனாசே	697-641.
ஆமோன்	641-639.

அசீரியர் இவ்விதமாய்ச் சமீபித்து வந்தபோதிலும் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா கீழ்ப்படிந்து நடந்ததினால் இவனுடைய ராஜ்யத்திற்குச் சில வருஷமாக யாதொரு அபாயமும் நேரிடவில்லை. பிறகு எசேக்கியா, ஏசாயா தீர்க்கதரிசியின் போதனையை விட்டு விலகி எகிப்தியர்களோடும் இன்னும் சில ராஜாக்களோடும் சேர்ந்து அசீரியர்களுக்கு விரோதமாய்க் கலகம் செய்தான். அப்பொழுது சனகரிப் என்னும் அசீரியர் ராஜா எகிப்திற்கும் பலெஸ்தீனுக்கும் வந்து,



கி-மு. 606. எகிப்துதேசத்தில் சிறையாக்கப்பட்ட எபிரெயர்.

எருசலேம் பட்டணத்தைப் பிடிக்காவிட்டாலும் (2 இரா 19^{35}) எத்தனையோ இடங்களில் ஜெயமடைந்து ஜனங்களுக்குப்பயத்தை உண்டாக்கினான். இந்தக்காலத்தில் **மீகா** தீர்க்கதரிசி உபதேசம் செய்துவந்தான். இந்தக்காலமுதல் அந்நிய தேவர்களின் வணக்கம் அப்பட்டணத்தில் இல்லாததினால் எருசலேம் யேகோவாவின் முக்கிய ஸ்தலம் என்பது ஜனங்களின் மனதில் ஸ்திரப்பட்டிருந்தது. யோசியா அரசனாயிருந்தபோது **எரேமியா** ஜனங்களுக்குப் போதிக்கத் துவக்கினதினாலும், தேவாலயத்தில் உபாகமம் என்னும் புஸ்தகம் கண்டெடுக்கப்பட்டதினாலும், தீர்க்கதரிசிகள் உரைத்த போதனைகள் ஜனங்களின் மனதில் பதிந்திருந்ததினாலும் தேவாலயத்தில் யூதாவின் ஜனங்கள் நடத்தி வந்த ஆராதனை எல்லாம் நியாயப்பிரமாணத்தின்படி பரிசுத்தமாய்க் கைக்கொள்ளப்பட்டதினாலும் சன்மார்க்கம் அபிவிர்த்தியடைந்தது.

ஐந்தாம் காலம்

யூதா.	கி-மு.
யோசியா	639-608.
யோவகாஸ்	3 மாசம்.
யோயாக்கீம்	608-597.
யோயாக்கீன்	3 மாசம்.
சிதேக்கியா	597-586.

எருசலேம் அழிக்கப்பட்டது கி-மு. 586.

யோசியா எகிப்து ராஜாவாகிய நேகோவினால் ஜெயிக்கப்பட்டு இறந்தான். அப்பொழுது நேகோ யூதாவிலிருந்து அநேகரைச் சிறைப்பிடித்துக் கொண்டுபோனான். இந்தக்காலத்தில் அசீரியா ராஜ்யத்தின் பலம் குன்றிப்போக, பாபிலோன் ராஜ்யம் அதிக விருத்தியடைந்தது. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எகிப்தையும் மற்றும் சுற்றுப்புறத்துள்ள ராஜ்யங்களையும் ஜெயித்தான். யோயாக்கீம் கலகம் பண்ணினதினால் அவனுடைய மகனாகிய யோயாக்கீனின் காலத்தில் நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகைபோட்டு அதைப் பிடித்தான். கி-மு. 597.

அப்பொழுது பிரபுக்களிலும் ஆசாரியர்களிலும் பதினாயிரம்பேரைச் சிறையாகத் தன் தேசத்திற்குக் கொண்டுபோனான். இக்காலத்தில் **எரேமியாவும் எசேக்கியேலும்** யூதர்கள் ஆவிக்குரிய பயபக்தியடைந்து பரிசுத்தவான்களாய் இருக்கவேண்டுமென்று போதித்தாலும் சிதேக்கியா கலகம் பண்ணினதினால் நேபுகாத்நேச்சார் மறுபடியும் எருசலேமுக்கு வந்து அதை அழித்தான். கி-மு. 586. 2 இரா 25^{8}.

ஆறும் காலம். கி-மு. 586–420.

சிறையிருப்பிலிருந்து திரும்புதல். கோரேஸ் மன்னன் பாபிலோனைப் பிடித்த பிறகு கி-மு. 538-ஸு அங்கே சிறையாயிருந்த யூதர்களை அவன் விடுதலையாக்கி எருசலேமுக்குப் போகும்படி உத்தரவு கொடுத்தபோதிலும், செருபாபேலோடு திரும்பி வந்தவர்கள் சிலர்தான். **ஆகாய், சகரியா** என்னும் தீர்க்கதரிசிகள் கி-மு. 520-ஸு எருசலேமுக்கு வந்து தேவாலயம் இன்னும் கட்டப்படவில்லையே என்று புலம்பினார்கள். கி-மு. 516-ஸு இத்தீர்க்கதரிசிகள் செய்த எச்சரிக்கையை ஜனங்கள் பின்பற்றினவர்களாய் தேவாலயத்தைக் கட்டி முடித்தார்கள். எஸ்றா 6^{15}.

எஸ்றாவாகிய முக்கிய வேதபாரகன் கி-மு. 458-ஸு எருசலேமுக்கு வந்தான். பிறகு நெகேமியா பாபிலோனையும் அயல்தேசங்களையும் அரசாண்ட அர்தசஷ்டா என்னும் சக்கரவர்த்தியிடமிருந்து எருசலேம் மதில்களைக் கட்டுவதற்கு உத்தரவு பெற்றுக் கொண்டு அங்கே வந்தான். நெகேமியா அதிக உற்சாகத்தோடு அந்த வேலையை நடப்பித்ததினால் அவன் வந்த அதே வருஷத்தில் மதில்களைக் கட்டி முடித்தான். (கி-மு. 444). அவனும் எஸ்றாவும் லேவியராகமத்தில் சொல்லியிருக்கும் பிரமாணங்களின்படி தேவாலயத்தின் ஆராதனையையும் ஜனங்களின் ஆசாரத்தையும் சீர்திருத்தி நடத்திவந்ததினால் அப்பொழுது வேதபாரகர் அதிக மேன்மை பொருந்தினவர்கள் ஆனார்கள். நெகேமியா 432-ம் வருஷம் மறுபடியும் எருசலேமுக்கு வந்து அங்கே தலைவனாயிருந்தான்.

ஏழாம் காலம் கி-மு. 420-168.

அதற்குப் பிறகு ஏறக்குறைய 250 வருஷங்களாக யூதர்கள் அந்நிய ராஜாக்களுக்குக் கீழடங்கி நடந்தார்கள் என்பதைத்தவிர, அவர்களைப்பற்றி வேறொன்றும் தெரியாது. ஆனால் இந்தக்காலத்தில் பிரதான ஆசாரியரும், ஆலோசனைச் சங்கத்தாரும் அதிகாரம் பெற்றார்கள். அந்நிய அரசர்களுக்கு யூதர்கள் இராஜ்யத்துக்குரிய விஷயங்களில் கீழ் அமைந்தவர்களாய் இருந்தாலும், ஆராதனை, சன்மார்க்கம் முதலிய விஷயங்களில் அவர்கள் பிரதான ஆசாரியர்களுக்கும், ஆலோசனைச்சங்கத்துக்கும் அதிக உற்சாகமாயும் வணக்கமாயும் கீழ்ப்படிந்து வந்தார்கள்.

எட்டாம் காலம்
மக்கபேயர் கி-மு. 168-63.

இந்த நூறுவருஷங்களில் மக்கபேயர் யூதர்களை அவர்களுக்கு விரோதமாயிருந்த அந்நிய ராஜாக்களுடைய கையிலிருந்து மீட்டு அவர்களை நடத்திவந்ததினால் யூதாவின் ராஜ்யம் மறுபடியும் மேல் நிலைக்கு வந்தது. இந்தக்காலத்திலும் பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் கொள்கைகள் உண்டாயிருந்தன. ஆனால் பிரதான ஆசாரியர்களுக்கும் யூதாவின் ராஜ்யத்திலுள்ள மற்றும் அதிகாரிகளுக்கும் ஐக்கியமில்லாததைக் கண்டு ரோமர்கள் கி-மு. 63-ஆம் எருசலேமைப் பிடித்து அந்தத் தேசம் எல்லாம் தங்கள் அதிகாரத்திற் குட்படுத்தினார்கள்.

ஒன்பதாம் காலம். கி-மு. 63 முதல்
கி-பி. 44 வரை.
ஏரோதின் குடும்பத்தார்

இந்தக்காலத்தில் ஏரோதின் குடும்பத்தார் ரோமை ராயர்களுக்குப் பிரதி அரசர்களாயிருந்து பலெஸ்தீனாவிலே அதிகாரம் செலுத்தி வந்தார்கள். இவர்களில் கி-மு. 37-4. அரசாண்ட பெரிய ஏரோது முக்கியமானவன். அவன் எருசலேம் பட்டணத்தை அதிக அலங்காரமாய்ச் சிறப்பித்தான். அவன் காலத்தில் பரிசேயரின் கொள்கை பிரதான நிலைமைக்கு எட்டினது.

பத்தாம் காலம். கி-பி. 44-70.

ரோமர்கள் பலெஸ்தீனாவை ஜெயித்தது முதல் விடுதலையடையும் நம்பிக்கை யூதர்களுக்குள் அதிகரித்ததினால், அடிக்கடி அவர்கள் ரோமர்களுக்குத் தொந்தரவு கொடுத்து, கடைசியில் கி-பி. 66-ஆம் பெரிய கலகம் செய்தார்கள். ஆனால் யூதர்களுக்குள் ஒற்றுமை யில்லாததினால் ரோமர்கள் எருசலேமை முற்றுகை போடும்போதே அவர்களுக்குள் பலவிதமான சச்சரவும் சண்டையும் அதின் தெருக்களிலும் தேவாலயத்திலும் நடந்தன.

ஆகவே கி-பி. 70-ஆம் தீத்து என்னும் ரோமைச் சேனாதிபதி எருசலேமைப் பிடித்து அதின் மதில்களை இடித்துத் தரைமட்டமாக்கி அதிலுள்ள பணிமுட்டுச் சாமான்களை ரோமாபுரிக்குக் கொண்டுபோனான். இதற்குப்பிறகு சில யூதர்கள் சில சமயங்களில் கலகம் செய்தார்கள். ஆலோசனைச்சங்கம் சிலகாலம் வேறோர் ஊரில் கூடினது. ஆயினும் எருசலேம் பட்டணமும் அதின் தேவாலயமும் அழிந்ததோடு எபிரெயரின் சரித்திரமும் முடிவுபெற்றது என்று சொல்லத்தகும்.

இஸ்ரவேலின் காலக்கணிதச் சுருக்கம்

பின் சொல்லப்படுகிற கணிதம் இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டதுமுதல் துவக்குகிறது. அதற்கு முன்னுள்ள காலக்கணிதத்தைத் திட்பநுட்பமாய்க் காட்ட ஏதுவில்லை. நுட்பமான கணக்கின்பேரில் அடியில் வரும் கணிதம் கணிக்கப்பட்டிருக்கிறது. தேறின கணித சாஸ்திரிகள் எழுதியிருப்பவைகளையும் அதோடே ஒத்துப்பார்த்தும் இருக்கிறோம்.

காலக்கணிதச் சுருக்கம்

வருஷம் கி-மு.	இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள்.	வேறே தேசங்களில் அந்தந்தக் காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும்.
1215	இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டது. யோசுவாவின் மரணம் முதல் 1025-ஆம் வரைக்கும் ஒத்னியேல், ஏகூத், தெபொராள், பாராக், கிதியோன், அபிமெலேக்கு, தோலா, யாவீர், யெப்தா, இப்சான், ஏலோன், அப்தோன், சிம்சோன், ஏலி, சாமுவேல் என்பவர்கள் நியாயாதிபதிகளானது.	
1025	சவுல்	அம்மோன் ராஜாவாகிய நாகாஸ். அமலேக் ராஜாவாகிய ஆகாக்.
1017	தாவீது எப்ரோனிலும், இஸ்போசேத்து மக்னாயீமிலும் ஆண்டது.	

வருஷம் கி-மு.	இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள்.	வேறே தேசங்களில் அந்தந்தக் காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும்.
1009	தாவீது எருசலேமில் சகல இஸ்ரவேலரையும் ஆண்டது. நாத்தான், காத் தீர்க்கதரிசிகள்.	தீருவின் ராஜாவாகிய முதலாம் ஈராம் (அபியால்), சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசர், ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ, அம்மோனின் ராஜாவாகிய ஆனூன்.
	தாவீது கர்த்தருடைய பெட்டியைக் கொண்டுவந்து சீயோனில் வைத்தது; தனது ராஜ்யத்தை எகிப்து முதல் ஐபிராத்துநதி வரைக்கும் விஸ்தாரமாக்கினது.	
977	சாலொமோன் பட்டத்துக்கு வந்தது. நாத்தான் தீர்க்கதரிசி.	ஏதோமில் ஆதாத், கேனுபாத்து, தீருவில் ஈராம்.
973	தேவாலயத்தைக் கட்டத் தொடங்கினது. அகியா தீர்க்கதரிசி.	
		950 எகிப்தின் ராஜாவாகிய சீஷாக்.
937	சாலொமோனின் மரணம், ராஜ்யம் பிரிக்கப்பட்டது.	

	யூதா ராஜ்யம்		இஸ்ரவேல் ராஜ்யம்	
937	ரெகொபெயாம்.		யெரொபெயாம்.	
	செமாயா தீர்க்கதரிசி.		அகியா தீர்க்கதரிசி.	
932	எருசலேம் சீஷாக்கால் கொள்ளையிடப்பட்டது.			
920	அபியாம்.			தமஸ்குவில் தப்ரிமோன்.
	யூதாவுக்கும்	....	இஸ்ரவேலுக்கும் யுத்தம் நடந்தது.	
917	ஆசா.			
		915	நாதாப்	எகிப்தில் சேரா.
		913	பாஷா	தமஸ்குவில் முதலாம் பெனாதாத்.
			ஏகூ, ஆனானி தீர்க்கதரிசிகள்.	
889	ஆசா சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தின் உதவியைக்கொண்டு	....	பாஷாவை	துரத்தினது.
	ஒதேத், அசரியா, அனனியா தீர்க்கதரிசிகள்.			
		889	ஏலா.	
		887	சிம்ரி (7 நாட்கள்).	
		887	உம்ரி.	
			சமாரியா ராஜதானி யாக்கப்பட்டது.	
876	யோசிபாத்.	875	ஆகாப்.	

வருஷம் கி-மு.	இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள்.			வேறே தேசங்களில் அந்தந்த காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும்.
			ஆகாப் யேசபேலை மணம் புரிந்தது.	இவள் தீருசீதோனின் ராஜாவாகிய எத்பாகாலின் மகள்.
	இவன்	....	ஆகாபுக்கு உதவியாக..	தமஸ்கு ராஜாவாகிய இரண்டாம் பெனாதாத்துக்கு விரோதமாய் யுத்தஞ்செய்து, அபஜெயமடைந்தது.
	அம்மோனியரையும் மோவாபியரையும்ஜெயித்தது.		எலியா, மிகாயா தீர்க்கதரிசிகள்.	
		853	அகசியா.	
			மோவாபின் கலகம்.	
		851	யோராம்.	
	யோசபாத்....	....	யோராமுக்கு உதவியாய்	மோவாபோடு போர் புரிந்தது.
851	யோராம். இதற்குமுன் இவன் ஆகாபின் மகளாகிய அத்தாலியாளை மணம் புரிந்தது.			அசீரியா ராஜாவாகிய சல்மனாசாருக்கும் சீரியா ராஜாவாகிய ஆதாதேசருக்கும் யுத்தம் (850, 849, 846).
	யகாசியேல், எலியேசர் தீர்க்கதரிசிகள்.			
	ஏதோமியரின் கலகம்.		எலிசா தீர்க்கதரிசி (854-805).	சீரியா ராஜாவாகிய ஆசகேல் (844-800).
843	அகசியா.			
	இவன்	....	யோராமுக்கு உதவியாக	தமஸ்குவின் ராஜாவாகிய ஆசகேலுடன் போர்புரிந்து, அபஜெயமடைந்தது.
	அகசியாவும், இவனோடே	....	யோராமும் ஏகூவினால் கொல்லப்பட்டது.	
842	அத்தாலியாள் ராஜ்யத்தை அபகரித்தது (இவள் 6 வருஷம் ஆண்டது).	842	ஏகூ	அசீரியா ராஜாவாகிய சல்மனாசாருக்கு ஏகூ கப்பங்கட்டினது.
836	யோவாஸ்.			
		814	யோவகாஸ்.	
814	ஆசகேல் காத் பட்டணத்தைப் பிடித்ததும், அவன் எருசலேமை பயமுறுத்தினதும்.		இஸ்ரவேலரும் ஆசகேலால் அதிகமாய் நெருக்கப்பட்டது.	
	சீரியர் யூதாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்தல்.			
796	அமத்சியா.	797	யோவாஸ். இவன் மூன்று தடவை	மூன்றும் பெனாதாத்தை ஜெயித்தது.
	அமத்சியா ஏதோமை ஜெயித்தது. இவன் யோவாசால் அபஜெயமடைந்தது			

வருஷம் கி-மு.	இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள்.				வேறே தேசங்களில் அந்தந்தக் காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும்.
782	அசரியா (உசியா). இவன் ஏதோமியரின் துறைமுகப் பட்டணமாகிய ஏலோதை அரணாக்கினது.				
		781	இரண்டாம் யெரொபெயாம். இவன் சீரியரோடே போர் புரிந்து இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக்கொண்டது.		
	ஆமோஸ் தீர்க்கதரிசி (775-750).				
				753	ரோமாபுரி கட்டப்பட்டது.
				747	பாபிலோனின் ராஜாவாகிய நேபோனேசர்.
				745	அசீரியா ராஜாவாகிய பூலுஎன்னும்திகிலாத்பிலேசர் (745-728).
			ஓசியா தீர்க்கதரிசி (743-737).		
741	ஏசாயா தீர்க்கதரிசி முதலாம் பாகம் (741-701).	740	சகரியா (6 மாதம்).		
		740	சல்லூம்.		
737	யோத்தாம்.	737	மெனாகேம்.		
				737	இஸ்ரவேலர் அசீரியா ராஜாவாகிய பூலுக்குக் கப்பம் கட்டினது.
		735	பெக்காகியா.		
		735	பெக்கா.		
735	ஆகாஸ்.				
	ஆகாஸ்		இஸ்ரவேலின் ராஜாவாகிய பெக்காவினாலும்	....	சீரியா ராஜாவாகிய ரேத்சீனாலும்
	நெருக்கப்பட்டபோது அவர்களுடன் யுத்தம் பண்ண	....	....		அசீரியா ராஜாவாகிய பூலினுடைய உதவியைத் தேடினது.
	ஒதேத் தீர்க்கதரிசி.		பூலு அநேக ஜனங்களை சிறையாக	....	அசீரியாவுக்கு அனுப்பினது.
		733	ஓசியா.	733	ஓசியா அசீரியருக்குக் கப்பம் கட்டினது.
			இவன்		எகிப்தின் ராஜாவோடு உடன்படிக்கை பண்ணி, அசீரியருடைய நுகத்தடியைத் தள்ளும்படி பிரயத்தனஞ் செய்தது.

வருஷம் கி-மு.	இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள்.				வேறே தேசங்களில் அந்தந்தக் காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும்.
725	எசேக்கியா. முதலில் இவன் ஆகாசோடு ஏககால ராஜாவானான். இவன் பெலிஸ்தியரை ஜெயித்தது				
		725	சமாரியா .... }	•	அசீரியா ராஜாவாகிய நாலாம் சல்மனாசாரால் முற்றிக்கை போடப்பட்டது.
		722	சர்கோன் சமாரியாவை அழித்தது.	722	அசீரியா ராஜாவாகிய சர்கோன் (722-705).
720	மீகா தீர்க்கதரிசி (720-695).		இஸ்ரவேலர் சிறையாக .... }	....	அசீரியாவுக்கு அனுப்பப்பட்டது.
			தேசம் அசீரியரால் குடியேற்றப்பட்டது.		
				705	அசீரியா ராஜாவாகிய சனகெரிப் (705-681).
701	மீதியான யூதா ராஜ்யத்திற்கு விரோதமாய் வந்த சனகெரிப்பின் படையெடுப்பு.				
	அசீரியர் பாளையத்தின் சங்காரம். எசேக்கியாவினிடத்தில் அனுப்பப்பட்ட .... }				பாபிலோனின் ராஜாவாகிய மெரோதாக் பலாதானின் ஸ்தானாபதிகள்.
697	மனாசே.				
				691	எகிப்தின் ராஜாவாகிய தீராக்கா (691-665). இவன் சனகெரிப்புடன் யுத்தம் பண்ணினது.
	எசரத்தோன் மறுபடியும் அசீரியரை இஸ்ரவேல் தேசத்தில் குடியேறும்படிக்கு அனுப்பினது.			681	அசீரியா ராஜாவாகிய எசாத்தோன்.
				663	எகிப்தில் முதலாம் பிஸமெத்திக்கு (663-610).
641	ஆமோன். (?) நாகூம் தீர்க்கதரிசி.				
639	யோசியா.				
626	எரேமியா தீர்க்கதரிசி (626-586).				
				625	பாபிலோனில் நேபாபொலேஸர் தன்னைச் சுயாதீனமாக்கிக்கொண்டது.
621	நியாயப்பிரமாணத்தின் ஆகமம் தேவாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. மார்க்க திருத்தம். செப்பனியா, (?) நாகூம் தீர்க்கதரிசிகள்.				
				610	எகிப்தில் நேகோ ஆண்டது (610-594).

வருஷம் கி-மு.	பலெஸ்தீனு.	பார்சியா ராஜ்யம்.		வேறே தேசங்கள்.
608	யோசியா நேகோவோடு யுத்தம்பண்ணி மெகிதோவிலே கொல்லப்பட்டது.			
608	யோவாகாசு (3 மாதம்). யோயாக்கீம்.			
606-5	நேபுகாத்நேச்சார் யூத ராஜ்யத்தாரைத் தனக்குக் கப்பம் கட்டப்பண்ணினது 70 வருஷ சிறையிருப்பு இந்த வருஷமுதல் துவங்குகிறதென்று பொதுப்படத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.		606	மேதியர் நினிவேயைப் பிடித்தது.
			605	நேபுகாத்நேச்சார் கர்கிமேசில் நேகோ முறியடிக்கப்பட்டது.
604	எரேமியா புஸ்தகச்சுருளை எழுதியது.		604	நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்கு ராஜாவானது (604-561).
	(?) ஆபகூக் தீர்க்கதரிசி.			
597	யோயாக்கீன் (3 மாதம்). எருசலேமைக் கல்தேயர் பிடித்தது. யோயாக்கீன் சிறையாக்கப்பட்டது. சிதேக்கியா (மத்தானியா) கல்தேயருக்குக் கீழ் ஆண்டது.			
594	எசேக்கியேல் பாபிலோனியாவில் தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்கினது.		594	எகிப்தின் ராஜாவாகிய இரண்டாம் பிஸமெத்திக்கு.
589	சிதேக்கியா பாபிலோனியருக்கு விரோதமாக எகிப்தியருடைய உதவியை நாடினது.		588	எகிப்தின் ராஜாவாகிய ஒப்பிரா (ஆப்ரீஸ்) (588-569).
587	பாபிலோனியர் எருசலேமுக்குமுற்றுகைபோடுகிறது.			
586	எருசலேமின் அழிவு, ராஜா சிறையானது, அநேக ஜனங்கள் சிறையாக		....	பாபிலோனுக்கு அனுப்பப்பட்டது. நேபுகாத்நேச்சார் தீருவைப் பிடித்தது.
	நேபுகாத்நேச்சார் கெதலியாவை அதிகாரியாக ஏற்படுத்தினது. இவன் இஸ்மவேலால் கொல்லப்பட்டது. மீதியான யூதர் எகிப்துக்கு ஓடினது. (?) ஒபதியா தீர்க்கதரிசி.			
561	யோயாக்கீன் இதுமட்டும் பாபிலோனில் சிறைச்சாலையிலிருந்தது.			
			555	பெல்ஷாத்சார்.
			539	கோரேஸ் பாபிலோனைப் பிடித்தது.
	பலெஸ்தீனு பார்சியா ராஜ்யத்தில் ஒரு நாடாகச் சேர்க்கப்பட்டது.			
537	சிறையிருப்பினின்று முதலாவதாக செருபாபேலோடு எருசலேமுக்கு.	கோரேசின் முதலாம் வருஷத்தில் வந்தவர்கள்.		
536	தேவாலயத்தைத் திரும்பவும் கட்டத் தொடங்கினது.	கம்புசே (529-522).		

வருஷம் கி-மு.	பலெஸ்தீனா.	பர்சியா ராஜ்யம்.		வேறே தேசங்கள்.
			525	கம்புசே எகிப்தை ஜெயித்தது.
521	....	தரியு ஐஸ்தாஸ்பிஸ் (521-485).		
520	தேவாலயத்தைக்கட்டும் வேலை	தரியுவின் இரண்டாம் வருஷத்தில் மறுபடியும் தொடங்கப்பட்டது.		
520	ஆகாய், சகரியா: முதலாம் பாகம் (1-8 அதி.) தீர்க்கதரிசிகள்.			
516	தேவாலயங் கட்டி முடிந்தது.			
			509	ரோமர் கார்தேஜ்புரியாரோடே செய்த முதல் உடன்படிக்கை.
490	....	தரியு கிரேக்குக்கு விரோதமாய்ப் படையெடுத்தது.		
			490	மாரதோன் யுத்தத்தில் பார்சியர் கிரேக்கரால் ஜெயிக்கப்பட்டது.
			486	எகிப்து பார்சியாவுக்கு விரோதமாய்க் கலகம் செய்ததும், அது மறுபடியும் ஜெயிக்கப்பட்டதும் (484).
485	....	முதலாம் சர்க்சே (எஸ்தர் ஆகமத்திலுள்ள அகாஸ்வேரு) (485-465).		
480	....	கிரேக்க தேசத்தின்மேல் படையெடுத்தது.	480	சர்க்சே சாலமீஸ் யுத்தத்தில் ஜெயிக்கப்பட்டது.
464	(?) மல்கியா தீர்க்கதரிசி.	முதலாம் அர்தசஷ்டா (எஸ்றா 7-ல் சொல்லப்பட்ட அர்தசஷ்டா) (465-424).		
			461	அத்தேனில் பெரிக்கிளீஸ்.
458	சிறையிருப்பினின்று யூதர்கள் இரண்டாவதாக எஸ்றாவோடு எருசலேமுக்கு	அர்தசஷ்டாவின் உத்தரவின்பேரில் திரும்பினது.		
444	நெகேமியா 432 வரைக்கும் எருசலேமில் 12 வருஷம் தேசாதிபதியாய் இருந்தது.			
432	ஆசாரியனாகிய மனாசே கெரிசீம் மலையில் ஒரு ஆலயத்தைக் கட்டினது.		431	பெலொப்பொனிஷியன் யுத்தம் ஆரம்பித்தது.
424	....	இரண்டாம் சர்க்சே (424).		

வருஷம் கி-மு.	பலெஸ்தீனா.	பார்சியா ராஜ்யம்.		வேறே தேசங்கள்.
		சொக்த்தியானா (424).		
		இரண்டாம் தரியு (நோது).		சோக்கிரத்தே, செனோபன், தியுசிடியு என்பவர்கள் அத்தேனில் கீர்த்தியடைந்தது.
	யோவேல் தீர்க்கதரிசி.			
		அர்தசஷ்டா மினீமோன் (405).		
366	யோசுவா பிரதான ஆசாரியனாகிய தன் சகோதரன் யோகனானால் ஆலயத்தில் கொல்லப்பட்டது.			
		அர்தசஷ்டா ஒகூ (362).		
			359	மக்கெதோனியா ராஜாவாகிய பிலிப்பு.
		அர்சேயு (அல்லது ஆரோகு) (339).		
336	....	தரியு கதமனா....	336	அலெக்சந்தர் பிலிப்புவுக்குப் பிற்பாடு பட்டத்துக்கு வந்தது.
332	பிரதான ஆசாரியனாகிய யதுவா எருசலேமுக்கு விரோதமாய் வந்த அலெக்சந்தரின் கோபத்தைத் தணித்தது.			
		தரியு கதமனா	331	ஆர்பேலாவில் அலெக்சந்தரால் அபஜெயமடைந்தது.
	சகரியா: இரண்டாம்பாகம் (9-14 அதி).			
		அலெக்சந்தரின் மரணம் (323).		
		எகிப்து ராஜ்யம்.		
320	பலெஸ்தீனா	எகிப்தின் ராஜாவாகிய பித்தோலமியு சோத்தர் என்பவனால் பிடிபட்டது.		
	அநேக யூதர்கள்	எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டு அலெக்சந்தரியாவில் குடியேற்றப்பட்டது.		
314	பலெஸ்தீனா சீரியாவின் ராஜாவாகிய அந்திக்கோனுவால் பிடிபட்டது.			
301	பலெஸ்தீனாவை	பித்தோலமியு மறுபடியும் கட்டிக்கொண்டது.		
	(?) யோனா தீர்க்கதரிசி.		298	மூன்றாவது சாம்னித் யுத்தம்.
		பித்தோலமியு பிலதெல்பு.	286	

வருஷம் கி-மு.	பலெஸ்தீன.		வேறே தேசங்கள்.
	ஏறக்குறைய இந்தக் காலம் எபிரெய வேதாகமம் கிரேக்கபாஷையில் திருப்பப்பட்டது	280	
			முதல் பியூனிக் யுத்தம் (264-241).
	பித்தோலமியு யுகர்த்தே.	247	
	பித்தோலமியு பிலோபதொர்.	221	
217	சீமோன் .... { பித்தோலமியு பிலோபதொரைத் தேவாலயத்துக்குள் பிரவேசியாதபடி செய்தது.		இரண்டாவது பியூனிக் யுத்தம் (218-201).
		212	சைரக்கூஸ் ரோமரால் பிடிபட்டது.
		204	பித்தோலமியு எப்பிப்பானேஸ்.
199	பலெஸ்தீனு சீரியாவிலுள்ள அந்தியோகுவால் பிடிபட்டு தனது ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டது.		
187	சீரியாவில் செலுகஸ் பிலோபதொர்.		
176	தேவாலயம் செலுகசின் சேனுபதியின் பிரயத்தினத்தினின்று பாதுகாக்கப்பட்டது.		
175	சீரியாவில் அந்தியோகு எப்பிப்பானேஸ் ராஜாவானது.		
168	அந்தியோகு எருசலேமைப் பிடித்து கொள்ளையிட்டு அசுசிப்படுத்தினது.		
		168	மக்கெதோனியா ராஜ்யம் முடிவடைந்தது.
167	மக்கபெயரின் தகப்பன் மரித்தது.		
166	(?) தானியேல் ஆகமம்.		
165	யூதா மக்கபெயு எருசலேமை யூதர் வசம் திருப்பிக்கொண்டது.		
161	யோனத்தான் மக்கபெயு யூதாவுக்குப்பின் ஆண்டது.		
		149	மூன்ருவது பியூனிக் யுத்தம் (149-146).
		146	கார்தேஜ்புரியும் கொரிந்து பட்டணமும் அழிவுண்டது. ரோமர்கள் வட ஆபிரிக்காவைப் பிடித்தது.
142	சீமோன் மக்கபெயு அந்நிய அரசாட்சியினின்று யூதர்களை விடுவித்தது.		
135	யோவான் இர்க்கானு.		
	இவன் எதோமியயரைக் கீழ்ப்படுத்தினது.		
120	இவன் சமாரியாவைப் பிடித்து, கலிலேயாவை வசப்படுத்தினது.		ரோமர்கள் அதிகாரம் அதிகமாய் அதிகரித்தது.
105	முதலாம் அரிஸ்தோபுலு.		
104	அலெக்சந்தர் யன்னேயு.		

வருஷம் கி-மு.	பலெஸ்தீனா சங்கதிகள்.
94	இவன் கீலேத்தியரையும் மோவாபியரையும் ஜெயித்தது.
78	அலெக்சந்தரினாள்.
69	இர்க்கானுவுக்கும் இரண்டாம் அரிஸ்தோபுலுவுக்கும் ராஜ்யத்தைப்பற்றி உண்டான விவாதம்.
66	ரோமர்கள் சின்ன ஆசியாவையும் சீரியாவையும் எகிப்தையும் பிடித்தார்கள்.
65	இர்க்கானுவும் அரிஸ்தோபுலும் ரோமைத்தலைவனாகிய பாம்பிக்குத் தங்கள் காரியத்தைத்தெரியப்படுத்தினது.
63	பாம்பி எருசலேமைப் பிடித்து யூதேயாவை ரோமருடைய அதிகாரத்துக்கு உட்படுத்தினது.
54	தேவாலயம் கிரச்சஸ் என்னும் ரோமைத்தலைவனால் கொள்ளையிடப்பட்டது.
48	பார்ஸேலியா யுத்தம். யூலியுகேசார் பாம்பியை ஜெயித்தது.
47	ரோமைத்தலைவனாகிய யூலியுகேசாரால் அந்திப்பத்தர் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டது.
44	யூலியுகேசார் கொன்றுபோடப்பட்டது.
43	எரோதும் பாசெயேலும்.
42	பிலிப்பி யுத்தம்.
40	எருசலேம் பார்தியரால் பிடிபட்டது.
37	பெரிய எரோது யூதர்களின் ராஜாவாயிருந்து எருசலேமை மறுபடியும் பிடித்துக்கொண்டது.
31	ஆக்டியம் யுத்தம்.
27	அகஸ்து ரோமருடைய ராயனானது.
20	எரோது ஆலயத்தைத் திரும்பக் கட்டத் துவங்கினது.
4	கிறிஸ்துவின் பிறப்பு.
	பெரிய எரோதின் மரணம். அர்கெலாயு.
கி-பி.	
14	திபேரியு ராயனானது.
26	பொந்தியுபிலாத்து யூதேயாவில் தேசாதிபதி.
29	இயேசு சிலுவையில் அறையப்பட்டது.
36	பிலாத்து பலெஸ்தீனாவை விட்டுவிட்டது.
37	திபேரியுராயன் இறந்துபோனது. காயு ராயனானது.
41	கிலவுதியு ராயனானது.
52	கல்லியோன் கோரிந்தில் அதிபதி.
54	நேரோ ராயனானது.
64	ரோமாபுரி தீப்பற்றினது. கிறிஸ்தவர்களுக்கு மகா உபத்திரவம். பேதுருவும் பவுலும் இரத்தசாக்ஷிகளாய் இறந்துபோனது.
66	யூதர்கள் செய்த பெரிய கலகம்.
70	ரோமர்கள் எருசலேமை முற்றிலும் அழித்தது.
94	ரோமருடைய ராயனாகிய தொமித்தியன் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தினது.

இஸ்ரி. Izri. = சேரீ. 1 நாளா $25^{3.\ 11}$.

இஸ்லியா. Izliah. 1 நாளா 8^{18}.

இஸ்வா. Ishvah. ஆதி 46^{17}.

இஸ்வி. Ishui, Jesui.

1. ஆதி 46^{17}.
2. சவுலின் இரண்டாம் மகன். 1 சாமு 14^{49}.

இஷி. Ishi.

1. 1 நாளா 2^{31}.
2. 1 நாளா 4^{20}
3. 1 நாளா 5^{24}.
4. 1 நாளா 4^{42}.

இஷியா. Ishiah, Ishijah, Jeshiah.

1. 1 நாளா 7^{3}.

2. 1 நாளா 23^{20}.
3. 1 நாளா 24^{21}.
4. 1 நாளா 24^{25}.
5. எஸ்றா 10^{31}.

இஷ்தோப். Ish-tob, சீரியாவில் யெப்தா ஒளித்தோடின ஒரு நாடு. 2 சாமு 10^{6}.

இஷ்மா. Ishma. 1 நாளா 4^{3}.

இடறுதல். Stumbling, Offence. மிருகம் பட்சி முதலானவற்றைப் பிடிக்க ஏற்றியிருக்கும் பொறியிலே இரை குத்திவைத்திருக்கும் ஆணிக்கு மூலபாஷையில் 'இடறல்' என்று சொல்லபபடும். மத் 18^{7} லூக் 17^{1}.

இடிமுழக்கம். Thunder. கடவுளின் வல்லமையையும் (1 சாமு 2^{10}), அவர் செய்த தண்டனையையும் (எசா 30^{30}), அவருடைய மகத்துவத்தையும் (யாத் 19^{16} சங் 29) காட்டும்படி உபமானமாய்ச் சொல்லியிருக்கிறது. இது தேவனுடைய சத்தம். சங் 10_{x}^{7} யோபு 37^{4} யோவா 12^{28}. இடிமுழக்கம் வழக்கமாய்க் கோடைகாலத்தில் இராது. 1 சாமு 12^{17}.

இதாலா. Idalah. செபுலோனின் ஊர். யோசு 19^{15}.

இதியேல், ஈத்தியேல். Ithiel. [கடவுள் என்னோடிருக்கிறார்].

1. பென்யமீன் கோத்திரத்தான். நெகே 11^{7}.

2. ஆகூர் இதியேலுக்கு உபதேச வாக்கியங்கள் உரைத்தான். நீதி 30^{1}.

இதுமேயா. Idumea. இதுவும் ஏதோமும் (*Edom*) ஒன்றுதான். முதலில் ஏதோமியர் மோவாபுக்குத் தெற்கே சீனாய் நாடு வரையும் வசித்த ஒரு கோத்திரம். இவர்களுக்கு முற்பிதா ஏசா. ஏசாவும் யாக்கோபும் இரட்டைப்பிள்ளைகளானதினால் ஏதோமியருக்கும் இஸ்ரவேலருக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்தது. ஆதி 25^{24}. ஆனால் யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் விரோதம் (ஆதி 27 அதி) உண்டானதுபோல அவர்கள் சந்ததியாராகிய இஸ்ரவேலருக்கும் ஏதோமியருக்கும் அடிக்கடி விரோதம் உண்டாகிக்கொண்டே இருந்தது. ஏதோமியர் தங்கள் தேசத்தின் வழியாய் இஸ்ரவேலர் கானான் தேசத்திற்குப் போக இடங்கொடுக்கவில்லை. எண் 20^{18}. சவுல் ஏதோமியரோடு யுத்தஞ்செய்தான். 1 சாமு 14^{47}. தாவீது இவர்களை ஜெயித்தான். 2 சாமு 8^{13}. சாலொமோன் காலத்தில் இவர்கள் விடுதலை அடைந்தார்கள். 1 இரா 11^{14}. நூறு வருஷத்திற்குப் பிற்பாடு யோசபாத் இவர்களை ஜெயித்தான். அவன் மோவாபியரோடு யுத்தம் பண்ணின போது இவர்கள் அவனுக்கு உதவிசெய்தார்கள். 2 இரா 3^{9}.

மறுபடியும் விடுதலையானார்கள். 2 இரா 8^{20}. அமத்சியா இவர்களை ஜெயித்தான். 2 இரா 14^{7}. இதற்குப் பிற்பாடு ஏதோமியர் அசீரிய ராஜாக்களுக்கு வரி கொடுத்தார்கள்.

கி-மு. 586-ஆம் நேபுகாத்நேச்சார் எருசலேமை அழித்தபிறகு எபிரெயர் அநேகர் ஏதோமிலே போய் ஒளித்துக்கொண்டார்கள். ஏதோமியர் எருசலேமுக்கு வந்த நஷ்டத்திற்காகச் சந்தோஷம் அடைந்தார்கள். ஆதலால் ஒபதியா தீர்க்கதரிசி இவர்களுக்கு வரும் தண்டனையைப்பற்றிக் கண்டிப்பாய்ச் சொன்னான். ஒப 1^{1}.

இதற்குப்பிறகு அரபியர் ஏதோமியருக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்ததினால் ஏதோமியர் யூதாவின் எல்லையைக் கடந்து அங்கே வசித்தார்கள்.

யூதாஸ் மக்கபெயு இவர்களோடு சண்டை செய்தான். கி-மு. 100-ஆம் அளவில் யூதர்கள் இவர்களை ஜெயித்ததினாலே இவர்கள் விருத்தசேதனம் அடைந்து யூதமதத்தைச் சேர்ந்தார்கள். இயேசுவின் காலத்தில் யூதர்களின்மேல் ஆளுகை செலுத்தின ஏரோதின் குடும்பத்தார் இந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

இதெக்கேல். Hiddekel. இதுவும் திக்கிரீசும் ஒன்றுதான். வடமேற்காயுள்ள ஆர்மீனியாவிலிருந்து இந்தப் பெரிய நதி அசீரியா பாபிலோனியா நாடுகளுக்கூடாகப் பாய்ந்து பார்சியா குடாக்கடலுக்குள் விழுகிறது. ஆதி 2^{14} தானி 10^{4}.

இத்சேயார். Izhar.

1. லேவியின் பேரன். யாத் 6^{16}.
2. = எத்சோகார். 1 நாளா 4^{7}.

இத்தரான். Ithran. [சிறந்தவன்].

1. ஆதி 36^{26}.
2. 1 நாளா 7^{37}.

இத்தாகாத்சீன். Ittha-Kazin. செபுலோனின் எல்லையைக் குறிக்கும் ஒரு ஊர். யோசு 19^{13}.

இத்தாமார். Ithamar. ஆரோனின் இளைய மகன். யாத் 6^{23}. ஆசாரியன். யாத் 28^{1}. இவன் பணிவிடை. லேவி $10^{6.\ 12.\ 16}$. ஆசரிப்புக் கூடாரத்தில் இவன் செய்யவேண்டிய பணிவிடை. எண் 4^{21}. தாவீதின் காலத்திலிருந்த இவன் சந்ததியார். 1 நாளா 24^{4}.

இத்தாயி, ஈத்தாய். Ithai, Ittai.

1. தாவீதின் சேனதிபதிகளில் ஒருவன். 2 சாமு 15^{21} 18^{2}.

2. பென்யமீன் கோத்திரத்தான். 2 சாமு 23^{29}.

இத்தாலியா தேசம். Italy. ஐரோப்பாக் கண்டத்திற்குத் தெற்கே மத்தியதரைக் கடலுக்குள் நீண்டிருக்கும் குடாநாடு. இதற்குத் தலைநகரி ரோமாபுரி. இத்தாலியாவில் துறைமுகங்கள் அநேகம் இருந்ததினாலும், இங்கேயுள்ள ஜனங்கள் யுத்த வீரத்துவம் உள்ளவர்களானதினாலும் இயேசுகிறிஸ்து உலகத்தில் இருந்த காலத்தில் மத்தியதரைக் கடலோரமாய் இருந்த தேசங்களில் இது பிரதானமானது. அக்காலத்தில் ரோமாபுரியிலுள்ள ராயன் பலெஸ்தீனு, கிரேக்கு, சின்ன ஆசியா, ஆபிரிக்கா முதலிய மற்றத் தேசங்களில் சக்கரவர்த்தியா யிருந்தான். மத் 22^{17} அப் 25^{11} 27^{1} ரோமாபுரியிலிருந்து நாலு திசைகளுக்கும் போர்ச்சேவகர் போவதற்காக ரஸ்தாக்கள் போட்டிருந்தமையால் எந்தத் தேசத்திலுமுள்ள வியாபாரிகள் அங்கே லேசாய்ப் போக்குவரவு செய்யக்கூடியதாயிருந்தது. கிறிஸ்துவின் காலத்திற்கு முந்தி யூதர்களில் அநேகர் அங்கே வந்து கூடுகிறதைக் கண்டு இத்தாலியர் அவர்களைப் பகைத்தார்கள். அப் 18^{2}. ஆனல் பல யூதர்கள் அதை விட்டுப் போகாமலிருந்தார்கள். கிறிஸ்தவமார்க்கம் இத்தாலியா தேசத்தில் பரம்பினபோது புறமதஸ்தர்கள் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல் இருபக்கத்தாரையும் ஒரேவிதமாய் இகழ்ச்சி செய்துவந்தார்கள்.

இத்தாலியா பட்டாளம். The Italian Band. இது இத்தாலியா சேனையிலுள்ள போர்ச்சேவகரின் கூட்டம். இதில் ஐஞ்னூறு அல்லது ஆயிரம்பேர் இருப்பார்கள். இத்தாலியாவிலிருந்து இந்தக் கூட்டத்தார் வந்ததினல் இந்தப் பெயர் அவர்களுக் கிடப்பட்டிருந்தது என்று தோன்றுகிறது. கொர்நேலியும் இதில் நூற்றுக்கு அதிபதியாயிருந்தான். அப் 10^{1}.

இத்திரா, எத்திரா. Ithra. தாவீதின் சகோதரி புருஷன். 2 சாமு 17^{25}.

இத்திரான், இத்ரான். Ithran.

1. ஆதி 36^{26}.

2. 1 நாளா 7^{37}.

இத்துரேயா. Iturea. யோர்தான் நதிக்கும் கலிலேயாக்கடலுக்கும் கிழக்காய் உள்ள நாடு. இங்கேயுள்ளவர்கள் வில்வித்தையில் பேர்போனவர்கள். யோவான்ஸ்நானன் பிரசங்கம் பண்ணின காலத்தில் பெரிய ஏரோதின் குமாரனுகிய பிலிப்பு இந்த நாட்டை ஆண்டுவந்தான். லூக் 3^{1}.

இத்தோ. Iddo.

1. எஸ்று 8^{17}.

2. 1 நாளா 27^{21}.

3. 1 இரா 4^{14}.

4. 1 நாளா 6^{21}.

5. தீர்க்கதரிசியாகிய இவன் சரித்திரப் புஸ்தகம் ஒன்று எழுதினுன். 2 நாளா 9^{29}.

6. சகரியாவின் தகப்பன். சக 1^{1}.

7. ஒரு வம்சம். நெகே 12^{4}.

இத்பாஸ். Idbash. 1 நாளா 4^{3}.

இத்மா. Ithmah. தாவீதின் போர்வீரரில் ஒருவன். 1 நாளா 11^{46}.

இத்ரியன். Ithrite. தாவீதின் போர்ச்சேவகரில் இரண்டுபேர் இந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள். 2 சாமு 23^{38}.

இத்ரேயாம். Ithream. தாவீதின் ஆறும் மகன். 2 சாமு 3^{5}.

இத்னுன். Ithnan. தெற்கே யூதாவுக்குச் சேர்ந்த ஒரு ஊர். யோசு. 15^{23}.

இந்திர நீலம். Sapphire. இரத்தினம். காண்க.

இந்துதேசம். India. இது வட இந்தியாவைக் குறிக்கிறது. ஆனல் சாலொமோன் வாங்கின யானைத் தந்தங்கள், குரங்குகள், மயில்கள் ஆகிய இவைகளுக்கு மூலபாஷையிலே சொல்லியிருக்கும் பதங்களை ஆராயுமிடத்து தென் இந்தியாவிலிருந்து பலெஸ்தீனு வரையும் வியாபாரம் நடந்தது என்று நாம் அறியலாம். எசேக்கியேல் சொல்லும் பதங்களும் இதற்கொத்திருக்கின்றன. 1 இரா 10^{22} எசே $27^{15, 19, 24}$. எஸ்தர் 1^{1} 8^{9}.

இபிதியா. Iphdeiah. [யேகோவா இரட்சிக்கிறுர்]. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா 8^{25}.

இப்சாம். Ibsam. 1 நாளா 7^{2}.

இப்சான். Ibzan. [மகிமையுள்ள ஒரு நியாயாதிபதி]. நியா 12^{8}.

இப்தா. Iphtah. யோசு 15^{43}.

இப்தாவேல். Iphtah-el. யோசு 19^{14}.

இப்பார். Ibhar. [கடவுள் தெரிந்து கொள்ளுகிறுர்]. தாவீதின் குமாரரில் ஒருவன் 2 சாமு 5^{15}.

இப்ரி. Ibri. 1 நாளா 24^{27}.

இப்லேயாம். Ibleam. மனாசேயின் மேற்பாகத்திலுள்ள ஒரு ஊர். யோசு 17[11].

இப்னியா. Ibnijah. 1 நாளா 9[8].

இப்னேயா. Ibneiah. 1 நாளா 9[8].

இமேனேயு. Hymenaeus. எபேசு பட்டணத்திலுள்ள ஒரு கள்ளப் போதகன். 1 தீமோ 1[20] 2 தீமோ 2[17].

இம்மானுவேல். Emmanuel. [கடவுள் நம்மோடிருக்கிறார்]. எசா 7[14] 8[8] மத் 1[23]. எசா 9[6] காண்க.

எசாயா மேசியாவாகிய இயேசுகிறிஸ்து தமது ஜனங்களை இரட்சிக்கும்படி வருவார் என்று அறிவித்தான் என்பது அநேகருடைய அபிப்பிராயம். ஆனால் அக்காலத்தின் சரித்திரத்தை ஆராயுமிடத்து கி-மு. 735-ல் சீரியா ராஜாவும் இஸ்ரவேல் ராஜாவும் ஆகாஸ் என்னும் யூதாவின் ராஜாவுக்கு விரோதமாய் ஒருங்கு கூடினார்கள் என்றும், ஆகாஸ் இதினால் பயந்து தன் தேசத்திற்குக் கெடுதி செய்யப்போகிற பூல் என்னும் அசீரியா ராஜாவோடு சமாதான சம்பந்தம் பண்ணினான் என்றும், ஜனங்கள் அதிக பயமும் கலக்கமும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்றும் எசாயா தீர்க்கதரிசி அறிந்து (2 இரா 16[6]) இந்த எல்லாப் பயத்தையும் நீக்க உடனே பிறக்கப்போகிற ஒரு பாலகன் தேன் முதலியவை சாப்பிட அறியுமுன், அதாவது ஐந்து பிராயமாகுமுன், சீரியாவும் இஸ்ரவேல் ராஜ்யமும் ஜெயிக்கப்படும் என்று உரைத்தான். இவ்விதமாய் இந்த அடையாளத்தைக்கொண்டு தீர்க்கதரிசி அவர்களுக்கு ஆறுதல் சொன்னாலும், இவர் அசீரியாவினாலே அபஜெயம் அடைவார் (எசா 8[8]) என்று இன்னொரு வாக்கு உரைத்தான். யூதர்கள் சிறையிலிருப்பிலிருந்து வந்தபிறகு இந்த இரண்டு தீர்க்கதரிசனங்களையும் கண்டபடி கலந்து தங்கள் தேசத்திற்கு மேசியா வருவார் என்றும் அவர் தங்களுக்காகப் பாடுபடுவார் என்றும் நம்பி இம்மானுவேலே இரட்சகர் என் நினைத்தார்கள். ஆதி கிறிஸ்தவர்களும் அப்படியே நினைத்தார்கள். **கன்னிகை** காண்க.

இம்மேர், இம்மேர். Immer.

1. ஒரு ஆசாரிய குடும்பம். 1 நாளா 9[12].
2. ஒரு ஆசாரியன். எரே 20[1].
3. ஒரு ஊர். எஸ்ரா 2[59].

இம்மை. **உலகம்** காண்க.

இம்ரா. Imrah. ஒரு தலைவன். 1 நாளா 7[36].

இம்ரீ. Imri.

1. 1 நாளா 9[4].
2. நெகே 3[2].

இம்லா. Imla. ஆகாப் காலத்திலுள்ள ஒரு தீர்க்கதரிசி. 1 இரா 22[8].

இம்னா. Imna, Imnah, Jimna.

1. 1 நாளா 7[35].
2. எண் 26[44].
3. 2 நாளா 31[14].

இயேசு என்னப்பட்ட யுஸ்து. **யுஸ்து** காண்க.

இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம். History of Jesus Christ. கி-பி. இருபதாம் முப்பதாம் ஆண்டுகளுக்கிடையில் நம்மிலொருவர் பலெஸ்தீனா தேசத்தில் வசித்திருப்போமென்றால் அத்தேசத்தின் அரசாளுகை முறை ராஜாங்கப் பிரிவினைகள், மார்க்க வைராக்கியங்கொண்ட வைதீகர்களுடைய அநுஷ்டான நிலை, சாமான்னிய ஜனங்களுடைய கருத்துங் கொள்கையும் இத்தியாதி விஷயங்களைக் கவனித்திருக்கக்கூடும். அப்போது லூக்கா சுவிசேஷத்தின் துவக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிற சிலரைப்போல, இயேசுநாதர் வெளிப்பட்டகாலத்து ஆரம்ப முதல் எல்லாவற்றையுங் கண்ணாரக் கண்டிருக்கலாம். அவ்வாறு எவைகளைக் கண்டிருக்கக்கூடுமோ, அவைகளையே இங்கு தொடர்பாக எழுதுவது எமது நோக்கம்.

1. **இராஜாங்கப் பிரிவினைகள்.** நம்முடைய ஆண்டவர் திரு ஊழியஞ் செய்த காலத்தில் யூதேயாநாடும், சமாரியாநாடும் ரோம ராஜ்யத்து அதிபதியின் (கவர்னர்) அதிகாரத்துக்குள் இருந்தன. கி-பி. 26-ல் முதல் 36-ல் வரைக்கும் பொந்தியுபிலாத்து என்பவன் இவைகளுக்கு அதிபதியாயிருந்தான். அவன் மகா கொடியவனென்று பெயர்பெற்றிருந்தான். லூக் 13[1]. சொல்லவேண்டுமானால், ரோமராஜ்யத்தில் பொதுவாகக் கண்டிப்பு அதிகமாயிருந்தது. அதிகாரிகள் பல துஷ்டரைக் கொன்றுவிட்டார்கள்; அடிக்கடி சிலுவையில் அறைதலாகிய குரூர தண்டனையை விதித்தார்கள். ஆனபோதிலும் சாதாரணமாக அவர்கள் அநியாயங்களைச் செய்யவில்லை. வரிவாங்குகிறதற்குச் சில உத்தியோகஸ்தரை நியமித்தார்கள். இவ்வுத்தியோகஸ்தருக்கு ஆயக்காரர் என்று பெயர். இவர்கள் செய்த தொழில் யூதர் யாவருக்கும் இழிவாய்த் தோன்றினபடியால், இவர்கள் எல்லாரும் இகழப்பட்டும் பகைக்கப்பட்டும் வந்தார்கள்.

பலெஸ்தீனாவின் வடபாகத்தையும் கீழ்ப் பாகத்தையும் ஏரோதுவின் குமாரர் ஆண்டுவந்தார்கள். கலிலேயா நாட்டுக்கும், பெரேயா நாட்டுக்கும் அந்திப்பா என்பவன் (கி-மு. 4-கி-பி. 39) இராஜா. இயேசுவானவர் அவனைக்குறித்துச் சொன்ன ஒரு வார்த்தையால் அவனுடைய குணத்தை அறிந்துகொள்ளுகிறோம். அவன் ஒரு நரி. லூக். 13^{32}. பகிரங்கமான பாவத்தில் ஜீவித்துக்கொண்டிருந்தான். இன்னொரு சகோதரனுடைய மனைவியாகிய ஏரோதியாள் என்பவளை வைத்திருந்தான். ஆனாலும் அவன் முற்றிலும் உணர்வற்றவனா யிருக்கவில்லை; மார்க்க சம்பந்தமான விஷயங்களை அறியவேண்டுமென்று விரும்பினான். மாற் 6^{20} லூக் 23^{8}. அவனுடைய முக்கிய பட்டணம் கலிலேயா கடலோரத்திலிருந்த திபேரியாவே.

இத்துரேயாவுக்கும், திராகோனித்திக்கும் ஏரோது பிலிப்பு இராஜாவாயிருந்து அத்தேசத்தை அமைதலாய் ஆண்டான். ஏரோதுவின் பிள்ளைகளில் நல்ல கீர்த்திபெற்றவன் இவனே.

2. **மதசம்பந்தமான கட்சிகள்.** **சதுசேயர்** என்பவர்கள் ஆசாரிய வேலையைச் செய்த சில உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அக்காலத்தில் அவர்களிலிருந்துதான் பிரதான ஆசாரியன் நியமிக்கப்படுவான். சனதிரீம் (*Sanhedrim*) என்கிற ஆலோசனைச் சங்கத்தில் அவர்கள் அதிக செல்வாக்குடையவர்கள். அவர்கள் எப்போதும் சமயத்துக்குத் தக்கதாகப் பேசுவார்கள். மத வைராக்கியமென்பது அவர்களுக்கில்லை. ரோமர் அவர்களுக்கு அதிகாரம் அதிகம் கொடுத்தார்கள். எப்படியாவது ஜனங்களுக்குள் கலகம் உண்டாகக் கூடாதென்பது அவர்கள் விருப்பம். கலகமுண்டானால் ரோமர் தங்களுடைய அதிகாரத்தைக் குறைத்துவிடுவார்களென்று பயந்தார்கள். இயேசுவைக் கொலைசெய்யும்பொருட்டு அவர்களும் பரிசேயரும் ஒன்றுசேர்ந்தபோதிலும், அவர்களுக்கும் பரிசேயருக்கும் சில பெரிய வித்தியாசங்களிருந்தன. பரிசேயரைப்போல அவர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மதிக்காமல் பழைய ஏற்பாட்டிலுள்ள முதலைந்து புஸ்தகங்களை மாத்திரம் தங்கள் மார்க்கத்துக்கு மூலாதாரமாக எண்ணினார்கள். நடபடிகளின் புஸ்தகத்தில் நாம் பார்க்கிறபிரகாரம் இவர்களே எருசலேமில் கிறிஸ்துவின் சீஷர்களை அதிகமாய்த் துன்பப்படுத்தினவர்கள். **பரிசேயர்**, அதாவது பிரிக்கப்பட்டவர்கள், சதுசேயரைப்போலிராமல், மார்க்கத்தில் மிகவும் வைராக்கியமுள்ளவர்கள். தொகையில் அவர்கள் ஆறாயிரத்துக்கு அதிகமாய் இருந்தார்கள். ஒழுக்கமுறையில் வழுவாதவர்கள். ஆயினும் இயேசுவின்காலத்தில் அவர்கள் அநேக விஷயங்களில் கெட்டுப்போயிருந்தார்கள். புறம்பான சடங்காசாரங்களை மிதமிஞ்சின கண்டிப்போடு அநுசரித்துக்கொண்டு, அதனால் பெருமையுள்ளவர்களாகி, அகத்துக்குரிய கடமைகளை அசட்டை பண்ணினார்கள். மாற் 7^{1-13} 12^{38-40} மத் 23^{13-23}. பரிசேயரில் அநேகர் **வேதபாரகர்.** நியாயப்பிரமாணத்தை நுட்பமாய்க் கிரகித்து, அதிலுள்ள போதனையை விளக்கிக் காட்டுவது அவர்கள் வேலையாம். அக்காலத்தில் அவர்கள்தான் தேவாலயங்களில் குருக்களைப்போல் மதிக்கப்பட்டவர்கள். இந்தியாவில் பிரசித்திபெற்ற மடங்களிலுள்ள சில குருக்களுக்குச் சாதாரண ஜனங்கள் எவ்வளவு வணக்கம் காட்டுவார்களோ, அவ்வளவு வணக்கம் பலெஸ்தீனாவிலிருந்த சில வேதபாரகருக்கு ஜனங்கள் காட்டினார்கள். இன்னொரு வகுப்பாருக்குச் செலோத்தேயர் என்று பேர். இயேசுவின் சீஷரில் ஒருவன் இவ்வகுப்பினன். மத் 10^{4}. இவர்கள் ரோமரைப் பகைத்து, கடவுளே ஆளவேண்டிய இஸ்ரவேலரை எந்த அந்நிய இராஜாங்கமும் ஆளுதல் தகாதென்று சொல்லி, ரோம அரசாட்சிக்கு விரோதமாக ஜனங்களுக்குள் கலகஞ் செய்துகொண்டிருந்தார்கள். எருசலேம் நகரத்தை ரோமர் முற்றுகை போட்டபோது, அவர்களே ஜனங்களுக்குத் தலைவராய் நின்று போராடினார்கள். அதுடன் அருவருக்கத்தக்க சில துர்ச்செயல்களையும் செய்தார்கள். **ஏரோதியர்** ஏரோது வம்சத்து இராஜாக்களுடைய பந்துமித்திரர்களாம். இவர்கள் விசேஷமாகக் கிரேக்கர் வழக்கங்களைப் பலெஸ்தீனா தேசத்தில் ஸ்தாபனம் செய்தார்கள். இதற்கு முன்னமே சீரியாவின் ராஜாக்கள் கிரேக்கு முறைமையின்படி சில நகரங்களை ஸ்தாபித்திருந்தனர். யோர்தான் நதிக்கு அக்கரையிலிருந்த பத்து ஊர்கள் இப்படி உண்டாயிருந்தமையால், அவைகளுக்குத் தெக்கப்போலி என்னும் கிரேக்க பேர் வழங்கினது. செசரியா என்னும் துறைமுகமும் இப்படிப்பட்ட ஊரே. இவ்விடங்களில் யூதர் அந்நிய தேசத்துக் கொள்கைகளைப்பற்றி அறிந்துகொண்டார்கள். அன்றியும் அநேக யூதர்கள் வியாபாரவிஷயமாய்த் தூரதேச சஞ்சாரம் செய்து குடியிருந்து, பண்டிகைக்காலங்களில் எருசலேமுக்கு வந்தபடியால், அவர்கள் மூலமாயும் யூதர் அந்நியதேச வழக்கங்களையும், ஆசாரங்களையும் கற்றுக்கொண்

டார்கள். கிழக்குத் தேசங்களில் பிரபலமாயிருந்த சில கொள்கைகளும் யூதருக்குள் நுழைந்திருந்தன. **எசேனேயர்** என்று பேர் கொண்ட ஒரு வகுப்பார் பாரசிகருடைய கோட்பாடுகளில் சிலவற்றை யனுசரித்து, சூரியனை நமஸ்கரித்து, ஸ்நானமுதலிய ஆசாரங்களைக் கைப்பற்றிப் பலியைத் தள்ளி, சரீரத்தையடக்கி, தங்கள் உலகப் பொருள்களைச் சகலருக்கும் பொதுவாக வைத்தனுபவித்து வந்தார்கள். அவர்கள் சாக்கடலருகே ஒரு மடத்தில் வாசஞ்செய்து வந்தார்கள்.

யூதமார்க்கத்தின் பொதுவான நிலைமை இவ்வாறு பாகுபாட்டினை யுடையதாய்ப் பலெஸ்தீனாவில் சாதாரண ஜனங்களுக்குள் யூதமார்க்கம் எப்படி இருந்ததென்றால், அது முற்றிலும் தாழ்ந்ததாயும் இருக்கவில்லை, முற்றிலும் உயர்ந்ததாயும் இருக்கவில்லை என்பதே.

அதின் குறைகளில் சில:

1. கடவுளைப்பற்றி யூதமார்க்கத்தில் மிகவும் உயர்தரமான எண்ணம் இருந்தபோதிலும், அவர் எப்போதும் மனுஷரை விட்டு, அவர்களுக்குத் தூரத்திலிருப்பவராகத்தோன்றினர். யேகோவா இஸ்ரவேல் ஜனங்கள் மேல் அதிக பிரியமுள்ளவரே யானபோதிலும், அவர் எல்லா ஜீவராசிகளினிடத்தும் அன்பாயிருந்து, ஒவ்வொரு சிருஷ்டியையும் நேசிக்கிற தன்மையுடைய பரமபிதாவென்கிற எண்ணம் யூதருக்கு இருக்கவில்லை. மேலும் யூதர் நியாயப்பிரமாணத்தை மிதமிஞ்சி மதித்தபடியாலும், நியாயப்பிரமாணத்தில் புறம்பாகச் செய்யவேண்டிய சடங்குகளைப்பற்றி விஸ்தரித்துச் சொல்லியிருக்கிறபடியாலும், அவர்கள் அகத்துக்குரிய நோக்கத்தை அசட்டை செய்தார்கள். நியாயப்பிரமாணத்தின்படி கிரியைகளை எவ்வளவு செய்வார்களோ, அவ்வளவு புண்ணியம் கிடைக்குமென் றெண்ணினார்கள். அதினால் நமது ஆண்டவர் மலைமேல் செய்த உபதேசம் அவர்களுக்கு அவசியமென்பது திண்ணம். கிரியையினால் ரக்ஷிப்புக் கிடைக்குமென் றிருந்தார்கள். அக்கிரியைகளைச் செய்கிறதும் எப்போதும் இலேசான காரியமன்று. நியாயப்பிரமாணத்தின் விதிகளை வழுவாமல் கைக்கொள்ளும்பொருட்டாக, அவைகளைச் சுற்றிலும் வேலியைப்போலப் பல கட்டளைகளை வேதபாரகர் ஏற்படுத்தி யிருந்தார்கள். இப்படிப்பட்ட எண்ணிறந்த சிறிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறது அவர்களுக்குத் தாங்கக்கூடாத பாரமாய் இருந்தது. மேலும் இந்தச் சிறிய கட்டளைகளிற் சில செவ்வையாயிருக்கவில்லை; திருஷ்டாந்தமாக 'கொர்பான்' என்பதைப்பற்றி மாற் 7^{11-12}-ல் பார்க்க. விசேஷமாக இச்சட்டங்களைக் கைக்கொண்டவர்களுக்குள் பெருமையென்னும் குற்றம் அதிகரித்தது. பரிசேயரும் வேதபாரகரும் மற்றச் சாதாரண யூதரை இழிவாய் எண்ணினார்கள். அதேபிரகாரமாக யூதர் யாவரும் மற்றத் தேசத்தாரைக் கேவலமாக நினைத்தார்கள். நற்குணசாலியாயிருப்பது பெரிய காரியமென்று எண்ணாமல், யூதவமிசத்தில் பிறக்கிறதே பெரிய சிலாக்கியமென்று கருதினார்கள். லூக் 3^{8} யோவா $8^{33.39}$ ரோ 2^{17-20}.

இப்படிப்பட்ட பெருங்குறைவுகள் யூதமார்க்கத்தி லிருந்தபோதிலும், அதில் பல நல் விஷயங்களு மிருந்தன. நியாயப்பிரமாணத்தை மாத்திரமன்று, தீர்க்கதரிசன ஆகமங்களையும், சங்கீதங்களையும் மதித்தோருடைய பக்தி முழுமையும் ஜீவனற்றுப்போவது முடியாது. ஆகையால் புதிய ஏற்பாட்டில் சகரியா, எலிசபெத்து, சிமியோன், அன்னாள், நாத்தான்வேல், நிக்கொதேமு, அரிமத்தியா ஊராகிய யோசேப்பு முதலிய அநேக பக்தியுள்ள யூதரைக்குறித்து வாசிக்கிறோம். அக்காலத்தில் யூதரால் எழுதப்பட்ட ஏனோக்குப் புஸ்தகம், சாலொமோனுடைய சங்கீதங்கள், யூபிலிகளின் புஸ்தகங்கள், மோசே பரலோகம் செல்லுதல் முதலான நூல்களை நாம் வாசித்தால் உத்தம போதனைகள் பல அவைகளிற் காணலாம். சாதாரண யூதர்களுக்கு மதத்தைப்பற்றி அதி வைராக்கியமிருந்தது. யூதர் யாவரும் தங்கள் தேசத்தை ஒரு திருச்சபையாக எண்ணி, தேசத்தைப் பற்றியும், மார்க்க ஆசாரங்களைப் பற்றியும், எருசலேம் ஆலயத்தைப் பற்றியும் மிகவும் அபிமானமுள்ளவர்களாயிருந்தார்கள். மார்க்கத்தைக்குறித்து அவர்கள் ஏனோதானோவென் றிருக்கவில்லை.

மேலும் 9, 10, 22, 25, 35, 40, 69, 109 முதலிய சங்கீதங்களை நாம் வாசிக்கும்போது, அங்கே சிறுமையும் எளிமையுமானவர்கள், சாந்தகுணமுள்ளவர்கள், ஒடுக்கப்படுகிறவர்கள் என்று சொல்லப்படுகிற ஜனங்களைக் குறித்து வாசிக்கிறோம். துஷ்டர்களால் வரும் துன்பத்தை அவர்கள் அதிகமாய் அநுபவித்துக்கொண்டிருந்தாலும், கர்த்தர்மேல் உறுதியான நம்பிக்கை வைத்து, பக்தியோடும் சாந்தத்தோடும் தங்கள் காலத்தைச் செலவழித்து, கர்த்தர் ரக்ஷிக்கும்நாள் எப்போது வருமோவென்று பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்தார்கள். விசேஷமாக மேசியா வந்து நீதியுள்ள இஸ்ரவேலரை மீட்டுக்கொள்ளும் நாளுக்காக அவர்கள் மிகுந்த வாஞ்

சையுள்ளவர்களா யிருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இருந்த யோசேப்பு, மரியாள், சகரியா, எலிசபெத்து, சிமியோன், அன்னாள் ஆகிய இவர்கள் அவர்களைப் போன்றவர்கள். லூக் 1^{45-55}-ல் அவர்களின் வாஞ்சையைத் தெளிவாய்ப் பார்க்கிறோம். பலெஸ்தீனாவில் இவ்வித நோக்கம் பொருந்தியிருந்தவர்கள் கொஞ்சம்பேர் அல்லர். இவர்கள் இயேசுநாதருடைய போதனைகளை ஏற்றுக்கொள்ளுகிறதற்குப் பக்குவப்பட்ட மனதுடையவரா யிருந்தார்கள்.

இன்னொரு விஷயத்தில் யூதமார்க்கத்தார் உணர்ச்சியடைந்திருந்தார்கள். பூர்வீகத்தில் அவர்களுடைய கொள்கைப்பிரகாரம் கடவுளுக்கும் யூதஜாதிக்கும் சம்பந்தம் இருந்ததேயொழிய, கடவுளுக்கும் தனித்தனி ஆத்துமாவுக்கும் சம்பந்தமில்லை. இப்போதோ, எசேக்கியேல் புஸ்தகம் 18-ம் அதிகாரத்திலிருக்கிற உண்மையை நன்றாய் உணர்ந்திருந்தார்கள். ஒவ்வொரு ஆத்துமாவும் கடவுளுக்கு முன்பாக உத்தரவாதம் உடையது என்பது எல்லாருக்கும் தெரியவந்தது. அதுவுமன்றி, வியாபாரத்தினிமித்தம் அநேக யூதர் அந்நிய தேசங்களிற் சஞ்சரித்தபடியினாலும், அந்நிய மார்க்கத்திலிருந்து அநேகர் யூத மார்க்கத்தில் பிரவேசித்தபடியாலும், யூதர்களிற் சிலர் அந்நிய மார்க்கங்களிலுள்ள நற்போதனைகளை அறிய வந்தார்கள். லூக் 7^{2-5} மாற் 15^{39} அப் 5^{34}. இவர்களின் உள்ளத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷம் வேர்கொண்டது ஆச்சரியமன்று.

மேசியாவைப்பற்றிய நம்பிக்கை. எல்லாவற்றிலும் விசேஷமாக மேசியாவைப்பற்றிய நம்பிக்கையாலே இயேசுநாதருடைய வருகைக்கு யூதர் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தார்கள். தானி 7-ம் அதிகாரத்தை ஆதாரமாகக்கொண்டு யூதர்கள் இந்நம்பிக்கையை உறுதிப்படுத்தினார்கள். அதிலே மிருகங்களாற் குறிக்கப்பட்ட ராஜ்யங்கள் ஒழிந்த பின்பு, மனுஷகுமாரனுடைய சாயலைத் தரித்த ஒருவர் மேகங்களுடனே வருகிறார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிப்பார்கள்; அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று வாசித்து, அதினாலே மேசியா (அல்லது நாம் வழங்குகிறபடி ரக்ஷகர்) ஒரு பெரிய போர்வீரனாக வந்து, ரோம ராஜ்யத்தைக் கவிழ்த்து, துஷ்டரைத் தண்டித்து, சிஷ்டரை ரக்ஷித்துச் சதாகாலமும் இஸ்ரவேலின் ராஜாவாக வீற்றிருப்பாரென்று நம்பிக்கொண்டிருந்தார்கள். சில பக்தர் அவருடைய ராஜ்யம் ஆவிக்குரியதாயிருக்கும் என நம்பினார்கள். லூக் $2^{25, 38}$. பெரும்பான்மையோருடைய நம்பிக்கையில் உலகப்பற்றும் ஜாதி அபிமானமும் கலந்திருந்தன. ஆனாலும் நாம் கவனித்தற்குரிய ஆச்சரியமான காரியம் என்னவென்றால், யூதர் எவ்வளவு கஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டிருந்தபோதிலும், அவர்கள் தேசம் எவ்வளவு க்ஷீணம் அடைந்தாலும், ரக்ஷகர் ஒருவர் வருவார் என்கிற நம்பிக்கையை அவர்கள் விட்டுவிடவே இல்லை. அந்த ரக்ஷகரைப் பற்றியும், அவர் ரக்ஷிக்கும் விதத்தைப்பற்றியும் அவர் அளிக்கும் ரக்ஷிப்பைப்பற்றியும் அவர்களுக்குப் பல தவறான அபிப்பிராயங்களிருந்தபோதிலும், மேசியா வருவாரென்கிற உறுதியான நம்பிக்கை இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிறதற்கு அநேகரைப் பக்குவப்படுத்தி யிருக்கவேண்டும்.

இதுவரை குறிப்பிட்ட விஷயங்களை நாம் மனதில் வைத்துக்கொண்டால், இயேசுகிறிஸ்து செய்த சிறந்த ஊழியத்தைப்பற்றி தெளிவாயும் தொடர்பாயும் வாசிக்கலாம். அத்தொண்டைக்குறித்து மொத்தார்த்தமாக நாம் நிச்சயித்திருக்கிற இரண்டொரு காரியங்களை முதலில் சொல்லுவது உத்தமமென்று தோன்றுகிறது. (1) இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற நாள் முதற்கொண்டு, தாம் மேசியா என்பதைப் பூரணமாய் உணர்ந்துகொண்டு, இவ்வுலகில் தாம் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்ற முழுத் தீர்மானம் உடையவராயிருந்தார். (2) அவ்விராஜ்யத்தைக்குறித்துச் சாதாரண ஜனங்களுக்குள்ளிருந்த கொள்கையை மாற்றவேண்டுமென்பது ஆதிமுதல் அவருக்கிருந்த நோக்கம். (3) அதைச் சரியாய் மாற்றவேண்டுமென்றால், முதல் ராஜாவைப்பற்றியன்று இராஜ்யத்தைப்பற்றியே விசேஷமாகப் பேசவேண்டியிருந்தது. ஆனபடியினாலே தாமே மேசியாவாக இருக்கிறதைக்குறித்து, முதலில் அவர் சாதாரணமாய்ப் பேசவில்லை. (4) ஆயினும் ராஜ்யத்தைப்பற்றிய கொள்கையை மாற்றினதின் நோக்கம், அந்த ராஜ்யத்தை ஸ்தாபனம் செய்தற்கேதான். ராஜாவாலேதான் ராஜ்யம் ஸ்தாபனமாகும். ஆகையால் முடிவில் ராஜாவைப்பற்றி விசேஷமாக எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவே அந்த ராஜாவென்று அவருடைய சரித்திரம் விவரமாய்ச் சொல்லுகிறது.

நமது ஆண்டவர் செய்த திருத்தொண்டைக் காலக்கிரமப்படி பின் வருமாறு சில பிரிவுகளாகப் பிரிக்கலாம்:—

A. பிரவேசகாலம்: ஞானஸ்நானம் பெற்றதுமுதல் முக்கிய அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்ட காலம்வரையும்.

இடம்: விசேஷமாக யூதேயாநாடு: கலிலேயாவுங்கூட.

காலம்: கி-பி. 26-ஆம் குளிர்காலமுதல், 27-ஆம் பஸ்காபண்டிகைவரை. மத் 3^{1}-4^{11} மாற் 1^{1-13} லூக் 3^{1}-4^{13} யோவா 1^{6}-4^{54}.

B. பெருத்த கிரியைகளை நடப்பித்ததின் முதற்பாகம்: ராஜ்யத்தை ஸ்தாபித்தல்.

இடம்: விசேஷமாக கலிலேயா; எருசலேமிலுங்கூட.

காலம்: கி-பி. 27-ஆம் சுமார் பெந்தெகோஸ்து காலமுதல், 28-ஆம் ஏறக்குறைய பஸ்கா பண்டிகைவரைக்கும். மத் 4^{13}-13^{53} மாற் 1^{14}-6^{13} லூக் 4^{14}-9^{6} யோவா 5 அதி.

C. நடுப்பாகம்: இயேசு செய்யும் கிரியைகளும், பரிசேயருடைய விரோதமும்.

இடம்: கலிலேயா.

காலம்: கி-பி. 28-ஆமத்தில் பஸ்காமுதல் கூடாரப் பண்டிகைவரை. மத் 14^{1}-18^{35} மாற் 6^{14}-9^{50} லூக் 9^{7-50} யோவா 6 அதி.

D. கிரியைகளை நடப்பிக்கும்காலத்தின் முடிவு; பாடுகள் சமீபமாகக் காணப்படுகின்றன.

இடம்: யூதேயா. யோவா 7^{1}-11^{54}. பெரேயா. மாற் 10^{1} யோவா 10^{40}.

காலம்: கி-பி. 28-ஆம் கூடாரப் பண்டிகைமுதல், 29-ஆம் பஸ்கா பண்டிகைவரை. மத் 19^{1}-20^{34} மாற் 10^{1-52} லூக் 9^{51}-19^{28}. (இவைகள் காலவரிசையில் வைக்கப்படவில்லை.) யோவா 7^{1}-11^{57}.

E. எருசலேமில் மகிமையோடு பிரவேசித்தல்; கடைசியில் செய்த போதனை; பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், பரலோகம் செல்லுதல்.

இடம்: பெரும்பாலும் எருசலேம்.

காலம்: கி-பி. 29-ஆம் பஸ்காவுக்கு 6 நாள் முன், பெந்தெகோஸ்துவுக்கு 10 நாள் முன்வரை. மத் 21^{1}-28^{20} மாற் 11^{1}-16^{20} லூக் 19^{29}-24^{52} யோவா 12^{1}-21^{23}.

A. பிரவேசப்பாகம்: ஞானஸ்நானம் பெற்றதுமுதல் முக்கிய அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்டதுவரை.

இடம்: விசேஷமாக யூதேயாதேசம்: கலிலேயாவுங்கூட.

காலம்: கி-பி. 26-ஆமத்தின் குளிர்காலமுதல் 27-ஆம் பஸ்கா பண்டிகைவரை. மத் 3^{1}-4^{11} மாற் 1^{1-13} லூக் 3^{1}-4^{13} யோவா 1^{6}-4^{54}.

ஞானஸ்நானம், சோதனை, முதலாம் சீஷர், கானாவூரில் அற்புதம், முதல் பஸ்காபண்டிகை, தேவாலயத்தைச் சுத்திகரித்தது, கலிலேயாவுக்குப் போனது.

ஞானஸ்நானம். — யோவான்ஸ்நானன் என்ன பிரசங்கித்தானென்றால், மேசியா இப்போதே வந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார்; நியாயத்தீர்ப்பினால் அவர் தம் ஆளுகையைத் தொடங்குவார்; ஆனபடியினால் அவருடைய வருகைக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள ஒரே வழியுண்டு; அதாவது பாவத்தைப் பகைத்து, பரிசுத்த ஜீவியம் செய்து, மேசியாவுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். யோவான் சொன்ன வார்த்தைகளை மெய்யென்று ஒப்புக்கொண்டோர், ஒவ்வொருவராய் யோர்தான் நதியி லிறங்கி, தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, நீரில் ஸ்நானம்செய்து, கரை ஏறி, புது ஜீவியம் செய்வார்கள். இதுவே அவர்கள் பரிசுத்தம் பெற்றதற்கு அடையாளமாம். இச்சடங்கினால் குறிக்கப்பட்டதை ஞானஸ்நானம் என்பார்கள். இது இயேசுவுக்கு உத்தமகாரியமாகத்தோன்றினபடியால், அவரும் அவ்வாறு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். அச்சமயத்தில் பரிசுத்தஆவி அவர் மேல்இறங்கிவருகிறதையோவான் ஸ்நானன் தெளிவாகக் கண்டும், வானத்திலிருந்துண்டான ஒரு அசரீரிவாக்கைக் கேட்டும், இவர் தான் வரவேண்டியவர் என்று அறிந்துகொண்டான். அந்நிமிஷ முதற்கொண்டு, இயேசு தம்மை மேசியாவாகப் பூரணமா யுணர்ந்துகொண்டு, அதுமுதல் வீட்டுக்குப் போகாமல் தமது பகிரங்கமான தொண்டுக்குத் தம்மைத் தத்தம் செய்தனர். அன்றைக்குக் கண்ட காட்சியும், கேட்ட சத்தமும், யோவானையும் இயேசுவையும்தவிர மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், யோவான் அன்றைக்கு அதைச் சகலருக்கும் அறிவித்தபடியினாலே, அன்றைக்கு இஸ்ரவேலுக்கு ரக்ஷகர் வெளிப்பட்டாரென்று சொல்லவேண்டும். சிலர் அவர் அந்நாள்வரை சாமான்னிய மனுஷனா யிருந்தாரென்றும், அன்றுமுதல் தெய்வீகத்தன்மை அவர்மேல் வந்து அமர்ந்தது என்றும் நினைக்கிறார்கள். இதைக்குறித்து (1) இப்படி நினைக்க யாதொரு முகாந்தரமுமில்லை; (2) யோவான் சுவிசேஷத்தின் ஆரம்பத்திலும், பவுலுடைய நிருபங்களிலும் நாம் கிறிஸ்துவின் வாலாற்றைப்பற்றி வாசிக்கிறவைகளுக்கு இப்படி நினைத்தல் விரோதமாக இருக்கிறது; (3) மேலும் ஆதிமுதல் பொதுவான சபையின் கொள்கை இதுவன்று என அறியவேண்டும்.

ஆயினும் ஞானஸ்நானம் பெற்ற அன்றைக்கு இயேசு பகிரங்கமாய் வெளிப்பட்டு, தாம் செய்யவேண்டிய ஊழியத்தைப்பற்றிப் புது உணர்ச்சியடைந்து அதை நிறைவேற்றுவதற்குத் தக்க திறமை பெற்றார். அன்று முதல் அவர் தம்மை மேசியாவாக உணர்ந்து, மேசியா செய்யவேண்டிய அற்புதக் கிரியைகளைச் செய்து, சீஷர்களை நியமிக்க ஆரம்பித்து, வாக்கிலும் செய்கையிலும் திவ்விய அதிகாரமுள்ளவராய்க் காணப்படுகிறார்.

சோதனைகள். — ஞானஸ்நானத்திற்குப் பின்பு இயேசுகிறிஸ்துவுக்கிருந்த உணர்ச்சியைப்பற்றி நாம் அவருடைய சோதனையைக்குறித்தசரித்திரத்தினால் கொஞ்சம் அறிந்துகொள்ளுகிறோம். அச்சரித்திரம் முதலாவதாக இயேசுவாலே சொல்லப்பட்டிருக்கவேண்டும். தமக்குச் சம்பவித்ததையெல்லாம் அவர் தெளிவாகச் சாதாரண வார்த்தைகளில் சொல்லுகிறது அசாத்தியமாகையால் தமது அநுபவத்தை இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாகமாத்திரம் காட்டியிருந்தபோதிலும், அதிலே சில காரியங்கள் தெளிவாயிருக்கின்றன. அவர் அந்தச் சமயத்தில் தம்மை மேசியாவாக எண்ணினதோடுகூட, தமக்குச் சில புதிய வல்லமைகள் உண்டென்றும் அறிந்திருந்தபடியால், தாம் செய்யப்போகிற ஊழியத்தைக்குறித்துச் சீக்கிரத்தில் சில தீர்மானங்களைச் செய்யவேண்டியதாக இருந்தது. யூதர் எதிர்பார்த்திருந்த பிரகாரமாக உலக ராஜ்யங்களையெல்லாம் தமக்கு வசப்படுத்தி, தாவீதைவிட பெரிய மகிமையோடு எருசலேமில் மகாராஜாவாக வீற்றிருக்கவேண்டுமா? தமக்கிருக்கிற இப்புதிய அற்புத வல்லமையைத் தமது தற்பிரயோஜனத்திற்காக உபயோகிக்கலாமா? ஆச்சரியமான செய்கைகளால் தாமே பிரசித்திபெற்ற மேசியாவென்று ரூபகாரப்படுத்தவேண்டுமா? அல்லது மட்டில்லாத தமது அன்பைத் தமது கிரியைகளால் காட்டவேண்டுமா? இவ்வித கேள்விகளுக்கு அவர் சோதனைகாலத்தில் உத்தரவுகொடுத்து, அந்நாள் முதற்கொண்டு, முடிவுபரியந்தம் அத்தீர்மானங்களின்படி தமது ஊழியத்தை நடத்தினார். அவருடைய ராஜ்யம் உலக ராஜ்யமன்று; ஆன்மாக்களை ஆளுகிற ராஜ்யம். அவருடைய அற்புத வல்லமை அவருடைய சொந்தக் கஷ்டங்களை நீக்க அல்ல; அவிசுவாசமுள்ள ஜனங்களைப் பிரமிக்கச்செய்ய அல்ல; மனிதருடைய குறைவுகளை நீக்கி, தேவனுடைய மகிமையையும் அன்பையும் வெளிப்படுத்துகிறதற்கேயாம்.

முதற் சீஷர்.—கானாவூரில் செய்த அற்புதம்.

சோதனைகள் முடிந்தவுடனே நேர்ந்த சம்பவங்களை நாம் நான்காம் சுவிசேஷத்தில் பார்க்கலாம். இயேசு சிலகாலம் யோர்தான் நதியண்டை யோவான்ஸ்நானனுக்குச் சமீபத்திலிருக்கையில், யோவான் இரண்டொரு முறை (யோவா $1^{29, 36}$) அவரைச் சுட்டிக்காட்டினமையால், யோவானுடைய சீஷரில் சிலர் இயேசுவே வரவேண்டிய மேசியாவென்று நம்பி அவரைப் பின்தொடர்ந்தார்கள். அச்சீஷர்கள் பிற்காலத்தில் இயேசுவால் அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்பட்டபோது எப்போதும் அவரோடுகூடவே இருந்ததுபோல ஆரம்பத்தில் இருக்கவில்லை. சில நாள் அச்சீஷர்கள் போய் அவருடைய உபதேசத்தைக் கேட்பார்கள். சிலகாலம் தங்கள் சாதாரண ஜீவனத்துக்குரிய தொழிலைப் பார்த்துக்கொள்ளுவார்கள். அவர்களுக்கும் இயேசுவுக்கும் இப்படிப்பட்ட சம்பந்தம் இருக்கும்போது, அவர்கள் யோர்தான் நதியை விட்டு கலிலேயாவுக்குப் போனார்கள். அந்நாட்களில் இயேசு யோசேப்பின் வீட்டை முற்றிலும் விட்டுவிடவில்லை. அப்பொழுது அவரோடுகூட அவருடைய தாயாரும் அவரிடம் புதிதாய்ச் சேர்ந்திருந்த சீஷரும் கானாவூரில் நடந்த கலியாணத்திற்கு அழைக்கப்பட்டார்கள். அங்கு அப்புதிய சீஷர்கள் அவர் செய்த முதலாம் அற்புதத்தைக் கண்டு, அவர்மேல் வைத்த விசுவாசத்தில் ஸ்திரப்பட்டார்கள்.

முதலாம் பஸ்கா.—அதன்பிறகு சிலகாலம் இயேசுநாதர் கப்பர்நகூமில் தங்கி, அங்கிருந்து பஸ்காபண்டிகைக்கு எருசலேமுக்குப் போனார். அதுசம்பந்தமாய் நாம் யோவான் சுவிசேஷத்தில் வாசிக்கிற பிரகாரமாக, அவர் தேவாலயப் பிராகாரத்தில் வியாபாரம் செய்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் அங்கிருந்து துரத்தினார். மற்றச் சுவிசேஷங்களை நாம் வாசித்தால், இயேசு அறையப்படுவதற்கு முந்தின வாரத்தில் அவர் இப்படிச் செய்ததாகப் பார்க்கிறோம். மாற் 11^{15-18}. ஒருவேளை அவர் இதை இரண்டு விசை செய்திருக்கலாம். அது சந்தேகத்துக்கிடமாயிருக்குமாயின், நம்மில் பெரும்பான்மையோர் யோவான் அப்போஸ்தலனே நான்காம் சுவிசேஷத்தில் தாம் கண்ட காரியங்களைத் திட்டமாய் எழுதுகிறானென்று நம்புகிறபடியால், யோவான் எழுதியிருப்பதே சரியாயிருக்குமென்று நம்பவேண்டும். இயேசு வியாபாரிகளைத் துரத்திய செய்கையால் தாம் மார்க்கச் சீர்திருத்தம் செய்கிறவ

ராகக் காணப்படுகிறூர். மேலும் யாவரும் இவ்வளவு அதிகாரமுடைய இவர் யாரென்று கேட்கவேண்டியது அவசியமாயிற்று. இக் காலத்தில் இயேசுவின் உபதேசத்தை ஏற் றுக்கொண்டோர் ஞானஸ்நானம் பெற்றூர்க ளென்று யோவான் சுவிசேஷத்தில்மாத்திரம் (யோவா 3^{22} 4^{1}) வாசிக்கிறோம். அவர் எருச லேமிலிருந்த காலத்தில் யூத மகா சங்கத் தைச் சேர்ந்த நிக்கொதேமுவோடு செய்த சம்பாஷணையில் அவர் மறுபிறப்பைப்பற்றிய உபதேசத்தை அருளிச்செய்தார். சிறிது காலத்துக்குள் யோவான்ஸ்நானன் ஏரோது அந்திப்பாவால் சிறையில் வைக்கப்பட்ட போது இயேசு கலிலேயாவுக்குப் போனூர். அவர் சமாரியாநாட்டின் வழியாகப் போய்ச் சிகேம் என்னும் பெயருள்ள ஊரில் இரண் டொருநாள் தங்கி அநேகருக்கு உபதேசம் செய்தார். யோவா 4^{39-42}. சமாரியருக்குங்கூட மேசியா வருகிறதைப்பற்றி ஒருவித நம்பிக் கை யிருந்தது. இயேசு தாமே இந்நம்பிக்கை யை நிறைவேற்றுகிறவரென்று அவர்களுக் குக் காட்டினதாக வாசிக்கிறோம். ஆனுல் அக்காலத்தில் அவர் யூதருக்குத் தம்மை அவ் விதமாய் வெளிப்படுத்தவில்லை. யூதரல்லாத வர்களோடு ஒருவேளை அவர் தாராளமாய்ப் பேசியிருக்கலாம். மாற் 7^{31} யோவா 2^{13}-4^{42}-ல் சொல்லப்பட்ட சம்பவங்களெல்லாம் மூன்று நாலு வாரத்துக்குள் நடந்திருக்கும். அப் போது ஆண்டவர் கலிலேயாவுக்குச் சென்று சிலகாலம் பகிரங்கமான ஊழியத்தை அதிக மாய்ச் செய்யாமலிருந்தார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் தங்களுடைய சாதா ரணமான தொழிலுக்குத் திரும்பிப் போ னூர்கள்.

B. அதிகமான கிரியைகளை நடப்பிக்கிற முதற்பாகம். ராஜ்யத்தை ஸ்தாபித்தல்.

இடம்: பெரும்பாலும் கலிலேயா, எருச லேம்.

காலம்: கி-பி. 27-ஆ சுமார் பெந்தெ கோஸ்துமுதல், 28-ஆ ஏறக்குறைய பஸ்கா பண்டிகைவரைக்கும். மத் 4^{12}-13^{53} மாற் 1^{14}-6^{13} லூக் 4^{14}-9^{6} யோவா 5 அதி.

இப்பாகத்தில் நாம் கவனிக்கவேண்டிய விசேஷங்களாவன:—

1. பன்னிருவரை அழைத்தல்; பயிற்றல்; அனுப்புதல். பிறகு, லூக்கா சுவிசேஷத் தில் சொல்லியிருக்கிறபடி, எழுபதுபேரை அழைத்து அனுப்புதல்.

2. சிறிது சிறிதாய் யோவான்ஸ்நானன் ஊழியத்திற்கும் இயேசுவின் ஊழியத்திற்கு முள்ள வித்தியாசங்கள் வெளியாதல்; யோ வானின் ஊழியத்தைவிட இயேசு செய்த ஊழியம் சிலாக்கியமாகத் தோன்றல்.

3. பரலோக ராஜ்யத்தின் யதார்த்தமான தன்மையைக்குறித்துச் சொல்லிய விவரமான உபதேசித்தல்.

4. மேசியாவுக்குரிய பல கிரியைகளை நடப்பித்தல்; விசேஷமாக வியாதியஸ்தரைச் சொஸ்தப்படுத்தல்.

5. இக்கிரியைகளைக் கண்ட சாதாரண ஜனங்கள் அதிகமாய்ப் பிரமித்துச் சந்தோ ஷப்பட்டாலும், இயேசுவின் உட்கருத்துக் களை உள்ளபடி அறியாமலிருத்தல்.

6. பரிசேயர், வேதபாரகர், இவர்கள் கொள்கைக்கும், இயேசுவின் போதனைக்கு முள்ள பெரிய வித்தியாசம் மேன்மேலும் வெளியாக, அவர்கள் பகையும் அதிகரித்தல்.

7. அவருடைய சீஷர்கள் அவரது செய் கைகளையும் வார்த்தைகளையும் கவனித்து, அவரே மேசியாவாக இருக்கவேண்டுமென்று நாளுக்குநாள் எண்ணங்கொள்ளல். இவை களைத் தனித்தனியே கவனிப்போம்.

(1) சீஷரை அழைத்தல். சீஷரை அழை த்தபிறகுதான் ஆண்டவர் தமது பகிரங்கமான ஊழியத்தை ஆரம்பித்தார். முதல் மூன்று சுவி சேஷகர்கள் அவ்வூழியத்தைப்பற்றிப் பேசு வதற்கு முன்னதாகவே சீஷரை அழைத் தலைப்பற்றி எழுதியிருக்கிறூர்கள். ஒருநாள் மீன் பிடிப்பவர்களான சீமோனும் அந்தி ரேயாவும், யாக்கோபும் யோவானும் கடற் கரையில் தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கையில், இயேசு அங்கே வந்து நின்று, 'என்னைப் பின்பற்றி வாருங்கள்' என்று அழைக்கிறதைக் கேட்டார்கள். ஏற் கனவே அவர்கள் ஒருவிதமாய்ச் சீஷராயி ருந்தபோதிலும் இது நூதனமான அழைப்பு. இதுமுதல் அவர்கள் இயேசுவோடே தரித் திருந்து அவருடைய உபதேசத்தைத் தொட ர்ச்சியாய்ப் பெற்றுக்கொள்ளுகிறூர்கள். அவர் கள் கேள்வி கேட்கும்போது, அவர் தக்க விடை சொல்லுவார். பிறருக்குச் சொல்லாத சில விஷயங்களை விவரமாய் அவர்களுக்கு உபதேசிக்கிறூர். அவர் இவ்விதமாய் அழைத்த பன்னிருவரில் உயர்ந்த அந்தஸ்துள்ளவன் இல்லை. ஆனுலும் சிலருக்குச் சொத்திருக் கலாம். சிலருக்குச் சில சொந்த படவுக ளுண்டு. மத்தேயு ஒரு ஆயக்காரன். இரண் டாம் சீமோன் செலோத்தியர் வகுப்பைச் சேர்ந்தவன். இயேசு இவர்களைத் தெரிந்து கொண்ட நோக்கம் என்னவென்றூல், இந்தச் சீஷர்களே கற்றுக்கொள்ளுகிறதற்கு ஆயத்த முள்ளவர்களும், தாங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுக்குச் சொல்லக்கூடியவர்களுமா

யிருப்பார்கள் என்பதாம். அவர்களுக்கு அவர் தாம் மற்றோரிடத்தில் எடுத்துக் கூறப் போகிற போதனையை விவரமாகச் சொல்லியருளினார். அதின் பொருள் பரலோக ராஜ்யத்தின் ரகசியமே. அவர்கள் உடனே சகல காரியங்களையும் அறிந்துகொள்ளாமல், சிறிது சிறிதாகவும் அதிக தாமதமாகவும், உணர்வடைந்தார்கள்.

சிலகாலமானபிறகு (ஒருவேளை 28-ளூவத்தின் துவக்கத்தில்) இயேசு தாம் போய்ச் சந்திக்காத சில நாடுகளுக்கும் கிராமங்களுக்கும் தமது சீஷர்களை அனுப்பினார். போதிக்கிறதற்கு அவர்களுக்கு அதிகாரம் அவர் கொடுக்கவில்லை. அவர்கள் சில அற்புதமான கிரியைகளைச் செய்து, பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்கிற ஒரே விளம்பரத்தை எங்கும் கூறவேண்டும். மத் 10^{7}. லூக்கா சுவிசேஷத்தில்மாத்திரம் எழுபது சீஷர்களை அனுப்பினதைப்பற்றிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறதினாலும், லூக் 10^{1}-ல் சில கைப்பிரதிகள் 'எழுபத்திரண்டு' என்று சொல்லுகிறதினாலும் சிலர் இதைப்பற்றி சந்தேகங்கொள்ளுகிறார்கள். எனெனில், பூர்வீகத்தில் உலகத்திலுள்ள ஜாதிகளின் தொகை 72 என்கிற ஒரு கொள்கையிருந்தது. அதனால் இஸ்ரவேலருக்கு எவ்வாறு 12 பேர் அனுப்பப்பட்டார்களோ, அவ்வாறே புறஜாதியாரான உலகத்திலுள்ள 72 ஜாதிகளுக்கும் 72 பேர் அனுப்பப்பட்டார்கள் என்று பிற்காலத்தில் எழுதப்பட்டிருக்கலாமென உத்தேசிக்கிறார்கள். ஆனாலும் அப்படிப்பட்ட ஐயத்துக்கு இடமில்லையென்று நம்மில் பெரும்பான்மையோருக்குத் தோன்றும். பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத்தவிர இன்னும் அநேகர் சீஷர்களாய் இருந்தார்களென்பது உண்மை. அவர்களில் சிலருக்கு அவர் விசேஷித்த வேலையைக் கொடுத்திருக்கலாம். இது ஆச்சரியமான காரியமன்று. மேலும் நாம் லூக்கா 10-ம் அதிகாரத்தை வாசிக்கும்போது, இந்தச் சரித்திரம் உண்மையானதென்று தோன்றுகிறது.

(2) யோவான்ஸ்நானனுடைய ஊழியத்துக்கும் இயேசுவின் ஊழியத்துக்கும் மிகுந்த வித்தியாசங்கள் தெளிவாதல். — யோவான் ஸ்நானனும், இயேசுவும் இயேசுவுடைய சீஷர்களும் ஒரே விளம்பரத்தோடு தங்களுக்குரிய பிரசங்கத்தொழிலை ஆரம்பித்தார்கள். அந்தமட்டுந்தான் அந்த ஊழியம் ஒன்றாயிருந்தது. ஆனால்யோவான் முன்னே செய்தஊழியத்தை இயேசு பிந்தினகாலத்தில் ஒருங்கே கவனித்தபோது, 'பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்' என்று சொன்னார். மத் 11^{11}. ஏனென்றால் யோவான் பரலோக ராஜ்யத்துக்குப் புறம்பே இருந்தான். யோவானுடைய ஊழியம் அதற்குரிய மனந்திரும்புதலைப்பற்றிய உபதேசத்துடனே நின்றுவிட்டது. தன் வேலைக்கிசைய யோவான் சந்நியாசமாய் வனவாசஞ் செய்தான். இயேசுவோ அவ்விதம் செய்யவில்லை. அதுவே எல்லாராலும் முதலாவது கவனிக்கப்பட்ட ஒரு வித்தியாசம். மாற் 2^{18-22} மத் 11^{18}. ஆனால் புறம்பான வித்தியாசத்தைப்பார்க்கிலும் உள்ளான பெரிய வித்தியாசங்களிருந்தன. பரலோக ராஜ்யத்துக்காக ஒவ்வொருவனும் தன்னைச் சுத்தப்படுத்தி ஆயத்தம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று யோவான் உபதேசித்தபோதிலும், அதின் ராஜாவைக்குறித்தும், அந்த ராஜ்யத்தின் தன்மையைக்குறித்தும் சாதாரண யூதருக்கிருந்த எண்ணமே யோவானுக்கும் இருந்தது. இயேசுவோ அந்த எண்ணத்தை மாற்றி, ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வகையையும் மாற்றும்படியே வந்திருந்தார். அதனாலே யோவான் தன்னுடைய அந்தியகாலத்தில் சிறைச்சாலையிலிருந்தபோது, தன் வேலையெல்லாம் கெட்டுப்போனதே என்கிற விசாரத்துடன், தான் எதிர்பார்த்திருந்த நியாயத்தீர்ப்பு முதலிய அடையாளங்களையெல்லாம் இயேசு செய்யவில்லை என்று அறிந்து, சந்தேகமுற்று அவர் வாஸ்தவமாகவே மேசியாதானோ அல்லது தான் அவரில்முன்கொண்ட நம்பிக்கையும்விசுவாசமும் வீணாய்ப்போயினவோ என்று விசாரிக்கும்படி சீஷரை அவரிடத்துக்கு அனுப்பினான். அந்தச்சமயத்தில் இயேசு தம்மை மேசியா என்று ஜனங்களுக்குச் சொல்ல விரும்பாமையால், யோவானுக்கு யாதொன்றும் நேராக விளக்கிக் காட்டாமல், ஏசாயாவின் ஆகமத்திலுள்ள சில வாசகங்களை அவனுக்கு நினைப்பூட்டி, அவ்விதமாக அவனுக்கு மேசியாவைப்பற்றியும் அவர் செய்யும் கிரியைகளைப்பற்றியும் இருந்த எண்ணத்தை மாற்றும்படி பிரயாசப்பட்டார்.

(3) ராஜ்யத்தைப்பற்றிய உபதேசம்.— யோவான்ஸ்நானன் கேட்க இயலாமலிருந்த அநேக உபதேசங்களைக் கலிலேயாவில் கூடிவந்த திரளான ஜனங்கள் நாளுக்கு நாளாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். விசேஷமாகப் பன்னிருவரும் அவைகளைக் கற்றுக்கொண்டு வந்தார்கள். அக்காலத்தில் ஆண்டவர் அருளிச்செய்த உபதேசத்தின் விசேஷித்த பொருளானது பரலோக ராஜ்யத்தின் தன்மையும், அதின் குடிகளின் குணாதிசயங்களுமே. அதைக்குறித்து 'இயேசுவின்

போதனை' என்கிற நிபந்தத்தில் விவரிக்கப்படும்.

(4) மேசியாவுக்குரிய பல கிரியைகளை நடப்பித்தல்.—மேலே குறிக்கப்பட்ட இந்தக் காலத்தில் இயேசு அநேக அற்புதங்களைச் செய்தார். அந்த அற்புதங்கள் வாஸ்தவமாய் நடந்தன என்பதைக்குறித்து தற்காலம் சுவிசேஷ ஆராய்ச்சி செய்திருக்கிற ஒவ்வொருவருக்கும் சந்தேகங் கிடையாது. அற்புதங்கள் உலகத்தில் நடக்கவே முடியாது என்று சொல்லுகிறவர்களைத்தவிர, சுவிசேஷங்களில் சொல்லப்பட்ட அற்புதங்களைப்பற்றிய அத்தாக்ஷிகளை ஆராய்ந்தவர்கள் எல்லாரும் இவைகள் யதார்த்தமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவைகளைப்பற்றி கவனிக்கவேண்டிய சில காரியங்களாவன:

இந்த அற்புதங்கள் எல்லாம் இயேசு யோவான்ஸ்நானனுக்குச் சொன்ன விடையில் குறிக்கப்பட்ட கிரியைகளைப்போலிருக்கின்றன. அதாவது, அவைகள் இரக்கத்தின் கிரியைகளாயிருந்து, பூர்வீகத்தில் சொல்லப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகிறவைகள். மேலும் இயேசு ஒரேவிதமான அற்புதங்களைமாத்திரம் செய்தார். தம்முடைய கஷ்டத்தை நீக்கிக்கொள்ள அவர் அற்புதம் செய்யவில்லை. அடையாளம் வேண்டுமென்று விரோதிகள் கேட்டபோது யாதொரு அடையாளத்தையும் அவர் காண்பிக்கவில்லை. அவர் வாய்மொழியாகச் சொன்ன அநேக உபதேசங்களைத் தாம் செய்த அற்புதங்களைக் கொண்டு உணர்த்திக்காட்டினார். அந்த அற்புதங்கள் போதனைக்கு ஏதுவாகவே இருந்தன. தாம் சொல்லிவந்ததற்கிசைய பரம ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்தாரே ஒழிய, ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணுவதினிமித்தம் அவர் யாதொன்றுஞ் செய்யவில்லை.

(5) இந்தக் கிரியைகளைக் கண்டு சாதாரண ஜனங்கள் அதிக ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்தாலும், இயேசுவின் மன எண்ணத்தைச் சரியாய் அறிந்துகொள்ளாமல் இருத்தல். — நாம் மேலே 4-ம் சுவிசேஷத்திற்கிசையக் காட்டியிருக்கிறபடி இயேசு பன்னிருவரை அழைக்க முந்தி விசேஷித்த ஒழுங்கு ஒன்றுமின்றிச் சில இடங்களுக்குப் போய் ஊழியம் செய்துவந்தார். ஒருவேளை அந்தக் காரணத்தால்தான் நாம் மாற் 1^{32-34}-ல் வாசிக்கிறபிரகாரம், அவர் தம்முடைய பகிரங்கமான ஊழியத்தை ஆரம்பித்த அன்றைக்கே திரளான ஜனங்கள் அவரிடத்திற் கூடிவந்து அவருடைய கிரியைகளைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் மிகுந்த களிப்படைந்தார்கள். அந்த நாளில் மாத்திரமன்று, அந்தக் காலத்திலெல்லாம் இயேசு எங்கே இருந்தாலும் திரளான ஜனங்கள் எப்போதும் அவரைச் சூழவே யிருந்தார்கள். ஜனங்கள் அவருக்கும் மற்ற ரபிமாருக்கும் செய்கையிலும் வார்த்தையிலு மிருந்த பெரும் வித்தியாசத்தைக் கண்டு அவர் அதிகாரத்தோடு பேசி, அதிகாரத்தோடு கிரியைகளை நடப்பிக்கிறார் என்று புகழ்ந்தார்கள். ஆனாலும் அவரே வரவேண்டிய ரக்ஷகரென்று அவர்கள் எண்ணவில்லை. பொதுவாக யோவான்ஸ்நானனுடைய வார்த்தைகளைக் கேட்டவர்கள் இச்சமயத்தில் அவைகளைப் பற்றிக் கவனியாமலிருந்தார்கள். சாதாரண ஜனங்கள் மகா தீர்க்கதரிசி யொருவர் தோன்றியிருக்கிறார் என்றுமட்டும் எண்ணினார்களென்று லூக் 7^{16}-ல் பார்க்கிறோம்.

(6) பரிசேயர் விரோதித்தல்.—ஆரம்பத்திலே பரிசேயர் மற்றவர்களைப்போல இயேசுவுக்கும் அவருடைய சீஷருக்கும் சிநேகங் காட்டித் தங்கள் சொந்த வீடுகளுக்கு அவர்களைப் போஜனத்துக்கு அழைத்தார்கள். தீர்க்கதரிசி யொருவர் தோன்றுகிறது அசாத்தியமென்று அவர்கள் சொல்லக்கூடியவர்களல்லர். அவர்கள் தங்கள் சொந்த நோக்கத்தின்படி அவர் மெய்யான தீர்க்கதரிசியா இல்லையாவென்று திரும்பத் திரும்பச் சோதிக்கும்படி பிரயாசப்பட்டார்கள். யோவா 1^{19} 7^{47} மத் 12^{38} 16^{1} 19^{3}. என்றாலும் சீக்கிரத்துக்குள் அவர்களுக்குள்ளே சமுசயங்கள் தோன்றின. மேலும் பரிசேயருடைய ஒழுக்க முறைகளெல்லாம் கண்டிப்பாயும், இயேசுவினுடைய ஒழுக்க முறைகளெல்லாம் இரக்கமாயும் இருந்தன. உபவாசம், ஸ்நானம்முதலிய அநேக காரியங்களில் அவருடைய வழக்கத்துக்கும் பரிசேயருடைய ஆசாரத்துக்கும் நேர் விரோதமிருந்தது. இதுவுமன்றி பரிசேயர் இகழ்ந்த ஜனங்களோடு இயேசு மனப்பூர்வமாய்ச் சகவாசம் பண்ணினார். மாற் 2^{15-17}. அதோடு அவர் பரிசேயரை பகிரங்கமாகக் கண்டிக்க ஆரம்பித்தார். விசேஷமாக ஓய்வுநாளைப் பற்றிய விஷயங்களில் அவர்கள் செய்திருந்த சட்டங்களை அவர் மீறி, அவர்களுடைய இரக்கமில்லாத தன்மையைக் காட்டினார்.

(7) இயேசு இன்னாரென்று சீஷருக்குச் சிறிது சிறிதாக வெளியாதல்.—இந்தக்காலத்தில் இயேசு தாம் மேசியா என்று யாருக்கும் தெளிவாய்ச் சொல்லவில்லை. பிசாசு பிடித்தவர்கள் அவரை அறிந்துகொண்டது ஆச்சரியம்; அவர்களை அவர் கண்டித்தது அதைவிட ஆச்சரியம். அவர் அவ்விதம் செய்ததின் நோக்கமானது, ஜனங்கள் தாம் மேசியா

என்று அறியவந்தால், மேசியாவைப்பற்றி அவர்களது எண்ணம் தப்பிதமாயிருந்தமையால், உடனே அவர்கள் தம்மை ராஜாவாக்கும்படி கலகம் உண்டாக்குவார்கள் என்பதுதான். மேலும் சீஷர்கள் தாம் தம்மைப்பற்றிச் சொல்வதினாலன்று, தாங்களே தம்மைக் கவனிப்பதினாலே தாம் மேசியா என்று அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினார். தவிர ராஜ்யத்தைக்குறித்து ஜனங்களுக்கிருந்த தப்பான எண்ணங்களை மாற்றின பிறகுதான் அதின் ராஜன் இன்னாரென்று அவர்களுக்குச் சொல்லவேண்டியது. ஆகையினாலே நாம் குறித்திருக்கிற இக்காலத்தில் அவர் தாமே மேசியாவென்று சொல்லாதபடிக்கு, மெய்யான மேசியாவுக்குரிய கிரியைகளை நடப்பித்து, அவ்விதமாய்த் தம்மைச் சிறுகச் சிறுக வெளிப்படுத்தினார்.

C. நடுப்பாகம்: இயேசுவின் கிரியைகளும், பரிசேயருடைய விரோதமும்.

இடம்: கலிலேயா. ஒரு முறை பலஸ்தீனாவின் வட எல்லையைத் தாண்டிப்போதல்.

காலம்: கி-பி. 28-ளூத்தில் பஸ்காமுதல் கூடாரப் பண்டிகைவரையில். மத் 14^{1}-18^{35} மாற் 6^{14}-9^{50} லூக் 9^{7-50} யோவா 6 அதி. இதிலே பின்வரும் சங்கதிகள் கவனிக்கத் தக்கன.

1. சாதாரண ஜனங்கள் இன்னும் அதிகமாய் வைராக்கியங்கொண்டு, பிறகு அவர் தாங்கள் எதிர்பார்க்கிறவைகளைச் செய்யமாட்டாரென்று கண்டு, அதைரியப்பட்டுப் பின்வாங்கிப்போதல்.

2. வேதபாரகருக்குள்ளும் பரிசேயருக்குள்ளும் இன்னும் அதிகமான விரோதமுண்டாதல்.

3. சீஷருக்குள் சற்று அறிவுள்ள விசுவாசமுண்டாதல்; கடைசியாகப் பேதுருதன் விசுவாசத்தை அறிக்கையிடுதல்.

4. மறுரூபமடைந்தபோது பிதாவே இயேசுவுக்குச் சாக்ஷி பகருதல்.

5. ஜெயங்கொண்டேன் என்கிற எண்ணம் இயேசுவுக்குள் உண்டாகுதல். மத் 11^{25-30} லூக் 10^{17-24}.

6. அதேசமயத்தில் அவர் வரப்போகிற பாடுகளையும் உயிர்த்தெழுதலையும் தெளிவாகக் கண்டு, அவைகளைத் தெரிவிக்க ஆரம்பித்தல்.

இங்கே குறிக்கப்பட்ட இந்த ஆறுமாத காலங்களில் அவர் கலிலேயாவில் சிலகாலமாக தாமதித்திருந்து, 5000 பேரையும் 4000 பேரையும் போஷித்தல், ஜலத்தின்மேல் நடத்தல் முதலிய சில விசேஷித்த அற்புதங்களைச் செய்து, சில முக்கியமான போதனைகளை அருளிச்செய்தார். பிறகு இதுவரைக்கும் செய்யாத ஒரு பெரிய சுற்றுப்பிரயாணம் பண்ணினார். அதில் அவர் தீரு சீதோன் என்கிற அந்நிய நாடுகளைக் கடந்து, அப்புறம் பிலிப்பு செசரியாவுக்குக் கிழக்குப் பக்கமாகத் திரும்பி, மறுபடியும் தெற்கே சென்று, தெக்கப்போலியின் ஊர்கள் வழியாய்க் கப்பர்நகூமுக்கு வந்தார். இந்தப் பிரயாணத்தின் நோக்கம் பிரசங்கம் பண்ணுவதன்று. கலிலேயாவின் ஜனங்களுக்குள் இக்காலத்தில் அவரைக்குறித்து உண்டான நம்பிக்கையால் அவரை ராஜாவாக்கலாமென்றெண்ணினார்கள். யோவா 6^{15}. இதற்குத் தப்பிக்கொள்ளுகிறதற்கும், தமக்கு நேரிடப்போகிற முடிவைக்குறித்துச் சீஷரோடு சாவகாசமாய்ச் சம்பாஷணை செய்கிறதற்கும் ஜனக்கூட்டத்தை விட்டுச் சீஷரோடு தனித்துப் போனார். மற்றவர்கள் இந்தச் சமயத்தில் தம்மை அறியவேண்டுமென்று அவர் விரும்பவில்லை. மாற் $7^{24.36}$ 8^{30} 9^{9} மத் 11^{20} முதலிய வாக்கியங்களில், அவர் கலிலேயாவில் செய்த ஊழியம் முடிவுக்கு வந்திருக்கிறதென்று பார்க்கிறோம்.

(1) சாதாரண ஜனங்கள்மேன்மேலும் வைராக்கியங்கொண்டு, பிறகு பின்வாங்கிப் போதல். கி-பி. 28-ளூத்துப் பஸ்கா பண்டிகைக்குச் சிறிதுகாலத்துக்கு முந்திக் கலிலேயா ஜனங்கள் இயேசுவைக் குறித்துக்கொண்டிருந்த எண்ணம் மேல்நிலைக்கு வந்தது. இதற்கு முகாந்தரம் அவர் ஐயாயிரம்பேரைப் போஷித்ததுதான். அப்போது கூடின ஜனக்கூட்டத்தில் எருசலேமுக்கு யாத்திரை பண்ணப் போகிறவர்கள் அநேகம்பேர் இருந்திருப்பார்கள். தாங்கள் எதிர்பார்த்திருந்த ரக்ஷகர் இவர்தான் என்று சொல்லி, இவருக்கு இஷ்டமானாலுஞ் சரி, இஷ்டமில்லாவிட்டாலுஞ் சரி, இவரையே ராஜாவாக்கி, ரோமரைத் துரத்தவேண்டுமென்று, அவர்கள் துணிவுகொண்டார்கள். யோவா 6^{15}. அவரோ அவர்களைவிட்டு விலகிப்போனார். சிலபேர் அவரைப் பின்தொடர்ந்துபோய்க் கப்பர்நகூம் தேவாலயத்தில் அவரைக் கண்டுபிடித்தபோது, அவர்களுக்கு அவர், நாம் யோவா 6^{26-51}-ல் வாசிக்கிற பிரசங்கத்தைச் செய்தார். அது ஒருவேளை அவர்களுக்கு விளங்காமலிருந்திருக்கலாம். எப்படியாவது அதுமுதற்கொண்டு அவர்கள் அதைரியப்பட்டு, அவரை விட்டுப் பின்வாங்கிப் போனார்கள்.

(2) பரிசேயருடைய விரோதம்.—இக்காலத்தில் இரண்டு மூன்று சம்பவங்களில் பரிசேயருடைய விரோதம் மிஞ்சிப்போயிருக்

கிறதைப் பார்க்கிறேம். மாற் $8^{11.15}$. விசேஷமாக மாற் 7^{1-13}-ல் அடங்கிய பிரசங்கத்தில் அவர் பரிசேயரை முற்றிலும் கண்டித்துத் தள்ளிவிட்டதால், அதுமுதற்கொண்டு பகிரங்கமான விரோதம் ஏற்பட்டிருக்கலாம்.

(3) பன்னிருவருடைய விசுவாசம். பேதுருவின் அறிக்கை.—சாதாரண ஜனங்கள் அதைரியப்பட்டு விலகிப்போனாலும், சீஷர் அவர்களைவிடத் தங்கள் எஜமானனை நன்றாய் அறியக்கூடியவர்களா யிருந்தார்கள். அவர்களுக்கு மேசியாவைப்பற்றிப் பல தப்பபிப்பிராயங்களும் அவருடைய போதனைகளிற் பலவற்றை விளங்கிக்கொள்ளமாட்டாத கஷ்டமும் இன்னுமிருந்தபோதிலும், அவர்கள் அவர் மேலானவரென்று உறுதியாய் நம்பி வந்தார்கள். கடைசியாகப் பேதுரு, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து என்று பூரண மனதோடு அறிக்கையிட்டு, தங்களுடைய நம்பிக்கையை நன்ருக வெளியிட்டான். கிறிஸ்துவின் தன்மை இன்னதென்பதையும், அவர் செய்யும் ஊழியம் இன்னதென்பதையும் பற்றிய அறிவு பேதுருவுக்குக் குறைவாயிருந்தாலும், இயேசு அவனை ஆசீர்வதித்து, அவனுடைய ஜீவனுள்ள நம்பிக்கையின்மேல் அஸ்திபாரமிட்டுச் சபையைக் கட்டுவதாக வாக்கருளினர்.

(4) மறுரூபமடைதல். — இந்தச் சம்பவத்தைக்கொண்டு பேதுருவின் அறிக்கை உண்மையென்று கடவுளால் ஸ்திரப்படுத்தப்பட்டது. சில விஷயங்களில் இதற்கும் இயேசுவின் ஞானஸ்நானத்திற்கும் ஒற்றுமையுண்டு. அப்போஸ்தலர் வானத்திலிருந்து வருகிற ஒரு சத்தம் தங்கள் ஆண்டவருடைய மகிமையைக் கூறுவதைக் கேட்கிறார்கள். நியாயப்பிரமாணத்தின் ஸ்தானபதியும், தீர்க்கதரிசனத்தின் ஸ்தானபதியும் கூடநின்று அவர் அடையப்போகிற மரணத்தைக்குறித்துப் பேசுகிறதைக் கேட்கிறார்கள். இதின் முழு அர்த்தமும் அவர்களுக்கு அப்போது விளங்கியிருக்கமாட்டாது. மேலும் அவர்கள் இதைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்லக்கூடாதென்று இயேசு கட்டளையிட்டார். ஆயினும் தெய்வ சாக்ஷி ஏற்பட்டதை யுணர்ந்து அவர்கள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டிருப்பார்கள். இயேசுவும் அதினல் திடன்கொண்டிருப்பார்.

(5) இயேசுவினுடைய ஜெயமுள்ள உணர்ச்சி.—மனிதர் பார்க்கிறபிரகாரமாகப் பார்க்கப்போனல், இயேசுவின் ஊழியம் இக்காலத்திற்குள் பலிதமற்றுப் போயிருந்ததாகத் தோன்றும். கலிலேயாவில் செய்தவைகளைக் குறித்து நாம் மத் 11 $^{20-24}$ யோவா 12 $^{37-40}$ முதலிய இடங்களில் வாசிக்கிறபடி, பொதுவான ஜனங்கள் நன்றியும் விசுவாசமும் அற்றுப்போயிருந்தார்கள். ஆனாலும் இந்தச் சமயத்தில்தான் அவர் ஆழமான கருத்துள்ள இரண்டு வார்த்தைகளை உரைத்தார். லூக் 10^{18}-ல், பிசாசின் வல்லமையெல்லாம் ஒடுக்கப்பட்டுப் போனதென்று வாசிக்கிறேம். மத் 11-ம் அதிகாரத்தில் ஜனங்களுடைய விரோதத்தையும் நன்றியின்மையையும் குறித்துப் பேசினவுடனே, அவர் பிதாவுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, 'சகலமும் என் பிதாவினல் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனும்தவிர, வேறெருவனும் பிதாவை அறியான்' என்று சொன்னர். அதற்குச் சம்பந்தமாகவே 'வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்' என்கிற கிருபையுள்ள அழைப்பையும் மனுஷருக்கு அருளிச்செய்தார். யார் யார் இந்த வாக்கியங்களை நன்றாய் ஆராய்ந்து அறிந்து கொள்ளுகிறார்களோ, அவர்கள் கிறிஸ்து மார்க்கத்தின் சாரத்தை அறிகிறார்கள்.

D. கிரியைகளை நடப்பிக்கிற காலத்தின் முடிவு; பாடுகள் சமீபமாகக் காணப்படுகின்றன.

இடம்: யூதேயா. யோவா 7^{10} 11^{54}. பெரேயா. மாற் 10^{1} யோவா 10^{40}.

காலம்: கி-பி. 28-ஞூத்துக் கூடாரப் பண்டிகைமுதல், 29-ஞூத்துப் பஸ்கா பண்டிகை வரை. மத் 19^{1}-20^{34} மாற் 10^{1-52} லூக் 9^{51}-19^{28}. (இது காலவரிசையில் வைக்கப்படவில்லை.) யோவா 7^{1}-11^{57}.

இந்தக் காலத்தைக்குறித்து நாம் விசேஷமாக யோவான் சுவிசேஷத்திலிருந்துதான் அநேக காரியங்களை அறிந்துகொள்ளுகிறேம். இதில் அவர் புதியவிதமாகத் தம்மை ஜீவனையும் ஒளியையும் கொடுக்கிறவராகத் தம்முடைய போதனைகளில் வெளிப்படுத்தினர். இதற்கு முந்தி அவர் அருளிய போதனை விசேஷமாக ராஜ்யத்தைப் பற்றியது; இதுமுதல் அது விசேஷமாக ராஜாவைப் பற்றியது; தாமே ஜீவ அப்பம், ஜீவ தண்ணீர், உலகத்துக்கு ஒளி, நல்ல மேய்ப்பன், உயிர்த்தெழுதலும் ஜீவனுமென்று இப்போது தெளிவா யெடுத்துக் கூறுகிறார். மேலும் இந்தக் காலத்தில் தமக்கு நேரிடப்போகும் மரணத்தை மூன்றுமுறை தெரிவிக்கிறார். பேதுரு அறிக்கை பண்ணினபோதே தமக்கு நேரிடப்

போகிற மரணத்தைக்குறித்தும், அதன் பின்பு வரப்போகிற உயிர்த்தெழுதலைக்குறித்தும் திருவுளம்பற்றினர். மாற் 8^{31}. மறுரூபம் அடைந்தபின்பு அவ்வாறே மறுபடியும் எச்சரித்துப் பேசினர். மாற் $9^{31.\ 32}$. இந்தக் காலத்தின் முடிவிலே இன்னும் ஒருவிசை அதைப்பற்றி அவர் தம்முடைய சீஷருக்கு விவரமாகச் சொன்னர்.

அவருக்குப் பாடுகள் வரும் என்பது அந்தக் காலத்தின் தன்மையை நன்ருய்க் கவனித்த யாருக்கும் தெளிவா யிருந்திருக்கக்கூடும். ஏரோது அந்திப்பாவும் அவனைச் சேர்ந்தோரும் அவருக்கு விரோதமாயிருந்தார்கள். அவர்களைவிட பரிசேயர் அவரை அதிகமாய்ப் பகைத்தார்கள். இந்தக்காலத்தில் இரண்டுமுறை அவரைக் கொலை செய்கிறதற்குப் பிரயாசப்பட்டார்கள். யோவா 8^{59} 10^{39}. அவர் இனிச் செய்யப்போகிறதெல்லாம் அவர்களுக்குப் பிரியமாயிருக்கப் போகிறதில்லை. ஆகவே அதின் முடிவு எவ்வாருருகுமென்று அதைப்பற்றி யூன்றிக் கவனிப்பவர்களுக்குத்தெரியக்கூடியதுதான். ஆயினும் அப்படிப்பட்டவர்களுக் கிருந்ததைப்பார்க்கிலும் அதிக தெளிவான அறிவு அவருக்கிருந்தது. தீர்க்கதரிசிகள் துன்பப்படுகிறது ஒரு பிரமாணம். மத் 5^{12} $23^{24.\ 37}$. யோவான் ஸ்நானனுக்கு நேர்ந்த கதி அவருக்கு ஞாபகத்தில் இருந்தது. மாற் 9^{12}. மேலும் வேத வாக்கு நிறைவேற வேண்டுமென்கிற உணர்ச்சி அவருக்குள் குடிகொண்டிருந்தது. லூக் $24^{25.\ 44.\ 46}$ முதலியன. பூர்வீக தீர்க்க தரிசனங்களை அவர் அறிந்திருந்தார். ஜெயங்கொள்ளுகிற மேசியாவைப்பற்றிச் சொன்ன வாக்கியங்களை, பாடுபடுகிற தேவனுடைய தாசனைப்பற்றிச் சொன்ன வாக்கியங்களோடு ஒன்ருகச் சேர்த்துக்கொண்டு, அவைகளை மனப்பூர்வமாய் நிறைவேற்றினர். அதுமாத்திரமல்ல, அவர் உலகத்தை ஜெயிக்கிறதற்கு ஒரு புது முறையை ஸ்தாபித்தார். மற்றவர்கள் முற்காலங்களில் பலாத்காரத்தினுல் மேற்கொண்டிருக்க, அவரோ சாந்தத்தாலும், பலவீனத்தாலும், பொறுமையாலும் தீமையை மேற்கொண்டார். இந்தப் புதுமுறையால் பூரண ஜெயம்பெற வேண்டுமென்ருல் மரணத்தையே அடையவேண்டுமென்று தெளிவாக அறிந்து சொன்னர். இதிலெல்லாம் தாம் தமது பிதாவின் சித்தத்தின்படி செய்கிறதாகப் பலமாய் உணர்ந்திருந்தார்.

E. **முடிவு:** எருசலேமில் மகிமையோடு பிரவேசித்தல், கடைசியான போதனை, பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், பரலோகம் செல்லுதல்.

இடம்: எருசலேம்.

காலம்: கி-பி. 29-ஆ பஸ்காவுக்கு 6 நாள் முந்தியிருந்து, பெந்தெகோஸ்துவுக்குப் பத்து நாளுக்கு முன்வரையில். மத் 21^{1}-28^{20} மாற் 11^{1}-16^{20} லூக் 19^{29}-24^{52} யோவா 12^{1}-21^{23}.

இந்தக்காலத்தில் நடந்த சம்பவங்களின் கால விவரங்களைக்குறித்து சில கேள்விகளுக் கிடமுண்டு. ஆனபோதிலும் அவைகளெல்லாம் சுவிசேஷங்களில் மொத்தமாய்ச் சொல்லியிருக்கிறபடியே நடந்ததைப்பற்றி யாதொரு சந்தேகமுமில்லை. நாலு சுவிசேஷங்களையும் ஒத்துப் பார்க்கும்போது கடைசி ஆறு நாட்களின் சம்பவங்கள் பின்வரும் வரிசையில் நடந்தனவென்று சொல்லலாம்.

சனிக்கிழமை. — குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில் போஜனபந்திக்குப் போதல்.

ஞாயிறு. — எருசலேமில் ஜெயகோலத்தோடு பிரவேசித்தல், தேவாலயத்தைச் சந்தித்தல், பெத்தானியாவுக்குத் திரும்புதல்.

திங்கள்.—எருசலேமுக்குப் போய், வழியில் அத்திமரத்தைச் சபித்தல், தேவாலயத்தைச் சுத்திகரித்தல், பெத்தானியாவுக்குத் திரும்புதல்.

செவ்வாய்.—எருசலேமுக்குப் போய், தேவாலயத்தில் போதித்தல், சதுசேயருக்கும் பரிசேயருக்கும் விடையளித்தல், சில உவமைகளைச் சொல்லுதல், பெத்தானியாவுக்குத் திரும்புதல்.

புதன்.–இயேசு எருசலேமுக்குப் போய்ப் பரிசேயரைக் கண்டித்தல், கடைசிக் காலத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்தல், ஆலோசனைச் சங்கம் அவரைப்பற்றி ஆலோசித்தல், யூதாஸ்காரியோத்து அவர்களோடு ஏற்பாடு பண்ணுதல், இயேசு பெத்தானியாவுக்குத் திரும்புதல்.

வியாழன்.—இயேசு பஸ்காவுக்கு ஆயத்தம் பண்ணுதல், இராப்போஜனம், கெத்செமனே தோட்டத்தில் ஆத்தும வேதனைப்படுதல், யூதாஸ் காட்டிக்கொடுத்தல், போர்ச்சேவகர் அவரைப் பிடித்து, பிரதான ஆசாரியன் வீட்டிற்குக் கொண்டுபோதல், அன்ன சில கேள்வி கேட்டல்.

வெள்ளி.—பொழுது விடியுமுன் ஆலோசனைச் சங்கம் காய்பாவுடைய மாளிகையில் கூடிவந்து இயேசுவை விசாரணைசெய்து குற்றவாளியென்று தீர்த்தல், அவரைக் குட்டியடித்தல், பேதுரு மறுதலித்தல், விடியற்காலமானபிறகு பிலாத்து விசாரணைசெய்தல், ஏரோதுவினிடத்தில் அனுப்புதல், மறுபடியும் பிலாத்து விசாரித்தல், தீர்ப்புச் சொல்லல், பரியாசஞ்செய்தல், வாரினுலடித்தல்,

கொல்கொதாவுக்குச் செல்லுதல், ஒன்பது மணிக்கு (மாற்கு அல்லது மத்தியானவேளையில் (யோவான்) அவரைச் சிலுவையில் அறைதல், மரணம், கல்லறையில் அவரை வைத்தல்.

இயேசு எருசலேமில் பிரவேசித்தபோது ஜனங்கள் ஆர்ப்பரித்தபோதிலும், அவர் 5000 பேருக்குப் போஜனமளித்தபோது அவர்களுக் குண்டான வைராக்கியத்தைப்போல இவ்வைராக்கியமும் நிலையற்றது. ஆர்ப்பரித்த சிலர் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் பண்டிகைக்காக வந்தவர்கள். சிலர் அவர் லாசருவை உயிர்ப்பித்ததைக் கேள்விப்பட்டு வந்தவர்கள். இவர்களில் அநேகர் அவருடைய குணத்தை அறியாமல், மேசியாவைப்பற்றிய சாதாரண எண்ணமுள்ளவர்களாய் அவரை மேசியாவாக வாழ்த்தினார்கள். அதன்பிறகு இயேசு அவர்கள் நோக்கத்தின்படி செய்யாமல், கோவிலில் நின்றுகொண்டு அவர்களுடைய மார்க்கத்து அதிகாரிகளைக் கண்டித்து, ரோமருக்கு விரோதமாக ஒரு வார்த்தையும் சொல்லாமலிருக்கிறதை அவர்கள் பார்த்தபோது, அவர்களுக்குத் திடீரென்றுண்டான வைராக்கியம் திடீரென்று பகையாய் மாறிப்போனது. பரபாஸாகிலும் தன் தேசத்துக்குச் செய்தது தெளிவாயிருந்தது; இவரோ எங்களுக்கு விளங்காதபிரகாரமாய் வெறும்பேச்சு பேசுகிறவரென்று நினைத்து, சில நாட்களுக்குள்ளே 'சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்' என்று கூக்குரலிட்டார்கள்.

ஒருவேளை யூதாஸ்காரியோத்துக்கும் அந்த எண்ணமிருந்திருக்கலாம். ஒருவேளை யூதாஸ் நான் அவரை இப்போது அதிகாரிகளுக்குக் காட்டிக்கொடுத்தால், அவர் தம்மை மேசியாவாகப் பிரசித்தப்படுத்தித் தமது வல்லமையைக் காட்டுகிறதற்கு அவசியம் ஏற்படும்; அப்போது எல்லாரும் அவர் பக்ஷத்தில் சேர்ந்துகொள்ள அவர் ராஜாவாக வீற்றிருப்பார் என்று நினைத்திருக்கலாம். இப்படி நினைக்க யாதொரு அத்தாட்சியு மில்லை. அவன் பணத்தின்பேரில் ஆசையுள்ளவனென்று யோவா 12^5-னால் அறிகிறோம். அவ்வாசையோடு வேறு நல்லெண்ணங்களும் கலந்திருக்கலாம். அவன் முற்றிலும் கெட்டவனென்றால் இயேசு அவனைச் சீஷனாகத் தெரிந்திருக்கமாட்டார்.

பரிசேயருக்கும் இயேசுவுக்கும் இக்காலத்தில் நேர் விரோதமிருந்தது. அவர்கள் இன்னும் அவரிடத்தில் கேள்விகளைக் கேட்டாலும், அவர்களுடைய முழுநோக்கமும் பேச்சிலே அவரை அகப்படுத்தவேண்டுமென்பது தான். ஆனாலும் இந்தக் கடைசிவாரத்தில் பரிசேயரைவிட, சதுசேயர்தான் அதிகமாய்ப் பகை காட்டினார்கள். இவர்களே விசேஷமாக இயேசுவைக் கொலை செய்கிறதற்கு ஏற்பாடு பண்ணினவர்கள். இவர்களும் பரிசேயரும் அவரை விரோதிக்கிறதற்கு ஒன்றாய்ச் சேர்ந்தாலும் இவர்களுடைய நோக்கமும் பரிசேயருடைய நோக்கமும் ஒன்றல்ல. யோவா 11^{48}-ல் நாம் பார்க்கிறபிரகாரமாக அவர்களுக்கு ரோமர் தங்களுடைய அதிகாரத்தைக் குறைத்துப்போடுவார்கள் என்கிற கவலை இருந்தது. இந்தக் காலமுதற்கொண்டு அவர்களுடைய விரோதந்தான் அதிகமாயிருந்ததென்று பார்க்கிறோம். ஆனாலும் சங்கத்தாருக்கு மரண ஆக்கினை விதிக்கிறதற்கு அதிகாரமில்லை. ஆகையால் ரோம அதிபதி மூலமாகவே அவர்கள் தங்கள் காரியத்தை முடிக்கவேண்டும். அவர்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவர் தேவதூஷணம் சொன்னதாகக் குற்றம் பாரித்து தீர்ப்புச்செய்தார்கள். அந்தக் குற்றம் ரோமருக்குள் செல்லாதென்று கண்டு, அதை மாற்றி இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், இராயனுக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லை என்றும் சொல்லி, இவன் ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று பிலாத்துவிடத்தில் பொய்க்குற்றஞ் சாற்றினார்கள். பிலாத்து விசாரித்து, அவரிடத்தில் குற்றம் இல்லையென்று சொல்ல, ஆலோசனைச் சங்கத்தார் ஜனக்கூட்டங்களைத் தூண்டிவிட்டு, பிலாத்துவின் கோழைத்தனத்தைக் கண்டு, தங்கள் இஷ்டத்திற்கு அவனை இணங்கச் செய்தார்கள். இவனை விடுதலை பண்ணினால், நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல, இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லையென்று அவர்கள் சொல்ல, அவன் பயந்து, தன் கைகளைக் கழுவி, அவர்கள்மேல் அந்த உத்தரவாதத்தைச் சுமத்தினான்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட நாளைக்குறித்தும் மணிநேரத்தைக்குறித்தும் வித்தியாசமான அபிப்பிராயங்களுண்டு. முதல் மூன்று சுவிசேஷங்களை நாம் வாசித்தால் இராப்போஜனம் பஸ்காவைப் புசித்த அன்றைக்கு நடந்தது என்று சொல்லியிருக்கிறது. யோவான் சுவிசேஷத்தை வாசித்தால் (யோவா 13^1 18^{28} $19^{14, 31}$) இராப்போஜனம் பஸ்காவுக்கு முந்தினநாளில் நடந்ததென்றும், மறுநாள் பஸ்காவுக்கு ஆட்டுக்குட்டியை அடிக்கிற அந்நாழிகையிலே இயேசு பாடுபட்டாரென்றும் சொல்லியிருக்கிறது. அதுபோலவே அவர் சிலுவையில்

அறையப்பட்ட நேரம் மாற் 15^{25}-ல் நாம் வாசிக்கிறபிரகாரமாக மூன்றும் மணிநேரம், அதாவது காலமே ஒன்பதுமணி. ஆனால் யோவா 19^{14}-ல் சொல்லுகிறபடி ஆறும் மணிக்குள், அதாவது பன்னிரண்டு மணிக்குள் விசாரணை முடியவில்லை. அநேகர் இவ்விஷயங்களில் நாலு சுவிசேஷங்களையும் ஒற்றுமைப்படுத்தப் பிரயாசப்பட்டிருந்தாலும் முடியவில்லை. எதுதான் சரி என்று தீர்மானிக்கிறதற்கு நமக்குப் போதுமான சாதனங்களில்லை. இன்னொரு விஷயத்தைக்குறித்து நமக்குச் சந்தேகங்களுண்டு. இக்கடைசி வாரத்தில் இயேசு எருசலேமின் அழிவை முன் தெரிவித்தாரென்பது நிச்சயம். அதற்குச் சம்பந்தமாக மாற் 13-ம் அதிகாரத்தில் உலகத்தின் முடிவைக்குறித்தும் கடைசி நியாயத்தீர்ப்பைக்குறித்தும், இயேசுவின் இரண்டாம் வருகையைக்குறித்தும் வாசிக்கிறோம். இவைகளின் சில வார்த்தைகளை அவர் எருசலேமின் அழிவைப்பற்றிச் சொன்னாரா, கடைசி நியாயத்தீர்ப்பைப்பற்றிச் சொன்னாரா என்று அறிகிறது கஷ்டம். ஒருவேளை சீஷர் இவ்விரண்டு காரியங்களையுங் கலந்து, எருசலேமின் அழிவு கடைசி காலத்தின் ஆரம்பமாயிருக்கும் என்று எண்ணி, அந்த எண்ணத்தால் இரண்டு காரியங்களையும்பற்றிச் சொன்னவைகளைச் சேர்த்துத் தெரிவித்திருக்கலாம். சிலர் உத்தேசப்படி மாற் 13-ம் அதிகாரத்தைப் பிரித்து, 1-6. 21-23. 9. 11-13. 28-29. 32-35. இவ்வாக்கியங்களில் இயேசுவின் உண்மையான போதனையிருக்குமென்றும், மற்ற வாக்கியங்களில் மேற்சொன்ன எண்ணத்தால் அவர் சொன்னதாக சீஷர்கள் நினைத்திருந்த போதனையடங்கியிருக்குமென்றும் சொல்லுகிறார்கள். அது இருக்கக்கூடியதுதான். விசேஷமாக மாற் $13^{30.\,31}$-ஐ வாசிக்கும்போது இயேசு சொன்ன வார்த்தைகளைச் சீஷர் திட்டமாகத் தெரிவிக்கிறார்களோவென்று சந்தேகிக்கிறோம். இயேசு அந்தத் தலைமுறையிலே தாம் இரண்டாம்முறை வருவதாகத் தெரிவித்தாரா என்பது அதிக சந்தேகத்துக்கிடமானது. எருசலேம் கி-பி. 70-ஆம்வருஷத்தில் அழிந்துபோனதே அவருடைய இரண்டாம் வருகை என்று நினைக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும் அவருடைய இரண்டாம் வருகையின் காலம் யாருக்கும் தெரியமாட்டாதென்று அவர்தாமே சொன்னதைப் பல இடங்களில் வாசிக்கிறோம்.

இயேசு பாடுகள் மத்தியில் நடந்த விதம்.— அந்தக் கடைசியான நாளிலே இயேசு பேசின வார்த்தைகள் சொற்பம். சாதாரணமாய் அவர் பொய்யான குற்றங்கள் சுமத்தக் கேட்டும், படாத பாடுகளைப் பட்டும், மவுனமாயிருந்தார். ஒருதரம் தாமே தேவனுடைய குமாரனென்று பிரதான ஆசாரியனுக்கு அறிக்கையிட்டு பிறகு பிலாத்துவோடு சில நேரம் சம்பாஷணை பண்ணினார். மற்றப்படி பேசாமலிருந்தார். அவருடைய மனதை நாம் அந்த மவுனத்தாலும், அவர் பேசின சில வார்த்தைகளாலும் அறியவேண்டும். 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்' (மத் 5^{44}) என்று சொன்னவர் தாம் சிலுவையில் அறையப்பட்டபோது திருவுளம்பற்றின முதல் வார்த்தையால் அதற்கு முன் மாதிரி காட்டினார். சிலுவையண்டை போகையிலுங்கூட அவர் தம்மை மறந்து மற்றவர்களுக்காகப் பரிதபித்தார். லூக் 23^{28}.

சிலுவையில் அறைதல். — சிலுவையில் அறைதல் ரோமரால் அடிமைகளுக்கும் கலகக்காரருக்கும்மாத்திரம் விதித்த குரூரமான இச்சித்திரவதை பெரிய அவமானமாயிருந்தது. கைகளும் கால்களும் குத்தப்படுதல், காயமுள்ள அங்கங்களை அசைத்து இழுத்தல், இரத்த ஓட்டத்தைத் தடுத்தல், மரண வேதனைகளால் உண்டான பயங்கரமான தாகம் ஆகிய இவைகளைச் சொல்லமுடியாது. அப்படிப்பட்ட மரணத்தின் கொடுமையும் அவமானமும் இயேசுவுக்குப் பூரணமாயிருந்தது. போர்ச்சேவகர் அவருடைய உடுப்புக்காகச் சீட்டுப்போட்டார்கள். அவரோடு சிலுவையில் அறையப்பட்ட ஒருவனும், கூடிவந்திருந்த ஜனக்கூட்டங்களும், பிரதான ஆசாரியரும் அவரைப் பரிகாசம் பண்ணினார்கள். சிலுவையில் அறையப்பட்டவர்கள் வேதனையைச் சகிக்கிறதற்குச் சாதாரணமாய்க் குடிக்கும் மருந்தை அவர் குடிக்கவில்லை. ஆறு மணி நேரமாக அவர் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தார். மாற் $15^{25.\,34}$. சாயங்காலம் மூன்று மணிக்கு அவர் மகா சத்தத்தோடு ஜீவனை விட்டார். மூன்று மணி நேரமாக இருள் மூடினது; தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்தது. செத்தவர்கள் உயிரோடெழும்பினார்களென்று மத்தேயு சுவிசேஷம் சொல்லுகிறது. முதல் மூன்று சுவிசேஷங்களும் நூற்றுக்கு அதிபதி செய்த அறிக்கையைக் கூறுகின்றன.

கல்லறையில் வைத்தல். — இயேசுவினுடைய சிநேகிதர் ஜனக்கூட்டங்களுக்கு பயந்திருந்தும், அவருடைய பிரேதத்தை மரியாதையாய்ப் புதைக்கிறதற்காவது முயற்சி எடுத்துப் பிலாத்துவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டார்கள். அவர்களில் நிக்கொ

தேமுவும் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் முக்கியமானவர்கள். அவர்கள் அவருடைய சரீரத்தைச் சிலுவையிலிருந்து இறக்கி, அதை மெல்லிய துப்பட்டியில் சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையில் வைத்து, அந்தக் கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்தார்கள். மத்தேயு சொல்லுகிறபிரகாரம், யூதர் கேட்டுக்கொண்டதின்பேரில், அதிகாரிகள் பிறகு அந்தக் கல்லுக்கு முத்திரை போட்டு போர்ச்சேவகரை காவலாக வைத்தார்கள் மூன்றாம்நாளில் இயேசு உயிர்த்தெழுந்தார். **இயேசுவின் உயிர்த்தெழுதல்** என்னும் நிபந்தத்தில் அதைப்பற்றி விவரமாகச் சொல்லப்படும்.

நாற்பது நாளாக அவர் அநேகம் பேருக்குத் தரிசனமாகிப் பின்பு வெற்றிவேந்தராகப் பரலோகம் சென்றார். சென்ற விதத்தைக் குறித்து நமக்குக் கொஞ்சந்தான் தெரியும். அப்போஸ்தலர் நடபடிகள் முதலாம் அதிகாரத்தில் 'அவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது' என்று சொல்லியிருக்கிறது. அவர் சென்ற விதம் நமக்கு முக்கியமான காரியமன்று; அவர் அடைந்த மகிமையே முக்கியமானதே.

இயேசுவின் பிறப்பைப்பற்றிய அனுபந்தம்.—முதலில் நாம் பலெஸ்தீனாவில் ஆண்டவருடைய காலத்தில் வசித்தவர்கள் கண்டும் கேட்டும் இருக்கக்கூடிய காரியங்களை இம்மட்டும் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது அவருடைய பிறப்பைப்பற்றிப் பேசவேண்டும். மத்தேயு லூக்கா எழுதின சரித்திரங்களிலும் அவர் அற்புதமாய்த் தாவீதின் வம்சத்தில் கன்னிமரியாளிடத்தில் பெத்லகேம் ஊரில் பிறந்தாரென்றும், பிறகு அவருடைய பெற்றோர் நாசரேத்தூரில் குடியாயிருந்தார்களென்றும் சொல்லியிருக்கிறது. அதோடு இந்த இரண்டு சுவிசேஷங்களும் தனித்தனியே இன்னும் அநேக விவரங்களைச் சேர்த்திருக்கின்றன. இரண்டு சரித்திரங்களின் மொத்தப்பொருள் என்னவென்றால், தரித்திரத்திலும் கஷ்டத்திலும் பிறந்த இயேசு பாலகன் பரலோகத்துக்குரிய மகிமையோடு வாழ்த்தப்பட்டார் என்பதே. இவைகள் அவருடைய ஜீவியகாலத்தில் ஜனங்களுக்குப் பொதுவாகத் தெரியாதிருந்தன. அவருடைய தாயார் மூலமாகத்தான் கடைசியாகத் தெரியவந்திருக்கவேண்டும். அநேக வருஷமாக இந்தச் சங்கதிகளைத் தன் இருதயத்திலே வைத்துச் சிந்தனைபண்ணி, பிறகு சில சிநேகிதருக்குச் சொல்லியிருப்பாள். அவர்கள் மூலமாக அது மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் தெரியவந்திருக்கும். இயேசுதாமே இந்தச் சங்கதிகளைப்பற்றி ஒரு நாளும் பேசவில்லை. அவர் யோசேப்பின் குமாரனாக எண்ணப்பட்டார். இவர் யோசேப்பின் குமாரனல்லவா என்று ஜனங்கள் அவரைக் குறித்து ஆக்ஷேபித்தபோது அவர் இல்லையென்று மறுக்கவில்லை. லூக்கா சுவிசேஷத்திலுங்கூட அவருடைய தாய் தகப்பன்மாரைக் குறித்து அடிக்கடி வாசிக்கிறோம். மேலும் மத்தேயுவிலும் லூக்காவிலும் அவருடைய வம்ச வரலாறு இரண்டுவிதமாய் வித்தியாசமாக எழுதப்பட்டிருந்தபோதிலும் இரண்டிலும் அது யோசேப்பு மூலமாக, தாவீதின் வம்சத்தைச் சேர்ந்திருக்கிறதாகக் காட்டப்படுகிறது. பவுலினுடைய நிருபங்களை நாம் வாசித்தால் மரியாள் கன்னிகையாய் இருந்து இயேசுவைப் பெற்றாள் என்பதைப்பற்றிப் பவுல் ஒன்றுஞ் சொல்லுகிறதில்லை. இதையெல்லாம் நாம் பார்க்கும்போது, கன்னிப்பிறப்பு இயேசுவினாலும் அவருடைய அப்போஸ்தலராலும் ஒரு முக்கியமான காரியமாக எண்ணப்படவில்லை என்று நாம் சொல்லக்கூடும். ஆனபோதிலும் அற்புதமான இரக்ஷகர் அற்புதமாகப் பிறந்தது நம்பக்கூடாத காரியமன்று. அற்புதமாக இம்மையில் தமது மனுஷீக ஜீவியத்தை முடித்தவர் அற்புதமாக அதை ஆரம்பித்திருப்பார் என்று நினைக்கிறதற்குத் தடையில்லை. (**இயேசுவின் வம்ச அட்டவணை** காண்க.)

இன்னொரு விஷயத்தைப்பற்றிச் சிலருக்கு உண்டாயிருந்த சந்தேகம் இப்போது நீங்கியிருக்கிறது. லூக் 2²-ல் சிரேனியு என்பவன் தேசாதிபதியா யிருந்தபோது குடிமதிப்பு எழுதப்பட்டதென்று வாசிக்கிறோம். ஆனால் சிரேனியு கி-பி. 6-ஆம்ஆண்டில் சீரியா நாட்டுக்குத் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டாரென்று நமக்குத் தெரிகிறது. இந்த விஷயத்தில் லூக்கா தப்பிதம் செய்திருப்பாரென்று அநேகர் நினைத்தார்கள். ஆனாலும் அதற்கு முந்தி சிரேனியுவுக்குச் சீரியாவில் உத்தியோகம் இருந்ததென்று இன்னொரு சாசனத்தால் தெரியவந்திருக்கிறது. மேலும் ரோம ராஜ்யத்தில் அந்நாட்களில் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருமுறை குடிமதிப்பு எழுதுவது வழக்கம். ஆகையால் லூக் 2²-ல் சொல்லப்பட்டது முற்றிலுஞ் சரி என்பதற்கு ஆக்ஷேபனையில்லை. அப்படியானால் சாதாரண கணக்கின்படி அல்ல, கி-மு. ஐந்தாம் அல்லது ஆறாம் ஆண்டில் இயேசு பிறந்திருப்பார்.

இயேசு அருளிச்செய்த போதனையைக் குறித்துப் பிந்தின நிபந்தத்தில் சொல்லப் படும். அவருடைய குணுதிசயங்களை இங்கே விவரித்துச் சொல்லுகிறதற்கு இடமில்லை. சுவிசேஷகர் செய்ததுபோல நாம் அவருடைய ஜீவிய சரித்திரத்தைக்கொண்டு அவருடைய குணுதிசயங்களை அறியலாமென்று சொல்லி அதை விட்டுவிடுகிறோம். அவர் உலகத்துக்குச்செய்தவேலை எவ்வளவு என்று யாரால் சொல்லமுடியும்? லெக்கி (*Lecky*) என்பவன் தன்னுடைய சரித்திரப் புஸ்தகத்தில் சொன்னதுபோல, ஞானிகளுடைய எல்லாப் பிரசங்கங்களைப்பார்க்கிலும், சன்மார்க்கருடைய எல்லாப் போதனைகளைப் பார்க்கிலும், மனுஷரைப் புதுப்பித்து மிருதுவாக்குகிறதற்கு இயேசுவினுடைய ஊழியத்தின் மூன்று சுருக்கமான வருஷங்களே அதிகமாக நன்மையைச் செய்திருக்கின்றன.

இயேசுகிறிஸ்து அருளின உபதேசம். The Teaching of Jesus Christ. அவர் போதித்த முறை.—இக்காலத்தில் ஒருவன் சில போதனைகளை உலகத்தில் பிரபல்லியமாக்க விரும்பினுல், அவன் தன் கோட்பாடுகளையெல்லாம் ஒழுங்காகவும் தொடர்பாகவும் ஒரு புஸ்தகத்தில் எழுதிப் பிரசுரமாக்குவான். இயேசு உபதேசித்த முறை அப்படியல்ல. அவர் கண்டவர்களுக்குச் சமயோசிதமான சத்தியங்களை விளக்கிக் காட்டி, வாய்மொழியாகவே தம்முடைய உபதேசங்களை யருளிச்செய்தார். அப்படி அவர் தொடர்பின்றியும் குறித்த ஒழுங்கின்றியும் போதித்தபோதிலும், அவர் மனுஷருடைய இருதயத்தின் கருத்தைப் பூரணமாய் அறிந்து, அவர்களது ஆத்துமாவுக்கு அத்தியந்தவசியமான தேவ அறிவு முதலியவற்றை எப்போதும் ஊட்டினவரானபடியால் அவர் சில சமயங்களில் தாம் பார்த்த சிலருக்குச் சொன்ன வார்த்தைகளானவை எச்சமயங்களிலும் எல்லாருக்கும் ஒருவாறு பொருந்தும். திருஷ்டாந்தமாக, சமாரியா ஸ்திரீக்கு அன்று உணர்த்திக் காட்டவேண்டிய சத்தியங்களை அவர் அவளுக்கு விளங்கத்தக்கதாய் எடுத்துக் காட்டினபோதிலும், 'தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்' என்று அவர் அப்போது சொன்ன வார்த்தை எத்தேசத்தாருக்கும் எச்சமயத்திலும் பிரயோஜனமாகும். அவர் பலெஸ்தீனவிலுள்ள சில இடங்களில் சில சிஷர்களுக்குச் சொன்ன மொழிகளில் அநேகமானவை எக்காலத்திலும் உலகத்தார் யாவரும் கேட்கத்தக்கவைகளாகக் காணப்படும்.

அப்படியே அவர் தொடர்பில்லாமல் சொன்ன போதனைகள் சம்பந்தமில்லாமலும் பொருத்தமில்லாமலும் இருக்கவில்லை.

இவ்விடத்தில் கடவுளுடைய ராஜ்யம், பரம பிதா, மனுஷருடைய கடமைகள் ஆகிய இவைகளைப்பற்றி அவருடைய உபதேசத்தின் சாரத்தைக் காட்டுவது எமது நோக்கம்.

I. கடவுளுடைய ராஜ்யத்தைப்பற்றிய போதனை. — இயேசுகிறிஸ்து தம்முடைய திருத்தொண்டை ஆரம்பித்தகாலத்தில் அவர் யூதருக்கு நூதனமான வார்த்தைகளை வழங்காமல், யூதர்களுடைய மார்க்க நூல்களிலும் யோவான்ஸ்நானனுடைய உபதேசத்திலும் வழங்கின மிகவும் பழக்கமான சொற்களால் பரம சத்தியத்தை விளக்கினுர். யூதருக்கிருந்த உறுதியான நம்பிக்கை என்னவென்றால், மேசியா வருங்காலத்தில் கடவுளைத்தவிரத் தங்களுக்கு வேறே அரசன் இருக்கமாட்டானென்பதும், இஸ்ரவேல் ஜனமே கடவுளுடைய ராஜ்யமாய் மாறிவிடு மென்பதுமேயாம். யோவான்ஸ்நானனுடைய உபதேசத்தின் பொருள் 'தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்னும் வார்த்தைகளில் அடங்கும். அதற்குத் தொடர்பாகவே நாம் மத் 4^{23} மாற் 1^{14} லூக் 8^{1}-ல் வாசிக்கிறபடி இயேசு கலிலேயாவின் ஜெபாலயங்களிலெல்லாம் கடவுளுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ஆயினும் நாம் அவருடைய ஜீவிய சரித்திரத்தில் பார்த்ததுபோல, சாதாரண ஜனங்களுக்கு ராஜயத்தைப் பற்றியிருந்த தப்பான அபிப்பிராயங்களை மாற்றுவதே அவருடைய முழுத்தீர்மானம். ராஜ்யத்தின் **சுவிசேஷம்** என்று சொல்லும்போது, உடனே அவருடைய உபதேசத்துக்கும் யோவான்ஸ்நானனுடைய உபதேசத்துக்குமுள்ள வித்தியாசம் தோன்றுகிறது. யோவான் ராஜ்யத்தைப்பற்றிப் பேசினபோது எல்லாரும் நடுநடுங்கி, பயந்து, மனஸ்தாபப்பட்டு, ராஜ்யத்தினுல் தங்கள் மேல் வரக்கூடிய பயங்கரமான தீர்ப்புக்குத் தப்பிப் பிழைக்கக் கருதி, தங்கள் பாவங்களை விட்டுவிட்டார்கள். யோவானுடைய பிரசங்கத்துக்குச் 'சுவிசேஷம்' என்கிற பெயர் தகாது. இயேசுவோ அந்த ராஜ்யம் நல் ஈவு என்றும், எல்லாரும் நம்பித் தேடவேண்டிய இரக்ஷிப்பு என்றும் காட்டி, அதிலே இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங் கட்டுதலும், சிறுமைப்பட்டவர்களுக்கு விடுதலையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்

தலும் இருக்கிறதென்னும் நற்செய்தியைக் கூறினர். கேட்போர்களுக்கு அவர் வார்த்தைகள் கிருபையுள்ளவைகளாகத் தோன்றின. கடவுளுடைய ராஜ்யத்தில், அல்லது மத்தேயு சுவிசேஷத்தின்படி பரலோக ராஜ்யத்தில், மனிதருக்கு விலையேறப்பெற்ற சிலாக்கியங்கள் அடங்கியிருக்கிறதென்று இயேசு சொன்னபோதிலும், அதிலுங்கூட அவருடைய போதனைக்கும் சாதாரண யூதருடைய கொள்கைக்கும் பெரிய பேதம் இருந்தது. அவர்கள் எதிர் நோக்கிய நன்மைகளாவன: சத்துருக்களை ஜெயித்து தேசத்திலிருந்து துரத்திவிடுதல், யூதஜனம் மகிமையடைதல், தேசம் அற்புதமாய்ச் செழிப்படைதல், எல்லோரும் சுகபோகிகளாக ஜீவித்தல் முதலியன. இயேசு செய்த மலைப்பிரசங்கத்தை நாம் வாசித்தால், அவர் சொன்ன ராஜ்யமும் அதின் சிலாக்கியங்களும் ஆத்மீகமானவை, அகத்துக்குரியவை, நல்லொழுக்கத்தைப் பற்றியவை என அறிவோம். உலக போகத்துக்கும் அவைக்கும் யாதும் சம்பந்தம் இல்லை. ராஜாங்க விஷயங்களுக்கும் அவைக்கும் கிஞ்சித்தும் ஒற்றுமையில்லை. அவைகள் தரும் பாக்கியங்கள் பாவமன்னிப்பு, நீதி முதலியவைகளே. இயேசு உபதேசித்த ராஜ்யத்தில் பிரவேசிப்போர்க்குத் துன்பமிருக்கும்; ஆனால் அத்துன்பத்தில் மேலான பாக்கியம் கிடைக்கும். மத் 5 10-12. அந்த ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. லூக் 17 20. அதில் பிரவேசம் செய்வோர்க்கு விசுவாசம் அவசியமானதால், அது யூதருக்குமாத்திரம் உரியதன்று. யூதருக்கில்லாத விசுவாசத்தை அவர் சில சமயங்களில் புறஜாதியாரிடத்தில் கண்டார். மத் 8 10-12. பரலோக ராஜ்யமாவது இன்னதென்று ஒரு வாக்கியத்தில் சொல்லமுடியாது; ஆனால் பரமண்டல ஜெபத்தில் அதற்கு ஒரு நல்ல பொழிப்புரையுண்டு. 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்னும் விண்ணப்பத்தை இன்னும் தெளிவாய் விளக்கிக் காட்டும்படியாக, 'பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுகிறதுபோல, பூமியிலும் செய்யப்படுவதாக' என்று அதில் பிரார்த்திக்கப்படுகிறது. பரலோகத்தில் கடவுளுடைய சித்தம் செய்யப்படுவதுபோல, பூமியிலும் எங்கே செய்யப்படுகிறதோ, அங்கே பரம ராஜ்யம் உண்டென்று காண்கிறோம். அதின் தன்மையைப்பற்றி நாம் விசாரிக்கப் புகுந்தால், அது 'வருகிறது' (மத் 6 10), 'கொடுக்கப்படுகிறது' (மத் 21 43), 'ஏற்றுக்கொள்ளப்படுகிறது' (மாற் 10 15), 'தேவனால் ஆயத்தம் பண்ணப்படுகிறது' (மத் 25 34) என்று பார்க்கிறோம். மேலும் மனிதர் அதைச் 'சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்.' மத் 25 34. அதில் 'பிரவேசிக்கிறார்கள்.' மத் 25 21. அதைத் 'தேடுகிறார்கள்.' மத் 6 33 13 45 விலையேறப்பெற்ற முத்தைப்பற்றிய உவமையில் காட்டியிருக்கிறதுபோல, அதுவே ஒருவன் தேடக்கூடிய மேலான நன்மை. இந்நன்மையை வருவிக்கிறதில் மனிதருடைய பிரயத்தனங்கள் உதவியாயிருந்தாலும், அது மனிதருடைய பிரயத்தனங்களால் உண்டாகாமல், கடவுளுடைய கிருபையால் ஈவாகக் கொடுக்கப்படுகிறது. அது இயற்கையாய் உற்பத்தியாகாமல், வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லியிருக்கிற பரிசுத்த நகரத்தைப்போல கடவுளிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரவேண்டும். இது சம்பந்தமாக, இயேசு சொன்ன பரம ராஜ்யம், தற்காலத்தில் இருக்கிற ராஜ்யமா, இனிமேல் உலக முடிவில் வரப்போகிற ராஜ்யமா என்று ஒரு கேள்வி உண்டாகலாம். சில வசனங்களை நாம் பார்க்கும்போது, அந்த ராஜ்யம் வந்தாயிற்று என்பதுபோலத் தோன்றுகிறது. 'நான் தேவனுடைய ஆவியாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.' மத் 12 28 லூக் 11 20. 'இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.' மாற் 9 1. 'தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே' லூக் 17 21, என்கிற திருவசனங்களைக் கவனிக்க. இன்னும் சில வசனங்களைப் பார்த்தால், ராஜ்யம் இப்போது ஆரம்பம் பண்ணியிருந்தாலும், அது பிற்காலத்தில் பெரிதாக ஓங்கி வளரும் என்று சொல்லியிருக்கிறது. கடுகு விதையைப்பற்றிய உவமை, புளித்தமாவைப்பற்றிய உவமை (மத் 13 31-33), இரகசியமாய் விளைந்த விதையைப்பற்றிய உவமை (மாற் 4 26-29), இவைகளில் ராஜ்யத்தின் ஆரம்பம் சிறிது, அதின் வளர்ச்சி பெரிதென்று போதிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அநேக இடங்களில் ராஜ்யம் கடைசி நாட்களில் வரவேண்டுமென்று பார்க்கிறோம். திருஷ்டாந்தமாக மத் 25 34-ல் 'உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ராஜ்யமானது இப்படிப் பூரணப்படுதலுக்கும் இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. அதின் காலம் மனுஷகுமாரனுக்குங்கூடத் தெரியா

விட்டாலும் (மாற் 13[32]) அது வருகிறதென்பதற்குச் சில அடையாளங்கள் காணப்படும். அந்நாளில் மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வந்து, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்து, சத்துருக்களைத் தண்டித்து, தெரிந்துகொள்ளப்பட்டவர்களை எத்திசைகளிலுமிருந்து சேர்த்து, ஒழியாத ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். மத் 24 அதி. அப்போது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். மத் 13[43].

இப்படி அந்த ராஜ்யம் இறந்த, நிகழ், எதிர் காலங்களிலும் இருப்பதில் என்ன பொருத்தமிருக்கிறதென்று கேட்டால், நாம் முன்னே சொன்னபடி கடவுளுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல, பூமியில் எங்கெங்கே செய்யப்படுகிறதோ, அங்கங்கே பரம ராஜ்யமுண்டு. ஆனபடியினாலே இயேசு மனிதனாகப் பூமியில் வந்து தமது பிதாவின் சித்தத்தின்படி செய்தபோதே அந்த ராஜ்யம் வந்தது. அதின்பிறகு யார் யாருக்கு எந்தமட்டுக்கு அவருடைய இலட்சணம் வந்ததோ, அவரவர்களுக்குள் அம்மட்டுக்கு அவ்விராஜ்யம் இருந்தது. குடும்ப விஷயங்களையும் ராஜாங்க விஷயங்களையும் நடத்துகிறவர்கள் கடவுளுடைய ஆளுகைக்கு எவ்வளவுக்கு அடங்கியிருக்கிறார்களோ, அவ்வளவுக்கு அக்குடும்பங்களிலும் அத்தேசங்களிலும் கடவுளுடைய ராஜ்யம் வந்திருக்கிறது. அவ்விராஜ்யம் வருகிறதற்கு, இயேசு வந்து தமது கிரியைகளைச் செய்ததே துவக்கம். சீஷர்கள் அவரிடம் சேர்ந்து, அவரை நம்பி, அவரிடத்தில் கற்றுக்கொண்டபோது அது விருத்தியடைந்தது. பரிசுத்தஆவி அருளப்பட்டபோது அந்த ராஜ்யத்தை விருத்திக்குக் கொண்டுவரும்படியான பலம் மனுஷருக்குக் கொடுக்கப்பட்டது. அதன்பிறகு எந்தெந்தக் காலங்களில் விசேஷித்த சம்பவங்களால் மனிதர் கடவுளைச் சேவிக்கிறதற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்களோ, அந்தந்தக் காலங்களில் ராஜ்யத்தின் விருத்தி அதிகரிக்கிறது. கடைசியில் இயேசு தம்முடைய இரண்டாம் வருகையில் அதைப் பூரணப்படுத்துவார். அப்போது நடக்கப்போகிறது இன்னதென்று அவர் தெளிவாய்ச் சொல்லாதிருந்தபோதிலும், அந்தக் காலத்தில் கடவுளுடைய சித்தம் இப்பூலோகத்தில் பூரணமாய்ச் செய்யப்படுமென்று காட்டியிருக்கிறார்.

II. பரம பிதாவைப்பற்றிய போதனை.— இப்படியே இயேசு ராஜ்யம் என்கிற உபமானத்தைக்கொண்டு கடவுளுக்கும் மனிதருக்கும் இருக்கும் சம்பந்தத்தை விளக்கிக் காட்டி, சந்தோஷமும் நம்பிக்கையுமுள்ள ஒரு நற்செய்தியைக் கூறினார். அச்செய்தியிலடங்கிய சந்தோஷத்துக்குக் காரணம் அந்த ராஜ்யத்தை ஆளுகிறவர் கிருபையும் அன்புமுள்ள பிதாவாக இருப்பதுதான். அது பிதாவின் ராஜ்யம். ஆகையால் பிதாவாகிய தேவனைக்குறித்து இயேசு அருளின உபதேசத்தை நாம் இப்போது கவனிக்கவேண்டும். ராஜ்யத்தைப்பற்றிய உபமானத்தோடுகூட குடும்பத்தைப்பற்றிய உபமானத்தாலும் கடவுளுக்கும் மனிதருக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டினார். ஆகையால் கடவுளை நோக்கிக் கூப்பிடும்போதெல்லாம் பிதாவே என்று வழக்கமாய்க் கூப்பிடுவார். கடவுள் அரசனாயிருக்கிறதற்கும் பிதாவாயிருக்கிறதற்கும் தடை ஒன்றுமில்லை. இந்த ராஜ்யத்தை ஆளுகிறவர் ராஜ பிதாவாக இருக்கிறார். இயேசு உலகத்துக்கு அருளின புதிய உபதேசம் விசேஷமாகப் பிதாவைப்பற்றிய இந்தப் போதனைக்குள் அடங்கியிருக்கிறது. கடவுளுக்குப் பிதா என்கிற பெயரை வழங்குகிறது நூதனமல்ல. கிரேக்குமார்க்க நூல்களிலும், இந்துமார்க்க நூல்களிலும், பழைய ஏற்பாட்டிலும் கடவுளுக்குப் பிதா என்னும் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனபோதிலும் கிறிஸ்துவுக்கு முந்தி அப்பெயரைச் சொன்னவர்கள் சிருஷ்டிகர், காப்பாற்றுகிறவர் என்கிற அர்த்தத்தோடு வழங்கினார்களேயொழிய, அதிலே மறைந்துகிடக்கிற அருமையான பொருள் அவர்களுக்குத் தெரியவரவில்லை. இயேசுவே முதலாவது அதுவரைக்கும் புதைபொருளாய்க்கிடந்த அந்தப் பொக்கிஷத்தைக் காண்பித்து, அதை அறிவீனருக்கும், படிப்பாளிகளுக்கும், பாவிகளுக்கும், யோக்கியர்களுக்கும் சுதந்தரமாகக் கொடுத்தார்.

உலகத்திலுள்ள ஒரு தகப்பனுக்கும் அவனுடைய பிள்ளைகளுக்குமுள்ள சம்பந்தத்தை நாம் பார்த்தால், அதிலே ஏகதேசம் பின்வரும் ஏழு காரியங்கள் அடங்கி நிற்கும். (1) தகப்பன் பிள்ளைகளுக்கு ஜீவனைக் கொடுத்திருக்கிறான். (2) பிள்ளைகள் அவனுடைய சாயலாக இருக்கிறார்கள். (3) பிள்ளைகளுக்குத் தேவையானதை அவன் சம்பாதித்துத் தருகிறான். (4) தகப்பன் பிள்ளைகளைப் படிப்பித்துச் சிட்சை செய்கிறான். (5) அவன் பிள்ளைகளோடு எப்போதும் கலந்து பேசுவான். (6) அவன் பிள்ளைகளுடைய தப்பிதங்களை மன்னிக்கிறதற்குச் சித்தமான மனதுள்ளவனாயிருக்கிறான்.

(7) அவன் பிள்ளைகளுக்கு ஒரு சுதந்தரத்தைக் கொடுக்கிறான். கடவுளுக்கும் மனிதருக்கு முள்ள சம்பந்தத்தில் இவையெல்லாம் இருக் கின்றனவென்று இயேசு போதித்தார். முத லிரண்டு காரியங்களும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டபடியால், அவைகளை அவர் விசேஷமாய் வற்புறுத்தவேண்டிய அவசிய மில்லை. மிகுதியான ஐந்தையும் அவர் காட் டிக்கொண்டே இருந்தார்.

(*a*) கடவுள் தம்முடைய பிள்ளைகளுக் குத் தேவையானதைக் கொடுத்தருளுகிறார். அவர்களுக்குத் தேவையானது இன்ன தென்று அவருக்குத் தெரியும். பட்சிகளைப் பிழைப்பூட்டுகிறவரும், புஷ்பங்களை உடுத்து விக்கிறவருமாகிய அவர், தம்முடைய பிள் ளைகளைப் பிழைப்பூட்டுகிறதும் உடுத்துவிக் கிறதும் நிச்சயம். மத் 6^{28-32}. உலகத் தகப் பன்மார் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவு களைக் கொடுக்க அறிந்து இருக்கும்போது, அவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிற வர்களுக்கு நன்மையானதைக் கொடுப்பது அதிக நிச்சயம். மத் 7^{11}.

(*b*) கடவுள் தமது பிள்ளைகளைப் படிப் பித்துச் சிட்சை செய்கிறார். இயேசு இதை ஒரு வசனத்தில் தெளிவாய்ச் சொல்லாதி ருந்தபோதிலும், கடவுள் மனிதரை நடத் துதலைக் குறித்து இயேசு பொதுவாகச் சொன்ன போதனையில் இது அடங்கும். ஒரு பிள்ளை பள்ளியில் படிப்பது தனக்குக் கஷ்டமாயிருந்தாலும், அக்கஷ்டமே பின்பு நன்மையை விளைவிக்கிறது. அதுபோல் ஏழைகள், துயரப்படுகிறவர்கள், நீதியினி மித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான் களே என்று இயேசு கூறினார். தவிர, பிள் ளைகளுக்கு வரும் சிட்சை அவர்களுக்குக் கசப்பாகத் தோன்றினும், சிட்சை செய்யும் பிதாவை அவர்கள் நம்பவேண்டியதுபோல, நாமும் பிதாவின் மனதை அடிக்கடி அறி யாதிருந்தாலும், அவர் செய்வதெல்லாம் நன் மையெனக் கருதி, 'ஆம், பிதாவே, இப் படிச் செய்வது உமது திருவுளத்திற்குப் பிரியமாயிருந்தது' என்று இயேசு சொன் னதுபோலச் சொல்லுகிறவர்களாக இருக்க வேண்டும்.

(*c*) கடவுள் தமது பிள்ளைகளோடு கலந்து பேசுகிறார். தகப்பனும் அவன் பிள்ளையும் ஒருவரோடொருவர் பேசாமலிருப்பார்களா? ஆகையால் கடவுளுக்கும் மனிதருக்கும் ஐக் கியமுண்டென்று சொல்லி, மனிதர் ஜெபத் தைக்கொண்டு அவரோடு பேசலாமென்றும், அவ்வித ஜெபங்களைக் கேட்டு அவர் உத் தரவு அருளுகிறாரென்றும் இயேசு அதி கமாய் வற்புறுத்திக் காட்டினார். உலகத்துக் குரிய சிலாக்கியங்களையும் ஆத்துமாவுக்குரிய சிலாக்கியங்களையும் சோர்வின்றிக் கேட்க வேண்டுமென்று பல உவமைகளைக்கொண்டு, லூக் 18^{1} 11^{5} முதலிய அநேக இடங்களில் அவர் உணர்த்திக் காட்டி, விசுவாசமுள்ளவர் களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்டா லும் அவைகளையெல்லாம் பெறலாமென்று கூறினார். மத் 21^{22}. மனிதர் தங்கள் பரம பிதாவோடு பேசவேண்டிய விதத்தை அவர் பரமண்டல ஜெபம் என்கிற சிறந்த திருஷ் டாந்தத்தால் காட்டினார்.

(*d*) கடவுள் தமது பிள்ளைகளுடைய தப்பி தங்களை மன்னிக்கிறதற்குச் சித்தமான மன துள்ளவராயிருக்கிறார். மனிதர் பாவம் செய் யினும், கடவுள் அவர்களைச் சத்துருக்களா கப் பாவித்து அவர்களுக்குத் தீமை செய்ய வேண்டுமென்று கருதாதவராயும், அவர் களைக் கடன்காரராகப் பாவித்து முழுக் கடனையும் வாங்கவேண்டுமென்னும் நோக்க மில்லாதவராயும், அவர்களைக்கெட்டுப்போன பிள்ளைகள்போலப் பாவித்து, அவர்கள் மனந் திரும்பினால், உடனே பிதாவடைவான அன்போடு ஏற்றுக்கொள்ளுகிறதற்குச் சித்த முள்ளவராயும் இருக்கிறாரென்றும், லூக் 15-ம் அதிகாரத்தில் சொல்லிய மூன்று உவ மைகளாலும் இன்னும் அநேக வார்த்தைகளா லும் இயேசு போதித்தார்.

(*e*) கடவுள் தமது பிள்ளைகளுக்கு ஒரு சுதந்தரத்தைக் கொடுக்கிறார். 'பயப்படா தே, சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத் தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக் கிறார்' என்கிற வாக்கியம் இப்போதனைக்கு நல்ல திருஷ்டாந்தம். யோவா 14^{3} பார்க்க.

பிதா என்னும் பதம் இப்பொருள்பட, கட வுள் எல்லாருடைய தகப்பனாயிருக்கிறாரா, அல்லது அவருடைய குடும்ப ராஜ்யத்தில் சேர்ந்திருக்கிறவர்களுடைய தகப்பனாக மாத் திரம் இருக்கிறாரா என்கிற ஒரு கேள்வி பிறக்கக்கூடும். இயேசுவின் போதனைப்பிர காரம் கடவுள் எல்லாருக்கும் பிதாவாயினும், அவருக்குத் தூரத்திலிருந்து விரோதமாய் நடக்கிறவர்களை அவர் பிதாவுக்கேற்ற கரிச னையோடு நடத்துகிறது அசாத்தியம். ஒரு வாலிபன் தன் நல்ல தகப்பனுக்கடங்காமல், வீட்டை விட்டு தூரதேசம் போய் துர்ச்சக வாசம் பண்ணிக் கெட்டுப்போனால், அவ்வா லிபன் அத்தகப்பனுக்கு மகனல்லனென்று சொல்வது வழக்கம். ஆனாலும் அந்த நல்ல மனுஷன் அந்த வாலிபனுக்குத் தகப்பனல்ல னென்று சொல்லத் துணியமாட்டோம். அப் பிரகாரமாகவே கடவுள் எல்லோருடைய

பிதாவாயினும், பலர் அவருடைய பிள்ளைகள் நடக்கவேண்டியவிதமாய் நடவாமல், பிள்ளைகளுக்குரிய மேற்சொன்ன சிலாக்கியங்களை இழந்துவிடுகிறார்கள். நாம் தேவனுடைய புத்திரர்களாயிருந்து பிள்ளைகளுக்கேற்ற சிலாக்கியங்களைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு நிபந்தனைகள் யாவை யெனக் கேட்டால், ஆண்டவர் மத் 18^3-ல் சொல்லும் வாக்கியம் கவனிக்கத்தக்கது. 'நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போ லாகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்.' இப்பரம குடும்பத்தில் பிரவேசிப்போர்கள் பிள்ளைகளுடைய இலட்சணங்க ளுள்ளவர்களா யிருக்கவேண்டும். அவைகளில் மூன்று இலட்சணங்களைக் குறித்து அவர் வெவ்வேறு இடங்களில் விவரமாய்ப் பேசியிருக்கிறார்.

(i) நம்புகிற சுபாவம்.—ஒரு குழந்தை தன் தகப்பனை முற்றிலும் நம்புகிறதுபோல, ஒரு மனிதன் பிதாவாகிய கடவுளை விசுவாசிக்கவேண்டும். சீரோப்பெனிக்கியா ஸ்திரீயின் விசுவாசத்தையும், கப்பர்நகூமிலிருந்த நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தையும் கண்டு இயேசு மிகவும் சந்தோஷப்பட்டாரென்று பார்க்கிறோம். கடவுளிடத்தில் விசுவாசமுள்ளவர்களா யிருங்களென்று அவர் சீஷருக்குச் சொன்னார். அவரில் விசுவாசமுள்ளவர்களா யிருப்பதில் அவர் அனுப்பினவராகிய இயேசுவை நம்புவதே ஒரு பாகம்.

(ii) தன் குறைவை உணர்தல். — ஒரு பிள்ளை தனக் கெல்லாம் இருக்கிறதென்று நினைப்பானா? அவன் மற்றவர்களுடைய கையிலிருந்து போஜன வஸ்திராதிகளை வாங்குகிறபடியால், அவன் தன்னைப் பூரணனென்றெண்ணாமல், தாழ்மையுள்ளவனா யிருக்கிறான். ராஜ்யத்தின் பிள்ளைகளுக்கு இக்குணம் விசேஷம். பசிதாகமுள்ளவர்களே பாக்கியவான்கள். மத் 5^6. தூரத்தில் நின்ற ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான். லூக் 18^{13}. ஆஸ்திக்காரனான வாலிபன் தன்னைக்குறித்துத் திருப்தியுள்ளவனா யிருந்ததால், ராஜ்யத்துக்குப் புறம்பானவன். மாற் 10^{17}.

(iii) தன் குற்றத்துக்காகத் துக்கப்படுதல்.—பிள்ளைகள் இயற்கையாகவே தாங்கள் செய்திருக்கும் ஏதாவது ஒரு குற்றத்தைக் குறித்து உணர்வுள்ளவர்களா யிருப்பார்கள். அதுபோலப் பரமபிதாவின் பிள்ளைகள் மனந்திரும்புவார்களென்று இயேசு முதலில் போதித்த போதனையில் விளங்கும். அவர் கலிலேயாவிலே வந்து, 'மனந்திரும்பி, சுவிசேஷத்தை நம்புங்கள்' என்று பிரசங்கித்தார். மாற் 1^{15}. அவர் கெட்ட குமாரன் உவமையில் மனந்திரும்புதலைக் குறித்துத் தெளிவாக நமக்கு உணர்த்தியிருக்கிறார்.

மனிதர் பரம பிதாவின் பிள்ளைகளாயிருப்பதால், மனிதனாயிருப்பது எவ்வளவு மேன்மை! மனிதன் உலகத்தைப்பார்க்கிலும் பிரதானமானவனா யிருக்கிறான். உலக முழுவதும் ஒரு மனிதனுடைய ஆத்துமாவுக்கு ஈடன்று. இயேசு ஏழைகளையும், மானிட சாயலுள்ள எல்லோரையும் பார்த்து, ஜீவனுள்ள தேவனது பிள்ளைகளாகிய நீங்கள் அநேக அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் விசேஷித்தவர்கள் என்று சொன்னது மாத்திரமன்று, நீங்கள் உலக முழுவதையும் பார்க்கிலும் விசேஷித்தவர்களென்றும் சொன்னார். ஒருவனுடைய ஆத்துமாவின் அருமை இயேசுவினால்தான் முதலாவது வெளிக்கு வந்தது. நாம் பூர்வீககாலத்து மார்க்க நூல்களை ஒத்துப் பார்க்கும்போது இயேசு திருவாய்மலர்ந்தருளிய பிதாவைப் பற்றிய போதனையால் மனிதருக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுத்திருக்கிறாரென்று பார்க்கிறோம். எத்தனையோ ஞானிகள் இருளில் அழுகிற பிள்ளைகளைப்போலக் கடவுளைப்பற்றி நிச்சயமில்லாமல் புலம்பியிருக்கிறார்கள். பாலகருக்கு வெளிப்படுத்தின சத்தியம் இயேசுவின் மூலமாகத்தான் வந்தது. 'குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்.' மத் 11 அதி. அதினால்தான் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்கள் யாவரும் இயேசுவினிடம் போய்க் கற்றுக்கொண்டு இளைப்பாறுத லடையவேண்டும்.

III. மனிதர் நடக்கவேண்டிய விதம்.—இதைப்பற்றி இயேசு விசேஷமாய் வற்புறுத்திப் பேசின போதனையை நான்கு பிரிவுகளாய்ப் பிரிக்கலாம்.

(*a*) மனிதருடைய நல்லொழுக்க சம்பந்தமாய்ப் பரிசேயருக்கு வேண்டியமட்டும் நல்ல சட்டங்கள் இருந்தபோதிலும், அவர்கள் நல்லொழுக்கத்தையும் ஆசாரத்தையும் குழப்பிவிட்டதால் இரண்டும் ஜீவனற்றுப்போயிருந்தன. அவர்கள் அபிப்பிராயப்படி, நன்மை செய்கிறதும், ஆசாரங்களைக் கைக்கொள்ளுகிறதும் ஒன்றே. இயேசு நன்மை செய்வது வேறு, ஆசாரம் வேறு என்று காட்டி, ஆசாரத்தைப்பார்க்கிலும் நன்மை செய்கிறதே பெரிய காரியமென்று உணர்த்தினார். யார் யார் தங்கள் உடன் மனிதரைப் பட்டினி

யாய்க்கிடக்கவிட்டு, தங்கள் பெற்றோருக்குங் கூட உதவி செய்யாமல் (மாற் 7[11]), கோவிலுக்குத் தருமப்பணத்தை அனுப்புகிறார்களோ, அவர்களை அவர் அதிக இழிவாக எண்ணுவார். பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்கிறது அவருக்குப் பிரியமான வழக்கச்சொல்லா யிருந்தது. ஓசி 6[6] மத் 9[13] 12[7].

(*b*) அவர் செய்கை யன்று, நோக்கமே பெரிதென்று எண்ணினார். ஒருவன் நல்ல கிரியையைக் கெட்ட நோக்கத்தோடு செய்தால், அதில் யாதொரு பலனுமில்லை. நாம் துர்க்காரியங்களைச் செய்யாமல், நற்காரியங்களைச் செய்தால், அதுகூடப் போதாது. உள்ளம் சுத்தமாயும், இருதயத்தின் நோக்கம் செம்மையாயு மிருக்கவேண்டும். மலைப்பிரசங்கத்தின் ஒரு பெரிய பாகத்தில் இது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. உள்ளத்தில் தோன்றும் துர்யோசனை துர்ச்செய்கைக்குச் சமமே.

(*c*) இயேசு நாம் நம்முடைய உடன் மனுஷருக்குச் செய்யவேண்டிய கடமைக்கு ஒரு புதிய நோக்கத்தைக் காட்டினார். அன்பே அந்நோக்கம். பிறனுக்குத் தீமை செய்யாமலிருப்பதோடு, நாம் அன்பினால் நம்மால் இயன்றவரை அவனுக்கு நன்மை செய்ய வேண்டும். சுருங்கச்சொல்லில், மனுஷனுடைய கடமையாவும் அன்பு என்னும் ஒரு பதத்தில் அடங்கும். மத் 22[37. 39]. நாம் சத்துருக்களையும் நேசித்து, சமாரியனைப்போல சகலருக்கும் உதவிசெய்து, நமக்குப் பிரதி நன்மைகளைச் செய்யக்கூடாதவர்களுக்கு நன்மைபுரிந்து (லூக் 6[34]), பசியுள்ளோர்க்கு அன்னமளித்து, தாகமுள்ளோர்க்குத் தாகந் தீர்த்து, வியாதியிலும் காவலிலுமிருக்கிறவர்களைப் போய்ச்சந்தித்து (மத் 24[34-36]), தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யச்செய்த பரமபிதாவினுடைய புத்திரராய் நடக்கவேண்டும். மத் 5[45].

(*d*) கடைசியாகச் சொன்ன காரியத்தில் இன்னொரு விசேஷமான போதனை விளங்குகிறது. மனுஷனுடைய கடமையை அளக்கிறதற்கு இயேசு ஒரு புதிய அளவுகோலை ஏற்படுத்தினார். கடவுள்தாமே மனுஷருக்கு முன்மாதிரி. 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணரா யிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணரா யிருக்கக்கடவீர்கள்.' மத் 5[48]. இதினால் நாம் கடவுளுக்குச் சமானமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று அவர் சொல்லாமல், கடவுள் எப்படிப் பூரணப்பட்டவராய், நல்ல பிதாவா யிருக்கிறாரோ, அதற்குத் தக்கபடி நாம் அவருக்குப் பூரணமாய் நல்ல பிள்ளைகளாயிருக்கிறது நம்முடைய கடமையென்றும், அப்படியாகுமட்டும் நாம் திருப்தியடையக் கூடாதென்றும் சொல்லியிருக்கிறார். பரமபிதாவின் புத்திரன் இவ்வுலகில் எப்படி நடப்பானென்று இயேசுவில் தெளிவாய்ப் பார்த்திருக்கிறோம். நம்முடைய நடக்கையை நாம் அளவிட வேண்டுமென்றால், வேறே அளவுகோல் நமக்குக் கிடையாது, நாம் வைக்கவும் கூடாது. இதற்குச் சம்பந்தமாக நாம் இயேசுவின் போதனையில் இன்னொரு விசேஷத்தைக் கவனிக்கலாம். அவருடைய காலத்திற்குமுன் மனிதர் அதிக இழிவாய் எண்ணியிருந்த ஒருவித குணத்தை அவர் அதிகமாய் மெச்சிப் பேசினார். இக்குணத்தைப் பொறையுடைமை என்று சொல்லலாம். துன்பப்படும்போது பொறுமையாயிருத்தல், தீமை செய்தவர்களுக்கு மன்னித்தல், எப்போதும் சாந்தகுணமுள்ளவர்களாயிருத்தல் முதலிய இவ்வித குணங்கள் இயேசுவின் காலத்திற்குமுன் பல ஜாதியாரால் நற்குணங்களாக எண்ணப்படவேயில்லை. இயேசுவோ அக்குணமுள்ளோரே பாக்கியவான்களென்று மலைப்பிரசங்கத்தில் கூறினார். தீமை செய்கிறவர்களுக்கு மன்னிக்கிறதை அவர் முக்கியமான விஷயமென மதித்து, நாம் மனுஷருக்கு மன்னிப்புக் கொடுத்தால் தான் கடவுளிடம் மன்னிப்புப் பெறுவோமென்று எச்சரித்தார். இந்தியா தேசத்தில் தான் பூர்வீகத்திலிருந்து இந்தப் பொறையுடைமை அதிகமாய் மதிக்கப்பட்டதால், இயேசுவின் போதனையில் இப்பாகம் இந்தியா தேசத்தார் இலேசாய் ஏற்றுக்கொள்ளலாம்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.' குறள் 151.

இயேசுகிறிஸ்து அருளின உபநியாசங்கள். The Discourses of Jesus Christ.

1. பிரசங்கங்கள்.

அவர் போதனையின் மூலாதாரம். யோவா 3[1-21].

மேசியாவின் ராஜ்யம் (மலைப்பிரசங்கம்). மத் 5 6 7 அதி.

சமாரியா ஸ்திரீக்கு மேசியாவைப்பற்றிய போதனை. யோவா 4[4-42].

நாசரேத்தூரில் மேசியாவைப்பற்றிய பிரசங்கம். லூக். 4[16].

ஓய்வுநாளைப்பற்றிய பிரசங்கம். யோவா 5[17].

பரலோக ராஜ்யத்தைப்பற்றிய பல உவமைகள். மத் 13 அதி.

பன்னிரண்டு அப்போஸ்தலருக்கு எச்சரிக்கையாகச் சொன்ன போதனை. மத் 10 அதி.

எழுபது சீஷர்களுக்கு எச்சரிக்கையாகச் சொன்ன போதனை. லூக் 10^{1-20}.

கூடாரப்பண்டிகையில் செய்த உபநியாசம். யோவா 7^{14-39}.

ஜீவ அப்பம். யோவா 6^{22-65}.

உலகத்தின் ஒளி. யோவா 8^{12}.

நல்ல மேய்ப்பன். யோவா 10 அதி.

மாயம், பயம், பொருளாசை மு. லூக் 12 அதி.

மனந்திரும்புதல். லூக் 13^{1-10}.

தாழ்மை, இடறல், மன்னிப்பு மு. மத் 18 அதி.

இடையூறு, விசுவாசம் மு. லூக் 17^{1-10}.

தாழ்மை, தர்மம். லூக் 14^{1-14}.

உபவாசம். மாற் 2^{18-22}.

ஐசுவரியம். லூக் 16^{1-31} மத் 19^{23-30}.

வேதபாரகரையும் பரிசேயரையும் பற்றியது. மத் 23 அதி. 16^{6-12}.

மெய்ச் சீஷன். லூக் 14^{25-35}.

கடைசி நியாயத்தீர்ப்பு. மத் 25 அதி.

சீஷர்களுக்குப் பரிசுத்தாவியின் வருகை முதலியவற்றைப்பற்றிய ஆறுதலைக் கொடுக்கும் போதனை. யோவா 14–17 அதி.

2. ஆக்ஷேபனைகளுக்குப் பிரதியுத்தரம்.

ஓய்வுநாளைப் பற்றியது. மத் 12^{1-8}.

ஓய்வுநாளில் சொஸ்தம் ஆக்கினதைப் பற்றியது. லூக் 13^{14-17}.

தம்மைப்பற்றிய சாட்சி. யோவா 8^{13-19}.

தேவதூஷணம் (பெயெல்செபூல்). லூக் 11^{14-23}.

ஆயக்காரரோடும் பாவிகளோடும் உள்ள சிநேகம். மத் 9^{10-13} மாற் 2^{15-28} லூக் 15^{1-2}.

சீஷர்கள் உபவாசம்செய்யாதது. மத் 9^{14-17}.

சீஷர்கள் பாரம்பரியத்தின்படி நடவாதது. மாற் 7^{1-16}.

சீஷர்கள் பிசாசைத் துரத்தினவனைத் தடுத்தல். மாற் 9^{38-50}.

சீஷர்கள் சிறு பிள்ளைகளைக் கொண்டு வந்தவர்களைத் துரத்தினது. மாற் 10^{13}.

ஓசன்னா சொன்னவர்களைக் கண்டித்தது. மத் 21^{15-16} லூக் 19^{37-40}.

இயேசு தமது மரணத்தைப்பற்றிப் பேசினபோது உண்டான தடை. மத் 16^{22}.

யூதேயாவுக்குத் திரும்பவருகிறதைப்பற்றி உண்டான தடை. யோவா 11^{8}.

பூரண விசுவாச மில்லாதவர்களைப்பற்றி. லூக் 9^{59-62}.

3. வினாக்களுக்குப் பிரதியுத்தரம்.

ஓய்வுநாளில் சொஸ்தம் ஆக்கலாமா? மத் 12^{10-13} லூக் 14^{1-6}.

ராயனுக்கு வரிகொடுக்கலாமா? மத் 22^{17}.

விபசார ஸ்திரீயைக் கல்லெறிந்து கொல்லலாமா? யோவா 8^{2-11}.

நீர் கிறிஸ்துவா, ராஜாவா? யோவா 10^{24} 18^{33}.

மீட்கப்பட்டவர்கள் சிலர் மாத்திரமா? லூக் 13^{23-30}.

பரலோக ராஜ்யம் எப்பொழுது வரும்? லூக் 17^{20}.

தள்ளுதற்சீட்டுக் கொடுக்கலாமா? மத் 19^{3}.

நித்தியஜீவன் அடைவது எப்படி? மத் 19^{16-26} லூக் 10^{25-37}.

இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு என்ன கிடைக்கும்? மத் 19^{27}.

உயிர்த்தெழுதல் உண்டா? மத் 22^{23}.

பிரதானமான கட்டளை என்ன? மத் 22^{34-45} மாற் 12^{28-34}.

4. சந்தேக நிவிர்த்தி.

அடையாளம் தேடுகிறவர்களுக்கு. லூக் 11^{29-36} மத் 16^{1-4}.

அதிகாரத்தைத் தள்ளுகிறவர்களுக்கு. மத் 21^{23-45}.

இயேசுகிறிஸ்துவா என்று சந்தேகிக்கிறவர்களுக்கு. மத் $26^{63, 64}$.

5. முன் அறிவித்தல்.

மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றியது. மத் 16^{21} மாற் 9^{12} யோவா 2^{19} $6^{53, 62}$ 8^{28}.

ஏரோதுவுக்கு முன் அறிவித்தல். லூக் 13^{31-35}.

தமது மரணம் இன்னவிதமாய் இருக்கும் என்பதைப் பற்றியது. மத் 20^{17} மாற் 10^{32} லூக் 18^{31-34}.

எருசலேமின் அழிவும் நியாயத்தீர்ப்பும். மத் 24 அதி. மாற் 13 அதி. லூக் 21 அதி.

பேதுருவின் மறுதலிப்பு. மத் 26^{34} மாற் 14^{30} லூக் 22^{31-34} யோவா 13^{38}.

6. எச்சரிக்கைகள்.

செய்யாமல்கேட்கிறதைப் பற்றியது. மத் 7^{24-27} லூக் 6^{47-49}.

ஐசுவரியவான்கள் முதலியவர்களுக்கு. லூக் 6^{24-26}.

அறிந்தும் மனந்திரும்பாதவர்களுக்கு. மத் 11^{20-24} லூக் 10^{13-15}.

இயேசுவை அறிக்கையிடாதவர்களுக்கு. லூக் 12^{8-10}.

பரிசேயருக்கும் நியாயசாஸ்திரிகளுக்கும். மத் 23^{13-35} லூக் 11^{37-52}.

எருசலேமைப் பற்றி. லூக் 13^{34}.

இயேசுகிறிஸ்து சொன்ன வாக்குகளில் எழுதப்படாதவை. The unwritten sayings of Jesus. Agrapa. சுவிசேஷங்களில் இயேசு சொன்னவைகளில் சிலமாத்திரம் எழுதியிருக்கிறதினால் ஆதி சபையார் சுவிசேஷங்களில் எழுதப்படாதவைகளை அவருடைய சீஷர்கள் மூலமாய்க் கேட்டறிந்து தங்கள் ஞாபகத்தில் வைத்திருந்தார்கள் என்பது ஆச்சரியம் அல்ல. ஆயினும் வேதசாஸ்திரிகளிற் சிலர் இவ்வசனங்களைக் கண்டறியும்படி ஆதி கிறிஸ்தவர்களின் புஸ்தகங்களை அதிக ஆவலோடு ஆராய்ந்து பார்த்தும் அவர்கள் கண்டுபிடித்தவைகள் வெகு சொற்பம். பெரும்பாலும் நாலு சுவிசேஷங்களில் எழுதினவைகளுக்கு இவைகள் ஒத்திருக்கின்றன.

சுவிசேஷங்களில் இல்லாத இயேசுவின் வார்த்தைகள் ஐந்துவிதமாய் எழுதியிருக்கின்றன.

1. புதிய ஏற்பாட்டின் கையெழுத்துப் பிரதிகளில் சுவிசேஷங்களின் ஆக்கியோன்களால் அல்ல, அப்பிரதிகளின் விகிதர்களால் எழுதிய இரண்டு மூன்று வாக்கியங்கள்.

(1) யோவா 8-ம் அதிகாரத்தில் விபசார ஸ்திரீயைப்பற்றிச் சொல்லிய வசனங்கள் யோவானால் எழுதப்பட்டன அல்ல; அவை வேறொருவனால் எழுதப்பட்டு அதில் சேர்க்கப்பட்டன என்று தோன்றுகிறது. யோவா 7^{53}-8^{11}.

(2) ஒரு கையெழுத்துப் பிரதியில் லூக் 6^{4}-க்குப் பிறகு வேறெங்கும் காணப்படாத வசனம் ஒன்று எழுதியிருக்கிறது. அதாவது: அதே நாளிலே ஓய்வுநாளில் வேலை செய்கிறவனை அவர் பார்த்து, 'மனிதனே! நீ செய்தது இன்னதென்று அறிந்தாயானால் பாக்கியவானாய் இருப்பாய். அறியாவிட்டால் சபிக்கப்பட்டவனாயும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறவனாயும் இருப்பாய்' என்றார்.

(3) அப் 20^{35}-ல் சுவிசேஷங்களில் எழுதியிராத இன்னொரு வாக்கியம் இருக்கிறது. அதாவது: வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.

2. இயேசுவைப்பற்றி ஆதி கிறிஸ்தவர்கள் எழுதின அப்போகிரிப்பா என்னும் சுவிசேஷங்களில் நாலு சுவிசேஷங்களிலு மில்லாத இயேசு உரைத்த பதினொரு வாக்கியங்கள் உண்டு. இவைகளில் முக்கியமானது ஒன்றே. அதாவது: தேடுகிறவன் கண்டடையுமட்டும் ஓய்ந்துபோகான்; கண்டடையும்போது ஆச்சரியப்படுவான்; ஆச்சரியப்பட்டு அரசாளுவான்; அரசாண்டு இளைப்பாறுதல் அடைவான்.

3. ஆதி பிதாக்கள் தாங்கள் கேட்டறிந்த பாரம்பரியத்தின்படி சுவிசேஷங்களில் இல்லாத சில வாக்கியங்களை எழுதியிருக்கிறார்கள். ஆனால் இவைகளுக்கும் நாலு சுவிசேஷங்களில் எழுதின வாக்கியங்களுக்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லை. அவைகளில் புதிதாய் எழுதியிருப்பவைகள் மூன்று மாத்திரம் உண்டு. அவையாவன:

(1) ஒருவனும் நாம் கேட்கவில்லை என்று சொல்லாதபடிக்கு நீங்கள் பன்னிரண்டு வருஷத்திற்குப் பிறகு உலகத்திற்குப் புறப்பட்டுப் போங்கள்.

(2) எனக்குச் சமீபமாய் இருக்கிறவன் நெருப்புக்குச் சமீபமாய் இருக்கிறான். எனக்குத் தூரமாய் இருக்கிறவன் ராஜ்யத்துக்குத் தூரமாய் இருக்கிறான்.

(3) உண்மையுள்ள காசுக்கடைக்காரர்களாய் இருங்கள்.

4. மகமதியர் எழுதின புஸ்தகங்களில் அவர்கள் பாரம்பரியத்தின்படி கேட்டறிந்த சில வாக்கியங்கள் உண்டு. அவைகளில் முக்கியமானவை:

(1) ஒருநாள் இயேசுவும் சீஷர்களும் வழியிலே நடந்துபோகும்போது செத்திருக்கும் நாய் ஒன்றைப் பார்த்தார்கள். சீஷர்கள் இது எவ்வளவு துர்நாற்றம் அடிக்கிறது என்று வெறுப்பாய்ச் சொன்னார்கள். இயேசுவோ இதின் பற்கள் வெள்ளையாயும் எவ்வளவோ அழகாயும் இருக்கிறது என்று சொன்னார்.

(2) இயேசு சொன்னதாவது, உலகம் உங்களை அடிமைகள் ஆக்காதபடிக்கு உலகத்தை உங்களுக்கு எஜமானாக ஏற்படுத்தாதிருங்கள்.

5. எகிப்தில் அக்சிரிங்கஸ் (*Oxyrhynchus*) என்னும் இடத்தில் கி-பி. 1897-ஆ கண்டெடுக்கப்பட்ட சில கையெழுத்துப் பிரதிகளில் நாம் இதற்குமுன் அறியாத இயேசு சொன்ன வார்த்தைகள் சில எழுதியிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை:

(1) நீங்கள் உலகத்துக்காக உபவாசியாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் கண்டடையமாட்டீர்கள்; ஓய்வுநாளில் உண்மையாய் ஓய்ந்திராவிட்டால் பிதாவைப் பார்க்கமாட்டீர்கள்.

(2) நான் உலகத்தின் மத்தியிலே நின்றேன். சரீரத்திலே நான் அவர்களுக்குக் காணப்பட்டேன். எல்லாரும் மதுபானம் பண்ணுகிறவர்களும் தாகம் அற்றவர்களுமாய் இருக்கக் கண்டேன். மனுஷ புத்தி

ரர்கள் இருதயக் குருடர்களாய்க் காணுததி ஞல் என் ஆத்துமா அவர்களின்பேரில் துக்கம் அடைகிறது.

(3) இருவர் தாங்கள் இருக்கும் இடத்தில் தேவன் இல்லாமல் இருக்கமாட்டார்கள். ஒருவன் தனியே இருக்கும் இடத்திலே நான் அவனேடிருக்கிறேன். கல்லைப் புரட்டு, அங்கே என்னைக் கண்டடைவாய். மரத்தைப் பிள, அங்கே நான் இருக்கிறேன்

இயேசுவின் உயிர்த்தெழுதல். The Resurrection of Jesus.

(*a*) இக்காலத்தில் உயிர்த்தெழுதலைக் குறித்துப் பலமும் உறுதியுமான சாட்சி கூறினும், உலக அமைப்பின்படி அது நடக்கக் கூடாத காரியம், புத்தியுள்ளோர் அதை நம்பமாட்டார்களென்பது சிலர் கூறும் ஆட்சேபனை. உலக அமைப்பு யாதென விசாரிக்கப் புகின், அதைப்பற்றி நமக்கு இருக்கும் அறிவு குறைவு; உலக அமைப்பின்படி எது நடக்கக்கூடும், எது நடக்கக்கூடாதென்று இலேசாய்ச் சொல்ல முடியாது. தற்கால சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிற அநேக காரியங்களைக்குறித்து யோசிக்குங்கால், சில வருஷங்களுக்குமுன் நமது அபிப்பிராயத்தின்படி உலக இயற்கைப் பிரமாணங்களுக்கு விரோதமாய்த் தோன்றின சில காரியங்கள் நமக்கு அக்காலத்தில் தெரியாதிருந்த இயற்கைப் பிரமாணங்களின் படியே நடக்கின்றனவென்று இப்போது நமக்கு விளங்கும். ஜடம், சித்து முதலானவற்றைக் குறித்து நமக்குப் பூர்த்தியான அறிவு இருந்தால்மாத்திரம் ஒரு காரியம் ஒருநாளும் கூடாதென்று சொல்லத் தகுந்தவர்களாய் இருப்போம். ஆகையால் அறிவாளிகள் இயேசு உயிர்த்தெழுந்தாரா இல்லையா என்பதற்கு இருக்கிற அத்தாட்சியைப் பொறுமையோடு சீர்தூக்கிப் பார்ப்பார்கள்.

(*b*) வேறு சிலர் நினைக்கிறது யாதெனில், இயேசுநாதர் ஆவியின்பிரகாரமாய் எழுந்தார் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை, அதுவே நமக்கு வேண்டியது; ஜடப்பொருளாகிய அவருடைய சரீரத்தைக்குறித்து நாம் ஏன் கவலைப்படவேண்டும்? உயிர்த்தெழுதலின் நம்பிக்கை நமக்கிருந்தால் வாஸ்தவமாய்க்கல்லறையை விட்டாரா இல்லையா என்கிற கேள்வியில் நமக்கு விசேஷித்த பிரயோஜனமில்லை என்பதே. இவ்விதம் நினைக்கிறவர்கள் கவனிக்காமல் விடுகிறது என்னவெனில், உயிர்த்தெழுதலுண்டென்கிற நம்பிக்கையாம். மூன்றும் நாளில் இயேசு கல்லறையை விட்டாரென்பதும் சம்பந்தமில்லாமலிருக்கிறதில்லை என்பது நிச்சயம். வெறுமையான கல்லறையண்டையில்தான் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை பிறந்தது. மூன்றும் நாளில் சீஷர்கள் கல்லறையண்டை வந்த நாழிகைமட்டும் அவர்களுக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இல்லை. சீஷர்கள் அவர் உயிர்த்தெழுந்திருப்பாரென்று உத்தேசித்து, வெறுமையான கல்லறையைப்பற்றிய கதைகளையெல்லாம் கற்பனை செய்தார்களென்று யாராவது சொல்லப் புகுந்தால், சாட்சிகள் எல்லாரும் அவ்வளவு பொய்யர்களென்று துணிந்து நினைக்கிறதற்கு யாதொரு வழியுமில்லை. புதிய ஏற்பாட்டிலுள்ள அத்தாட்சியைச் சிரத்தையோடு ஆராய்ந்து பார்த்தவர்கள் எல்லாரும் அது நம்பக்கூடியதுதாஞ அல்லவா என்று தீர்மானிக்கவேண்டும்.

அந்தாட்சி. முதல் அத்தாட்சி நான்கு சுவிசேஷங்களல்ல.

இந்தக் காரியத்தை ஆராய்கிற விஷயத்தில் அநேகர் தப்பிதமாய் ஆரம்பித்து, உடனே கஷ்டத்தில் சிக்கிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் நான்கு சுவிசேஷங்களிலுமுள்ள சரித்திரங்களை எடுத்து, ஒன்றோடொன்று ஒத்துப்பார்த்து, அவை ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருக்கிறதைக் கண்டு தப்பெண்ணங்கொள்ளுகிறார்கள். இந்த அத்தாட்சிக்கு ஆரம்பம் சுவிசேஷங்களல்ல. சுவிசேஷங்கள் எழுதப்படுகிறதற்கு அநேக வருஷங்களுக்கு முன் இயேசு உயிரோடெழுந்தார் என்று ஆயிரக்கணக்கானபேர் நம்பி, அந்நம்பிக்கையால் மனம் மாறுதலடைந்து, உபத்திரவத்தின் மூலமாய்ப் பொதுவான திருச்சபையை ஸ்தாபித்தார்கள் அவர்கள் அப்படிச் செய்ததே உயிர்த்தெழுதலுக்கு முக்கிய அத்தாட்சி. புதிய ஏற்பாட்டிலுள்ள ஒரு புஸ்தகமாவது எழுதப்படாததற்கு முந்தி இந் நம்பிக்கை தனக்குரிய கிரியையைச் செய்து கொண்டிருந்தது. இந்த நம்பிக்கை இல்லாவிட்டால், புதிய ஏற்பாட்டின் ஒரு புஸ்தகமாவது எழுதப்பட்டிருக்கமாட்டாது. புதிய ஏற்பாட்டிலுள்ள பல அடையாளங்களைப் பற்றிய சரித்திரமும், வெறுமையான கல்லறையைப்பற்றிய சரித்திரமும், கலிலேயாவிலோ எருசலேமிலோ இயேசு சீஷருக்குத் தரிசனமானதைப்பற்றிய சரித்திரமுமாகிய இவை அவர் உயிர்த்தெழுந்ததற்கு முக்கிய அத்தாட்சிகள் அல்ல. புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு ஏட்டிலும் நாம் காண்கிற புதிய ஜீவனும், உயிர்த்தெழுந்த இரட்சகர் கிறிஸ்தவர்களுக்குள் உயிர்ப்பித்த சக்தியுமாகிய இவைகளே உயிர்த்தெழுதலை நமக்கு நிச்சயப்படுத்துகின்றன.

[1] இயேசு உயிர்த்தெழுந்ததினாலல்ல, அவர் உயிர்த்தெழுந்ததாக அவர்கள் நம்பின நம்பிக்கையினாலே இந்த மாறுதல் நடந்ததென்று சொன்னால், அவர்களுடைய நம்பிக்கை எப்படி உண்டானதென்கிற கேள்வி உடனே பிறக்கும். அவர்களுடைய நம்பிக்கை சரித்திரத்தை உண்டுபண்ணினதா, சரித்திரம் அவர்களுடைய நம்பிக்கையை உண்டுபண்ணினதா? இதுதான் கிறிஸ்துமார்க்கத்தின் சாரத்துக்குச் சம்பந்தமான பெருங் கேள்வி. இக்கேள்விக்குப் புதிய ஏற்பாட்டிலுள்ளவைகளைக்கொண்டே நாம் உறுதியான விடை பகரக்கூடும்.

மேற்சொன்னபடி புதிய ஏற்பாட்டில் எங்கும் பரம்பியிருக்கிற அந்தப் பொதுவான அத்தாட்சி நீங்கலாக, நமக்குக் காலக்கிரமத்தில் முதலாவதாக நிற்கிற நூல் அத்தாட்சி கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபம் 15-ம் அதிகாரத்தில் அடங்கியிருக்கிறது. ஏறக்குறைய கி-பி. 55-ளூத்தில் எழுதிய அந்நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் சுமார் கி-பி. 50-ளூத்தில் கொரிந்து பட்டணத்துக்குச் சென்றபோது அவர் போதித்த சங்கதிகள் அடங்கியிருக்கின்றன. பவுல் அங்கே போதித்தவைகளெல்லாம் பொதுவான கிறிஸ்தவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவைகள்; பவுல்கிறிஸ்தவனானபோது அவைகளைப் பெற்றுக்கொண்டு, மற்றவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தான். 1 கொரி 15³. பவுல் எப்போது குணப்பட்டானென்று விசாரித்தால், சிலர் கிறிஸ்துவின் மரணத்திற்கு ஏழு வருஷங்களுக்குப் பின் என்றும், சிலர் மூன்று நாலு வருஷங்களுக்குப் பின் என்றும், ஒருவர் ஒரே வருஷத்திற்குப் பின் என்றும் சொல்லுகிறார்கள். இயேசுவின் மரணத்துக்கு அவ்வளவு சமீபமான காலத்தில் கிறிஸ்தவமதத்தின் சாராம்சங்களாய் ஒப்புக்கொள்ளப்பட்டவை என்னவெனில், கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, மகிமையில் நிலைத்திருந்து, சிலபேருக்குத் தரிசனமானாரென்கிற இவைகளே. 1 கொரி 15³·⁴. அடக்கம் பண்ணப்பட்டதை இங்கே குறிப்பிட்டது கவனிக்கத்தக்க காரியம்; ஏனென்றால், அடக்கம் எப்படிச் சரீரப்பிரகாரமாக இருந்ததோ, அதின் பக்கத்தில் குறித்திருக்கிற உயிர்த்தெழுதலும் சரீரப்பிரகாரமாகவே இருக்கவேண்டும். அதோடுகூட 'மூன்றாம் நாள்' என்கிற வார்த்தையையுங் கவனிக்கவேண்டும். கிறிஸ்தவமார்க்கத்தை உண்டுபண்ணின சம்பவம், அதாவது அதுமுதல் கிறிஸ்தவர்கள் வாரத்தின் ஏழாம் நாளைத் தவிர்த்து, வாரத்தின் முதலாம் நாளை ஆசரிக்கப்பண்ணின அவ்வளவு முக்கியமான சம்பவம் அன்றைக்கே நடந்தது. இயேசுவின் உயிர்த்தெழுதலானது ஆவிக்குரிய லோகத்தில் நடந்த சம்பவம்மாத்திரம் அன்று; அது இவ்வுலகத்தில் உண்டானது; இவ்வுலக சரித்திரத்தில் அதற்குத் தேதியுண்டு. பிறகு பவுல் உயிர்த்தெழுந்த இயேசுவைத் தரிசித்தவர்களைக் காட்டுகிற அட்டவணையைக் கொடுக்கிறான். அவன் எழுதிய காலத்தில் அநேகர் ஜீவனோடு இருந்தார்கள். இந்த அட்டவணையை எழுதுகிறதில் ஒவ்வொரு தரிசனத்தையும் குறிக்க வேண்டுமென்பது அவனுடைய நோக்கம் அன்று. இயேசு யதார்த்தமாய்ப் பலருக்குத் தரிசனமானாரென்று உறுதியாய் ரூபிப்பதே அவனுடைய நோக்கம். ஆகையால் சுவிசேஷங்களில் சொல்லியிருக்கிறபடி இயேசு எருசலேமில் சில ஸ்திரீகளுக்குத் தரிசனமானதைப்பற்றிப் பவுலுக்கு ஒன்றுந் தெரியாது எனச் சொல்லக்கூடாது. மேலும் உயிர்த்தெழுந்த விதத்தைப்பற்றி இந்த இடத்தில் சொல்வதும் அவனுடைய நோக்கம் அன்று. ஆண்டவர் எந்த உருவத்தோடு தரிசனமானாரென்று சொல்லப்புகின், பவுல் அதிகமாய்ச் சொல்லக்கூடும். ஆண்டவர் தனக்குத் தமஸ்கு பட்டணத்துக்குச் சமீபத்தில் மகிமையோடு தரிசனமானதைக் குறித்தும் விஸ்தாரமாய் எழுதியிருக்கலாம். ஆனால் ஆண்டவர் உயிர்த்தெழுந்தாரென்கிற சத்தியத்தைமாத்திரம் இங்கு கூறுவது அவனுடைய நோக்கம். பவுலுக்கு உண்டான தரிசனத்தைக்குறித்து நாம் இன்னும் ஆராய்ந்தால், அதில் சில சங்கதிகள் நமக்குத் தெளிவில்லாமல் இருந்தாலும், ஒரு விஷயம் மிகுந்த தெளிவாயிருக்கிறது. கல்வாரி மேட்டில் சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்தூரானாகிய இயேசு, தேவனது வலதுபாரிசத்தில் மகிமையோடும் வல்லமையோடும் உயர்த்தப்பட்டிருக்கிறார் என்கிற விஷயத்தைப்பற்றி, அத்தரிசனத்தைக் கண்டபிறகு பவுலுக்கு யாதொரு சந்தேகமுமில்லை. உயிர்த்தெழுதலைக்குறித்து அவன் எழுதும் போதெல்லாம் மகிமை, வல்லமை என்னும் இவ்விரண்டு பதங்களை அதிகமாய்ச் சொல்லுகிறான். பிதாவின் மகிமையாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். ரோ 6⁴. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததனாலே தேவனுடைய சுதனென்று பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனாயிருக்கிறார். ரோ 1⁵. தேவனுடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவத்தைக் காண்பிக்க

வேண்டுமானால், அவர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும் கர்த்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் இயேசு உயர்ந்திருக்கத் தக்கதாக அவரை உன்னதங்களில் தமது வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்ததைத்திருஷ்டாந்தமாகக் கூறுகிறான். எபே 1^{19-23}. சர்வ வல்லமை என்பது கிறிஸ்துவை உயிர்ப்பித்த வல்லமையே. அந்த வல்லமை நம்முடைய ஆத்துமாவின் எல்லா அவசரங்களுக்கும் போதுமானது. எபே 3^{20} பிலி 3^{21}-ல் அவன் உலகத்தில் நடமாடுகிற மனிதருடைய அற்ப சரீரத்துக்கு எதிராக உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மகிமையான சரீரத்தை வைக்கிறான். உயிர்த்தெழுதலுக்குமுன் இயேசுவுக்கு இருந்த அற்ப சரீரத்திற்கும் அதற்குப்பின் இருந்த மகிமையான சரீரத்திற்கும் யாது சம்பந்தமென்று கேட்டால், பவுல் தனக்குத் தெரியாது எனச் சொல்லுவான். அது பரமரகசியம். 1 கொரி 15^{51}. ஆயினும் இரண்டிற்கும் சம்பந்தமில்லை எனப் பவுல் ஒருநாளும் சொல்லியிருக்கமாட்டான். அந்த அற்ப சரீரமே மறுரூபமாக்கப்பட்டு, மகிமையின் சரீரமாக மாற்றப்பட்டதென்று சொல்லியிருக்கிறான் என்று 1 கொரி 15^{51}-ல் பார்க்கிறோம்.

மற்ற நூல் அத்தாட்சி.

பவுலைத்தவிர இன்னும் யாருக்கு எவ்விடங்களில் உயிர்த்தெழுந்த இயேசு தரிசனமானாரென்று எழுதியிருக்கிறதென்று பார்த்தால், புதிய ஏற்பாட்டில் சில தரிசனங்களைப்பற்றி வெகு சுருக்கமாய்ச் சொல்லியிருப்பதை வாசிக்கிறோம். இதைக்கொண்டு திட்டமான ஒரு அட்டவணையை எழுதுகிறது கடினம். ஆனாலும் பின்வரும் அட்டவணை சற்றேறக்குறைய சரியாயிருக்கும்

1. கல்லறையிலிருந்து திரும்பிவந்த ஸ்திரீகளுக்கு. மத் 28^{8-10}.

2. அதேநாளில் மகதலேனா மரியாளுக்கு. யோவா 20^{11-18}.

3. உயிர்த்தெழுந்தநாளில் எருசலேமில் பேதுருவுக்கு. லூக் 24^{34} 1 கொரி 15^{5}.

4. அன்று சாயங்காலம் எம்மாவுக்குச் சென்ற இரண்டு சீஷருக்கு. லூக் 24^{13-35} மாற் $16^{13, 14}$.

5. அன்று எருசலேமில் பத்து அப்போஸ்தலருக்கு. மாற் 16^{14-18} லூக் 24^{36-49} யோவா 20^{19-23} 1 கொரி 15^{5}.

6. ஒரு வாரத்துக்குப் பின்பு எருசலேமில் பதினொரு அப்போஸ்தலருக்கு. யோவா 20^{26-29}.

7. கலிலேயாக் கடலருகே சில சீஷருக்கு. யோவா 21^{1-23}.

8. ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கு. 1 கொரி 15^{6}. ஒருவேளை மத் 28^{16-20}.

9. யாக்கோபுக்கு. 1 கொரி 15^{7}.

10. பரலோகம் செல்லுமுன் எருசலேமில் அப்போஸ்தலருக்கு. லூக் 24^{50-52} அப் $1^{3, 8}$ மாற் 16^{19}.

இவைகளைத்தவிர இன்னும் அநேக தரிசனங்கள் இருந்திருக்குமென நினைக்க இடமுண்டு.

இந்த அத்தாட்சி எல்லாம் சுத்தப் பொய் என்று இந்நாட்களில் கிறிஸ்துமார்க்க விரோதிகள்கூடச் சொல்லமாட்டார்கள். சில சீஷருக்கு ஏதோ ஒரு காட்சி காணப்பட்டதென்பது நிச்சயம். ஆனால் சீஷர்களுடைய மனதில் அதிக மலைவு இருந்ததால், அவர்கள் தாங்கள் இயேசுவைக் கண்டதாக நினைத்தார்கள் என்பது சிலருடைய உத்தேசம். என்றாலும் உலக சரித்திரத்தில் இவ்வளவு ஆசீர்வாதமான கிரியைகளை நடப்பித்தது எதுவோ, அது சிலருடைய மயக்கத்திலிருந்து உண்டாயிற்று என்று சொல்லுகிறது அதிக கஷ்டம். மேலும், ஏன் மூன்றாம் நாளில் எழுந்தாரென்று சொல்லியிருக்க வேண்டும்? மூன்றாம் நாளைக் குறித்து அப்போஸ்தலர்களெல்லாரும் கொடுத்த சாட்சி அதிக திட்டமாயிருக்கிறது. இயேசு உயிரோடு எழுந்திருக்கவில்லையென்று நினைக்கிறவர்கள், அவர் எழுந்தாரென்கிற தப்பிதமான சரித்திரம் எப்படி உண்டானதென்று விளக்கிக் காட்டும்படி எவ்வளவுதான் பிரயாசப்பட்டபோதிலும், அது அவர்களால் முடியவில்லை.

இயேசுவின் உயிர்த்தெழுதலின் அத்தாட்சியை நாம் சீர்தூக்கிப் பார்க்கையில், மூன்று விஷயங்களை நாம் மறக்கக்கூடாது.

முதலாவது, இது ஒரு சாதாரண மனிதனுடைய உயிர்த்தெழுதல் அன்று; இது இயேசுவின் உயிர்த்தெழுதல். ஏரோது அரசன் அல்லது ஒரு சாமானியமான மனிதன் எழுந்தானென்றால் அது அசாத்தியம். ஆனால் இயேசு உயிரோடிருந்தபோது, அவர் நடந்துகொண்ட விதத்தையும், அவர் நடப்பித்த கிரியைகளையும் கவனித்தவர்கள் அவர் மரணத்தினால் கட்டப்படுதல் கூடாத காரியம் என்று உணர்ந்தார்கள். அவ்வுணர்ச்சியே அவர் எழுந்திருந்தாரென்னும் நம்பிக்

கைக்கு ஒரு முகாந்தரமாயிற்று; உயிர்த்தெழுதலை நம்பமாட்டோம் என்று சொல்லுகிறவர்கள் இவ்விஷயத்தை அடிக்கடி மறந்துவிடுகிறார்கள்.

இரண்டாவது, அப்போஸ்தலர்கள் இவ்வுயிர்த்தெழுதலை மனிதருக்குச் சொல்லிமுடியாத சந்தோஷத்தைக் கொடுக்கிற சுவிசேஷமாகக் கூறினார்கள். உயிர்த்தெழுதல் விருதாவாய் நடந்தகாரியம் அல்ல, அது மனிதருடைய இருதயத்துக்கும், மனச்சாட்சிக்கும் மேன்மையான பொருளைத் தரக்கூடியது. உயிர்த்தெழுதலும் அதின் நோக்கமும் சேர்ந்து மனிதருக்குத் தேவனுடைய அழைப்புப்போலக் காணப்பட்டது. பாவமன்னிப்பு வேண்டாமென்றும்; செத்தபிறகு கணக்குக் கொடுக்கப்போகிறதில்லையென்றும்; இயேசு சிலுவையில் மரித்துப்போய் உயிர்த்தெழுந்திருக்கவில்லை எனச் சாதிக்கிறதினால் நஷ்டமென்ன என்றும் சொல்லக்கூடிய மனுஷன் இருப்பான் ஆகில், அவன் உயிர்த்தெழுதலை ஒருநாளும் நம்ப முடியாதுதான். அதினுடைய அத்தாட்சியையும் அவனால் சீர்தூக்கிப் பார்க்க முடியாது. இப்படிச் சொல்லும்போது, அந்த அத்தாட்சி பலமற்றதென்று ஒப்புக்கொள்ளுகிறோமா? இல்லையே. கர்த்தரைக் கண்டிருக்கிறோம் என்று சொன்னவர்களுடைய சாட்சியே எல்லா அத்தாட்சிக்கும் மூலாதாரம். அவ்வத்தாட்சி மிகவும் பலமானதே. ஆனாலும் யார் யார் அந்த விஷயத்தில் மனிதருடைய இரட்சிப்புக்குரிய பெரிய காரியங்கள் அடங்கியிருக்கின்றனவென்று கண்டிருக்கிறார்களோ, அவர்களே அதினுடைய அத்தாட்சியைச் சரியாய் மதிக்கக்கூடியவர்கள். உயிர்த்தெழுதலானது அர்த்தமும் பிரயோஜனமும் அற்ற ஒரு சம்பவமென்றால், வேறெந்த அத்தாட்சியும் நமக்குப் போதுமானதாகத் தோன்றாது.

மூன்றவது, இயேசு உயிர்த்தெழுந்தாரென்று நம்பினவர்கள் அதினால் மனம் திரும்பின விதத்தையும், அவர்களுக்கு வந்த ஆத்தும பலத்தையும், அவர்கள் அதினால் செய்த கிரியைகளையும், ஸ்தாபித்த திருச்சபையையும் கவனிக்கிறவர்கள், இவைகளெல்லாம் ஒரு பொய்யான கதையாலாவது, நாலுபேருடைய மயக்கத்தாலாவது உண்டாயிருக்குமா என்று கேட்பார்கள். ஏற்கனவே நாம் சொல்லியபடி, உயிர்த்தெழுதலுக்கு முக்கிய அத்தாட்சி யாதெனில், நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிற மிதமில்லாத புது ஜீவனே. உயிர்த்தெழுதலுக்குரிய வல்லமை சன்மார்க்க கிரியைகளை நடப்பிக்கிறதென்று மனிதர் பூர்வீகத்திலிருந்தே கவனித்து, பின்பு அதற்கு இருக்கும் மற்ற அத்தாட்சிகளைச் சீர்தூக்கிப் பார்த்து, அதை நம்பியிருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் குணத்திலே மாறுதல் அடைந்ததும், திருச்சபை உண்டானதுமே உயிர்த்தெழுதலுக்கு முக்கிய அத்தாட்சி.

இம்மூன்று விஷயங்களையும் மனதில் வைத்துக்கொண்டு, நாம் நூல்களில் காண்கிற அத்தாட்சியைச் சீர்தூக்கிப் பார்த்தால், அது நமக்குப் போதுமானதாகத் தோன்றும்.

அது போதுமெனத் தோன்றினும், நமக்குச் சுவிசேஷங்களிலுள்ள சரித்திரங்கள் எல்லாம் ஒற்றுமையுடையதாகத் தோன்றுமெனச் சொல்லக்கூடாது. சில விவரங்களில்மாத்திரம் வித்தியாசங்களிருந்தாலும், அதினால் அத்தாட்சி பலம் அற்றுப்போகாது. ஏனென்றால் அநேகர் ஒரு காரியத்தைப் பற்றி உண்மையான சாட்சி கூறும்போது, சில வித்தியாசங்கள் இயல்பாய் வரும். அவர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு கதையைக் கட்டினால்தான் யாதொரு வித்தியாசமும் தோன்றாது. அப்படியிருக்க நாம் நாலு சுவிசேஷங்களில் வாசிக்கிற சரித்திரங்களில் இம்மாதிரிச் சிறு விஷயங்களைக்குறித்து மாத்திரமல்ல, சில பெரிய விஷயங்களைக்குறித்தும் பேதங்கள் காணப்படுகின்றன. நாம் வாசிக்கிற விவரங்களையெல்லாம் இணைத்து இசைவாகவும் தொடர்பாகவும் சரித்திரத்தைச் சொல்லுகிறது அரிது. இது அநேகருக்குப் பெரிய ஆட்சேபனையாகத் தோன்றும். ஆனால் முதலில் தரிசனங்கள் காணப்பட்ட நாட்களில் எல்லாருக்கும் அதிக பிரமிப்பும் மனவெழுச்சியும் இருந்திருக்குமென்பது நிச்சயம். இப்போதுள்ள சுவிசேஷங்கள் அந்நாட்களுக்கு இருபது அல்லது முப்பது வருஷங்களுக்குப் பிந்தி எழுதப்பட்டபடியால், அந்நாட்களில் நடந்த சம்பவங்களின் விவரத் தொடர்ச்சியை நுட்பமாய் அறிய முடியவில்லை. மேலும் நாம் சுவிசேஷ சரித்திரங்களை இன்னும் ஆராயும்போது கண்ட தரிசனங்களை எல்லாம் ஒன்று தவறாமல் பதிவுசெய்வது எழுதினவர்களுடைய நோக்கம் அல்ல என்று பார்ப்போம். இயேசு உயிரோடெழுந்தாரென்றும், அவர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானாரென்றும், உலகமெங்கும் போய்த் தமக்கு எல்லோரையும் சீஷர்களாக்கும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டாரென்றும் சொல்லுகிறது அவர்கள் நோக்கமேயொழிய, எந்த ரூபத்தோடு தரிசனமானாரென்பதையும், எவ்வெவ்விடங்களில் யார் யாருக்குத் தரிசன

மாஞரென்பதையும் சகல விவரங்களோடும் நுட்பமாய் எழுதிவைக்கவேண்டுமென்பது அவர்கள் எண்ணம் அல்ல. அதற்குத்திருஷ்டாந்தமாக, லூக் 24-ம் அதிகாரத்தை வாசித்தால், உயிர்த்தெழுந்த நாளிலேயே இயேசு எம்மாவுக்குப் போன சீஷர்களுக்கும், சீமோனுக்கும், பன்னிருவருக்கும் தரிசனமாகி, தம்மைப்பற்றிய வேதவாக்கியங்களை விளக்கிக் காட்டி, அப்போஸ்தலர்களைப் பெத்தானியாவண்டையில் நடத்தி, அங்கே அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகஞ் சென்ருரென்று நினைப்போம். ஆனுலும் லூக்கா அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தில் வேறேவிதமாக எழுதியிருக்கிருன். அதிலே உயிர்த்தெழுதலுக்கு ஆறு வாரத்துக்குப் பிறகுதான் இயேசு பரலோகஞ் சென்ருரென்று எழுதியிருக்கிறது. இவ்விரண்டிற்கும் பொருத்தமுண்டென்று லூக்கா நினைத்திருக்கவேண்டும். ஒருவேளை சுவிசேஷத்தை வாசித்தவர்கள் அதை நடபடிகளின் புஸ்தகத்தோடு சேர்த்து எப்போதும் வாசித்திருப்பார்கள். அவர்கள் எல்லாரும் லூக் 24-ம் அதிகாரத்தில் இச் சரித்திரங்களில் சொல்லியிருப்பதைக் கண்டிருப்பார்கள். லூக்கா தான் நடபடிகளின் புஸ்தகத்தில் விவரித்துச் சொல்லப்போகிற காரியங்களைச் சுவிசேஷத்தின் 24-ம் அதிகாரத்தில் சுருக்கிச் சொல்லியிருக்கிருன். உயிர்த்தெழுதல் நடந்தது யதார்த்தமல்லவென்று சொல்ல இதிலே யாதொரு நிமித்தமுமில்லை. அதேபிரகாரமாக இயேசு தம்முடைய சீஷர்களுக்குத் தரிசனமான இடங்களைக்குறித்து நமக்கு மற்றப்படி விளங்காமலிருக்கிற காரியங்களை விளக்கிக் காட்டலாம். மத்தேயு சுவிசேஷத்தில் நாம் வாசிக்கும்போது (26^{32} 28^{7} 28^{10} 28^{16}), அப்போஸ்தலர்கள் கலிலேயாவுக்குப் போய் அங்கே மாத்திரம் கர்த்தரைக் கண்டார்களென்று நினைப்போம். மாற்கு சுவிசேஷம் சரியானபடி முடிகிறதாய்க் காணப்படுகிறதில்லை. அது 16^{8}-ம் வசனத்தோடு முடிந்துபோகிறது. ஆயினும் மாற் 16^{8}-ம் வசனத்தை வாசிக்கும்போது மாற்குவும் தரிசனங்கள் கலிலேயாவிலே நடந்தனவென்றும் மத்தேயுவைப்போல எழுதியிருப்பானென்று நினைக்கவேண்டும். லூக்கா தன் சுவிசேஷத்தை எழுதினபோது மாற்கு சுவிசேஷத்தை நன்ருய் அறிந்துதான் எழுதிஞனென்பது சுவிசேஷங்களை நுட்பமாய் ஆராய்ச்சி செய்த வேதசாஸ்திரிகளுடைய கருத்து. ஆனுலும் இதுவரைக்கும் தரிசனங்கள் கலிலேயாவில் நடந்தனவென்று எழுதியிருக்கிற நூலை நன்ருய் அறிந்த இவன் தான் குறித்திருக்கிற தரிசனங்களெல்லாம் எருசலேமிலேயே நடந்தனவென்று எழுதியிருக்கிருன். லூக்கா கலிலேயாவில் கண்ட தரிசனங்களைக் குறித்துப் பேசாமல், எருசலேமில் கண்ட தரிசனங்களைக் குறித்துமாத்திரம் எழுதியிருக்கிருன். முதலில் நாம் இதைப் பார்க்கும்போது, இதில் ஏதோ ஒரு பெரிய தப்பிதமிருக்கிறதென்று நினைப்போம். ஆனுலும் மேற்சொல்லியபடி, உயிர்த்தெழுதலை நம்பின நாலு சுவிசேஷகர்கள் உயிர்த்தெழுதலை நம்பின கிறிஸ்தவர்களுக்கென்றே தங்கள் சுவிசேஷத்தை எழுதினபோது, எல்லாம் விவரமாய் எழுதாமல், சரித்திரத்தை அதிகமாகச் சுருக்கி, தங்களுக்கு முக்கியமாகத் தோன்றின காரியங்களைமாத்திரம் தெரிவித்தார்கள். அந்தச் சுவிசேஷகர்களுக்கு முக்கியமாய்த் தோன்றின காரியங்கள் எவையென்று சுவிசேஷ சரித்திரங்களில் நாம் பார்க்கலாம். அவையாவன: இயேசு சில சீஷரைப் பணிவிடைக்கென்று தெரிந்துகொண்டு, அவர்களோடு மூன்று வருஷகாலஞ் சஞ்சரித்து, அவர்களுக்குப் போதித்து, அவர்களைத் தமக்குப்பிறகு தேவ தொண்டை நடத்தும்படி நியமித்திருந்தார் என்பதும்; அவர்களுக்கே அவர் தரிசனமாகி, அவர்களுக்கு உயிர்த்தெழுந்ததின் அர்த்தத்தைக் காண்பித்தாரென்பதும்; அவர் திவ்விய மகிமையுள்ளவரும், தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவருமாஞரென்று அவர்கள் உணர்ந்தார்களென்பதும்; அவருக்குச் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், பூலோகம் எல்லாவற்றையும் தமக்கு ஆதாயப்படுத்தும்படி அப்போஸ்தலர்களாகிய அவர்களை எங்கும் அனுப்பிஞரென்பதுமே. மற்ற விவரங்களில் சில வித்தியாசங்களிருந்தாலும், இந்த முக்கியமான காரியங்களைச் சுவிசேஷகர்கள் எல்லாரும் தெரிவித்திருக்கிருர்கள். இந்நோக்கத்திஞல் அவர்கள் பல தரிசனங்களை ஒன்ருய்த் திரட்டி, ஒரே தரிசனத்தைப்போலக் குறித்திருப்பார்களென்று நாம் உத்தேசிக்கலாம். அப்படித் திரட்டிவைத்திருக்கிற அத்தரிசனம் மத்தேயுவும் மாற்குவும் கலிலேயாவில் அருளப்பட்டதாகச் சொல்லுகிருர்கள். லூக்காவோ எருசலேமில் அருளப்பட்டதாகச் சொல்லுகிருன். யோவான் அது எருசலேமில் அருளப்பட்டதாகச் சொல்லி, பிறகு கலிலேயாவில் உண்டான இன்னொரு தரிசனத்தையும் தெரிவிக்கிருன். இயேசு தரிசனந் தந்த இடத்தையும் காலத்தையும் நுட்பமாய் எழுதுவது அவர்கள் நோக்கம்

அன்று. அவர் எழுந்து, சீஷர்களுக்குத் தரிசனமாகி, அவர்கள் பூலோகம் எங்கும் போய் அவரைப் பிரசங்கிக்கவேண்டுமென்று கட்டளை கொடுத்தார் என்பதைப் பதிவு செய்வதுதான் அவர்களுடைய நோக்கம். நாம் அவர்களைப் பார்த்து, உயிர்த்தெழுதலைப் பற்றி நீங்கள் எழுதிய சரித்திரங்களில் சில விவரங்களைச் சரியாய் எழுதவில்லை என்று சொன்னால் 'ஆம், இருக்கலாம்' என்று ஒப்புக்கொண்டிருப்பார்கள். அதினால் அவர்கள் உயிர்த்தெழுதலைப்பற்றிக் கொடுத்த சாட்சிக்கு யாதொரு பலக்குறைவும் இல்லை.

புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிற கிறிஸ்தவ மார்க்கம் உயிர்த்தெழுதலில்லாமல் கட்டப்பட்டிருக்க முடியாது. உயிர்த்தெழுதலே கிறிஸ்தவமார்க்கத்துக்கு அஸ்திபாரம் என்று சொல்லுகிறதில்லை. இயேசுவின் ஜீவியமும் ஊழியமும், அற்புதங்களும், பாடுகளும், உயிர்த்தெழுதலும் எல்லாம் ஒன்று சேர்ந்து தான் கிறிஸ்தவமார்க்கத்தின் அஸ்திபாரம் ஆனபோதிலும், அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரி 15^{14-17}-ல் சொன்னது இந்நாள் வரை மெய்யான வார்த்தைதான். 'கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்றால், எங்கள் பிரசங்கமும் விருதா. உங்கள் விசுவாசமும் விருதா....நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களி லிருப்பீர்கள்.' இப்படியிருக்க உயிர்த்தெழுதலின் அத்தாட்சி அசைக்கக்கூடாதென்கிற உணர்ச்சி நமக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறது. நாம் கர்த்தரைக் கண்டிருக்கிறோம் என்று சொன்னவர்கள் மாறுதல் அடைந்து, புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்களில் காணப்படுகிற அற்புதமான ஆத்தும ஜீவனடைந்தவர்களாய், கிறிஸ்தவ சபையை ஸ்தாபித்தார்கள். உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இந்நாள்வரைக்கும் அற்புத கிரியைகளை நடத்திவருகிறது.

இயேசுகிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றிப் புதிய ஏற்பாட்டிலுள்ள கோட்பாடுகள். The Christology of the New Testament. இயேசுகிறிஸ்து அவதரித்த காலத்தில் அவர் யார், அவருக்கும் பிதாவுக்கும் இருக்கிற சம்பந்தம் என்ன, அவருக்கும் மனிதருக்கும் இருக்கிற சம்பந்தம் என்ன, இத்தியாதி காரியங்களைக்குறித்து அவருடைய சொந்த மனதிலும் ஆதி கிறிஸ்தவர்களுடைய மனதிலும் இருந்த எண்ணங்களை எடுத்துக் காட்டுவது இங்கு எமது நோக்கம்.

இவ்விஷயத்தை நாம் பின்வருமாறு பிரித்து ஆராய்ந்தால் அது தெளிவாய் விளங்கும்:—I. முதல் மூன்று சுவிசேஷங்களிலுள்ள கோட்பாடுகள். II. அப்போஸ்தலர்கள் திருச்சபையை ஸ்தாபித்தகாலத்தில் போதித்த போதனை; இதற்கு அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தில் குறித்திருக்கிற பேதுருவின் பிரசங்கங்கள் திருஷ்டாந்தம். III. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய நிருபங்களில் குறித்திருக்கிற கோட்பாடுகள். IV. எபிரெயர் நிருபத்தின் கோட்பாடுகள். V. வெளிப்படுத்தின விசேஷத்தின் கோட்பாடுகள். VI. யோவான் சுவிசேஷத்தின் கோட்பாடுகள். VII. முடிவுரை.

I. முதல் மூன்று சுவிசேஷங்களின் கோட்பாடுகள்.

(*a*) **ஆண்டவருடைய மனுஷீகதன்மை:—** முதல் மூன்று சுவிசேஷங்களில் இயேசு மெய்யான மனுஷீகதன்மை யுடையவராகக் காணப்படுகிறார். அவர் சரீரத்திலும், புத்தியிலும், இயற்கையாய் வளர்ந்து, பசியும் தாகமும் அடைந்து, உபத்திரவங்களைச் சகித்து, மற்ற மனிதரைப்போல மரணத்தறுவாயில் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டிய ஆவியை யுடையவராயிருந்தார். சந்தோஷம், துக்கம், சமாதானம், அன்பு, கோபமாகிய உணர்ச்சிகள் எல்லா மனிதருக்கு மிருப்பது போலவே, அவருக்கு மிருந்தன. தாம் செய்துவந்த ஊழியத்துக்குப் பலத்தைப் பெறவும், பிதாவினால் நடத்தப்படவும், அவர் தாழ்மையாய்ப் பிரார்த்தனை செய்துவந்தார். தம் வல்லமையைத் தமக்காக உபயோகிக்க அவருக்கு உண்மையான சோதனைகள் நேர்ந்தன. சாதாரண இயற்கை விஷயங்களைக் குறித்து அவர் இருந்த தேசத்திலும் காலத்திலும்வழக்கமாயிருந்த அபிப்பிராயங்கள் அவருக்கு மிருந்தன. சாதாரண மனிதரைப்பார்க்கிலும் அவர் பிறருடைய உள்ளத்தை ஊன்றிப் பார்த்து அறிந்தாராயினும், சகலத்தையும் அறிகிற அறிவு அவருக்கு இருக்கவில்லை. மாற் 13^{32}. காரியங்களை அறியக் கேள்விகளைக் கேட்பார். சிலபோது ஆச்சரியப்பட்டுத் தமது ஆச்சரியத்தை வெளியிடுவார். அத்திமரத்தில் கனியிருக்குமென்றெண்ணி அவர் அதன் கிட்டப்போனபோது அதில் கனி யிருக்கவில்லை. மாற் 7^{34} மத் 14^{19} 21^{18} லூக் 11^{20}. முதலிய வசனங்களைப் பார்க்கும்போது, அவர் செய்த அற்புதங்களைத் தமது சொந்த சர்வவல்லமையால் செய்யாமல், கடவுளிடம் தாம் வைத்த விசுவாசத்தால் செய்தாரென நாம் நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இயேசு அவதார புருஷனாய் வந்தகாலத்தில் அவருக்கு மனுஷ சித்

தம், தெய்வ சித்தமாகிய இரண்டு சித்தங்களு மிருந்தனவென்று சிலர் உத்தேசிக்கிறார்கள். அப்படி உத்தேசிக்க இச்சுவிசேஷங்களில் யாதொரு அத்தாட்சியும் காணேம். உயிர்த் தெழுதலுக்குப் பிந்தி அவருக்கிருந்த மகிமை அதற்கு முந்தியு மிருந்திருக்குமென்று தப் பிதமாக நினைத்ததனாலே, அவ்வெண்ணம் உண்டாயிருக்கவேண்டும். அவதாரமாய் வந்த தேவகுமாரன் இப்புவியில் எந்த மனிதருக் கும் பொதுவாயிருக்கிற சுபாவத்தைப் பெற் றுக்கொண்டார்.

(*b*) **மேசியாவைப்பற்றியது:**—மேசியா அல்லது கிறிஸ்து என்கிற பேர் யூதருக்கு நன்றாய்த் தெரியும். இரண்டாம் சங்கீதத் தை வாசிப்பதினாலே இப்பதம் அவர்களுக் குப் பழக்கமாயிருக்கலாம். தமிழ் வேதபுஸ்த கத்தில் சங் 2²-ல் 'அவர் (கர்த்தர்) அபிஷே கம்பண்ணினவர்' என்பது மூலபாஷை யில் 'மேசியா' என்றும், கிரேக்கு மொழி பெயர்ப்பில் 'கிறிஸ்து' என்றும் விளங்கும். பரம ராஜ்யத்துக்குத் தலைவர், மீட்கப்பட்ட ஜனத்தின் புதிய அரசன் என்கிறதுதான் அக்காலத்தில் இப்பதத்தின் தாற்பரியம். இயேசு அப்பெயரைச் சொல்லி, தம்மு டைய போதனையால் அதற்கு இருக்கிற அர்த்தத்தைப் புதுப்பித்து, 'ஆவிக்குரிய இரட்சிப்பைக் கொடுக்கிறவர்' என்கிற பொருளை அதற்குக் கொடுத்தார். ஆகை யால் அவர் தமது தொண்டின் ஆரம்பநாட் களில் தம்மை மேசியாவென்று யாருக்கும் வெளியிடவில்லை. பிலிப்புச் செசரியாவின் திசைகளில் அவர் அதைக்குறித்துத் தமது சீஷரோடு பேசினபோது, பேதுரு செய்த அறிக்கையை அவர் மிகவும் புகழ்ந்தபோதி லும், காய்பாவுக்கு முன்பாக நின்ற சமயத் திலேதான் அவர் முதலாவதாக எல்லாருக்கு முன்பாகத் தம்மை மேசியாவென்று பகி ரங்கமாக வெளியிட்டாரென்று தோன்று கிறது. யோவான்ஸ்நானன் கேட்ட கேள் விக்கு இயேசு (மத் 11²⁻⁶) கொடுத்த பதிலைப் பார்த்தால், மேசியாவினுடைய தொழில் இன்னதென்று நாம் பார்க்கலாம். ஆனல் மேசியா என்கிற அந்தப் பழைய பேருக்கு அவர் நூதனமும் மேன்மையுமான பொரு ளைக் கொடுத்தார். தீர்க்கதரிசிகள் ஆதியில் மேசியாவைக் குறித்து என்ன உரைத்தனர் களோ, அவையெல்லாம் அவர் நிறைவேற் றினதோடு, பழைய பெயரில் அடங்காத பல காரியங்களைச் சம்பந்தப்படுத்தினர். ஏசா 53-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பாடு படும் தேவனுடைய தாசனைக் குறித்து அதிக மாய்த் தியானஞ்செய்து, மேசியா உண்மை யாக யூத ஜனத்தை இரட்சிக்கும்பொருட்டு அப்படியே பாடுபட நேரிடுமென்று உணர்ந் தார். ஆகையால் பழைய பெயரில் வைத்த புதிய அர்த்தங்கள் பழைய துருத்தியில் ஊற் றின புதிய ரசத்தைப்போலிருந்தன. ஆனு லும் பழைய பெயர் இன்னும் வழங்கப் பட்டு, கடவுள் தமது ஜனங்களைத் தீமையி லிருந்து மீட்டுக்கொள்ளுகிறதற்கு ஒரு இர ட்சகரை அனுப்பியிருக்கிறார் என்கிறதற் குச் சாட்சி பகருகிறது.

(*c*) **மனுஷகுமாரன்:**—ஆண்டவர் தம்மைக் குறித்துத் தாம் பிரியமாய் வழங்கிவந்த பெயர் இது. ஏறக்குறைய 40 விசை இந்தப் பெய ரால் தம்மைக்குறித்து வழங்கினதை நாம் சுவிசேஷங்களில் பார்க்கிறோம். எந்த அர்த் தத்தோடு இதைச் சொன்னாரென்று திட் டமாகச் சொல்லுகிறது கஷ்டமானபோதி லும், அப்பெயரைக்குறித்து இரண்டொரு விஷயங்கள் தெளிவாயிருக்கின்றன. தானி 7¹³·¹⁴-ல் சொல்லப்பட்ட மனுஷ குமாரனை மூலாதாரமாக வைத்து, மனுஷ குமாரன் என்கிற பெயரால் இனி மகிமை யையும் ராஜ்யத்தையும் அடையப்போகிற மனுஷீக தன்மையைக் குறித்தார். பிறகு அவர் அருளிய அநேக உபதேசங்களால் அதற்குப் 'பாடுபடும் பிரதிநிதியாகிய புரு ஷன்' என்பதுபோன்ற அநேக தாற்பரியங் களை அந்தப் பெயரில் அடக்கிவைத்தார். அந்தப் பெயரைக் கேட்டவர்கள் உடனே மேசியா என்கிற அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளமாட்டார்கள். இல்லாவிட்டால் நாம் மத் 16¹³-ல் வாசிக்கிற கேள்வி வீண் கேள்வி யாகும். கேட்டவர்களுடைய காதில் அது எப்போதும் ரகசியமான அர்த்தமுள்ள ஒரு பெயராக விழுந்தது. அவர் மனிதருடைய யோசனையைத் தூண்டுகிறதற்கு இலேசாய் அர்த்தம் விளங்காத உவமைகளைக்கொண்டு எப்படிப் பேசினரோ, அதே நோக்கத்தோடு அப்பெயரைச் சொன்னர் என்று தோற் றுகிறது. அப்பெயர் நமக்கும் அவருக்கும் பொதுவாயிருக்கிற மனுஷ சுபாவத்தைக் குறித்தபோதிலும், அவர் நம்மைக்காட்டி லும் பெரியவர் என்று குறிப்பாக நினைப் பூட்டுகிறது. அவர் மனுஷரைப்போலத் தாழ் ந்த நிலைமையுள்ளவர் என்று சொல்வதுடன், இனி அவருக்கு வரப்போகிற மேன்மை யையும் அது காட்டுகிறது. இப்படியாகப் பாடுகளின் மூலமாகவே மகிமையை அடை கிறவர் என்னும் பொருள் மனுஷகுமாரன் என்கிற பெயரில் படிப்படியாய் விளங் கினது.

(*d*) **தேவனுடைய குமாரன்:** — கிறிஸ்தவர்களாகிய நமக்கு இப்பெயரில் அடங்கிய மேலான பொருளானது, அதை முதலில் சொல்லுகிறவர்களுக்குத் தெரியவில்லை. பிசாசு பிடித்தவர்கள் (மாற் 3^{11}); விசுவாசியாத யூதர்கள் (மத் 27^{40}), நூற்றுக்கதிபதி (மாற் 15^{39}), காய்பா (மத் 26^{63}) முதலாயினோர் மேசியா என்கிற பொருள்படமாத்திரம் அதை வழங்கிவந்தார்கள். அவர் ஞானஸ்நானம் அடைந்தபோது அவரை நேசகுமாரன் என்று பிரஸ்தாபப்படுத்தின வார்த்தை, சங் 2^{7}-ஐப் போலவே இருந்தமையால், மேசியா என்பதுதான் அதின் அர்த்தமெனப் புலப்படும். பழைய ஏற்பாட்டில் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனத்திற்கும், அவர்களை ஆண்டு அவர்களுக்குப் பிரதிநிதியாய் யேகோவாவினால் நியமிக்கப்பட்ட அரசனுக்கும், இனி வரப்போகிற சம்பூரணமுள்ள அரசனுக்கும் தேவகுமாரன் என்னும் பெயர் வழங்கப்படுகிறது. குமாரனென்றால் பிதாவினுடைய மகிமையையும், வல்லமையையும் சுதந்தரித்துப் பிதாவினுடைய முழு அன்பையும் அநுபவித்துக்கொண்டிருக்கிறவர் என்பதாம். இரண்டாவது சொல்லப்பட்ட அந்த உள்ளான விஷயந்தான் இயேசுவின் மனதில் அதிகமாயிருந்தது. முதல் மூன்று சுவிசேஷங்களின்படி அவர் தம்மைக்குறித்துத் தேவனுடைய குமாரன் என்னும் பேரை வழங்கவில்லை. ஜனங்கள் தம்மை மேசியாவென்று முதலில் அறியவேண்டாமென்று அவர் விரும்பினது அதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். அவர் தமது தத்துவத்தைக் காட்டும்போது வெறும் 'குமாரன்' என்கிற வார்த்தையை உபயோகித்ததற்கு அத்தாட்சியுண்டு. அவ்வார்த்தை மூன்று விசேஷித்த இடங்களில் (மத் 11^{27} 28^{19} மாற் 13^{32}) சொல்லப்பட்டது மாத்திரமன்று; திராட்சத் தோட்டத்தைப்பற்றிய உவமையிலும் (லூக் 20^{9-17}), வரியைக்குறித்து அவர் பேதுருவிடம் கேட்ட கேள்வியிலும் (மத் $17^{25, 26}$), தாவீதினுடைய குமாரனைப்பற்றியும், தாவீதினுடைய ஆண்டவரைப்பற்றியும், அவர் வேதபாரகரோடு பண்ணின சம்பாஷணையிலும் (மத் 22^{41-45}) அந்த வார்த்தை குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கிறது. மேற்கூறியதைவிட உறுதியானது யாதெனில், அவர் கடவுளை நோக்கி 'என் பிதாவே' என்று சொல்லுகிற வழக்கம் (மத் 7^{21} 10^{32} 12^{50} முதலிய இடங்களைக் கவனிக்க) அவரை மற்றவர்களிலிருந்து பிரிக்கிறது. இதுசம்பந்தமாய் நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டிய இடம், மத் 11^{27}. 'சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனும்தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்.' இவ்வாக்கியத்திலே பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள சம்பந்தம் பூர்த்தியானதென்று பார்க்கிறோம். தீர்க்கதரிசிகளும் பரிசுத்தவான்களும் பூரணமாய் அறியாத பரமபிதாவை அவர் பூரணமாய் அறிகிறார். அவ்வித அறிவும் தரிசனமும் மற்றவர்களுக்கு அவர் மூலமாகவேயன்றி மற்றப்படி வராது. அதேபிரகாரமாக இயேசுவின் சுபாவமானது பிதாவுக்கேயன்றி, மற்றவர்களுக்குத் தெரிகிறதில்லை. மற்றவர்களுக்கும் கடவுளுக்கும் இருக்கமுடியாத நெருங்கிய ஐக்கியம் பிதாவுக்கும் குமாரனுக்கு முண்டு. கடவுளும் இயேசுவும் தங்கள் ஜீவனில் ஒன்றாகவே இருக்கிறார்கள். மனுமக்கள் இயேசுவின் மூலமாகவே தேவனுடைய புத்திரராகிறார்கள்

இயேசு தம்மைக் 'குமாரன்' என்றுணர்ந்த உணர்ச்சி அவருடைய முழு ஜீவியத்துக்கும் பணிவிடைக்கும் மூலாதாரமாக இருந்தது. அவர் தம்மை மேசியாவென்றும், பிறகு தேவன் தமக்குப் பிதாவென்றும், உணர்ந்து, தாமே தேவனுடைய குமாரனாயிருக்கிறபடியால் மேசியா செய்யவேண்டிய இரட்சிப்பின் கிரியைகளைச் செய்து, பரலோக ராஜ்யத்துக்குத் தலைவராக இருந்து, மனுஷகுமாரனாக வந்தாரென்று பார்க்கிறோம். எல்லாரிலும் அவர் மேன்மையான இயல்புள்ளவரானதினாலே, எல்லாரிலும் மேலான கிரியைகளைச் செய்து முடித்தார்.

(*e*) **இயேசுவுக்குத் தம்முடைய மேன்மையைப் பற்றியிருந்த எண்ணம்:** — மேற்சொன்ன பெயர்களினால் மாத்திரமன்று, இயேசு செய்த பல காரியங்களினாலும், பேசின பல வார்த்தைகளாலும், அவர் தம்மை மற்றெல்லா மனிதரைப்பார்க்கிலும் உயர்ந்தவராக உணர்ந்தாரெனப் பார்க்கிறோம். சாந்தமும் மனத்தாழ்மையு முள்ளவராகிய அவர் தமது நடத்தையில் சொல்லற்கரிய மேன்மை யுடையவராகக் காணப்பட்டார். அவருடைய சீஷர்களும், நாசரேத்து ஜெப ஆலயத்தில் கூடினவரும், பிசாசு பிடித்தவர்களுமாகிய யாவரும் இம்மேன்மையைக் கண்டார்கள். தாயைப்பார்க்கிலும் தம்மை நேசிக்க வேண்டுமென்று அவர் தமது சீஷர்களுக்குச் சொன்னபோது, அது அவர்களுக்கு அநியாயமாகத் தோன்றவில்லை. மத் 10^{37} லூக் 18^{29}. மேலும், அவர் அற்புதங்க

ளைச்செய்கிறவராயிருந்ததினால் அல்ல, அவர் சிறப்புற்ற அதிகாரமுள்ளவராகக் காணப் படுகிறதினாலே, அவரை இவ்வளவாய் மேன் மைப்படுத்தினார்கள். பரலோக ராஜ்யத்தின் திறவுகோலை வைத்துக்கொண்டு, அதில் பிர வேசிப்பவர்கள் யாரெனத் தீர்மானிக்க அதி காரமுடையவராகப் பேசினார். பூர்வீக நியா யப்பிரமாணம் விதித்திருந்த பல காரியங் களைத் தள்ளிவிட்டு, வருத்தப்படுகிறவர்கள் யாவரையும் தம்மண்டை அழைத்து, பாவத் தை மன்னிக்கிறதற்குத் தமக்கு அதிகார முண்டெனச்சொல்லி, திமிர்வாதக்காரனுக் கும் மரிக்கும் தறுவாயிலிருந்த குற்றவாளிக் கும் பாவமன்னிப்பை அளித்தார். கடவுள் மனிதரை எந்தமனதோடு பார்க்கிறார், அவர் எப்படி ஜெபத்தைக் கேட்கிறார், அவர் என் னத்தினாலே மனிதரை நியாயந்தீர்த்து பாவத் தைமன்னிக்கிறார், இத்தியாதி விஷயங்களில் கடவுளுடைய மனதைப் பூர்த்தியாய் அறிந் தவராகப் பேசினார். இவ்விஷயங்களைக் குறித்து ஒரு வினாடி நேரமாவது அவருக் குச் சந்தேக முண்டானதாகத் தோன்றுகிற தில்லை. அவர் பூமியில் வந்ததால் தீமையின் வல்லமை ஜெயிக்கப்பட்டாயிற்று; அவர் தமது மரணத்தால் அநேகரை மீட்டுக்கொள் ளுவார்; அவர் மரித்தோரிலிருந்து எழுந்து இனிமேல் உலகத்தை நியாயந்தீர்க்க வருவா ரென்கிற உணர்ச்சி எல்லாக் காலங்களிலும் அவருக் கிருந்தது. சீஷர்கள் அவருக்கும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட பெரி யோர்களுக்கும் வெகுதூரம் வித்தியாச மென்று உணர்ந்துகொண்டார்கள். மனிதர் தன்னுடைய நாமத்தை அறிக்கை செய்ய வேண்டுமென்று எந்தத் தீர்க்கதரிசி சொல்லி யிருந்தான்? எந்தத் தீர்க்கதரிசி சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறதென்று சாதித்தான்? இயேசு வோ, தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு இரட் சிப்பு இருக்கிறதென்றும், தமது நாமத்தி னாலே கூடிவருகிறவர்களின் மத்தியில் தாம் இருப்பதாக வாக்களித்தார். முதல் மூன்று சுவிசேஷங்களில் இயேசுவினுடைய மனு ஷீக தன்மையைப்பற்றி மாத்திரம் எழுதி யிருக்கிறதென்று சொல்லுகிறவர்கள் இக் காரியங்களைக் கவனியாமலிருக்கவேண்டும். இச்சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் தத்து வத்தைக்குறித்துத் திட்டமான போதனை யொன்றுமில்லையாயினும், அப்போஸ்தலர் கள் பிறகு கிறிஸ்துவின் தத்துவத்தைக்குறித் துத் தங்கள் பிரசங்கங்களில் சொன்ன காரி யங்கள் வாஸ்தவமாயிருந்தால்தான், மேற்கூ றிய விஷயங்கள் நமக்கு விளங்கும்.

II. அப்போஸ்தலர்கள் திருச்சபையை ஸ்தாபித்தகாலத்தில் போதித்த போதனை.

நடபடிகளின் புஸ்தகத்தில் குறித்திருக் கிற பேதுருவின் பிரசங்கங்களில் கிறிஸ்து வின் தத்துவத்தைக்குறித்துத் திட்டமான போதனை அவ்வளவு சொல்லப்படவில்லை. சீஷர்கள் அவரை இன்னாரென்று அறிவ தற்குச் சிலகாலஞ் சென்றது. பேதுரு இயேசுவைக்குறித்து முதலாவது பேசினதா வது, 'நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கை களையும், அற்புதங்களையும், அடையாளங் களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.' அப் 2[22]. அப்படியே கொர்நேலியுவின் வீட்டில், 'நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையி னாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்ல மையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கு கிறவராயும் திரிந்தார்' என்றான். அப் 10[38]. பேதுரு அந்த ஆரம்பநாட்களில் பிரசங்கித்த நற்செய்தியின் சுருக்கமானது: 'இந்த இயே சுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மே சியா; அதற்கு அவர் செய்த அற்புதங்களும், அவருடையஉயிர்த்தெழுதலும், அவர் மகிமை யோடு பரலோகஞ் சென்றதும் அத்தாட்சி' என்பதே. இவ்வாறு சொன்னபோதிலும் அந்நாட்களில் இயேசுவை வெறும் மனுஷ னாக அவர்கள் பாவித்தார்களென்று நாம் நினைக்கக்கூடாது. அவர் பிதாவினுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பரிசுத்த ஆவியைப் பெற்று அதைப் பொழிந்தருளி யிருக்கிறார். அப் 2[33]. அவரே உயிரோ டிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் பிதாவினால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி. அப் 10[42]. பிரசங்கிக்கப்படும் சுவிசேஷமெல் லாம் அவரைப்பற்றியதே; அவரையே விசு வாசிக்கவேண்டும்; அவரை நோக்கி மனந் திரும்பிப் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம்பெறவேண்டும். அப் 2[38]. அவருடைய நாமத்தினாலே, அதாவது வெளிப்பட்ட அவ ராலே இரட்சிப்பு கிடைக்கும். அப் 2[38] 3[16] 4[12] 10[43]. அவரை நோக்கி ஜெபம்பண்ணப் படுகிறது. அப் 1[24] 7[59] 9[14]. ஆகையால் விசுவா சிகள் அப்போது கிறிஸ்துவின் தத்துவத்தை வரையறுத்துப் பார்க்கிறதற்குப் பிரயாசப்ப டாமலிருந்தபோதிலும், அவரைச் சேவிக் கிறவர்களாயும் அவரை நம்புகிறவர்களாயு மிருந்தார்கள் என்பது தெளிவு. அவரோடு

புசித்துப் பானம் பண்ணினவர்கள், அவருடைய மரணத்தைக் கண்டவர்கள், அவரைப் பற்றி இவ்வித சிந்தனையுள்ளவர்களா யிருந்தார்கள்.

III. அப்போஸ்தலனாகிய பவுலினுடைய கோட்பாடுகள்.—பவுல் உலகத்தைப்பற்றி யோசித்த யோசனைக்கெல்லாம் கிறிஸ்துவே நடு மையம்; அவன் கிறிஸ்துவைப்பற்றி யோசித்த யோசனைக்கெல்லாம் இரட்சிப்பே நடு மையம். அவன் கிறிஸ்து மரித்து, எல்லாரையும் இரட்சித்திருக்கிறாரென்கிற நிச்சயத்தை மூலாதாரமாக வைத்துக்கொண்டு, அந்த நிச்சயத்திலிருந்து துவங்கி, அந்த தெய்வ புருஷன் யாராக இருக்கவேண்டுமென்று அனுமானிக்கிறான். அவர் எல்லாருக்காகவும் மரித்தவர் எல்லாரோடும் விசேஷித்த சம்பந்தமுடையவராக இருக்கவேண்டுமானதால், அவருடைய கிரியையும் அவருடைய தத்துவமும் பவுலினுடைய மனதில் ஒன்றித்திருக்கின்றன. இயேசு கர்த்தர் என்பதே பவுலினுடைய விசுவாசப்பிரமாணச் சுருக்கம். 1 கொரி 12[3] ரோ 10[9] பிலி 2[11]. மற்றவர்களைப்போல அவனும் முதலில் யூதருடைய மேசியாவைக்குறித்து எண்ணின போதிலும், அவன் சீக்கிரத்தில், இயேசு யூதருக்காக மாத்திரமல்ல, உலகத்தார் எல்லாருக்காகவும் வந்தவரென்கிற உணர்ச்சியை அடைந்தான். 'மனுஷகுமாரன்' என்கிற பெயரை ஒருதடவையாகிலும் வழங்காமல், 'தேவனுடைய ராஜ்யம்' என்னும் பெயரால் இயேசுகிறிஸ்துவினுடைய தத்துவத்தைக் குறிப்பாகக் காட்டுகிறான்.

1. நாலு சுவிசேஷங்களில் இயேசுவைக்குறித்து எழுதியிருக்கிற விவரங்களெல்லாம் பவுலுக்குத் தெரிந்திருக்கும். அவன் ஆண்டவருடைய வார்த்தைகளைப் பரம அதிகாரமுடையனவாக எண்ணி அவைகளை எடுத்துரைக்கிறான். ஆனபோதிலும் இயேசு செய்த அற்புதங்களைப்பற்றியாவது, அவர் மனுஷனாக மனிதர் மத்தியில் நடந்த விதத்தைப்பற்றியாவது பவுலின் நிருபங்களில் ஒன்றையும் காணோம். அவர் மனுஷனாய்ப் பிறந்ததும், பாவமில்லாதிருந்ததும், இராப்போஜனத்தை ஸ்தாபித்ததும், சிலுவையில் மரித்ததும், மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்ததுமாகிய இவைகளைமாத்திரம் பவுல் சொல்லுகிறான். மீட்பின் செயலைப்பற்றியும், அதினாலுண்டான சிலாக்கியங்களைப்பற்றியும் பவுல் முக்கியமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தபடியால், இயேசு மனுஷனாகச் செய்த காரியங்களைக்குறித்து அவன் பேசாமலிருந்தது ஆச்சரியமன்று. ஆயினும் இயேசு வாஸ்தவமாக மனுஷீக தன்மையுடையவரும் ஸ்திரீயினிடத்தில் பிறந்து, மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியாரில் ஒருவரும் என்பது பவுலின் விசுவாசம். ரோ 1[5].

2. மாம்சமும் இரத்தமுமாகிய சரீரத்தைத்தவிர, இயேசுவிடத்திலிருந்த விசேஷம் என்ன வென்றால், 'பரிசுத்தமுள்ள ஆவி.' ரோ 1[5]. அதுவே அவருடைய இயல்பை முற்றிலும் ஆண்டது. அன்றியும், அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்த சக்தியும் அதுவே.

3. பூமியில் இயேசு செய்த காரியங்களைக் குறித்துப் பவுல் அதிகமாய்ப் பேசாமலிருந்ததற்கு ஒரு காரணமிருந்தது. உயிர்த்தெழுந்த மகிமையுள்ள ஆண்டவரோடுதான் அவன் நாடோறும் சகவாசம் செய்தான். உலகத்தின் இரட்சிப்பு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவிடத்தினின்றே வருகிறதென்று பவுல் அதிகமாய் உணர்ந்து, 'நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்' என்று சொன்னான். 2 கொரி 5[16]. ஆனாலும் அவர் சொல்லும் மகிமையுள்ள கிறிஸ்து சிலுவையி லறையப்பட்ட கிறிஸ்துதான்; உலகத்தைத் தமது மரணத்தால் மீட்டுக்கொள்ளுகிற கிறிஸ்துதான். 2 கொரி 5[19]. பவுல் கிறிஸ்துவைப் பாவிக்கிறவிதமாவது: தமஸ்குவுக்குப் போகும் வழியில் இரட்சகர் தனக்குத் தரிசனமானதுபோல, அவர் கடவுளுக்கு அடையாளமாகிய பிரகாசமான ஜோதியில் வாசமாயிருக்கிறார்; அவர் தமது பாடுகளால் செய்த ஒப்புரவாக்குதலின் வேலையைப் பூரணப்படுத்தக் கூடிய ஸ்திதியை அடைந்திருக்கிறார். அவர் சபைக்கு நாயகன் மாத்திரமல்ல, பூரண சர்வ வல்லமையுமுடையவராகவும் இருக்கிறார். 'எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, தேவன் அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி இருக்கிறார். எபே 1[20-22]. அவருடைய மகிமை இவ்வளவாயிருந்தாலும், அது இனிமேல்தான் பூர்த்தி பெறப் போகிறது. பரலோகத்தி லிருக்கிறவைகளும் பூலோகத்தி லிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். எபே 1[9]. அவருடைய ஆளுகை அவருடைய இரண்

டாம் வருகையில் மேல் நிலைக்கு வரும். இந்த மகிமையுள்ள ஆண்டவர் விசுவாசிகளுக்கு எட்டாத அதிக உயரத்திலிராமல், அவர்களுடைய பக்கத்திலும் அவர்களுக்குள்ளுமிருந்து கொண்டு, மட்டில்லாத அன்போடும் வல்லமையோடும் அவர்களை நடத்தி, ஏவி, ஆற்றி, அனல் மூட்டிக்கொண்டிருக்கிறபடியால், பவுல் தான் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறதாகவும், தன்னுடைய ஜீவன் தன்னுடையதாயிராமல், தனக்குள்ளே வாசமாயிருக்கிற கிறிஸ்துவினுடைய ஜீவனா யிருக்கிறதாகவும் சொல்லுகிறான். கலா 2^{20}. பவுல் தன்னுடைய சபையாருக்காகப் பண்ணுகிற விண்ணப்பமாவது, விசுவாசத்தினாலே கிறிஸ்து அவர்களுடைய இருதயங்களில் வாசமாயிருக்கவேண்டு மென்பதே. எபே 3^{17}. பவுலுக்கும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கும் இருந்த சகவாசத்திற்கு 2 கொரி $12^{8,9}$ திருஷ்டாந்தமாகும். பவுல் பயபக்தியோடு தன் ஆண்டவரோடு ஐக்கியப்பட்டு, இயல்பாகவே அவரை நோக்கி விண்ணப்பம் செய்துவந்தான். அவன் ஏன் கிறிஸ்துவை இப்படி தேவனுடைய ஸ்தானத்திலிருப்பவராகப் பாவித்தான் என்றால், (a) கிறிஸ்து மனுஷஜாதிக்கு இரட்சகரானதினால், இரண்டாம் ஆதாம் என்கிற பேரில் குறித்திருக்கிறபடி அவருக்கும் மனிதர் எல்லாருக்கும் விசேஷித்தசம்பந்தமுண்டு. ஆதாம் மூலமாய்ப் பிறந்த மனுஷஜாதிக்கு ஆதாம் தலைவனும், பிரதிநிதியுமா யிருந்ததுபோல, கிறிஸ்து தமது மரணத்தாலும், உயிர்த்தெழுதலாலும் புதிதும் மீட்கப்பட்டதுமாயிருக்கிற மனுஷ ஜாதிக்குத் தலைவரும் பிரதிநிதியுமாயிருக்கிறார். ரோ 5 அதி. மனுஷருடைய வளர்ச்சி மாம்சத்துக்கும் ஆவிக்கும் உரியதான இரண்டு படிகளை உடையது. கிறிஸ்துவிலிருந்த ஜீவனிலும், கிறிஸ்துவின் மூலமாய் வந்த ஜீவனிலும் ஆவிதான் பிரதானம். ஆவிக்குரிய ஒரு புதுச் சிருஷ்டிப்புக்குத் தலைவரும் காரணருமாகிய கிறிஸ்துவின் மூலமாகவே மனிதரைப் புதிப்பிக்கிறதற்குக் கடவுளின் கிருபை வருகிறது. (b) பவுல் கிறிஸ்துவை அவ்வளவு உயர்ந்த ஸ்தானத்திலிருப்பவராகப் பாவித்ததற்கு இரண்டாம் முகாந்தரம், கிறிஸ்து அவதாரமாக வாராததற்கு முந்தி. ஆதியிலிருந்தே பரலோகத்தில் தேவனுடைய குமாரனா யிருந்தாரென்று அவன் நம்பினான். 1 கொரி 10^{4}-ஐ வாசித்தால், வனாந்தரத்தில் யூத பிதாக்களுக்குத் தண்ணீரைக் கொடுத்த கன்மலை கிறிஸ்துவே என்று சொல்லுகிறான். 2 கொரி 8^{9}-ல் கிறிஸ்து வலிய தமது மகிமையை விட்டாரென்றுசொல்லியிருக்கிறது. 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினால் ஐசுவரியமுள்ளவர்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.' இவ்விஷயம் பிலி 2^{5-11}-ல் இன்னும் தெளிவாய் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து தேவனுடைய ரூபமாயும் தேவனுக்குச் சமமாயு மிருந்தபோதிலும், எல்லா மனுஷர்களாலும் ஸ்தோத்திரிக்கப்படக் கூடியவராயிருந்தபோதிலும், அவைகளையெல்லாம் விட்டு, தம்மைத் தாழ்த்தி, மரித்து, இவ்விதமாய் மனுஷருடைய ஸ்தோத்திரத்திற்குப் பாத்திரரானார். இதினாலே பவுல் தாழ்மையென்னும் பாடத்தைப் பிலிப்பியருக்கு உணர்த்துகிறான்.

4. பவுலுக்கு இம்மாதிரியான எண்ணங்களிருந்ததைக் கண்டால், கிறிஸ்து உலகத்தையும் மனிதனையும் சிருஷ்டித்ததில் பங்கு பெற்றவரென்று அவன் நம்பினது ஆச்சரியமல்ல. கொலோ 1^{13-18}-ல் பின் கூறப்படும்காரியங்கள் கவனிக்கப்படத்தக்கன. (1) கிறிஸ்துவைக்கொண்டே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. (2) அவர் சகலத்தையும் தாங்கிவருகிறார். (3) எல்லாம் அவரை இலக்காக வைத்து அவரிடம் செல்லுகிறது. இன்னொரு வாக்கியத்தில் ஒரே கடவுள் இருக்கிறார் என்று பவுல் சொல்லும்போதே, எல்லாம் கிறிஸ்துவின் மூலமாகவே உண்டாயிருக்கிறதென்று சாதிக்கிறார். 'பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு; அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவென்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.' 1 கொரி 8^{6}. ரோ 9^{5}-ல் கிறிஸ்து மேலான தேவனென்று சொல்லியிருக்கிறது; ஆனாலும் மூலபாஷையில் இவ்வார்த்தைகள் கிறிஸ்துவைக் குறிக்கிறதா, பிதாவைக் குறிக்கிறதாவென்று கண்டறிவது சந்தேகமா யிருக்கிறது. இப்படி இயேசுகிறிஸ்து தேவனுக்குச் சமமாயிருக்கிறவர் என்று பவுல் அடிக்கடி சொல்லி இருந்தபோதிலும், இன்னும் சில இடங்களில் கிறிஸ்து பிதாவுக்குக் கீழ்ப்பட்டவரா யிருக்கிறாரென்று அதிக தெளிவாய்ச் சொல்லியிருக்கிறான். கடவுள் கிறிஸ்துவை ஈவாக உலகத்துக்குக் கொடுத்தார், அல்லது கடவுளே கிறிஸ்துவுக்கு மகிமையைக் கொடுத்தார் என்று பின்வருமிடங்களில் பார்க்கிறோம். 'தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.' கலா 4^{5}.

'தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் அவரை ஒப்புக்கொடுத்தார்.' ரோ 8^{32}. 'தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினர்.' பிலி 2^{9}. இவ்வாக்கியங்களைப்பார்க்கிலும் 1கொரி 11^{3} தெளிவாயிருக்கிறது. 'ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறு னென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறுர் என்றும் நீங்கள் அறியவேண்டும்.' அதுபோல 1கொரி 15^{28}-ல் 'சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.' கிறிஸ்து எப்படி பிதாவுக்குச் சமமாயும் கீழ்ப்பட்டவராயும் இருக்கக்கூடுமென்கிறதைப் பவுல் விளக்கிக் காட்டுகிறதில்லை. அதைப்பற்றிப் பவுலுக்கு அக்கரையில்லை. அவனிடம் அதைப்பற்றிக் கேள்வி கேட்டிருப்போமானுல், ஒரு தகப்பனுக்கும் அவன் குமாரனுக்கும் ஒரே இயல்பு இருக்கிறதானுலும், குமாரன் கீழ்ப்பட்டவனுயிருக்கிறதுபோல கிறிஸ்து பிதாவோடு ஒரே இயல்புள்ளவராகவும், பிதாவுக்குக் கீழ்ப்பட்டவராகவு மிருக்கிறுர் என்று ஒருவேளை சொல்லியிருப்பான்.

5. பவுல் கிறிஸ்துவைப்பற்றிப் போதித்த போதனை மற்ற அப்போஸ்தலர்கள் போதித்தவைகளுக்குச் சார்பாகவே இருந்தது. பவுல் நூதனமான கிறிஸ்தவமார்க்கத்தை ஸ்தாபித்தான் என்று சிலர் சாதிக்கும் சாதனைக்கு யாதொரு அத்தாட்சியும் இல்லை. நமக்குத் தெரிந்தவரையில் அவன் கிறிஸ்துவின் தத்துவத்தைக் குறித்துப் போதித்த போதனை உடனே எல்லாருக்கும் நியாயமாகவே தோன்றி, எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவன் தன் எண்ணங்களில் முதலாம் அப்போஸ்தலர்களை மிஞ்சிப்போனுனென்பது வாஸ்தவமானபோதிலும், அவர்களுடைய எண்ணங்களை மறுக்காமல், பரிபூரணப்படுத்தினுன். கிறிஸ்து நமது வாக்குக்கு எட்டாதவரானதால் கிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றி நமக்குத் திருப்தியைத் தரும் மொழிகளால் அதை விளக்குகிறது அசாத்தியம். ஆனபோதிலும் பவுல் மற்றவர்களைப்பார்க்கிலும் அவரைப்பற்றிச் சொல்லக்கூடியதை அதிக தெளிவோடும் தீரத்தோடும் சொல்லியிருக்கிறுன் என்பது நிச்சயம்.

IV. எபிரேயர் நிருபத்தின் கோட்பாடுகள். — இந்நிருபத்தை எழுதினவனுடைய கொள்கையின்படி, கிறிஸ்து புதிதும் விசேஷித்ததுமான உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக இருக்கிறுர். அவர் ஒப்பில்லாத மகிமையுள்ளவரானபடியால், புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையைவிடச் சிரேஷ்டமானது.

1. உலகத்தில் அவதரித்த இயேசுவைக் குறித்து இந்நிருபம் வெகு விவரத்துடன் சொல்லி, அவர் மெய்யான மனிதனென்று அதிக உணர்வோடு வர்ணித்துக் காட்டியிருக்கிறது. அவருடைய ஜீவியகாலத்தில் நடந்த சில சம்பவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. 2^{14} 5^{7} 12^{2} 13^{12}. இயேசு என்னும் பெயர் பத்துவிசை வருகிறது. அவர் எல்லா மனிதரையும்போல வளர்ந்து, தாம் பட்ட பாடுகளினுல் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். 5^{8}. எல்லாவிதத்திலும் நம்மைப்போல அவர் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராக இருந்தார். 4^{15}. அவர் நமக்கேற்ற பிரதான ஆசாரியன் என்று காட்டும்போது, அவர் முற்றிலும் பாவமில்லாதவரென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. 7^{28}. புதிய ஏற்பாட்டில் நாம் வேறெங்கும் காணுதபிரகாரமாக இயேசுவின் மனிததன்மைக்குரிய குணுதிசயங்கள் இதில் அதிக உணர்வோடு விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவருடைய உண்மை (2^{17} 3^{2}), நம்பிக்கை (2^{13}), பயபக்தி (5^{7}) முதலிய நற்குணங்களைப்பற்றி வாசிக்கிறோம். மனுஷருக்குரிய இந்த அநுபவத்தினுல் அவர் பூரணரானுர் என்று 5^{9}-ல் நாம் வாசிக்கும்போது, அவருக்கு எப்போதாவது குற்றம் இருந்ததென்பது அதின் தாற்பரியமாயிராதபடிக்கு அவருக்குள் மறைந்துகிடந்த இலட்சணங்களெல்லாம் அவருடைய மனுஷீக அநுபவங்களால் வெளிக்குக் கொண்டுவரப்பட்டன என்பது அதின் பொருள். பிதாவினுடைய சித்தத்தின்படி செய்யும் மனதை அவர் உலகத்தில் கற்றுக்கொள்ளாமல், அந்த மனதுள்ளவராகவே உலகத்தில் பிரவேசித்தார். 10^{5-7}. அவர் தம்மைத் தாழ்த்தி, மனுஷனுக வந்ததின் நோக்கமானது, எல்லாரின் நிமித்தம் பாடுபட்டு, மரித்து, பாவிகள் எல்லாரையும் பரிசுத்தப்படுத்துவதே. அவருக்கு நேரிட்ட அந்த மரணத்தின் அவஸ்தையையும், வெட்கத்தையும்பற்றி அதிக உணர்வோடு எழுதியிருக்கிறது. $5^{7,8}$ 13^{12}.

2. நிருபத்தின் ஆக்கியோன் இவ்வளவு தெளிவாக இயேசுவின் மனுஷீகதன்மையைக் காட்டியிருந்தபோதிலும், பவுலைப்போல அவனும் கிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றி அதிக சிறப்புடன் பேசுகிறுன். அவன் பார்க்கிற உயர்த்தப்பட்ட கிறிஸ்து மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்த பிரதான

ஆசாரியனும் (9^{28}), பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறவருமாயிருக்கிறார். $8^{1, 2}$. இவ்வெண்ணத்திலிருந்து கிறிஸ்துவின் தத்துவத்தை அனுமானிக்கிறான். நிருபத்தின்துவக்கத்தில் குமாரன் என்பதாக அவரைக் கூறி (1^2), அந்தக் குமாரன் மனுஷருக்கு மேலானவரென்று அநேகவிடங்களில் காண்பிக்கிறான். அவர் தேவனும் (1^8), ஆதியிலும் சதாகாலத்திலும் என்றென்றைக்கு முள்ளவரும் (7^3 13^8), பிதாவினுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாக இருக்கிறார். 1^3. இப்படி நித்திய தேவனாயிருந்த அவர் தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டு (2^9), சாவுக்குள்ளான மனிதராகிய நாம் தரித்திருக்கிற மாம்சத்தையும் இரத்தத்தையும் தரித்துக்கொண்டது (2^{14-16}) ஆக்கியோனுடைய இருதயத்தில் உணர்வுண்டாகச் செய்கிறது. கிறிஸ்து மனிதனாய்ப் பிறந்ததற்கு முந்தி ஜீவித்த ஜீவன் இந்நிருபத்தில் விசேஷித்துக் கூறப்பட்டிருக்கிறது. மோசே தான்தரித்தநிந்தையை கிறிஸ்துவினிமித்தமே தரித்தான். 11^{26}. கிறிஸ்து கர்த்தாவாயிருந்து, ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினார். 1^{10}. தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தினாலேயே உலகத்தில் பிரவேசித்தார். 10^5. அவர் மனித ஜாதியிலிருந்து உண்டானவரல்ல; அவர் மானிட ஜாதிக்குள் பிரவேசித்தவர். ஆனபோதிலும் அவர் மனிதனாக வாஸ்தவமாய்ப் பாடுபட்டார்; அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லமையுள்ள பிரதான ஆசாரியனாக இருக்கிறார். 2^{18}.

அவர் குமாரனாயிருந்து, தம்மை மரணத்தின்மூலமாய் மனிதருடைய பேராலே ஒப்புக்கொடுத்து, மனிதருக்காக மரித்து, தம்முடைய பிரதான ஆசாரியத்தொழிலை முடித்தார். தம்மை நித்திய ஆவியினாலே கொடுத்தார் என்று 9^{14}-ல் சொல்லியிருக்கிறபடியால், அவருடைய புருஷத்துவத்தில் ஆவிதான் சத்தாயிருந்ததென்றும், அந்த ஆவியால் அவர் மரணத்தில் அழிந்துபோகாமல், பரலோக ஸ்தலத்திலுங்கூடப் பிரதான ஆசாரியத்தொழிலைச் செய்துகொண்டிருக்கிறாரென்றும், அறிந்துகொள்ளுகிறோம். குமாரனாகிய அவர் இப்போதுங்கூடப் பரலோகத்தில் நமக்காகக் கிரியை செய்துகொண்டு, விசேஷமாக நமக்காகப் பரிந்து பேசுகிறவராக இருக்கிறார். 9^{24} 4^{14} 13^8. குமாரனாகிய அவர் எல்லாவற்றுக்கும் சுதந்தரவாளியும் மேசியாவுமாகப் பிதாவினுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். குமாரனாகிய அவர் தமது பலியைப் பிதாவினுடைய சமுகத்துக்கு முன்பாக நமது நிமித்தம் ஏந்திக்கொண்டு பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கிறார். சொல்லப்புகின், கிறிஸ்து குமாரனாயிருப்பதே எபிரெயர் நிருபத்தின் கருத்து. அவர் குமாரனாயிருப்பதாலே நித்திய உடன்படிக்கை நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறது.

V. வெளிப்படுத்தின விசேஷத்தின் கோட்பாடுகள். — வெளிப்படுத்தின விசேஷத்தில் யூதமார்க்கத்தோடு மிகவும் சம்பந்தப்பட்ட கிறிஸ்தவ மார்க்கத்தைப் பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டிலும் மற்ற யூத புஸ்தகங்களிலும் மேசியாவைப்பற்றி சொல்லப்பட்ட காரியங்களே இதில் கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளுக்கு மூலாதாரம். ஆனபோதிலும் இந்தப் புஸ்தகத்தைப்பார்க்கிலும் கிறிஸ்துவின் தத்துவத்தை மேன்மைப்படுத்துகிற புஸ்தகம் வேறில்லை.

1. இப்புஸ்தகத்தில் கிறிஸ்துவின் உலக ஜீவனல்ல, பரலோகத்துக்குரிய அவருடைய ஜீவனே விசேஷமாகச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், புருஷத்துவத்தைக் குறிக்கிற இயேசு என்னும் பெயர் அடிக்கடி வழங்கப்படுகிறது. ஆண்டவர் தாவீதுக்கும் யூதாவுக்கும் வேரும் சந்ததியுமாகக் காட்டப்படுகிறார். அவர் இருப்புக்கோலால் ஜாதிகளை ஆளுகிறவர். 2^{27}. தானியேல் புஸ்தகத்தில் சொன்னதுபோல அவர் மனுஷகுமாரனுக் கொப்பானவரா யிருக்கிறார். 14^{14}. கடைசி ஜெய நாளின் பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறார். 22^{16}. ஆட்டுக்குட்டி என்கிற பெயரால் இயேசு சிலுவையில் மரித்து முடித்த தொழில் குறிப்பாகக் காட்டப்படுகிறது. ஆட்டுக்குட்டி என்கிற பெயர்தான் கிறிஸ்துவைக் குறிக்கிற பெயர்களிலெல்லாம் இந்த ஆக்கியோனுக்குப் பிரியமானதென்று சொல்லலாம்.

2. ஆனபோதிலும் அந்த ஆக்கியோன் உலகத்தில் நடந்தவைகளைக்குறித்து அவ்வளவாய்க் கவனியாமல், . உயர்த்தப்பட்ட கிறிஸ்துவின் மகிமையின்மேலே கண்ணாயிருக்கிறான். அவன் மேன்மேலும் கிறிஸ்துவை ஸ்தோத்திரித்து, கடைசியாகக் கிறிஸ்துவும் கடவுளும் ஒன்றேயென்று பாவிக்கிறானென்று சொன்னாலும் சொல்லலாம். கிறிஸ்து மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை யுடையவராக இருக்கிறார். 1^{18}. மனுஷருடைய கதியைப்பற்றிய இரகசியங்களை அவர் ஒருவரே திறந்துகாட்ட முடியும். 5 அதி. அவர் அக்கினி ஜுவாலை போன்ற கண்களால் மனிதருடைய உள்ளிங்

திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிற வர். $2^{18.\ 23}$. அவர் சிருஷ்டிக்கு ஆதியும், தேவனுடைய வார்த்தையுமா யிருக்கிறார். 3^{14} 19^{13}. கடவுளுக்குமாத்திரம் உரிய 'முந் தினவரும் பிந்தினவரும்' என்கிற பெயர் (ஏசா 44^{6} வெளி 1^{8}) இந்தப் புஸ்தகத்தில் மகிமைபொருந்திய கிறிஸ்துவை மூன்று விசை குறிக்கிறது. 1^{17} 2^{8} 22^{13}. அவரே எல்லாவற்றிற்கும் ஆதியும் அந்தமுமானவர். இது இப்புஸ்தகத்தில் திரும்பத் திரும்ப அதிக தாபந்தத்துடன் சொல்லப்பட்டிருக் கிறது. ஒரு சிருஷ்டியைத் தொழுது கொள்ளாமல், கடவுளைத் தொழுதுகொள் ளவேண்டுமென்று 19^{10}-ல் சொல்லியிருப்பி னும், பராபரனுக்குமாத்திரம் செலுத்தப்பட வேண்டிய ஸ்தோத்திரம் இப்புஸ்தகத்தில் எங் கும் கிறிஸ்துவுக்குச் செலுத்தப்படுகிறது. தேவனும் ஆட்டுக்குட்டியும் சேர்ந்து, ஒரே தொழுகையோடு ஸ்தோத்திரிக்கப்படுகிறார் கள். 'அப்பொழுது வானத்திலும், பூமியி லும், பூமியின் கீழிருக்கிற சிருஷ்டிகள் யா வும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற் றுள் அடங்கிய வஸ்துக்கள் யாவும், சிங்காசன த்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கன மும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களி லும் உண்டாவதாக என்று சொல்லக் கேட் டேன்.' 5^{13} 7^{10}. இதினால் அப்போஸ்த லர்கள் எப்படி பராபரனாகிய கடவுளைச் சேவித்தார்களோ, அப்படியே உயர்த்தப் பட்ட கிறிஸ்துவையும் சேவித்தார்கள் என் பது தெளிவு.

3. ஆனாலும் இந்தப் புஸ்தகத்திலுங்கூட இயேசு பிதாவுக்குக் கீழ்ப்பட்டவரென்று சில இடங்களில் சொல்லியிருக்கிறது. அவர் 'என் தேவன்' என்று சொல்லுகிறார். வெ ளிப்படுத்தின விசேஷம் தேவனால் கிறிஸ்து வுக்கு ஒப்புவிக்கப்பட்டது. 1^{1}. கிறிஸ்து தமது அதிகாரத்தைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். 2^{26} 3^{21} 5^{9}-ஐப் பார்த் தால், அவருக்கிருக்கிற மகிமை அவர் பூலோ கத்தில் பட்ட பாடுகளின் பலனாயிருக்கிறதெ ன்று தோன்றுகிறது.

VI. யோவான் சுவிசேஷத்தின் கோட் பாடுகள்.

1. மற்றச் சுவிசேஷங்களில் இயேசுகிறிஸ் துவைக் குறித்துச் சொல்லியிருக்கிறவை களுக்குப் பொருந்தாதவிதமாய் யோவான் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறதென்று சிலர் நினைத்தாலும், அப்படி நினைத்தற்கு நிமித்த மில்லை. அதை எழுதினவன் ஒரு யூதன், அப்போஸ்தலர்களில் ஒருவன். மற்றச் சுவி சேஷகரைப்போல அவனும் இயேசு மேசி யாவா யிருக்கிறாரென்று காட்டவேண்டு மென்றநோக்கத்துடனே எழுதியிருக்கிறான். 20^{31}. இயேசு மேசியாவாயிருக்கிறதில் எவ் வளவு அர்த்தம் அடங்கியிருக்கிறதென்பதைக் குறித்து அவன் மற்றவர்களைப்பார்க்கிலும் அதிகமாய்த் தியானித்து, மற்றவர்களைவிட விவரமாயும் விஸ்தாரமாயும் எழுதியிருக்கிறா னே யொழிய, மற்றவர்கள் எழுதினவைக ளுக்குப் பொருத்தமில்லாதவைகளை அவன் எழுதவே இல்லை. 1^{49}-ல் நாத்தான்வேல் இயேசுவின் அறிவைக் கண்டு, அவரை மேசி யாவாக வாழ்த்துகிறான். சமாரிய ஸ்திரீ அவரே மேசியாவாக இருக்கவேண்டுமென்று அனுமானிக்கிறாள். 4 அதி. 7^{31}-ல் 'கிறிஸ்து வரும்போது இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ' என்று கேட்ட ஜனக்கூட்டத்தார் அதேவிதமாய் யோசித்துக்கொண்டிருந்தார்கள். இயேசுவுக் குக் கொடுக்கப்பட்ட வேலை மேசியாவுக்கு ரிய வேலையே. செத்தவர்களை எழுப்பவும், நியாயந்தீர்க்கவும், பூர்வீக வாக்குத்தத்தத்தின் படி ஆவியைக் கொடுக்கவும், சகலத்தின்மே லும் ஆளுகையை ஏற்றுக்கொள்ளவும் வந்தி ருக்கிறார். 3^{35} 16^{15}. இவையெல்லாம் மேசியா செய்யவேண்டிய வேலையே. ஆனாலும் ஒரே ஒரு வித்தியாசமுண்டு. யூதருடைய கொள் கையின்படி யூதஜாதிக்குள்மாத்திரம் மேசியா தன் வேலையைச் செய்யவேண்டும். இந்தச் சுவிசேஷத்தை நாம் பார்த்தால், இயேசு சர் வலோகத்தாருக்கென்றே மேசியாவுக்குரிய தொழிலைச்செய்கிறவராகக் காணப்படுகிறார்.

2. இந்தச் சுவிசேஷகன் மற்றவர்களைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றி நுட்பமாயும் தெளிவாயும் பேசுகிறான். முதல் மூன்று சுவிசேஷங்களில் ஒரேதரம் தெளி வாய்ப் பேசப்பட்ட பிதாவுக்கும் குமாரனுக்கு முள்ள சம்பந்தமானது இங்கே விவரமாய்ப் பேசப்படுகிறது. இயேசுவினுடைய தேவத்து வத்தை ஆரம்பத்திலேயே சொல்லி, அதைக் கடைசியிலும் யோவான் சொல்லுகிறான். மற்ற சுவிசேஷகர்கள் இயேசு அன்றாடக ஜீவியத்தில் காட்டினதை யோவான் சுவிசே ஷகன் செவ்வையாய்ச் சொல்லி, விஸ்தரித் தும் காட்டுகிறான். அல்லது வேறேவிதமாகச் சொன்னால், மற்றச் சுவிசேஷகர்கள் இயேசு மேசியாவா யிருக்கிறார் என்று சொல்லியி ருக்க, எந்தக் காரணத்தினாலே அவர் மேசியா வாயிருக்கிறாரென்று இவன் எடுத்துக் காட்டு கிறான். கிறிஸ்து கடவுளுடைய நித்திய சுத னும், கடவுளைப் பரிபூரணமாய் வெளிப்படுத்

திய புருஷனுமா யிருந்ததினலேதான் அவர் மேசியாவாயிருக்கவேண்டும். இதைத்தெளிவாகக் காண்பிக்கும்பொருட்டே இந்தச் சுவிசேஷகன் இயேசுவின் ஜீவியத்திலிருந்து சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளை விஸ்தரித்து எழுதிவைத்திருக்கிறான்.

3. யோவான் சுவிசேஷத்தில் நாம் பார்க்கிற படம் மாம்சத்தில் வந்த பராபரனுடைய படமே. அதின் ஆரம்பம் முதற்கொண்டே இயேசு மனிதருக்கில்லாத மகத்துவமுள்ளவராகக் காணப்படுகிறார். ஆனபோதிலும் மனுஷருடைய சாதாரண ஜீவியம் அவருக்குத் தெரியாதென்று ஒருபோதும் சொல்லக்கூடாது. யோவான் எழுதின சுவிசேஷத்தைக் கருத்துடன் வாசிப்பவர்களுக்கு இயேசு மெய்யான மனிதனுயிருக்கிறாரென்பதைக்குறித்துச் சந்தேகமிராது. யாக்கோபின் கிணற்றண்டை அவருக்கிருந்த இளைப்பையும், லாசருவின் கல்லறையண்டை அவர் சிந்தின கண்ணீரையும், பன்னிருவருடைய ஐக்கியத்தில் அவருக்கிருந்த பிரியத்தையும், சிலுவையின்மேல் அவருக்கிருந்த தாகத்தையும், மறந்துபோக முடியுமா? விசேஷமாக இந்தச் சுவிசேஷத்தில் அதிக தெளிவுடன் காட்டியிருக்கிறதுபோல, அவர் எந்நேரமும் பிதாவின்பேரில் சார்ந்துகொண்டதே அவருடைய மனுஷீக தன்மைக்கு அத்தாட்சி. 'பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ அதையேயன்றி, வேறென்றையும் தாமாய்ச் செய்யமாட்டார், 5^{19} 7^{28} 8^{28} 10^{37} முதலிய வாக்கியங்களை ஒத்துப்பார்க்க. அவர் திரும்பத் திரும்பத் தாம் பிதாவினல் அனுப்பப்பட்டவரென்றும், தமது பிதா தம்மிலும் பெரியவரா யிருக்கிறாரென்றும், தமக்கு வார்த்தைகளும் கிரியைகளும் பிதாவினல் கொடுக்கப்பட்டனவென்றும், தமக்கு ஞானமும் வல்லமையும் பரிசுத்த ஆவியின் மூலமாய்த்தான் வருகிறதென்றும், தாம் பிதாவினுடைய மகிமையைத் தேடுகிறவரென்றும், பிதாவினுடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே தமக்குப் போஜனமென்றும் சொல்லுகிறார். நித்தியகாலமாய்க் குமாரனுய் இருந்ததினலே அவர் பூமியில் மனுஷனுய் இவ்விதமாக குமாரனுய் நடந்தார். அவருடைய முழு தத்துவத்துக்கும் பிதாவே வேர். ஆனபடியினலே யோவான் சுவிசேஷத்திலுங்கூட இயேசு பிதாவுக்குக் கீழ்ப்பட்டவராகக் காணப்படுகிறார். அவர் மெய்யான மனிதனுயிருந்து, மற்ற மனிதருக்கும் கடவுளுக்கும் இல்லாத விசேஷித்த சம்பந்தமுள்ளவராக இருக்கிறார்.

4. பன்னிரண்டு சீஷர்களுக்கு இயேசுவினுடைய நோக்கத்தைப்பற்றியிருந்த லௌகீக எண்ணங்களை மாற்றும்படி இயேசு பிரயாசப்பட்டாரென்று நாம் மற்ற மூன்று சுவிசேஷங்களில் வாசிக்கிறதுபோல இதிலும் வாசிக்கிறோம். அவருடைய போதனைக்குப் பலனுக, அவர்கள் கொஞ்சகாலத்துக்குள்ளே அவர் தெய்வீக புருஷனென்றும், அவர் கொடுக்கிற சிலாக்கியங்கள் எல்லா மனிதருக்கும் உரியவையென்றும் உணர்ந்தார்கள். 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்துமிருக்கிறோம்' என்று பேதுரு சொன்னன். 6^{69}. ஆனலும் அவர்கள் அவரைக் குமாரனுகத்தான் அறிகிறது அவருடைய விருப்பம். அவர் கடவுளைக்குறித்து 'என் பிதா' என்ற வார்த்தையை 30 விசையும், தம்மைக் குறித்து 'குமாரன்' அல்லது 'தேவனுடைய குமாரன்' என்பதை 17 விசையும் வழங்கியிருக்கிறார். 'குமாரன்' என்கிற வார்த்தையால் அவர் உலகத்துக்கு வந்த இயேசுவைக் குறிக்கிறாரென்றாலும், உலகத்தில் வந்தவர் குமாரனுயிருந்ததற்கு அவர் ஆதியிலிருந்தே குமாரனுயிருந்தது காரணமென்பது யோவானுடைய கொள்கை. உலகத்தோற்றத்துக்கு முன் (17^{24}) அவருக்கும் பிதாவுக்கும் விசேஷித்த சம்பந்தமிருந்தது. அப்போதுங்கூட அவர் பிதாவின் மடியி லிருந்தார். 1^{18}. 'பரலோகத்திலிருந்து இறங்கினவரும், பரலோகத்தி லிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனு மில்லை.' 3^{13}.

5. 'குமாரன்' என்கிற பெயரில் அடங்கிய பொருளை இயேசு இப்படி படிப்படியாகக் காட்டி, கடைசியாகத் தாம் மகிமையடைந்து தம்மைப் பின்பற்றினவர்களோடு சதாகாலமும் கூட இருப்பதாக 13-ம் அதிகாரம் முதல் கடைசி அதிகாரம் வரைக்கும் சொல்லிக் காட்டுகிறார். குமாரன் என்றால் பிதாவினல் விசேஷமாய் நேசிக்கப்பட்டவர் என்று முன்னமே அவர் சொல்லியிருக்க, குமாரன் என்றால், பிதாவினுடைய சர்வவல்லமையிலும் சர்வ ஆளுகையிலும் பங்கு பெறுகிறவர் என்று இப்போது காட்டுகிறார். அவருடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்திருக்கிறார். 13^{3}. இயேசு உயிர்த்தெழுந்த பின்புதான் இந்த உபதேசம் சீஷர்களுடைய மனதில் நன்றாய்ப் பதிந்தது. தோமா என்பவன் அதை உணர்ந்து, 'என் ஆண்டவரே, என் தேவனே' என்று கூப்பிட்டான். இயேசு மரணத்தை ஜெயித்தவரும் மகிமையின் ஆண்டவருமாக அவனுக்

குத் தரிசனமானபோது, தான் யேகோவாவை எப்படி நம்பினுனே, அப்படியே இயேசுதான் கிறிஸ்து என்று அச்சமயத்தில் நம்பினுன். யேகோவா எவ்வாறு தமது பக்தருக்கு இருக்கக்கூடுமோ, அவ்வாறே தனக்குக் கிறிஸ்து இருக்கிருரென்று அறிக்கையிட்டான். கிறிஸ்தவமார்க்கத்தின் சாராம்சம் கிறிஸ்துவின் தெய்வீக தன்மையை அறிந்துணர்வது என்பதைப்பற்றி வேறெங்கும் இவ்வளவு தெளிவாய்க் காட்டப்படவில்லே.

6. 'மனுஷகுமாரன்' என்கிற பெயர் யோவான் சுவிசேஷத்திலும் அடிக்கடி வருகிறது. ஆனல் தேவனுடைய குமாரனேப் பற்றிச் சொல்லப்பட்டவைகளெல்லாம் மனுஷ குமாரனேப்பற்றியும் சொல்லலாம். அவருடைய மகிமையைக்குறித்துப் பேசும்போதே மனுஷகுமாரன் என்பது அடிக்கடி வழங்கப்படுகிறது. 3^{14} 8^{28} 12^{34} 12^{23} 13^{31}. யோவான் அப்பெயரை வழங்கும்போது, அவர் மனுஷனுக வந்ததே பெரிய அற்புதமென்று உணர்ந்து அப்படிச் சொன்னுனென்று தோன்றுகிறது. மனுஷகுமாரனுயிருக்கிறவருக்குப் பரலோகம் திறக்கப்பட்டிருக்கிறது; அவர் சதாகாலமாக அங்கே இருந்துகொண்டு, பிதாவைக் காண்கிருர். 3^{13}. அவர் முன்னேஇருந்த இடத்திற்கு இனி ஏறிப்போகப் போகிருர். 6^{62}.

7. கிறிஸ்துவின் தத்துவத்தைக்குறித்து யோவான் சுவிசேஷத்தில் இன்னும் பல வாருக விஸ்தரித்து எழுதப்பட்டிருக்கிறது. அவர் மெய்யான திராட்சச்செடியும் (15^{1}), உயிர்த்தெழுதலும் ஜீவனும் (11^{25}), ஜீவ அப்பமுமாக (6^{32}) இருக்கிருர். இவைகளில் கிறிஸ்துவுக்கும் அவரது சீஷர்களுக்குமுள்ள சம்பந்தம் பல உவமைகளேக்கொண்டு காட்டப்படுகின்றது. அவ்வித சம்பந்தமுள்ளவர் தெய்வீக தன்மையுள்ளவராகவே இருக்கவேண்டும். அதுவே கிறிஸ்துவின் தத்துவத்துக்கு மூலாதாரம். அவர் மனுஷருக்குச் செய்துவருகிற காரியங்கள் கடவுள்தான் செய்தவைகள்.

8. இதுவரை கூறியவற்றைச் சுருக்கிச் சொல்லில், இயேசுவே 10^{30}-ல் 'நானும் என் பிதாவும் ஒன்ருயிருக்கிருேம்' என்று சொன்னதே சித்தத்தில்மட்டும் ஒன்று என்பார்களானுல், சித்தமே புருஷன் என்பது தற்காலத்தவர்களுக்குத் தெளிவுறத் தெரிந்த விஷயமே. சித்தத்தில் பூரண ஒற்றுமையுள்ளோர் தத்துவத்தில் வேற்றுமையாயிருப்பது அசாத்தியம்.

9. இனி சுவிசேத்தின் ஆரம்பத்தில் 'பரம வாக்கு' என்ற தேவனுடைய வார்த்தை என்பவனைப்பற்றிச் சொல்லியிருக்கிற விஷயங்களேக் கவனிக்கவேண்டும். பழைய ஏற்பாட்டில் சொல்லியிருக்கும் தேவனுடைய ஞானம், தேவனுடைய ஆவி, தேவனுடைய வார்த்தை முதலிய பெயர்கள் உலகத்தில் கிரியை செய்துவருகிற தேவனுடைய சக்தியைக் குறிக்கின்றன. பிறகு பைலோ (*Philo*) என்னும் சாஸ்திரி தேவனுடைய வார்த்தை என்பதைக்குறித்து ஒரு பெரிய தத்துவசாஸ்திர நூலே இயற்றினுன். பைலோ என்பவன் போதித்ததை யோவான் எடுத்துக்கொள்ளாமலிருந்தபோதிலும், 'தேவனுடைய வார்த்தை' என்கிற பெயரை அவனிடமிருந்து பெற்றிருக்கலாம். தத்துவ சாஸ்திரம் யோவானுக்குப் பெரிய காரியமல்ல; மனிதருடைய இரட்சிப்பே அவனுக்குப் பிரதானம். இயேசுகிறிஸ்துவிலே மனிதருக்கு வந்த ஒளிக்கும் ஜீவனுக்கும் 'தேவனுடைய வார்த்தை' என்கிற பெயர் தக்க பெயராக அவனுடைய அபிப்பிராயம். வார்த்தையாயிருந்தவரைக்குறித்துயோவான் 1^{1-}ல் சொன்னதாவது: (1) வார்த்தையாகிய அவர் ஆதியிலிருந்தே இருக்கிருர்; (2) அவருக்கும் பிதாவாகிய தேவனுக்கும் இரண்டு புருஷர்களுக்கு இருக்கக்கூடிய ஜீவனுள்ள சம்பந்தமிருந்தது; (3) அவர் தேவனுயிருந்தார். அதின்பிறகு சிருஷ்டிப்பும் வெளிப்படுத்துதலும் யாவும் வார்த்தையின் மூலமாகவே வருகிறதென்று சொல்லியிருக்கிறது. அவர் மனிதருக்குள் ஜீவனும் ஒளியுமாயிருந்தார். ஆதியிலிருந்தே தெரியாதவிதமாக எல்லாருக்கும் இருந்த அவர், மனித அவதாரமாய் வந்து, தம்மை விசுவாசிக்கிறவர்களுக்குப் பராபரனுடைய புத்திரர்களாகும் அதிகாரத்தைத் தந்திருக்கிருர். முதல் வசனத்தோடு 14-ம் வசனம் நெருங்கிய அர்த்தமுடையதாய், வார்த்தை மாம்சமானதை இன்னும் விஸ்தரித்துக் காட்டுகிறது.

10. யோவான் எழுதிய முதலாம் நிருபத்தில் தேவனுடைய குமாரன் தோற்றத்தில் மட்டுமல்ல, வாஸ்தவமாய் மாம்சத்தில் வந்திருக்கிருர் என்பதை உறுதிப்படுத்துவதே பிரதான நோக்கம். அதில் கிறிஸ்துவும் தேவனும் ஒன்ருயிருக்கிருர்கள் என்கிற உணர்வு அதிக பலமாயிருக்கிறதினுல், 'கிறிஸ்து' 'தேவன்' என்னும் பதங்கள் சில இடங்களில் மாறிமாறிச் சொல்லப்படுகின்றன. 1யோவா 5^{20}.

VII. **முடிவுரை.**— புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றிய கோட்

பாடுகளையெல்லாம் நாம்பார்க்கும்போது, முக்கியமாவது அக்காலத்து விசுவாசிகள் வெவ்வேறுவிதமான பதங்களைக்கொண்டு கிறிஸ்துவைக்குறித்து தங்களுக்கிருந்த எண்ணங்களை வெளியிட்டார்கள் என்பதே. அவர்களில் ஒவ்வொருவனும் தன் தன் கண்களால் கிறிஸ்துவைக் கண்டு, தான் கண்டதைத் தான் விரும்பின பதங்களைக்கொண்டு வெளியிட்டான். ஆயினும் எல்லாரும் கிறிஸ்துவில் கிருபையுள்ள கடவுள் தாமே உலகத்துக்கு வந்திருக்கிறார் என்று நம்பினார்கள். அதைப்பற்றி அவர்களில் ஒருவனுக்காவது சற்றேனும் சந்தேகமிருக்கவில்லை; ஆனபடியால் அவ்வெண்ணமே மற்றக் கிறிஸ்தவப் போதனைக்கு வேராக இருக்கிறது. இந்த மூல சத்தியத்தை விளக்க அவர்கள் பற்பல பதங்களையும் பெயர்களையும் சொல்லியிருந்தாலும், சத்தியமோ ஒன்றுதான். இயேசு தன் ஜீவனிலும் உணர்விலும் மெய்யான மனிதனாயிருந்தாரென்பதும், உலக சரித்திரத்தில் தோன்றுகிற அவருடைய ஜீவன் நித்திய பிதாவினுடைய ஜீவனோடு ஒன்றாயிருக்கிறதென்பதும், புதிய எற்பாட்டை எழுதினவர்கள் யாவருக்கும் நிச்சயமாகவே இருந்தன.

கிறிஸ்துவின் தத்துவத்தைக் குறித்து எழுதுவது அப்போஸ்தலர்களுடைய நோக்கமல்ல; அவர்கள் தத்துவ சாஸ்திரத்தைப் பற்றி அல்ல, இரட்சிப்பைப்பற்றியே கண்ணும் கருத்துமுடையவராயிருந்தார்கள். என்றாலும் கிறிஸ்து மனிதரை இரட்சிக்கும்பொருட்டுக் கடவுளுக்கும் மனிதருக்கும் இருக்கவேண்டிய சம்பந்தம் இரட்சிப்புக்கு விசேஷித்ததே. மனிதரைக் கிறிஸ்து தமது மரணத்தால் மீட்டுக்கொள்ளவேண்டுமென்றால், அவர் இன்னார் என்றும் அவர் தன்மை இன்னதென்றும் நமக்குக் காட்டும்பொருட்டே புதிய எற்பாட்டை எழுதினவர்கள் பரிசுத்த ஆவியால் எவப்பட்டு கிறிஸ்து தத்துவத்தைக்குறித்து எழுதியிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சகோதரர். The Brethren of the Lord. மரியாள் முதற்பிள்ளையாகிய இயேசுவையல்லாமல் இன்னும் நாலு ஆண்பிள்ளைகளையும் சில பெண்பிள்ளைகளையும் பெற்றாள். லூக் 2^{7} மத் 13^{55}. மரியாளுடைய மற்றப்பிள்ளைகள் இயேசுவை நம்பாமல் அவரைப் பைத்தியம் பிடித்தவர் என்றெண்ணி, அவர் பிரசங்கம் செய்யவிடாதபடி அவரைத் தங்கள் ஆதீனத்தில் வைக்கவேண்டும் என்று விரும்பினார்கள். மாற். 3^{21}. அவர் உயிர்த்தெழுந்த பிற்பாடு அவர் இன்னார் என்பதை அறிந்து அவரை நம்பினார்கள். அப் 1^{14}.

மரியாள் எப்பொழுதும் கன்னிகையாய் இருந்தாள் என்று சிலர் நினைத்து, அந்தக் கொள்கையை ஸ்திரப்படுத்தும்படி இயேசுவின் சகோதரர் என்று சொல்லப்படுகிறவர்கள் யோசேப்பு முந்தி விவாகம் செய்த மனைவியின் பிள்ளைகள் என்று சொல்லுகிறார்கள். சிலர் 'சகோதரர்' என்பது உடன்பிறந்த சகோதரனைக் குறிக்காமல் மரியாளின் சகோதரியும் அல்பேயுவின் மனைவியுமாகிய மரியாளின் பிள்ளைகளைக் குறிக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த மரியாளும் இயேசுவின் தாயாகிய மரியாளும் சகோதரிகள் என்பதற்குப் போதுமான அத்தாட்சியில்லை. இரண்டு சகோதரிகளுக்கு ஒரே பேர் இருப்பது அபூர்வம்.

இயேசுவின் வம்ச அட்டவணை. The Genealogies of Jesus. மத்தேயுவும் லூக்காவும் இயேசுவின் வம்ச அட்டவணையை வித்தியாசமாய் எழுதியிருக்கிறார்கள். மத் 1^{1} லூக் 3^{23}. இந்த வித்தியாசத்துக்குக் காரணம் என்னவென்றால், மத்தேயு எழுதின அட்டவணையில் 'பெற்றான்' என்னும் பதம் ஜென்ம விஷயத்தைக் காட்டாமல் புத்திர சுவிகாரத்தின் சிலாக்கியத்தைக் குறிக்கிறது. இயேசு தாவீது அரசனின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், ராஜபட்டத்துக்குரிய சுதந்தரவாளி என்றும் காண்பிக்கும்படி மத்தேயு ராஜாக்களின் வம்சவரிசையை எழுதி, அதில் அவருடைய பெயர் சேர்ந்திருக்கிறது எனக் காண்பிக்கிறான். லூக்காவோ ராஜபட்டத்துக்குரிய இந்தச் சுதந்தரத்தைக் கவனியாமல் மனுஷகுமாரனாகிய இயேசு உண்மையாகவே மனுஷகுடும்பத்தைச் சேர்ந்தவர் என்று காட்டும்படி யோசேப்பின் ஆதி பிதாக்களின் வம்ச அட்டவணையை எழுதி அதில் அவருடைய பெயர் சேர்ந்திருக்கிறது எனத் தெரிவிக்கிறான். யூதர்கள் தங்கள் குடும்ப அட்டவணையை எழுதி அதைப் பத்திரப்படுத்திவைப்பது வழக்கம். 1 நாளா 3 அதி.

இரகசியம். Mystery. புதிய எற்பாட்டில் இப்பதம் மனிதனுடைய அறிவுக்கெட்டாத உட்பொருளை அதாவது கிறிஸ்தவ தத்துவ ஞான உத்தமபொருளைக் குறிக்கிறது. ரோ 16^{25} வெளி 10^{6} 1 தீமோ 3^{16} 1 கொரி 2^{7}. அக்காலத்தில் கிரேக்கருக்குள் அந்தரங்க சபைகள் அநேகம் இருந்தன. இவைகளில் அடிமைகளையும் கைதிகளையும்தவிர மற்றவர்கள் எவரும் சேர்ந்து ஜாதிபேதமின்றிச்

சகோதர ஐக்கியமாய் இருப்பார்கள். இச் சபைகளிற் சில மார்க்க சம்பந்தமாகத் தங்களுக்குள்ளே சடங்காசாரங்களையும் உற்சவங்களையும் நடத்துவார்கள். இவர்கள் நடத்தும் சடங்காசாரத்துக்கும் உற்சவத்துக்கும் 'இரகசியம்' என்று பெயரிட்டுக்கொண்டார்கள். இச்சபைகளிற் சில வாமசத்திரர் நடத்தின சடங்குகளைப்போல் தகாத சடங்குகள் உள்ளனவாயிருக்கும். ஆகையால் ரோம அதிகாரிகள் அவைகளின்பேரில் சமுசயமுள்ளவர்களாய் அநேக சட்டங்களை விதித்தார்கள். ஆதி கிறிஸ்தவர்கள் இவ்விதமான தகாத சபைகள் கூடுகிறார்கள் என்று ரோமை அதிகாரிகள் எண்ணினதே ஆதி கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் பல தடவைகளில் உபத்திரவம் செய்ததற்குக் காரணம்.

இரக்கம். **Compassion, Loving-Kindness, Mercy, Pity.** வேதாகமத்தில் இப்பதம் அன்புகூருதல், தயை, பரிதாபம், கிருபை, மனஉருக்கம் முதலியவற்றைக் குறிக்கிறது. ஒருவன் இன்னொருவனுக்கும், அரசன் பிரஜைகளுக்கும் சிறையாக்கப்பட்டவர்களுக்கும், கடவுள் நல்லவர்களுக்கும் பாவிகளுக்கும், தகப்பன் பிள்ளைக்கும், பரோபகாரி ஏழைக்கும் காட்டும் மனஉருக்கம் எல்லாம் இச்சொல்லில் அடங்கியிருக்கிறது. தீர்க்கதரிசிகள், சங்கீதக்காரர், அப்போஸ்தலர் இவர்கள் எல்லாரும் விசேஷமாய் நமது ஆண்டவரும் இதைக்குறித்துப் போதித்துவந்தார்கள். ஆதி 43:14 சங் 78:38 86:15 103:31 ஏசா 55:3 63:9 உபா 7:1.2 மீகா 7:18 மத் 5:7 ரோ 9:23 12:1 யாக் 3:7 லூக் 16:24 10:25 பிலி 2:1 1 இரா 8:50 யாத் 15:13.

இரசத்தொட்டி. **Wine press** = ஆலை.

இரட்சகர், இரட்சிப்பு. **Saviour, salvation.** கடவுள் செய்யும் எந்த மீட்புக்கும் 'இரட்சிப்பு' என்று பொதுவாய்ச் சொல்லப்படுகிறது. விசேஷமாய் இது அவர் மனுஷரைப் பாவத்திலிருந்து நீக்கும் மீட்பைக் குறிக்கிறது.

1. பழைய ஏற்பாட்டில்.

இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்து சென்றது இரட்சிப்பு. யாத் 14:13.

யுத்தத்தில் ஜெயம் இரட்சிப்பு. யாத் 14:15.

கடவுள் இஸ்ரவேலருக்கு இரட்சகரை அனுப்புகிறவர். நெகே 9:27.

தாங்கள் செய்த தீமையினிமித்தம் மனஸ்தாபப்படுகிறவர்களும் நீதிமான்களுமே இரட்சிப்பை எதிர்பார்க்கலாம். சங். 18:1-3.

சத்துருக்களிலிருந்து மீட்கப்படுவதைவிட அநியாயத்தினின்றும் தீமையினின்றும் மீட்கப்படுதலைப்பற்றித் தீர்க்கதரிசிகள் போதித்தார்கள். ஜனங்களிடத்தில் நீதி பூரணமாய் விளங்கும்போது இரட்சகரின் ராஜ்யம் அவர்களுக்குள்ளே பரம்பும். எரே 31:31.

இவ்விதமான இரட்சிப்பு அந்நிய ஜனங்களுக்கும் அருளப்படும். ஏசா 45:23.

இதினால் அநேகர் இஸ்ரவேலின் ஆறுதல் வரும் என்று காத்திருந்தார்கள். லூக் 2:25.

2. புதிய ஏற்பாட்டில்.

Soteria ஆகிய மீட்பு. தேகசுகம் முதலான நன்மைகளுக்கு இப்பதம் சொல்லியிருக்கிறது. மத் 9:22. ஆனால் இது வழக்கமாய் இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் ஆசீர்வாதங்களைக் குறிக்கும். அவர் பாவத்திலிருந்து தமது ஜனங்களை இரட்சிக்கிறார். மத் 1:21.

இயேசுகிறிஸ்து இரட்சகர். லூக் 2:11. அவர் நம்மை இரட்சிக்கும்படி வந்தார். லூக் 19:20. அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் நமது இரட்சிப்புக்கு ஏதுவானது. ரோ 5:19. அவர் அதிபதியும் இரட்சகருமானவர். அப் 5:31. அவரைத் தவிர வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. அப் 4:12.

சுவிசேஷத்தினால் உண்டாகும் நன்மைகள் எல்லாவற்றிற்கும் 'இரட்சிப்பு' என்னும் பதம் அப்போஸ்தலரால் வழங்கப்பட்டுவந்தது. பிலி 1:19 எபி 2:3 1 பேது 1:9.



இரட்டு.

இரட்டு. **Sack cloth.** ஆட்டு ரோமத்தினாலும், ஒட்டக ரோமத்தினாலும் செய்த இரட்டை எபிரெயர் மரண துக்ககாலத்திலும் தங்கள் ராஜ்யத்தில் உண்டாகும் ஆபத்துக்காலத்திலும் தரிப்பார்கள். ஆதி 37:34 1 இரா 21:27.

இரண்டாம் வருகை. **The Second Advent.** **வருகை** காண்க.

இரதம். **Chariot.** எபிரெயர் அசீரியர் முதலானோர் வழக்கமாய் யுத்தத்துக்கென்று இரதங்களை வைத்திருப்பார்கள். கனவான்களிற் சிலர் இரதங்களில் ஏறிப்போவார்கள். ஆதி 50^{9} 2 இரா 5^{9} எரே 17^{25} அப் 8^{28}. இரதம் இரு சக்கரங்களுக்கிடையில் அச்சுக்குமேல் பின் பக்கமும் மேற்பக்கமும் அடைப்பில்லாத பெட்டியைப்போல் இருக்கும். இதற்கு நுகமும் துலாச்சட்டமும்



இரதம்.

இருக்கும். இதில் போர்ச்சேவகர் லேசாய் ஏற இறங்கத் தக்கதாகப் பின்பக்கம் திறந்திருக்கும். வழக்கமாய் ஒரு இரதத்தில் இரண்டு குதிரைகள்தான் கட்டுவதுண்டு. இதில் யுத்தகாலத்தில் இரதசாரதியோடு ஒரு போர்வீரன் இருந்து போவான். சில சமயங்களில் இவர்களுக்குப் பாதுகாப்பாகக் கேடகம் சுமப்போனும் போவான். இதின் இரண்டு பக்கங்களில் அம்பறாத்தூணி முதலான யுத்தாயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

இரத்த நிலம். **அக்கேல்தமா** காண்க.

இரத்த பேதி. **Dysentery.** **வியாதி** காண்க.

இரத்தம். **Blood.** எபிரெயரின் அபிப்பிராயத்தின்படி இதில் உயிர் அல்லது ஆத்துமா தங்கியிருக்கிறது. ஆதி 4^{10} லேவி 17^{11}.

இரத்தாம்பரம். **Purple cloth.** மத்திய தரைக் கடலின் கரைகளிலுள்ள ஒருவிதமான சிப்பிகளிலிருந்து எடுக்கப்படும் சிவப்பு நிறத்தால் தீரு முதலிய துறைமுகப் பட்டணங்களில் சாயவேலை செய்யப்படும் வஸ்திராதிகள் வழக்கமாய் ராஜாக்களும் தனவான்களும் தரிப்பார்கள். எசே 27^{7} மாற் 15^{17} அப் 16^{14}.

இரத்தினம். **Jewel.** வேதாகமத்தில் பிரதான ஆசாரியன் தரிக்கும் மார்ப்பதக்கம் (யாத் 28^{17} 39^{10}), தீரு ராஜா தரிக்கும் அலங்கார 'மூடி' (எசே 28^{13}), புதிய எருசலேமின் அஸ்திபாரம் (வெளி 21^{10}) இவைகளிற் சொல்லிய பலவிதமான இரத்தினங்களின் அட்டவணைகள் மூன்று.

இந்த மூன்று அட்டவணைகளைச் சேர்த்து வேதத்தில் குறித்திருக்கும் இரத்தின வகைகளின் பெயர்களைப் பின்வருமாறு எழுதியிருக்கிறோம். ஆனால் இதில் 'இந்திரநீலம்,' 'வைடூரியம்' முதலிய பதங்களை நாம் வாசிக்கும்போது நமக்குத் தெரிந்த இந்த இரத்தின வகைகளுக்கும், எபிரெயருக்குத் தெரிந்த இந்த இரத்தின வகைகளுக்கும் வித்தியாசமிருக்கலாம் என்று நினைக்கவேண்டும்.

இரத்தின அட்டவணை

தமிழ்	இங்கிலீஷ்	வசனங்கள்
அக்கிக்கல்	*Chrysolite*	முந்தின மொழிபெயர்ப்பு. வெளி 21^{20}.
இந்திரநீலம்	*Sapphire*	யாத் 28^{18} 39^{11} எசே 28^{13} வெளி 21^{19} உன். பா 5^{14}.
கெம்பு	*A. V. Ligure* *R. V. Jacinth*	யாத் 28^{19} 39^{12}.
கோமேதகம்	*Onyx, Sardonyx*	ஆதி 2^{12} யாத் 28^{20} 39^{13} எசே 28^{13} யோபு 28^{16} வெளி 21^{20}.
சந்திரகாந்தம்	*Chalcedony*	வெளி 21^{19}.
சுகந்தி	*Amethyst*	யாத் 28^{19} 39^{12} வெளி 20^{21}.
சுநீரம்	*Jacinth*	வெளி 21^{20}.
சுவர்ணரத்தினம்	*Chrysolite*	வெளி 21^{20}.
சொகுசா	*R. V. Amber*	சிலர் மூலபாஷையில் இப்பதத்தின் அர்த்தம் 'தம்பாக்கு' என்று நினைக்கிறார்கள். எசே $1^{4.\ 27}$ 8^{2}.

தமிழ்	இங்கிலிஷ்	வசனங்கள்
படிகப்பச்சை	*Beryl*	யாத் 28^{20} 39^{13} எசே 28^{13} வெளி 21^{20}.
பத்மராகம்	*Sardius*	யாத் 28^{17} 39^{10} எசே 28^{13} வெளி 21^{20}.
பவளம்	*Coral*	யோபு 28^{18} எசே 27^{16}.
பளிங்கு	*Crystal*	யோபு 28^{17}.
புஷ்பராகம்	*Topaz*	யாத் 28^{17} 39^{10} எசே 28^{13} யோபு 28^{19} வெளி 21^{20}.
மரகதம்	*Emerald*	யாத் 28^{18} 39^{11} எசே 27^{16} 28^{13} வெளி 21^{19}.
மாணிக்கம்	*Carbuncle*	யாத் 28^{17} 39^{10} எசே 28^{13}.
முத்து	*Pearl*	யோபு 28^{18} மத் 13^{45} 1 தீமோ 2^{9} வெளி 21^{21}.
யஸ்பி	*Jasper*	யாத் 28^{20} 39^{13} எசே 28^{13}.
ரத்தினம்	*Ruby*	நீதி 3^{15} 8^{11} 20^{15} 31^{10}.
வச்சிரம்	*Diamond*	யாத் 28^{18} 39^{11} எசே 3^{9} வெளி 21^{19}.
வெள்ளைக்கல்	*Alabaster*	மத் 26^{7} மாற் 14^{3}.
வைடூரியம்	*Agate* / *Chrysoprase*	யாத் 28^{19} 39^{12} வெளி 21^{20}.
வைரம்	*Carbuncle*	எசே 28^{13}.

இரபி. **Rabbi.** ரபி காண்க.

இராகம். **Music.** எபிரெயரின் இராகத்தைப்பற்றி நமக்கு அவ்வளவு தெளிவாய்த் தெரியாது. எபிரெயர் வழக்கமாய்ச் சத்தத்தை உயர்த்திப் பாடுவார்கள். சங்கீதங்களை நாம் பார்த்தால் அநேகம் தடவைகளில் அவைகளைப் பாடுகிறவர்கள் இரண்டு பிரிவுகளாக நின்று மாறிமாறிப் பாடுவார்கள் என்று தெரிகிறது. தேவாலயத்தில் பாடுகிறவர்களில் பலவிதமான பாடகர் உண்டு. 1 நாளா 15^{16}. இராகங்களின் பெயர்களிற் சில 57-ம், 58-ம் சங்கீதங்களின் தலைப்பில் காண்க. பண்டிகை காலங்களிலும் ஊர் கோலம் செய்யும்போதும் நடனஞ்செய்து கீத வாத்தியங்கள் வாசிப்பார்கள். தேவாலயத்தில் மகா வணக்கத்தோடும் கெம்பீரத்தோடும் பாடுவார்கள்.

இராகாப். **Rahab.** ராகாப் காண்க.

இராசி. **'Mazzaroth.'** நட்சத்திரம் காண்க.

இராஜா. **King.** பூர்வகாலத்திலே ராஜா தன் கோத்திரத்துக்கு ஆலோசனைக் கர்த்தா வாயிருப்பது சேமியர் ஜனங்களுக்குள் ஒரு வழக்கம் என்று தோன்றுகிறது. இவ்விதமான ராஜா எந்த ஊரிலும் இருப்பான்.

இஸ்ரவேலர் கானான் தேசத்துக்கு வந்தபோது அவர்களுக்கு அரசன் என்னப்பட்ட ஒருவன் இல்லாவிட்டாலும் மோசேயும் யோசுவாவும் இந்த அரசரைப்போல அவர்களை ஆண்டு நடத்திவந்தார்கள். யோசுவாவின் மரணத்துக்குப் பின் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தங்கள் கோத்திரங்களாகப் பிரிந்து ஒரு தலைவனுடைய அதிகாரத்துக்குள்ளும் கீழ்ப்பட்டிராததினால் தங்கள் சத்துருக்களின் கையில் அதிக இலகுவாய் அகப்பட்டார்கள். கிதியோன், சிம்சோன் முதலான 'நியாயாதிபதிகள்' வெவ்வேறான இடங்களிலும் காலத்திலும் சத்துருக்களின் கையிலிருந்து அவர்களை இரட்சித்தார்கள். ஆனால் இவர்களின் அதிகாரம் எல்லா ஜனங்கள்மேலும் இருந்ததில்லை. சவுல் தன் ஆளுகைக்குள்ளான இஸ்ரவேலர் எல்லார்மேலும் முதலாவது தன் சுய அதிகாரத்தைச் செலுத்தினான்.

சேமியருக்கு அரசன் என்னப்பட்டவன் யுத்தத்தில் பிரதான சேனாபதியாயும், நியாயத்தில் மேலான நீதிபதியாயும், சன்மார்க்க விஷயத்தில் தலைவனாயும் இருந்தான். சவுலும் தாவீதும் பலி செலுத்தினார்கள். 1 சாமு 13^{9} 2 சாமு 6^{13}. பிரதான ஆசாரியர்களை நியமிக்கவும் அவர்களை நீக்கவும் சாலொமோனுக்கு அதிகாரம் இருந்தது. ஆனால் எபிரெயருக்குள் சன்மார்க்க விஷயத்திற் பெரும்பாலும் ராஜாக்கள் பிரவேசிப்பதில்லை.

எபிரெயருக்குள்ளே ராஜா இறக்கும்போது இராஜ்யபாரத்தை அவன் மகன் பெற்றுக்கொள்ளுவான்.

யூதாவின் இராஜ்யத்தில் ராஜாக்கள் எல்லாரும் தாவீதின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

எபிரெயருக்குள்ளே ராஜாக்கள் நியாயப் பிரமாணத்திற்கும் பழைய வழக்கத்திற்கும் விரோதமாய் ஒன்றும் செய்யக்கூடாது. திருஷ்டாந்தம், தாவீது உரியாவைக் கொன்றுபோட்டு அவன் மனைவியைத் தன் மாளிகையின் அந்தப்புரத்தில் வைத்திருந்தபோது அவன் கன அதிகாரமுடைய அரசனாய் இருந்தாலும் தீர்க்கதரிசியாகிய நாத்தான் அவன் செய்த குற்றத்தைக் கண்டித்துப் பேசப் பயப்படவேயில்லை. ஆகாப் அரசன் நாத்தானுடைய திராட்சத்தோட்டத்தை அபகரிக்க முன் நியாயப்பிரமாணத்தின்படி அவனை மூப்பர் குற்றவாளி என்று தீர்மானித்தார்கள். 2 சாமு 12^{9} 1 இரா 21^{9}.

முதல் ராஜாக்கள் ஜனங்களிடத்திலிருந்து குறைந்த வரி வாங்கினார்கள். சாலொமோன் ராஜாவோ அதிக வரி வாங்கி, வியாபாரிகளுக்கும் ஆயத்திறை இட்டான். பிற்காலத்தில் இஸ்ரவேலின் தேசத்துக்கு விரோதமாய் அந்நிய ராஜாக்கள் படையெடுத்து வந்தபோது அவர்களுக்குக் கப்பங்கட்டுவதற்காக எபிரெய ராஜாக்கள் தங்கள் பிரஜைகளிடத்திலிருந்து சில விசேஷித்த வரிகள் வாங்கினார்கள். சில சமயத்தில் தேவாலயத்தின் பொக்கிஷத்திலுமிருந்து பணம் எடுப்பார்கள். 1 சாமு 8^{15} 1 இரா 10^{15} 15^{18} 2 இரா 23^{35}.

கடவுள் 'இஸ்ரவேலின் ராஜா' என்றும் 'என் ராஜா' என்றும் சங்கீதக்காரரும் தீர்க்கதரிசிகளும் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். ஏசா 43^{15} 44^{6} சங் 10^{16} 24^{7} 44^{4} 74^{12} 84^{3}.

தீர்க்கதரிசிகள் மேசியா ராஜா என்று சொல்லியிருக்கிறார்கள். சக 9^{9} ஏசா 32^{1}.

புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து தேவனுடைய இராஜ்யத்தில் ராஜா என்று பலர் எழுதியிருக்கிறார்கள். யோவா $18^{33.\ 37}$ 1 தீமோ 6^{15} வெளி 17^{14}.

இராஜாக்களின் புஸ்தகம். The Books of Kings. இப்போதிருக்கிற இரண்டு பாகங்களும் துவக்கத்தில் ஒரு புஸ்தகமாக ஆக்கியோன் எழுதினான். அவன் இப்புஸ்தகத்தில் யூதா, இஸ்ரவேல் ராஜாக்களின் 400 வருஷச் சரித்திரத்தைச் சொல்லுகிறான்.

அவன் இதில் சாலொமோனின் நடபடிக்கைகளைக் குறித்ததினாலும், எலியா எலிசா என்னும் தீர்க்கதரிசிகளைப்பற்றி விவரமாய்ச் சொல்வதினாலும், சில ராஜாக்களைப்பற்றிச் சுருக்கமாயும், சில ராஜாக்களைப்பற்றி அதிகமாயும் பேசுவதினாலும், இந்தச் சரித்திரத்தை அவன் எழுதும்போது அவன் தனக்கு முந்தி எழுதினவர்களின் புஸ்தகங்களி லுள்ளவைகளைத் தெரிவித்து, அதோடே சன்மார்க்கத்துக் குரியவைகளைக் காட்டுவதே அவன் நோக்கமாய் இருந்தது என்று விளங்குகிறது.

எந்த ராஜாவைப்பற்றியும் அவன் எழுதும்போது அந்த ராஜாவின் வயது, ஆண்ட காலம், இவைகளையும் அவனைப்பற்றிய மற்ற விசேஷங்களையும் சொல்லி அவனுடைய குண லட்சணங்களைப்பற்றியும் பேசுகிறான். இந்த குண லட்சணங்களை எப்படித் தீர்மானம் செய்கிறான் என்றால் மேடைகளில் பலி செலுத்தும்படி இடங்கொடுத்த ராஜாக்கள் நல்லவர்கள் அல்லவென்றும், இடங்கொடாதவர்கள் நல்லவர்கள் என்றும் சொல்லுகிறான். இதினால் இஸ்ரவேல் ராஜாவாகிய யெரொபெயாம் முதலான ராஜாக்கள் பொன் கன்றுக்குட்டியை வணங்கினதினாலே அவர்கள் பொல்லாதவர்கள் என்றும், மேடைகளை அருவருத்த எசேக்கியா, யோசியா ஆகிய இவர்கள் மற்றவர்களைவிட நல்ல ராஜாக்கள் என்றும் தீர்மானம் செய்கிறான். இதினால் உபாகமத்தில் சொல்லியிருக்கும் நியாயப்பிரமாணத்தின்படி எருசலேம் தேவாலயத்திலே யேகோவாவை வணங்குவதே அவனுடைய ஆவலாய் இருந்தது என்று அறிவோம். உபாகமத்தில் விவரமாய் எழுதியிருக்கும் இன்னொரு போதனை ராஜாக்களின் புஸ்தகத்தில் காணப்படுகிறது. அதாவது யேகோவாவுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள்மாத்திரம் நல்வாழ்வை அடைவார்கள். தேவாலயம் பிரதிஷ்டையானபோது சாலொமோன் சொன்ன ஜெபத்தில் இதை அறியலாம்.

ராஜாக்களின் புஸ்தகம் முதற்பிரதி கி-மு. 600-ளவத்திலும், கடைசிப்பிரதி பாபிலோனியர் எருசலேமைப் பிடித்ததற்குச் சில வருஷங்களுக்கு முன்னும் கி-மு. 550-ளவத்தில் எழுதி முடிந்தன.

இராஜாத்தி, இராஜஸ்திரீ. இஸ்ரவேலில் ராஜாவின் மனைவிக்கு அதிகாரம் கொஞ்சந்தான். ராஜாவின் தாய்க்கோ அதிகாரம் அதிகம். திருஷ்டாந்தம்: பத்சேபாள், யேசபேல், அத்தாலியாள்.

இராஜாவின் குளம். King's pool. இதுவும் சீலோவாக்குளமும் ஒன்றுதான் எனத் தோன்றுகிறது. நெகே 2^{14}. **சீலோவா** காண்க.

இராஜாவின் தோட்டம். King's garden. இது சீலோவாக் குளத்தண்டை இருந்திருக்கலாம். 2 இரா 25^{4}.

இராஜாவின் பள்ளத்தாக்கு. King's vale. எருசலேமுக்குக் கிட்ட இருந்த 'சாவே'

என்னும் பள்ளத்தாக்கு. ஆதி 14^{17} 2 இரா 18^{17}.

இராஜ்யம், தேவனுடைய இராஜ்யம், பரலோக இராஜ்யம். The Kingdom, The Kingdom of God, The Kingdom of Heaven. பழைய ஏற்பாட்டில்: கடவுள் எபிரெயர்களுக்கு ராஜா என்றும், அவர்களுடைய இராஜ்யம் அவருடையது என்றும் எல்லாரும் நினைத்தார்கள். பிறகு மேசியா வரும்போது அவருடைய இராஜ்யத்தில் நீதியுள்ளவர்கள்மாத்திரம் இருப்பார்கள் என்று சில தீர்க்கதரிசிகள் போதித்தார்கள். பிறகு இஸ்ரவேலரானாலுஞ்சரி, அந்நியரானாலுஞ்சரி, நீதிமான்கள் எல்லாரும் கடவுளுடைய இராஜ்யத்தில் சேர்ந்திருப்பார்கள் என்னும் கொள்கை உண்டானது.

புதிய ஏற்பாட்டில்: கிறிஸ்து வரும்போது பரம ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று அநேகர் எதிர் நோக்கியிருந்தார்கள். லூக் 1^{67}. அந்தக் காலத்தில் ரோமர்களின் அதிகாரம் யூதர்கள்மேல் இருந்ததினால் மேசியா வந்து ரோமர்களைத் துரத்தி, எருசலேமிலே தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று யூதர்கள் நம்பினார்கள். யோவான்ஸ்நானனும் இவ்விதமாய் நினைத்தான் என்று தோன்றுகிறது. மத் 11^{2}.

இயேசுகிறிஸ்து தேவனுடைய இராஜ்யத்தையும் பரலோக இராஜ்யத்தையும்பற்றிப் போதிக்கும்போதெல்லாம் தமது இராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல என்று பிரசங்கித்தார். லூக் 17^{20} யோவா 18^{36}. இந்த இராஜ்யம் ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கும், நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்கும், சிறுபிள்ளைகளைப்போன்றவர்களுக்கும் உரியது. மத் 5^{3} 5^{10} 18^{3}. மேலும் இயேசுகிறிஸ்து மொழிந்தருளின உவமைகளில் இந்த இராஜ்யத்தில் அந்நிய ஜனங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்றும், ஆசாரியர் மூப்பர்களாகிய இவர்களுக்கு முன் ஆயக்காரரும் வேசிகளும் பிரவேசிப்பார்கள் என்றும், அதில் கடவுளினுடைய சித்தம் நிறைவேறும் என்றும், அதில் பிரவேசித்தவர்கள் மறு ஜென்மம் அடைந்தவர்கள் என்றும் போதித்தார். மத் 6^{10} $21^{28.43}$ யோவா 3^{3}.

சுருக்கமாய்ச்சொன்னால்கடவுளினுடைய சித்தத்தை அறிந்து அதின்படி நடந்து அவருடைய கிருபையினாலே பாவத்திலிருந்து மீட்பைப்பெற்றவர்களே அவருடைய இராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். இந்த இராஜ்யம் இயேசுகிறிஸ்துவின்மேல் வைத்த விசுவாசத்தின் மூலமாய் இவர்களுக்குக் கிடைக்கும் ஆவிக்குரிய சுதந்தரம்.

இந்த இராஜ்யம் தோன்றுங்காலம் இரண்டு வகையாய்ச் சொல்லியிருக்கிறது. முதலாவது, கி-பி. 70-ல் எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டபோது அது தோன்றுகிறதற்கு ஆரம்பம். மத் 16^{28}. இரண்டாவது, நிலத்தில் விதைத்த விதையைப்போல முளைத்து, கிறிஸ்து எல்லாருக்கும் எல்லாமுமாய் இருக்கும் காலம், இது பூரணமாய் விளங்கும். மாற் 4^{26} கொலோ 3^{12}.

இராட்டினம். Spinning wheel (R. V. Distaff.) நீதி 31^{19}.

இராட்சதர். Giants.

1. 'நெபிலீம்' என்னும் எபிரெய பதம் தமிழில் இராட்சதர் என்று மொழிபெயர்த்திருக்கிறது. இந்த தேசத்திலே முன்னோர்கள் அசுரர் ஆதியவர்கள் எப்படி எண்ணப்படுவார்களோ, அப்படியே எபிரெயர்களும் இவர்களைப் பயங்கரவிதமாய் எண்ணுவார்கள். 'நெபிலீம்' அத்தேசங்களில் ஆதியிலிருந்த ஜனத்தைக் குறிக்கிறது என்று நினைக்கலாம். ஆதி 6^{4} எண் 13^{33}.

2. எபிரெயர் கானான் தேசத்துப் பூர்வ ஜனங்களுக்கு 'ரெப்பாயீம்' என்று சொல்லுவார்கள். 'ரெப்பாயீம்' என்னும் பதம் செத்துப்போன வீரர் (சங் 88^{10}), அல்லது முன்னிருந்த பெரியோர், அல்லது கானானிய பூர்வ ஜனங்கள் ஆகிய இவர்களைக் குறிக்கிறது. **ஆனுக்கீம், ஏமியர், சம்சூமியர், சூசிமியர்** காண்க.

3. பழைய ஏற்பாட்டில் ஒரு, கோலியாத் முதலிய சில நெட்டையான ஆட்களைப் பற்றி வாசிக்கிறோம். இவர்களுக்கும் இராட்சதர் என்று சொல்லியிருக்கிறது. யோசு 12^{4} 1 சாமு 17^{4} 2 சாமு 21^{15}.

இராத்தல். Pound. **அளவும் நிறையும்** காண்க.

இராப்போஜனம் என்னும் சாக்கிரமெந்து, ஐக்கிய விருந்து, யூக்கரிஸ்ற். The Lord's Supper, Holy Communion, Eucharist.

1. **பெயர்கள்.** — கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு முதற் பெயர் 'ஸ்தோத்திரம் செலுத்துதல்' என்று அர்த்தம் கொள்ளும் 'யூக்கரிஸ்ற்.' இயேசுகிறிஸ்து இராப்போஜனத்தை ஏற்படுத்தினபோது ஸ்தோத்திரஞ் செலுத்தினதினால் இப்பெயர் வந்தது. மத் 26^{26}.

இயேசுகிறிஸ்து காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே பஸ்காபோஜனம்செய்கிற வேளையில் அவர் இதை ஏற்படுத்தின

தினல் இதற்கு இராப்போஜனம் என்று சொல்லப்படுகிறது.

அன்பு விருந்தில் சேர்ந்தவர்கள் கிறிஸ்துவினுடைய கிருபையில் தாங்கள் ஐக்கியமுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்று காட்டுகிறார்கள். மேலும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு பெறுகிறவர்கள் கிறிஸ்து செலுத்தின பலியில் தங்களுக்கு இருக்கும் நெருங்கிய ஐக்கியத்தைக் காட்டுகிறதினால் இதற்கு 'ஐக்கிய விருந்து' என்னும் பெயர் இடப்பட்டது. 1 கொரி 10^{16}.

புதிய ஏற்பாட்டில் பரிசுத்த நற்கருணைக்கு 'அப்பம் பிட்குதல்' என்று சொல்லியிருக்கிறது. அப் 2^{42} 20^{7}.

2. **நியமனம்.**—பரி. யோவான் இராப்போஜன நியமனத்தைப்பற்றி ஒன்றுஞ்சொல்லாவிட்டாலும் புதிய ஏற்பாட்டில் நாலு இடங்களில் இதைக்குறித்து விவரமாய்ச் சொல்லியிருக்கிறது. மத் 26^{26} மாற் 14^{22} லூக் 22^{14} 1 கொரி 11^{23}. கி-பி. 58-ஆம் வருஷத்திற்கு முன் 1 கொரிந்தியர் என்னும் நிருபம் எழுதப்பட்டதினால் அதிலுள்ள சரித்திரம் சுவிசேஷங்களில் எழுதின சரித்திரத்துக்கு முந்தியது. இந்த நாலு சரித்திரங்களில் வித்தியாசம் கொஞ்சமுண்டு. ஒவ்வொரு ஆக்கியோனும் இயேசுகிறிஸ்து அருளின நன்மொழிகளிற் சிலவற்றைமாத்திரம் எழுதியிருக்கிறதேயொழிய, அவர்களில் ஒருவனும் அவர் சொன்ன வாக்கியங்கள் எல்லாவற்றையும் எழுதவில்லை. இதினிமித்தம் இந்த நாலு புஸ்தகத்தைக்கொண்டே நாம் இந்த நியமன முறைமையைப்பற்றித் தெளிவாய் அறியவேண்டும். மற்றவர்கள் எழுதினதற்கும் லூக்கா எழுதினதற்கும் இடையில் பார்த்தவுடன் ஒரு வித்தியாசம் தோன்றுகிறது. அது என்னவெனில் இயேசு இரண்டு தடவை பாத்திரத்தை எடுத்துச் சீஷர்களுக்குக் கொடுத்தார் என்று லூக்கா சொல்லுகிறான். லூக் $22^{17,20}$. ஆனல் இதைப்பற்றி நாம் ஆராயுமிடத்து லூக்கா எழுதினது தெளிவாய் விளங்கும். இயேசுகிறிஸ்துவும் சீஷர்களும் யூதருடைய முறைமையின்படி பஸ்காப்பண்டிகை விருந்து நடத்தினார்கள். இந்த முறைமையின்படி அந்த விருந்திலே பாத்திரத்தை மூன்றுதடவை ஆசீர்வதித்துப் பானம்பண்ணுவது வழக்கம். விருந்தின் துவக்கத்திலே விருந்துக்குத் தலைவன் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரஞ்செலுத்தி விருந்திலே கடவுளுடைய ஆசீர்வாதம் இருப்பதாக என்று சொல்லிக் கொடுப்பான். இதுதான் லூக்கா சொல்லும் முதலாம் பாத்திரம். இது இயேசு சீஷர்களுடைய கால்களைக் கழுவினதற்கு முந்திக் கொடுத்ததென்று நினைக்கலாம். யோவா 13^{4}. மற்றவர்கள் சொல்லும் பாத்திரமே லூக்கா சொல்லும் இரண்டாம் பாத்திரம். இது யூதருடைய பஸ்காபண்டிகை முறைமையின்படி மூன்றாம் பாத்திரம் எனத் தெரிகிறது. இது 'ஆசீர்வாதத்தின் பாத்திரம்.' 1 கொரி 10^{16}.

பன்னிரண்டு சீஷர்களைத் தவிர அந்த நேரத்தில் இயேசுவோடு வேறொருவருமில்லை. மாற் 14^{17}.

யூதாஸ் என்பவனும் இன்னும் வெளியே போகவில்லை. லூக் 22^{21}.

3. **இதை ஏற்படுத்தின நோக்கம்.**—

(*a*) பஸ்காவில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினல் யூதர்கள் தங்கள் கோத்திரப் பிதாக்களின் குடும்பங்களிலுள்ள முதற்பேறானவர்கள் இரட்சிக்கப்பட்டதையும், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அடைந்த விடுதலையையும் நினைவுகூர்ந்தது போல, இந்த நற்கருணையில் கிறிஸ்தவர்களாகிய நாம் உலகத்துக்காகச் சிலுவையில் அறையுண்டு, தமது இரத்தத்தைச் சிந்தி, பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்கின கிறிஸ்துவாகிய பஸ்காவை நினைவுகூருகிறோம். லூக் 22^{19}.

(*b*) சேமியர்களின் கொள்கையின்படி ஒருவன் தான் செலுத்தும் பலியை ஆசாரியன் பிரதிஷ்டை செய்தபிறகு, தான் அப்பலியின் ஓர் பங்கைப் புசித்து, தான் அதில் தான் வணங்கின தேவனோடு ஐக்கியப்பட்டவன் என்று நினைத்தான். இதின்படி பஸ்காப்பண்டிகையிலும் யூதர்கள் யேகோவாவோடு தாங்கள் ஆவிக்குரியவிதமாய் ஐக்கியப்பட்டவர்கள் என்று நினைத்தார்கள். இந்த ஐக்கியத்திற்கு அந்த விருந்து எப்படி அடையாளமாயிருந்ததோ, அப்படியே பரிசுத்த நற்கருணையில் நாம் இயேசுகிறிஸ்து செலுத்தின உத்தம பலியின் மூலமாய்க் கடவுளோடு ஆவிக்குரியவிதமாக ஐக்கியமுள்ளவர்களாயிருக்கிறோம் என்று நாம் நினைக்கலாம்.

4. **இதின் கொள்கை.**—இயேசுகிறிஸ்து அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து இவை தமது சரீரமும் இரத்தமும் என்று சொன்னதினல் ரோமான் மார்க்கத்தார், குருவானவர் அப்பத்தையும் இரசத்தையும் பிரதிஷ்டை செய்தவுடனே அவை மெய்யாகவே கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாக மாறிவிடுகிறது என்று நம்புகிறார்கள். இதை நாம் இப்படி ஏற்றுக்கொண்டால் இயேசு தாம் 'வாசலும்' 'மேய்ப்பனும்' 'திராட்சச் செடியும்' என்று சொன்னதைப்பற்றி நாம் என்ன

அர்த்தம் கொள்ளவேண்டும்? அவர் இப்படி உபமானமாய்ச் சொன்னதேதவிர வேறொரு அர்த்தமும் இதில் அடங்கி யிருக்கவில்லை. லூதர் ரோமான் கொள்கைகளுக்கு விரோத மாயிருந்தாலும் இந்தக் கொள்கையை அவர் கொஞ்சம் சார்ந்தவராயிருக்கிறார். அவர் போதித்ததாவது: அப்பமும் இரசமும் உண்மையாகவே அப்பமும் இரசமுமாயிருப்பதோடு அவை பிரதிஷ்டை செய்யும் சமயத்தில் கிறிஸ்துவினுடைய சரீரமும் ரத்தமுமாயிருக்கிறது.

ரோமான் கொள்கைக்கு *Transubstantiation*, லூதரின் கொள்கைக்கு *Consubstantiation* என்று வித்துவான்கள் சொல்லுவார்கள்.

இராயனுடைய அரமனையிலுள்ளவர்கள். அரமனை காண்க.

இராயன். Emperor, Caesar. ரோமாபுரி காண்க.

இருதயம். Heart.

பழைய ஏற்பாட்டில்:

இரத்தாசயம். ஆதி 45^{26}. பல விடங்களில் இருதயம் தீமையான நினைவுகள் உள்ள மனதைக் குறிக்கிறது. ஆதி 6^{5}. இதினிமித்தம் சங்கீதக்காரன் 'சுத்த இருதயத்தை எனக்குத் தாரும்' என்று வேண்டுகிறான். சங் 51^{10}. இது ஆசை ஆவலுக்கெல்லாம் இருப்பிடம். உபா 19^{6} 1 இரா 8^{38}. புத்தி, சித்தம், சுகம், துக்கம், உணர்ச்சி, மனச்சாட்சி முதலியவை இதிலிருந்து உண்டாகின்றன. யாத் 14^{5} நீதி 14^{10} ஆதி 8^{21} யோபு 27^{6} மு.

இது காரணத்தினாலே தீர்க்கதரிசிகள் தேவனுடைய பூரண கிருபையைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்குப் புது இருதயம் அவசியம் என்று சொல்லியிருக்கிறார்கள். எசே 18^{31} 36^{26}.

புதிய ஏற்பாட்டில்:

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். மத் 5^{8}.

விதைத்த நிலத்தைப்போல் இருதயமிருக்கிறது. லூக் 8^{15}.

ஆவிக்குரிய ஞானம் இருதயத்தில் தங்கியிருக்கும். மத் 13^{19}.

இருதயம் எப்படியோ நடையும் அப்படியே. லூக் 6^{45}.

கடவுள் இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறவர். ரோ 8^{27}.

பரி. யோவான் மனச்சாட்சிக்குப் பதிலாக 'இருதயம்' எனச் சொல்லுகிறான். 1 யோவா 3^{20}.

பரி. பவுலும் அப்படியே சொல்லுகிறான். ரோ 2^{15}.

'பிரகாசமுள்ள மனக்கண்கள்.' எபே 1^{19} 2 கொரி 4^{6}.

இருதயம் சரீரத்தின் உயிருக்கு ஆதாரமும் காரணமுமாய் இருக்கிறதினிமித்தம் ஆத்ம ஜீவனுக்கும் அது அப்படியே இருக்கிறது என்று சொல்வது வழக்கம்.

இருள். Darkness. யோவா 3^{19} 8^{12} 12^{46} 1 யோவா 2^{11}. **ஒளி** காண்க.

இரை. Food. ஏசா $9^{5.19}$. **ஆகாரம்** காண்க.

இர்ஷேமேஸ். Irshemesh. **பேத்ஷிமேஸ்** காண்க.

இலவங்கப்பட்டை. Cinnamon. யாத் 30^{24} நீதி 7^{17} வெளி 18^{13}. மூலபாஷையில் எழுதின பதம் இலங்கையில் வளருகிற இந்த மரத்தின் பட்டையைக் குறிக்கிறதினால் இலங்கைக்கும் பலெஸ்தீனாவுக்கும் வியாபார சம்பந்தம் இருந்ததாகக் காணப்படுகிறது. எபிரெய ஸ்திரீகளுக்கு 'லவங்கம்' அதிக பிரியமான வாசனைச் சரக்கு.

இல்க்கியா. Hilkiah.

1. எசேக்கியாவின் ஒரு உத்தியோகஸ்தன். 2 இரா 18^{18}.
2. எரேமியாவின் தகப்பன். எரே 1^{1}.
3. நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டுபிடித்த பிரதான ஆசாரியன். 2 இரா 22^{3}.
4. கெமரியாவின் தகப்பன். எரே 29^{3}.
5. ஒரு லேவியன். 1 நாளா 6^{45}.
6. ஒரு லேவியன். 1 நாளா 26^{11}.
7. ஒரு ஆசாரியன். நெகே 12^{7}.
8. எஸ்றாவின் தோழன். நெகே 8^{4}.

இல்லிரிக்கம். Illyricum. மக்கெதோனியா நாட்டிற்கும் ஆதிரியாக் கடலுக்கும் நடுவில் வட கிரேக்காவின் மேற்கெல்லையிலுள்ள பரி. பவுல் சந்தித்த ஒரு நாடு. ரோ 15^{19}.

இல்லேல். Hillel. நியா 12^{13}.

இளைப்பாறுதல், ஓய்வு, அமர்ந்திருத்தல். Rest. வேதாகமத்தில் சொல்லியிருக்கும் இளைப்பாறுதலைப்பற்றிய போதனை விசுவாசிகளுக்கு மனத்தேறுதலாய் இருக்கிறது. கடவுள் தம்மை நம்பிக் கீழ்ப்படிந்து தமது சித்தத்தின்படி நடக்கிறவர்கள் கவலை, துக்கம் இல்லாமல் இருப்பதற்கு அருளும் ஆறுதலும் அமைதியும் இதுவே. நெடுநாளாய்ப் பிரயாணம் செய்த இஸ்ரவேலருக்குக் கானானில் இளைப்பாறுதல். யாத் 33^{14} உபா 3^{20}.

இளைப்பாறுதல் அடையவேண்டும் என்று எவரும் விரும்புவார்கள். சங் 55^{6}. இது

சோம்பல்தனம் அல்ல. ஆதி 49[15]. இது சன்மார்க்கத்துக்குரியது. சங் 37[7] எரே 6[16]. இது இயேசு அருளும் ஈவு. மத் 11[28]. பாவம் செய்த இஸ்ரவேலர் இதை அடையாமற் போனதுபோலப் பாவிகள் இதையடையமாட்டார்கள். சங் 95[11] ஏசா 28[12] 57[20]. கடவுள் ஓய்ந்திருந்தார் என்று எபிரெயர் வணக்கமாய்ச் சொன்ன இந்தக் கொள்கைக்கு ஓய்வுநாள், யூபிலி வருஷம் திருஷ்டாந்தங்கள். ஆதி 2[2] யாத் 20[11] லேவி 25[4]. ஆதி கிறிஸ்தவர்கள் மேலான இளைப்பாறுதலைக் குறித்து 'தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் வருகிறது' என்று உறுதியாய் நம்பினார்கள். எபி 4[9] வெளி 14[13].


இறகு. 'Pen'. 3 யோவா 13-ம் வசனத்தில் சொல்லியிருக்கும் இப்பதம் நாணல் எழுதுகோலைக் குறிக்கிறது.



இன்ரோகேல்.

இன்ரோகேல். Enrogel. [வண்ணான் ஊற்று]. இது யூதா பென்யமீன் நாடுகளுக்கு எல்லை. எருசலேமுக்குச் சமீபம். தாவீதின் வேவுகாரர் இங்கே தரித்திருந்தார்கள். அதோனியா இங்கே விருந்துபண்ணினான். 2 சாமு 17[17] 1 இரா 1[9].

இன்னோம். Hinnom. இன்னோம் பள்ளத்தாக்கு அல்லது இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கு எருசலேம் மதிலுக்குச் சமீபமாயிருந்தது. இதிலே கானானியர் தாங்கள் வணங்கின தேவர்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அக்கினியில் பலியாகச் செலுத்தினதினால் எரேமியா அதற்குச் 'சங்காரப் பள்ளத்தாக்கு' என்று சொல்லியிருக்கிறான். இதிலே தோப்பேத் இருந்தது. எரே 7[32] 32[35] 2 இரா 23[10] 2 நாளா 28[3] 33[6]. **கெகேன்னா** காண்க.



எத்தியோப்பியாவிலுள்ள ஈ.

ஈ.

ஈ. Flies. 'எகிப்து நதிகளின் கடையாந்தரங்களிலுள்ள ஈ' தேனீயைப்பார்க்கிலும் பெரிது. ஏசா 7[18]. மழைகாலத்தில் கோடிக்கணக்காய் ஜென்மிக்கும் அந்த பயங்கரமான ஈக்கள் ஆடுமாடுகள் ஒட்டகங்கள் ஆகிய இவைகளுக்குச் சொல்லிமுடியாத உபத்திரவம் கொடுக்கிறதினால் அத்தேசத்தவர்கள் அவைகளுக்கு அதிகமாய்ப் பயப்படுவார்கள். அந்த ஈக்களின் தொந்தரவிலிருந்து க்ஷேமமாய் இருக்கும்படி அவர்கள் பெயெல் செபூலை வணங்குவார்கள்.

ஈகால். Igal.

1. எண் 13[7].
2. 2 சாமு 23[36].

ஈசாக்கு. Isaac. ஆபிரகாம் சாராள் இவர்களின் மகன். இப்பெயரின் அர்த்தம் 'நகைக்கிறான்.' இதற்குக் காரணம் மூன்று விதமாய்ச் சொல்லியிருக்கிறது. ஆதி 17[17] 18[12] 21[6]. எட்டாம்நாளில் இவனுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. ஆதி 21[4]. பாலியப் பிராயத்தில் பெயெர்செபாவிலே இருந்தான். தகனபலியாகச் செலுத்தும்படி இவன் மோரியா ஊருக்குக் கொண்டுபோகப்பட்டான். ஆதி 22[12] 26[5]. இவன் மனைவியாகிய ரெபெக்காள் ஆபிரகாம் முன்னிருந்த ஆரான் என்னும் ஊரிலிருந்தும் நாகோர் கோத்திரத்திலிருந்தும் வந்தவள். இவர்களுக்கு ஏசா, யாக்கோபு என்னும் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். ஆதி 25[21]. பஞ்சம் உண்டானபோது இவன் பெலிஸ்தியாவைச் சேர்ந்த கேராருக்குப் போனான். ஆதி 26[1]. இவன் செல்வத்தினால் விருத்தியடைந்ததையிட்டு பெலிஸ்தியர் இவன்மேல் வெறுப்படைந்தார்கள். ஆதி 26[20]. ஆதலால் இவன் பெயெர்செபாவுக்குத் திரும்பிப் போனான்.

ஏசாவுக்குக் கொடுக்கும் ஈசாக்கினுடைய ஆசீர்வாதம் யாக்கோபுக்குக் கொடுக்கப்பட்

டது. ஆதி 27 அதி. ஈசாக்கு '180-ம் வயதில்' மரித்து (ஆதி 35^{28}), மக்பேலா கெபியிலே அடக்கம் பண்ணப்பட்டான். ஆதி 49^{31}.

ஈசாக்கு ஆபிரகாமைப்போலத் தைரியசாலி யல்லாவிட்டாலும் கடவுளின்பேரில் அதிக பயபக்தியுள்ளவன். ஆதி $22^{7.8}$ 25^{21}. ஈசாக்கு அடக்கமான குணமுடையவன். எபி 11^{17} யாக் 2^{21}.

ஆமோ $7^{9.14}$. 'ஈசாக்கு' என்றால் 'இஸ்ரவேலர்' என்று அர்த்தமாம்.

ஆதி $31^{42.53}$. 'ஈசாக்கின் பயபக்திக்குரியவர்' என்பது இவன் மகா வணக்கமாய்த் தொழுதுகொண்ட யேகோவாவைக் குறிக்கிறது.

ஈசாய். Jesse. தாவீதின் தகப்பன். 1 சாமு 14^{18} 16^{1} 17^{12} 22^{3}.

'ஈசாய் என்னும் அடிமரம்' வரப்போகிற இரட்சகர் பிறக்கும் தாவீதின் வம்சத்தைக் குறிக்கிறது. ஏசா 11^{1}.

ஈசோப்பு. Hyssop. இது சுவரில் முளைக்கும் சிறு பூண்டாயிருந்தாலும் காடியில் அல்லது தண்ணீரில் தோய்த்த கடற்காளானை இதன் தண்டில் மாட்டித் தூக்கினால் அது முறிந்துபோகாத அவ்வளவு பெலனுள்ளது. ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்து, பஸ்காவின் இரத்தத்தில் தோய்த்துத் தெளிப்பதற்காகவும், குஷ்டரோகிகளைச் சுத்திகரிப்பதற்காகவும் உபயோகிப்பார்கள். யாத் 12^{22} லேவி 14^{4} 1 இரா 4^{33} யோவா 19^{29}.

ஈஷி. Ishi. [என் பத்தா]. இஸ்ரவேலர் யேகோவாவுக்குத் தங்கள் பயபக்தியைக் காட்டும்படி அவரை 'பாகாலி,' அதாவது 'என் எஜமானே' என்று சொல்லாமல், 'ஈஷி,' அதாவது 'என் பத்தாவே' என்று சொல்லும்படி ஓசியா தீர்க்கதரிசி போதிக்கிறான். ஓசி 2^{16}.

ஈடு. Pledge. **அடகு** காண்க.

ஈட்டி. Spear. **ஆயுதம்** காண்க.

ஈத்தாய். Hiddai. = ஊராய். 2 சாமு 23^{30} 1 நாளா 11^{32}.

ஈத்தாய். Ittai. **இத்தாய்** காண்க.

ஈத்தியேல். Ithiel. **இத்தியேல்** காண்க.

ஈயம். Lead. கருங்கற்களில் வரைந்த அக்ஷரங்கள் துலாம்பரமாய் நெடுங்காலம் தோன்றும்படி ஈயத்தை உருக்கி அவைகளில் வார்ப்பார்கள். யோபு 19^{24}.

ஈயிம். Iim. யோசு 15^{29}.

ஈயேசேர். Iezer. எண் 26^{30}. = அபியேசர்.

ஈயேல். Hiel. ஏறக்குறைய கி-மு. 850-ளூத்தில் எரிகோ பட்டணத்தை மறுபடியும் கட்டினவன். 1 இரா 16^{34}.

ஈலேன். Hilen. 1 நாளா 6^{58}.= ஓலோன். யோசு 15^{51}.

ஈயோன். Ijon. பெனுதாத்தும் பூலும் பிடித்த நப்தலியின் ஒரு ஊர். 1 இரா 15^{20} 2 இரா 15^{29}.

ஈரல். Liver. **சூனியம்** காண்க.

ஈரா. Hirah, Ira.

1. ஆடு மேய்க்கிறதில் யூதாவின் பங்காளி. ஆதி 38^{1}.

2. ஒரு ஆசாரியன். 2 சாமு 20^{25}.

3. ஒரு போர்வீரன் 2 சாமு 23^{26}.

4. இன்னொரு போர்வீரன் 2 சாமு 23^{38}.

ஈராத். Irad. காயீனின் பேரன். ஆதி4^{18}.

ஈராம். Hiram.

1. தீருவின் ராஜா. தாவீதும் இவனும் சிநேகிதர். சாலொமோனுக்கும் இவனுக்கு முள்ள ஏற்பாட்டினாலே சாலொமோன் இவனுக்குக் கோதுமையும் எண்ணெயும் வருஷந்தோறும் கொடுத்தான். இவனும் தேவாலயத்தைக் கட்டுவதற்கும் ஒப்பீருக்குக் கப்பல்போவதற்கும் உதவிசெய்தான். 2 சாமு 5^{11} 1 இரா 5^{1} 9^{6}. சாலொமோன் இவனுக்கு இருபது ஊர்கள் கொடுத்தான் எனத் தோன்றுகிறது. 1 இரா 9^{10}. ஒருவேளை ஈராம் அவ்வூர்களைச் சாலொமோனுக்குத் திரும்பவும் கொடுத்திருக்கலாம். 2 நாளா 8^{1}.

2. தீருவிலிருந்த ஒரு சிற்பாசாரி. 1 இரா 7^{13}. இவன் தகப்பன் தீரு பட்டணத்தான். இவன் தாய் நப்தலி அல்லது தாண் கோத்திரத்தாள். 1 இரா 7^{14} 2 நாளா 2^{14}.

3. = Iram. ஒரு பிரபு. ஆதி 36^{43}.

ஈரு. Iru. காலேபின் மூத்தமகன். 1 நாளா 4^{15}.

ஈரோத் பள்ளத்தாக்கு. Pi-Hahiroth. இஸ்ரவேலர் சந்தித்த ஓரிடம். யாத் 14^{2} எண் 33^{7}.

ஈரோன். Iron. ஒரு ஊர். யோசு 19^{38}.

ஈர். Ir. = இரி. 1 நாளா $7^{7.12}$.

ஈலாய். Ilai. = சல்மோன். 1 நாளா 11^{29} 2 சாமு 23^{28}.

ஈவா. Ivvah. **ஆவா** காண்க.

ஈவு. Gift.

பழைய ஏற்பாட்டில்:

கனிசத்துக்காகவும் பெரியவர்களின் தயவு பெறும்படிக்காகவும் கொடுக்கப்படுகிறது. ஆதி 32^{20} 43^{11} நீதி 18^{16}.

வெகுமதிக்குப் பதில் வெகுமதி கொடுக்கிறது. 1 இரா 10[10. 13].

பெரும்பாலும் ஈவுக்கும் பரிதானத்துக்கும் வித்தியாசம் இல்லை. நீதி 17[8] அப் 24[26].

அடிக்கடி ராஜாக்களுக்குக் கப்பம் கட்டுவதாகிய ஈவு. 1 சாமு 10[27] 1 இரா 4[21] சங் 72[10].

தீர்க்கதரிசிகளுக்குக் கொடுக்கும் வெகுமதி. 1 சாமு 9[7] 2 இரா 8[9].

லேவியருக்கும் ஆசாரியர்களுக்கும் சம்ரக்ஷணைக்காகக் கொடுப்பது. யாத் 34[20].

ராஜாக்கள் பலதடவை பிரஜைகளுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானமும் நன்கொடையும் அளித்தார்கள். எஸ்த 2[18].

விவாக சம்பந்தமாகப் பரிசத்தொடு பல வெகுமதியும் கொடுப்பது வழக்கமாய் இருந்தது.

அரசனுக்குச் செலுத்தும் காணிக்கையைப்போல் கடவுளுக்குச் செலுத்தும் பலியினால் கடவுளுடைய தயவைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பூர்வீகத்திலே எபிரெயர்கள் நினைத்தார்கள். பிற்காலத்தில் ஆவிக்குரிய பக்தர்கள் கடவுள் பரிதானத்தின்மேல் பிரியமுள்ளவர் அல்ல என்று அறிந்தார்கள். உபா 10[18].

புதிய ஏற்பாட்டில்:

தேவகுமாரன், நித்தியஜீவன், பரிசுத்தாவி, கடவுள் அளிக்கும் ஈவு.

கிறிஸ்தவ ஆராதனையில் மனப்பூர்வமாய்க் காணிக்கை செலுத்துவது கிறிஸ்தவ சிலாக்கியங்களில் ஒன்று. மத் 5[23] அப் 11[29] ரோ 15[26] 1 கொரி 16[1] 2 கொரி 8, 9-ம் அதி பிலி 4[16].

ஈளை. Asthma, Consumption. உபா 28[22]. **வியாதி** காண்க.

உ.

உக்கிராணக்காரன். Steward. வீட்டு விசாரணைக் கர்த்தன். ஆதி 15[2] 43[19].

ராஜாவின் பிரதானிகளில் விசாரிப்புக்காரன். தானி 1[11].

காரியகாரன். மத் 20[8] லூக் 8[3].

உக்கிராணக்காரன். லூக் 16[2] கலா 4[2] 1 கொரி 1[17] தீத்து 1[7] 1 பேது 4[10].

உக்கோக். Hukok.

1. =எல்காத். 1 நாளா 6[75].

2. யோசு 19[34].

உசியா, ஊசியா. Uzziah. [யேகோவா என் பலம்].

1. ஒரு லேவியன். 1 நாளா 6[24].

2. ஒரு உத்தியோகஸ்தனின் தகப்பன். 1 நாளா 27[25].

3. ஒரு ஆசாரியன். எஸ்று 10[21].

4. ஒரு யூதன். நெகே 11[4].

5. யூதாவின் ராஜா. **அசரியா** காண்க.

உசீம், ஊசிம். Hushim.

1. =சூகாம், ஒரு குடும்பம். ஆதி 46[23] எண் 26[42].

2. ஒரு பெண். 1 நாளா 8[8].

உஷா. Husha. 1 நாளா 4[4].

உஷாம். Husham. ஏதோமின் ராஜா. ஆதி 36[34].

உஷ்ணம். Inflammation. உபா 82[22]. **வியாதி** காண்க.

உடன்படிக்கை. Covenant.

பழைய ஏற்பாட்டில்: இரண்டு பேருக்கிடையில் உண்டான ஏற்பாடு என்பது மூல பாஷையின் அர்த்தம்.

புதிய ஏற்பாட்டில்: இது இரண்டு பேருக்கிடையில் உண்டான ஏற்பாட்டையும் மரண சாதனத்தையும் குறிக்கும்.

1. **உடன்படிக்கை செய்தல்.**—பூர்வீகத்தில் உடன்படிக்கை செய்கிறவர்கள் உடன்படிக்கைப் பலியின் இரண்டு பாகங்களுக்கு நடுவாகப் போவார்கள். ஆதி 15[10. 17]. பிற்காலத்தில் தேவன்பேரில் ஆணையிட்டு உடன்படிக்கை செய்வார்கள். ஆதி 26[31]. சில வேளை கையடித்துக்கொடுப்பார்கள். எஸ்று 10[19] எசே 17[18]. பூர்வீகத்தில் உடன்படிக்கைக்கு அடையாளமாகத் தூண் நடுவார்கள், அல்லது கல் குவிப்பார்கள். ஆதி 31[44-53]. பலதடவைகளில் தேவஸ்தலத்தில் அதின் தேவனைச் சாட்சியாக வைத்து உடன்படிக்கை செய்வார்கள். 2 இரா 11[4]. சில சமயங்களில் ஒருமித்து விருந்துசெய்வார்கள். 2 சாமு 3[20]. இரத்தம் தெளிப்பார்கள். யாத் 24[8].

2. **மனுஷர் செய்யும் உடன்படிக்கைகள்.**—ஜனத்துக்கு ஜனம் செய்யும் உடன்படிக்கை. ஆமோ 1[9]. ராஜாக்களுக்குப் பிரஜைகள் செய்யும் உடன்படிக்கை. 2 சாமு 5[3]. சிநேகிதன் சிநேகிதனுக்காகச் செய்யும் உடன்படிக்கை. 1 சாமு 18[3]. விவாகம் ஓர் உடன்படிக்கை. நீதி 2[17].

3. **கடவுளுக்கும் மனுஷனுக்குமுள்ள உடன்படிக்கைகள்.**—கடவுள் ஆதாமுக்குச் செய்த உடன்படிக்கை. ஆதி 2[16]. நோவாவுக்குச் செய்த உடன்படிக்கை. ஆதி 6[18]. ஆபிரகாமுக்குச் செய்த உடன்படிக்கை. ஆதி 5[18]. இது ஈசாக்கு யாக்கோபு இவர்களுக்கு

ஸ்திரப்பட்டிருந்தது. யாத் 2[24]. இஸ்ரவேலருக்கு மோசே மூலமாய்ச் சீனாய் மலையில் செய்த உடன்படிக்கை. யாத் 19[5] 34[10]. மோவாபிலே இது ஸ்திரப்பட்டிருந்தது. உபா 29[1]. உடன்படிக்கை கற்பலகையில் எழுதிச் சாட்சிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டது. உபா 9[9] 10[2].

4. **சிலருக்குச் செய்த உடன்படிக்கை.**—பினெகாசின் சந்ததியில் ஆசாரியர் எப்பொழுதும் இருக்கும்படி செய்த உடன்படிக்கை. எண் 25[12]. தாவீதின் குடும்பத்தில் நித்தியமாய் ராஜரீகம் இருக்கும் எனச் செய்த உடன்படிக்கை. எரே 33[21]. யோசுவாவும், யோய்தாவும், எசேக்கியாவும், யோசியாவும், எஸ்றாவும் யேகோவாவை உறுதியாய் வணங்குகிறதற்கு உடன்படிக்கை செய்யும்படி ஜனங்களை ஏவினார்கள். யோசு. 24[25] 2 இரா 11[17] 23[3] 2 நாளா 29[10] எஸ்றா 10[3].

5. **மோசேயின் உடன்படிக்கையின் நிவிர்த்தி.**—பிற்காலத்திலுள்ள தீர்க்கதரிசிகள் புதிய உடன்படிக்கையை எதிர்பார்த்தார்கள். அது ஆவிக்குரியதும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மாத்திரமல்ல, யேகோவாவை வணங்கும் எல்லாருக்கும் அளிக்கப்பட்டதுமான உடன்படிக்கை. இதில் ஆபிரகாமுக்குச் செய்த உடன்படிக்கை அற்றுப்போகாமல் நிறைவேறும். எரே 31[31] ஏசா 55[3] அப் 3[25] எபி 8[7-13]. இயேசுகிறிஸ்து மூலமாய்ப் புது உடன்படிக்கையாகிய 'வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை' அருளப்பட்டது. எபி 8[6] 12[24] 2 கொரி 3[6] கலா 3[16] 4[24].

6. **மாறாத உடன்படிக்கை.**—மூலபாஷையில் 'உப்பின் உடன்படிக்கை' ஒருவன் இன்னொருவன் வீட்டில் ஒரு உப்புக் கல்லாகிலும் வாங்கினால் அவர்கள் இருவருக்கும் மாறாத சிநேகம் இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஆதலால் 'மாறாத உடன்படிக்கை' 'உப்பின் உடன்படிக்கை' என எபிரெயர் சொல்லுவார்கள். 'உப்பிட்டாரை உள்ளளவும் நினை' என்ற பழமொழி இதற்கொத்திருக்கிறது. எண் 18[19].

உடன்படிக்கைப் பெட்டி. Ark of the covenant. மூலபாஷையில் 'பெட்டி' என்னும் பதம் சாதாரணமாய் எந்தப் பெட்டியையும் (2 இரா 12[10]), எகிப்தியர் சுகந்த வர்க்கமிட்டுப் பிரேதத்தை யடக்கஞ்செய்யும் பெட்டியையும் (ஆதி 50[26]), எபிரெயர்களின் உடன்படிக்கைப் பெட்டியையும் குறிக்கும்.



உடன்படிக்கைப் பெட்டி.

உடன்படிக்கைப்பெட்டிக்கு வேறுபெயர்களும் உண்டு. அவையாவன:—'கர்த்தருடைய பெட்டி,' 'யேகோவாவின் பெட்டி,' 'தேவனுடைய பெட்டி,' 'சாட்சிப் பெட்டி,' 'பரிசுத்த பெட்டி.' இது மரத்தினாலே செய்யப்பட்டுப் பசும்பொன் தகட்டினால் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் மூடப்பட்டிருந்தது. இதைச் சுமந்துகொண்டு போவதற்கு இருபக்கங்களிலும் வளையங்களில் தண்டுகள் மாட்டியிருக்கும். இதின் நீளம் ஏறக்குறைய 4 அடி, அகலமும் உயரமும் 2¼ அடி.

உடன்படிக்கைப் பெட்டிக்குள் நியாயப்பிரமாணப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. உபா 10[2].

வனாந்தரப் பிரயாணத்தில் இஸ்ரவேலர் இதை மகா வணக்கமாய் வைத்துத் தங்களோடே கொண்டுபோனார்கள். எண் 10[33]ஞ. அவர்கள் கானான் தேசத்தைப் பிடித்தபோது இதையும் எங்கும் கொண்டுபோனார்கள். யோசு 3[3] 6[6]. கடைசியில் இதைச் சீலோ என்னும் தேவஸ்தலத்தில் வைத்தார்கள்.

பெலிஸ்தியர் இதை அபகரித்தபோதும், திரும்ப இது கீரியாத்யாரீமிலும், ஓபேத் எதோம் வீட்டிலும் இருந்தபோதும், தாவீது இதை எருசலேமிலும் சாலொமோன் தான் கட்டின தேவாலயத்திலும் வைத்திருந்தபோதும் யேகோவா இது இருந்த இடங்களிலே பிரசன்னராயிருந்தார் என்று இஸ்ரவேலர் நம்பினார்கள் எனத்தெரிகிறது. 1 சாமு 4[1]-7[1] 2 சாமு 6[10] 1 இரா 8[1].

சாலொமோன் ராஜா இதைத் தேவாலயத்தில் வைத்தபிறகு இதைப்பற்றிய பிற்கால சரித்திரம் ஒன்றும் தெரியாது. ஒருவேளை இது கி-மு. 600-வரை அளவில் எரேமியாவின் காலத்தில் இருந்திருக்கலாம். எரே 3[16].

யூத சாஸ்திரிகளின் பாரம்பரியத்தின்படி நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடிக்கும் முந்தி எரேமியா தீர்க்கதரிசி இந்தப் பெட்டியை மறைத்துவைத்தான். அதுமுதல் இது காணமல் போய்விட்டது.

செருபாபேலும் ஏரோதும் கட்டின தேவாலயங்களில் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்படவில்லை.

ஒருவேளை 'என் சமுகம்' (யாத் 33^{14}) என்று சொல்லியிருப்பது உடன்படிக்கைப் பெட்டியைக் குறிக்கலாம்.

புதிய ஏற்பாட்டில் உடன்படிக்கைப் பெட்டி இரண்டுதடவை சொல்லியிருக்கிறது. எபி 9^{4} வெளி 11^{19}.

உடன்படிக்கையின் புஸ்தகம். The book of the covenant. எபிரெயருடைய மூல நியாயப்பிரமாணங்கள், அதாவது யாத் 20^{22}-23^{33}. இதற்கு இந்தப் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. யாத் 24^{7}.

உடுக்கை. Timbrel. ஒரு மாதிரியான சிறு மிருதங்கம் அல்லது தம்புரு. **கீதவாத்தியம்** காண்க.

உடும்பு. R. V. Gecko. இது பலெஸ்தீனவிலுள்ள பல்லி வகைகளில் ஒன்று. லேவி. 11^{30}.

உடை. Dress.

1. பூர்வீகத்தார் முதல் முதல் தோல் உடைகளைத் தரித்துவந்தார்கள். ஆதி 3^{21}. பிற்காலத்தில் ஆட்டு ரோமத்தினாலும் சணல் நூலினாலும் செய்த உடைகள் அவர்களுக்குப் பிரியமாய் இருந்தன. பழைய ஏற்பாட்டுப் புஸ்தகத்தில் 'பட்டு' என எழுதியிருந்தாலும் பட்டு அந்தக் காலத்தில் அத்தேசத்தில் இருந்தது நிச்சயமில்லை.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் 'பட்டு' உடையைப்பற்றி நன்றாய்த் தெரியவந்தது. வெளி 18^{11}.

2. உள் வஸ்திரம்.

(*a*) பூர்வீகத்தார் இடுப்பைச்சுற்றி வார்க் கச்சை, துணிக்கச்சை கட்டுவார்கள். பிற்காலத்தில் தீர்க்கதரிசிகள்மாத்திரம் இதைக் கட்டினார்கள். 2 இரா 1^{8} மத் 3^{4}. மற்றவர்கள் உட்சட்டை போட்டார்கள்.


(*b*) அப் 19^{12}-ல் சொல்லியிருக்கும் 'கச்சை' அடிமைகளும் ஏழைகளும் இடுப்பிலே கட்டும் துணி.

(*c*) முற்காலத்தில் ஆசாரியர்களும் தாவீது அரசனும் தரித்த 'ஏபோத்து' என்பது இடுப்பிற் கட்டின ஒருமாதிரியான உடையாயிருக்கலாம். 1 சாமு 2^{18} 2 சாமு 6^{14}.

(*d*) ஆசாரியர்கள் சல்லடங்கள் போட்டார்கள். பாபிலோனியர் 'நிசார்' உடுத்தினார்கள். யாத் 28^{42} தானி 3^{21}.

(*e*) எபிரெயர்களில் ஆண்கள் ஒருமாதிரியான உட்சட்டை கழுத்திலிருந்து முழங்கால்வரையும், பெண்கள் பாதம்வரையும் தரிப்பார்கள். சில சட்டைகளுக்குக் கையுண்டு.

யோசேப்பின் 'பல வர்ணமான அங்கி' கையுள்ள நீண்ட சட்டையாயிருக்கலாம். சில சட்டைகள் கையில்லாமல் ஒரேமாதிரியாய் நெய்யப்பட்டிருந்தன.



கச்சை.

3. **கச்சை.**—எல்லாரும் துணிமேல் அரையைச் சுற்றிக் கச்சை கட்டுவார்கள். ஏழைகள் இதற்குப் பதிலாகக் கயிறு கட்டுவார்கள். ஏசா 3^{24}.

ஆசாரியர் தரிக்கும் கச்சை விசித்திரமாய்ச் செய்யப்பட்டிருக்கும். சிலர் பொற்கச்சை கட்டுவார்கள். யாத் 28^{8} வெளி 15^{6}.

இதிலே பட்டயத்தின் உறையாவது பணப்பையாவது தொங்கும்.



சட்டை.

4. மேல் **வஸ்திரங்கள்.**

(*a*) ஆண்களும் பெண்களும் சட்டையின் மேல் சணல் நூலினால் அல்லது ஆட்டு

ரோமத்தினால் செய்யப்பட்ட ஒருவிதமான சால்வை அல்லது கம்பளி போடுவார்கள். ஆதி 9^{23} யாத் 12^{34} நியா 8^{25}.

மத் 5^{40}-ல் சொல்லியிருக்கும் 'வஸ்திரம்' என்றால் ஒருமாதிரிச் சட்டை. 'அங்கி' என்றால் ஒருமாதிரிச் சால்வை. ஒருவன் உட்சட்டை போட்டிருந்தும் மேல்வஸ்திரம் தரித்திராவிட்டால் அவன் நிர்வாணி என்று நினைத்தார்கள். யோவா 2^{7} ஏசா 20^{2}.

(*b*) இன்னுமொரு மாதிரியான மேல் வஸ்திரம் மற்றெல்லா உடுப்புகளின்மேலும் போடுவார்கள். இதில் தலை நுழையக்கூடிய தாய் நடுவில் துவாரம் வெட்டப்பட்டிருக்கும் என்று தோன்றுகிறது. இது அதிக விலையுயர்ந்தது. ஓரங்களில் தொங்கல் உண்டு. இது கழுத்திலிருந்து பாதம்வரையும் நீண்டிருக்கும். சவுல், யோனத்தான், எஸ்றா இவர்கள் போட்ட சால்வைகள் இவைகளே. 1 சாமு 24^{4} 18^{4} எஸ்றா 9^{3} யாத் 28^{3}.

சாமுவேலின் 'சின்னச் சட்டை' இந்த மாதிரியான சால்வைதான். 1 சாமு 2^{19}.



சால்வை.

(*c*) தீர்க்கதரிசிகள் ஒருமாதிரிச் சால்வை போட்டார்கள். 1 இரா 19^{19}. இது வழக்கமாய் ஆட்டின் தோலினாலும் ஆட்டு ரோமத்தினாலும் செய்யப்படும். இதற்கு 'மயிர்ப் போர்வை' (சக 13^{4}) 'மயிர் உடை' (2 இரா 1^{8}) என்று சொல்லியிருக்கிறது.

யோவான்ஸ்நானன் ஒட்டக மயிரினால் செய்த இந்தமாதிரியான சால்வை போட்டான். மத் 3^{4}.

(*d*) 'மெல்லிய புடவை.' இது சணல் நூலினால் செய்த அதிக மெல்லிய சால்வை. நீதி 31^{24}.

(*e*) ரோமைப் போர்ச்சேவகர் இயேசுவின்மேல் போட்ட 'சிவப்பான மேல் அங்கி' ரோமைத் தலைவர்கள் கவசத்தின்மேலே போர்த்துக்கொள்ளும் ஓர் வஸ்திரம். மத் 27^{28}.

பரி. பவுலின் 'மேல் அங்கி' பிரயாணிகள் போடும் ஓர் மேல் வஸ்திரம். 2 தீமோ 4^{13}.

5. **தலைப்பாகை.** — ஆண்களும் பெண்களும் தலையில் பாகை அல்லது குல்லா தரிப்பார்கள். 'இராஜமுடி' (ஏசா 62^{3}) 'குல்லா' (ஏசா 3^{23}) தலைப்பாகையைக் குறிக்கின்றன. 'உறுமால்' (அப் 19^{12}), 'சீலை' (யோவா 11^{44} 20^{7}) தலையில் கட்டும் தலைக்குட்டையைக் குறிக்கும்.



முக்காடு.


பெண்கள் முக்காடு போடுவார்கள். இது முழுத் தேகத்தையும் மூடுகிற மெல்லிய சால்வை. ஆதி 24^{65} 38^{14}.

மோசே போட்ட 'முக்காடு' ஒரு சிறிய முக்காடு. யாத் 34^{33}.

6. ஐசுவரியமுள்ள பெண்கள் இவைகளைத்தவிர பல **விசித்திரமான ஆடைகள்** அணிவார்கள் இவைகளின் பெயர்கள் பல (ஏசா 3^{19-24} எசே 16^{10-12}) நமக்குத் தெரிந்தாலும் இவைகள் இன்னமாதிரி என்பது திட்டமாய்த் தெரியாது.

7. **பாதரட்சைகள்.**—எபிரெயர் பாதரட்சைகள்-வெளியில் போடுவார்கள். புலம்பல் காலத்திலும், சிநேகிதர் வீட்டுக்குப்போகும் சமயத்திலும், தேவாலயத்திலும் பாதரட்சை போடமாட்டார்கள்.


8. **'மாற்று வஸ்திரங்கள்.'** இவை பண்டிகைக்காலத்தில் போடும் அல்லது பெரியோர்கள் விசேஷித்த காலங்களில் கொடுக்கும் உயர்ந்த வஸ்திரங்கள். ஆதி 45^{22}. ('கலி



பாதரட்சை.

யாண வஸ்திரம்') மத் 22^{11}. இந்தமாதிரி யான மாற்று வஸ்திரமாயிருக்கலாம்.

9. தமிழில் மொழிபெயர்த்தவர்கள் மூல பாஷையில் உடைகளுக்குச் சொல்லியிருக் கும் பெயர்களின் அர்த்தத்தின்படி மொழி பெயராமல் பொதுவாய் 'அங்கி,' 'கச்சை,' 'சால்வை,' 'வஸ்திரம்' என்று சொல்லியிருக் கிறதினாலே இப்பதங்கள் குறிக்கும் உடை கள் இன்னின்ன மாதிரியானவை எனத் தெரிந்துகொள்வது எளிதல்ல. **உறுமால், கிரீடம், சீலை, பாகை, ஏபோத்து** காண்க.



பாதரட்சை.

உதவிக்காரன். Servant, Minister, Deacon. பிலிப்பு எபேசு பட்டணங்களை நீக்கி மற்ற இடங்களில் கிரேக்க பதமாகிய *Diakonos* பணிவிடைக்காரர், வேலைக்கா ரர், ஊழியக்காரராகிய இவர்களைப் பொது வாய்க்குறித்தது. மத் 20^{26} யோவா 2^{5} 2கொரி 6^{4} 11^{23} கொலோ 1^{23} பிலி 1^{1} 1 தீமோ 3^{8-13}.

சபைக்குரியவேலைக்கென்று முதல்நியமிக் கப்பட்ட ஏழுபேருக்கு 'உதவிக்காரர்' என்று அப்போஸ்தலர் நடபடிகளில் சொல்லியிரா விட்டாலும், ஆதி கிறிஸ்தவர்கள் ஒரு சபை ஆனவுடனே சபையின் விஷயத்தை விசா ரிக்கவும், ஏழைகளைப் பராமரிக்கவும் உத விக்காரரை ஏற்படுத்தினார்கள். அப் 6^{1-6}.

பிலி 1^{1}-லும் 1 தீமோ 3^{8-13}-லும் சொல்லி யிருக்கும் 'உதவிக்காரர்' பிலிப்பு எபேசுபட் டணங்களில் உத்தியோகஸ்தர்களாயிருக்கும் ஒரு வகுப்பு எனத் தோன்றுகிறது.

இவர்களுடைய ஊழியம் இன்னின்ன வென்று விவரமாய்ச் சொல்லியிராவிட்டா லும், இவர்கள் ஏழைகளைப் பராமரிக்கவும், சபையின் காரியகர்த்தாக்களாயிருந்து தங்க ளால் இயன்றமட்டும் சபையின் விருத்திக் குரிய விஷயங்களைப் பார்த்து நடத்தவும் பிர யாசப்படுவார்கள்.

இவர்கள் மதுபானிகளாயும் பேராசை யுள்ளவர்களாயும் கட்சிக்காரராயும் இராமல், நல்லொழுக்கம் நற்கீர்த்தி உள்ளவர்களாயும், குடும்பவிஷயத்தில் நல்முறைப்படி அதை நடத்துகிறவர்களாயும், விசுவாசத்தில் தேறி னவர்களாயும் இருக்கவேண்டும். இவர்கள் சிலகாலம் சோதிக்கப்பட்டுக் கண்காணியார், மூப்பர் ஆகிய இவர்களுக்கு இரண்டாவதா கச் சபையின் உத்தியோகஸ்தராய் வைக் கப்படுவார்கள்.

1 கி-பி. இரண்டாம் நூற்றாண்டில் உதவிக் காரர் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆதி சபையில் உதவிக்காரரை ஏற்படுத் தும் விதம் தெளிவாய்த் தெரியாவிட்டாலும் மூப்பர்கள் அவர்கள் தலையில் கைகளை வைத்து ஆசீர்வாதம் சொல்லுவார்கள் என் றும், சபையார் அதற்குச் சம்மதிக்கவேண் டும் என்றும் நாம் அறியலாம். 1 தீமோ 5^{22} அப் 6^{6}.

இந்த உதவிக்காரர் பிற்காலத்தில் குருமா ரின் கைக்கீழ் உத்தியோகம் செய்துவந் தார்கள்.

உதவிக்காரி. Deaconess. பெபே யாள் ரோமைச் சபையிலிருந்த 'ஊழியக்கா ரன்' என்று மூலபாஷையில் சொல்லியிருக் கிறது. ஆதலால் உதவிக்காரன் செய்த உத் தியோகமே உதவிக்காரியும் செய்தாள் என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். ரோ 16^{1} 1 தீமோ 3^{11}-ல் பவுல் 'உதவிக்காரி' என்று சொல்லாவிட்டாலும் அவன் சபை உத்தி யோகஸ்தர்களாகிய உதவிக்காரிகளைக் குறித் துப் பேசுகிறான் என்று சிலர் உத்தேசிக் கிறார்கள். பிற்காலத்தில் உதவிக்காரிகள் என்னும் சபை உத்தியோகஸ்தர்கள் இருந் தார்கள் என்று நிச்சயமாய் அறிந்துகொள்ளு கிறோம்.

உத்தரிக்கிற ஸ்தலம். **Purgatory.** மரித்த விசுவாசிகள் பாக்கியவான்களாயிருந்தாலும், மோட்சவாசிகள் வாழும் இடத்தில் ஆண்டவரைப் பார்க்கிறதற்குமுன் இன்னம் சில காலம் காத்திருக்கவேண்டும் என்ற கொள்கையினுல், அவர்களுடைய மகிமை நிறைவாகவும், பரிசுத்தமுள்ளவர்களுடைய பாக்கியத்தில் அவர்கள் இருக்கவும், மரித்தவர்களுக்காக மன்ருடுகிற முறைமை இரண்டாம் நூற்ருண்டில் தொடங்கிற்று. இஷ்டப்பிரசாதத்தோடே மரித்தவர்கள் பாவக்கடன் முழுவதும் தீராமல் அந்தக் கடனைத் தீர்க்கும்படிக்கு உத்தரிக்கும் ஸ்தலம் ஒன்று உண்டு என்று பிற்காலத்தில் அநேகர் நினைத்தார்கள்.

இதைக்குறித்து ரோமான் மார்க்கத்தாரால் செய்யப்பட்டிருக்கிற ஞான உபதேசமாவது:

(i) புண்ணியவான்களுடைய ஆத்துமாக்கள் மோட்சம் போகிறதற்கு முன்னே அநித்திய ஆக்கினைகளைக்கொண்டு தங்கள் குற்றங்களை விமோசனம்பண்ணக் குறித்திருக்கும் ஸ்தலம் 'உத்தரிக்கிற ஸ்தலம்' என்று சொல்லப்படும்.

(ii) தங்கள் அற்பக் குற்றங்களையாகிலும் பொறுக்கப்பட்ட சாவான பாவங்களையாகிலும் உத்தரியாமல், தேவ இஷ்டப்பிரசாதத்தோடே மாணத்தை அடைகிறவர்களே உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் போகிறவர்கள்.

(iii) நாம் அவர்களுக்கு உதவியாய்ப் பண்ணுகிற பூசை ஜெபதப தான தருமங்களைக் கர்த்தர் பார்த்து உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கிறவர்கள் அனுபவிக்கிற வேதனைகளைக் குறையப்பண்ணுவதினுல், அவர்கள் மோட்சம் அடைந்தவுடனே நமக்காக வேண்டிக்கொள்ளுவார்கள்.

இதற்கு உதாரணங்களாகத் தள்ளுபடியாகமத்திலும் புதிய ஏற்பாட்டிலுமுள்ள சில வசனங்களைக் கொடுக்கிருர்கள். அவைகள் முக்கியமானவை: 2 மக் 12^{43-46} மத் 12^{32} லூக் 12^{48} 1 கொரி 3^{11-15} 15^{29}.

இந்த வசனங்களை நாம் ஆராயுமிடத்து, இந்த உபதேசம் இவைகளில் தெளிவாய்த் தோன்றுகிறதில்லை என்றும், இவ்வசனங்கள் இந்த உபதேசத்தைக் குறிக்கிறதில்லை என்றும் அறியவேண்டும். திருஷ்டாந்தமாக: 1 கொரி 3^{11-15}-ம் வசனங்களில் சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள் மற்றவர்களைச் சீஷர்களாக்குகிற விதத்தைக் குறித்தும், அவர்களுடைய வேலைகள் அக்கினி என்னும் உபத்திரவத்தால் சோதிக்கப்படும் என்பதைக்குறித்தும் சொல்லியிருக்கிறதேயன்றி, உத்தரிக்கும் ஸ்தலத்தைக் குறித்து ஒன்றுஞ் சொல்லியிருக்கவில்லை என்று விளங்குகிறது. இறந்துபோனவர்களுடைய ஆத்துமாக்கள் கடைசி நியாயத்தீர்ப்பு நாள்வரைக்கும் 'ஆதேஸ்' என்னப்பட்ட மரித்தோர் ஸ்தலத்தில் இருந்து, மோட்சத்துக் கேற்றவர்கள் மோட்சகதியையும், நரகத்துக் கேற்றவர்கள் நரகவேதனையையும் அனுபவித்துக்கொள்வார்கள் என்று வேதஞ் சொல்லுகிறதேயன்றி, அது உத்தரிக்கிற ஸ்தலத்தைப்பற்றித் தெளிவாய் ஒன்றும் சொல்லுகிறதேயில்லை. பவுல் அப்போஸ்தலன் 'அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்' என்று சொல்லுகிருன். 2 கொரி 5^{10}.

கடைசியாக, இந்த உபதேசம் இயேசு கிறிஸ்துவின் புண்ணிய பலன்கள் நம்மைப் பூரணமாய் இரட்சிப்பதற்குப் போதாது என்று போதிக்கிறதாகத் தோன்றுகிறது. ஆதலால் புரோட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்கள் இந்த உபதேசத்தைத் தப்பறை என்று எண்ணி இதை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

உத்திரம். **Beam.** மத் 7^{3}. **வீடு** காண்க.

உபத்திரவம். **Persecution.** ஆதி கிறிஸ்தவர்களின் உபத்திரவங்களைப்பற்றித் **துன்பம்** காண்க.

உபவாசம். **Fasting.** உபவாசம் எகிப்தியர், பெர்சியர், கிரேக்கர், ரோமர் ஆகிய இவர்களுக்குள் வழக்கமாயிருந்த ஒரு சடங்காசாரம். இச்சடங்காசாரம் மனுஷன் தேவனது சமுகத்தில் தன்னைத் தாழ்த்துவதைக் குறிக்கும் ஒரு அடையாளம். உபவாசம் செய்த எந்த ஜாதியும் அதை ஒரு புண்ணியமாக எண்ணினதில்லை. உபவாசித்தல் யூதர்களுக்குப் பிரமாணமாயிருந்தது. உபவாசம் என்பது இன்னதென்று லேவி 16^{13}-ல் சொல்லியிருக்கிறது. உபவாசித்தல் என்பது தன்னைத் தாழ்த்துதலே. அதற்கொத்த சிந்தனை இல்லாமல் உபவாசிப்பது தப்பு என்று தீர்க்கதரிசிகள் தெளிவாய்ச் சொல்லுகிருர்கள். ஏசா 58^{4} யோவே 2^{12}. மோசேயின் நியாயப்பிரமாணத்தில் பாவ நிவிர்த்திக்காகப் பெரிய நாளில்மாத்திரம் எல்லா ஜனங்களும் உபவாசிக்கவேண்டுமென்று கட்டளை யிடப்பட்டது. லேவி 16^{29}ஹ 23^{27} அப் 27^{9}. பின்பு அபஜெயமாகிலும் (நியா 20^{26} 1 சாமு 20^{34}), வாதைகளாகிலும் (யோவே 1^{14}), தேவன் ஜனங்களை பயமுறுத்துதலாகிலும் (2 சாமு 12^{16} 1 இரா 21^{27}), ஜனங்களுக்குப் பொதுவான பாவமாகிலும் (1 சாமு 7^{6} யோவே 2^{12}) நேரிட்ட காலத்திலும் எல்லா இஸ்ரவேலரும்

உபவாச நாட்களை ஏற்படுத்தினார்கள். சிறை யிருப்புக்குப் பிந்தினகாலத்தில் இஸ்ரவேலரின் ராஜ்யங்கள் அழிக்கப்பட்ட பெரிய சம்பவங்களை நினைப்பூட்டின நாட்களும் வருஷா வருஷம் உபவாச நாட்களாகக் கொண்டாடப்பட்டன. சக 7^{5} 8^{19}. கல்தேயர் முதல் முதல் பட்டணத்துக்குள் வந்த நாலாம் மாதத்திலும் (எரே 52^{6}ஃ), தேவாலயமும் பட்டணமும் அழிக்கப்பட்ட ஐந்தாம் மாதத்திலும் (2 இரா 25^{8}ஃ எரே $52^{12, 13}$), கெதலியாவும் அவனோடிருந்த பல யூதர்களும் கொன்றுபோடப்பட்ட ஏழாம் மாதத்திலும் (எரே 41^{1}ஃ), எருசலேமைச் சுற்றி முற்றிக்கை போடத் தொடங்கின பத்தாம் மாதத்திலும் (எரே 41^{1}) உபவாச நாட்கள் கொண்டாடப்பட்டன. இந்த உபவாச நாட்களைக் கொண்டாடுவது முழு ஜனங்களுக்கும் பிரமாணமாயிற்று. சரித்திரக்காரனாகிய யோசேப்பு (*Josephus*) சொல்லுகிறபடி இதற்குப் பிறகு பெரிய இக்கட்டு நேரிட்டகாலங்களில் பெரிய பட்டணங்களிலுள்ளவர்களும் பல நாடுகளிலுள்ளவர்களும் தனி உபவாச நாட்களைத் தங்களுக்கு ஏற்படுத்தினார்கள். மேலும் மழை பெய்யாவிட்டால் எருசலேமிலிருந்த ஆலோசனைச் சங்கத்தார் ஜனங்களெல்லாம் உபவாசிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்கள். ஜனம் சிறை யிருப்புக்குப் பிந்தினகாலத்தில் நியாயப்பிரமாணத்தால் ஏற்படுத்தப்பட்ட உபவாச நாட்களைத்தவிர வரவர அதிகமதிகமாய் இன்னும் விசேஷித்த காரணங்க ளில்லாமலும் வேறு உபவாச நாட்களையும் ஏற்படுத்தி, உபவாசித்தலைப் புண்ணியமாக எண்ணிக்கொள்ளத் தொடங்கினார்கள். சக 7^{5}ஃ லூக் 2^{37} மத் 9^{14}. விசேஷமாக பரிசேயர் இப்படிச் செய்தார்கள். மத் 9^{14} லூக் 18^{12}. பரிசேயர் மோசே சீனாய் மலையின்மேல் ஏறின வாரத்தின் ஐந்தாம் கிழமையிலும், அவன் திரும்பி இறங்கின இரண்டாம் கிழமையிலும் உபவாசித்தார்கள். சாயந்தரத்திலிருந்து சாயந்தரமட்டும் உபவாசம் பண்ணினார்கள். சில சமயங்களில் இதைவிட அதிகநேரம் உபவாசித்தார்கள். எஸ்தர் 4^{15}ஃ வசனங்களின்படி யூதர்கள் மூன்றுநாள் உபவாசமா யிருந்தார்கள். உபவாசித்தவர்கள் போஜனபான முதலிய வற்றையும் சாப்பிடாமலிருந்தார்கள். நியாயப்பிரமாணத்தினால் ஏற்படாத உபவாச நாட்களிலோசில ஆகாரத்தைமாத்திரம்நிறுத்திவைத்தார்கள். தானி 10^{2} ஃ. ஆயினும் சில நாட்களாய் ஆகாரம் ஒன்றும் தொடாதவர்களும் இருந்தார்கள். எஸ்தர் 4^{15}.

பாவநிவிர்த்தி செய்யும் நாளில் வழக்கமான வஸ்திரத்துக்கு மேலே சாவு வஸ்திரம் என்னப்பட்ட ஒரு வெள்ளை உடுப்பையும் தலையின்மேலே சாவு குல்லா என்னப்பட்ட ஒரு குல்லாவையும் ஜனங்கள் தரித்துக்கொள்வது வழக்கம். அவ்வழக்கத்தினால் பாவநிவிர்த்தி செய்யும் நாளில் நடந்த உபவாசம் 'வெள்ளை உபவாசம்' என்னப்பட்டது.

அதிக விசனத்துக்கும் மனஸ்தாபத்துக்கும் அடையாளமாக அநேகம்பேர் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கறுப்பு இரட்டைக் கட்டிக்கொண்டு சாம்பலைத் தலையின்மேல் தெளித்துக்கொள்வார்கள். 2 சாமு 13^{19} யோவே 1^{13}. கறுப்புக்கம்பளி போட்டுக்கொண்டு உபவாசிப்பது 'கறுப்பு உபவாசம்' என்னப்பட்டது.

உபவாசித்தல் புதிய ஏற்பாட்டில் பிரமாணமாகக் கட்டளை யிடப்பட்டிருக்கிறதில்லை. யோவான்ஸ்நானனும் அவன் சீஷர்களும் அடிக்கடி உபவாசித்தார்கள். ஆயினும் இயேசு மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா என்றார். மத் 9^{15}. மணவாளன் அவர்களைவிட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்போது தோழர் உபவாசிப்பார்கள். இதினால், அவர் தாம் இறந்தபின் கிறிஸ்தவர்கள் உபவாசிக்க வேண்டுமென்று சொல்லாமல் தாம் அவர்களோடு இராதகாலத்தில் அவர்களுக்குத் துக்கமும் கஷ்டமும் என்கிற ஞான உபவாசம் வரும் என்று உவமானமாய்க் கருதுகிறார். பழைய ஏற்பாட்டுக்குரிய உபவாச சடங்கைத் தமது சீஷர்களுக்குப் பிரமாணமாக இயேசு வைக்கமாட்டார் என்பது மத் $9^{16, 17}$-ம் வசனங்களுக்குப் பின் வரும் இரண்டு உவமைகளினால் விளங்கும். ஆகையால் உபவாசத்தைப்பற்றிய கட்டளை நீக்கப்பட்டிருக்கிறது என்பதற்குச் சந்தேகமில்லை. அப்போஸ்தலரும் பூர்வ கிறிஸ்தவர்களும் அடிக்கடி உபவாசித்தார்கள். அப் 13^{2} 14^{23} 1 கொரி 7^{5} 9^{27} 2 கொரி 6^{5} ஃ. ஆயினும் ஜெபத்தோடு சம்பந்தமாக மாத்திரம் சுயசித்தங்கொண்டு அப்படிச் செய்தார்கள். ஏனெனில் உபவாசம் அப்போஸ்தலரால் ஒரு இடத்திலும் பிரமாணமாக ஏற்படுத்தப்பட்டதுமில்லை; புண்ணியமாக எண்ணப்பட்டதுமில்லை. அதற்கு எதிரிடையாகப் பவுல் அப்போஸ்தலன் தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்பும் அல்ல (ரோ 14^{17}) என்று சொல்லுகிறான். மேலும் போஜனத்தையும் பானத்தையுங்குறித்து ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதாக என்பது அவன்

நமக்குச் சொன்ன புத்திமதி. கொலோ 2^{16} கலா $4^{9,10}$. அதுவுமல்லாமல் மனச்சாட்சியைப் பாரப்படுத்துகிற போஜனப் பிரமாணங்களைப் பிசாசுகளின் உபதேசம் என்கிருன். 1 தீமோ 4^{1-3}. போஜன பானத்தைக் குறித்து அப்போஸ்தலர் கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கிறது இன்னது என்று பேதுரு சொல்லுகிருன். 1 பேது 4^{7}. அதாவது தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுகிறதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் என்பதே. இதற்குப் போஜனத்திஞலாவது பானத்திஞலாவது தடை உண்டாகாதபடிக்கு ஜாக்கிரதையாயிருப்பது அவசியம் என்பது அர்த்தம். ஆயினும் அப்போஸ்தலர் உபவாசத்துக்குச் சம்மதித்ததால் பூர்வ கிறிஸ்தவர்களும் உபவாசத்தை நீக்காமல் அதை ஆவி மாம்சத்தை அடக்கும்படிக்கான எத்தனமாகவும், பாவ சங்கீர்த்தனத்தோடு சம்பந்தமாகவும் வழங்கிவந்தார்கள். ஆனுல் அவர்கள் அதை ஒருக்காலும் புண்ணியமாக நினைக்கவுமில்லை; பிரமாணமாக வைக்கவுமில்லை. உபவாசித்தல் திருச்சபையில் முதல் இரண்டு நூற்ருண்டுகளில் ஒவ்வொருவனுடைய இஷ்டத்தின்பிரகாரம் விடப்பட்டிருந்தது. மூன்ரும் நூற்ருண்டு முதல் கிறிஸ்தவ சபையில் உபவாசம் பிரமாணமாயிற்று. நாலாம் நூற்ருண்டில் சில போதகர் உபவாசித்தல் பாவத்தை நிவிர்த்திசெய்யும் புண்ணியம் என்று போதிக்கத் துவங்கிஞர்கள். இந்த அபிப்பிராயம் ரோமர் சபையிலும் கிரேக்கர் சபையிலும் நிலைபெற்றது. யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்யத் தீர்மானித்த புதன் கிழமையும், இயேசு மரித்த 'பெரிய வெள்ளிக்கிழமையும்' அந்தக் காலமுதல் உபவாச நாட்களாயிருந்தன. 'பெரிய வெள்ளிக்கிழமைக்கு' முந்தின நாற்பது நாட்கள் உபவாச நாட்களாயிருந்தது. மோசே (யாத் 34^{28}) நாற்பது நாள் உபவாசத்திஞலும், இஸ்ரவேலர் நாற்பது வருஷம் வஞந்தரத்தில் பயணம் செய்ததிஞலும், கிறிஸ்து வஞந்தரத்தில் நாற்பது நாள் உபவாசித்ததிஞலும், ஒருசந்தி உபவாசம் நாற்பதுநாளாயிருக்கவேண்டுமென்று சிலர் சொல்லுகிறதுண்டு. இன்னும் வேறே ஒருசந்தி காலங்களும் ஏற்படுத்தப்பட்டன.

ஒரே ஒரு உபவாசநாளாயிருந்தபட்சத்தில் ஆகாரத்தையெல்லாம் நிறுத்துவது பிரமாணமாயிருந்தது. பதினைந்தாம் நூற்ருண்டு முதல் சாயந்தரம் ஆறுமணிமுதல் மறுநாள் மத்தியானம்வரையில் மாத்திரம் உபவாசமாயிருக்கவேண்டும். பின்பு கண்ட யாவற்றையும் சாப்பிடலாமென்று கட்டளையிடப்பட்டது. அநேகநாளான உபவாசம் செய்கிறவர்கள் பட்டினியாயிருந்து சமயா சமயங்களில் கேவலமான சாப்பாட்டைமாத்திரம் சாப்பிட்டார்கள். கடைசியாக Trent என்னும் பொதுக் கூட்டம் சாதாரண ஒருசந்தி நாட்களிலாகிலும் காலத்திலாகிலும் பழம், பால், மாவு, மீன், முட்டை, வெண்ணெய் ஆகிய இவற்றைச் சாப்பிடலாமென்று கட்டளையிட்டது. ஆயினும் காணிக்கையாகப் பணம் கொடுத்தவர்களுக்கு வேறே ஆகாரத்தையும் சாப்பிடும்படிக்கு 'வெண்ணெய்க் காகிதங்கள்' என்னப்பட்ட சீட்டுகளினுல் உத்தரவு (*Indulgences*) கொடுக்கக் கண்காணிகளுக்கும் குருக்களுக்கும் அதிகாரம் இருந்தது.

திருச்சபை சீர்திருத்தம் (*Reformation*) ஆனபின், சுவிசேஷ திருச்சபை (*The Reformed Church*) சுத்தவேதத்தின் பேரிலே உபவாசம் பிரமாணம் அல்லவென்றும் புண்ணியம் அல்லவென்றும் போதித்தும், உபவாசத்தைத் தள்ளினதில்லை. லூதர் (*Luther*) உபவாசமுதலிய சரீர ஒடுக்கம் புறம்பான நல்லொழுக்கம்தான்; சரீரம் நிறைந்திருந்தால் பிரசங்கிப்பதற்கும், ஜெபிப்பதற்கும், படிப்பதற்கும், நன்மை செய்வதற்கும் உதவாது. ஆதலால் புண்ணியம் அடையும்படிக்கு அல்ல, பராபரனுடைய வார்த்தையைக் கைக்கொள்ளவும், ஆவிக்கு இடம் இருக்கவும்மாத்திரம் உபவாசமாயிருக்கலாம். மற்றப்படி உபவாசம் வேண்டியதில்லை. இப்படியிருக்க உபவாசத்தில் இறைச்சியோ, மீனே, கொஞ்சம் நாளோ, அநேகம் நாளோ என்று கவனிப்பது வீண் என்று சொன்னுன். கல்வீனும் (*Calvin*) லூதரைப்போல் போதித்தான். ஆதலால் சுவிசேஷ திருச்சபையில் உபவாச ஒழுங்கு இல்லை. ஆகிலும் திரு இராப்போஜனத்துக்குப் பட்டினியாய்ப் போவதும், தபசு நாட்களிலும் காலத்திலும் மட்டாகச் சாப்பிடுவதும் அநேகருக்கு வழக்கம். அப்படிச் செய்வது தேவ வசனத்தைக் கேட்பதற்கும் ஜெபிக்கிறதற்கும் மாமிசத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறதற்கும் ஏதுவாய் இருக்கும் என்று அனுபவத்தில் கண்டால் சந்தோஷமாய் அப்படிச் செய்யலாம்.

உபாகமம். **Deuteronomy.**

1. **உற்பத்தி.** இந்தப் புஸ்தகத்தில் மூன்று பிரசங்கங்களும், இரண்டு சங்கீதங்களும், (i) 1^{6}-4^{40} (ii) 5^{1}-26^{19} 28^{1-68} (iii) 29^{2}-30^{20} (iv) 32 அதி (v) 33 அதி. சில சரித்திரங்களும் எழுதியிருக்கின்றன.

பூர்வீககாலத்தில் புஸ்தகங்கள் எழுதின வர்களில் சிலர் விசேஷமாய் ஒரு உபதேசத்தை உரைக்க விரும்பினுல் அவர்கள் தாங்கள் உரைத்த உபதேசத்தைத் தாவீது, எஞேக்கு, ஏசாயா முதலிய மகான்கள் கூறிஞர்கள் எனப் பாவித்து வாஸ்தவமாய்த் தாங்கள் எழுதினவைகளை அந்த மகான்கள் எழுதினதாகச் சொல்வது தப்பிதம் அல்ல என்று நினைத்தார்கள். மோசே இந்த ஆகமத்தில் கண்ட இந்தமாதிரியான பிரசங்கங்களையும் சங்கீதங்களையும் சொல்லியிருப்பான் என்ருலும், அவன் இதில் தன் மரணத்தைப்பற்றி எழுதயாட்டான் என்றும், இந்தப் புஸ்தகத்திலிருக்கும் பாஷைக்கும் அவன் வழங்கும் பாஷைக்கும் வித்தியாசம் உண்டென்றும், இதில் சொல்லியிருக்கும் 'மேடைகள்' சடங்காசாரங்கள் ஆகிய இவைகளைக் குறித்த புத்தி போதனைகள் அவன் காலத்தில் அல்ல பிற்காலத்திலே உண்டானவைகள் என்றும் அறிந்து வேத சாஸ்திரிகள் அநேகர் இதில் மோசே போதித்தவைகள் அநேகம் இருந்தும் இந்தப் புஸ்தகம் மோசேயினுல் அல்ல, பிற்காலத்தில் எழுதப்பட்டது என்று அபிப்பிராயம் கொள்ளுகிருர்கள். இதை எழுதினவன் யார் என்று நமக்குத் திட்டமாய்த் தெரியாது.

2. **காலம்.** இஸ்ரவேலின் சரித்திரத்தை நாம் ஆராயுமிடத்து யோசியா செய்த மார்க்கதிருத்தத்துக்கு கி-மு 621-ளு தேவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட பிரமாணப் புஸ்தகம் ஆதாரமாய் இருந்தது என்று அறிவோம். 2 இரா 22^{8}. இந்தப் புஸ்தகம் உபாகமத்தில் 5-ம், 28-ம் அதி. மட்டும் உள்ள பாகம் எனத் தோன்றுகிறது. வேத சாஸ்திரிகள் அநேகர் இந்தப் புஸ்தகம் பெரிய தீர்க்கதரிசியாகிய ஏசாயா (கி-மு. 741-701-ளு), பயபக்தியுள்ள எசேக்கியா (கி-மு. 726-697-ளு) இவர்களுடைய காலத்தில் எழுதப்பட்டது என்று நினைக்கிருர்கள். ஆனுல் 1909-ளு நவில் (*Naville*) என்பவன் எகிப்தியர் தங்கள் தேவாலயத்தைக் கட்டினபோது அதின் சுவர்களில் அல்லது அஸ்திபாரங்களில் சன்மார்க்கத்துக்குரிய புஸ்தகங்களைப் புதைத்துவைத்தார்கள் என்று தெரியப்படுத்தி, எகிப்து தேசத்தின் வழக்கங்களை நன்ருய் அறிந்த சாலொமோன் ராஜா தேவாலயத்தைக் கட்டுகையில் அதின் சுவரிலே பிற்காலத்தில் யோசியா கண்டெடுத்த நியாயப் பிரமாணமாகிய இந்தப் புஸ்தகத்தைப் புதைத்திருப்பான் என்று காட்டுகிருன். இது சரியாஞல் இந்த உபாகமப் புஸ்தகம் கி-மு 975-ளு எழுதப்பட்டது என்று நினைக்கவேண்டும். (*Expos. Times*, Oct. 1909. p. 45.)

3. **இந்தப் புஸ்தகத்தின் பொருட் சுருக்கம்.**

(*a*) 5-11 அதி. யேகோவா அருளின வாக்குத்தத்தம், அவர் செய்த தண்டனை, அவருக்கும் தமது ஜனங்களுக்கும் உள்ள சம்பந்தம், ஜனங்கள் அவருக்குக் காட்ட வேண்டிய கீழ்ப்படிதல், பரிசுத்தமாய் இருத்தல்.

(*b*) 12-26 அதி. விக்கிரகாராதனை, பரிசுத்தஸ்தலங்கள், லேவியர்கள், புசிக்கத்தக்கவைகள், புசிக்கத்தகாதவைகள், அடிமைத்தனம், பண்டிகைகள், பலிகள், தீர்க்கதரிசிகள், அடைக்கலப்பட்டணங்கள், யுத்தம், விவாகம், காணிக்கை முதலியவற்றைப் பற்றிய பிரமாணங்கள்.

(*c*) 28^{1-46}. இப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு ஆசீர்வாதமும் கீழ்ப்படியாதவர்களுக்குச் சாபமும் கூறியிருக்கின்றன.

இந்த மூன்று பிரிவுகளும் சேர்ந்த பிரமாணங்கள் தேவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட 'நியாயப்பிரமாணப் புஸ்தகம்' என்பது அநேக வேதசாஸ்திரிகளின் அபிப்பிராயம். நாம் உபாகமத்தின் போதனையைப் பார்த்தால் அஷேரா, விக்கிரகாராதனை, அந்நிய தேவர்களின் வணக்கம், வேசித்தனம், பில்லிசூனியம், நரபலி ஆகிய அசுத்த செய்கைகளிலிருந்து விலகி யேகோவாவின் வணக்கத்தில் பரிசுத்தமாய் இருக்கவேண்டும் என்பது ஆக்கியோனின் நோக்கம் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இதில் யேகோவாவின் பரிசுத்த தன்மையையும் அவருடைய ஜனங்கள் இருக்கவேண்டிய பரிசுத்தத்தையும்பற்றி விவரமாய்ச் சொல்லியிருப்பதிஞலே யேகோவா ஒருவர்தான் வணக்கத்துக்குரியவர் என்றும், அவரைப் பல இடங்களில் அல்ல ஒரே இடத்தில் (12^{11} 17^{18} ஹ) வணங்க வேண்டியது என்றும் எல்லாருடைய மனதிலும் பதியும்படி செய்வதே அவனுடைய விருப்பமாய் இருந்தது.

மேலும் அவன் மேடைகளில் நடந்த ஆராதனைகளை வெறுத்ததினுலே கானனியரின் வணக்கத்துக்கும் யேகோவாவை வணங்குதலுக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தைக் காட்டியிருக்கிருன்.

4. **மீதியான பாகங்கள்** 4^{1-40}. ஜனங்களுக்கு எச்சரிக்கையாகச் சொன்ன பிரசங்கம்.

27-ம் அதி. உடன்படிக்கை செய்து அதை வணக்கமாய் ஒப்புக்கொண்டதைப் பற்றியது.

29-ம் அதி. 'மோவாப் தேசத்தில் செய்த உடன்படிக்கை.' இதில் யேகோவாவுக்குக்

கீழ்ப்படியாதவர்களின் அழிவைப்பற்றிச் சொல்லியிருக்கிறது.

32-ம் அதி. இஸ்ரவேலருக்குச் சொன்ன புத்திபோதனைகள் அடங்கிய பாட்டு.

33-ம் அதி. மோசேயின் ஆசீர்வாதம். யேகோவா இஸ்ரவேலருக்கு அருளின நன்மைகளைக் குறித்துப் பாடின சங்கீதம்.

5. இப்புஸ்தகத்தில் காணப்படும் முக்கிய போதனைகள்.

(*a*) யேகோவாவே உலகத்தில் எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிறார். 10^{14}. ஆதலால் விக்கிரகாராதனை மகாபாவம். 6^{14} ழ.

(*b*) அவருடைய சித்தம் சன்மார்க்கப் பிரமாணமாம். 8^{4}.

(*c*) அவர் தமது ஜனங்களை நேசிக்கிறார். 7^{7}. ஆதலால் அவர்கள் சந்தோஷத்தோடு அவரை வணங்கி நேசிக்கவேண்டும். 6^{5} 12^{18}.

(*d*) அவர்கள் மற்றவர்களுக்கும் மிருக ஜீவன்களுக்கும் காட்டவேண்டிய இரக்கம். 22^{1} 24^{10}.

(*e*) யேகோவா தமது இலட்சணங்களைத் தமது கிரியையினாலே காட்டியிருக்கிறார். ஆதலால் அவருடைய ஜனங்கள் யேகோவா செய்தவைகளைத் தங்கள் மனதில் வைப்பது அவசியமெனச் சொல்லியிருக்கிறது. 6^{6} 9^{5} 9^{22} 11^{19}.

(*f*) அதேவண்ணமாய்ப் பண்டிகைக் காலங்களிலும் யேகோவா செய்தவைகளைக் குறித்து ஞாபகமுள்ளவர்களாயிருந்து, கானானியர் வணங்கின பாகால் முதலிய தேவதைகள் அல்ல, யேகோவா அத்தேசத்தின் பலன்களைக் கொடுத்திருக்கிறார் என்று நினைவுகூருவது அவர்களுடைய விசேஷித்த கடமை.

(*g*) இவைகளைக்குறித்துத் தங்கள் பிள்ளைகளுக்கு விவரமாய்ப் போதிக்கவேண்டியது அவசியம். 6^{20} 26^{5}.


உப்பரிகை. **Pinnacle, Roof.** 2 சாமு 11^{2}. **வீடு** காண்க. தேவாலயத்து உப்பரிகை. மத் 4^{5}. **தேவாலயம்** காண்க.

உப்பா. **Huppah.** 1 நாளா 24^{13}.

உப்பாம். **Hupham.**=உப்பீம். ஆதி 46^{21} எண் 26^{39}.

உப்பார்சின். **Upharsin.** மேனே காண்க.

உப்பு. **Salt.** சாக்கடலில் ஏராளமான உப்பு உண்டு. அதற்குச் சமீபத்தில் உப்பளங்கள் இருந்தன. செப் 2^{9}. சாப்பாட்டில் உப்பை உபயோகித்தார்கள். பிள்ளை பிறந்த நாளில் அதை உப்பால் சுத்திகரிப்பார்கள். பல்நோவுக்கு உப்புக்கல் வைப்பார்கள். காய்கறிகள் முதலானவை கெட்டுப் போகாதபடி உப்புப் போட்டுப் பத்திரப்படுத்துவார்கள். படைக்கும் எல்லாப் பலிகளோடும் உப்பையும் படைப்பார்கள். லேவி 2^{13}. தூபத்திலும் தேவசமுகத்து அப்பங்களிலும் உப்புச் சேர்த்திருந்தது. இவைகளினால் உப்புக்குக் கெட்டுப்போகாமல் காக்கிறதும் சுத்தமாக்குகிறதுமான தன்மை இருக்கிறது என அறியலாம்.



உப்புக்கடலும் அதின் மேற்கரையிலுள்ள கிறிஸ்தவ மடமும்.

இந்தக் கருத்தாகவே இயேசுகிறிஸ்து 'நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்' என்று சொன்னார். மத் 5^{13}.

சாக்கடலின் ஓரத்தில் உப்பு அதிகமாய் இருப்பதினாலே அதின் கரைகளில் புல் பூண்டுகள் முளைப்பதுமில்லை, அதில் மீன்கள் வசிப்பதுமில்லை. ஆகையால் உப்பு ஜீவ உற்பத்திக்கு இடங்கொடாது என்றறிந்து அழிவைக் குறிக்கும்படி அது உபமானமாய்ச் சொல்லியிருக்கிறது என்று உத்தேசிக்கலாம். உபா 29^{23} நியா. 9^{45}. 'உப்பின் உடன்படிக்கை.' **உடன்படிக்கை** காண்க.

உப்புக்கடல். Salt sea. இது மற்றக் கடல்களைப்பார்க்கிலும் அதிக உப்பாய் இருக்கிறதினாலே 'உப்புக்கடல்' (*Salt sea*) என்றும், சோதோம் முதலான சமபூமியில் இருக்கிறதினாலே 'சமவெளியைச்சேர்ந்த கடல்' என்றும், யூதேயா நாட்டிற்குக்கிழக்கே இருக்கிறதினாலே 'கீழ்க்கடல்' என்றும், அதில் மீன்கள் முதலிய பிராணிகள் இல்லாததினால் 'சாக்கடல்' என்றும் சொல்லப்படுகிறது. ஆதி 14^{3} உபா 4^{48} எசே 47^{18}. இதற்கு வேதத்தில் 'சாக்கடல்' என்று சொல்லப்படுகிறதில்லை.



உப்புக்கடலின் தென் கரை.

அரபியர் இதை 'லோத்தின் கடல்' என்று சொல்லுவார்கள். இதின் நீளம் 47 மைல், அகலம் $2\frac{3}{4}$-9 மைல். இது ஆழமான பள்ளத்தாக்கிலே இருக்கிறதினால் மத்தியதரைக் கடலின் நீர்மட்டத்துக்கு 1,293 அடி கீழே இருக்கிறது. இதின் தண்ணீர் வேறிடங்களுக்குப் பாயாமல் சூரிய வெப்பத்தினால் வற்றிப்போகிறதினால் இதில் உப்பு அதிகமாய் உண்டு. இதின் ஓரத்திலுள்ள சில இடங்களில் பாய்கிற நல்ல நீர் ஊற்றுகளில் மாத்திரம் மீன்கள் உண்டு.

உப்புப்பட்டணம். City of salt. உப்புக்கடலின் மேற்குக் கரையிலுள்ள யூதாவில் ஒரு ஊர். யோசு 15^{62}.

உப்புப்பள்ளத்தாக்கு. Valley of salt. தாவீதும் அமச்சியாவும் ஏதோமியரை முறியடித்த இடம். இது உப்புக்கடலின் தெற்கில் இருக்கிறது. 2 சாமு 8^{13} 2 இரா 14^{7}.

உம்தா. Humtah. யோசு 15^{54}.

உம்மா. Ummah. யோசு 19^{30}.

உம்ரி. Omri.

1. பென்யமீன் கோத்திரத்தானாகிய ஒருவன். 1 நாளா 7^{8}.

2. யூதா கோத்திரத்தான் ஒருவன். 1 நாளா 9^{4}.

3. = 'ஒம்ரி.' இசக்காரின் ஒரு பிரபு. 1 நாளா 27^{18}.

4. இஸ்ரவேலின் இராஜா. கி-மு. 887-875-வரை.

இவன் பாஷா என்பவன் கொல்லப்பட்ட பிறகு ராஜ்யத்தில் உண்டான உட்சண்டையில் ஜெயம் அடைந்து ராஜ்யபாரத்தைப் பெற்று, சமாரியாவைத் தன் முக்கிய பட்டணமாக்கி, அங்கே கோட்டைகொத்தளங்களைக் கட்டினான். இவன் பெனிக்கேயரோடு உடன்படிக்கைபண்ணி, தன் மகன் ஆகாப் என்பவனுக்குப் பெனிக்கேயரின் ராஜ குமாரத்தியாகிய யேசபேலை விவாகம் செய்து வைத்தான். இவன் மோவாப் ராஜ்யத்தைத் தன் வசமாக்கினான். தூரமான இடத்திலுள்ள அசீரியர்கள் இஸ்ரவேல் தேசம் 'ஒம்ரியின் வீடாகிய தேசம்' என்று அநேக காலம் சொல்லிவந்ததிலிருந்து ஒம்ரியின் மகத்துவத்தை அறியலாம். இவனுடைய பேத்தி அத்தாலியாள் யூதாவின் ராஜாவாகிய யோராமின் மனைவி. 1 இரா 16^{18-30} 2 இரா 8^{26}.

உயிர்த்தெழுதல். Resurrection. Future life.

1. **பழைய ஏற்பாட்டில்:**—எபிரெயர்கள் முதலில் மனிதரிலுள்ள ஜீவன் மரணத்திற்குப் பிறகு இருக்கும், அல்லது அற்றுப்போகும் என்பதைப்பற்றி ஒன்றும் தீர்க்கமாய்ச் சொல்லவில்லை. சங்கீதக்காரரும், தீர்க்கதரிசிகளும் இதைக்குறித்து வரவரத் தெளிவாய் ஆராய்ந்தறிந்து, மனிதர் மரணத்திற்குப் பிறகும் உயிரோடிருந்து, இவ்வுலகத்திற் தாங்கள் செய்த நன்மை தீமைகளுக்காகச் சுபாசுபங்களை அனுபவிப்பார்கள் என்று போதித்தார்கள். எபிரெயர்கள் மனிதர் மறு உலகத்

6B

தில் சரீரமில்லாமல் பாக்கியம் அடையமாட்டார்கள், ஆகையால் சரீரம் இருக்கவேண்டியது அவசியம் என்று நினைத்தார்கள். ஆதி 5^{24} 2 இரா 2^{11} யோபு 14^{13} 19^{25} சங் 16^{10}. ஏசியா தீர்க்கதரிசி உயிர்த்தெழுதல் உண்டு என்பதைப்பற்றி நம்பிக்கையுடையவனாய் இருந்தான். ஓசி 6^{2} 13^{14}. ஆனால் இவனும் எசேக்கியேலும் (37^{1}) சொன்ன வாக்கியங்கள் மரித்தவர்களின் உயிர்த்தலைப்பற்றியல்ல, இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றிப் பேசியிருக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள். ஏசாயா முதற்பாகத்தில் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றித் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. எசா 26^{19}. ஆனால் இஸ்ரவேலருக்குத்தவிர புறஜாதியாருக்கு உயிர்த்தெழுதல் இல்லை என்று அவன் எண்ணியிருக்கலாம். எசா 26^{14}. கடைசியாய் தானியேல் தீர்க்கதரிசி நீதிமான்களும் பாவிகளும் மரணத்திற்குப் பிற்பாடு உயிர்த்தெழுவார்கள் என்று சொல்லுகிறான். தானி 12^{2}.

2. கி-மு. 100-வருஷத்தில் எபிரெயர்கள் உயிர்த்தெழுதல் உண்டு என்பதைப்பற்றி உறுதியாய் நம்பினார்கள். 2 மக் 7^{14} 12^{43} 14^{46}.

3. இயேசுகிறிஸ்துவின் காலத்தில் சாதாரணமானவர்களும் மரித்தவர்கள் கடைசிநாளிலே உயிர்த்தெழுவார்கள் என்று நம்பினார்கள். யோவா 11^{24}.

4. **புதிய ஏற்பாடு:**—மரணத்திற்குப்பிறகு மனிதர் மறுபடியும் உயிர்த்தெழுந்திருப்பார்கள் என்பது இயேசுவின் போதனையில் எங்கும் அடங்கியிருக்கிறது. ஆயினும் மரணத்திற்குப்பின் நமது ஆத்துமா சரீரத்தோடு மறுபடியும் கூடியிருக்குமா என்பதற்கு அவர் தீர்மானமாய் ஒன்றும் சொல்லியிருக்கவில்லை. அப்படியிருக்க, அவரே மறுபடியும் உயிர்த்தெழுந்து, முன்போலச் சாப்பிட்டபடியினாலே இவ்வுலகத்தில் நமக்கிருக்கும் சரீரத்திற்கும் மரித்தபிறகு இருக்கும் சரீரத்திற்கும் பல வித்தியாசம் இருக்குமானாலும், இரண்டிற்கும் ஒற்றுமை உண்டு என்று சிலர் நினைக்கிறார்கள். மத் 8^{11} 10^{28} மாற் 12^{25} லூக் 13^{29} 14^{14} 20^{35} 24^{41} யோவா 5^{21} $6^{40.44}$ 11^{24} $20^{19.20}$.

அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலைப்பற்றி அடிக்கடி சாட்சி கொடுத்தார்கள். அப் 2^{24} 3^{15} 5^{30}மு. அவர்கள் நாம் எல்லாரும் மரணத்திற்குப் பிற்பாடு உயிரோடிருப்போம் என்று நம்பினார்கள். 1 கொரி 15^{3} எபி 6^{1} பிலி 3^{21} வெளி 20^{5}. பரி. பவுல் விதைக்கும் பயிருக்கும் சம்பந்தம் எப்படியிருக்கிறதோ, அப்படியே ஜென்ம சரீரத்திற்கும் ஆவிக்குரிய சரீரத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று காட்டுகிறான். 1 கொரி 15^{35-41}. மற்ற அப்போஸ்தலர்கள் சரீரத்தைப் பற்றி அவ்வளவு விவரமாய்ச் சொல்லவேயில்லை. எல்லாரும் கிறிஸ்து தம்மை நம்பினவர்களுக்கு அருளும் நித்திய ஜீவனாகிய உயிர்த்தெழுதலைப்பற்றிப் பேசுகிறார்கள். **இயேசுவின் உயிர்த்தெழுதல்** காண்க.

இந்தப் பதத்தினால் 'உயிர்த்தெழுதல்' ஒரு நேரத்தில் நமக்கு உண்டாகும் மாறுதலைக் காட்டுவதும் அல்லாமல் நாம் பிரவேசிக்கும் நித்திய ஜீவன் என்னும் நிலைமையையும் அடிக்கடி காட்டுகிறது.

உயிர்த்தெழுதல். The Resurrection. **இயேசுவின் உயிர்த்தெழுதல்** காண்க.

உரல். Mortar. எண் 11^{8} யாத் 30^{36} நீதி 27^{22}.

உரியா. Uriah, Urijah. ['யேகோவாவின் சுவாலை' அல்லது 'யேகோவா என் பிரகாசம்'].

1. தாவீதின் முப்பது போர்வீரர்களில் ஒருவன். இவன் அந்நிய ஜனத்தானாகிய ஏத்தியனானாலும் இவன் யேகோவாவை வணங்கினவன் என்று இவன் பெயரினால் அறிந்துகொள்ளலாம். இவன் மனைவியைத் தாவீது தனக்கு மனைவியாக்கினான். 2 சாமு 11^{1}-12^{15}.

2. ஆகாசின் காலத்திலுள்ள ஒரு பிரதான ஆசாரியன். எசா 8^{2} 2 இரா 16^{10}.

3. ஒரு தீர்க்கதரிசி. எரே 26^{20}.

4. ஒரு ஆசாரியன். நெகே 3^{4}.

5. எஸ்றாவின் தோழர்களில் ஒருவன் நெகே 8^{4}.

உருள். Wheel. 1 இரா 7^{30-32}. **சக்கரம்** காண்க.

உரோமாபுரியாருக்கு எழுதின நிருபம். Epistle to the Romans. **ரோமருக்கு எழுதின நிருபம்** காண்க.

உரோமை. Rome. **ரோமாபுரி** காண்க.

உர்பானு. Urbanus. ரோமாபுரியிலுள்ள அடிமைகளுக்கு வழக்கமாய்ச் சொல்லும் ஓர் பெயர். ரோமை ராயனுடைய அரமனையிலுள்ள சிலருக்கும் இப்பெயர் வழங்கிவந்தது. ரோ 16^{19}.

உலகம், பூமி, பூச்சக்கரம், இம்மை, பிரபஞ்சம். World.

• I. **பழைய ஏற்பாட்டில்:**—எபிரெயர்கள் 'வானமும் பூமியும்' என்பது சர்வலோகம் எனக் குறித்தார்கள். ஆதி 1^{1}. மனுஷர் வசிக்கும் இடத்திற்கு 'பூமி,' 'உலகம்,' 'பூச்சக்கரம்' என்று சொன்னார்கள். ஆதி 1^{1} சங் 9^{8} 24^{1} எசா 13^{11}. இது கர்த்தருடை

யது; இதில் பாவம் உண்டு; கர்த்தர் இதை நியாயம் தீர்ப்பார்.

II. **புதிய ஏற்பாட்டில்:**—'உலகம்' 'இம்மை' 'பிரபஞ்சம்' என்பவைகளைக் காட்ட இரண்டு பதங்கள் வழக்கமாய்ச் சொல்லப்படுகின்றன.

1. *Aion.* இதின் அர்த்தம் 'யுகம்.' இதினால் உலகம் துவக்கமும் முடிவும் உள்ளதென்றும், இது ஒரு காலத்துக்குத்தான் இருக்கிறதென்றும் காட்டப்படுகின்றன. ஆதி கிறிஸ்தவர்கள் உலகத்தைச் சிருஷ்டித்தவராகிய இயேசுகிறிஸ்து எல்லாவற்றிற்கும் எல்லாமுமாய் இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

'உலகம்.'—மத் 13^{39} 24^{3} எபி 1^{2} 9^{26} 11^{3} யோவா 9^{32} அப் 15^{18} தீத் 2^{12}.

'இம்மை.'—மத் 12^{32} மாற் 10^{30} லூக் 18^{30} எபே 1^{21}.

'பிரபஞ்சம்.'—லூக் 20^{34} 2 தீமோ 4^{10}.

இந்த உலகம் பொல்லாதது; இதின் அதிபதிகள் கிறிஸ்துவைக் கொன்றார்கள்; 'இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்' அவிசுவாசிகளுக்குக் கெடுதி செய்கிறான். கலா 1^{4} 1 கொரி 2^{8} 2 கொரி 4^{4}.

2. *Kosmos.* இது மனுஷர் வசிக்கும்படி கடவுள் ஒழுங்கு செய்த உலகத்தைக் குறிக்கிறது. யோவா 1^{10}. இதில் பாவம் உண்டானது. ரோ 5^{12}. இதற்குக் கிறிஸ்து வருகிறார். 1 தீமோ 1^{15}. இதிலே கிறிஸ்தவர்கள் வாசமாய் இருக்கிறார்கள். ரோ 1^{8}. இதில் கிறிஸ்து ஜெயம் அடைந்து அரசாளுவார். வெளி 11^{15}.

புதிய ஏற்பாட்டிலே உலகத்தைக்குறித்துச் சொல்லியிருக்கும் போதனை எல்லாவற்றையும் சுருக்கமாய் எழுதுவதற்குமாத்திரம் இடம் இருக்கிறது. ஆதி கிறிஸ்தவர்கள் உலகத்திற்கும் கிறிஸ்துவுக்கும் எப்பொழுதும் சண்டையிருக்கும் என்பதை மறவாமல் ஜீவித்துவந்தார்கள்.

உலகப்பொருள். Mammon. மம்மோன் காண்க.

உலக்கை. Pestle. நீதி 27^{22}.

உல்தாள். Huldah. [உக்கிர சிற்றமுள்ள சிறு கீரி]. கி-மு. 621-ல் தேவாலயத்தில் நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டெடுக்கப்பட்டபோது, யோசியாராஜா இதைக்குறித்து விசாரித்த தீர்க்கதரிசியாகிய ஒரு பெண். 2 இரா 22^{14}.

உல்லா. Ulla. 1 நாளா 7^{39}.

உவமைகள். Parables.

I. **பழைய ஏற்பாடு.**

1. யோதாம்—மரங்கள் தங்களுக்கு இராஜாவை நியமிப்பது. நியா 9^{7}.
2. சிம்சோன்—சிங்கத்தைப்பற்றிய விடுகதை. நியா 14^{14}.
3. நாத்தான்—ஆட்டுக்குட்டி. 2 சாமு 12^{1}.
4. தெக்கோவா விதவை – இரண்டு சகோதரரும் பழிவாங்கினவனும். 2 சாமு 14^{6}.
5. அடியுண்ட தீர்க்கதரிசி—காவலில் வைக்கப்பட்டவன். 1 இரா 20^{35}.
6. மிகாயா—இவன் கண்ட காட்சி. 1 இரா 22^{19}.
7. யோவாஸ்—முட்செடியும் கேதுருமரமும். 2 இரா 14^{9}.
8. ஏசாயா—திராட்சத்தோட்டம். ஏசா 5^{1}.
9. எசேக்கியேல் – சிங்கக்குட்டிகள். எசே 19^{2}.
10. எசேக்கியேல்—இரண்டுகழுகுகளும் திராட்சச்செடியும். எசே 17^{3}.
11. எசேக்கியேல்—கொதிக்கும் கொப்பரை. எசே 24^{3}.

II. **புதிய ஏற்பாடு.**

(i) மத்தேயு சுவிசேஷம்.

1. களைகள். 13^{1}.
2. புதைத்திருக்கிற பொக்கிஷம். 13^{44}.
3. விலையுயர்ந்த முத்து. 13^{45}.
4. வலை. 13^{47}.
5. இரக்கமற்ற ஊழியக்காரன். 18^{23}.
6. தோட்டத்தில் வேலையாட்கள். 20^{1}.
7. இரண்டு குமாரர். 21^{28}.
8. ராஜகுமாரனின் கலியாணம். 22^{1}.
9. பத்துக் கன்னிகைகள். 25^{1}.
10. தாலந்துகள். 25^{14}.
11. செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும். 25^{31}.

(ii) மாற்கு சுவிசேஷம்.

1. நிலத்தில் தெரியாத்விதமாய் முளைக்கும் விதை. 4^{26}.
2. விழித்திருக்கும் ஊழியக்காரர். 13^{34}

(iii) லூக்கா சுவிசேஷம்.

1. இரண்டு கடன்காரர். 7^{41}.
2. நல்ல சமாரியன். 10^{25}.
3. பாதி ராத்திரியில் அப்பத்துக்காக வந்த சிநேகிதன். 11^{5}.
4. ஐசுவரியமுள்ள மதிகேடன். 12^{16}.
5. எஜமானுக்காகக் காத்திருந்த ஊழியக்காரர். 12^{35}.

6. அநியாயமுள்ள விசாரணைக்காரன். 12^{42}.
7. கனிகொடாத அத்திமரம். 13^{6}.
8. பெருவிருந்து. 14^{16}.
9. கோபுரம் கட்டுகிறவன். 14^{28}.
10. யுத்தஞ்செய்யப்போகும் ராஜா. 14^{31}.
11. காணமல் போன வெள்ளிக்காசு. 15^{8}.
12. கெட்டகுமாரன். 15^{11}.
13. அநீதியுள்ள உக்கிராணக்காரன். 16^{1}.
14. ஐசுவரியவானும் லாசருவும். 16^{19}.
15. கீழ்ப்படிதலுள்ள ஊழியக்காரன். 17^{7}.
16. ஊக்கமுடன் விண்ணப்பம் பண்ணின விதவை. 18^{1}.
17. பரிசேயனும் ஆயக்காரனும். 18^{9}.
18. ராத்தல். 19^{13}.

(iv) மத்தேயு, லூக்கா சுவிசேஷங்கள்.

1. கன்மலையின் மேலும் மணலின் மேலும் வீடு கட்டினவர்கள். மத் 7^{24} லூக் 6^{47}.
2. புளித்தமா. மத் 13^{33} லூக் 13^{21}.
3. காணமல்போன ஆடு. மத் 18^{12} லூக் 15^{4}.

(v) மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷங்கள்.

1. மரக்காலால் மூடிவைத்த விளக்கு. மத் 5^{15} மாற் 4^{21} லூக் 8^{16}.
2. கோடித்துண்டும் பழைய வஸ்திரமும். மத் 9^{16} மாற் 2^{21} லூக் 5^{36}.
3. புது ரசமும் பழைய துருத்தியும். மத் 9^{17} மாற் 2^{22} லூக் 5^{37}.
4. விதைக்கிறவன். மத் 13^{1} மாற் 4^{1} லூக் 8^{4}.
5. கடுகுவிதை. மத் 13^{31} மாற் 4^{32} லூக் 13^{19}.
6. திராட்சத்தோட்டமும் தோட்டக்காரரும். மத் 21^{33} மாற் 12^{1} லூக் 20^{9}.
7. துளிர்விடும் அத்திமரம். மத் 24^{31} மாற் 13^{28} லூக் 21^{29}.

உவர்மண். Nitre. எரே 2^{22}. நீதி 25^{20}-ல் 'வெடியுப்பு' என்பதற்குப் பதில் 'உவர் மண்' என்றிருக்கவேண்டும்.

உளி. Chisel, R. Plane. ஏசா 44^{13}.

உளுந்து. A. V. Fitches. R. V. mg. Black Cummin. Nigella-Sativa. ஏசா 28^{25}.

உள் இந்திரியங்கள். Reins. இருதயம் காண்க.

உறுமால். Handkerchief, Napkin. அப் 19^{12}. சீலை காண்க.

உற்சாகபலி. Free-will offering. பலி காண்க.

உன்னதப்பாட்டு. The Song of Solomon.

1. **இதைப்பற்றிய அபிப்பிராயம்.**—எபிரெய பாஷையில் 'உன்னதப்பாட்டு' என்னும் பதத்துக்கு இச்சங்கீதம் எல்லாப் பாட்டுகளைப்பார்க்கிலும் மேலானது என அர்த்தமாகும். அதிகந் தேர்ந்த எபிரெய சாஸ்திரிகளாகிய ரபிமார்களில் சிலர் வேதாகமத்திலுள்ள மற்றப் புஸ்தகங்களோடு இதைச் சேர்ப்பதைப்பற்றிச் சந்தேகங்கொண்டிருந்தபோதிலும், கிறிஸ்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டின் முடிவில் இதைச் சேர்க்கலாம் என்று தீர்மானஞ்செய்தார்கள்.

இது பஸ்கா பண்டிகையின் எட்டாம் நாளில் ஜெப ஆலயங்களில் பாடுவார்கள். இதில் யேகோவா தமது ஜனமாகிய இஸ்ரவேலரையும், இஸ்ரவேலர் யேகோவாவையும் நேசிக்கிறதைப்பற்றிச் சொல்லியிருக்கிறது என்று எபிரெயர் அபிப்பிராயம் கொண்டதினால் இப்படி அவர்கள் செய்தார்கள் என்று நினைக்கவேண்டும்.

அப்படியே ஆதி கிறிஸ்தவர்களும் இந்தப் பாட்டு கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் உள்ள அன்பைச் சிறப்பித்துக் காட்டுகிறது என்று நம்பினதினால் இதைத் தள்ளிவிடாமல் ஏற்றுக்கொண்டார்கள்.

2. **தன்மை.**

(*a*) சிலர் இது சாலொமோனுக்கும் அவன் விவாக மனைவிக்குமுள்ள அன்பைக் குறித்துப் பாடிய விலாசம் என நினைக்கிறார்கள்.

(*b*) சிலர் ஒரு மேய்ப்பனுக்கு நியமிக்கப்பட்ட ஒரு கன்னிகையைச் சாலொமோன் தன் மாளிகையின் அந்தப்புரத்தில் வைத்திருந்தான் என்றும்; சாலொமோன் அவள் அரமனை இராணி ஆவதற்கு விருப்பமில்லாமல் அந்த மேய்ப்பனில் அவள் வைத்த அன்பின் மிகுதியைக் கண்டு அவளை மறுபடியும் அந்த மேய்ப்பனிடத்திற்கே அனுப்பினான் என்றும் காட்டுகிற ஒரு விலாசம் எனச் சொல்லுகிறார்கள்.

(*c*) ஆனால் எபிரெயருடைய புஸ்தகங்களையும் சேமியரின் புஸ்தகங்களையும் நாம் பார்க்குமிடத்து அவைகளில் ஒரு விலாசமும் இல்லை. அது அப்படி ஓர் விலாசமானால் அதைச் சொல்லுகிறவர்களின் பெயரும் செய்கைகளும் ஏன் காணப்படவில்லை?

இதைக்கண்டு வேறு சாஸ்திரிகள் கொள்ளும் வேறு அபிப்பிராயம் என்னவென்றால்: இந்நாள்வரையும் சமாரியாவில் விவாகம் நடத்தும்பொழுது அதற்கு வரும் இனத்தார் சிநேகிதர் இதிலுள்ள பாட்டுகளைப்போன்ற பாடல்களைப் பாடுகிற வழக்கம் உண்டு. முற்காலத்தில் அதே வழக்கம் இருந்தது என்றும் அவர்கள் இந்தப் புஸ்தகத்திலுள்ள பாட்டுகளைப் பாடினார்கள் என்றும் எண்ணுவது நியாயம். இந்தப் புஸ்தகம் பல கீர்த்தனைக் கோவையாய் இருந்தாலொழிய இவைகளின் பிரிவுகளை அறிவது எப்படி? ஆதலால் இது விவாககாலத்தில் பாடும் ஓர் கீர்த்தனைக் கோவைதான்.

3. **இதின் உட்பொருளின் சுருக்கம்.** இந்தக் கோவையில் ஏழு பிரிவுகள் உண்டு.

(1) 1^{2}-2^{7}. மணவாளன் மணவாட்டி இருவரும் தங்கள் அன்பைப்பற்றிப் பாடுகிறார்கள்.

(2) 2^{8-17}. வசந்தகாலத்தில் மணவாளன் வருவதைப்பற்றியது.

(3) 3^{1-11}. மணவாட்டியின் சொப்பனம். 3^{1-5}. வேறு ஸ்திரீகள் பாடும் உப சங்கீர்த்தனம். 3^{6-11}.

(4) 4^{1}-5^{1}. மணவாளன் மணவாட்டிக்குத் தன் அன்பையும் அவளுடைய சௌந்தரியத்தையும்பற்றிப் பாடியது.

(5) 5^{2}-6^{9}. மணவாட்டியின் இரண்டாம் சொப்பனம். இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பாடியது.

(6) 6^{10}-8^{4}. மணவாட்டியின் மனமகிழ்ச்சியும், இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்வதும் அடங்கியது.

(7) 8^{5-14}. கலியாணகாலத்தில் இருவருக்குமுள்ள அன்பு.

4. **காலம்.** சாலொமோன் இதை எழுதினான் என்று பாரம்பரியமாய்ச் சொல்லப்பட்டுவருகிறது. இதற்குக் காரணம் அவன் ஆயிரத்து ஐந்து பாட்டுகளைப் பாடினான். 1 இரா 4^{32}. மேலும் பூர்வீகத்தில் ஒருவன் புஸ்தகம் எழுதினால் சாலொமோன் அந்தப் புஸ்தகத்திலுள்ளவைகளை உரைத்திருக்கலாம் என்று எண்ணி சாலொமோன் இந்தப் புஸ்தகத்துக்கு ஆக்கியோன் எனச் சொல்வது குற்றமில்லை என்று நினைத்திருப்பான். இந்தப் பாரம்பரை இப்படியே நெடுகிலும் இருந்தது என நினைக்கவேண்டும்.

ஆனால் கி-பி. முதலாம் நூற்றாண்டில் எபிரெய ரபிமாருக்குள் இந்தப் புஸ்தகத்தைப் பற்றிச் சந்தேகம் இருந்ததினாலும், எபிரெய பாஷையில் இல்லாத நூதன பதங்கள் இதில் இருந்ததினாலும், இது சாலொமோன் காலத்து இலக்கண நடைக்கு அல்ல, பிற்காலத்து இலக்கண நடைக்கு உரியதாகையால் கி-மு. மூன்றாம் நூற்றாண்டிற்குமுன் எழுதினதல்ல என்று தீர்மானிப்பது நியாயத்துக்கு விரோதமல்ல.

ஊ.

ஊகால். Ucal. நீதி 30^{1}.

ஊசா. Uzzah.

1. 1 நாளா 8^{7}.
2. எஸ்றா 2^{49}.
3. 2 சாமு 6^{3}.
4. ஒரு தோட்டம். 2 இரா 21^{18}.
5. 1 நாளா 6^{29}.

ஊசாபேசேத். Jushab-hesed. 1 நாளா 3^{20}.

ஊசாய். Hushai.

1. அப்சலோம் கலகம் செய்த காலத்தில் தாவீதுக்கு உதவி செய்த ஒருவன். 2 சாமு 15^{32}.
2. = Uzai. நெகே 3^{25}.

ஊசால். Uzal. ஆதி 10^{27}.

ஊசி. Uzzi.

1. 1 நாளா 6^{5}.
2. 1 நாளா 7^{2}.
3. 1 நாளா 7^{7}.
4. நெகே 11^{22}.
5. நெகே 12^{19}.

ஊசிம். Hushim. உசீம் காண்க.

ஊசியா. Uziah. உசியா காண்க.

ஊசியின் காது. Needle's eye. லூக் 18^{25}.

ஊசியேல். Uziel. [கடவுள் என் பலம்].

1. யாத் 6^{18}.
2. 1 நாளா 4^{42}.
3. 1 நாளா 7^{7}.
4. = அசரியேல். 1 நாளா $25^{4.18}$.
5. 2 நாளா 29^{14}.
6. நெகே 3^{8}.

ஊசேன் சேராள். Uzzen-sherah. [சேராளின் பங்கு]. 1 நாளா 7^{24}.

ஊடை. Woof. லேவி 13^{47}. **நேசவு** காண்க.

ஊத்ஸ். Uz.

1. சேமின் பேரன். ஆதி 10^{23}.
2. நாகோரின் மகன். ஆதி 22^{21}.
3. ஓரியரில் ஒருவன். ஆதி 36^{28}.

4. ஒரு தேசம். புல 4^{21}.

5. பெலிஸ்தியாவுக்கும் எகிப்துக்கும் நடுவிலுள்ள ஒரு தேசம். எரே 25^{20}.

6. யோபு வசித்த ஊர். இது பலெஸ்தீனுவுக்கும் அரபியா வனாந்தரத்துக்கும் மத்தியிலுள்ள ஒரு தேசம் எனத் தோன்றுகிறது. யோபு 1^{1}.

ஊத்தாய். Uthai.

1. = அத்தாயா. 1 நாளா 9^{4} நெகே 11^{4}.

2. எஸ்றா 8^{14}.

ஊப்பாஸ். Uphaz. பொன் விளைகிற தேசம். ஒருவேளை இது ஓப்பீராய் இருக்கலாம். எரே 10^{9} தானி 10^{5}.

ஊமை. Dumbness. **வியாதி** காண்க.

ஊராம். Huram.

1. 1 நாளா 8^{5}.

2, 3. **ஈராம்** காண்க.

ஊராய். Hurai. = ஈத்தாய்.

ஊரி. Huri. 1 நாளா 5^{14}.

ஊரி. Uri.

1. யாத் 31^{2}.

2. 1 இரா 4^{19}.

3. எஸ்றா 10^{24}.

ஊரியேல். Uriel. ['கடவுளின் சுவாலை' அல்லது 'கடவுள் என் பிரகாசம்'].

1. 1 நாளா 6^{24}.

2. அப்போகிரிப்பாவில் எஸ்றாவுடன் பேசின தேவதூதன். 2 எஸ்றா 4^{1}.

ஊரீம், தும்மீம். Urim and Thummim. இப்பதங்களுக்கு 'ஒளி, தேர்ச்சி' அல்லது 'மறு, மாசின்மை,' அல்லது 'மாரணம், உயிர்,' அல்லது 'ஆம், இல்லை' என அர்த்தமாம்.

இவைகளைப்பற்றி வேதவாக்கியங்கள் சொல்லுகிற மூன்று விஷயங்கள் என்னவென்றால்:

(*a*) இவைகள் ஏபோத்து என்பதோடு சேர்ந்த இரண்டு சீட்டுகள். ஆனால் ஏபோத்தைப்பற்றித் திட்டமாய்த் தெரியாததினால், அதோடு இவைகளைச் சேர்த்த காரணமும் விதமும் தெரியாது.

(*b*) இவைகள் இரண்டு ஆனதினால் ஒரு சமயத்தில் இவைகளின் மூலமாய் ஒரு கேள்வியைமாத்திரம் விசாரித்து அறியலாம். அந்தக் கேள்விக்கு விழுந்த சீட்டினால் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதில் இருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது.

(*c*) கேட்ட கேள்விக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்று போதுமான பதில் இல்லாத தருணங்களில், கேட்கிறவர்கள் சீட்டின் கருத்தைப்பற்றி முந்தியே ஏற்பாடு செய்யவேண்டும். 1 சாமு 14^{41} 23^{4} 30^{7} 2 சாமு 2^{1}.

இவைகள் பிரதான ஆசாரியனின் 'நியாயவிதி மார்ப்பதக்கத்தில்' வைக்கப்பட்டிருக்கும். யாத் 28^{30} லேவி 8^{8} எண் 27^{21}.

ஒருவேளை கர்த்தரிடத்தில் விசாரித்தறியும் காலத்திலே மார்ப்பதக்கத்தில் வைக்கப்பட்ட இவைகளை எடுத்து ஏபோத்தின் ஒரு பையிலே போட்டுக் குலுக்கி முதல் விழும் கல்லினால் தேவ சித்தத்தை அறிவார்கள். யோசு 16^{1} 19^{1}.

இவைகளின் மூலமாய் விசாரிப்பது ஆசாரியரின் கடமை. உபா 33^{8} எஸ்றா 2^{63} நெகே 7^{65}.

ஊரீம் தும்மீம் என்பதைப்பற்றிச் சரியாய் ஒன்றுந் தெரியாவிட்டாலும் சில வித்துவான்கள் இவைகள் பாபிலோனியர் சீட்டுக்காக உபயோகித்த கூரில்லாத அம்புகளைப் போன்ற இரண்டு அம்புகள் (எசே 21^{21}) என்று எண்ணுகிறார்கள். பெரும்பாலும் வேதசாஸ்திரிகள் இவைகள் இரண்டு சிறு கற்கள் என்று சொல்லுகிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து யூதர்கள் வந்தபிற்பாடு ஊரீம் தும்மீம் இல்லை.

ஊருணி வாசல். Fountain Gate. **எருசலேம்** காண்க.

ஊர். Ur.

1. 1 நாளா 11^{35}.

2. 'ஊர் என்கிற கல்தேய பட்டணம்.' இது தென் பாபிலோனியா தேசத்தில் ஆதிகாலத்திலுள்ள ஒரு ஊர். இங்கே சந்திர தேவியை அதிகமாய் வணங்கினார்கள். இதிலிருந்து ஆபிரகாம் புறப்பட்டான். ஆதி 11^{28}.

3. = Hur. 1 இரா 4^{8}.

ஊர்வன. Creeping things. **புழு, பூச்சி** காண்க.

ஊலாம். Ulam.

1. 1 நாளா 7^{16}.

2. 2 நாளா 8^{39}.

ஊலாய். Ulai. சூசான் பட்டணத்திற்குச் சமீபமாய் இருக்கும் ஒரு ஆறு. தானி 8^{2}.

ஊவேல். Uel. எஸ்றா 10^{34}.

ஊழியக்காரன். உதவிக்காரன், **வேலைக்காரன்** காண்க.

ஊழியம். Ministry. **தேவ ஊழியம்** காண்க.

ஊற்று. Spring. **நீரூற்று** காண்க.

எ.

எ. He. எபிரெயர் எழுத்துக்களில் ஐந்தாம் எழுத்து. சங் 119^{33}.

எகலெலேல். Jehalaleel.

1. 1 நாளா 4^{16}.

2. 2 நாளா 29^{12}.

எகலேல். Jehallelel. 2 நாளா 29^{12}.


எகாப்சேயேல். Jehabzeel. = கப்செயேல். யூதாவின் தெற்கெல்லையிலுள்ள ஒரு ஊர். நெகே 11^{25} யோசு 15^{21}.

எகாமியாம். Jekameam. ஒரு லேவியன். 1 நாளா 23^{19}.

எகிஸ்கியா. Jehizkiah. [யேகோவா பலப்படுத்துகிறார்]. 2 நாளா 28^{12}.

எகிப்தியன். The Egyptian. பேலிக்ஸ் ஜெயித்த கலகக்காரன். அப் 21^{38}.

எகிப்தின் நதி. The River of Egypt. இது எகிப்திலுள்ள நைல் நதியைக் குறிக்கிறதில்லை. பலெஸ்தீனா தேசத்துக்குத் தென்மேற்கில் அதற்கும் எகிப்து தேசத்துக்கும் எல்லையாய் இருக்கும் ஒரு சிற்றாறு. எண் 34^{5}.



பூர்வீக எகிப்த ராஜாக்களின் பெரிய சிலைகள்.

எகிப்து. Egypt.

I. **நிலவளம்.**–நைல் (*Nile*) நதியானது மத்தியதரைக் கடலுக்குள் பாய்வதினால் முகத்துவாரத்துக் கெதிர் நிலமாய் உண்டான தரைக்கு எகிப்து தேசம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஆபிரிக்காக் கண்டத்தின் சமரேகைமட்டுமுள்ள பூமியை எகிப்தியர் எகிப்து தேசம் என்று சொன்னார்கள். நைல் நதியின் கரைகளிலும் கால்வாய்களின் ஓரங்களிலும் பயிர் விளையக்கூடியதாய் இருந்ததினால் ஜனங்கள் அங்கேயே வாசஞ்செய்தார்கள். மற்றப் பாகமெல்லாம் பெரும்பாலும் வனாந்தரம். பூர்வீகத்திலே எகிப்து இரண்டு பிரிவுகளாய்ப் பகுக்கப்பட்டிருந்தது. 'கீழ் எகிப்து' என்று சொல்லப்படும் பிரிவு கடல்மட்டத்துக்குச் சரியாய் இருந்தது. 'மேல் எகிப்து' அல்லது 'மத்திய எகிப்து' கீழ் எகிப்திற்குத் தெற்கில் உள்ளது. எபிரெயர் கீழ் எகிப்திலே வசித்தார்கள். இப்பாகங்கள் நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாட்டிற்கும் தலைநகரியும் இருந்தது. அந்தந்தத் தலைநகரியிலுள்ள கோவில்களின் தேவன் தேவியை வெவ்வேறான நாட்டிற்கு முக்கிய தேவதைகள் என்று நினைத்தார்கள். எகிப்திலே மழை அபூர்வமானபடியினாலே நதியிலிருந்து தண்ணீர் பாய்ந்தால்தான் பயிர்நிலம் செழிப்பாய் இருக்கும். நதிப்பாய்ச்சல் குறைந்து போனால் ஜனங்களுக்கு அதிக கஷ்டம். ஏசா 23^{3} எசே 29^{2}.


II. **நாகரீகம்.**–எகிப்தியர் நாகரீகத்தில் சிறந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் கல்வியில் தேர்ந்தவர்களாய் அநேக புஸ்தகங்களை எழுதினார்கள். அப் 7^{22}. அவர்கள் சித்திரவேலையில் நிபுணர். அவர்கள் பெரிய தேவாலயங்களையும் மாளிகைகளையும் கட்டி, இந்நாள்மட்டும் வித்துவான்கள் ஆதியோர் புகழ்ந்து பேசும் சிறந்த கைவேலையாகிய விநோதமான விக்கிரகங்களை அங்கே செய்து வைத்தார்கள். அவர்கள் வைத்திய சாஸ்திரம் நன்றாய் அறிந்தவர்கள். அவர்கள் வாசனைத் திரவியமிட்டு அடக்கம் செய்த பிரேதங்கள் கெட்டுப்போகாமல் இந்நாள்வரையும் அப்படியே கண்டெடுக்கப்படுகின்றன.

III. **சரித்திர வரலாறு.**—எகிப்து தேசத்துச் சரித்திரம் கி-மு. 3300-ஆண்டில் ஆரம்பித்ததினாலே அத்தனை வருஷங்களாயுள்ள ராஜ்யத்தின் சரித்திரத்தை இவ்விடத்தில் எழுதுவது கூடாதகாரியம். ஆகவே, வேதாகமத்திலுள்ள எகிப்து ராஜாக்களைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுகிறோம்.



பூர்வீக எகிப்து ராஜாக்களின் பெரிய சிலைகள்.

மேலும் முற்காலத்தில் அல்ல, பிற்காலத்திலிருந்த எகிப்து ராஜாக்களுக்கும் ‘பெரிய வீடு’ என்று அர்த்தங்கொள்ளும் ‘பார்வோன்’ என்னும் பெயர் வேதாகமத்தில் வழங்கினதினலே சிலவசனங்களில் குறித்த ராஜா இன்னன் என்று சொல்வது சந்தேகத்திற்




எகிப்தியரின் நடனம்.

குரியது. ஆனல் வித்துவான்கள் ஆராய்ந்து அறிந்து அவர்களைப்பற்றி எழுதின அபிப்பிராயத்தை நாம் தழுவி அந்த ராஜாக்களின் பெயர், சரித்திரம் இவைகளை இவ்விடத்தில் தெரிவிக்கிறோம்.


1. ஆபிரகாம் காலத்திலுள்ள பார்வோன். ஆதி 12[10]. இவனைப்பற்றித் தெளிவாய் ஒன்றும் தெரியாது.

2. யோசேப்பு மந்திரியாய்ச் சேவித்த பார்வோன். ஆதி 40[1]. இவனைப்பற்றியும் விசேஷமாய் ஒன்றும் சொல்லப்பட்டிருக்கவில்லை.

3. இஸ்ரவேலரைக் கொடுமையாய் நடத்தின பார்வோன். யாத் 1[11]. இவன் இரண்டாம் ராமசேஸ் (*Raamses II.* கி-மு. 1292–1225.). இவன் ஆலயங்களையும் பட்டணங்களையும் கட்டித் தன் தேசத்தை அலங்கரித்தான். சுகந்த திரவியமிட்டுக் காக்கப்பட்ட இவனுடைய பிரேதம் கி-பி. 1881-௵-த்தில் கண்டெடுக்கப்பட்டு, கைரோ பட்டணத்தின் காட்சிசாலையில் வைத்திருக்கிறதை இப்பொழுதும் நாம் காணலாம்.



எகிப்தில் அடிமைகள் செங்கல் செய்தல்.



எகிப்தில் அடிமைகள் செங்கல் செய்தல்.

4. அவன் மகனுகிய மெநெப்தா (*Menep-tha*) என்பவனுடைய காலத்தில் எபிரெ

யர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டார்கள் என்று தோன்றுகிறது.


5. மேரேத்தின் மனைவி பித்தியாள் (*Bithiah*) என்பவளுடைய தகப்பனுகிய பார்வோன். 1 நாளா 4^{18}. இந்தப் பார்வோனைப் பற்றி ஒன்றும் விசேஷமாய்ச் சொல்லியிருக்கவில்லை.

6. சாலொமோனின் மனைவிகளில் ஒருத்தியின் தகப்பனுகிய பார்வோன். 1 இரா 3^{1} 9^{16}. இவனைப்பற்றியும் ஒன்றும் தெரியாது.

7. ஆதாத்தின் சிநேகிதனுகிய பார்வோன். இவன் அவனுக்கு ராஜாத்தியாகிய தாப்பெனெஸ் (*Tahpenes*) என்பவளின் சகோதரியை விவாகம்செய்துகொடுத்தான். 1 இரா 11^{18}. இவனைப்பற்றியும் தெரியாது.


8. சீஷாக் (*Shishak*). 1 இரா 11^{40} 14^{25}. இவன் ஏறக்குறைய கி-மு. 950-ஆல் முதல் 21 வருஷம் அரசாண்டான். முதல் யெரொபெயாம் இவனிடத்தில் அடைக்கலம் புகும்படி வந்தான். இவன் ரெகொபெயாமின் 5-ம் வருஷத்தில் எருசலேமைக் கொள்ளையடித்தவன்.

9. சேரா (*Zerah*). 2 நாளா 14^{9}. இவன் ஆசாவின் காலத்தில் கி-மு. 917-876-ஆல் அரசாண்டான். இவன் யூதாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போனவன். இவனைப்பற்றி வேறு விசேஷம் ஒன்றும் தெரியாது.


எகிப்த வண்ணர்.

10. சோ (*So*). இஸ்ரவேலின் ராஜாவாகிய ஓசியாவின் காலத்தில் கி-மு. 733-722-ஆல் அரசாண்டவன். 2 இரா 17^{4}. இவன் எகிப்தில் ராஜாவாயிருந்தானே ராஜாவின் சேனுபதியாய் இருந்தானே என்பது சந்தேகம்.

11. தீராக்கா (*Tirhakah*). 2 இரா 19^{9}. இவன் எசேக்கியாவின் காலத்தில் ஏறக்குறைய கி-மு. 701-ஆலத்தில் எகிப்தின் சேனுபதியாய் இருந்து அசீரியா ராஜாவாகிய சனகெரிப் ராஜாவோடு யுத்தம் செய்தவன். இவன் கி-மு. 691-665-ஆல் எகிப்துக்கு ராஜாவாய் இருந்தான். இவனுடைய ஆளுகையின் கடைசிக் காலத்தில் இவனுக்கும் அசீரியர்களுக்கும் ஓயாத சண்டை யிருந்தது.


எகிப்து பான பாத்திரம்.


12. நேகோ (*Necho*). 2 இரா 23^{29} எரே 46^{2}. கி-மு. 610-594-ஆல் அசீரிய ராஜ்யத்தின் வல்லமை குறைந்து போனபோது இவன் யூதா, இஸ்ரவேல், சீரியா முதலிய ராஜ்யங்களைப் பிடிக்கப்போய் மெகிதோ என்னுமிடத்தில் யோசியாவைக் கொன்று, அவனுக்குப்பின் ராஜ்யபாரத்தைப் பற்றிக்கொண்ட யோவகாசைத் தள்ளி, அவனுக்குப் பதிலாக யோயாக்கீமை ராஜாவாக்கினன். நேபுகாத்நேச்சார் நேகோவை ஜெயித்து யூதா முதலிய நாடுகளை மறுபடியும் தன் கைவசமாக்கினன்.

13. ஒப்பிரா (*Hophra*). எரே 44^{30}. கி-மு. 588-569-ஆல் இவன் நேகோவின் பேரன். கிரேக்கர்கள் இவன் பெயரை அப்ரீஸ் (*Apries*) என்று சொன்னர்கள் இவனுக்கும் நேபுகாத்நேச்சாருக்கும் சண்டை நடந்துகொண்டிருந்தது. நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்தபோது அதை விட்டு ஓடிப்போன எரேமியாவுக்கும் மற்றவர்களுக்கும் ஒப்பிரா அடைக்கலம் கொடுத்தான். எரே 43^{6}.

ஒப்பிராவுக்குப் பிறகு பழைய ஏற்பாட்டில் எகிப்தைப்பற்றிய சரித்திரம் ஒன்றும் சொல்லியிருக்கவில்லை. கி-மு. 527-ஆலத்தில் பெர்சியாவின் ராஜாக்கள் எகிப்தைத் தங்கள் ராஜ்யத்துக் குள்ளாக்கினர்கள்.


கி-மு. 405-ஆலத்தில் எகிப்தியர் மறுபடியும் விடுதலையடைந்து அறுபது வருஷம் தங்கள் சொந்த ராஜாக்களின் ஆளுகைக்குள் இருந்தார்கள். ஆனல் கி-மு. 345-ஆலத்தில் பெர்சியர்களால் மறுபடியும் ஜெயிக்கப்பட்டார்கள். கி-மு. 332-ஆல் பெரிய அலெக்

சந்தர் எகிப்தை ஜெயித்துத் தன் ராஜ்யத்தோடு சேர்த்து அங்கே அலெக்சந்திரியா



எகிப்த கட்டிலும் தலையணையும்.

என்னும் முக்கிய பட்டணத்தைக் கட்டினான். இவனுக்குப் பிறகு கிரேக்கர் எகிப்தைப் பல வருஷங்களாக ஆண்டார்கள். அக்காலத்தில் யூதர்கள் அலெக்சந்திரியா முதலிய பட்டணங்களில்வாசம்பண்ணி, சாலொமோன் எருசலேமில் கட்டின தேவாலயத்தைப்போல அவர்களும் தங்களுக்கு அங்கே தேவாலயங் கட்டினார்கள். மேலும் அவர்கள் அக்காலத்தில் எபிரெய பாஷையில் எழுதியிருந்த பழைய எற்பாட்டைக் கிரேக்க பாஷையில் மொழிபெயர்த்தார்கள். அதற்கு செப்துயாகிந்த் (*Septuagint*) என்னும் பெயர் இருந்தது. கி-மு. 30-ஆ ரோமர்கள்



எகிப்தியர் பயிரிடுதல்.

எகிப்தைத் தங்கள் ராஜ்யத்தோடு இணைத்தார்கள். அப்போஸ்தலருடைய காலத்தில் அது அப்படியே ரோம ராஜ்யத்துக்குள் இருந்தது.

IV. **மார்க்கம்.** — எகிப்தியர் கட்டின தேவாலயங்களையும் சிலைகளையும் அவர்கள் எழுதிய புஸ்தகங்களையும் நாம் பார்த்தால் அவர்கள் பக்தி வைராக்கியத்தில் பேர்பெற்றவர்கள் என்று தோன்றுகிறது. மூவாயிரம் வருஷமாக இவர்கள் கைக்கொண்ட மார்க்க ஆசாரித்தைப்பற்றி இவ்விடத்தில் எழுதுவது கூடாத காரியமாதலால், இஸ்ரவேலர் காலத்தில் முக்கியமாய் அவர்களுக்குள் என்ன வணக்கம் இருந்ததோ அதைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுவோம்.


எகிப்தியரின் ஆசாரியர்களுக்குச் 'சுத்தமுள்ளவர்கள்' அல்லது 'தேவீக பிதாக்கள்' என்று பெயர். இவர்களது சம்ரக்ஷணை இவர்களிருந்த அந்தந்த தேவஸ்தான வரும்படியினால் நடத்தப்பட்டுவந்தது. இவர்கள் வெள்ளைச் சணல்நூல் வஸ்திரம் தரிப்பார்கள்;



எகிப்த ஆசாரியன்.


தலை முழுதும் மொட்டை யடிப்பார்கள்; அடிக்கடி ஸ்நானம் செய்வார்கள். திருவிழா நாட்களில் எகிப்தியர்கள் தங்கள் விக்கிரகங்களைத் தூக்கிக்கொண்டு ஊர்கோலம் சுற்றி வருவார்கள்.

முற்காலத்தில் எகிப்தியர்கள் தூபபலியையும் பிற்காலத்தில் அதோடு தகனபலிகளையும் செலுத்தினார்கள். கனவுகளில் கடவுளுடைய சித்தம் தங்களுக்கு அறிவிக்கப்படும்படி சில சமயங்களில் தொண்டர்கள் தேவாலயத்தில் போய்ப் படுத்துக்கொள்வார்கள். சூனியத்தில் அவர்களுக்கு அதிக நம்பிக்கை யுண்டு. கைகளிற் காப்புக் கட்டுவார்கள். மந்திரோபாய புஸ்தகங்களை எழுதுவார்கள்.




எகிப்தியர் வணங்கின இடபம்.

ஒவ்வொரு சாஸ்திரியும் தான் கொண்ட அபிப்பிராயத்தின்படியே நூல்களை எழுது



இரண்டாம் ராமசேஸ் யுத்தம்பண்ணுதல்.

சந்தோஷமாய்ப் பிரயாணம் செய்யும்படி கட்டளையிடுவான் என்றும் நம்பினார்கள். எகிப்தியர் மறுஜெனனம் உண்டு என்னும் கொள்கையுடையவர்களாய் இருந்தார்கள் என்று சிலர் நினைத்தாலும், அவர்கள் எழுதிய புஸ்தகங்களில் அப்படியொன்றும் காணப்படவில்லை. எகிப்தியர் தங்களை யாளும் ஒவ்வொரு ராஜாவையும் தங்கள்தேவன்என்றும், அவன் தேவனுக்கும் மனுஷர்களுக்கும் இடையேயுள்ள மத்தியஸ்தன் என்றும் நம்பி ராஜாவுடைய சிலையை அவன் உயிரோடிருக்கும் போது வணங்குவார் வான், ஆனால் எல்லாரும் வித்தியாசமின்றி மரணத்திற்குப் பிறகு மனுஷனுடைய ஆவி பிழைத்திருக்கும் என்றும், மரித்தவர்களுக்கு ராஜாவாகிய தேவன் செத்தவர்கள் யாவரையும் நியாயம் விசாரித்துக் குற்றவாளிகளைக் குரூரமான பிசாசுகளின் கையில் ஒப்புவித்து, நீதிமான்களைக் கீழ்லோகத்தில் செழிப்பான இடத்தில் சேர்த்து, அதிக உத்தமர்களைச் சூரிய வாகனத்தில் ஏற்றி வானத்திலே அதிக கள். மேலும் அவர்களுக்கு மூன்றுவிதமான தேவதைகள் உண்டு. முதலாவது, சூரிய, சந்திர, நக்ஷத்திரங்களிலும் பூமியிலுமுள்ள தேவதைகள். இரண்டாவது, யுத்தம், கல்வி, சத்தியம், நீதி முதலியவைகளுக்கு உறைவிடமான தேவதைகள். மூன்றாவது, அந்தந்த இடத்திற்குரிய தேவதைகள். ஒவ்வொரு கோவிலிலும் அதின் முக்கிய தேவனைத்தவிர வேறநேக தேவதைகளும் இருந்தன. ஒவ்வொரு தேவனோடு தேவியும் ஒரு




சீஷாக். கி-மு. 950.



சீஷாக் என்னும் பார்வோனின் குமாரத்தி.

பிள்ளையும் உண்டு. எகிப்தியர் ஆபிஸ் (*Apis*) என்று சொல்லப்படும் இடபத்தை அதிகமாய் வணங்கினார்கள். சில இடங்களில் குரங்கு, பூனை, நாரை, வண்டு முதலியவைகளை வணங்

கினர்கள். எகிப்தியர் சில தேவர்களுக்கு மனுஷரூபம் உண்டென்றும், சில தேவர்களுடைய உடல் மனுஷரூபமும், தலை மிருகம், பட்சியினுடைய ரூபமும் உள்ளதாய் இருக்கிறது என்றும் நினைத்தார்கள். எகிப்தியருடைய மார்க்கம் அக்காலத்து வித்துவான்களுக்கும் மற்றவர்களுக்கும் அதிகம்



தீராக்கா கி-மு. 691-665.

பிரியமுள்ளது, ஆனதினால் கிறிஸ்தவ மார்க்கம் உதயமான காலத்தில் அதற்கு எகிப்தியர்களுடைய மார்க்கமே விரோதமாய் இருந்தது.

எகியா. Jehiah. ஒரு லேவியன். 1 நாளா 15^{24}.

எகியேலி. Jehieli. 1 நாளா 26^{21}.

எகியேல் [கடவுள் இருப்பாராக]. i. = ஏகியேல், யெகியேல். Jehiel.

1. 1 நாளா 15^{18}.
2. 1 நாளா 23^{8}.
3. 1 நாளா 27^{32}.
4. 2 நாளா 21^{2}.
5. 2 நாளா 31^{13}.
6. 2 நாளா 35^{8}.
7. எஸ்றா 8^{9}.
8. எஸ்றா 10^{2}.
9. எஸ்றா 10^{26}.
10. எஸ்றா 10^{21}.

எகியேல், ஏயெல், யேயெல், ஏகியெல் ii. = Jeiel.

1. 1 நாளா 5^{7}.
2. 1 நாளா 11^{44}.
3. 1 நாளா 15^{18}.
4. 2 நாளா 35^{9}.
5. 2 நாளா 26^{11}.
6. எஸ்றா 10^{43}.
7. 2 நாளா 29^{14}.

எருதியாள். Jehudijah. இது ஒருத்தியின் பெயர் அல்லது, 'யூத ஸ்திரீ' என்று அர்த்தம்கொள்ளும் பொதுப்பெயர். 1 நாளா 4^{18}.

எகூஷ், எயூஷ், ஏயூஷ். Jeush.

1. ஆதி 36^{5} 1 நாளா 1^{35}.
2. 1 நாளா 7^{10}.
3. 1 நாளா 8^{39}.
4. 1 நாளா 23^{10}.
5. 2 நாளா 11^{19}.
6. 1 நாளா 8^{10}.

எகூபா. Jehubbah. 1 நாளா 7^{34}.

எகெசேகியேல். Jehezekel. [யேகோவா பலப்படுத்துகிறார் = எசேக்கியேல்]. ஒரு ஆசாரியன். 1 நாளா 24^{16}.

எகேயால். Igeal. 1 நாளா 3^{22}.

எகேதியா. Jehdeiah. [யேகோவா வாழ்த்துவாராக].

1. 1 நாளா 24^{20}.
2. 1 நாளா 27^{30}.

எகோனியா. Jeconiah. மத் 1^{11} = யோயாக்கீன்.

எக்கமியா. Jekameah.

1. 1 நாளா 2^{41}.
2. 1 நாளா 3^{18}.

எக்காளம். Cornet. தானி 3^{5}. **கீதவாத்தியம்** காண்க.

எக்குத்தியேல். Jekuthiel. ஒரு யூதன். 1 நாளா 4^{18}.

எக்கேர். Eker. 1 நாளா 2^{27}.

எக்கோலியாள். Jecoliah. ஊசியா ராஜாவின் தாய். 2 நாளா 26^{3}.

எக்கோனியா, யோயாக்கீன். Jechoniah. இவன் மறு பெயர் 'யோயாக்கீன்,' 'கோனியா.' இவன் தகப்பனாகிய யோயாக்கீம் பாபிலோனியா ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாய்க் கலகஞ் செய்ததினால் அந்த ராஜா அவனைத் தண்டிக்கும்படி வரும்போது அவன் மரணம் அடைந்தான். அவன் மகன் யோயாக்கீன் ஆகிய இவன் அப்போது ராஜ்யபாரம் பெற்று கி-மு. 597-ஆலத்தில் அரசாண்ட மூன்று மாதத்திற்குள் நேபுகாத்நேச்சார் இவன் ராஜ்யத்தைப் பிடித்தான். இவன் பாபிலோனி

யாவிலே 37 வருஷம் சிறையிருந்தான். ஏவில்மெரோதாக் இவனைக் காவலிலிருந்து விடுதலை செய்தான். 2 இரா 24⁸ 25²⁷ எரே 24¹ 28⁴ 37¹ மத் 1¹¹.

எக்ரோன். **Ekron.** இஸ்ரவேலராற் பிடிக்கப்படாத பெலிஸ்தரின் ஒரு பட்டணம். உடன்படிக்கைப்பெட்டி இங்கே கொண்டு வரப்பட்டது. இங்கே பாகால்சேபூலை வணங்கினார்கள். தீர்க்கதரிசிகள் இதற்கு வரும் தண்டனையைக்குறித்து அறிவித்தார்கள். யோசு 13³ 1 சாமு 5¹⁰ 1 இரா 1² சக 9-10 அதி.

எக்லாயிம். **Eglaim.** ஏசா 15⁸.

எக்லாள். **Egla.** [கிடாரிக் கன்று]. தாவீதின் மனைவிகளில் ஒருத்தி. 2 சாமு 3⁵.

எக்லோன். **Eglon.** இஸ்ரவேலை ஜெயித்த மோவாபின் ராஜா. ஏகூத் இவனைக் கொன்றான். நியா 3¹².

எசரத்தோன். **Esarhaddon.** 2 இரா 19³⁷. **அசீரியா ராஜாக்கள்** காண்க.

எசரேலா. **Jesharelah.** =அஷாரேலா. 1 நாளா 25²·¹⁴.

எசாயா. **Jeshaiah.** [யேகோவா செய்த மீட்பு].

1. 1 நாளா 3²¹.
2. 1 நாளா 25³.
3. 1 நாளா 26²⁵.
4. எஸ்று 8⁷.
5. எஸ்று 8¹⁹.
6. நெகே 11⁷.

எசிசாய். **Jeshishai.** [யேகோவா பூர்வ காலத்திலுள்ளவர்]. 1 நாளா 5¹⁴.

எசியோன். **Hezion.** சீரியா ராஜாவாகிய பெனாதாத்தின் பாட்டன். 1 இரா 15¹⁸. இவன் ரேசோன் என்பவனாய் இருக்கலாம். 1 இரா 11²³.

எசியோன் கேபர். **Ezion Geber.** செங்கடலில் உள்ள ஒரு துறைமுகம். உபா 2⁸ 1 இரா 9²³.

எசெபெயாப். **Jeshabeab.** ஒரு லேவியன். 1 நாளா 24¹³.

எசேக். **Eshek.** 1 நாளா 8³⁹.

எசேக்கியா. **Hezekiah.**

1. பெரிய யூத ராஜாக்களில் ஒருவன். இவன் கி-மு. 725-ஆல் தன் தகப்பனாகிய ஆகாஸ் என்பவனோடு ஏககால அரசனாயிருந்து பிறகு கி-மு. 715-697-வரை ஆளுகை செய்துவந்தான். இவன் ராஜ்யபாரம் செய்த கடைசி வருஷங்களில் இவனுடைய மகனாகிய மனாசே இவனோடு ஏககால அரசனாய் இருந்தான். இதினிமித்தம் சில விஷயங்களில் இவனுடைய ஆளுகையின் கால வரலாறு தெளிவாய்த் தெரியவில்லை. இவனுடைய தகப்பன் அசீரியர்களுக்குக் கீழ் அடங்கி யிருந்ததினாலே அவர்கள் யூதா தேசத்திற்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இதை அறிந்து மெரோதாக் பலாதான் பாபிலோனியாவிலே அசீரியர்களுக்குள் கலகம் பண்ணும்போது அவன் அதிலே தனக்கு உதவியாய்க் கூடிவரும்படி எசேக்கியாவிடம் பிரதிநிதிகளை அனுப்பினான். ஏசா 39¹. எகிப்தியர்களும் அசீரியர்களை ஜெயிப்பதற்குச் சம்மதமாயிருந்தார்கள். எசேக்கியா ஏசாயா தீர்க்கதரிசியின் ஆலோசனைக்கு விரோதமாய் இந்தப் பிரதிநிதிகளையும் எகிப்தியரையும் நம்பி, அசீரியர்களுக்கு விசுவாசமுள்ள பெலிஸ்திய ராஜாவின் தேசத்தின்மேல் படையெடுத்துப் போனான். முதல்முறை எசேக்கியா ஜெயம் அடைந்தான். 2 இரா 18⁸. ஆனால் கி-மு. 701-ஆம் ஆண்டில் அசீரியா ராஜாவாகிய சனகெரிப் எசேக்கியா முதலாகிய தன் விரோதிகளைத் தண்டிக்கும்படி நினைத்து அவர்களுடைய 'நாற்பத்தாறு மதில் சூழ்ந்த ஊர்களை' பிடித்தபோது, எசேக்கியா பயந்து, அவன் கீழடங்கினவனாய் அவனுக்குக் கப்பம் கட்டினான். 2 இரா 18¹⁴. அதற்காகத் தேவாலயத்திலுள்ள பொன் தகட்டையும் அவனுக்குக் கொடுத்தான். சனகெரிப் கப்பம் வாங்கிக் கொண்டுதன் தேசத்துக்குப்போனபிறகுஒரு வேளை எசேக்கியா தான் செய்த ஏற்பாட்டின் படி நடவாமல் இருந்திருக்கலாம். ஏனென்றால் சனகெரிப் சில வருஷத்திற்குப் பிற்பாடு எருசலேமை முற்றிக்கை போட வந்தான். ஆனால் அப்பொழுது சடுதியாய் உண்டான ஒரு பெரிய கொள்ளைநோயினால் அவனுடைய சேனை அழிக்கப்பட்டதினால் பயந்து எருசலேமைப் பிடியாமல் திரும்பிப் போய் விட்டான். 2 இரா 19³⁵ ஏசா 37³⁶. அதே காலத்தில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணப் படுக்கையில் இருந்தபோது அவன் இன்னும் சிலகாலம் இருப்பான் என்பதற்கு ஒரு அடையாளம் கொடுக்கப்பட்டது. அதாவது ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் நிழல் பத்து ரேகை பின்னிட்டுப் போனது. இப்படி நடப்பது அசாத்தியம் என்று சிலர் சொன்னாலும் வான சாஸ்திரிகள் சொல்லுகிறதாவது: சில வேளைகளில் ஆகாயத்தில் கண்ணுக்குத் தெரியாத ஒருவிதமான மெல்லிய மேகம் வருவதுண்டு. இந்தமேகத்தைஊடறுத்து, கீழே வரும் சூரிய கதிர்கள் வழக்கம்போல் ஒரு

சூரிய கடியாரத்தில் முந்திப் போகாமல் வளைந்து பின்னுக்குப் போவதுபோல் தோன்றும்.

எசேக்கியா யேகோவாவில் பக்தியுள்ளவனாய் மார்க்க சீர்திருத்தவிஷயமாய் அநேக காரியங்கள் செய்தான். 'மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, மோசே பண்ணின வெண்கலச் சர்ப்பத்தை உடைத்தான்.' 2 இரா 18^{4}. இதில் எசாயா தீர்க்கதரிசி இவனுடைய ஆலோசனைக்காரனாய் இருந்தான். இவனுடைய சரித்திரத்தை நாம் வாசிக்கும்போது இவனிடத்திலுள்ள பயபக்தியை அறிந்து, இவனுடைய காலத்தில் அசீரியர் எகிப்தியர் ஆகிய இவர்களினால் பெரிய விக்கினங்கள் நேரிட்டிருந்தாலும் இவன் தன் ராஜ்யத்தை யேகோவாவின் மார்க்கத்தில் உறுதியாய் ஸ்திரப்படுத்தியிருந்தான் என்று தெரியவரும்.

2. ='எஸ்கியா.' Hizkiah. செப்பனியா தீர்க்கதரிசியின் முன்னோர்களில் ஒருவன். செப் 1^{1}.

3. ஒரு குடும்பத்தலைவன். எஸ்ரா 2^{16}.

4. 1 நாளா 3^{23}.

எசேக்கியேல். Ezekiel. [யேகோவா பலப்படுத்துகிறார்].

I. **தீர்க்கதரிசி.**—பூசியின் குமாரனாகிய எசேக்கியேல் ஒரு ஆசாரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். இவன் யோயாக்கீன் என்னும் ராஜாவோடு கி-மு. 597-ஆல பாபிலோன் தேசத்துக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டான். சிறையில் இருந்த ஐந்தாம் வருஷம் தீர்க்கதரிசனம் உரைக்கத் தொடங்கினான். 1^{2}. சிறையிருப்பின் 9-ம் வருஷம் அவன் மனைவி இறந்தாள். 24^{18}. இவனும் இவனோடிருந்தவர்களும் மூப்பர்களால் கேபார் நதிக்கரையிலே நடத்தப்பட்டவர்கள். இவனுக்குச் சொந்த வீடு இருந்தது. $3^{15, 24}$. இவன் (கி-மு. 592-570) இருபத்திரண்டு வருஷம் தீர்க்கதரிசனம் உரைத்துவந்தான். 1^{2} 29^{17}. இவன் பலமுறையும் 'கர்த்தருடைய கரம் என்மேல் அமர்ந்தது' என்று சொல்வதினாலே யேகோவாவின் தரிசனம் இவனுக்குக் கிடைத்தது என்று காணப்படுகிறது. 1^{3} 8^{1} 37^{1} 40^{1}. முதலில் இவன் செய்த போதனையை எபிரெயர்கள் கவனிக்கவேயில்லை. 3^{7}. ஆனால் வரவர அவர்களில் அநேகர் இவன் உரைத்தவைகள் யாவும் உண்மை என்று அறிந்து இவன் போதனைகளைக் கேட்கும்படி இவனிடம் வந்தார்கள். 14^{1}. இவன் தனக்கு வந்த தொந்தரவுகளினாலும் துக்கங்களினாலும் மனஞ் சோர்ந்து போகாமல், தன் அன்புள்ள மனைவி இறந்த காலத்திலும் சன்மார்க்க விஷயங்களைக்குறித்து ஜனங்களுக்குப் புத்திபோதனை செய்வதில் தைரியசாலியாய் இருந்தான். 3^{14} 24^{16} 33^{7}. எசேக்கியேல் முதலில் உரைத்த தீர்க்கதரிசனங்களிற் பாதி அவனால் எழுதப்பட்டது. 37^{16}. பாதி வாய்மொழியாய்க் கூறப்பட்டது. 3^{10}. இவன் தன் ஆசாரிய ஆசாரத்தில் சுத்தமுள்ளவனாய் இருந்தும் (4^{14}), எப்போதும் இவன் சடங்காசாரத்தை யல்ல, நீதிநியாயத்தையே நாடினவன். 33 அதி. இவனுடைய விருத்தாப்பிய சரித்திர வரலாறு ஒன்றும் தெரியாது. சிலருடைய அபிப்பிராயம் என்னவென்றால், இவன் கண்டித்த விக்கிரகாராதனைக்காரனாகிய ஒரு எபிரெயன் இவனைக் கொன்றான் என்பதே. பிற்காலத்தில் பாக்தாத் (*Baghdad*) கிட்ட இவன் அடக்கம் பண்ணப்பட்டான் என்னும் பாரம்பரியத்தை நம்பி யூதர்கள் அந்த இடத்திற்கு யாத்திரை செய்தார்கள்.

II. **புஸ்தகம்.**—எசேக்கியேலின் புஸ்தகத்தில் யாவரும் தெளிவாய் அறிந்துகொள்ளத்தக்க இரண்டு பாகங்கள் உண்டு. இவைகளில் இவன் காலம் தேதியைப் பலதடவை காட்டுகிறான். 1^{1} 8^{1} 20^{1} 24^{1} 26^{1} $29^{1.17}$ 30^{20} 31^{1} $32^{1.17}$ 33^{21} 40^{1}.

a. **முதலாம் பாகம்.**—இவன் கி-மு. 592-587-ஆண்டில் உரைத்த போதனைகள் 1-24 அதிகாரங்களில் சொல்லியிருக்கின்றன. இவைகளில் எபிரெயர்கள் செய்த பாவங்களைக் கண்டித்து, வரப்போகிற நியாயத்தீர்ப்பைக்குறித்து விவரமாய்ச் சொல்லுகிறான். இதில் இருக்கிற பிரிவுகள்.

1. முகவுரை. இவன் கண்ட தரிசனம். 1^{1}-3^{21}.

2. சாதனையினாலும் போதனையினாலும் ஜனங்களை எச்சரித்தது. 3^{22}-7^{27}.

3. எருசலேமில் நடந்துவந்த அருவருப்பான தீமைகள். 8-11 அதி.

4 பாவங்களை அறிவித்துப் புத்திபோதனை செய்து வருங்கோபாக்கினையைக் குறித்து எச்சரிக்கை கூறினது. 12-19 அதி.

5. பாபிலோன் ராஜா வந்து செய்யப்போகிற தண்டனை சீக்கிரம் வரும் என்று உரைத்தது. 20-24 அதி.

b. **இரண்டாம் பாகம்.**—தண்டனைக்குப் பிறகு எருசலேம் மனஸ்தாபப்பட்டு நல்ல நிலைமைக்கு வரும் என்ற நம்பிக்கையைக் காட்டுகிறது.

1. விரோதிகள் துரத்தப்பட்டது. 25-32 அதி.

2. இஸ்ரவேலர் அறியவேண்டிய சன் மார்க்கமும், கடைசியாய்ச் சத்துருக்களின் அழிவும். 33-39 அதி.

3. கடவுளுடைய நகரிக்கு வரும் சிறப்பும், அவருடைய ஜனங்களுக்கு வரும் சுகமும். 40-48 அதி.

III. எசேக்கியேலின் போதனைகளாவன.—எசேக்கியேல் இஸ்ரவேலரை அதிகமாய்க் கண்டித்துப் பேசுகிருன். அவர்கள் எகிப்திலிருந்து வந்ததுமுதல் எப்பொழுதும் பாவமே செய்தார்கள். 20^{5}. எருசலேம் தீமை நிறைந்த ஊர். 16 அதி. விக்கிரகாராதனை அவர்கள் செய்த பாவங்களுக்குக் காரணம். ராஜாக்களும் ஆசாரியர்களும் மற்ற எல்லா ஜனங்களும் பாவம் செய்தவர்கள். ஓய்வுநாளை அசட்டைபண்ணி, தேவாலயத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, வேசித்தனம் கொலை முதலிய அக்கிரமங்களைச் செய்து, கடவுளுடைய நீதியைத் தள்ளி, அவரால் தங்களுக்குச் சகாயம் செய்ய முடியாது என்று நினைத்து, தங்கள் இஷ்டப்படி நடந்தார்கள். யேகோவாவோ பாவம் நிறைந்த இந்த ஜனங்களை முழுதும் அழித்துப்போடாமல், தங்கள் பாவங்களை உணர்ந்து குணப்பட்டவர்களுக்கு வேண்டிய புது இருதயத்தைக் கொடுத்து, அவர்களுடைய சத்துருக்களைத் துரத்தி, அவர்களுடைய தேசத்தை ஆசீர்வதிக்கச் சித்தம் கொள்ளுகிருர். ஒவ்வொருவனும் தன் பாவத்திற்கு உத்தரவாதியாய் இருக்கிருன். ஆயினும் யேகோவா யாவருக்கும் தமது கிருபையைக் கொடுக்கச் சித்தமாய் இருக்கிருர். 18-33 அதி-ல் விசேஷமாய்க் காண்க. 40-48 அதி-ல் எசேக்கியேல் குணப்பட்ட இஸ்ரவேலரின் நிலைமையை விஸ்தரித்துக் காட்டுகிருன். நல்ல நிலைமைக்கு வந்த இந்தப் புது ராஜ்யத்திலே தேவாலயமும் அதின் ஆசாரமும் ஆராதனையும் முக்கியம் என்றும்; பிரதான ஆசாரியனும் தலைவனும் ராஜாவும் இதில் விசேஷமாய்க் காணப்படுகிறதில்லை என்றும் பார்க்கிறோம். பன்னிரண்டு கோத்திரங்களும் பரிசுத்த பூமிக்குத் திரும்பவும் வரும் என்றும்; யேகோவாவின் மகிமை எங்கும் இருக்கும் என்றும்; 'அந்நாள்முதல் நகரம் "கர்த்தர் அங்கே இருக்கிருர்" என்னும் பெயர் பெறும்' என்றும் சொல்லியிருக்கிறது. 48^{35}. இந்தப் புஸ்தகத்தின் கடைசி அதிகாரங்களிலுள்ள தரிசனங்களோடு வெளிப்படுத்தப்பட்ட விசேஷத்தில் சொல்லியிருக்கும் தரிசனங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், ஆதி கிறிஸ்தவர்கள் இப்புஸ்தகத்தை அதிகமாய்க் கவனித்தார்கள் என்று அறியலாம்.

IV. தீர்க்கதரிசியே இப்புஸ்தகம் எழுதினது.—வேதசாஸ்திரிகள் குறித்த காலங்களில் எசேக்கியேல் தீர்க்கதரிசிதான் இப்புஸ்தகத்தின் பாகங்களை எழுதி, எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்தான் என்றும், ஒருவேளை இன்னொருவன் இதில் சில வசனங்களைமாத்திரம் சேர்த்திருந்தாலும் இப்புஸ்தகம் முழுதும் எசேக்கியேலின் புஸ்தகம் தான் என்றும் சொல்லுகிருர்கள்.

எசேர், எத்சேர், ஏசேர், ஏசேர், ஏத்சேர். Ezer. [உதவி].

1. ஆதி 36^{21}.
2. 1 நாளா 7^{21}.
3. 1 நாளா 4^{4}.
4. 1 நாளா 12^{9}.
5. நெகே 3^{19}.
6. நெகே 12^{42}.

எசேனெயர். Essenes. கி-மு. 200 வருஷங்களுக்கு முந்திச் சன்மார்க்கமும் நியாயப்பிரமாணத்துக்குரிய ஆசாரமும் குறைந்துபோனதினாலும், பெரியோர்கள் அக்காலத்தில் அதிகாரம் பெற்றிருந்த கிரேக்க ராஜாக்களின் சமயத்திற்கும் தத்வசாஸ்திரத்துக்கும் இசைந்து நடந்ததினாலும், யூதர்களிற் சிலர் இவைகளைப் பார்த்து வெறுப்படைந்தவர்களாய் யேகோவாவின் மகிமை விளங்கச் செய்யவும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவும், அந்த நியாயப்பிரமாண ஆசாரத்தின்படி முன்னோர்களைப் பார்க்கிலும் அதிக நுட்பமாய் அதை அனுசரிக்கவும் துவங்கினார்கள். இவர்கள் கி-மு. 130-ஞ் முதல் சபைகளாகச் சேர்ந்து, பரிசுத்த ஜீவியத்தைத் தேடினதினாலே பரிசுத்தவான்கள் என்று அர்த்தம்கொள்ளும் எசேனெயர் என்னும் பெயர் இவர்களுக்கு உண்டானது. மோசேயின் பிரமாணத்தின்படி பரிசுத்தவான்களாய் இருப்பது இவர்களுடைய முக்கிய நோக்கம். எஸ்றா 10^{11}. ஆதலால் இவர்கள் கிரேக்கரும் அக்கிரமமாய் நடந்த ஆசாரியர்களும் போய்வந்த தேவாலயத்துக்குப் போகாதிருந்தார்கள். இந்தக் கொள்கையை மிக நுட்பமாய்க் கைக்கொண்ட இவர்கள் பணம்பொருள் யாவற்றையும் நீக்கி, விவாகம் செய்யாதவர்களாய் வனாந்தரமான சில ஊர்களிற் போய் வசித்துவந்தார்கள். யோவான் ஸ்நானன் இவர்களுடைய கொள்கையை உடையவன் அல்லாவிட்டாலும், அதற்குச்சார்பாய் இருந்தான் என்றுதோன்றுகிறது. இவர்களுடைய பெரிய சபை சாக்கடலின் ஓரத்தில் இருந்தது.

எஸ்கியா, எசேக்கியேல் காண்க.

எஸ்கோல். **Eshcol.** [திராக்ஷப்பழக்குலை].

1. ஆபிரகாமின் சிநேகிதரில் ஒருவன். ஆதி 14^{13}.

2. திராக்ஷத் தோட்டங்களுள்ள பள்ளத் தாக்கு. எண் 13^{23}.

எஸ்தரின் சரித்திரம். **The Book of Esther.**

1. **வேதாகமத்தில் எப்படிச் சேர்க்கப் பட்டது?**—யூதர்களிலும் ஆதி கிறிஸ்தவர்களிலும் அநேகர் இப்புஸ்தகத்தில் ஞானபோதனை குறைந்திருக்கிறது என்றும், இதில் யேகோவா அல்லது கடவுளின் பெயர் ஒரு தாமும் இல்லை என்றும் கண்டு இது ஒரு கதைபோலிருக்கிறது என நினைத்து இதை வேதாகமத்தில் சேர்க்கவில்லை. ஆனால் பெரும்பாலும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் இதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

2. **காலமும் ஆக்கியோனும்.**—இதின் பாஷைநடையைப் பார்த்தால் இது கி-மு. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது எனத் தோன்றுகிறது. யூதர்கள் சகல நாடுகளிலும் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள் (எஸ்தர் 3^{8}) என்றதினாலே, யூதர்கள் சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்பட்டதற்கு அநேக வருஷங்களுக்குப் பிற்பாடு இது எழுதப்பட்டது என அத்தாட்சி ஆகிறது.

ஆக்கியோனின் பெயர் திட்டமாய்த் தெரியாது.

3. **இதின் பொருள்.**—இது அகாஸ்வேரு, வஸ்தி, மொர்தெகாய், ஆமான், எஸ்தர் ஆகிய ஐந்துபேரைக் குறித்துச் சொல்லுகிறது. இதில் யூதர்கள் பூரீம் பண்டிகையில் கொண்டாடின சந்தோஷத்திற்குக் காரணம் காட்டியிருக்கிறது. எஸ்தர் 3^{7} 9^{15}.

4. **இதின் நன்மை.**—இதில் சொல்லியிருக்கும் அகாஸ்வேரு கி-மு. 485-465-வரைத்தில் அரசாண்ட சேர்க்ஜிஸ் (*Xerxes*) என்று சொன்னாலும், இதிலிருக்கும் சரித்திரத்தைப் பற்றி வேறொரு சாட்சியுமில்லை. இப்புஸ்தகம் சத்திய வேதத்தில் உள்ள மற்றப் புஸ்தகங்களைப்போல் ஞானத்துக்குரிய போதனைகளைக் கொடுக்கிறதில்லை யென்று கண்டாலும், இதில் நாம் சன்மார்க்கத்துக்குரிய சில விஷயங்களைக் காணக்கூடியதாய் இருக்கிறது.

எஸ்தர். **Esther.** [நட்சத்திரம்]. பெர்சியாவிலே இவளுக்கு அத்சாள் என்று பெயர். எஸ்தர் 2^{7}. இவள் சரித்திரம் எஸ்தர் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது.

எஸ்தாவோல். **Eshtaol.** சிம்சோன் முதலாவது தேவ அருளைப் பெற்றதும் அடக்கம் பண்ணப்பட்டதுமான தென் யூதாவில் ஒரு இடம். நியா 13^{25} 16^{31}.

எஸ்தெமோ. **Eshtemoa.**

1. ஒரு ஊர். யோசு 15^{50}.

2. ஒரு ஆள். 1 நாளா 4^{17}.

எஸ்தோன், **Eshton.** 1 நாளா 4^{11}.

எஸ்பாய். **Ezbai.** 1 நாளா 11^{37}.

எஸ்பால். **Eshbaal.** =இஸ்போசேத்.

எஸ்பான். **Eshban.** ஆதி 36^{26}.

எஸ்போன். **Ezbon.**

1. =ஒஸ்னி. ஆதி 46^{16} எண் 26^{16}.

2. 1 நாளா 7^{7}.

3. =Heshbon. உபா 2^{26} உன். பா 7^{4}. இது எமோரியரின் முக்கிய பட்டணம். சாக்கடலின் வட எல்லைக்கு ஏறக்குறைய 15 மைல் கிழக்கே இருந்தது. நேபோமலை இதின் சமீபமாய் இருந்தது.

எஸ்ராயி. **எஸ்ரோ.** **Hezrai.** **Hezro.** 2 சாமு 23^{35} 1 நாளா 11^{37}.

எஸ்ரி. **Ezri.** 1 நாளா 27^{26}.

எஸ்ரோ. **Hezro.** =எஸ்ராயி.

எஸ்ரோன். **Hezron.**

1. ஆதி 46^{9}.

2. ஒரு குடும்பம். ஆதி 46^{12}.

3. =ஆத்சார் அதார். ஒரு ஊர். யோசு 15^{3} எண் 34^{4}.

எஸ்லி. **Esli.** லூக் 3^{25}.

எஸ்றா. **Ezra.**

1. ஒரு குடும்பம். நெகே 12^{1}.

2. யூதர்களின் தலைவன் ஒருவன். எஸ்றா பாபிலோனியா சிறையிருப்பிலிருந்து அவ்விடத்திலுள்ள அர்தசஷ்டா ஆகிய பெர்சியா ராஜாவின் காலத்தில் கி-மு. 458-லே யூதர்களை எருசலேமுக்குத் திரும்ப நடத்திக்கொண்டு போனவன். இவனைப்பற்றி விசேஷமாய் இவன் தான் எழுதின சரித்திரத்திலும் (எஸ்றா 7, 10 அதி), நெகேமியாவின் சரித்திரத்திலும், இன்னும் எஸ்றா நெகேமியா என்னும் புஸ்தகங்களின் மற்றப் பாகங்களிலும் காணலாம். இவன் 'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தேறின வேதபாரகன்.' எஸ்றா 7^{6}. இவன் காலத்தில் பாபிலோனியாவிலுள்ள யூதர்கள் ராஜாவின் தயவு பெற்றவர்களாய் நிர்ப்பந்த நிலைமையில் அல்ல, ஆஸ்தி கல்வி நாகரீகம் உடையவர்களாய்த் தீர்க்கதரிசிகளின் ஏவுதலினாலே யேகோவாவின் மார்க்கத்துக்கு

உண்மையோடு திரும்பினவர்களாய் இருந்தார்கள். அக்காலத்தில் ஜனங்கள் ஆதி பாஷையாகிய எபிரெய பாஷையைப் பேசாததினால் அப்பாஷை தெரிந்தவர்களுக்கும் அதில் சத்தியவேதத்தை எழுதக்கூடிய வேத பாரகருக்கும் அதிகாரம் அதிகரித்தது. அவர்களில் பிரதானமானவன் எஸ்றா. இவன் எருசலேமில் மீதியாயிருந்த யூதர்களுக்கு வந்த நிர்ப்பாக்கியத்தையும் தரித்திரத்தையும் அறிந்து, அவர்கள்மேல் பரிதாபங்கொண்டவனாய் எருசலேமில் மறுபடியும் பாபிலோனில் சிறையிருந்தவர்களை ஸ்தாபிக்கக் கருத்துக்கொண்டு, ராஜாவிடத்திலிருந்து சன்னத்துப் பெற்றான். எஸ்றா 7[11]. கி-மு. 458-ஆம் வருஷத்தில் இவனும் பாபிலோனிலிருந்து போக விரும்பினவர்களும் புறப்பட்டு நாலு மாதத்திற்குப் பிறகு எருசலேம் வந்து சேர்ந்தார்கள். இவன் அங்கே வந்து தனக்குக் கிடைத்த அதிகாரத்தின்படி எல்லாரும் நியாயப்பிரமாணத்துக் கிணங்கி நடப்பதற்கு ஏற்பாடு செய்து, விசேஷமாய் அந்நிய ஸ்திரீகளை விவாகம் செய்கிறவர்களின் விஷயத்தில் ஒரு நியாய சங்கத்தையும் ஸ்தாபித்தான். எஸ்றா 9[2]. இதற்குப்பிறகு பதின்மூன்று வருஷம் இவனைப்பற்றி ஒன்றும் சொல்லியிருக்கவில்லை.

நெகேமியா எருசலேமுக்கு வந்து அதின் மதில்களைக் கட்டினபிறகு, கி-மு. 444-ஆம் வருஷத்தில் எஸ்றா ஜனங்களுக்கு முன்பாக நியாயப்பிரமாணத்தின் புஸ்தகத்தை வாசித்தான் என அறிகிறோம். அக்காலத்தில் கூடாரப் பண்டிகை கொண்டாடினார்கள். நெகே 8[13]. இவன் செய்த பிரயத்தனத்தினாலே யூதர்கள் இதன்பின் மோசேயின் நியாயப்பிரமாணத்தை விடாமல் உறுதியாய்க் கைக்கொண்டார்கள்.

எஸ்றாவின் புஸ்தகம். The Book of Ezra.

1. முதலில் நாளாகமங்கள், எஸ்றா, நெகேமியா என்னும் இம்மூன்று புஸ்தகங்களும் ஒரு புஸ்தகமாய் இருந்தது என்றும் எபிரெய ஆகமத்தை எழுதினவர்கள் இவைகளை வெவ்வேறு புஸ்தகமாகப் பிரித்தார்கள் என்றும் தோன்றுகிறது.

2. **இதின் பிரிவுகள்.**—இதில் இரண்டு பாகங்கள் உண்டு.

(1) 1-6 அதி. கோரேஸ் பாபிலோனியாவைப் பிடித்தபிறகு செருபாபேலின் காலத்தில் கி-மு. 537-ஆம் அநேகர் எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள் என்றும்; தேவாலயம் கட்டத் தொடங்கினார்கள் என்றும்; அப்போது சத்துருக்கள் அதைத் தடுத்தார்கள் என்றும்; ஆகாய் சகரியா தீர்க்கதரிசிகளின் ஏவுதலினாலே கி-மு. 516-ஆம் வருஷத்தில் யூதர்கள் அதைக் கட்டி முடித்தார்கள் என்றும் சொல்லியிருக்கிறது.

(2) 7-10 அதி. ஏறக்குறைய அறுபது வருஷங்களில் சம்பவித்தவை ஒன்றுஞ் சொல்லப்படாமல், கி-மு. 458-ஆம் எஸ்றா பாபிலோனியாவிலிருந்து எருசலேமுக்கு அநேகரை நடத்திக்கொண்டு போனான் என்றும்; அவ்விடத்தில் அந்நிய ஸ்திரீகளை விவாகம் செய்துகொள்ளுகிறவர்களின்பேரில் அவன் ஏற்பாடு செய்தான் என்றும் விவரமாய்ச் சொல்லியிருக்கிறது. எஸ்றாவின் பிற்காலச் சரித்திரம் நெகேமியாவின் புஸ்தகத்தில் இருக்கிறது.

3. **இதின் உண்மை.**—பிற்காலத்து வேதசாஸ்திரிகள் இப்புஸ்தகத்திலுள்ள நகல்கள் உண்மையுள்ளவைகள் என்று அறிந்து காலத்தையும் மற்ற விஷயங்களையும் ஆராய்ந்து இவைகளும் நம்பப்படத்தக்கவை என்றும், இப்புஸ்தகம் உண்மையுள்ள சரித்திரம் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

எஷானு. Jeshanah. பெத்தேலுக்கு வடக்கே $3\frac{1}{4}$ மைல் தூரமாயுள்ள ஒரு ஊர். 2 நாளா 13[19].

எஷிமோன். Jeshimon. ['வனாந்தரம்' அல்லது 'காடு'].

1. சாக்கடலுக்கு வடக்காயும், யோர்தான் நதிக்குக் கிழக்காயுமுள்ள ஒரு வனாந்தரம். எண் 21[20].

2. சாக்கடலுக்குத் தெற்கிலுள்ள ஒரு மலைநாடு. 1 சாமு 23[24].

எஷியா. Jesiah.

1. 1 நாளா 12[6].

2. **இஷியா** காண்க. 1 நாளா 23[20].

எஷியான். Eshan. எபிரோன் மலைநாட்டிலுள்ள ஓர் ஊர். யோசு 15[52].

எட்டி. Worm-wood. கசப்பான ஒரு செடியும் அதின் கனியும். உபா 29[18] வெளி 8[11].

எண்கள். Numbers. மூன்று, ஏழு என்னும் எண்கள் எபிரெயர்களுக்குள் விசேஷமான எண்கள். இவைகள்முதலிய சில எண்களைப்பற்றிச் சிலவற்றைக் கவனிக்க வேண்டும்.

ஒன்று. இது ஏகத்துவத்தையும், அபின்னமான தன்மையையும் குறித்தது. உபா 6[4] எபே 4[5].

மூன்று. இது முழுமையைக் குறிக்கிறது. மூன்று வருஷப் பஞ்சம், மூன்று மாசச் சங

காரம், மூன்று நாள் கொள்ளைநோய். இவைகளில் தாவீது ஒன்றைத் தெரியவேண்டியது. 1 நாளா 21^{12}. தமஸ்குவின் மூன்று பாதகங்கள். ஆமோ 1^{3} 2^{1} மு. மூன்று மேய்ப்பர்கள். சக 11^{8}. மூன்று புருஷர். தானி 3^{23}. மூன்று வேளை ஜெபம். தானி 6^{13}. மூன்று நாள் மூன்று ராத்திரி இயேசு கல்லறையில் இருந்தது. மத் 12^{40}. திரியேகத்துவம். 1 யோவா 5^{8}.

ஏழு. இது பரிசுத்தத்தைக் குறிக்கும் விசேஷித்த எண். கடவுள் சிருஷ்டிப்பை முடித்து ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். வாரத்தில் ஏழு நாள். ஏழாம் வருஷம் ஓய்வு வருஷம். கடவுள் ஜலப்பிரளயத்திற்கு முன் ஏழு நாள் காத்திருந்தார். எவ்வேழு சுத்த மிருகங்கள் பேழைக்குள் விடப்பட்டன. ஏழு வருஷம் யாக்கோபு ராகேலுக்காக வேலை செய்தான். எகிப்தில் ஏழு வருஷம் செழிப்பும் ஏழு வருஷம் பஞ்சமும். ஏழு நாள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையும், கூடாரப்பண்டிகையும் கொண்டாடினது. ஏழு கிளை விளக்கு. எரிகோ பட்டணத்தை ஏழு ஆசாரியர்கள் ஏழு நாள் ஏழு எக்காளத்துடன் சுற்றினது. பழைய ஏற்பாட்டில் இன்னும் அநேக இடங்களில் இந்த எண் சொல்லப்பட்டிருக்கிறது. இது எப்பொழுதும் பரிசுத்தத்தையும் தேவனுடைய சித்தத்திற்குப் பிரியமாய் இருப்பதையும் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தின விசேஷத்தில், சபைகள், விளக்குத்தண்டுகள், ஆவிகள், நட்சத்திரங்கள், முத்திரைகள், எக்காளங்கள், இடிமுழக்கங்கள், கலயங்கள், வாதைகள், தூதர்கள், அந்திக்கிறிஸ்துவின் தலைகள் எவ்வேழாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நாற்பது. இது அநேகம் என்பதைக் குறிக்கிறது. நாற்பது வருஷம் பிரயாணம். இஸ்ரவேலர் நாற்பது வருஷம் மன்னாவைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். மோசே மலையில் நாற்பது நாள் நாற்பது ராத்திரி தங்கினான். மோசே நாற்பது வருஷம் வனாந்தரத்திலே இருந்தான். எகிப்து நாற்பது வருஷம் பாழான வனாந்தரமாயிருக்கும். எசே 29^{10}. எலி நாற்பது ராத்திரி நாற்பது பகல் பிரயாணம் பண்ணினான். 1 இரா 19^{8}. இயேசு நாற்பது நாள் வனாந்தரத்திலிருந்தார்.

ஏழெழுபது. இதுவும் 'முழுமை' என்பதைக் குறிக்கிறது. மத் 18^{22}.

அறுநூற்று அறுபத்தாறு. யூதர்களுக்குள் ஒரு சாஸ்திரத்தின்படி எழுத்தட்டவணையில் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு எண்ணைக் குறிக்கிறது. இதன்படி 'மிருகத்தின் இலக்கம்' ஆகிய இது 'நேரோராயன்' என்னும் ரோமர் ராயனைக் குறிக்கிறது.

எண்ணாகமம். Numbers.

1. மோசே எழுதின புஸ்தகங்களில் இது நான்காவது என்று தலைப்பில் போட்டிருக்கிறது. ஆனால் வேதசாஸ்திரிகள் ஆதியாகமம் மோசேயினாலே எழுதப்படவில்லை என்று சொல்வதுபோலவே இப்புஸ்தகமும் அவனாலே எழுதப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். முதலில் ஆதியாகமத்தில் மூன்று புஸ்தகங்கள் இருந்ததுபோலவே இதுவும் முதலில் மூன்று புஸ்தகங்களாக இருந்தது என்றும், கடவுளுக்கு 'யேகோவா' என்று பெயரிட்டிருக்கிறவனும், 'தேவன்' என்று பெயரிட்டிருக்கிறவனும், ஆசாரத்தைப்பற்றிப் பேசுகிறவனும் ஆகிய மூவர் அப்புஸ்தகங்களுக்கு ஆக்கியோன்கள் என்றும் நினைக்கிறார்கள். இவர்கள் மோசேயிலிருந்து வாய்மொழியினாலும் கையெழுத்துப் பிரதிகளினாலும் தாங்கள் எழுதினவைகளில் பலவற்றைச் சேர்த்தது மோசே இதற்கு ஆக்கியோன் என்னும் யூதர்களின் அபிப்பிராயத்துக்குக் காரணம்.

2. **பிரிவுகள்.**—இந்தப் புஸ்தகத்தில் இஸ்ரவேலர் வனாந்தரத்தில் செய்த பிரயாணத்தைக்குறித்து அதின் துவக்கத்திலும் முடிவிலும் நடந்தவைகளை அதிக விவரமாய்ச் சொல்லியிருக்கிறது.

இதில் மூன்று பாகங்கள் உண்டு.

A. சீனாய் மலையிற் கொடுத்த பிரமாணங்கள். 1^{1}-10^{10}. குடிமதிப்பு, பாளயத்தின் ஒழுங்கு, லேவியருக்குரிய ஆசாரம், அசுத்தம், காணிக்கைகள், சமுசய நிவிர்த்தி ஏற்பாடுகள், நசரேயரின் கொள்கை, ஆசீர்வாதங்கள், விலக்கு, லேவியரின் பிரதிஷ்டை, பஸ்காபண்டிகையைப்பற்றிய இரண்டாம் கட்டளை, மேகஸ்தம்பம், வெள்ளிப்பூரிகைகள்.

B. சீனாய் மலையிலிருந்து ஏதோமுக்குச் செய்த பிரயாணம். 10^{11}-21^{9}. பிரயாணத்தின் ஒழுங்கு, எத்திரோ ஜனங்களைப் போகவிடுதல், ஜனங்களின் முறுமுறுப்பு, எழுபது மூப்பர்களை நியமித்தல், மீரியாமும் ஆரோனும் செய்த கலகம், வேவுகாரரின் பயணம், போஜனபானம், காணிக்கை, ஓய்வுநாள், கோராகு முதலியவர்கள் செய்த கலகம், லேவியரின் கடமைகள், செங்கடாரி சடங்கு, மீரியாமின் மரணம், மோசேயின் கோபம், ஆரோனின் மரணம், ஏதோமைச் சுற்றிப் போகிறது, வெண்கலச் சர்ப்பம்.

C. 21^{10}-36^{13}. ஏதோமிலிருந்து யோர்தான் கரைக்குப் பிரயாணம், பாட்டுகள்,

எமோரியரை ஜெயித்தல், மோவாபைச் சந்தித்தல், பிலேயாமின் சரித்திரம், வேசித்தனம், விக்கிரகாராதனை, பினேகாஸ் ஆகிய பிரதான ஆசாரியனை நியமித்தல், இரண்டாம் குடிமதிப்பு, சுதந்தர உரிமை, மோசேமரணத்திற்குத் தன்னை ஆயத்தப்படுத்துதல், காணிக்கைகள், பொருத்தனைகள், மீதியானியர் அழிக்கப்படுதல், ரூபேன் காத் மனசே தங்களை யோர்தானுக்குக் கிழக்கே ஸ்தாபித்தல், இஸ்ரவேலர் செய்த பிரயாணத்தின் விவரம், கானான் தேசத்தில் அவர்கள் தங்களை ஸ்தாபிப்பதைப்பற்றிய நியமம், லேவியரின் ஊர்கள், அடைக்கலப் பட்டணங்கள்.

3. மேற்சொன்ன அட்டவணையை நாம் பார்த்தால் இந்தப் புஸ்தகம் சரித்திரத்தையல்லாமலும் நியாயப்பிரமாண விவரங்களைப் பற்றியும் சொல்லுகிறது என அறிந்து கொள்ளலாம். இஸ்ரவேலரைப்பற்றிய இந்தச் சரித்திரத்தில் மோசேயின் பயபக்தியையும் (12^3), விசுவாசத்தையும் (10^{29}), யேகோவாவின்மேல் இருந்த அவன் சிநேகத்தையும் (12^6), இஸ்ரவேலரில் அவன் வைத்த அன்பையும் ($11^{2, 10, 27}$ 12^1 21^7), அவனுடைய பயத்தையும் (11^{10}), ஜனங்கள் காட்டின வெறுப்பையும் (20 அதி) நாம் காணலாம். இவைகள் யாவையும் சேர்த்து இப்போது வேதத்தில் இருக்கும் புஸ்தகமாய்ச் செய்தவன் இதை வாசிக்கிறவர்களுக்கு எச்சரிப்பும், புத்தி போதனையும் கூறுகிற ஒரு தீர்க்கதரிசியாய் இருக்கிறான். இந்தப் போதனைகளின்படி இஸ்ரவேலர் ஒரே கடவுளாகிய யேகோவாவுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய கட்டளைகளின்படி நடந்தால்மாத்திரம் அவர்களுக்குப் பாக்கியமுண்டாகும் என்பதைக் காட்டியிருக்கிறான்.

4. **காலம்.** — ஆதியாகமம் எழுதப்பட்ட காலத்தில் இதுவும் எழுதப்பட்டது. இதின் முக்கிய பாகம் கி-மு. எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பது அநேகருடைய அபிப்பிராயம். **ஆதியாகமம்** காண்க.

எண்ணெய். Oil. வேதாகமத்தில் இருநூறு இடங்களில் சொல்லியிருக்கும் எண்ணெய் என்பது ஒலிவமரத்தின் எண்ணெயாம். இது தேகத்தில் பூசுகிறதற்கும், போஜனத்தில் சேர்ப்பதற்கும், விளக்கு எரிப்பதற்கும், மருந்துவகையில் கலப்பதற்கும் உபயோகித்து வந்தார்கள். சங் 104^{15} எண் 1^8 1 நாளா 9^{29} எசா 1^6 லூக் 10^{34}. சடங்காசார முறையில் எண்ணெய் பலவிதமாய் உபயோகிக்கப்பட்டது. யாத் 30^{24} லேவி 2^1 5^{11} 14^{10}. எண்ணெய் கானானியருக்கு அதிக லாபத்தைக் கொடுக்கும் வர்த்தகமாயிருந்தது. எசே 27^{17} ஓசி 12^1. 'தன் காலை எண்ணெயிலே தோய்ப்பான்' (உபா 33^{24}) என்பது அதிக செழிப்பைக் காட்டுகிறது. விருந்தாளிகளின் தலையில் எண்ணெய் பூசுவது சந்தோஷத்திற்கு ஒரு அடையாளம். சங் 45^7.

எதிதாள். Jedidha. யோசியாவின் தாய். 2 இரா 22^1.

எதுத்தூன். Jeduthun.

1. தேவாலயத்தில் பாடின சங்கீதக்காரரில் ஒரு வகுப்பு. 1 நாளா 25^1.

2. அல்லது கீதவாத்தியம் அல்லது ஒரு இராகத்தின் பெயர். சங் 39, 62, 77 தலைப்பு.

எதேத். Jetheth. ஆதி 36^{40}.

எத்சேர். Jezer. எசேர் காண்க.

எத்சோகார். Jezoar. இத்சேயார் காண்க.

எத்சோகார். Jezoar. 1 நாளா 4^7. **சோகார்** காண்க.

எத்தியோப்பியா, கூஷ். Ethiopia. இது எகிப்துக்குத் தெற்கே தற்காலத்தில் நூபியா (*Nubia*) அல்லது சூதான் என்னும் பெயர் கொண்ட வனாந்தரமான தேசம். இங்கே உள்ள ஜனங்கள் அதிக தைரியஸ்தராய் இருந்ததினாலே எகிப்திய ராஜாக்கள் இவர்களைத் தங்கள் சேனைகளிற் சேர்த்தார்கள். எகிப்து ராஜ்யத்தின் வல்லமை குறைந்து போனபிறகு எத்தியோப்பியர் தங்களுக்கு ஒரு ராஜாவை நியமித்தார்கள். இவன் எப்பொழுதும் இவர்களுடைய முக்கிய தேவனாகிய அம்மோனைப் பணிந்து நடந்தான். பிறகு இவர்கள் எகிப்தை ஜெயித்து அதைச் சிலகாலம் (கி-மு. 715–664-வரை) ஆண்டார்கள். தீராக்கா ஒரு எத்தியோப்பிய ராஜா. கி-மு. 24-ல் ரோமர்கள் எத்தியோப்பியரின் ராஜாத்தியாகிய கந்தாகே என்பவளோடு சண்டை செய்தார்கள். எரே 39^{15} எசே 29^{10} 2 இரா 19^9.

எத்திரா. Ithra. இத்திரா காண்க.

எத்திரோ. Jethro. இவனுடைய மறு பெயர்கள் ரெகுவேல், ஒபாப். இவன் சீனாய் தேசத்திலுள்ள மோசேயின் மாமன். யாத் $2^{18, 19}$ 18^1 எண் 10^{29} நியா 4^{11}.

எத்ரேயி. Edrei.

1. பாசான் ராஜாவின் முக்கிய பட்டணம். உபா 1^4.

2. ஒரு ஊர். யோசு 19^{37}.

எத்லோன். Hethlon. எசேக்கியேல் தரிசனத்தில் கண்ட தேவ ராஜ்யமாகிய இஸ்ரவேலின் எல்லையிலுள்ள ஒரு ஊர். எசே 47^{15}.

எத்னன். Ethnan. 1 நாளா 4^{7}.

எத்னி. Ethni. = யாத்திராயி. 1 நாளா $6^{21. 41}$.

எந்தோர். Endor. சவுலுக்குக் குறி சொன்ன அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ வசித்த இடம். 1 சாமு 28^{7} சங் 83^{9}.

எபிரேய பாஷை. Hebrew Tongue. பழைய ஏற்பாட்டுக் காலத்திலுள்ள எபிரெய பாஷைக்கும் இயேசுவின் காலத்திலுள்ள யூதர்கள் பேசின எபிரெய பாஷைக்கும் வித்தியாசம் இருந்தது. இதற்கு 'அரமேயா பாஷை' என்பது விசேஷித்த பெயர். இயேசுவும் பவுலும் இந்தப் பாஷையில் யூதருக்குப் பிரசங்கம் செய்தார்கள். மாற் 5^{41} 15^{34} அப் 21^{40}. **எப்பத்தா** காண்க.

எபிரேயருக்கு எழுதின நிருபம். The Epistle to the Hebrews.

I. **இந்நிருபத்தை எழுதினவன்.**—எபிரெயருக்கு எழுதின நிருபம் என்னும் பெயருள்ள வேதாகமம் எழுதினவன் இன்னான் என்பது நமக்குத் தெரியவில்லை. அலெக்சந்திரியா(*Alexandria*)புரத்திலுள்ள வேத சாஸ்திரிகளாகிய பாந்தேனுஸ் (*Pantaenus*) கிளமெந்து (*Clemens*) ஒரிகென் (*Origen*) என்பவர்கள் பவுல் அப்போஸ்தலன் இதை எழுதினவனாகச் சாதித்தும், அவன் எழுதின வேறு நிருபங்களது பாஷைநடைக்கும், இந்த நிருபத்தின் பாஷைநடைக்கும் காணப்படும் வேறுபாட்டினால் அவன் ஓர் சீஷனைக்கொண்டு இந்நிருபத்தை எழுதுவித்ததாகவும் சொல்லுகிறார்கள். தெர்துல்லியன் (*Tertullian*) என்பவன் பர்னபாஸ் (*Barnabas*) இதை எழுதினவனாகச் சொல்ல, ரோமாபுரி சபையைச்சேர்ந்த சாஸ்திரிகளாகிய இரினாயுஸ் (*Irenaeus*), ஹிப்போலிற்றுஸ் (*Hippolytus*) என்பவர்கள் பவுல் அப்போஸ்தலன் இதை எழுதினவன் அல்ல என்றும், எழுதினவன் இன்னான் என்பது தெரியாது என்றும் சாதிக்கிறார்கள். சிலர் சுமார் கி-பி. 90-ஆம் ஆண்டில் ரோமாபுரியானாகிய கிளமெந்து (*Clemens*) என்பவனும், சிலர் அப்பொல்லோ (*Apollo*) என்பவனும் இதை எழுதினதாகப் பாவிக்கிறார்கள்.

II. **இந்நிருபம் எழுதப்பட்ட காலம்.**—முதல் நூற்றாண்டிலே ரோமாபுரிச் சபை கொரிந்துபட்டணத்துச் சபைக்கு எழுதின ஓர் நிருபத்திலே எபிரெயருக்கு எழுதின நிருபத்திலுள்ள வாக்கியங்களை எடுத்துக் கூறினதை நாம் காண்கிறதினால், இந்நிருபம் முதல் நூற்றாண்டிலே எழுதப்பட்டது என்பதில் ஐயமில்லை. வருஷம் இன்னதென்று உறுதியாகச் சொல்ல முடியாது. இந்நிருபத்தைப் பெற்றவர்களுக்கு யூதருடைய மதத்தைப்பற்றி அதிக விருப்பம் உண்டானது என்று சில சாஸ்திரிகள் அறிந்து, இது எருசலேம்பட்டணம் அழிக்கப்பட்ட கி-பி. 70-ஆம் ஆண்டுக்கு முன் எழுதப்பட்டிருக்கும் என்று சாதிக்க, வேறு சிலர் 3^{7-11} 3^{15}-4^{11}-ஐக் கொண்டு 70-ஆம் ஆண்டுக்குப் பின் எழுதப்பட்டிருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

III. **இந்நிருபம் பெற்றவர்கள்.**—எபிரெயர்கள் யூதர்களில் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவர்கள் என்பது இந்த நிருபத்திலுள்ள முழுப் பொருளாலும் விளங்கும். இந்நிருபம் பொதுவாகக் கிறிஸ்தவர்களான எல்லா யூதர்களுக்கும் எழுதப்படாமல் ஒரே சபைக்கு எழுதப்பட்டது. 2^{3} 5^{12} மு 6^{10} 10^{32} மு 13^{19}. அச்சபை இன்னது என்பது நமக்கு உறுதியாகத் தெரியாது. சிலர் அச்சபை அந்தியோகியா (*Antioch*) என்றும், சிலர் எருசலேம் என்றும், சிலர் பலெஸ்தீனா நாட்டிலுள்ள ஒரு சபை என்றும், சிலர் அலெக்சந்திரியா என்றும், சிலர் ரோமாபுரியிலுள்ள சபைகளில் ஒரு சபை என்றும் வெவ்வேறான நியாயங்களைக்கொண்டு உத்தேசிக்கிறார்கள்.

இந்தச் சபை இன்னது என்று உறுதியாகச் சொல்ல முடியாதாயினும், இதின் தன்மையை நிருபத்தில் கூறப்பட்டவைகளினால் அறிகிறோம். இதில் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களாகி நெடுங்காலமாயிற்று. 5^{12}. அவர்கள் இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்களால் உபதேசம் பெற்றவர்கள். 2^{3}. அவர்கள் பெற்ற உபதேசம் குறைவற்ற உபதேசம். $6^{1. 2}$. அவ்வுபதேசம் பலன் தந்தது. அன்பின் செயலாலும் (6^{10}), இயேசுகிறிஸ்துவினிமித்தம் பட்ட துன்பங்களில் விசுவாசத்தில் சோர்ந்துபோகாமையாலும் (10^{32-34}), அவர்கள் தங்களை உறுதியான கிறிஸ்தவர்களாகக் காட்டிக்கொண்டார்கள். நிருப மெழுதினவன் சென்ற காலத்தைப்பற்றி அவர்களை மெச்சிப் புகழ்ந்துபேசி, நிகழ்காலத்தைப்பற்றி அவர்கள் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கும்பொருட்டு (13^{14}), அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறான். ஏனெனில் அவர்கள் நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் உடையவர்களையும் பிசகிப்போகிறவர்களையும் ($12^{12. 13}$) போன்றவர்களும், பாவப் பற்றுதலை எதிர்த்துநின்று போராடுவதிலே தளர்ந்தவர்களும் (12^{1-4}), அறிவில்

தேருமல் குறைந்துபோனவர்களும் (5^{11-14}), முதலில் துன்பத்தைத் தளர்ச்சியின்றிப் பொறுத்தும் பிறகு அற்ப துன்பத்தைப்பற்றி முறுமுறுக்கிறவர்களாய் இருந்தார்கள். 12^{4-11} 13^{13}. இயேசுகிறிஸ்துவினிமித்தம் அற்ப துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் இயேசுகிறிஸ்துவைப்பற்றினதினுலுண்டான நஷ்டத்தையும் லாபத்தையும் ஒப்பிடுகிருர்கள். 3^{7}-4^{10}. ஏசா என்பவன் ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சிரேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப் போட்டதுபோல் (12^{16}), அவர்கள் இம்மையை அனுபவிக்கும்பொருட்டு, கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் பெரிய நன்மைகளை ($12^{23, 24}$) அற்பமாக எண்ணினவர்கள். எல்லாவற்றிலும் சிறந்தவராகிய தேவனுடைய குமாரனையும் அவர் நமக்காகச் சிந்தின இரத்தத்தையும் காலின்கீழ் மிதித்து (10^{29}), இயேசுவைக் கொன்றுபோட்ட பாவிகள் செய்த பாவத்தை மீளவும் அவர்கள் செய்வார்கள் என்று நினைக்க ஏதுவுண்டு. அவர்கள் அவரை மறுதலிக்காது உறுதிப்படும்பொருட்டு நூலாசிரியன் இந்நிருபத்தை எழுதினன்.

IV. **நிருபத்தின் பொருள்.**—நூலாசிரியன் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் ஒப்பிடுகிருன். அவன் பழைய ஏற்பாடு கொடுக்கும் சிறந்த பலனை எடுத்துக்காட்டி இயேசுகிறிஸ்துவினுலுண்டான புதிய ஏற்பாடு அதிலும் சிறந்தது என்று ரூபித்துக் கூறுகிருன்.

1^{1-4}. **முகவுரை**. இயேசுகிறிஸ்துவினுல் நமக்குத் தரப்பட்டது இது என்று தொகுத்துக் கூறுகிருன்.

தேவசுதனும், உலகத்தின் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய சித்தத்தை அருளிச்செய்து நமது பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணினர்.

A. 1^{5}-6^{20}. **முதல் பாகத்தில்** நூலாசிரியன் கடவுள் பழைய ஏற்பாட்டின் காலத்தில் யாரைக்கொண்டு தம்மை வெளிப்படுத்தினரோ அவர்களையும் இயேசுகிறிஸ்துவையும் ஒப்பிடுகிருன்.

a. தேவன் தம்மைச் சீனய் மலையில் தேவதூதர்களைக்கொண்டு வெளிப்படுத்தினதினுல் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டிலும் சிறந்தது என்று சொல்பவரை மறுத்து, இயேசு தேவசுதனுகையாலும், தேவனுடைய சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறவராகையாலும், அவர் தேவதூதர்களில் பெரியவர் என்று கூறி, பெரியவராகிய இயேசுவின் திருவாக்குகளை அற்பமாக எண்ணும் பேதமையை உணர்த்துகிருன். 1^{5}-2^{4}.

b. இயேசுகிறிஸ்து தேவதூதர்களிலும் பெரியவராகக் காணப்படாமல் மரிக்கவும், தேவதூதர்களின்கீழ் தாழ்த்தப்படவும் கண்டோம் என்று சொல்பவரை மறுத்து, நாம் வஞ்சகனுகிய பிசாசானவனேடும், பாவத்தோடும் செய்யவேண்டிய போராட்டத்தில் இயேசு நமக்குத் துணை என்பதற்கு அவருடைய மரணம் அத்தாட்சியாகையால், அவருடைய மரணம் அவரது அன்பின் மிகுதியைக் காட்டி, அது அவரையும், பிதாவையும் மகிமைப்படுத்துகிறது என்று உணர்த்துகிருன். 2^{5-18}.

c. தேவன் மோசேயை உண்மையுள்ளவனுகத் தீர்த்துக் கனப்படுத்தினதினுல் மோசே இயேசுவுக்கு ஒப்பானவன் என்று சொல்பவரை மறுத்து, மோசே உண்மையுள்ள தொண்டன் என்றும், இயேசு உண்மையுள்ள சுதன் என்றும் காட்டுகிருன். 3^{1-6}.

d. பழைய ஏற்பாட்டின் பலன் இஸ்ரவேலருக்குப் பிறப்பினுல் சொந்தமாகும் என்று பழைய ஏற்பாட்டின் மேன்மையை வலியுறுத்திச் சொல்பவரை மறுத்து, கிறிஸ்தவர்கள் விசுவாசித்துப் பேரின்பத்தை அடைவதையும், விசுவாசிக்காமல் தண்டிக்கப்படுவதையும்போல் இஸ்ரவேலரில் சிலர் பழைய ஏற்பாட்டின் பலனை விசுவாசித்து, அதை அடைந்ததையும், சிலர் விசுவாசிக்காமல் தண்டிக்கப்பட்டதையும் வேதப்பிரமாணத்தால் காட்டுகிருன். 3^{7}-4^{13}.

e. தேவன் பழைய ஏற்பாட்டிலே மோசேயையன்றி ஆசாரியனுகிய ஆரோன் என்பவனையும் நியமித்து வைத்தார். ஆசாரியனது தொழிலால் பாவமன்னிப்புக் கிடைக்கும் என்று பழைய ஏற்பாட்டைப் புகழ்ந்துரைப்போரை நோக்கி இயேசு ஆசாரியன் என்றும், அவர் பிதாவினுல் உயர்த்தப்பட்டும் நமது குறைவுகளை அறியும் மேலான ஆசாரியன் என்றும் உணர்த்துகிருன். 4^{14}-5^{10}.

5^{11}-6^{20}. இரண்டாம் பாகத்தில் இயேசு மெய்யான ஆசாரியன் என்பதை நூலாசிரியன் விவரித்துக் காட்ட ஆரம்பிக்குமுன் பலவகை புத்திமதிகளைச் சொல்லுகிருன்.

a. அவர்கள் நல்விர்த்தியடையாமையைப் பற்றி நூலாசிரியன் கண்டித்து, 5^{11}-6^{3}.

b. இயேசுவை மறுதலிக்காதபடி எச்சரிக்கிருன். 6^{4-20}.

B. 7^{1}-10^{18}. **இரண்டாம்பாகத்தில்** நிருபமெழுதினவன் இயேசுகிறிஸ்து மரித்து உயிரோடெழுந்து மெய்யான ஆசாரியன் ஆனுர் என்று உணர்த்துகிருன்.

a. வேதம் இயேசுகிறிஸ்துவை மெல்கிசேதேக்கின் முறைமையின்படி பிரதான ஆசா

ரியனுகக் கூறலால், அவர் ஆரோன் என்னும் ஆசாரியனில் மேலான ஆசாரியன். ஆபிரகாமும் அவரை மேலான ஆசாரியனுகக் கனப்படுத்தினுன். 7^{1-10}.

b. பழைய ஏற்பாட்டின் ஆசாரியரைப் போல இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தினுலன்றி அழியாத ஜீவனுக்குரிய வல்லமையால் ஆசாரியன் ஆனுர். 7^{11-17}.

c. நம்மைக் குறைவின்றி மீட்டு ரட்சிக்க வல்ல ஆசாரியனுகவே கடவுள் இயேசுவை நியமித்தார். 7^{18-25}.

d. அவர் பரிசுத்தராயும், வானங்களில் உயர்ந்தவராயும், ஒரே பலியை இடுகிறவராயும் இருப்பது அவர் மெய்யான ஆசாரியனுதற்கு அத்தாட்சியாம். 7^{26-28}.

e. அவர் மனுஷரால் செய்யப்பட்ட ஸ்தலத்தில் அல்ல, கடவுளால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்யும் ஆசாரியன். 8^{1-6}.

f. நாம் பரிசுத்தமாவதற்கு ஏதுவாகிய நிலைபெற்ற புதிய உடன்படிக்கையைச் செய்வித்தவர் அவர். 8^{7-13}.

g. பழைய ஏற்பாட்டின் காலத்தில் மகா பரிசுத்த ஸ்தலம் மறைந்ததினுல் பழைய ஏற்பாடு குறைவாயிருந்து, குறைவற்ற புதிய ஏற்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறது. 9^{1-10}.

h. பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிரதான ஆசாரியன் வருஷத்தில் ஒருதரம் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குட் புகுந்து, குறிப்பாகச் செய்ததை, இயேசுகிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தி உண்மையாகவே செய்து முடித்தார். 9^{11-14}.

i. இயேசு இட்ட பலி, புதிய உடன்படிக்கையை உறுதிப்படுத்துகிறது. 9^{15-28}.

j. பழைய ஏற்பாட்டின் ஆசாரியர் மீண்டு மீண்டு பலி செலுத்தினது அந்தப் பலி பலன் தராததற்கு அத்தாட்சி. இயேசுஇட்ட ஒரே பலி, குறைவற்ற பலன் தரும். 10^{1-18}.

C. 10^{19}-12^{29}. **மூன்றம்பாகத்தில்** நூலாசிரியன் ஆசாரியனுகிய இயேசு இட்ட பலியையும், அதன் பலனையும் நினைத்து, கிறிஸ்தவர்கள் செய்யவேண்டியதை உணர்த்துகிறுன். கிறிஸ்தவர்கள் இஸ்ரவேலரைப்போல விசுவாசிக்கவேண்டும்.

a. நூலாசிரியன் முன் சொன்னவைகளை நினைப்பூட்டி இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்திலே நிலைநிற்க புத்தி சொல்லி (10^{19-26}),

b. மறுதலிக்கிறவர்களுக்கு வரும் தண்டனையையும் (10^{26-31}),

c. அவர்கள் முந்திக் காட்டின உறுதியையும் (10^{32}-11^{2}),

d. திருஷ்டாந்தத்தினுல் (11^{3-40}),

e. துன்பத்திலும் விளங்கிநிற்கும் கடவுளுடைய அன்பையும் (12^{1-11}),

f. பாவப் பற்றுதலோடு நாம் செய்ய வேண்டிய போராட்டத்தையும் (12^{12-17}),

g. உண்மையுள்ளவர்கள் அடையும் வீடாகிய பேரின்பத்தையும் காட்டித் தன் போதனையை வலியுறுத்துகிருன். 12^{18-29}.

D. முடிவுரை. 13^{1-19}. பலவகை புத்திமதிகள்.

a. கிறிஸ்தவர்களுக்கு ஏற்ப நடக்கவும் (13^{1-6}),

b. யூதர்களையும் அவர்களுடைய மதத்தையும் விட்டுக் கிறிஸ்தவ சபையில் உண்மையாக இருக்கவும் (13^{7-16}),

c. சபையின் தலைவர்களுக்குக் கீழமைந்து, தனக்காக வேண்டுதல் செய்யவும் (3^{17-19}), நூலாசிரியன் புத்திசொல்லி,

d. வாழ்த்துதல் கூறி (13^{20-25}) நிருபத்தை முடிக்கிருன்.

எபிரேயர். Hebrews. **இஸ்ரவேல்** காண்க.



தற்கால எபிரோன் பட்டணம்.

எபிரோன், எப்ரோன். Hebron, Ebron

1. கோகாத்தின் மூன்ரும் மகன். யாத் 6^{18}.

2. கோராகின் தகப்பன். 1 நாளா 2^{42}.

3. = *Hebron*. எருசலேம் பட்டணத்துக்கு 20 மைல் தெற்கேயுள்ள ஒரு பட்டணம். இதின் முதற்பெயர் கீரியாத்அர்பா. இதின் எல்லைக்குள் இருந்த மக்பேலா என்னும் கல்லறையை ஆபிரகாம் எப்பெரோன் என்பவனிடத்திலிருந்து வாங்கினான். ஆதி 23^{2}. இஸ்ரவேலர் கானான் தேசத்தில் பிரவேசித்தபோது ராக்ஷதரைப்போன்ற மூன்று ராஜாக்கள் இதை ஆண்டார்கள். எண் 13^{22}. காலேப் இதைப் பிடித்துச் சுதந்தரமாக்கிக் கொண்டான். யோசு 14^{12}. தாவீது எருசலேமைப் பிடிக்கும்வரையும் இங்கே ஏழரை வருஷம் அரசாண்டான். 2 சாமு 5^{5}. அப்சலோம் இந்த இடத்தில் கலகம் செய்தான். 2 சாமு 15^{7}. யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போனபிறகு ஏதோமியர் இதைக் கைப்பற்றினார்கள். நெகேமியாவின் காலத்தில் யூதர்கள் மறுபடியும் இதைத் தங்கள் வசமாக்கினார்கள். நெகே 11^{25}.

எபூசியர், எபூசு, யெபூசியர். Jebuzites, Jebus. தாவீது அரசன் எபூசைப் பிடிக்குமுன் அதில் வசித்த ஒரு கானானிய கோத்திரம் எபூசியரே. பிற்பாடு இந்த ஊருக்கு எருசலேம் என்று பெயர் வழங்கிவந்தது. இஸ்ரவேலர் கானான் தேசத்தில் பிரவேசித்தபோது இவர்களை ஆண்ட ராஜனின் பெயர் அதோனிசேதேக். யோசு 10^{3} நியா 19^{11} 2 சாமு 5^{6}. **எருசலேம்** காண்க.

எபேத்மெலேக். Ebed-Melech. [ராஜாவின் ஊழியன்]. எரேமியா தீர்க்கதரிசிக்கு உதவிசெய்த ஒரு எத்தியோப்பியன். எரே 38^{7}.

எபேன் ஏசர். Ebenezer. [உதவியின்கல்].

1. உடன்படிக்கைப்பெட்டி இழந்துவிடப்பட்ட ஓர் போர்க்களம். 1 சாமு 4^{1}.

2. பெரிய ஜெயம் அடைந்த போர்க்களம். 1 சாமு 7^{12}. இதற்கு இந்தக் கல் ஜெய சின்னத்துக்காக நாட்டப்பட்டது.

எபேசியர் நிருபம். The Epistle to the Ephesians. பரி. பவுல் ரோமாபுரியிலே சிறையாய் இருந்தபோது இந்த நிருபத்தை எழுதி, கொலோசெயர், பிலேமோன் நிருபங்களோடு இதையும் தீகிக்குவினிடம் கொடுத்து அனுப்பினான்.

I. **இந்நிருபம் யாருக்கு எழுதப்பட்டது?**— இதின் முகவுரையில் 'எபேசு' என்று சொல்லியிருக்கும் பதம் இரண்டு பூர்வீக கையெழுத்துப்பிரதிகளில் இல்லாததினாலும், இதில் எழுதினவைகள் பொதுவாய் இருக்கிறதினாலும், இது எபேசியருக்குமாத்திரம் அல்ல, சின்ன ஆசியாவின் சபைகளுக்குப் பொதுவாய் எழுதப்பட்டது என்று வேதசாஸ்திரிகள் அநேகர் நினைக்கிறார்கள். அப்படியானால், இது லவோதிக்கேயா சபைக்கு எழுதின நிருபமாய் இருக்கலாம். கொலோ 4^{16}.

II. **நிருபத்தின் நோக்கம்.** — எபேசியர் நிருபத்தையும், மற்ற நிருபங்களையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் மற்றநிருபங்கள் கிறிஸ்தவ சபையிலுள்ள தீமைகளைக் கண்டிக்கவும், கிறிஸ்தவமார்க்க கொள்கைகளை ஸ்திரப்படுத்தவும் எழுதியிருக்கிறதாகத் தோன்றுகின்றன. இந்த நிருபமோ யூதர்களும், புறஜாதிகளும் கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டு அவருடைய உத்தம ஆலோசனை நிறைவேறுகிறதைக் காட்டும்படி எழுதப்பட்டிருக்கிறது.

III. **முக்கிய போதனைகள்.**—(1) கிறிஸ்தவ சபையானது தேவன் ஆதிமுதலாய்க் கொண்ட ஆலோசனையின் நிறைவேறுதல். கிறிஸ்தவ சபை சரீரம்; கிறிஸ்து அதற்குத் தலையாய் இருக்கிறார். 1^{23} 2^{16} 3^{6} 4^{12} 4^{16}. கிறிஸ்தவ சபை கட்டடம்; கிறிஸ்து அதற்கு மூலைக்கல். 2^{21}. சபை மனைவி; கிறிஸ்து தலைவன். 5^{23-27}. (2) கிறிஸ்து செய்த பிராயச்சித்தம் இவ்வுலகத்தில் மாத்திரம் அல்ல, பரலோகத்திலும் முக்கியமானது. $1^{10, 14}$ 2^{7} 3^{10}. (3) பரிசுத்தாவியின் ஊழியத்தைக்குறித்து இந்த நிருபத்தில் விவரமாய்ச் சொல்லியிருக்கிறது. $1^{13, 17}$ 2^{18} 3^{16} $4^{3, 30}$ 5^{9}. (4) ஐக்கியத்தையும் அதை உண்டாக்கும் குணாதிசயங்களையும் காட்டி அதைப்பற்றிக் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும் புத்தி போதனை. $4^{1-7, 15, 25-32}$ 5^{2}. (5) கிறிஸ்தவ இல்லற ஜீவியம். 5^{22}-6^{9}. கிறிஸ்தவ போர்வீரனைப்பற்றி விவரமாய்ச் சொல்லியிருக்கிறது. 6^{10-18}.

IV. **இந்நிருபம் பரி. பவுல்தான் எழுதினது.**—சிலர் இந்த நிருபத்துக்கும் இதற்கு முந்தி எழுதப்பட்ட நிருபங்களுக்கும் பாஷை நடையிலும், அவைகளிலுள்ள கொள்கைகளிலும் வித்தியாசம் இருக்கிறது என்றும்; இதில் 'அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள்' (3^{6} 4^{13}) என்பவர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறவைகள் பிற்காலத்தில் எழுதப்பட்டவைகள் என்றும் எண்ணினதினால் இந்த நிருபம் பரி. பவுலின்காலத்தில் அல்ல, பிற்காலத்திலே எழுதப்பட்டது என்பது அவர்கள் துணிவு.

இதற்கு மாறுத்தரமாக:

1. அந்த சமயத்திலே எழுதப்பட்ட கொலோசெயர், பிலிப்பியர் நிருபங்களும் இந்த நிருபமும் பாஷைநடையில் ஒன்று

தான். பவுல் மற்ற நிருபங்களில் வழங்கியிருக்கும் பதங்கள் இதிலும் உண்டு.

2. நூலாசிரியன் பொதுவாகச் சபைகளைப்பற்றியும், கிறிஸ்து ஆதியிலிருந்து எல்லாச் சிருஷ்டிப்புக்கும் காரணகர்த்தர் என்பதைப்பற்றியும் எழுதினதினால், சில வருஷங்களுக்கு முன்னே தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபத்திற்கும் இதற்கும் வித்தியாசம் முதலிலே தோன்றினாலும், அவைகளில் எழுதப்பட்டவைகள் ஒன்றுக்கொன்று விரோதமானவைகள் அல்ல. மேலும், இயேசுகிறிஸ்து உடனே திரும்பிவாராமல் அவர் கடவுளுடனே எல்லாரையும் வரவர ஐக்கியப்படுத்தித் தமக்குள்ளே கடவுளுடைய சித்தமெல்லாம் நிறைவேற்றுவார் என்று இதில் சொன்னதினாலே, பரி. பவுல் இதற்கு முந்தி எழுதின நிருபங்களில் காட்டியிருக்கும் எண்ணங்களுக்கு இது எதிராய் இல்லை. ஏறக்குறைய மூன்று வருஷம் பரி. பவுல் சபைகளைக் கண்டு சந்திக்காமலும் சபைகளின் விஷயங்களில் பிரவேசியாமலும் ரோமாபுரிக்கு வந்து அதின் மகிமையைப் பூரணமாய்ப் பார்த்தபின், சிறையில் இருந்த காலத்தில் கிறிஸ்தவ ராஜ்யத்தைக் குறித்து யாதொரு ஆலோசனையும் செய்யாமல் இருந்திருப்பானோ? அவன் அதைப்பற்றித் தீர்க்கமாய் ஆலோசித்திருப்பான் என்று நாம் எண்ணவேண்டும். அப்படியிருக்க முன்னிருந்த நிருபங்களைவிட இந்த நிருபத்தில் அநேக காரியங்களைப்பற்றித் திட்டமாய் எழுதியிருப்பது ஆச்சரியமா?

3. 'அப்போஸ்தலர்' 'தீர்க்கதரிசிகள்' இவர்களைப்பற்றி இதில் பேசுவதுபோலவே இதற்கு முந்திக் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்திலும் எழுதியிருக்கிறான். 1 கொரி 15^{28}.

ஆதலால் பரி. பவுல் இந்த நிருபத்தை எழுதவில்லை என்று ஆட்சேபிப்பது எப்படி?

மேலும், இந்த நிருபம் பிற்காலத்தில் இன்னொரு கிறிஸ்தவன் எழுதினது என்றால் அவன் யார்? அவன் இதைப் பரி. பவுலின் நிருபங்களோடு சேர்த்தது எப்படி?

மேலும் பாரம்பரியத்தினாலே பவுல்தான் இதை எழுதினான் என்று விளங்குகிறது. ஆதி பிதாக்கள் இதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்த நிருபத்தை அதிக ஆராய்ச்சியோடு வாசிக்கிறவர்கள் இதைப் பரி. பவுல்தான் எழுதினான் என்று காண்பார்கள் என்பதற்கு ஐயமே இல்லை.

V. மற்ற நிருபங்களுக்கும் இதற்கு முள்ள சம்பந்தங்களிற் சில.

1. கொரிந்தியருக்கு எழுதின நிருபம். 'பொருள்.' 1 கொரி 1^{15}. 'சுவிசேஷத்தின் இரகசியம்.' 1 கொரி 2^{7}. ஆவியின் ஊழியம். 1 கொரி 2^{10} 12^{4}. கிறிஸ்துவுக்குள் எல்லாம் அடங்கி இருக்கிறது. 1 கொரி 15^{24}.

2. பிலிப்பியருக்கு எழுதின நிருபம். கிறிஸ்துவின் மகிமை. பிலி 2^{9} எபே 1^{20}. உண்மையான விருத்தசேதனம். பிலி 3^{3} எபே 2^{11}. ஐக்கியம். பிலி 1^{27} எபே $6^{17.18}$. கிறிஸ்தவ நகராதீனம். பிலி 1^{27} 3^{20} எபே $2^{12.19}$.



அரங்கசாலையிலிருந்து காணப்படும் பாழாய்ப்போன எபேசு.

எபேசு. Ephesus. ரோமை ராஜ்யத்திலுள்ள சின்ன ஆசியாவுக்குத் தலை நகரியாகிய இது கடலோரத்திலிருந்து மூன்று மைல் தூரம் ஒரு ஆற்றின் கரையில் இருந்த ஒரு பெரிய துறைமுகம். இதிலிருந்து சின்ன ஆசியாவிலுள்ள மற்றப் பட்டணங்களுக்குப் பாதைகளிருந்ததினால், இங்கிருந்தும் கிரேக்கு இத்தாலியாமுதலிய தேசங்களிலிருந்தும் பிரயாணிகளும் வியாபாரிகளும் போக்குவரவு செய்வார்கள். இதின் பக்கத்தில் ஒரு சிறிய குன்றின்மேல் கட்டப்பட்டிருந்த மிகவும் அழகான கோவில் ஒன்றில் தியானாள் என்னும் தேவியை வணங்கும்படி லட்சக்கணக்கான ஜனம் வந்து கூடும். **தியானாள்** காண்க. இங்கே ஒரு மலைச்சார்பில் 24,000 ஜனம் கொள்ளக்கூடிய அரங்கசாலை ஒன்று

வெட்டப்பட்டிருந்தது. அதின் படம் 30-ம் பக்கம் பார்க்க. இந்தப் பட்டணத்திலுள்ள பெரியோர்கள் 'ஆசியாநாட்டுத் தலைவர்கள்' என்னப்படுவோர்கள். அப் 19^{31}. இங்கே ரோமை ராஜ்யத்தின் நியாயசங்கம் இருந்தது. இது ஆசியாநாட்டின் தேசாதிபதி இருந்த மத்தியஸ்தானம். இங்கே யூதர்கள் அநேகர் இருந்தார்கள். இந்தப் பட்டணத்துக்குப் பரி. பவுலும் தீகிக்கும் தீமோத்தேயுவும் இன்னும் அநேக கிறிஸ்தவர்கள் வந்ததுமல்லாமல் அதைப்பற்றி நன்றாய் அறிந்திருந்தார்கள். பாரம்பரியத்தின்படி பரி. யோவான் அநேக வருஷகாலம் இதிலே கண்காணியாய் இருந்தான். எபேசு பட்டணத்தில் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு விரோதமாய்ப் பகை எப்பொழுதும் இருந்தது. 1 கொரி 15^{32} 16^{9} 2 கொரி 1^{8} அப் 18^{19} 19^{17} 20^{17} 21^{29} 1 தீமோ 1^{4} 2 தீமோ 4^{12} எபே 6^{21} கொலோ 4^{10} 1 பேது 5^{13} வெளி 1^{11} 2^{1}.

எபேஸ் தம்மீம். **Ephes - Dammim.** 1 சாமு 17^{1} = பாஸ் தம்மீம். 1 நாளா 11^{13}.

எப்சிபாள். **Hephzi-bah.** [அவளில் என் பிரியம்].

1. ராஜாவாகிய மனாசேயின் தாய். 2 இரா 21^{1}.

2. உன்னத சீயோனுக்கு உவமானமாய்ச் சொல்லப்படும் பெயர். ஏசா 62^{4}.

எப்பத்தா. **Ephphatha.** இப்பதத்திற்குச் சீரிய பாஷையில், 'திறந்திருக்கவேண்டும்' என்று அர்த்தமாம். இயேசுகிறிஸ்து பேசினவைகளில் இந்தப் பதமும், இன்னும் சில சீரிய பதங்களும் இருப்பதினாலே அக்காலத்தில் மற்ற யூதர்களைப்போல் அவர் வழக்கமாய்ச் சீரியா என்னும் அரமேயா (*Aramaean*) பாஷையை எப்பொழுதும் பேசிக்கொண்டார். மாற் 7^{34}. இந்தப் பாஷையும் அக்காலத்தில் யூதர்கள் பேசின 'எபிரெய' பாஷையும் ஒன்றுதான். அப் 21^{40}.

எப்பனேத்து. **Epaenetus.** பவுலை நேசித்தவர்களில் ஒருவன். ஒருவேளை இவன் எபேசுபட்டணத்தானாய் இருக்கலாம். ரோ 16^{5}.

எப்பா. **Ephah.**

1. அளவு காண்க.

2. ஒரு யூதன். 1 நாளா 2^{47}.

எப்பாப்பிரா. **Epaphras.** ஒரு கொலோசெயன். கொலோ 1^{7} 4^{12}. இவன் பவுலோடு காவலில் இருந்தவன். பிலே 1^{23}.

எப்பாப்பிரோதீத்து. **Epaphroditus.** பிலிப்பியர்கள் இவன் மூலமாய் ரோமாபுரியிலே சிறையாக்கப்பட்ட பவுலுக்கு உதவி செய்தார்கள். பிலி 2^{25} 4^{18}. இவன் ரோமாபுரியிலே அதிக ஊக்கத்தோடு தேவ ஊழியம் செய்தவன். பிலி $2^{26, 27}$.

எப்பாள். **Ephah.** காலேபின் மறுமனையாட்டி. 1 நாளா 2^{46}.

எப்பிக்கூரர். **Epicureans.** எப்பிக்கூருஸ் கி-மு. 307-ஆம் வருஷத்தில் அத்தேனே பட்டணத்துக்கு வந்த ஒரு கிரேக்க தத்துவ சாஸ்திரி. இன்பமேகதி என்பது இவன் கொள்கை. இதினால் மனிதர் சிற்றின்பத்தை அல்லாமலும் பயம் துக்கம் நோவு துன்பம் முதலியவற்றை யல்ல, எல்லாவற்றிலும் மனரம்மியத்தை நாடி, அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது அவன் கருத்து. அக்காலத்தில் கிரேக்கர் வணங்கின தேவர்கள் உலகத்தைச் சிருஷ்டிக்கவில்லை என்றும்; தற்செயலாய் அணுக்கள் சேர்ந்து உண்டானது என்றும்; மனிதர் விஷயத்தில் தேவர்கள் பிரவேசிக்கமாட்டார்கள் என்றும்; மரணத்தில் நாம் ஒன்றும் உணருகிறதில்லை என்றும்; மரணத்துக்குப்பிறகு நமது ஆவியின் நிலைமையைப்பற்றி நமக்கு யாதொரு அக்கறையும் இல்லை என்றும் போதித்தான். இவன் தேவன் இல்லை என்று சொல்லாவிட்டாலும் இவன் நாஸ்திகரில் ஒருவன் என்று அநேகர் எண்ணுவார்கள். அப் 17^{18}. அப்படியிருக்க முன்னிருந்த தேவர்களை வணங்கினவர்களின் மனதிலே சந்தேகம் உண்டானதினால் அவர்களில் உண்மையை விரும்பினவர்கள் இயேசுகிறிஸ்துவைப்பற்றிக் கேட்பதற்கு மனதில் ஆயத்தமாய் இருந்தார்கள். இவ்விதமாய் இந்த நாஸ்திக மதம் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வழி திறந்தது.

எப்பிராத்தா, எப்ராதா. **Ephratah.**

1. இதற்குக் 'காலேபின் எப்ராதா' என்னும் விசேஷ பெயர். 1 நாளா 2^{24}. இதைப்பற்றி வேறொன்றும் தெரியாது.

2. **பேத்லகேம்** காண்க.

எப்பிராயீம். **Ephraim.** [செழிப்புள்ள நாடு].

1. இவன் யோசேப்பின் மூத்த மகன். இவன் தாய் ஆஸ்நாத் என்னும் எகிப்திய ஸ்திரீ. ஆதி 41^{50}. யாக்கோபு இவனைத் தன் புத்திரர்களில் சேர்த்தான். ஆதி 48^{14}.

2. எப்பிராயீம் கோத்திரம். முதலில் எப்பிராயீம் பெரிய கோத்திரம் அல்ல. எண் 1^{33} 26^{37}. முதலில் எப்பிராயீம் கோத்திரத்தாரும் மனாசே கோத்திரத்தாரும் தங்களைப் பிரிக்காமல் யோசேப்பின் கோத்திரத்தார் என்று நினைத்தார்கள். 2 சாமு 19^{20} 1 இரா 11^{28}. யெரொபெயாம் என்னும் இஸ்ரவேலின் முத

லாம் ராஜா எப்பிராயீம் கோத்திரத்தான். 1 இரா 1^{26}. இவர்களுடைய நாடு கானான் தேசத்தில் உத்தம பாகம்.

3. எருசலேமுக்கு வடக்கே பாலாத்சோர் என்னும் ஊருக்குச் சமீபமாய் உள்ள ஒரு ஊர். 2 சாமு 13^{23}.

4. லாசருவை உயிரோ டெழுப்பினதற் குப் பிற்பாடு இயேசு போன எருசலேமுக்கு வடமேற்கே உள்ள ஒரு ஊர். யோவா 11^{54}.

5. எப்பிராயீம் காடு. இது யோர்தானுக் குக் கிழக்கே இருந்திருக்கலாம். 2 சாமு 18^{6}.

6. எப்பிராயீம் மலை. இது மத்திய பலெஸ் தீனாவிலுள்ள மலைநாடு. நியா 7^{24}.

எப்பிராயீம் வாசல். எருசலேம் காண்க.

எப்பிரோன். Hebron. **எபிரோன்** காண்க.

எப்புனே, எப்புன்னே. Jephuneh.

1. காலேபின் தகப்பன். எண் 13^{6}.

2. 1 நாளா 7^{38}.

எப்பெரோன். Ephron.

1. ஆபிரகாமுக்கு மக்பேலா விற்ற ஏத்தி யன். ஆதி 23 அதி.

2. யூதாவின் வட எல்லையிலுள்ள மலை நாடு. யோசு 15^{9}.

எப்பேர், ஏப்பேர். Hepher, Epher,

1. எண் 26^{32}.

2. 1 நாளா 4^{6}.

3. 1 நாளா 11^{36}.

4. ஒரு ஊர். யோசு 12^{17}.

5. ஆபிரகாமின் சந்ததியாரில் ஒருவன். ஆதி 25^{4}.

6. 1 நாளா 4^{17}.

7. 1 நாளா 5^{24}.

எப்ராதா. Ephrathah. **எப்பிராத்தா** காண்க.

எப்ரோன். Hebron. **எபிரோன்** காண்க.

எப்ரோனு. Ebronah. எண் 3^{34}.

எப்லால். Ephlal. 1 நாளா 2^{37}.

எமீமாள். Jemimah. ['நான் சுகம்,' அல்லது 'புறா']. யோபின் புத்திரிகளில் ஒருத்தி. யோபு 42^{14}.

எமுவேல் = நேமுவேல். Jemuel. ஆதி 46^{10} எண் 26^{12}.

எமோரியர். Amorites. **அம்மோரியர்** காண்க.

எமோர், ஏமோர். Hamor. [ஆண் கழுதை]. இவன் சீகேமின் தகப்பன். ஆதி 33^{19} 34 அதி. யோசு 24^{32} 9^{28}.

சீகேமில் குடியேறினவர்கள். 'எமோரின் மனுஷர்' ஆதலால் எமோர் என்பது ஒரு கோத்திரத்தைக் குறிக்கிறது.


எம்தான். Hemdan. **அம்ராம்** காண்க.

எம்மாவு. Emmaus. எருசலேமிலிருந்து ஏறக்குறைய 8 மைல் தூரத்திலுள்ள ஒரு ஊர். லூக் 24^{13}. இந்த இடம் இப்போது தெரியவில்லை.

எயூஷ். Jeush. **எகூஷ்** காண்க.

எயோதியாள். Euodia. இவள் ஒருவேளை பிலிப்பு பட்டணத்திலுள்ள சபையில் இருந்த ஊழியக்காரி. பிலி 4^{2}.

எராபோலி. Hierapolis. [பரிசுத்த பட்டணம்]. சின்ன ஆசியாவிலே கொலோசெயா லவோதிக்கேயா பட்டணங்களுக்குச் சமீபமாய் உள்ள ஒரு ஊர். இதில் ஓர் வெந்நீர் ஊற்றுண்டு. கொலோ 4^{13}.



மேற்கிலிருந்து காணப்படும் எரிகோ சமபூமி.

எரிகோ. Jericho. யோர்தான் நதியின் பள்ளத்தாக்குக்கு மேற்கே சாக்கடலின் வட எல்லையிலிருந்து வடக்கே 5 மைல் தூரமாய் உள்ள ஒரு ஊர். இஸ்ரவேலர் கானான் தேசத்துக்கு வந்து இந்த ஊரை அழித்தார்கள். யோசு 1-7 அதி. பிறகு இது ஒரு சிறு கிராமமானது. ஆனூன் அவமதித்த தாவீதின் சேனாபதிகள் இங்கே ஒளித்திருந்தார்கள். 2 சாமு 10^{5}. மறுபடியும் ஈயேல் இதைக்

கட்டினான். யோசுவா சொன்ன சாபத்தை நீக்கும்படி அவன் தன் இரண்டு பிள்ளைகளைப் பலியாகச் செலுத்தினான் என்று சிலர் நினைத்தாலும், அது நிச்சயமானது என்று தோன்றுகிறதில்லை. 1 இரா 16^{34}. தீர்க்கதரிசி புத்திரரின் சங்கம் இங்கே இருந்தது. 2 இரா 2^{5}. இஸ்ரவேலர் தாங்கள் யூதாவிலிருந்து பிடித்தவர்களை இங்கே விடுதலையாக்கினார்கள். 2 நாளா 28^{15}. பாபிலோனியர் இங்கே சிதேக்கியாவை ஜெயித்தார்கள். 2 இரா 25^{5}. பர்திமேயு சகேயு இங்கே இருந்தார்கள். இதற்குப் போகும் வழி நல்ல சமாரியனின் உவமையில் சொன்ன இடம். மாற் 10^{46} லூக் 19^{1} 10^{30}. இதின் நிலம் மனுஷர் ஜீவிப்பதற்குச் சுகமான இடமாயில்லாவிட்டாலும் பயிர் செய்வதற்கு அதிக செழிப்பான பூமி.

எரிச்சல். Wrath. ஆதி 4^{5} யோவா 7^{23} ரோ 10^{19}.

எரிபந்தம். Inflammation. **வியாதி** காண்க.

எரிபாயி. Jeribai. தாவீதின் போர்வீரர்களில் ஒருவன். 1 நாளா 11^{46}.

எரிமோத், எரேமோத், யெரிமோத். Jeremoth, Jerimoth.

1. 1 நாளா 7^{8}.
2. 1 நாளா 8^{14}.
3. 1 நாளா 23^{23}.
4. 1 நாளா 25^{22}.
5. 1 நாளா 27^{19}.
6. எஸ்றா 10^{26}.
7. எஸ்றா 10^{27}.
8. எஸ்றா 10^{29}.
9. 1 நாளா 7^{7}.
10. 1 நாளா 12^{5}.
11. 1 நாளா 24^{30}.
12. 1 நாளா 25^{4}.
13. 2 நாளா 31^{13}.
14. தாவீதின் மகன். 2 நாளா 11^{18}.

எரியா. [யேகோவா காண்கிறார்].

1. *Irijah.* எரேமியா பிடித்த தலைவன். எரே 37^{13}.
2. *Jeriah.* ஒரு லேவியன். 1 நாளா 23^{19}.

எரியோத். Jerioth. காலேபின் மனைவிகளில் ஒருத்தி. 1 நாளா 2^{18}.

எருசலேம். Jerusalem.

I. **நிலைமை.**—பலெஸ்தீனாவுக்குத் தலை நகரியாகிய இது அத்தேசத்தின் மலைநாட்டில் கட்டப்பட்டிருந்தது; இதற்குச் சுற்றிவர எல்லையாக இரண்டு பள்ளத்தாக்குகள் உண்டு. (i) கீதரோன் ஆறு அல்லது யோசபாத்தின் பள்ளத்தாக்கு. 2 சாமு 15^{23} யோவே 3^{2}. இது வடக்கிலிருந்து தென்கிழக்காய்ப் போய் மறுபடி தெற்கே திரும்பி வரவர ஆழமாய் யூதா வனாந்தரம்வரையும் எட்டியிருக்கிறது. இது எருசலேமையும் ஒலிவ மலையையும் பிரிக்கிறது. (ii) இன்னோம்குமாரனின் பள்ளத்தாக்கு. எரே 7^{32}. இது எருசலேமுக்கு வடமேற்கே இருந்து தென் கிழக்காய்ப் போய்ப் பட்டணத்திற்கு நேர் தெற்கே கீதரோன் பள்ளத்தாக்கோடு சேருகிறது. இன்னொரு பள்ளத்தாக்கு இந்த இரண்டு பள்ளத்தாக்குகளுக்கு ஊடாகப் போய் எருசலேமை இரண்டு பாகங்களாகப் பிரித்து கீதரோன் பள்ளத்தாக்கோடு சேருகிறது.


எருசலேம் பட்டணம் நாலு மலைக் குன்றுகளின்மேல் நாலுபாகமாகக் கட்டப்பட்டிருக்கிறது. 2 இரா 22^{14}. அவையாவன: அக்கிரா (*Acra*), பெசெதா (*Bezetha*), சீயோன் (*Zion*), ஒபேல் (*Ophel*). ஒபேலில் மோரியா (*Moriah*) ஒரு பாகம். இந்தப் பெயர்கள் நமக்குத் தெரிந்திருந்தும் ஒவ்வொரு பாகத்தின் எல்லையைப்பற்றித் திட்டமாய்ச் சொல்ல முடியாது.

எருசலேமில் நீரூற்றுக்கள் குறைவானபடியினாலே ஜனங்கள் பட்டணத்தின் வெளியில் வெட்டியிருக்கும் கேணிகளிலிருந்து மழைகாலத்தில் தண்ணீர் வந்து விழும்படி சாலகங்களைக் கட்டியிருந்தார்கள். 2 இரா 18^{17} 20^{20} ஏசா 7^{3}. இவைகளில் விசேஷமாய் நமக்குத் தெரிந்தது சீலோவாம் குளம். தாவீது அரசன் சாலகத்தின் வழியாய்ப் போர்வீரரை அனுப்பி எருசலேமைப் பிடித்தான்.

II. **இதின் ஸ்தாபனம்.**

1. முதல் முதல் இதைக் கட்டினவன் இன்னானென்று நமக்குத் தெரியாது. வேதத்திற் சொல்லியிருக்கிறபடி சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக் எருசலேமின் அரசனாய் இருந்தான் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆதி 14^{18}. அப்படியானால் எருசலேம் கி-மு. 2300-௵த்தில் கட்டப்பட்டது என்று தோன்றுகிறது. கி-மு. 1450-௵த்தில் 'உருசலிம்' என்னும் ஊரின் அரசன் எகிப்து அரசனுக்குக் கொடுத்த செங்கல்லில் பதித்த கடிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. எபிரெயர்கள் முதலில் இதற்கு 'எபூசு' என்னும் பெயர் இட்டிருந்தாலும் (யோசு 18^{28}) ஆதி தொடங்கி இதற்கு எருசலேம் என்னும் பெயர்தான் இருந்ததென்று அந்தக் கற்களிலுள்ள அட்சராதிகளைக்கொண்டு விளங்கும்.

2. தாவீது இதைப் பிடிக்கும்வரையும் இஸ்ரவேலருக்கு இது அந்நியமாய் இருந்தது. நியா 19^{12}. எபூசியரிடமிருந்து இதைப் பிடித்த ஒபேல் பாகமும் சீயோன் பாகமும் 'தாவீதின் நகரமாய்' இருந்தது. 2 சாமு 5^{7}.



ஒலிவமலையிலிருந்து காணப்படும் எருசலேம்.

இதற்குத் தாவீதும் சாலொமோனும் கட்டின 'மில்லோ' எது என்று தெரியாது. 2 சாமு 5^{9} 1 இரா 9^{15}. தாவீது இதை முக்கிய பட்டணமாக ஸ்தாபித்து இதில் உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவந்து (2 சாமு 6^{12}), இதற்கு ஒரு தேவாலயம் கட்ட விரும்பித் தடையுண்டானதைக் கண்டபோதிலும் (2 சாமு 7^{4}), எபூசியனாகிய அர்வனா என்பவனுடைய போர் அடிக்கிற களத்தில் அதைக் கட்டும்படி ஏற்பாடுசெய்தான். 2 சாமு 24^{16}. 'தாவீது அரசன் நகரத்துக்கு வெளியே' சாலொமோன் பல கட்டடங்களைக் கட்டி

இவைகளைப் பட்டணத்தோடு சேர்க்கும்படி புதிய எல்லைகளைப் போட்டான். 1 இரா 9[24].

3. யூதாவின் ராஜாக்கள் ஆண்டகாலத்தில் இப்பட்டணத்தின் நாலுபாகங்களும் வரவரப் பெரிதாக்கப்பட்டன. எசேக்கியா ராஜா சீலோவாம் சாலகத்தைக் கட்டினன் என்று தோன்றுகிறது. பல ராஜாக்கள் இந்தப் பட்டணத்தின் மதில்களைப் பழுதுபார்த்து, அவைகளைப் புதிதாய்க் கட்டினார்கள். சாலொமோன் கட்டின தேவாலயத்தை யோசியா பழுதுபார்த்தான். கி-மு. 932-ஆண்டில் எகிப்திய அரசனாகிய சீஷாக் இதைப் பிடித்தபோது இதை அழிக்கவில்லை. கி-மு. 586-ஆண்டில் நேபுகாத்நேச்சார் இதைப் பிடித்து முழுதும் அழித்தான்.

(b) கீதரோன் ஆற்றை நோக்கியிருக்கும் வாசல்கள்.

ஊருணி வாசல். நெகே 3[15].
தண்ணீர் வாசல். நெகே 3[26].

(c) வடபக்கத்திலுள்ள வாசல்கள்.

குதிரை வாசல். நெகே 3[28].
கிழக்கு வாசல். நெகே 3[29].
மிப்காத் வாசல். நெகே 3[31].
ஆட்டு வாசல். நெகே 3[32] யோவா 5[2].
மீன் வாசல். நெகே 3[3].
பழைய வாசல். நெகே 3[6].
எப்பிராயீம் வாசல். 2 இரா 14[13].
மூலை வாசல். 2 இரா 14[13].

தேவாலயத்துக்கு இன்னும் சில வாசல்கள் இருந்தன.

சூர் வாசல். 2 இரா 11[6].

காவலின் பிறகே இருக்கிற வாசல். 2 இரா 11[6].

சல்லெகெத் அல்லது மேற்புறமான வாசல். 1 நாளா 26[16].

பர்பார் அல்லது வெளிப்புறமான வாசல். 1 இரா 26[18].

கிழக்கு வாசல். எசே 11[1].

அலங்கார வாசல். அப் 3[10].

இவைகள் இருந்த இடங்களை ஆராய்ந்து அறியும்படி அநேகர் பிரயாசப்பட்டும் சிலவற்றைப்பற்றித் திட்டமாய் அறியவில்லை.



பெத்தானியாவிலிருந்து காணப்படும் எருசலேம்.

4. கி-மு. 537-ஆண்டில் யூதர்கள் எருசலேமுக்குத் திரும்ப வர ஆரம்பித்த காலத்தில் அதையும் அதிலுள்ள தேவாலயத்தையும் மறுபடியும் கட்டத் தொடங்கினார்கள். தேவாலயம் கட்டி முடிந்திருந்தாலும் நெகேமியா சிறையிருப்பிலிருந்து வந்தபோது, அவனுடைய எவுதலினாலே கி-மு. 444-ஆண்டில் அதின் மதில்களையும் கோட்டைகளையும் மறுபடியும் கட்டினார்கள். நெகேமியா புஸ்தகத்தை நாம் பார்த்தால் அவன் காலத்தில் கட்டின மதில்களையும் வாசல்களையும்பற்றி விவரமாய் அறியலாம். வாசல்கள் எவையென்றால்:

(a) இன்னோம் பள்ளத்தாக்கை நோக்கியிருக்கும் வாசல்கள்.

பள்ளத்தாக்கின் வாசல். நெகே 3[13].
குப்பைமேட்டு வாசல். நெகே 3[13].

5. கி-மு. 333-ஆண்டில் பெர்சியரின் அதிகாரத்தை கிரேக்கர் அழித்ததினாலே யூதர்கள் கிரேக்கருடைய ஆளுகைக் குட்பட்டார்கள். கி-மு. 168-ஆண்டில் கிரேக்க அரசனாகிய அந்தியோகு எப்பிப்பானேஸ் (*Antiochus Epiphanes*) என்பவன் யூதமார்க்கத்தை முழுதும் அழிக்கும்படி கருதி எருசலேமிலுள்ள தேவாலயத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, பல தேவதைகளை வணங்கும்படி யூதர்களை வருத்தப்படுத்தினான். இதினிமித்தம் மக்கபெயர் கலகம்பண்ணி எபிரெய ராஜ்யத்தை மறுபடியும் ஸ்தாபித்தார்கள். அவர்கள் சந்ததியார் ஒருவரோடொருவர் சண்டை செய்ததினாலே ரோமர்கள் கி-மு. 63-ஆண்டில் படையெடுத்து வந்து

எருசலேமைப் பிடித்துத் தேவாலயத்தைப் பரிசுத்தக் குலேச்சலாக்கி, அதிலுள்ள பொக்கிஷங்களைக் கைப்பற்றிச், சில வருஷங்களுக்குப் பிறகு ஏரோதின் வீட்டாருக்கு அதையாளும் அதிகாரத்தைக் கொடுத்தார்கள்.

6. பெரிய ஏரோது கி-மு. 43-ஆம் வருஷத்தில் யூதேயாவை அரசாண்டு, எருசலேமை அலங்கரித்து, அதில் மாளிகைகளையும், அந்தோனியா கோட்டையையும், இன்னும் இரண்டு கோட்டைகளையும், ஒரு பெரிய அரங்கசாலையையும், விசேஷமாய்த் தேவாலயத்தையும் மிகவும் சிறப்பாய்க் கட்டினான்.

7. ஏரோது இறந்தபிறகு இயேசுவின் காலத்தில் எருசலேமைப்பற்றிய விசேஷம் ஒன்றும் இல்லை. அக்காலத்தில் கிறிஸ்தவர்களால் கனிசமாய் எண்ணப்பட்ட கல்வாரிமேடும், இயேசுவை அடக்கம்செய்த கல்லறையும் இருந்த இடங்கள் பிந்தின நூற்றாண்டுகளிலுள்ளவர்களுக்குக் குறிப்பாய் ஒன்றும் தெரியாது; தற்காலத்தில் சிலர் குறிக்கிற இடங்கள் அவைகள் இருந்த இடங்கள் அல்ல என்பது நிச்சயம்.



தெற்கிலிருந்து காணப்படும் எருசலேம்.

கி-பி. 66-ஆம் வருஷத்தில் யூதர்கள் கலகம் பண்ணினதினால் ரோமர்கள் வந்து எருசலேமை முற்றிக்கை போட்டு கி-பி. 70-ஆம் வருஷத்தில் அதை அழித்துப்போட்டார்கள்.

8. அநேக வருஷங்களுக்குப் பிறகு ரோமர்கள் அதை மறுபடியும் கட்டினார்கள். கி-பி. நாலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் எருசலேமில் கட்டியிருக்கும் பரிசுத்த ஸ்தலங்கள் உண்மை என்று நம்பி அவ்விடங்களுக்கு யாத்திரை செய்தார்கள். கி-பி. 637-ஆம் வருஷத்தில் மகமதியர் எருசலேமைப் பிடித்துச் சிலகாலம் தவிர இதுவரையும் அதில் ஆளுகை செய்துவருகிறார்கள். இப்பொழுது மறுபடியும் அது பெரிய நகரமாய் இருக்கிறது.

9. எபிரெயர் தங்கள் சொந்தத் தேசத்தில் அல்லது தூரதேசத்தில் அல்லது சிறையிருப்பில் எங்கேயிருந்தாலும் தாவீதின் காலமுதல் அவர்கள் எருசலேம் பட்டணத்தின்பேரில் அதிக வாஞ்சையும் பிரியமுமுள்ளவர்களாய் எப்பொழுதும் அதை நினைத்து, மறுபடியும் தேவனுடைய ராஜ்யம் அங்கே ஸ்தாபிக்கப்படும் என்றும், எருசலேமுக்கு மேசியா வருவார் என்றும் எதிர்நோக்கி யிருக்கிறார்கள். சங் 137[5] எசே 40-48 அதி. ஏசா 66 அதி. ஞ. 'எருசலேம்' அல்லது 'சீயோனின் மகள்' என்பது யூதர்களை அல்லது தேவனுடைய ஜனங்கள் எல்லாரையும் குறிக்கிறது. ஏசா 1[1] 40[2] செப் 3[14].

இந்த நோக்கத்தின்படி ஆதி கிறிஸ்தவர்கள் தேவனுடைய குமாரனாகிய மேசியா ஸ்தாபித்த ராஜ்யத்திற்குப் 'புதிய எருசலேம்' அல்லது 'மேலான எருசலேம்' என்று சொன்னார்கள். கலா 4[26] வெளி 21[2].

நாம் இவ்விடத்தில் எருசலேமைப்பற்றி மிகச் சுருக்கமாய்ச் சொல்லி யிருக்கிறோம். ஆனால் இங்கே சொல்லியிருக்கிறவைகளினால் எருசலேமின்சரித்திரமும் இஸ்ரவேலின் சரித்திரமும் ஒன்றுதான் என அறியவேண்டும்.

எருசாள். Jerusha. யோதாம் ராஜாவின் தாய். 2 இரா 15[33].

எருது. Bull. **கன்று** காண்க.

எருப்பேசேத். Jerubesheth. [வெட்கம் சண்டை செய்கிறது]. **கிதியோன்** காண்க.

எரேமாயி. Jeremai. எஸ்ரா 10[33].

எரேமியா. Jeremiah.

1. ஒரு போர்வீரன். 1 நாளா 12[10].
2. இன்னொரு போர்வீரன். 1 நாளா 12[13].

3. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா 12⁴.

4. மனாசே கோத்திரத்தான். 1 நாளா 5²⁴.

5. யோசியாவின் மனைவிகளில் ஒருத்தியின் தகப்பன். 2 இரா 23³¹ 24¹⁸.

6. எரேமியா தீர்க்கதரிசியின் காலத்தில் ரேகாபியரின் தலைவன். எரே 35³.

7. ஒரு ஆசாரியன். நெகே 12¹.

8. இன்னொரு ஆசாரியன். நெகே 10².

9. பெரிய தீர்க்கதரிசி. அடுத்த நிபந்தம் காண்க.

எரேமியா. Jeremiah.

I. எரேமியாவின் ஜீவிய சரித்திரம்.— எருசலேம் நகரத்திலிருந்து வட கிழக்குத் திசையை நோக்கி நடந்துபோனால், தற்காலம் ஆனத்தா என்றும், பூர்வீகத்தில் ஆனதோத் என்றும் சொல்லப்பட்ட ஒரு ஊருக்கு ஒன்றேகால் மணிநேரத்தில் போய்ச் சேரலாம். அவ்வூருக்கும் சாக்கடலுக்கும் இடையில் ஒரு பெரிய பாலைவனம் இருக்கிறது. அந்த ஊரில் பரம்பரையாய் வசித்துவந்த ஒரு ஆசாரிய குடும்பத்தில் ஏறக்குறைய கி-மு. 650-ளவுத்தில் எரேமியா பிறந்திருப்பான். அவன் வாலிபனாக இருக்கையில் யூத ஜனங்கள் யேகோவாவைச் சரியானபடி வழிபடவில்லை. யேகோவாவைத் தவிர வேறு தேவர்கள் உண்டென்றும், யேகோவா தங்கள் ஜாதிக்கேயுரிய தேவனென்றும் அவர்கள் நினைத்து, அவரைக் கானானியருடைய பொல்லாத சடங்காசாரங்களின்படி ஆராதித்துவந்ததோடு மேடான இடங்களில் சூரிய சந்திர நக்ஷத்திரங்களையும் சேவித்து, பல துன்மார்க்கமான சடங்குகளை அனுசரித்து வந்தார்கள். கி-மு. 621-ளவுத்தில் ஒரு நியாயப்பிரமாணப் புஸ்தகம் எருசலேம் தேவாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதின் பொருள் உபாகமம் என்னும் புஸ்தகத்தின் பொருளுக்கு ஒத்திருந்தது. யோசியா ராஜா அப்புஸ்தகத்தை அத்யந்த பயபக்தியோடு அங்கீகாரம் செய்து, அதிலே போதிக்கப்பட்டபிரகாரம் தன்னுடைய ராஜ்யத்தில் அதிக கண்டிதமான சீர்திருத்தம் செய்தான். 2 இரா 23 அதி. எரேமியா இந்தக் காரியங்களையெல்லாம் கருத்தாகக் கவனித்திருப்பான். ஆயினும் அந்த விஷயத்தில் அவன் ராஜாவுக்கு உதவி செய்திருப்பானென்பதற்கு நமக்கு அத்தாட்சியில்லை. ஒருவேளை, ராஜாவுடைய கண்டிப்பான ஏற்பாடுகளால் ஜனங்களுடைய இருதயம் சீர்ப்படவில்லையென்றறிந்து, அது பிரயோஜனமற்றது என்று நினைத்திருப்பான். 8⁸. ஐந்து வருஷங்களுக்குப் பின்பு (கி-மு. 616 அல்லது 617-ளவு), அவன் தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டான். 1⁴⁻¹⁶. தன் தாயின் வயிற்றிலிருந்தே ஆண்டவர் இவ்வேலைக்குத் தன்னைத் தெரிந்துகொண்டாரென்று உணர்ந்து, அவன் அன்றுமுதல் நாற்பது வருஷ காலமாக (626-586), அந்த வேலையையே செய்தான். அவனுடைய சொந்தக் குடும்பத்தார், சொந்த ஊரார், எருசலேமிலுள்ள ஆசாரியர், கள்ளத் தீர்க்கதரிசிகள், ராஜாக்கள், சேனைத்தலைவர் யாவரும் அவனை விரோதித்தார்கள். 11²¹ 26⁸·⁹ 20² 37¹³ 36¹⁹·²⁶ 38⁴. அவன் உள்ளத்தில் அடிக்கடி வியாகுலம் உண்டானது. 9² 15¹⁶ 20¹⁴. ஆனாலும் முடிவுபரியந்தம் உண்மையுள்ளவனாக இருந்தான். கடைசியில் அவன் தன் சொந்தஜனங்களுடைய கையினாலே கொலையுண்டானென்று பாரம்பரியமாய்ச் சொல்லப்படுகிறது. அவன் தன்னுடைய ஜனங்களினிமித்தம் இவ்வளவாகப் பாடுபட்டு, அவர்களால் புறக்கணிக்கப்பட்டதினாலே, அவன் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான புருஷனென்று உண்மையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கி-மு. 608-ளவு யோசியா எகிப்து ராஜாவாகிய நேகோவோடு யுத்தஞ்செய்து, மெகிட்டோ என்னுமிடத்தில் ஜெயிக்கப்பட்டு மரித்தான். அந்தச் சம்பவத்தினாலே, யூதா ஜனத்திற்கு நேரிட்ட நஷ்டம் கொஞ்சமன்று. மார்க்கத்தைச் சீர்திருத்தின பக்தியுள்ள ராஜன் இப்படிக் கொலையுண்டு போனானேயென்று, அநேகம்பேர் அறிந்து தங்கள் பழைய வழக்கங்களுக்குத் திரும்பிப் போனார்கள். யோவாகாஸ் என்ற யோசியாவின் குமாரன் மூன்று மாதந்தான் அரசாண்டான். அதற்குப்பிறகு நேகோ அவனைப் பிடித்து, எகிப்துக்குக் கொண்டுபோய், அவனுக்குப் பதிலாக யோயாக்கீமை ராஜனாக வைத்தான். யோவாகாஸ் திரும்பவும் வரவேயில்லை. எரே 22¹⁰-லே அவனுக்காக எரேமியா செய்த புலம்பல் எழுதியிருக்கிறது. யோயாக்கீம், ராஜ்யத்தை முற்றிலும் கெடுக்கத்தக்க விதமாய் நடந்துகொண்டான். மார்க்கவிஷயங்களில் மனாசே ராஜாவினால் நேரிட்ட தீமைகள் யாவும் அவனுடைய காலத்தில் மறுபடியும் அதிகரித்தன. ராஜாங்கத்து விஷயங்களில் அவன் ஸ்திரமாய் ஒன்றையாவது செய்யாமல், கடைசியில் எகிப்து ராஜாவாகிய நேகோ பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரினால் முறியடிக்கப்பட்டபிறகு தான் பாபிலோன் ராஜாவுக்கிட்ட ஆணையை மூன்று வருஷத்துக்குள் மீறினது தன் தேசத்தின்மேல் அந்த ராஜாவின் கோபம்

மூளும்படி காரணமாய் இருந்தது. ஏழைகளை ஒடுக்கி, தான் ஆடம்பரமாய் வாழ்ந்து (22^{13-17}), தன் வார்த்தையை மீறிப் பேசினவர்களைக் குரூரமாய் நடத்திவந்தான். 26^{20-24}. ஒரு கழுதையைப்போல அவன் புதைக்கப்படவேண்டுமென்று எரேமியா சொல்லுகிறான். $22^{18, 19}$. அவனுடையகாலத்தில் எரேமியா அநேக முக்கியமான தீர்க்கதரிசனங்களைச் சொன்னான். ராஜாங்க விஷயங்களைக் குறித்து எரேமியா அக்காலத்தில் ஒரே ஒரு புத்திமதியைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான். அதாவது ராஜ்யம் நிலைபெற்று வாழவேண்டுமென்றால், எகிப்து ராஜாவை நம்பாமல், கர்த்தருடைய சித்தத்தால் ஜெயங்கொள்ளப்போகிற பாபிலோன் ராஜாவுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதே. இவ்வுறுதியான எண்ணம் எரேமியாவுக்குள்ளே இவ்வளவு தெளிவாயும் ஸ்திரமாயும் இருந்தது ஆச்சரியம். கி-மு. 605-ஆண்டில் அந்த எண்ணம் மெய்யென்று பலமாய் ரூபிக்கப்பட்டது. கர்கெமீஸ் என்னுமிடத்தில் எகிப்து தேசத்து ராஜனாகிய நேகோவுடைய சேனைகளெல்லாம் பாபிலோனியரால் சின்னாபின்னமாய் முறியடிக்கப்பட்டன. 46-ம் அதிகாரத்தில் எரேமியாவுக்கு அது எப்படித் தோன்றிற்றென்று பார்க்கிறோம். அவன் பதின்மூன்று வருஷங்களாகச் சொல்லிவந்த காரியம் இதினாலே மெய்யென்று உறுதிப்பட்டது. பின்னும் சகல ஜாதியாரும் சில காலம் பாபிலோனுக்கு அடங்கி இருக்க வேண்டும் என்பது கடவுளுடைய சித்தம் என்று முன் சொன்னதைவிடப் பலமாகத் தெரிவித்தான். ஆனபோதிலும் எப்போதுமே அப்படி இருக்கமாட்டாது என்றும், ஜனங்களுடைய சிக்ஷை முடிந்தபிறகு ஒரு நல்ல காலம் பிறக்கும் என்றும், இஸ்ரவேல் ஜனம் எழுபது வருஷத்துக்குப் பின்பு சொந்தத் தேசத்துக்குத் திரும்பி வரும் என்றும், 25^{12}-ல் போதித்தான். மூன்று வருஷத்துக்குப் பின்பு யோயாக்கீம் தான் பாபிலோனுக்குக் கட்டவேண்டிய கப்பம் கட்டாமல் நிறுத்த, நேபுகாத்நேச்சார் உடனே யுத்தத்திற்குச் சேனைகளைச் சன்னத்தமாக்கிக் கொண்டு யூதேயாவுக்கு வருகிறதற்குள் அவன் இறந்துபோனான். அவன் குமாரனாகிய யோயாக்கீன் பாபிலோன் அரசனால் சிறையாகக்கொண்டுபோகப்பட்டு, பாபிலோனில் முப்பத்தேழு வருஷகாலம் சிறையிலிருந்தான். அவனோடுகூட அநேக பெரியவர்களும் சிறையாகக் கொண்டுபோகப்பட்டார்கள். கி-மு. 597-ஆண்டு எரேமியா அவர்களுக்கு ஒரு நிருபம் எழுதி, அத்தேசத்தில் வீடுகளைக் கட்டி, தோட்டங்களை யுண்டாக்கி, கலியாணஞ் செய்துகொண்டு, நிலையாயிருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும்படி தெரிவித்தான். 29 அதி. யூதாவில் அரசனாயிருந்த சிதேக்கியா சிலகாலம் எரேமியா சொன்ன எச்சரிப்பின்படி பாபிலோன் ராஜாவுக்குக் கீழ்ப்படிந்து நடந்தான். ஆனாலும் ஒபிரா என்னும் பேருள்ள ஒரு புது அரசன் எகிப்துதேசத்தில் சிங்காசனமேறின வுடனே, சிதேக்கியா எரேமியா சொன்ன புத்திமதியைத் தள்ளிவிட்டு, பாபிலோனுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினதினால் நேபுகாத்நேச்சார் நேரே எருசலேமுக்கு வந்து, கி-மு. 587-ஆண்டில் எருசலேம் நகரத்தை முற்றுகை போட்டான். சிதேக்கியா பயப்பட்டு எருசலேமிலிருந்த அடிமைகள் ஆவலாய்ப் போர்செய்யும்படி அவர்களுக்குச் சுயாதீனத்தைக் கொடுத்தான். அச்சமயத்தில் எகிப்து அரசனுடைய சேனை யுத்தத்துக்கு வர நேபுகாத்நேச்சார் எருசலேமைச் சில காலம் விட்டு எகிப்தியருக்கு விரோதமாகப் போனான். உடனே எருசலேமில் இருந்தவர்களுக்கு வீண் நம்பிக்கை உண்டாயிற்று. எரேமியா சொன்ன தீர்க்கதரிசனம் அவர்களுக்குப் பொய்யானதுபோலத் தோன்றிற்று. சிதேக்கியா தான் கொடுத்த வாக்கை மீறிச் சுயாதீனமாய்ப் போனவர்களை மறுபடியும் அடிமைத்தனத்துக் குள்ளாக்கினான். எரேமியா வெகுநாளாக சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தான். இப்படியிருக்கையில் நேபுகாத்நேச்சார் ராஜா மறுபடியும் வந்து, எருசலேம் நகரத்தைச் சூழ்ந்துகொண்டான். எரேமியா சொல்லிவந்த வார்த்தைகளினால் ஜனங்கள் அதைரியப்பட்டுப் போகிறார்களென்று சொல்லிச் சிதேக்கியாவின் சேனைத்தலைவர்கள் அவனைப் பிடித்து, யாதொரு தீர்க்கதரிசியையும் பட்டயத்தால் கொல்லக் கூடாதாகையால், ஒரு ஆழமான குழியில் போடுவித்து, அவன் பசியினால் சாகும்படி அவனைச் சேற்றிலே விட்டுவிட்டார்கள். அவன் அந்தப் பயங்கரமான நிலைமையிலிருந்து ராஜாவினுடைய ஒரு அடிமையால் காப்பாற்றப்பட்டான். ஒன்றரை வருஷமாக எருசலேம் நகரம் முற்றிக்கை யிடப்பட்டதினால், நகரத்தார் சொல்லிமுடியாத வேதனைகள் சகித்த பிறகு பாபிலோன் சேனைவீரர் நகரத்தில் பிரவேசித்தார்கள். கி-மு. 586-ஆண்டு நகரம் முழுமையும் தீக்கிரையாக்கப்பட்டது. ஜனத்தில் கொஞ்சங்குறைய விசேஷித்த மனிதர் எல்லாரும் பாபிலோன் தேசத்துக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டார்கள். எரேமியா பாபிலோனுக்கு அநுகூலமாகப் பேசி

யிருந்தானென்று அதிகாரிகளுக்குத் தெரிய வந்தமையால், அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோகப் பலவந்தம்பண்ணாமல் அவனுடைய இஷ்டத்தின்படியே செய்கிறதற்கு இடங்கொடுத்தார்கள். சொந்தத் தேசத்திலிருக்கவேண்டுமென்று எரேமியா தீர்மானித்து, பாபிலோனியரால் அதிபதியாக நியமிக்கப்பட்ட கெதலியாவினிடத்திற்குப்போனான். இரண்டு மாதங்களுக்குப் பிறகு கெதலியா சதியாகக் கொன்றுபோடப்பட, ஜனங்கள் எல்லாரும் பயந்து எகிப்து தேசத்துக்கு ஓடிப்போவோம் என்று யோசித்து, எரேமியாவின் ஆலோசனையைக் கேட்டார்கள். 41, 42 அதி. அவன் பத்து நாளாக யோசித்து, கடைசியாக எகிப்துவுக்குப் போக வேண்டாமென்று தெரிவித்தான். ஆயினும் ஜனங்கள் எப்போதும்போல அவன் சொல்லைத் தள்ளிவிட்டார்கள். அவனுக்கு நேரிட்ட துக்கம் அவனுடைய ஜீவகாலபரியந்தம் இருந்தது. அவர்களோடுகூட அவனும் எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கேயும் அவர்கள் சந்திரனைக் கும்பிட்டபோது, அவன் அதற்கு விரோதமாகப் பேசினான். அவன் மரித்துப்போன விதத்தைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. தன் சொந்த ஜனங்களுடைய கையால் கல்லெறியுண்டு மரித்ததாகப் பாரம்பரியமாய்ச் சொல்லப்பட்டுவருகிறது. நாற்பது வருஷகாலமாக உண்மையோடு செய்யப்பட்ட ஊழியம் இவ்வாறு முடிவடைந்தது.

II. **எரேமியாவின் புஸ்தகம்**. 36-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபடி கி-மு. 604-லூத்தில் எரேமியா ஒரு புஸ்தகச்சுருளில் இம்மட்டும் தான் செய்த பிரசங்கங்களைச் சுருக்கி எழுதவேண்டுமென்று ஆண்டவரிடத்தில் கட்டளை பெற்றுக்கொண்டான். அந்தப்படி பாருக்கு என்ற ஒரு சீஷனை யழைத்து, தான் வாய்மொழியாய்ச் சொன்னதெல்லாம் எழுதினான். பாருக்கு அதை எழுதி முடித்தபிறகு, அவன் ஒரு பண்டிகை காலத்தில் தேவாலயத்தில் கூடிவந்திருந்த அநேக ஜனங்களுக்கு முன்பாக அதைப் பகிரங்கமாய் வாசித்தான். இந்தப் புஸ்தகச் சுருளை யோயாக்கீம் ராஜா துண்டுதுண்டாகக் கிழித்து நெருப்பிலே எறிந்துவிட, எரேமியா அதற்கு அஞ்சாமல் மறுபடியும் அதன் பொருளைப் பாருக்குக்குச் சொல்ல, அவன் மீளவும் அதை எழுதினான். அந்தச் சுருளின் பொருள் நமக்குத் தெரிந்த எரேமியா புஸ்தகத்தின் முதல் பாகத்தில் அடங்கியிருக்கவேண்டும். இருபத்து மூன்று வருஷங்களில் சொன்ன தீர்க்கதரிசனங்களை அந்தந்தச் சமயத்தில் உரைத்தபடியே திட்டமாக எழுதியிருக்கமாட்டான். அதினாலேதான் சில பாகங்கள் துண்டுகளாகவும் சம்பந்தமில்லாமலும் இருக்கக் காண்கிறோம். அவன் சாதாரண ஜனங்களுக்குத் தன் போதனையின் சுருக்கத்தைச் சொல்லி, தான் இஸ்ரவேல் ஜனத்தின் சரித்திரத்தைப்பற்றியும், அதின் தற்கால ஸ்திதியைப்பற்றியும், அதற்கு நேரிடப்போகிற காரியங்களைப்பற்றியும், தான் கொண்ட எண்ணங்களை ஜனங்களுக்குக் காட்டுகிறதுதான் அந்தப் புஸ்தகச் சுருளை எழுதினதின் நோக்கம். பிறகு இந்தச் சுருளிலடங்கிய பாகங்களோடு வேறு சில பாகங்களும் உண்டு. பொதுவாக நாம் எரேமியாவின் புஸ்தகத்தை வாசித்தால், அதின் ஒழுங்கு காலக்கிரமத்துக்குச் சரியாய் ஒத்துவருகிறதில்லை. அந்தக் காரணத்தால்தான் இக்காலத்திலுள்ள அநேகருக்கு எரேமியா புஸ்தகம் சரியாய்த் தெரிகிறதில்லை.

அந்தப் புஸ்தகச் சுருளைத்தவிர, யோயாக்கீம் ராஜாவின் பிந்திய வருஷங்களிலும், யோயாக்கீன் சிதேக்கியா ராஜாக்களின் காலங்களிலும் எரேமியா உரைத்த தீர்க்கதரிசனங்களும் நமக்குத் தெரிந்த எரேமியாவின் புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன. பிற்காலத்தில் எரேமியா மரித்தபிறகு அவனை நன்றாய் அறிந்த ஒருவன் அவனுடைய ஜீவிய சரித்திரத்தைப்பற்றிச் சில அதிகாரங்களை எழுதி அவைகளை இந்தப் புஸ்தகத்தில் சேர்த்திருக்கிறான். இந்தச் சரித்திரக்காரன் பாருக்குவாயிருக்கக்கூடும். சில சிறு பாகங்கள் எரேமியாவாலும் அந்தச் சரித்திரக்காரனாலும் எழுதப்படாமல், இந்தப் புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில வேதசாஸ்திரிகள் இப்புஸ்தகத்தின் வாக்கியங்களைக் காலக்கிரமத்துக்குத் தக்கதாகப் பிரித்து ஒழுங்குபடுத்தும்படி பிரயாசப்பட்டிருக்கிறார்கள். எரேமியா அநேக வாக்கியங்கள் உரைத்த தருணங்கள் நமக்குத் தெரியாதிருந்தபோதிலும், ஏறக்குறைய பின்வரும் வரிசையின்படி நாம் வாசித்தால், புஸ்தகத்தின் பொருளைத் தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

i. **கி-மு**. 626-604. **புஸ்தகச் சுருளின் பொருள்.** $1^{1.2.4-19}$ $2^{1-13.18-37}$ $3^{1-5.19-25}$ $4^{3-9.11-31}$ $5^{1-19.23-31}$ 6 அதி. 3^{6-16} 11 அதி. $12^{1-3.5-6}$ 18 அதி. 7 அதி. 8 அதி. 9^{1-21} 10^{17-24} $25^{1-3.7-11.15-29}$ 46^{1-12} 47 அதி. $48^{1-20.25.28.35-44}$ 49^{1-33}.

ii. **கி-மு**. 604-597. **யோயாக்கீமின் பிந்தியகாலத்தில் உரைக்கப்பட்டவை.** 14 அதி. $15^{1-10.15-21}$ $16^{1-13.16-18.21}$ $17^{1-4.14-18}$ 12^{7-17} $35^{1-14.17-19}$.

யோயாக்கீன் காலம். கி-மு. 597. 13. அதி.

சிதேக்கியா காலமும், பிந்திய காலமும். கி-மு. 596-586. 24 அதி. $29^{1. 3-15. 21. 22. 31. 32}$ 49^{34-39} 22 அதி. $23^{1-6. 9-18. 21-40}$ $21^{1-10. 13. 14}$ $20^{14-18. 7-12}$ $32^{1. 2. 6-15. 24-44}$ $33^{1. 4-13}$ $23^{7. 8}$ ($= 16^{14.15}$) $30^{1-19. 13-21}$ $31^{1. 2-9. 15-34. 38-40}$ 46^{13-26}.

iii. எரேமியாவின் சரித்திரத்தைப்பற்றியது. 19 அதி. 20^{1-6} $26^{1-19. 24. 20-23}$ 36 அதி. 45 அதி. 28^{1-a}. $27^{1b-6. 8-22}$ 28^{1b-17} 51^{59-64} 34^{1-7} $37^{5. 3. 6-10}$ 34^{8-22} $37^{4. 11-22}$ 38^{1-28a} 39^{15-18} $39^{3. 14}$ 40^{6-16} 41-43 அதி. 44^{1-28}.

iv. எரேமியாவும் சரித்திரக்காரனும் எழுதாதவை. 10^{1-16} 17^{19-27} $39^{1. 2. 4-12}$ 40^{1-6} 50^{1-58} 52 அதி.

எரேமியாவினுடைய குணலக்ஷணங்களில் விசேஷமாய் உண்மை, பரிதாபம், கபடின்மை, மனவுருக்கம், தேவபக்தி, சில சமயங்களில் ஒருவிதமான கோபம் இவைகளையெல்லாம் இந்தப் புஸ்தகத்தின் பாஷைநடையில் நாம் பார்க்கலாம். அவன் சொன்ன சில வாக்கியங்கள் அவற்றின் உறுதியினாலும், துயரப்போக்கினாலும் நமது காதுகளில் பல நாளாகத் தொனித்துக்கொண்டேயிருக்கக்கூடியன. திருஷ்டாந்தமாக: 'அறுப்புக்காலம் சென்றது, கோடைகாலம் முடிந்தது, நாமோ ரக்ஷிக்கப்படவில்லை.' 8^{20}. 'இஸ்ரவேலின் நம்பிக்கையே, ஆபத்துக்காலத்தில் அதின் ரக்ஷகரே, நீர் தேசத்தில் பரதேசியைப்போலவும், இராத்தங்க இறங்குகிற வழிப்போக்கனைப் போலவும் இருப்பானேன்?' என்கிறான். மரணத்தையும் நாசத்தையும் பற்றி அவனைப்போல வேறே யாரும் அவ்வளவு பயங்கரமானவிதமாய் வல்லமையோடு தெரிவிக்கவில்லை. 15^{1-9} 4^{23-29} பார்க்க. மரணத்தைத் தெரிவித்தபோதிலும், ஜீவனைப்பற்றியும், அதின் சத்தங்களைப்பற்றியும், சந்தோஷங்களைப்பற்றியுந்தான் அவனுக்கு அதிக நாட்டம். 7^{34} 16^{9}. அழுகையின் தீர்க்கதரிசி என்கிறபேர் அவனுக்கிருந்தாலும், சில சமயங்களில் ஆண்டவர் இனிமேல் கொண்டுவரப்போகிற நன்மைகளைப்பற்றி மிகவும் நேர்த்தியாகச் சிறப்பாய்ச் சொன்னான். 31 அதி.

III. எரேமியா புஸ்தகத்தின் போதனை.- எரேமியா புஸ்தகம் விசேஷித்த போதனைகளைச் சொல்லாமல் நமக்கு உத்தம பக்தியின் முன்மாதிரியைக் காட்டுகிறது. எரேமியாவுக்கு முந்தி பக்தர்கள் இல்லாமற்போகவில்லை. ஆனாலும் எரேமியா இவ்விதம் தன் ஜீவகாலமெல்லாம் இடைவிடாமல் கர்த்தருக்காகத் தான் நேசித்த ஜனங்களோடு செய்த போரினாலே பக்தி இன்னதென்று முன்னே தெரிந்ததைவிட இப்போது அதிக தெளிவாய்த் தெரிவித்திருக்கிறான். பழைய நூல் அவனுடைய அனுபவத்தால் புதிப்பிக்கப்பட்டது. அதோடு சில புதிய போதனைகளும் இணைக்கப்பட்டன. **பாவம்** இன்னதென்று ஓசியாவைப்போலக் காட்டினான். இஸ்ரவேல் யேகோவாவைச் சேவித்துக்கொண்டிருந்தபோதிலும், உண்மையான இருதயத்தோடு அவரைச் சேவிக்காமலிருப்பதுதான் பெரிய பாவம் என்றான். மனுஷனுடைய இருதயத்தின் எண்ணம்தான் விசேஷம். இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. 17^{9}. அந்த இருதயமே மாறவேண்டும், நியாயப்பிரமாணமானது உள்ளத்தில் எழுதப்படவேண்டும் (24^{7} 31^{31-34}) என்று போதித்தான். சாதாரணமாய் மற்றத் தீர்க்கதரிசிகளைப்போல எரேமியா இஸ்ரவேலரை ஒரே ஜனமாகப்பாவித்து அவர்களுக்குப் போதனை கொடுத்தாலும், அவன் பாவத்தைப்பற்றி ஒவ்வொரு மனுஷனுக்கும் தனித்தனி உத்தரவாதமுண்டு என்னும் ($31^{29. 30}$) புது உபதேசத்தைப் பிரசித்தப்படுத்தினான்.

கடவுளைப்பற்றி எரேமியா தனக்கு முன் இருந்தவர்களைப் போலவே, போதித்தான். 14^{22} $5^{24. 22}$ 2^{11} 16^{19} முதலிய வாக்கியங்களில் யேகோவா ஒரே தேவன், அவரே வல்லமையுள்ளவர் என்று சொல்லியிருக்கிறான். ஆனால் அதோடு நில்லாது யேகோவாவுக்கும் அவருடைய ஜனங்களுக்குமுள்ள சம்பந்தத்தினால்தான் அவருடைய திவ்விய லக்ஷணங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன என்றும் சொல்லுகிறான். 3^{19} 14^{7-9} $17^{12. 13}$ $23^{23. 24}$.

மார்க்கம் இன்னதென்று தெளிவாகச் சொல்லுகிறான். 'மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவனென்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.' 19^{24}. 'அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்.' 22^{16}.

மார்க்கத்தின் அஸ்திபாரமே நம்பிக்கை. கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத்தான் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்றிவ்விதமாகக் கூறுகிறான். எரேமியாவினுடைய இயற்

கையான குணுதிசயங்களில் பலவீனம் இருந்திருக்குமென்பதற்குச் சில அடையாளங்களிருக்கின்றன. $15^{10.18}$ 9^{2} 20^{14-18}. எரேமியா தனிமையாயிருந்த காலத்தில் அடிக்கடி மனஞ் சோர்ந்துபோனுன். சில சமயங்களில் தன்னை மனுஷராலும் தேவனுலும் தள்ளப்பட்டவனுக நினைத்தான். ஆனுலும் மனுஷரால் எவ்வளவு கொடுமையாய்த் தள்ளுண்டானே, அவ்வளவுக்கு அதிகமாய் அவன் கடவுளிடத்தில் கிட்டிச் சேர்ந்து, ஐக்கியப்பட்டு, கடவுளை நம்பினுன்.

எரேமோத். Jeremoth. **எரிமோத்** காண்க.

எரோகாம். Jeroham.
1. 1 சாமு 1^{1}.
2. 1 நாளா 8^{27}.
3. 1 நாளா 9^{12}.
4. 1 நாளா 12^{7}.
5. 1 நாளா 27^{22}.
6. 2 நாளா 23^{1} ம.

எர்மா. Hermas. ரோமைச்சபையில் ஒருவன். இந்தப் பெயர் அடிமைகள் அநேகருக்கு வழங்கி வந்தது. ரோ 16^{14}.

எர்மே. Hermes. ரோமைச்சபையில் ஒருவன். இந்தப் பெயர் அடிமைகளுக்கு வழங்கி வந்தது. ரோ 16^{14}.

எர்மோகேனே. Hermogenes. பவுலின் தோழர்களில் அவனை விட்டுப் பிரிந்த ஒருவன். 2 தீமோ 1^{15}.

எர்மோன். Hermon. ஒன்பதினுயிரம் அடிக்குமேல் உயரமுள்ள சீரியாவின் ஓர் மலை. இது கலிலேயாக் கடலுக்கு வடக்கே ஏறக்குறைய முப்பது மைல் தூரமுள்ளது. இதின் பெயர் 'பிரிக்கப்பட்டது' அல்லது 'பரிசுத்த இடம்' என்று குறிக்கிறதினுலே இது ஆதியிலிருந்து பரிசுத்தஸ்தலமாய் எண்ணப்பட்டு வந்தது என நினைக்கவேண்டும். இதற்குப் 'பாகால் எர்மோன்' என்னும் மறுபெயரும் இருந்ததினுல் (நியா 3^{3}) கானனியர் பாகாலை அங்கே வணங்கினுர்கள் என்று தோன்றுகிறது. பெனிக்கேயர் இதற்கு 'சீரியோன்' என்றும், எம்மோரியர் 'சேனிர்' என்றும் பெயரிட்டிருந்தார்கள். உபா 3^{9}. ஒருவேளை இது இயேசு மறுரூபம் அடைந்த மலை. மாற் 9^{2}. இது அதிக உயரமாய் இருந்ததினுல் உறைபனி எப்பொழுதும் இங்கே இருக்கும்.

எலாசா. Elasah. [கடவுள் செய்தார்]. எஸ்று 10^{22}.

எலாதா. Eleadah. 1 நாளா 7^{20}.

எலாமீத்தர். Elamites. அப் 2^{9}. **ஏலாம்** காண்க.

எலி. Mouse. பலெஸ்தீனுவில் எலி பலவிதமாய் இருக்கும். லேவி 11^{29}.

எலிக்கா. Elika. 2 சாமு 23^{25}.

எலிகூ. Elihu. [அவர் கடவுளே].
1. சாமுவேலின் முன்னேர்களில் ஒருவன். 1 சாமு 1^{1}. = எலியேல். 1 நாளா 6^{34}. = எலியாப். 1 நாளா 6^{27}.
2. தாவீதின் மூத்தமகன். 1 நாளா 27^{18}. = எலியாப். 1 சாமு 16^{6}.
3. 1 நாளா 12^{20}.
4. 1 நாளா 26^{7}.
5. யோபின் மூன்று சிநேகிதர்களில் இளையவன். யோபு 32^{2}.

எலிசபாள். Elisheba. ஆரோனின் மனைவி. யாத் 6^{23}.

எலிசபேத். Elizabeth. [கடவுள் ஆணையிட்டிருக்கிறுர்]. சகரியாவினுடைய மனைவி. யோவான்ஸ்நானகனுடைய தாய். இவள் ஆசாரிய குடும்பத்தைச் சேர்ந்தவள். மரியாளுடைய இனத்தாள். லூக் $1^{5.36.43}$.

எபிரெய பாஷையில் இந்தப் பதம் 'எலிசபாள்' என்று சொல்லியிருக்கிறது. யாத் 6^{33}.

எலிசா. Elisha. ஆபேல்மேகொலாவில் பிறந்து ஆஸ்தியுள்ள ஒரு குடியானவனுடைய குடும்பத்தில் சேர்ந்தவன். ஓரேப் மலையிலிருந்துவந்த எலியா இவனைத் தீர்க்கதரிசனம் உரைக்கிறதற்கு அழைத்தபிறகு இவன் அவனுடைய உத்தம சீஷன். 'எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்தவன்' என்பது இவனுடைய பெயர். 1 இரா 19^{16} 2 இரா 3^{11}. எலியா பரலோகத்துக்குப்போன பிறகு இவன்தான் இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளில் பிரதானமானவன். 2 இரா 2^{15}. இவன் யோராம், ஏகூ, யோவகாஸ், யோவாஸ் என்னும் இஸ்ரவேலின் நாலு ராஜாக்கள் காலத்தில் (கி-மு. 851-797-வரை) தீர்க்கதரிசனம் உரைத்தான். விசேஷமாய் யோராம் காலத்தில் இவன்தான் தன் ஊழியத்தை நிறைவேற்றினுன். 2 இரா 3^{1} 9^{1}. இவன் பேரின் அர்த்தம் 'கடவுள் இரட்சிப்பாய் இருக்கிறுர்.' இதில்தான் இவனுடைய குணுதிசயங்களும் ஊழியத்தின் நோக்கமும் தோன்றும். இவன் பட்டணங்களில் வசித்தவன். இவனைப்பற்றிச் சொன்ன அற்புதங்கள் இரக்கமுள்ளவைகள். 2 இரா 2^{19} $4^{1.38.42}$ 5^{6} 6^{1} 8^{1}. ஆனுல் எலியாவைப்போல் இவனும் பாவத்தைக் கண்டிப்பான். 2 இரா 2^{23} 5^{27}. [2 இரா 2^{23}-ல் 'பிள்ளைகள்' என்பது எபிரெய பாஷையில் 'சிறுபிள்ளைகள்' அல்ல

'வர்லிபர்கள்' என்று அர்த்தமாம்]. இவன் யோராம் செய்த பாவத்தைக் கண்டிக்காமல் விடவில்லை. 2 இரா 3[13].

ஆகாபின் வீட்டாருக்கு எலியா இட்ட சாபத்தின்படி எலிசா ஏகூவை ராஜாவாக அபிஷேகம் செய்தான். 2 இரா 9[6]. இவனுடைய கீர்த்திப் பிரஸ்தாபம் சீரியருக்குத் தெரியும். பெனதாத் என்னும் சீரியா ராஜா அனுப்பின ஆசகேல் தன் எஜமானைக்கொலை செய்து தான் சீரியாவின்மேல் ராஜா ஆவான் என்று தெரிவித்தான். 2 இரா 8[7]. மரண காலத்தில் இவன் யோவாஸ் என்னும் ராஜாவுக்குச் சீரியரின்மேல் ஜெயம் அடைவதைப் பற்றி அடையாளம் காண்பித்தான். 2 இரா 13[15]. இவன் பலதடவை வருகிற விஷயங்களை முன் அறிவித்தான். 2 இரா 4[16] 5[26] 6[8] 7[1] 8[10, 12] 9[6] 13[15].

எலிசாமா, எலிஷாமா. Elishama.

1. யோசுவாவின் பாட்டன். எண் 1[10].
2. தாவீதின் மகன். 2 சாமு 5[16].
3. =எலிசுவா. 2 சாமு 5[15]. 1 நாளா 3[6].
4. 1 நாளா 2[41].
5. கெதலியாவைக் கொன்றவன். 2 இரா 25[25].
6. வேதபாரகன். எரே 36[12].
7. ஒரு ஆசாரியன். 2 நாளா 17[8].

எலிசுவா. Elishua. **எலிசாமா** காண்க.

எலிஷாபாத். Elishaphat. 2 நாளா 23[1].

எலிதாத். Elidad. எண் 34[21].

எலிபால். Eliphal. 1 நாளா 11[35]. =எலிப்பெலேத். 2 சாமு 23[34].

எலிபெலேத், எலிப்பேலேத். Elephelet.

1. தாவீதின் குமாரர்களில் ஒருவன். 2 சாமு 5[16].
2. தாவீதின் போர்வீரர்களில் ஒருவன். 2 சாமு 23[34]. =எலிபால். 2 நாளா 11[35].
3. 1 நாளா 8[39].
4. எஸ்றா 8[13].
5. எஸ்றா 10[33].

எலிப்பாசு, எலீபாசு. Eliphaz.

1. ஆதி 36[4].
2. யோபினுடைய சிநேகிதரில் பெரியவன். யோபு 2[11].

எலிப்பெலேகு. Eliphelehu. 1 நாளா 15[18].

எலிப்பேலேத். Eliphelet. **எலிபெலேத்** காண்க.

எலிமா. Eymas. இவன் மறுபெயர் பர்யேசு. அப் 13[6]. எலிமா என்பது 'வித்துவான்' அல்லது 'மாயவித்தைக்காரன்' என அர்த்தமாம். இந்த மாயவித்தைக்காரர் அக்காலத்தில் பலவித்தையையும் ஆராய்ந்து கலைஞானத்தோடு போலிஞானத்தையும் கலந்து பலரையும் வஞ்சித்துவந்தார்கள். இவர்கள் சத்தியம் நிறைந்த கிறிஸ்தவ மார்க்கத்துக்கு முக்கிய விரோதிகள். 'பர்யேசு' என்றால் 'இயேசுவின் மகன்' என்று அர்த்தமாம். யூதர்களுக்குள் இயேசு என்னும் பெயர் வழங்கிவந்தது.

எலிமெலேக்கு. Elimelech. நகோமியின் புருஷன். ரூத் 2[1].

எலியா. Elijah. [யேகோவா தேவனாய் இருக்கிறார்].

1. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா 8[27].
2. ஒரு ஆசாரியன். எஸ்றா 10[21].
3. ஒரு யூதன். எஸ்றா 10[26].
4. தீர்க்கதரிசி.

எலியா ஆகாப் அகசியா என்னும் இஸ்ரவேல் ராஜாக்களின் காலத்தில் (கி-மு. 875-851) தீர்க்கதரிசனம் உரைத்த ஓர் மகா பக்தன். கீலேயாத் நாட்டின் திஸ்பி என்னும் ஊரிற் பிறந்தவன். 1 இரா 17[1]. இவன் தகப்பனுடைய சரித்திரத்தைப்பற்றியும், இவன் தீர்க்கதரிசனம் உரைக்கிறதற்கு முந்திய காலத்தைப்பற்றியும் ஒன்றும்சொல்லியிருக்கவில்லை. இவன் தீர்க்கதரிசனம் உரைத்த காலத்தில் இஸ்ரவேலில் இருந்த சன்மார்க்கமெல்லாம் பாகாலை வணங்கினதினால் அழிந்துபோனதைப்போலத் தோன்றுகிறது. அக்காலத்திலிருந்த ஆகாப் என்னும் ராஜா ஏசபேல் என்னும் பெனிக்கேயாள் ஆகிய ராஜகுமாரத்தியை விவாகம்செய்து அவளுடைய நோக்கத்துக் கிசைந்து இஸ்ரவேலரின் தேசத்திலே ஜனங்கள் எல்லாரும் சோரமார்க்கத்தில் நடக்கும்படி தூண்டிவிட்டான். எல்லாரும் அவன் போனவழியிலே நடக்கும்போதே எலியா தீர்க்கதரிசி வந்தான். இவன் மயிர் உடை தரித்து, தோற்றத்தில் நாகரீகம் ஒன்றுமில்லாமல் இருந்தான். ராஜாவும் ராஜாத்தியும் ஜனங்களும் செய்த துன்மார்க்கத்தையெல்லாம் கண்டித்து, யேகோவாவின் நீதியையும் சன்மார்க்க நடையையும் நாடும்படி போதித்து வந்தான். யேசபேல் இவன் போதிக்கிறதெல்லாம் தான் விரும்பின மார்க்கத்துக்கு விரோதம் என்று கண்டு அவனை அகற்றும்படி கருதினாள். 2 இரா 1[8] 1 இரா 16[32] 17[3].

எலியாவின் சரித்திரம்.—1 இரா 17[1]-19[21] 21[1-29] 2 இரா 1[1]-2[15]. இவைகளோடு 2 இரா 9[36] 10[10, 17] 2 நாளா 21[12] ஒப்பிட்டுப்பார்க்க.

எலியாவின் நோக்கம்:

1. பொய்த்தேவர்களின் வணக்கத்தை இஸ்ரவேலரிலிருந்து நீக்குவது;

2. ராஜ்யத்தை நீதியாய் நடத்துவது;

3. இஸ்ரவேலர் துன்மார்க்கத்தில் நடவாமல் யேகோவாவை வணங்கிப் பரிசுத்தத்தில் நடக்கச்செய்வது. எலியா விசேஷமாய் முதல் இரண்டு விஷயங்களைக் கருதிப் போதித்து வந்தான். அவனுக்குப் பின்வந்த தீர்க்கதரிசிகள் மூன்றும் நோக்கத்தைத் தங்கள் போதனையிற் காட்டியிருக்கிறார்கள்.

வேதாகமத்தில் பிற்காலத்தில் எலியாவைப் பற்றிச் சொல்லியது என்னவென்றால்: கர்த்தருடைய நாள் வருகிறதற்கு முன் இவன் வருவான். மல் 4^{5}. இதினால் இவன் மேசியாவின் முன்தூதன் என்றும், யோவான் ஸ்நானன் இந்த வேலையை நிறைவேற்றினான் என்றும் சொல்லியிருக்கிறது. மத் 11^{14}. இயேசு மறுரூபமடைந்தபோது தீர்க்கதரிசியாகிய இவன் அங்கே இருந்தான். மத் 17^{3}. யூதர்கள் இவனுடைய போதனைகள் 'தீவட்டியைப்போல் அதிக பிரகாசமுள்ளது' என்று சொல்லி அவனைப் புகழ்ந்தார்கள். மகமதியர்களும் இவனை நன்கு மதிக்கிறார்கள்.

எலியாக்கீம். **Eliakim.** [கடவுள் ஸ்திரப்படுத்துவார்].

1. எசேக்கியாவின் வீட்டாரில் ஒரு தலைவன். 2 இரா 18^{18} ஏசா 22^{20}.

2. யோசியாவின் மகன். பாரோன் நேகோ இவனைச் சிங்காசனத்தில் வைக்கும்போதே இவனுக்கு 'யேகோவா உயர்த்துகிறார்' என்று அர்த்தங்கொண்ட 'யோயாக்கீம்' என்னும் பெயர் இட்டான். 2 இரா 23^{34}.

3. ஒரு ஆசாரியன். நெகே 12^{41}.

4. மத் 1^{13}.

5. லூக் 3^{30}.

எலியாசா. **Eleasha.** 1 நாளா 8^{37}.

எலியாசிப். **Eliashib.** [கடவுள் திரும்பக் கொண்டுவருகிறார்].

1. ஒரு பிரதான ஆசாரியன். நெகே 12^{10}.

2. ஒரு பாடகன். எஸ்றா 10^{24}.

3. எஸ்றா 10^{27}.

4. எஸ்றா 10^{36}.

5. 1 நாளா 3^{24}.

6. 1 நாளா 24^{12}.

7. எஸ்றா 10^{6}.

எலியாதா. **Eliada.**

1. = பெலியாதா. 2 சாமு 5^{16} 1 நாளா 14^{7}.

2. 1 இரா 11^{23}.

3. 2 நாளா 17^{17}.

எலியாத். **Elead.** 1 நாளா 7^{21}.

எலியாத்தா. **Eliathah.** 1 நாளா $25^{4,27}$.

எலியாபா. **Eliahba.** 1 நாளா 11^{33}. = எலியூபா. 2 சாமு 23^{32}.

எலியாப். **Eliab.** [கடவுள் தகப்பனாயிருக்கிறார்].

1. எண் 1^{9}.

2. எண் 16^{1}.

3. தாவீதின் மூத்த சகோதரன். 1 சாமு $16^{6,7}$.

4. கீதவாத்தியக்காரன். 1 நாளா 15^{18}.

5. 1 நாளா 12^{9}.

6. 1 நாளா 6^{27}.

எலியாம். **Eliam.**

1. பத்சேபாளின் தகப்பன். 2 சாமு 11^{3}. = அம்மியேல். 1 நாளா 3^{5}.

2. 2 சாமு 23^{34}.

எலியூத். **Eliud.** மத் 1^{15}.

எலியூபா = எலியாபா. **Eliahba.**

எலியேசர். **Eliezer.** [கடவுள் உதவியாயிருக்கிறார்].

1. ஆபிரகாமின் பிரதான ஊழியக்காரன். ஆதி 15^{22}.

2. மோசேயின் மகன். யாத் 18^{4}.

3. 1 நாளா 7^{8}.

4. 1 நாளா 27^{16}.

5. தீர்க்கதரிசி. 2 நாளா 20^{37}.

6. எஸ்றா 8^{14}.

7. எஸ்றா 10^{18}.

8. எஸ்றா 10^{23}.

9. எஸ்றா 10^{31}.

10. ஒரு ஆசாரியன். 1 நாளா 15^{24}.

11. ஒரு லேவியன். 1 நாளா 26^{25}.

12. லூக் 3^{29}.

எலியேல், ஏலியேல். **Eliel.** [கடவுள் கடவுளே].

1. 1 நாளா 6^{34}.

2. தாவீதின் போர்வீரன். 1 நாளா 11^{46}.

3. இன்னொரு போர்வீரன் 1 நாளா 11^{47}.

4. 1 நாளா 12^{11}.

5. 1 நாளா 5^{24}.

6. 1 நாளா 8^{20}.

7. 1 நாளா 8^{22}.

8. 1 நாளா 15^{9}.

9. 2 நாளா 31^{13}.

எலியேனாய். **Elienai.** 1 நாளா 8^{20}.

எலியோனாய். **Eliehoenai, Elioenai.**

1. 1 நாளா 26^{3}.

2. எஸ்ரு 8^{4}.
3. 1 நாளா 4^{36}.
4. 1 நாளா 7^{8}.
5. 1 நாளா 3^{23}.
6. எஸ்ரு 10^{22}.
7. எஸ்ரு 10^{27}.
8. நெகே 12^{41}.

எலீசா. Elishah. யாவானின் 'மகன்.' ஆதி 10^{4}. அல்லது தென் இத்தாலியாவிலுள்ள ஒரு நாடு, அல்லது வடஆபிரிக்காவிலுள்ள ஒரு நாடு. எசே 27^{7}.

எலுசாய். Eluzai. 1 நாளா 12^{5}.

எலூல். Elul. **காலம்** காண்க.

எலெயாசா. Eleasha. 1 நாளா 2^{39}.

எலெயாசார். Elasah. எரே 29^{3}.

எலெயாசார். Eleazar. [கடவுள் உதவி செய்திருக்கிறார்].

1. ஆரோனின் மகன். ஆரோனுக்குப் பிறகு இவன் பிரதான ஆசாரியனாய் இருந்தான். உபா 10^{6} எண் 3^{2} 20^{25} $26^{1, 63}$ யோசு 14^{1} 17^{4} 19^{51} 21^{1} 24^{33} யாத் 6^{25}.

2. 1 சாமு 7^{1}.
3. 2 சாமு 23^{9}.
4. 1 நாளா 23^{21}.
5. எஸ்ரு 8^{33}.
6. எஸ்ரு 10^{25}.
7. மத் 1^{15}.

எலெயாலே. Elealeh. மோவாப் தேசத்திலுள்ள இஸ்ரவேலர் ஜெயித்த ஒரு ஊர். எண் 32^{3} எசா 15^{4}.

'எலோயீ, எலோயீ லாமா சபக்தானி.' **'Eloi, Eloi, Lama, Subachtani.'** மாற் 15^{34}. 'எலோயீ' என்னும் பதத்திற்குப் பதிலாக 'ஏலி' என்னும் பதம் மத்தேயு சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறது. மத் 27^{46}. இவ்வாக்கியத்திற்கு 'என் கடவுளே, என் கடவுளே, என் என்னை விட்டுவிட்டீர்' என்றர்த்தமாம். மரணகாலத்தில் இயேசு இந்த அரமேயா பதங்களைக் கூறினதினால், அந்தப் பாஷை அவர் சொந்த அல்லது சிறுவயதுமுதல் பேசிவந்த பாஷையாய் இருக்கலாம். மரணநேரத்தில் இயேசு பிதாவாகிய தேவன் தம்மைவிட்டுப் பிரிந்திருந்தார் என்று சொன்னதினால், அந்த க்ஷணத்திலே மனிதர் அடையவேண்டிய பாட்டை முழுதும் தாமே பட்டுத்தரித்தார் என்று காட்டினார் என்பது சில வேத சாஸ்திரிகளின் அபிப்பிராயம். வேறு சில வேதசாஸ்திரிகள், மரண நேரத்தில் இயேசுவுக்கிருந்த அளவற்ற வியாகுலத்தினாலும் வேதனையினாலும் இப்படி ஓலமிட்டார் என்று சொல்லுகிறார்கள். **எபிரேய பாஷை** காண்க.

எல்காத். Helkath. ஒரு ஊர். யோசு 19^{25}. = உக்கோக். 1 நாளா 6^{75}.

எல்காத் ஆசூரீம். Elkath-Hazzurim. [பட்டயவாயின் போர்க்களம்]. கிபியோனில் இருபத்துநாலு பேர் சண்டைசெய்த இடம். 2 சாமு 2^{16}.

எல்காய். Helkai. நெகே 12^{15}.

எல்க்கானா. Elkanah. [கடவுள் பெற்றுக்கொண்டிருக்கிறார்]. 1. யாத் 6^{24}. 2. அன்னாளின் புருஷன். 1 சாமு 1^{1}. 3. 1 நாளா 6^{23}. 4. 1 நாளா 6^{26}. 5. 1 நாளா 9^{16}. 6. 1 நாளா 12^{6}. 7. 1 நாளா 15^{23}. 8. ஒரு பிரதானி. 2 நாளா 28^{7}.

எல்க்கானான். Elhanan. [கடவுள் தயவுள்ளவர்].

1. 2 சாமு 21^{19} 1 நாளா 20^{5}. **கோலியாத்** காண்க.

2. 2 சாமு 23^{24} 1 நாளா 11^{26}.

எல்சபாத். Elzabad.
1. 1 நாளா 12^{12}.
2. 1 நாளா 26^{7}.

எல்சாபாத். **எல்சபாத்** காண்க.

எல்சாபான். Elzaphan, Elizaphan.
1. ஒரு பிரபு. எண் 3^{30}.
2. எண் 34^{25}.

எல்தாகா. Eldaah. ஆதி 25^{4}.

எல்தாத். Eldad. இஸ்ரவேலர் வனாந்தரத்திலே இருந்தபோது அவர்களுடைய வழக்குகளைத் தீர்க்கும்படி நியமித்த எழுபது மூப்பர்களில் ஒருவன். எண் 11^{26}.

எல்தாய் Heldai.

1. ஒரு சேனைத்தலைவன். ஒருவேளை இந்தப்பெயரும், எலேப், எலேத்என்னும்பெயர்களும் ஒருவனையே குறிக்கலாம். 2 சாமு 23^{29} 1 நாளா 11^{30} 27^{15}.

2. பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவன். சக 6^{10}. = எலேம். சக 6^{14}.

எல்தெக்கே. El-Teke. யோசு 19^{44}.

எல்தெகோன். El-Tekon. யோசு 15^{59}.

எல்தோலாத். El Tolad. யோசு 15^{30}. = தோலாத். 1 நாளா 4^{29}.

எல்நாத்தான். Elnathan. [கடவுள் தந்திருக்கிறார்].

1. யோயாக்கீனின் பாட்டன். 2 இரா 24^{8}.
2. புஸ்தகச்சுருளை நெருப்பிற் போடாதபடி யோயாக்கீமை வேண்டிக்கொண்டவன். எரே 26^{22} 36^{25}.
3. மூன்று பெயர்கள். எஸ்ரு 8^{16}.

எல்நாம். Elnaam. 1 நாளா 11^{46}.

எல்பா. Helbah. நியா 1^{31}.

எல்பாரான். El-Paran. ஆதி 14^{6}. பாரான் காண்க.

எல்பால். Elpaal. 1 நாளா 8^{11}.

எல்பேலேத். Elpelet. 1 நாளா 14^{5}. = எலிபெலேத் (1).

எல்மோதாம். Elmadam. லூக் 3^{28}.

எல்லை, எல்லைக்குறி. Boundary, Boundary mark. உபா 19^{14} 27^{17} ஓசி 5^{10} நீதி 22^{28} 23^{10} யோபு 24^{2}.

எழுதப்படாதவை. Agrapha. இயேசு சொன்னவைகளில் எழுதப்படாதவை காண்க. பக். 113.


எழுத்து. Writing. ஆதிகாலத்தில் விளம்பரம் ஒன்று செய்யவேண்டுமானால் வழக்கமாய்த் தூதர்கள் அதை வாய்மொழியாய்க் கூறுவார்கள். சாலொமோன் வாயால் உரைக்கும் நீதிமொழிகளை ஜனங்கள் அவருக்கு முன்பாக வந்து கேட்பார்கள். 1 இரா 4^{32}. தாவீதின் காலத்தில் ராஜாங்கத்துக்குரிய விஷயங்களை அவன் பிரதானிகளில் ஒருவன் எழுதினான். 2 சாமு 8^{16}. ஏசாயாவின் காலத்தில் தீர்க்கதரிசிகள் சில சமயங்களில் தாங்கள் கூறினவற்றை முழுதும் எழுதாமல் சுருக்கமாய் எழுதுவார்கள். ஏசா 8^{1}. எரேமியாவும் அவனுக்குப்பின் இருந்த தீர்க்கதரிசிகளும் தாங்கள் உரைத்தவைகளை விவரமாய் எழுதினார்கள். எரே 36^{17} ஆப 2^{2}.



எபிரெயருடைய புஸ்தகச்சுருளும் மைக்கூடும்.

உபாகமம் என்னும் புஸ்தகம் எழுதப்பட்டது. ஆனால் மோசேயின் காலமுதல் உபாகமம் கண்டுபிடிக்கப்பட்ட காலம்வரையில் நியாயப்பிரமாணம் எழுத்தில் ஆனவிதத்தைப்பற்றித் தெளிவாய் ஒன்றும் தெரியாது.

ஏசபேல் நிருபங்களை எழுதினாள். 1 இரா 21^{8}. யோபு, ஏசாயா, எரேமியா ஆகிய இவர்கள் எழுதப்பட்ட பத்திரங்களைப்பற்றிப் பேசுகிறார்கள். யோபு 13^{26} 31^{35} ஏசா 10^{2} எரே 3^{8} 32^{16}. யூதர்கள் சிறையிருப்பிலிருந்து வந்தபிறகு அவர்களிடத்திலுள்ள புஸ்தகங்கள் அநேகம் இருந்தன. பிர 12^{12}. அக்காலம் முதல் அவர்கள் தங்கள் வம்ச அட்டவணையை எழுதிவந்தார்கள். கிறிஸ்துவுக்கு நூறு வருஷத்துக்கு முன் புஸ்தகசாலைகள் இருந்தன. 2 மக்கெபேயர் 2^{13}. எபிரெயர்கள் கற்பலகைகளிலும் மரப்பலகைகளிலும் எழுதிவந்தார்கள். ஏசா 30^{8} யோபு 19^{24}. ஒருவேளை செப்புத்தகடுகளிலும் எழுதியிருக்கலாம். ஏசா 8^{1}. இவைகளில் இருப்பெழுத்தாணிகளால் எழுதுவார்கள். சிலவேளை இந்த எழுத்தாணி கூர் மழுங்காதபடி அதன் நுனியில் வச்சிரம் பதிப்பார்கள். எரே 17^{1}. சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்படுமுன் எபிரெயர்கள் புஸ்தகச்சுருளை உபயோகித்தார்கள். ஏசா 34^{4} 37^{14} எரே 36^{2}. இவைகள் எகிப்திய தேசத்திலுள்ள பெரிய நாணலின் மேற்பட்டையினாலும் தோலினாலும் செய்யப்பட்டன. நாணற் குச்சியை எழுதுகோலாக



நியாயப்பிரமாண புஸ்தகச்சுருள் வைக்கும் விசித்திர உறை.

உபயோகித்து மையினால் இவைகளை எழுதுவார்கள். எரே 36[18] எசே 23[14]. லிகிதர்கள் மைக்கூடும் (எசே 9[2]), எழுதுகோல் சீவுதற்குச் சூரியும் (எரே 36[23]), அரைக்கச்சையில் போட்டிருப்பார்கள்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தோற்சுருள் அதிகமாய் உண்டு. 2 தீமோ 4[13]. அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களை நாணற்காகிதங்களில் எழுதினார்கள். 2 கொரி 3[3] 2 யோவா 12 வச.

சகரியா எழுதின 'பலகை' மெழுகு வார்த்த பலகையா யிருக்கலாம். லூக் 1[63].

எறும்பு. Ant. பலெஸ்தீனா தேசத்தில் எறும்புகளில் அநேக வகை உண்டு. எறும்பு முன்னறிவுக்கும் சுறுசுறுப்புக்கும் உதாரணமாகச் சொல்லப்படுகிறது. நீதி 6[6] 30[25].

ஏனா, ஏனா. Hena. இந்தப் பதத்தைப் பற்றி வேதசாஸ்திரிகளுக்குச் சந்தேகம். இது ஐபிராத்து நதியின் கரையில் உள்ள ஒரு ஊர் எனச் சிலர் உத்தேசிக்கிறார்கள். 2 இரா 18[34] 19[13] ஏசா 37[13].

ஏனாதாத். Henadad. [ஆதாத்தின் தயவு]. எஸ்றா 3[9].

என்ஆத்சோர். En-Hazor. [ஆத்சோரின் ஊற்று]. யோசு 19[37].

என்எக்லாயிம். En-eglaim. எசே 47[10].

என்கன்னீம். Engannim.

1. யூதாவில் ஒரு ஊர். யோசு 15[34].
2. கலிலேயாவுக்குத் தெற்கெல்லையாய் இருக்கும் ஒரு ஊர். யோசு 19[21].

என்காதா. En-haddah. யோசு 19[21].

என்கேதி. Engedi. [ஆட்டுக்குட்டியின் ஊற்று]. யூதா வனாந்தரத்தில் தாவீது ஒளித்திருந்த இடம். 1 சாமு 23[29] 2 நாளா 20[2] உன். பா 1[14] எசே 47[10]. இதற்கு ஆசாசோன் தாமார் என்றும் பெயர். ஆதி 14[7] 2 நாளா 20[2].

என்சேமேஷ். En-Shemesh. [சூரியன் ஊற்று]. எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும் வழியிலே பக்கத்திலுள்ள ஓர் நீர் ஊற்று. யோசு 15[7] 18[17].

என்தப்புவா. Entappuah. = தப்புவா. யோசு 17[7] 16[8].

என்மிஸ்பாத்து. En-mishpat. [நியாயத்தீர்ப்பின் ஊற்று]. யோசு 14[7]. **காதேஸ் பர்நேயா** காண்க.

என்ரிம்மோன். En-rimmon. [மாதளத்தின் ஊற்று]. பெயெர்செபாவுக்குச் சமீபமான ஊர். நெகே 11[29].

என்ரோகேல். **இன்ரோகேல்** காண்க.

ஏ.

ஏகத்துவ மார்க்கத்தார். **சோசினியர்** காண்க.

ஏகி. Ehi. = **அகரா** காண்க.

ஏகியேல். Jehiel. **எகியேல்** காண்க.

ஏகூ, யேகூ. Jehu.

1. ஒரு தீர்க்கதரிசி. 1 இரா 16[1].
2. ஒரு யூதன். 1 நாளா 2[38].
3. சிமியோன் கோத்திரத்தான். 1 நாளா 4[35].
4. ஒரு போர்வீரன். 1 நாளா 12[3].
5. இஸ்ரவேல் ராஜா.

ஆகாப் வீட்டார் செய்த காரியங்களைப் பற்றி இஸ்ரவேலர் அநேகருக்கு வெறுப்பு உண்டானது என்றும், எலியா ஆகாப்வீட்டாரின்மேல் சாபம் இட்டான் என்றும் இவனுக்கு நன்றாய்த் தெரியும். 2 இரா 9[25]. யோராம் ராஜாவுக்குப் பதிலாக இவன் கீலேயாத்திலுள்ள ராமோத்திலே சேனாபதியாய் இருக்கும்போது எலிசா அனுப்பின சீஷன் இவனை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் பண்ணினான். இவன் சிங்காசனத்தைப் பிடித்து, யோராம் ராஜாவையும் ஆகாப் வீட்டாரையும் கொலைசெய்து இஸ்ரவேல் ராஜ்யத்தை யாண்டுவந்தான் (கி-மு. 842-814.). இதினிமித்தம் ஓசியா தீர்க்கதரிசி இவன் வீட்டில் பழி சுமரும் என்று கண்டான். ஓசி 1[4]. அசீரியர் செங்கற்களில் வரைந்த அக்ஷராதிகளை நாம் பார்த்தால் இவன் இரண்டாம் சல்மனாசர் என்னும் ராஜாவின் உதவியினாலே சீரியரை ஜெயிக்கும்படி அவனுக்குக் கப்பம் கட்டினான் என்று அறிவோம். அசீரியர்களோ கிழக்குத் தேசத்திலுள்ள சண்டைகளைப்பற்றிக் கவலைப்பட்டு ஏகூவுக்குத் தகுந்த உதவிசெய்யாமல் இருந்ததினாலே இவன் அரசாண்ட கடைசி வருஷங்களில் இஸ்ரவேல் ராஜ்யத்துக்குத் துன்பம் அதிகமாய் வந்தது.

ஏகூஸ். Jehush. 1 நாளா 8[39].

ஏகூத். Ehud.

1. மோவாப் அதிகாரத்திலிருந்து இஸ்ரவேலை ரட்சித்தவன். நியா 3[12].
2. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா 7[10].

ஏசபேல், யேசபேல். Jezebel. தீரு ராஜாவின் மகளாகிய இவள் இஸ்ரவேல் ராஜாவாகிய ஆகாபின் மனைவி. இஸ்ரவேல் தேசத்தில் யேகோவாவின்மார்க்கத்தை எதிர்த்து எலியாவைப் பகைத்து அநியாயம் செய்தவள். 1 இரா 18[19] 21[1] 2 இரா 9[31]. புதிய

எற்பாட்டில் தியத்தீராசபையிலுள்ள மனுஷரை வஞ்சிக்கிற கள்ளதீர்க்கதரிசியானவளைப்பற்றி இந்தப் பெயர் உபமானமாய்ச் சொல்லி யிருக்கிறது. வெளி 2^{20}.

ஏசா. Esau. ['செம்மஞ்சள்' அல்லது 'அதிக ரோமம் உடையவன்']. இவன் மலைநாட்டாரை ஜெயித்து சேயீரிலே தன்னை ஸ்தாபித்தான். இவன் சரித்திரம் ஆதி $25^{22.25.29}$ 26^{34} 27^{29} 28^{9} 33^{4} 36^{1} ஓசி 12^{3}. எதோமியருக்குக் கோத்திரப் பிதா. ஆதி 36^{9}. எபி 12 ^{16}-ல் ஏசா உத்தம காரியங்களைக் கவனிக்காமல் ஆத்திரத்தோடு தாங்கள் விரும்பும் காரியங்களைச் செய்கிற சீர்கெட்டவர்களுக்கு முன் மாதிரியாய் இருக்கிறான்.

ஏசாயா. Isaiah. ['யேகோவாவின் உதவி' அல்லது 'யேகோவா உதவி செய்கிறார்']. கி-மு எட்டாம் நூற்றாண்டில் நாலு பெரிய தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். இவர்களில் ஆமோஸ் பெத்தேலில் பிரசங்கித்ததற்கு இருபது வருஷங்களுக்குப் பிறகும், ஓசியா பிரசங்கித்ததற்குச் சில வருஷங்களுக்குப் பிறகும், ஏசாயா பிரசங்கிக்கத் தொடங்கினான். ஏசாயா பிரசங்கித்த காலத்தில் மீகா பிரசங்கித்தான். ஏசாயா பிரதானமாய் யூதராஜ்யத்தைப்பற்றித் தீர்க்கதரிசனங் கூறினான்.

ஏசாயா தீர்க்கதரிசனப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவைகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் இவனைப்பற்றி நாம் கொஞ்சம் அறிந்து கொள்ளலாம். இவன் உசியா, யோத்தாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் ராஜாக்களின் காலத்தில் தீர்க்கதரிசன ஊழியம் செய்தான் (கி-மு. 738-700.). இவன் அசீரியர் பலெஸ்தீனா, யூதா முதலிய தேசங்களுக்கு விரோதமாய் நாலுமுறை படையெடுத்துப் போனதைப் பார்த்தான். இவன் நாற்பது வருஷம் ஊழியம் செய்ததினாலே இவ்வூழியத்தைத் தான் முப்பதுவயதாய் இருக்கிறதற்கு முந்தித் தொடங்கினான் என்று நாம் அறியவேண்டும். இவன் தன் ஜீவியகால மெல்லாம் எருசலேமில் வசித்தான். ராஜாவும் ராஜ்யத்திலுள்ள மற்றும்பெரியோரும் இவனுக்கு நன்றாய்த்தெரிந்தவர்கள். 7^{1} 8^{2}. இவன் மனைவியும் தீர்க்கதரிசியானவளாய் இருந்தாள். 8^{3}. இவன் தன் பிள்ளைகளுக்குச் சேயார் யாசூப், மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்னும் காரணப் பெயர் கொடுத்தான். 7^{3} 8^{3}.

இவனுடைய போதனையில் அடங்கிய ஐந்து விஷயங்களின் சுருக்கம்.

1. அசீரியரின் மூலமாய் வரப்போகிற தண்டனையைப்பற்றி யூதர்களுக்குப் பேர்தனை செய்தான். இந்தத் தண்டனைக்குக் காரணம் என்னவென்றால்:

(1) அவன் எங்கும் பார்த்த அநியாயமும் துன்மார்க்கமும். 2^{6}-4^{1} 5^{8-24}.

(2) ஜனங்கள் யேகோவாவுக்குக் காட்டிய நன்றியீனம். 5^{1-7}.

(3) ஜனங்கள் நீதி இரக்கம் செய்யாமல் வீண் சடங்காசாரங்களைச் செய்துவந்தது. 1^{2-31}.

2. யேகோவா நீதியும் இரக்கமும் உள்ளவர், நீதியினிமித்தம் தமது ஜனங்களுடன் வழக்காடுகிறவர், தீமை பாவம் எல்லாவற்றையும் ஜெயிக்கிறவர்.

3. யேகோவா சர்வத்தையும் ஆளுகிறவர், ஆதலால் யூதர்கள் அசீரியரின் அல்லது எகிப்தியரின் உதவியைத் தேடக்கூடாது. 7^{4} 20^{1} $30^{1.15}$ 31^{1}.

4. இஸ்ரவேலும் யூதாவும் தண்டிக்கப்படும். இஸ்ரவேல் அழிக்கப்படும். 9^{8}-10^{4} 17^{1-11}. அப்பொழுது மீதியாய் ஒருபாகம் இருக்கும் என்றும், இந்தத் தண்டனைக்குப் பிறகு 'நீதிபுரம்' 'சத்தியநகரம்' என்னும் புதிய எருசலேம் இருக்கும் என்றும் சொல்லியது. 1^{26} 5^{26-30} 17^{6} மு.

5. மேசியாவாகிய சமாதானப் பிரபு வருவார். 9^{1}.

குரூரமுள்ள மனாசே என்னும் அரசனின் காலத்தில் இவன் வாளினால் இரண்டாக வெட்டப்பட்டுச் செத்தான் என்பது பாரம்பரியமேயொழிய இவனுடைய மரணத்தைப்பற்றித் திட்டமாய் ஒன்றும் தெரியாது.

ஏசாயாவின் புஸ்தகம். The Book of Isaiah. இந்தப் புஸ்தகத்தில் பல புஸ்தகங்கள் சேர்ந்து ஒரே புஸ்தகமாய் உண்டாக்கப்பட்டது என்று வேதசாஸ்திரிகள் தீர்மானிக்கிறார்கள். இந்தப் புஸ்தகத்தில் இரண்டு பாகம் அடங்கியிருக்கிறது என அறியலாம்.

முதலாவது, அசீரிய ராஜாக்களாகிய பூல், நாலாம் சல்மனாசார், சர்கோன், சனகெரிப் ஆகிய இவர்கள் நாலுமுறை படையெடுத்து வந்த காலங்களில் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தவைகள். 1-39 அதி.

இரண்டாவது, 40-66 அதி. இந்த அதிகாரங்களில் சொல்லியவை பலவிதமானவை. இவைகளுக்கு ஆக்கியோன் பெயர் இல்லை. இவைகளைச் சொன்னவர்கள் இவைகளில் தாங்களிருந்த காலத்தின் சரித்திரத்தை நமக்கு விளக்கமாய்ச் சொல்லாமல் ஆத்துமாவுக்கு நல் ஞானகாரமாகிய புத்தி போதனையைக் காட்டியிருக்கிறார்கள்.

இரண்டு பாகங்களாக எழுதியிருக்கும் தீர்க்கதரிசனங்கள் காலமுறையின்படி சொல்லியிருக்கவில்லை. உதாரணமாக: ஏசாயாவின் அழைப்பைப்பற்றி முதல் அதிகாரத்தில் அல்ல, ஆரும் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. முதலில் துண்டு துண்டுகளாக எழுதப்பட்ட முதலாம் பாகத்தின் வாக்கியங்களும் ஏசாயாவின் சீஷர்களால் (8^{16}) ஒன்ருகச் சேர்க்கப்பட்டது என்று நினைக்கலாம். கடைசியில் யூதர்கள் சிறையிருப்பிலிருந்து வந்த சில காலத்துக்குப் பிறகு இவைகளும் இரண்டாம் பாகத்தின் வாக்கியங்களும் சேர்ந்த புஸ்தகம் இப்போது வேதத்தில் நாம் காண்கிற ஏசாயா புஸ்தகமே.

இப்புஸ்தகத்தில் சொல்லியவைகளைக் காலக்கிரமத்தின்படி நுட்பமாய்ச்சொல்ல முடியாததினுல் பின்ஞற் சொல்லிய வரலாற்றின்படி நாம் இப்புஸ்தகத்தை வாசித்தால் ஒருவேளை அதில் அடங்கிய பொருளை அறிவோம்.

முதலாம் பாகம், 1-39 அதி.

1. ஏறக்குறைய கி-மு. 733-ஆம் வருஷத்தில் திக்லாத் பிலேசர் என்னும் பூல் யூதாவுக்கு விரோதமாய் வருகிறதற்கு முந்திச் சொன்ன வாக்கியங்கள். 2^{1}-10^{4} 17^{1-14}. இவைகளில் ஏசாயாவின் அழைப்பு, இஸ்ரவேல் யூதாவின் நிலைமை, அசீரியரின் வருகை, இஸ்ரவேலின் அழிவு, யூதாவில் மீட்பரின் வருகை இவைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. திக்லாத்பிலேசர் வட இஸ்ரவேலில் ஒரு பாகத்தைப் பிடித்துத் தன் தேசம் சென்ருன்.

2. ஏறக்குறைய கி-மு. 725-ஆம் வருஷத்தில் சல்மஞசார் சமாரியாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போகிறதற்கு முன்சொன்ன தீர்க்கதரிசனங்கள். 28^{1-29} 10^{5}-11^{16}. இஸ்ரவேலுக்கு வரும் அழிவைச் சொல்லி, யூதாவுக்கு எச்சரிக்கை செய்து, சீயோனுக்கு வரும் மகிமையைக் கூறுகிருன். கி-மு. 722-ஆம் வருஷத்தில் அசீரியர்கள் சமாரியாவை அழித்தார்கள்.

3. கி-மு. 711-ஆம் வருஷத்தில் சர்கோன் யூதா, மோவாப் முதலிய ராஜ்யங்களுக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்தான். அக்காலத்தில் ஏசாயா கூறின தீர்க்கதரிசனம். 10^{5-34} 22^{1-25} 36^{1} 20^{1-6} 21^{1-10} $16^{13.14}$ 38^{1-22} 39^{1-8}.

4. கி-மு. 701-ஆம் வருஷத்தில் சனகெரிப் சீதோன், ஏதோம், யூதா முதலியவைகளைத் தண்டிக்கும்படி வந்தான். அதற்கு முன் ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனம் அநேகம். 29^{1-24} 30^{1-33} 31^{1-9} 32^{1-20}. இவைகளில் எருசலேமின் முற்றிக்கையைப்பற்றியும், வரப்போகிற மீட்பைப்பற்றியும் யூதர்கள் எகிப்தை நம்பக்கூடாது என்பதைப்பற்றியும் சொல்லியிருக்கிறது. இக்காலத்தில் அந்நிய ஜாதியாரைப்பற்றிச் சொல்லியவைகள். 14^{24-32} 17^{12-14} 18^{1-7} 19^{1-25} 21^{1-17} 23^{1-18}. இக்காலத்திலும் ஏசாயா பின்வருமாறு சொல்லுகிருன். யூதாவுக்கு உண்டாகும் துன்பம். 1^{1-31}. எருசலேமில் நடக்கும் துன்மார்க்கம். 22^{1-25}. அசீரியர்கள் திரும்பிப் போகுதல். 33^{1-24}. இதோடு 36^{2} 37^{1-38} பார்க்க. இதோடு 19 அதிகாரமும் சேர்ந்தது.

இரண்டாம் பாகம். 40-66 அதி. இதில் இரண்டு பிரிவுகள் உண்டு.

1. ஏசா 40-55 அதி. இந்த அதிகாரங்கள் பாபிலோனியாவில் இருந்த தீர்க்கதரிசியால் சிறையிருப்பில் இருந்த யூதருக்குச் சொல்லுகிறதுபோல் தோன்றுகின்றன. இதில் தீர்க்கதரிசி சிறையிருப்பின் முடிவையும், யூதர்கள் பாழாய்ப்போன எருசலேமுக்குத் திரும்பிப் போவதையும், கோரேஸ் அரசனையும், பாபிலோனின் அழிவையும்பற்றிச் சொல்லுகிருன். 44^{28} 45^{1} 49^{14-21} $51^{3.17-23}$ 52^{7-12} 54^{1-17}. இவ்வசனங்களோடு 46^{1-13} 47^{1-15} அத்தாட்சியாகக் காண்க.

இந்த அதிகாரங்களில் தீர்க்கதரிசி சிறையிருப்பில் இருக்கிறவர்களுக்கு அவர்கள் தங்கள் துக்கமெல்லாம் விட்டு அவர்கள்மூலமாய் யேகோவா தம்மை மகிமைப்படுத்தி எல்லா ஜாதிகளுக்கும் சன்மார்க்கத்தைக் காட்டப் போகிருர் என்பதில் அவர்கள் நல்நம்பிக்கையுடையவர்களாய் இருக்கும்படி போதிக்கிருன். இதினிமித்தம் விக்கிரகாராதனை வீண் என்றும், சர்வவல்லமையும் ஞானமும் உடையவராகிய யேகோவாவின் தொண்டராய் எல்லாரும் இருக்கவேண்டும் என்றும் சொல்லுகிருன். 41^{8} $44^{1.21}$ 45^{4} 49^{3}.

2. ஏசா 56-66 அதி. இவைகளில் யூத சபையில் அந்நியர்கள் பிரவேசித்தல்; ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரித்தல் (56^{1-8}), காவற்காரர்களின் அஜாக்கிரதை, விக்கிரகாராதனை, துன்மார்க்கமுள்ள சடங்காசாரங்கள் (56^{9}-57^{21}), எச்சரிப்பு (58, 59 அதி), யேகோவாவின் வருகை (60^{1}), சீயோனின் மகிமை (60-62 அதி), ஏதோமின் அழிவு (63^{1}), பாவஅறிக்கை (63^{7}-64^{12}), உண்மையுள்ளவர்களினதும் உண்மையில்லாதவர்களினதும் நிலைமை (56^{9}-57^{21}) ஆகிய இவைகளைப்பற்றித் தீர்க்கதரிசி விவரமாய்ச் சொல்லுகிருன். 40-55 அதிகாரங்கள் எழுதின காலத்தில் அல்லது அவைகளுக்குச் சற்றே முன்பின் இந்த அதிகாரங்கள் எழுதியிருக்க வேண்டும். இவைகள் அவ்வதிகாரங்களின் ஆக்கியோன்களால் எழுதப்பட்டவைகளாய் இருந்தாலுஞ் சரி, இல்லாவிட்டாலும் சரி, இவைகளில் மற்றெந்தப் பழைய ஏற்பாட்

டின் புஸ்தகங்களிலுள்ள போதனைகளைவிட ஆத்துமாவுக்குரிய நற்போதனைகள் அநேக மாய் அடங்கியிருக்கின்றன. சூரியன் உதிக் கும்போது அதின் பூரண பிரபையை எப் படி நாம் முன் அறிகிறோமோ, அப்படியே இயேசுகிறிஸ்து அறிவிக்கப்போகிற போத னையின் மகிமையை நாம் இந்த அதிகாரங் களில் முன்னதாகவே காணலாம். பொக்கி ஷசாலைபோன்ற பழைய ஏற்பாட்டில் பல விதமான ஞானபரணம் நிறைந்த புஸ்தகங் கள் இருக்கின்றன. அவைகளில் இதே விசேஷமானது.

ஏசீர். Hezir.

1. 1 நாளா 24^{15}.

2. நெகே 10^{20}.

ஏசேர். எசேர் காண்க.

ஏசேக்கு. Esek. [வழக்கு]. ஈசாக்கு வெட்டின கிணறு. இடம் தெரியாது. ஆதி 26^{20}.

ஏசேத். Hesed. [தயவு]. 1 இரா 4^{10}.

ஏசேர். Jesher. காலேபின் மகன். 1 நாளா 2^{18}.

ஏசேர். Ezer. **எசேர்** காண்க.

ஏசேல். Ezel. [புறப்படப்போகிறது]. யோனத்தானும் தாவீதும் சந்தித்த இடம் 1 சாமு 20^{19}.

ஏஸ்னி. Ezni. 2 சாமு 23^{8}.

ஏதாம், ஏத்தாம். Etam, Etham.

1. சிம்சோன் தன்னை மறைத்த இடம். நியா 15^{8}.

2. ஒரு ஊர். 1 நாளா 4^{32}.

3. ஒரு ஊர். 2 நாளா 11^{6}. ஒருவேளை இந்த மூன்று இடங்களும் ஒன்றுதான்.

4. இஸ்ரவேலர் தங்கின ஒரு இடம். யாத் 13^{20}.

ஏதான், ஏத்தான். Ethan.

1. 1 நாளா 4^{31} சங் 89 தலைப்பு காண்க.

2. 1 நாளா 6^{42} = யோவா 1 நாளா 4^{21}.

3. 1 நாளா 6^{44}.

ஏதேர். Eder.

1. இரண்டு ஊர்கள். ஆதி 35^{21} யோசு 15^{21}.

2. இரண்டு புருஷர்கள். 1 நாளா 8^{15} 23^{23}.

ஏதேன்தோட்டம். Eden. கடவுள் உண் டாக்கின தோட்டமும், அதில் பாய்ந்த நதி களும், விருக்ஷங்களும், ஆதித் தாய் தகப் பனின் சரித்திரமும் ஆதியாகமத்திற் சொல் லியிருக்கிறது. ஆதி 2^{10-14} 3^{22-24}. வேதசாஸ் திரிகள் இதிற் பாய்ந்துகொண்டிருந்த நாலு நதிகளில் இரண்டு ஐபிராத்து, திகிரீஸ் தான் என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். மற்ற இரண்டு நதிகள் இவை என்பது தெரியாது. மேலும் ஏதேன் தோட்டம் இருந்த இடத்தை நிதானமாய் அறியும்படி வேதசாஸ்திரிகள் வேண்டிய பிரயத்தனமெல்லாம் செய்தும் அனுகூலம் அடையவில்லை.

ஏதேன் என்னும் பதம் உத்தேசிக்குமிடத்து 'நேர்த்தியான' அல்லது 'திருப்தி கொடுக்கக்கூடிய' என அர்த்தமாம். செழிப்பான பூமிக்கு ஏதேன் அல்லது ஏதேன் தோட்டம் என்று சொல்லப்படுகிறது. ஆதி 13^{10} ஏசா 53^{3} எசே $31^{9,18}$ யோவே 2^{3}.

கி-மு. யூதர்கள் பழைய ஏற்பாட்டில் இல் லாத புஸ்தகங்களை எழுதினவர்களும் ஆதி கிறிஸ்தவர்களில் சிலரும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தின்படி ஏதேன் தோட்டத் தைப்பற்றி விவரமாய்ச் சொல்லியிருக்கிறார் கள். புதிய ஏற்பாட்டில் இதின் பெயர் சொல்லப்பட்டிருக்கவில்லை. இதில் 'பர தீசு' என்று சொல்லப்பட்டதற்கு ஏதேனைப் பற்றிய அபிப்பிராயமே காரணம்.

ஏதேன். Eden. 1. ஒரு லேவியன்; 2 நாளா 29^{12} 31^{15}.

2. ஒரு ஊர். எசே 27^{23}.

ஏதேன் புத்திரர். The sons of Eden. 2 இரா 19^{12} ஏசா 37^{12}.

ஏதோம். Edom. **இதுமேயா** காண்க.

ஏத். Ed. [சாக்ஷி]. யோர்தானின் கிழக் குக் கரையில் கட்டின பலிபீடத்தின் பெயர். யோசு 22^{34}.

ஏத். Heth. கானானின் மகன். ஆதி 10^{15}. ஏசாவின் மனைவிகள் 'ஏத்தின் குமாரத்திகள்' எனச் சொல்லியிருக்கிறது. இவர்கள் ஏத்தி யரைச் சேர்ந்தவர்கள். ஆதி 27^{46}. **ஏத்தியர்** காண்க.

ஏத்சேர். **எசேர்** காண்க.

ஏத்தானீம். Ethanim. **காலம்** காண்க.

ஏத்தான். Ethan. **ஏதான்** காண்க.

ஏத்தியர். Hittites. ஏத்தியர்கள் ஆதி காலத்தில் சின்ன ஆசியாவிலும், சீரியாவி லும் வசித்த ஓர் பெரிய ஜனம். ஆபிரகாம் ஒரு ஏத்தியனிடமிருந்து மக்பேலாவை வாங் கினான். இஸ்ரவேலர் கானானுக்கு வருகிற தற்கு முன்னே அங்கே ஏத்தியர் இருந்தார் கள். ஆதி 23 அதி. யாத் 3^{8} எண் 13^{29}. இவர் கள் கி-மு. 1500-வருஷத்தில் எகிப்தியருக்குக் கப்பம் கட்டிக்கொண்டிருந்தார்கள் என்றும், அதற்குப் பிறகு இவர்களுக்கும் எகிப்திய ருக்கும் அடிக்கடி சண்டை நடந்துகொண்

டிருந்தது என்றும் தெரிகிறது. ஒருவேளை சிசெரா ஒரு ஏத்திய சேனாபதியாய் இருந்திருக்கலாம். நியா 4^{2}. தாவீதின் காலத்தில் சில ஏத்தியர்களைப்பற்றியும், சாலொமோன் காலத்தில் இருந்த ஏத்திய ராஜாக்களைப்பற்றியும் வாசிக்கிறோம். 1 சாமு 26^{6} 2 சாமு 11^{3} 1 இரா 10^{29}. பிற்பாடு அசீரியர் பல இடங்களில் ஏத்தியரோடு யுத்தம் செய்ததினாலே இவர்கள் தங்கள் ராஜ்யங்களைப் பல இடங்களில் ஸ்தாபித்திருப்பார்கள் என்பது நிச்சயம். பல இடங்களில் இருந்த இவர்கள் சேர்ந்து ஒரு சமயத்தில் ஒரு பெரிய ராஜ்யத்தைச் சின்ன ஆசியாவிலே ஸ்தாபித்தார்களோ இல்லையோ என்பது திட்டமாய்த் தெரியாது.

ஏத்திரோ. Jethro. எத்திரோ காண்க.


ஏத்தேர், யெத்தேர். Jether.

1. = எத்திரோ. மோசேயின் மாமன். யாத் 4^{18}.
2. நியா 8^{20}.
3. 1 இரா 2^{5}.
4. 1 நாளா 2^{32}.
5. 1 நாளா 4^{17}.
6. = இத்திரான். 1 நாளா 7^{38}.

ஏத்தேர். Ether. யோசு 15^{42}.

ஏத்பாகால். Eth-Baal. [பாகாலின் தயவுபெற்றவன்]. ஏசபேலின் தகப்பனாகிய தீரு சீதோன் என்னும் ஊர்களின் ராஜா. 1 இரா 16^{31}.

ஏந்திரம். Mill-stone. எந்திரத்தின் அடிக்கல் மேற்கல்லைப்பார்க்கிலும் பெரிது. யோபு 41^{24}. புதிய ஏற்பாட்டிற் சொல்லியிருக்கிறபடி பெரிய ஏந்திரங்களை இரண்டு ஸ்திரீகள் ஆட்டி அரைப்பார்கள். மத் 24^{41}. புதிய ஏற்பாட்டின் காலத்தில் கழுதை கட்டியாட்டும் ஏந்திரங்களும் இருந்தன. இவைகள் அதிகம் பெரிதாய் இருக்கும். மத் 18^{6}-ல் இயேசு சொன்ன ஏந்திரம் இதுதான். வீட்டுப் பெண்கள் வழக்கமாய் ஏந்திரம் ஆட்டுவார்கள். தனவான்களின் வீடுகளில் அடிமைகள் ஆண்களும் பெண்களும் இந்த வேலை செய்வார்கள். நியா 16^{21} யாத் 11^{5}. கஷ்டமான வேலையாதலால் இது அடிமைத்தனத்தைக் குறிக்கிறது. ஏசா 47^{2}. ஏந்திரம் இல்லாமல் அன்றாடகச் சாப்பாட்டுக்குத் தானியம் அரைப்பது கூடாதாகையால் அதையல்லது அதின் ஓர் கல்லை அடகாக வாங்கப்படாது. உபா 24^{6}.



ஏபால், கெரிசீம் மலைகளும், சீகேம் ஊரும்.

ஏபால். Ebal.

1. சீகேம் ஊருக்கு வடக்கே உள்ள ஒரு மலை. இதில் யோசுவா பலிபீடம் ஒன்று கட்டி நியாயப்பிரமாணத்தை மீறினவர்களுக்குச் சாபம் கூறினான். யோசு 8^{33}.
2. 1 நாளா 1^{22} = ஓபால். ஆதி 10^{28}.
3. 1 நாளா 1^{40}.

ஏபூசியர். Jebusites. எபூசியர் காண்க.

ஏபேத். Ebed. [அடிமை].

1. நியா 9^{26}.

2. எஸ்றா 8^{6}.

ஏபேர். Eber. Heber.

1. எபிரெயர்களுக்கு ஆதி பிதா. ஆதி 10^{21}.
2. 1 நாளா 5^{13}.
3. 1 நாளா 8^{12}.
4. 1 நாளா 8^{22}.
5. நெகே 12^{20}.
6. ஆதி 46^{17}.
7. யாவேலின் புருஷன். நியா 4^{17}.
8. 1 நாளா 4^{18}.
9. 1 நாளா 8^{17}.

ஏபோத்து. Ephod. உடை (2. c.) **ஊரீம் தும்மீம்** காண்க.

ஏப்பா. Epah. ஒரு அரபிய கோத்திரம். ஆதி 25^{4} ஏசா 60^{6}.

ஏப்பாயி. Ephal. எரே 40^{8} 41^{3}.

ஏப்பேர். Epher, Hepher. **எப்பேர்** காண்க.

ஏமாம். Hemam. ஓரியர்களில் ஒரு கோத்திரம். ஆதி 36^{22}. = ஓமாம். 1 நாளா 1^{39}.

ஏமான். Heman.

1. ஒரு சாஸ்திரி. 1 இரா 4^{31}.
2. சங்கீதக்காரன் ஒருவன். 1 நாளா 2^{6}, சங் 88 தலைப்பு காண்க.
3. ஒரு பாடகன். 1 நாளா 6^{33}.

ஏமியர். Emims. மோவாபில் ராக்ஷதரைப்போன்ற பூர்வ ஜனம். உபா 2^{10} ஆதி 14^{5}.

ஏமோரியர். Amorites. **அம்மோரியர்** காண்க.

ஏமோர். Hamor. **எமோர்** காண்க.

ஏயேல். Jeiel. **எகியேல்** காண்க.

ஏயூஸ். Jeush. **எகூஷ்** காண்க.

ஏரஸ்து. Erastus. அப் 19^{22} ரோ 16^{23} 2 தீமோ 4^{20}. இந்த மூன்று வசனங்களும் ஒருவனைக் குறிக்குமானால், கொரிந்து பட்டணத்திலுள்ள உக்கிராணக்காரனான இவன் ஆஸ்தி யுடையவன் என நாம் நினைக்கவேண்டும்.

ஏரான். Eran. எண் 26^{36}.

ஏரி. Eri. ஆதி 46^{16}.

ஏரேக். Ereoh. பாபிலோனியா ராஜ்யத்தின் பூர்வ பட்டணம். ஆதி 10^{10}.

ஏரேஸ். Heres.

1. ஒரு மலை. நியா 1^{34}.
2. ஒரு ஆள். 1 நாளா 9^{15}.

ஏரோதியர். Herodians. இவர்கள் யூதர்களில் ஏரோதுவின் கட்சிக்காரர். இவர்கள் பரிசேயரோடு இயேசுவுக்கு விரோதமாய் இருந்தவர்கள். மாற் 3^{6} 12^{13} மத் 22^{16}.

ஏரோதியாள். Herodias. **ஏரோது** காண்க.

ஏரோதியோன். Herodion. ஒருவேளை ஏரோது வீட்டாரில் கிறிஸ்தவனான ஒருவன். ரோ 16^{11}.

ஏரோது. Herod. ரோமர்கள் எகிப்து தேசத்தை ஜெயித்து எருசலேமை முதல் முறை பிடித்தபிறகு (கி-மு. 63) தங்கள் தேசத்தை ஆண்டுகொள்ளும் திராணி யூதர்களுக்குக் குறைந்ததினால் ரோமர்கள் அவர்களுடைய தேசத்தைத் தங்கள் ராஜ்யத்தோடு சேர்க்காவிட்டாலும், இதுமேயனாகிய **அந்திப்பத்தேர்** அதை ஆளும்படியான சிலாக்கியத்தை இவனுக்குக் கொடுத்தார்கள். இவன் யூதனல்ல, இதுமேயனா யிருந்ததினால் பரிசேயர் இவனை 'பாதி யூதன்' என்று பரிகாசமாய் அழைத்தார்கள். இவன் உற்சாகமும் கபடமும் உள்ளவனாய்ப் பல வருஷங்கள் ஆளுகைசெய்து கி-மு. 33-ஞூலத்தில் மரித்தான்.

பெரிய ஏரோது. *Herod the Great.*

அந்திப்பத்தேரின் புத்திரர்களில் இவன் சாதுரியனும் புத்தி சிறந்தவனுமாயிருந்து கி.பி. 4-ஞூல வரையும் தன் ராஜ்யத்தை அதிக திறமையோடு ஆண்டு அத்தேசத்தையும், அத்தேசத்திலும் புறதேசங்களிலுமுள்ள யூதர்களையும் காப்பாற்றி, எருசலேமிலே பெரிய மாளிகை கோட்டை கோபுரங்களையும், மறுபடியும் தேவாலயத்தையும் அதிக சிறப்புற்றதாய்க் கட்டி ஜனங்களுக்கு அநேக நன்மைகள் செய்துவந்தான். ஆனால் இவன் அதிக குரோதியும் சமுசயப்படுகிறவனுமா யிருந்து தன் குடும்பத்திலுள்ளவர்களிலும், யூதர்களிலுள்ள தனவான்களிலும் அநேகரைக் கொலைசெய்தான். இதினிமித்தமும், இவன் கிரேக்க தத்துவ ஞானத்தையும் நாகரீகத்தையும் தழுவி நடந்ததினிமித்தமும் யூதர்கள் இவனை வெறுத்து இவன் அரசாண்ட காலத்திற் பலதடவை இவனுக்கு விரோதமாய்க் கலகம் செய்தார்கள். மத் 2^{1} லூக் 1^{5}.

அர்கெலாயு. *Archelaus.*

பெரிய ஏரோது இறந்துபோனபிறகு அவனுடைய குமாரர்களுக்கு அவனுடைய தேசம் 'காற்பங்காக' பிரிக்கப்பட்டது. இவர்களில் அர்கெலாயு யூதேயாவிலும் இதுமேயாவிலும் அரசாண்ட இரண்டு மூன்று வருஷமான பிற்பாடு ரோமர்கள் இவனுக்கு ராஜ்யத்தை நடத்தும் திறமையில்லையென அறிந்து

கி-பி. 6-ஆம் முதல் யூதேயாவிலே தேசாதிபதிகளை வைக்கத் தொடங்கினார்கள். மத் 2^{22}.

ஏரோது அந்திப்பா. *Herod Antipas.*

பெரிய ஏரோதின் மகனாகிய அந்திப்பா கி-பி. 39-ஆம் வரையும் கலிலேயாவிலே அரசாண்டான். இவன் மிகுந்த துன்மார்க்கமுடையவன் என்பதற்குத் தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளை வைத்திருந்தது திருஷ்டாந்தம். யோவான்ஸ்நானனைச் சிரச்சேதஞ்செய்தவனும், இயேசுவைப் பரிகாசம் பண்ணினவனும் இவன்தான். கடைசியாய் ரோமர்கள் இவன்பேரில் சமுசயப்பட்டவர்களாய் இவனை ராஜ்யத்திலிருந்து நீக்கிவிட்டார்கள். மத் 14^{1} லூக் 3^{19} 9^{7} 13^{33} அப் 13^{1}.

பிலிப்பு. *Philip.*

பிலிப்பு யோர்தான் நதிக்கும் கலிலேயாக் கடலுக்கும் இடையிலுள்ள இத்துரேயா என்னும் ராஜ்யத்திற்குக் காற்பங்கு தேசாதிபதியாய் இருந்தான். பெரிய ஏரோதின் குமாரரில் நல்லவன் என்று சொல்லப்படுகிறவன் ஒருவன் இருந்தால் இவன்தான் அவன். இவன் கி-பி. 34-ஆம் வரையில் அரசாண்டான். லூக் 3^{1}.

பிலிப்பு. *Philip.*

இந்த பிலிப்பும் முந்தினவனும் ஒருவனல்ல. இவன் ஏரோதியாளின் புருஷன். இவன் அரசாளாமல் ரோமாபுரியில் இருந்தான். மத் 14^{3} மாற் 6^{17}.

ஏரோதியாள். *Herodias.*

ஏரோதியாள் பெரிய ஏரோதுக்குப் பேத்தி. இவள் தன் புருஷனாகிய பிலிப்புவை விட்டு, ஏரோது அந்திப்பாவைச் சேர்ந்து மேலான அதிகாரத்தின்மேல் ஆசைகொண்டு இந்த அந்திப்பாவைக்குறித்து ரோமர்கள் சமுசயப்படத்தக்கதாகச் சில காரியங்கள் செய்யும்படி அவனை ஏவினதினால் அவனுடைய கேட்டுக்கு இவளே காரணமாய் இருந்தாள்.

சலோமே. *Salome.*

ஏரோதியாளின் மகளாகிய சலோமே யோவான்ஸ்நானனின் தலையைக் கொடுக்கும்படி கேட்டவள். மத் 16^{3} மாற் 6^{17}.

முதலாம் ஏரோது அகிரிப்பா. *Herod Agrippa I.*

பெரிய ஏரோதின் பேரனாகிய அகிரிப்பா ரோமாபுரியில் சக்கரவர்த்தியின் தயவுபெற்று, பிலிப்புவின் அதிகாரமும் விசானியாவின் அதிகாரமும், அந்திப்பாவின் அதிகாரமும் உடையவனாய் அரசாளும்படி கி-பி. 39-ஆம்த்தில் எருசலேமுக்கு வந்தான். இவன் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி கி.பி. 42-ஆம்த்தில் அதிக நிர்ப்பந்தமாய் மரித்தான். அப் 12^{20}.

இரண்டாம் ஏரோது அகிரிப்பா. *Herod Agrippa II.*

முதலாம் அகிரிப்பாவின் மகனாகிய இந்த அகிரிப்பாவுக்கு முன்பாகப் பரி. பவுல் பிரசங்கம் செய்தான். ரோமைச் சக்கரவர்த்தி இவன்பேரில் பலவிதமாய்த் தயவு வைத்தான். ஏறக்குறைய கி-பி. 100-ம் வருஷத்தில் இவன் ஏரோதுவின் குடும்பத்திலே கடைசியானவனாய் மரித்தான். அப் 26 அதி.

பெர்னீக்கே. *Bernice.*

இரண்டாம் அகிரிப்பாவின் சகோதரியாகிய பெர்னீக்கே மகா பொல்லாதவள் என்பது அக்காலத்திலுள்ளவர்களின் அபிப்பிராயம். அப் $25^{13,\ 23}$ 26^{30}.

துருசில்லா. *Drusilla.*

இரண்டாம் அகிரிப்பாவின் சகோதரியாகிய துருசில்லா தன் முதற் புருஷனை விட்டுப் பலெஸ்தீனாவின் தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவனைத் தன் புருஷனாக்கிக்கொண்டாள். யூதஸ்திரீயாகிய இவள் இவ்விதமாய் நியாயப்பிரமாணத்தை மீறினதினால் யூதர்களுக்கு வெறுப்பு அதிகம் உண்டானது. அப் 24^{24}.

ஏரோதின் குடும்பத்தார் இன்னும் அநேகர் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிறவர்களைப்பற்றி மாத்திரம் இவ்விடத்தில் எழுத இடமுண்டு. அந்தக் குடும்பத்தில் அறிவு அதிகாரம் அந்தஸ்து உடையவர்கள் அநேகர் இருந்தார்கள். ஆனாலும், அவர்கள் எல்லாரும் ஆண்களும் பெண்களும் துன்மார்க்கமாய் நடந்தார்கள்.

ஏர். Er.

1. ஆதி 38^{3}.
2. 1 நாளா 4^{21}.
3. லூக் 3^{28}.

ஏலா. Ela, Elah, Helah.

1. 1 இரா 4^{18}.
2. ஆதி 26^{41}.
3. குடிவெறி முதலான துன்மார்க்கமான வழியில் நடந்த இஸ்ரவேலின் ராஜா (கி-மு. 889-887). 1 இரா 16^{8}.
4. 2 இரா 15^{30}.
5. 1 நாளா 4^{15}.
6. 1 நாளா 9^{8}.

7. தாவீதும் கோலியாத்தும் சண்டை செய்த இடம். இது எருசலேமுக்குத் தென் மேற்கே 12 மைல் தூரமாய் உள்ள ஒரு பள்ளத்தாக்கு. 1 சாமு 17^{2}.

8. ஒரு பெண். 1 நாளா 4^{5}.

ஏலாசார். Ellasar. ஐபிராத்து நதிக்குக் கிழக்குக்கரையில் தென் பாபிலோனியா நாட்டிலுள்ள ஒரு ஊர். இதில் சூரிய தேவதையை அதிகமாய் வணங்கினார்கள். இதின் ராஜாவாகிய அரியோகு கானானியருக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போனான். ஆதி 14^{1}.

ஏலாத். Elath. செங்கடலின் வடகிழக்குக் கிளையிலுள்ள ஒரு துறைமுகம். உபா 2^{8}. =ஏலோத். 1 இரா 9^{26}. ஏலோத் என்பதற்குப் 'பெரிய மரங்கள்' என்று அர்த்தம். இவ்விடத்தில் மரங்கள் இருப்பதினால் சாலொமோன் இங்கே கப்பல்களைச் செய்தான்.

ஏலாம். Elam, Helam.

1. ஆதி 10^{22}.
2. 1 நாளா 26^{3}.
3. 1 நாளா 8^{24}.
4. எஸ்று 2^{7}.
5. எஸ்று 2^{31}.
6. நெகே 12^{42}.
7. சீரியரின் ஒரு நாடு. 2 சாமு 10^{16}.

ஏலாம். Elam. திகிரீஸ் நதிக்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள ஒரு தேசம். இதின் தலைநகரி சூசான். ஏறக்குறைய கி. மு. 2300-ஆ ஆபிரகாம் இருந்த காலத்தில் ஏலாமியர் பாபிலோனியா ராஜ்யத்தில் அதிக மேலான அதிகாரமுடையவர்களாய் கானான்வரையும் பரம்பியிருந்தார்கள். ஆதி 14^{1}. இதற்குப் பிற்பாடு பாபிலோனியர் இவர்களை ஜெயித்தார்கள். பிற்காலத்தில் ஏலாமியர் பாபிலோனியரோடு ஒன்றுகூடியிருந்தார்கள். தீர்க்கதரிசிகள் மேதியரையும் ஏலாமியரையும் குறித்து ஒன்றுபோல் பாவித்து இவர்களுடைய பேரினால் பெர்சியா ராஜ்யத்தைக் குறிக்கிறார்கள். ஏசா 21^{2} 22^{6} எரே 25^{25} 49^{34} எசே 32^{24}. பாபிலோனியாவில் சிறையிலிருந்த யூதர்கள் ஏலாமியரை மேலாக எண்ணினார்கள் என்பதற்குச் சிறையிருப்பி விருந்தவர்களுக்கு இப்பெயர் வழங்கினது அத்தாட்சியாம். 1 நாளா 8^{24} எஸ்று $2^{7\cdot 31}$.

ஏலி. Eli.

1. சீலோவிலே சாமுவேலுக்கு முன்னிருந்த நியாயாதிபதி. 1 சாமு 1^{12} 2^{12} 3^{1} 4^{4} 4^{16}. இவன் நல்லவனும் தாழ்மை உள்ளவனுமாய் இருந்தான். ஆனாலும் குடும்பகாரியங்களையும் ராஜ்யபாரத்தையும் செவ்வையாய் நடத்தும் திறமை இவனில் இருந்ததில்லை என்று தெரிகிறது.

2. =Heli. யோசேப்பின் தகப்பன். லூக் 3^{23}.

ஏலி ஏலி. Eli, Eli. **எலோயீ** காண்க.

ஏலிகோரேப். Elihoreph. 1 இரா 4^{3}.

ஏலிம். Elim. [கர்வாலி விருக்ஷங்கள்]. எபிரெயர்கள் வனாந்தரத்தில் கண்ட பசுந்தரையும் நீரூற்றும் உள்ள இடம். இது இருந்த இடம் திட்டமாய்த் தெரியாது. யாத் 15^{27}.

ஏலியேல். Eliel. **எலியேல்** காண்க.

ஏலேக். Helek. எண் 26^{30}.

ஏலேத். Heled. **எல்தாய்** காண்க.

ஏலேப். 1. = Heleb. 2 சாமு 23^{29}. **எல்தாய்** காண்க. 2. யோசு 18^{28}.

ஏலேப். Heleph. யோசு 19^{33}.

ஏலேம். Helem.

1. **எல்தாய்** காண்க.
2. 1 நாளா 7^{35}.

ஏலோத். Eloth. **ஏலாத்** காண்க.

ஏலோன். Elon.

1. யோசு 19^{43}.
2. 1 இரா 4^{9}.
3. எண் 1^{9}.

ஏல்-எல்லோகே-இஸ்ரவேல். El-Elohe-Israel. [கடவுள் இஸ்ரவேலின் கர்த்தராய் இருக்கிறார்]. சீகேமிலே வாங்கின இடத்தில் கட்டின பலிபீடத்துக்கு யாக்கோபு கொடுத்த பெயர். ஆதி 33^{20}.

ஏல்-பெத்தேல். El-Bethel. [கடவுளின் வீடு]. யாக்கோபு தான் காட்சி கண்ட இடத்திற்கு இட்ட பெயர். ஆதி 35^{7}.

ஏவாள். Eve. ['ஜீவன்' அல்லது 'உயிர் கொடுக்கிறது']. மனுஷஜாதியாருக்கு ஆதித்தாய். ஆதி 3^{20}. புதிய ஏற்பாட்டில் இரண்டு இடத்தில் இப்பெயர் சொல்லியிருக்கிறது. 2 கொரி 11^{3} 1 தீமோ 2^{13}.

ஏவி. Evi. மீதியானியனான ராஜா. எண் 31^{8}.

ஏவியர். Hivites. கானானில் எபிரெயருக்கு முன்னிருந்த பூர்வ ஜனம். இவர்கள் இஸ்ரவேலருக்குப் பயந்ததினால் அவர்களோடு உபாயமாய் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இவர்களைப்பற்றித் திட்டமாய் ஒன்றும் தெரியாது. ஆனால் இவர்களுக்கும் எபூசியர்களுக்கும் சம்பந்தம் இருந்தது என்று தோன்றுகிறது. யாத் 3^{8} யோசு 9^{7} 2 சாமு 24^{7}.

ஏவில்–மெரோதாக். அசீரியா ராஜாக்கள் காண்க. பக். 12.

ஏழு. Seven. **எண்கள்** காண்க.

ஏளாள். Helah. 1 நாளா 4^{5}.

ஏறெடுத்துப் படைக்கும் பலி. Heave offering. பலி காண்க.

ஏற்பாடு. Testament, கடவுள் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்குத் தாம் ஆதியிலும் இயேசுகிறிஸ்துவின் மூலமாயும் கிருபையையும் உடன்படிக்கைகளையும் ஏற்படுத்தினதினாலே, இதை விவரித்துச் சொல்லும் வேதத்தின் முக்கியமான இரண்டு பாகங்களுக்கும் 'பழைய ஏற்பாடு' 'புதிய ஏற்பாடு' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

ஏற்றச்சால். = நீர்ச்சால். ஏசா 40^{15} எண் 24^{7}.

ஏனு. Hena. **எனு** காண்க.

ஏனுக்கு. Anak. **ஆனுக்கு** காண்க.

ஏனும், ஏனுயீம். Enaim. யூதாவில் ஒரு ஊர். யோசு 15^{34}. 'நீர் ஊற்றுகள்' (ஆதி $38^{14.21}$) என்பதற்குப் பதில் 'ஏனுயீம்' என்னும் ஊரின் பெயராய் இருக்கவேண்டும்.

ஏனுன். Enan. எண் 1^{15}.

ஏனேக்கு. Enoch. [கற்றுக்கொண்டவன்].

1. காயீனின் மகன். ஆதி 4^{17}.
2. காயீன் கட்டின ஒரு ஊர். ஆதி 4^{17}.
3. சேத்தின் சந்ததியார்களில் உத்தம பக்தன். ஆதி 5^{18} எபி 11^{5} யூதா 1^{14}.

ஏனேஸ். Enos. சேத்தின் மகன். ஆதி 4^{26}.

ஏன். Hen. [அருள்]. சக 6^{14}.

ஐ.

ஐக்கியம், அன்னியோன்னியம். Communion, Fellowship. ஆதி கிறிஸ்தவர்களுக்குள் ஐக்கியத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள் பலவிதமாய் இருந்தன.

1. எருசலேமில் ஆரம்பத்திலே கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வந்தவர்கள் தங்களை ஓர் பெரிய குடும்பம்போல் நினைத்துத் தங்கள் தங்கள் ஆஸ்திகளைப் பொதுவாய் வைத்துப் பாவித்து ஒரே ஐக்கியமாய் இருந்தார்கள். அப் 2^{44}.

2. சில காலத்திற்குப் பிறகு சபை அதிகரித்ததினாலே முன்னிருந்த மாதிரியான ஐக்கியத்துக்குப் பதிலாக ஏழைகளைக் காப்பாற்றும்படி ஆஸ்தி உள்ளவர்களிடமிருந்து காணிக்கைகள் வாங்கி அவர்களைத் தாபரித்து நடத்தும்படி உதவிக்காரர்களை நியமித்தார்கள். அப் 6^{1}. எருசலேம் பட்டணத்திலுள்ள சபை எப்போதும் ஏழைச்சபையாய் இருந்ததினால் பரி. பவுல் முதலான கிறிஸ்தவர்கள் மற்ற நாட்டுச் சபைகளில் உள்ளவர்கள் எருசலேம் சபையிலுள்ள தரித்திரருக்கு உதவி செய்யும் விஷயத்தில் ஏக ஐக்கியம் உடையவர்களாய் இருக்கவேண்டும் என்று அவர்களுக்குப் போதித்ததினாலே அவர்கள் அப்படியே செய்துவந்தார்கள். ரோ 15^{26} 2 கொரி 9^{13} 8^{4}. இப்படி ஏழைகளுக்காகக் காணிக்கை கொடுப்பது கிறிஸ்தவ ஐக்கியத்தின் ஓர் பாகம்.

3. ஆதி கிறிஸ்தவர்கள் துவக்கத்திலிருந்து கிறிஸ்தவமார்க்கத்தின் சிலாக்கியங்களாகிய ஐக்கிய விருந்து, இரட்சிப்பு, பரிசுத்தாவியைப் பெறுதல் ஆகிய இவைகளில் தாங்கள் எல்லாரும் பங்கு பெற்றுச் சமாதானத்திலும் விசுவாசத்திலும் ஐக்கியப்பட்டவர்களாய் இருக்கவேண்டும் என்று தீர்மானித்து அப்படியே நடந்துவந்தார்கள். 1 கொரி 1^{9} 10^{16} 2 கொரி 13^{14} கலா 2^{9} பிலி 2^{1}.

4. கிறிஸ்தவ சிலாக்கியங்களில் அல்லாமலும் கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவதிலும் எல்லாக் கிறிஸ்தவர்களும் ஐக்கியப்பட்டிருந்தார்கள். கலா 2^{9} பிலி 1^{7} பிலே 1^{6} எபி 13^{16}.

5. இவைகளைவிட இயேசுகிறிஸ்துவோடும் தேவனோடும் கொள்ளும் ஐக்கியம் தங்களில் ஒவ்வொருவனுக்கும் இருக்கவேண்டும் என்று ஆதி கிறிஸ்தவர்கள் நினைத்தார்கள். இந்த நோக்கமாய் இயேசுவின் பாடுகளின் ஐக்கியத்தைப்பற்றிப் பரி. பவுல் பேசுகிறான். பிலி 3^{10}. முக்கியமாய் பரி. யோவான் இந்த ஐக்கியத்தைப்பற்றி விவரித்துச் சொல்லியிருக்கிறான். யோவா 15^{4} 1 யோவா 1^{3}.

6. ஏவைகளில் சகோதர ஐக்கியம் இருக்கவேண்டும் என்று கேட்டால்: உபதேசம் (அப் 2^{42}), ஏவப்படுதல் (எபி 10^{24}), தேவபக்திக்கடுத்த முயற்சி (எபே 5^{21}), கனம் பண்ணுதல் (ரோ 12^{10}), சிநேகித்தல் (ரோ 12^{10}), ஏகசிந்தை (ரோ 12^{16}.), ஜெபம் (எபே 6^{18}).

ஐக்கிய விருந்து. Communion, Eucharist. **இராப்போஜனம்** காண்க.

ஐத்திகு. Eutychus. அப் 20^{9}.

ஐநேயா. Aeneas. அப் 9^{33}.

ஐபிராத்து. Euphrates. இந்தப் பெரிய நதி ஏதேன் தோட்டத்திலிருந்து உற்பத்தியாகிறது என்று எபிரெயர்கள் நினைத்தார்கள். ஆதி 2^{14}. அவர்கள் இதற்குப் 'பெரிய

நதி' என்று சொல்லுவார்கள். தாவீதின் ராஜ்யம் இந்த நதிவரையும் எட்டியிருந்தது. 2 சாமு 8^{3}. இந்த நதி அசீரியா பாபிலோனியா ராஜ்யங்களுக்கு மேற்கெல்லையாக இருந்தது என்று தோன்றுகிறது. ஆபிரகாம் இந்த நதியைக் கடந்து போனதினாலே எபிரெயர்களுக்குக் 'கடந்துபோனவர்கள்' என்று அர்த்தங்கொள்ளும் 'எபிரெயர்' என்னும் பெயர் வழங்கினது. இந்த நதி பாபிலோன் பட்டணத்துக் கூடாகப் பாய்ந்து மெரதாயீம் என்னும் சதுப்பு நில வழியாய்ப் பார்சியாக் குடாக்கடலுக்குள் விழுகிறது. எரே. 50^{21}. இதற்கும் இகிரீஸ் நதிக்கும் இடையிலுள்ள பூமி அதிக செழிப்புள்ளது. இதற்கும் சீரியாவுக்கும் மத்தியில் ஒரு பெரிய வனாந்தரம் இருக்கிறது. ஆதி 2^{14} 15^{18} 2 சாமு 8^{3}.

ஐபூலு. **Eubou**los. ரோமைச் சபையில் பெரியவன் ஒருவன். 2 தீமோ 4^{21}.

ஐயோதியாள். **Euodia.** **எயோதியாள்** காண்க.

ஐனிக்கே. **Eunice.** விஸ்திராவில் வசித்த தீமோத்தேயுவின் தாய். அப் 16^{1}. 2 தீமோ 1^{5}.

ஒ.

ஒகேல். **Ohel.** 1 நாளா 3^{20}.

ஒக்லாள். **Hogloh.** [கௌதாரி]. ஒரு பெண். யோசு 17^{3}.

ஒசாமா. **Hoshama.** 1 நாளா 3^{18}.

ஒசாயா. **Hoshaiah.** [எகோவா இரட்சித்தார்]. நெகே 12^{32}.

ஒஸ்னி. **Ozni.** = எஸ்போன். ஆதி 46^{16}. எண் 26^{16}.



ஒட்டகம்.

ஒட்டகம். **Camel.** கி-மு. 3000-ளூத்தில் கானான் தேசத்தில் சேமியர்கள் ஒட்டகங்களை உபயோகித்தார்கள். கானானியர்களுக்கும் மீதியானியர்களுக்கும் ஒட்டகம் பெரும் ஆஸ்தி. நியா 7^{12}. வனாந்தரத்திற் குடியிருந்த ஜாதிகள் ஒட்டக மாமிசம் சாப்பிட்டார்கள். இஸ்ரவேலரோ சாப்பிடவில்லை. உபா 14^{7}. யோர்தானுக்குக் கிழக்கில் உள்ள நாடுகளில் ஒட்டகங்களை அதிகமாய் வளர்த்தார்கள். ஒட்டக ரோமத்தினால் ஒருமாதிரியான துணி நெய்வார்கள். மாற் 1^{6}. இயேசு யூதர்களுக்குள்ளே ஒட்டகத்தைப்பற்றி வழங்கிவந்த பழமொழியை எடுத்துக் கூறுகிறார். மத் 19^{24} 23^{24}.

ஒதாயா. **Hodaviah.** 1 நாளா 3^{24}.

ஒதாவியா. **Hodaviah.**

1. 1 நாளா 5^{24}.
2. 1 நாளா 9^{7}.
3. = ஒதியா. எஸ்றா 2^{40} நெகே 7^{43}.

ஒதியா. **Hodiah,**

1. = ஒதாவியா. நெகே 7^{43}.
2. 1 நாளா 4^{19}.
3. நெகே 8^{7}.
4. நெகே 10^{3}.
5. நெகே 10^{18}.

ஒத்தாம். **Hotham.** 1 நாளா 7^{32}.

ஒத்தீர். **Hothir.** 1 நாளா 25^{4}.

ஒத்னி. **Othni.** 1 நாளா 26^{7}.

ஒத்னியேல். **Othniel.** கீரியாத்செப்பேரைப் பிடித்து காலேபின் மகளாகிய அக்சாளை விவாகம் செய்த நியாயாதிபதி. நியா 1^{13}.

ஒநேசிமு. **Onesimus.** அடிமையாகிய இவன் தன் எஜமானாகிய பிலேமோனை விட்டு ரோமாபுரிக்கு ஒளித்தோடினபோது அங்கே பரி. பவுலின் போதனையினாற் குணப்பட்டான். இவனை மன்னிக்கும்படிக்கும், மறுபடியும் இவனைத் தன்னிடம் அனுப்பும்படிக்கும் பவுல் பிலேமோனுக்கு ஒரு நிருபம் எழுதினான். கொலோ 4^{9}. **பிலேமோன் நிருபம்** காண்க.

ஒநேசிப்போரு. **Onesiphorus.** சிறையிலிருந்த பவுலுக்கு உதவிசெய்த கிறிஸ்தவன் ஒருவன். 2 தீமோ 1^{16} 4^{19}.

ஒபதியா. **Obadiah.** [யேகோவாவின் அடியான்].

1. ஒபதியாவின் தரிசன ஆக்கியோன். **ஒபதியாவின் தரிசனம்** காண்க.
2. எலியா முதலிய தீர்க்கதரிசிகளைக் காப்பாற்றினவன். 1 இரா 18^{3}.
3. 1 நாளா 8^{38}.

4. 1 நாளா 7^{3}.
5. 1 நாளா 3^{21}.
6. எஸ்றா 8^{9}.
7. நெகே 10^{5}.
8. நெகே 12^{25}.
9. 1 நாளா 9^{16}. = அப்தா. நெகே 11^{17}.
10. 1 நாளா 12^{9}.
11. 1 நாளா 17^{29}.
12. 2 நாளா 17^{7}.
13. 2 நாளா 34^{12}.

ஒபதியாவின் தரிசனம். The book of Obadiah. பழைய ஏற்பாட்டில் ஒபதியா என்று பதின்மூன்றுபேர் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பழைய ஏற்பாட்டிலுள்ள புஸ்தகங்களில் அதிக சுருக்கமான இந்தப் புஸ்தகத்திற்கு ஆக்கியோன் இன்னான் என்பது தெரியவில்லை. இது ஏதோம் என்னும் தேசத்துக்கு வரும் அழிவும் ($^{1-7}$ வச $^{10-15}$ வச), எல்லா மனுஷருக்கும் விசேஷமாய் ஏதோமுக்கு வரும் நியாயத்தீர்ப்பும் ($^{8. 9. 15. 16. 21}$ வச) கூறுகிறது.

ஏதோமியர் யூதர்களுக்கு வந்த ஆபத்தைக் கண்டு மனமகிழ்ச்சி கொண்டதினால் அவர்களுக்கு இந்த அழிவு நேரிட்டது என்று சொல்லியிருக்கிறதினாலே இப்புஸ்தகம் பாபிலோனியர் கி-மு. 586-ஆம் வருஷத்தில் எருசலேமைப் பிடித்த காலத்துக்குக் கொஞ்சம் பிந்தி எழுதப்பட்டது என்று தோன்றுகிறது. மேலும் தீர்க்கதரிசி நியாயத்தீர்ப்பைப்பற்றிச் சொல்லி யூதரும் இஸ்ரவேலரும் மறுபடியும் தங்கள் ராஜ்யத்தைப் பெறுவார்கள் என்றும், சீயோனிலே யேகோவா அரசாளுவார் என்றும் சொல்லுகிறதினாலே கி-மு. 537-ஆம் வருஷத்தில் சிறையிருப்பிலிருந்து இவர்கள் எருசலேமுக்கு வருகிறதற்கு முன் தீர்க்கதரிசனம் உரைத்தான் என்று அறிந்துகொள்ளலாம்.

ஓபாப். ஓபாப் Hobab. = எத்திரோ. எண் 10^{29} நியா 4^{11}.

ஓபிரா, ஒப்ரா, ஓப்ரா. Ophra.

1. ஒரு ஊர். யோசு 18^{23} 1 சாமு 13^{17}.
2. கிதியோன் பிறந்த ஊர். நியா 6^{11} 8^{27}.
3. ஒரு யூதன். 1 நாளா 4^{14}.

ஒப்பிரா. Hophra. கி-மு. 588-569-ஆம் வருஷம் ஆபிரீஸ் (*Apries*) என்னும் எகிப்திய அரசனாகிய இவன் சீரியாவிலே நேபுகாத்நேச்சாரை ஜெயித்தான். பிற்பாடு நேபுகாத்நேச்சார் எருசலேமை அழித்தபோது அங்கிருந்து ஓடிவந்தவர்களுக்கு இவன் அடைக்கலம் கொடுத்தான். எரே 43^{6} 44^{30}.

ஒப்பீர். Ophir. ஓப்பீர் காண்க.

ஒப்புரவாகுதல். Reconciliation. 'மாமிச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை' என்று பரி. பவுல் சொல்லியிருக்கிறான். ரோ 8^{7}. இதினாலே பாவிகளாகிய நாம் எல்லாரும் தண்டனைக்குப் பாத்திரராய் இருக்கிறோம். இந்தப் பகையை நீக்கும்படி இயேசு கிறிஸ்து தமது மரணத்தின் மூலமாய்ப் பாவ நிவாரணம் செய்து தேவனையும் நம்மையும் ஒப்புரவாக்கியிருக்கிறார். ரோ $5^{10. 11}$ 2 கொரி 5^{18} எபே 2^{16} கொலோ $1^{20. 21}$. **பாவ நிவாரணம்** காண்க.

ஒப்பேசி. Vopshi. எண் 13^{14}.

ஒப்னி. Ophni. யோசு 18^{24}.

ஒம்ரீ. Omri. **உம்ரீ** காண்க.

ஒரீ. Hori. ஆதி 36^{22}.

ஒரிகேன். Origen. கிறிஸ்தவ சபையில் ஆதி பிதாக்களில் அதிவித்துவானான ஒருவன். கி-பி. 185-253-ஆம் வருஷத்தில் அல்லது 254-ஆம் வருஷம் இவன் பதினாறு வயதுள்ளவனாய் இருந்தபோது தகப்பன் இரத்தச்சாட்சியாய் இறந்துபோனான். அதற்குப் பிற்பாடு அதிகம் கஷ்டப்பட்டவனாய் உபாத்திவேலை செய்து தாயையும் தன் சகோதரர் ஆறுபேரையும் தாபரித்தான். இவன் கிரேக்க தத்துவ சாஸ்திரம் எல்லாங் கற்று கிறிஸ்தவ வேதசாஸ்திர தத்துவ ஞானத்தைப்பற்றிச் சிறந்த போதனை போதித்துவந்தான். இவன் தான் வாசம்பண்ணின இடமாகிய அலெக்சந்திரியாவிலே தனக்குச் சத்துருக்கள் அநேகர் இருந்ததைக் கண்டு கி-பி. 230-ஆம் வருஷத்தில், அந்தப் பட்டணத்தை விட்டுப் பலெஸ்தீனாவுக்கு வந்து கிறிஸ்தவமார்க்கத்தை அங்கே போதித்தான். கிறிஸ்தவமார்க்க விரோதிகள் இவனை அதிகமாய் வேதனைப்படுத்தினாலும், தைரியம் விடாது தன் எழுபதாம் வயசுவரைக்கும் கிறிஸ்தவ ஞான போதனையைப் போதித்து அதைத் திறப்படுத்தினான்.

ஒரோநாயீம். Horonaim. மோவாபிலுள்ள ஒரு ஊர். ஏசா 15^{5}.

ஒர்பாள். Orpah. ரூத்தின் சகோதரி. ரூத் 1^{4}.

ஒர்மா, ஓர்மா. Hormah. ['பிரதிஷ்டை செய்யப்பட்டது' அல்லது 'சபிக்கப்பட்டது']. பூர்வகாலத்தில் 'சேப்பாத்' என்று பெயர்கொண்ட தென் யூதாவில் ஒரு ஊர். எண் 14^{45} நியா 1^{17}.

ஒர்னான். Ornan. **அர்வனா** காண்க.

ஒலிம்பா. Olympas. ரோமைச் சபையில் ஒருவன். ரோ 16^{15}.



ஒலிவமலை.

ஒலிவமலை. The Mount of Olives. கீதரோன் பள்ளத்தாக்கினால் எருசலேமிலிருந்து பிரிக்கப்பட்டு அங்கிருந்து அரைமைல் தூரத்திலுள்ள மலைக்குன்றுகள். பழைய ஏற்பாட்டில் இந்த இடம் சிலதடவை மாத்திரம் சொல்லியிருக்கிறது. 2 சாமு 15^{30} நெகே 8^{15} எசே 11^{23}. இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சரித்திரத்தின் முடிவிலே இதைப் பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறது. லூக் 19^{41} 21^{37} மத் 24-25 அதி. அப் 1^{12}. இந்த மலைச்சார்பில் கெத்செமனே தோட்டம் இருந்தது. மத் 26^{36}. ஆதி கிறிஸ்தவர்கள் இந்த மலையில் கன்னிமரியாளின்கல்லறை, இயேசு 'கர்த்தருடைய ஜெபம்' சொல்லிக்கொடுத்த இடம் முதலியவை இருந்தது என்று காட்டினார்கள். ஆனால் இதை நம்பத்தக்க அத்தாட்சி ஒன்றுமில்லை.

ஒலிவம். Olive. ஓர் மரம். பலவிதமான ஒலிவமரங்கள் உண்டு; அவற்றில் நாட்டொலிவமரம் காட்டொலிவமரம் என்னும் இரண்டு வர்க்கங்களைக் குறித்துமாத்திரம் வேதத்தில் சொல்லியிருக்கிறது. ஒலிவமரங்கள் அதிக உயரமாயும் பணிவாயுமிராமல் ஒருமட்டாயிருக்கும்; அந்த மரம் புடைத்துப் புடைத்துக் குமிள்போலிருக்கும். அதின் தோல் ஒப்புரவாயும் புகை வர்ணமாயு மிருக்கும்; அதின் உள் வயிரம் கட்டியாயும் மஞ்சள் நிறமாயுமிருக்கும். அதின் இலை பசு[illegible]யாயும் காம்பு வெள்ளையாயும் இலுப்பை இலை[illegible]ால நீண்டதாயுமிருக்கும். அதின் பூக்கள் [illegible]ாத்துக் கொத்தாயிருக்கும். ஒவ்வொரு பூ[illegible]யப் பிரித்துப் பார்த்தால் இலுப்பைப் பூப்போலிருக்கும். அதின் பிஞ்சு பச்சையாயும், காய் மங்கின மேகவர்ணமாயும், கனி கறுப்பாயும் நாவற் பழத்தைப் போலிருக்கும். அதின் கனிக்குள்ளே தசை பொதிந்த கொட்டை யுண்டு, அந்தக் கொட்டையை மூடியிருக்கும் தசைக் கனியைச் சாப்பிடுவார்கள்; அந்தக் கொட்டைக்குள்ளே இலுப்பை முத்தைப்போல் சில முத்து இருக்கும். அந்த முத்தில் எண்ணெய் எடுப்பார்கள்; அந்த எண்ணெயைத் தலையிலே தேய்த்துக் கொள்ளுவார்கள், சோற்றிலே விட்டுச் சாப்



ஒலிவம் பழம்.

பிடுவார்கள், கறியும் தாளிதம் பண்ணுவார்கள், விளக்கும் எரிப்பார்கள், வெட்டுக்காயங்களுக்கு மருந்தாகவும் போடுவார்கள். ஆதலால் அந்த மரங்கள் கானான் தேசத்தாருக்கு